பிரம்மஸாயுஜ்ய புஸ்தகாலய ப்ரசுரங்கள் 8

நாநா அர்த்தங்களோடு ஸமஸ்த பதங்களும் அடங்கிய

# ஸம்ஸ்க்ருத—தமிழ் அகராதி

# संस्कृत—द्राविड अकारादि कोशः

# Sanskrit—Tamil Dictionary

25 MAY 1939
MADRAS

மோக்ஷவழி, ஸம்ஸ்க்ருத ஸ்வபோதினி, தமிழ் ஸம்ஸ்க்ருத
அகராதி இயற்றிய

பிரம்ம ஸ்ரீ நே. ஈ. வெங்கடேச சர்மா

Acc.No: 127170
Pages: 520

பஹுதான்ய ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி 1938

விலை ரூ. 7 கமிஷன் கேட்லாக் விவரம் உட்பக்கத்தில்

விலாஸம் :

நே. ஈ. துரைஸாமி ஐயங்கார்

மாம்பலம் ஸம்ஸ்க்ருத புஸ்தகசாலை,

47, எல்லம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம்,

தியாகராஜநகர் போஸ்ட், மதராஸ் ஸமீபம், S.I.Ry.

இது மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு ¼ மைல் தென் மேற்கே கோதண்ட ராமஸ்வாமி கோயிலின் பின்தெரு கடைசிவீடு.

*ADDRESS :*

**N. E. DURAISWAMY IYENGAR**

*The Mambalam Sanskrit Book Depot,*

47, Ellammen Koil St., Mambalam West,

THYAGARAJANAGAR POST

(Near) MADRAS S.I.Ry.

*Printed at*

THE KABEER PRINTING WORKS

195, High Road,

TRIPLICANE, MADRAS

## பிரம்ம ஸாயுஜ்ய புஸ்தகாலய ப்ரசுரங்கள் என்கிற

## எங்கள் 10 சொந்த புஸ்தகங்கள்

ரூ.அ.

1. மோக்ஷவழி கீதை, உபநிஷத்துக்கள் இன்னும் வேத சாஸ்திர ப்ரமாண அர்த்தங்களுடன் பக்தியின் ஆவச்யகத்வம், தியானக் கிரமம், ஸ்திரீ தர்மங்கள், நமது நித்திய வாழ்கைக்கு அவசியம் தெரிந்திருக்கவேண்டிய அநேக ஆன்னீகாதி விஷயங்களுடன் எழுதப்பட்டிருக்கிறது. ஆண், பெண் ஸர்வ பிராம்மணர்களுக்கும் மிகவும் அவசியமானது ...1 0

2. ஸர்வஸாரஸங்கிரஹம் இதில் கீதை, ராமாயணம், நித்திய நைமித்திக கர்மானுஷ்டானத்திற்கு வேண்டிய தர்ம சாஸ்திர விதி நிஷேதங்கள், நீதிகளைப் புகட்டும் பாரதாதி ச்லோகங்களை சுமார் 1000 அர்த்தங்களுடன் இருக்கின்றன. இதிலுள்ளவைகளை மனதில் தரித்துக் கொண்டால் பெரிய ஸபைகளிலும் பெரியோர்கள் முன்னிலையிலும் இதன்படி ஸமயோசிதமாய்ப் பேசுங்கால் பண்டிதர்களைப் போல் விளங்கலாம். இதுவும் ஸர்வப் பிராம்மணர்களுக்கும் மிக அவசியமானது ...1 0

3. ஸம்ஸ்க்ருத ஸ்வபோதினி அன்னியருடைய உதவியை அதிகமாக யெதிர்பாராமல் தாங்களே படித்து ஸம்ஸ்க்ருத பாஷா ஞானத்தை யடைய (ஒக்கபில்லேரி) ஸர்வ

வஸதுக்களின் (அமரத்தைப் போல்) இனம் இனமாகப் பெயர்கள், சப்தம், தாது, ஸமாஸம், ஸந்தி, வியாகரண விதிகள், ஸம்பாஷணை வாக்கியக்கள் அர்த்தங்களுடன் உள்ளன. இதிலுள்ளதை,மனதில் தரித்துக் கொண்டால் ஸம்ஸ்கிருதத்தில் பேசலாம், ஸமஸ்கிருத நூல் விஷயங்களை அறியலாம். ... 1 0

4. அமரஸிங்கிரஹம் இதில் அமரத்தை முழுதும் மனதில் தரிக்கமுடியாதவர்கள் நெட்டுருவு செய்ய ஒவ்வொரு வஸ்துவிற்கும் அமரத்திலிருந்து இரண்டு மூன்று பிரஸித்தமான பெயர்களைப் பொறுக்கி சுலோக ரூபமாகச் செய்து அர்த்தங் கொடுத்து, ஒவ்வொரு பதத்திற்கும் தாது, அதனடியாக வந்த காரணத்தையுடைய ஸமாஸ அர்த்தங்களுடன் பெயர்ச்சொற்கள் யாவும் படிக்கப்பட்டிருக்கின்றன. 300 பக்கங்கள். ... 1 0

5. தமிழ்—ஸம்ஸ்க்ருத அகராதி (அமரப்படி) தமிழ் பதங்களுக்கு எளிதில் ஸம்ஸ்க்ருதம் பார்த்துக்கொள்ள தமிழ் அகராதிக் கிரமத்தில் உள்ளது. பள்ளிக்கூட ஸம்ஸ்க்ருத மாணவர்களின் மொழிபெயர்ப்பிற்கு (ட்ரேன்ஸ்லேஷன்) மிகவும் உபயோகமானது. ... 1 0

6. ஸம்ஸ்க்ருத—தமிழ் அகராதி (கிரந்த எழுத்தில்) ... 4 0

7. ஸம்ஸ்க்ருத—தமிழ் அகராதி (சுமார் 16000 பதங்களுக்கு அர்த்தம் ... 1 0

8. ஸம்ஸ்க்ருத—தமிழ் அகராதி சுமார் அரை லக்ஷப் பதங்கள் அநேக அர்த்தங்களுடன் கூடினது. வெருவாய் இதில் வாராத புது ஸம்ஸ்க்ருத பதமாவது, அர்த்தமாவது வேறு இராது. ஸர்வமும் சுருக்கமாய் அடங்கப் பெற்றுள்ளது. சுமார் 1800 பக்கங்கள். ... 7 0

अक्कृत्त वि குறையாத
अकुशलक्ष्मी वि பூர்ண ஐச்வர்யத்தை அனுபவிக்கிற
अकुशाश्व. पु ஓர் அயோத்தி மன்னன்
अकृष्टपच्य वि உழாமலே பயிராகிற
अकृष्ण वि வெளுத்த. சுத்தமான ण: களங்கமற்ற சந்திரன்
अकृष्णिका स्त्री ஊர்க்குருவி
अकेतु वि அக்ஞானமான
आकोट: पु (कोट: வளைவின்றி வளருகிறதான பாக்கு மரம்.
अक्का स्त्री தாய்
अक्त (अञ्ज) वि பூச, சேர, பரப்பப்பட்ட क्ता - இரவு
अक्तुः पु स्त्री இருள். ஒளி. தைலம்
अक्त्र न கவசம் अक्रः पु மதில் சுவர்
अक्रान्त वि வெல்ல முடியாத न्ता கத்திரிச் செடி பேதகம்
अक्रिय वि உபயோகமற்ற. சுறுசுறுப்பில்லாத. வைதிகக் கடமைகளைச் செய்யாத
अक्रिका स्त्री அவிரிச் செடி.
अक्लिष्ट वि சுடு வைத்து வாங்கின - कर्मन्, कारिन् वि வேலையில் ஓயாத - वर्ण தெளிவான. - वृत्त वि விருதானுஷ்டானத்தில் திருடமான
अक्ष 1. 5. प எட்டு. ஊடுருவு. வளர்த்து. திரட்டு
अक्षः पु வண்டியின் அச்சு, இருசு. வண்டி. திராசுக் கோல். தானி மரம். காடி. வண்டிக்குடம். சாணைக்கல். தலை மயிர். பாய். சொக்கட்டாளுட்டம். ஞானி. முதற் பணம். அக்ஷரேகை. ஜபமணிக் காய். 16 உளுந்தின் எடை (कर्ष). பாம்பு. கருடன். ஜீவன். ஞானம். சட்டம். வியவஹாரம். குருடன். கீழ்க் கன்னம். क्षं இந்திரியம். கண். உப்புபேதம். மயில்துத்தம். வண்டியுள்வாய். 80 குன்றுமணி

எடைத் தங்கம். வீடு. - अग्रकीलः அச்சாணி. கடையாணி. நுகத்தடி, ஏர்க்கால்களைச் சேர்த்து வைக்கும் கொக்கி - आवपनं சூதாடும் பலகை - आवापः சூதாடுபவன் - कुशल, शौण्ड, कोविद, ज्ञ वि சூதாட்டத்தில் கைதேர்ந்த - कूटः கண் விழி - ग्लहः சூதாடல் - जं பிரத்யக்ஷஞானம். வைரம். வஜ்ராயுதம். ஒருவித ஆட்டம் - जः விஷ்ணு. - दर्शकः, दृश् நீதிபதி - देविन्, द्यूतः சூதாடுபவன் - द्यूतं சூதாட்டம். - द्यूतिकं சூது விளையாட்டில் சண்டை -द्रुग्ध விருதில் அதிருஷ்டமில்லாத - धरः விஷ்ணு. சக்கிரம். சக்கிரமுடையவன் - धूर्तः, धूर्तिलः நுகத்தடிக்குப் பூட்டின காளை - पटलं நியாயஸ்தலம். தஸ்தாவேஜுகள் சேர்த்து வைத்திருக்கு மிடம். लः நீதிபதி - पाटकः, पाटः யுத்த பூமி - पातः பாச்சிகை யுருட்டல். - पादः நியாய சாஸ்திரஸ்தாபகரான கௌதம ரிஷி - पीडा இந்திரிய உபத்திரவம் - भागः பூகோளத்தின் அக்ஷ பாகை. அக்ஷரேகையின் அம்சம். - भारः வண்டி பாரம் -मात्रं சிறு வஸ்து. நிமிஷகாலம். இமை கொட்டல் - माला ஜபமாலை. அருந்ததி - राजः சூதில் பிரியமுள்ளவன் - वामः பிசகாய்ச் சொக்கட்டாடுபவன் - वाटः சூதாடுமிடம். மல்யுத்த இடம் -सूत्रं ஜபமாலை - स्तुषः தானிமரம்.

अक्षवती स्त्री சூது. விளையாட்டு

अक्षण वि தகாத காலமான

अक्षण्वत् वि கண்களையுடைய

अक्षत त्रि உடையாத. உபத்திரவிக்கப்படாத. तः சிவன். அக்ஷதை. வாற்கோதுமை. (யவை). பொரி. நபும்ஸகன். तं தானியம். க்ஷேமம், ता கன்னிகை—

योनिः அனுபவிக்கப்படாத பெண்.

**अक्षत्र** वि க்ஷத்திரிய வர்ணமற்ற **अक्षन्** न கண்

**अक्षम** वि தகாத. முடியாத. मा ஸஹியாமை. பொறாமை காமம். குரோதம்.

**अक्षय** वि ஏழையான. ஸம்ஸ்தமான. यः பரமாத்மா. குருத சையில் 20ம் (ஷர) या அழிவற்ற வைதிகபுண்ணியத் தை அளிக்குந் தினம் - गुणः, - पुरुहूतः சிவன் - तृतीया வைகாசி சுக்ல திருதியை - ललिता புரட்டாசிக் கிரு ஷ்ண ஸப்தமியன்று ஸ்திரீகள் அனுஷ்டிக்கும் நோன்பு. -लोकः பரலோகம்.

**अक्षयिणी** स्त्री பார்வதி

**अक्षय्य** वि நித்தியமான - उदकं பிண்டப் பிரதானந்தரம் பிதர்க்களுக்கு அளிக்கப்படும் மதுவும் எள்ளுங் கலந்த ஜலம். - नवमी ஐப்பசி சுக்ல நவமி

**अक्षरः** पु விஷ்ணு. சிவன். பிரம்மா. ரித்விக். ஜலதாரை. வாள் र் எழுத்து. பதம். பத்திரிகை. பிரம்மம். தபஸ். யாகம். நீர். ஆகாயம். முக்தி. நித்தியம். நியா யம். காஷ்ட காலத்தில் 5ல் 1 பங்கு. (र वि) - अंग அகாராதிக்கிரமம். -चं(चुं)चुः, चणः, चनः, जीवकः எழுதுகிறவன் -च्युतकं ஓர் அக்ஷரம் போவதால் உண் டாகும் வேறு அர்த்தம். - जननी, तूलिका பேனா - वि) न्यासः எழுத்துக்களின் ஒழுங்கு. அகாராதிக் கிரமம். வேதம் -पंक्ति वि பாதத்திற்கு 5 எழுத்து, அசைகளையுடைய - भाज् वि ஜபத்தில் பங்கைப் பெறுகிற -भूमिका எழுதப் பலகை -मुखः படிக்கிற வன் —मुखं அனன்கிற எழுத்து. -मुष्टिका விரல் குறிப்பால் பேசல் - वर्जित वि எழுதப் படிக்கத் தெரியாத - व्यक्तिः स्त्री தெளிவான பத உச்சார

णम् - शिक्षा பிரம்மதத்துவம் - संस्थानं அக்ஷரக் கிரமம். எழுத்து மூலம்

अक्षरकं न உயிரெழுத்து. அக்ஷரம்

अक्षरशः अ ஒவ்வொரு எழுத்தாக

अक्षर्य वि எழுத்து ஸம்பந்தமான

अक्षरी स्त्री மழை காலம்

अक्षान्तिः स्त्री பொறுமை யின்மை. பொறாமை. கோபம்

अक्षारः पु உப்பு பேதம்.

अक्षि न கண். எண் 2 -कंपः இமை கொட்டல்-कूट(क):, गोलः, तारा கண்மணி. கண் விழி -गत वि பகைக்கத் தக்க. கண்ணேவான. தோற்றமான -जाहः கண்ணின் மூலம். -पटलं கண்ணின் மேல் தோல். அதன் நோய் -पत् वि கண்ணில் விழுந்த. துன்புறுத்துகிற अ துளியான -भू वि தோற்றமான. உண்மையான -भेषजंமை. -भ्रुवं கண்ணும் புருவங்களும் -विकूणितं, शितं கடைக்கண் பார்வை

अक्षि(क्षी) कः पु ஓர் மரம்

अक्षिणी स्त्री அன்னிய தேசச் சரக்குகளுக்கு ஏற்பட்டிருக் கும் 8ல் 1 நிபந்தனை

अक्षितं न நீர் 100000பத்து லக்ஷம். -ऊति, वसु இந்திரன் तरंநீர்

अक्षिन् पु தேர்

अक्षियत् वि குறையாத செல்வமான

अक्षियोनिकः पु இந்திரன்

अक्षि(क्षी)वं न கடலுப்பு वः நுணமரம். முருங்கை

अक्षिभ वि குடிவெறியில்லாத भः ஒருவித மாமரம்

अक्षु वि சீக்கிறமான अक्षुद्रः पु சிவன்

अक्षुध्य वि பசியில்லாமலிருக்கப் பண்ணுகிற

अक्षेत्र वि நிலமற்ற. உழப்படாத त्रं கெட்ட நிலம். தகாத

சிஷ்யன். अपात्रिम्—विद् वि ஆத்ம ஞானமற்ற.
अक्षोटः, डः पु மலை உவ்வக்காய்ச் செடி. கடுக்காய்ச் செடி.
अक्षोभः पु யானை கட்டும் மரம் [டிக்கணக்கான துகை
अक्षोभ्य वि அமைதியான. भ्यः ரிஷி விசேஷம். புத்தன். கோ
अक्षौहिणी स्त्री 21870 தேர்கள் 21870 யானைகள் 65610
குதிரைகள் 109350 காலாட்களுள்ள சேனை
अक्षण वि உடையாத क्षण் காலம் -यावन् वि ஊடுருவுகிற
अक्ष्यं न ஒருவித உப்பு [தனமான சபலம்
अखट्टिः पु स्त्री தார் நடத்தை. வீணெண்ணம். குழந்தைத்
अखण्ड वि பூர்ணமான ं अ இடைவிடாத
अखण्डन वि ,, உடைக்க முடியாத. ने காலம்
अखण्डित वि தொடர்ச்சியான. உடைக்க முடியாத. -ऋतुः
கிரமப்படி பலந்தரும் காலம்.
अखातं, तः पु இயற்கையான புண்ணிய தீர்த்தம்
अखिल वि பூர்ணமான. உழுத (நிலம்) - आत्मन् பரமாத்மா
अखेटिकः पु மரம். வேட்டைக்குப் பழக்கப்பட்ட நாய்
अख्खल अ ஆனந்த ஆர்வாரம் लीकृ இப்படிக் கூவு
अग् 1 प வளைந்து வளைந்து போ
अग वि போகாத. நெருங்க, போக முடியாத.
अगः पु மலை. சூரியன். நீர்க்குடம். எண் 7. மரம் -ओकस्
சிங்கம். 8 கால்களுள்ளசரபமிருகம். பக்ஷி.வனவாஸி.
अगच्छः पु மரம்
अगदः पु - ஆரோக்கியம். மருந்து. விஷமுறிப்பு சாஸ்திரம்.
अगदङ्कारः पु வைத்தியன்
अगमः पु மரம். மலை.
अगरी स्त्री விஷத்தைப் போக்கும் வஸ்து. எலி விஷத்தைப்
போக்கும் தேவதாள விருக்ஷம். ஒருவிதப் புல்.
अगरु न அகில் अगस् न பாவம். அபராதம்.

अगस्तिः पु अगस्त्यः அகத்தி மரம். அகஸ்திய ரிஷி. புரட்டாசியில் நீரைத் தெளிவிக்கும் நக்ஷத்திரம்-उदयः இந் நக்ஷத்திரோதய காலமான புரட்டாசி கிருஷ்ண ஸப்தமி.-गीता சாந்தி பருவத்தில் கூறப்படும் ஒரு வித வித்தை—चारः இதன் சலனம்.—तीर्थं தெற்கே ஓர் புண்ணிய தீர்த்தம். -वटः ஹிமயமலையில் ஓர் ஸ்தலம். - मूत्रम् கடல் - संहिता அகஸ்தியஸ்மிருதி.

अगस्ती स्त्री அகஸ்திய குலத்தாள்.

अगाध वि ஆழமான. ஸாதிக்கக் கூடாத धः, धं ஆழமான பள்ளம். धः 5ல் 1 அக்கினி. - जलः ஆழமான ஏரி

अगारम् न வீடு

अगिनः पु ஸூரியன்.

अगिरः पु ஸூரியன் ஸுவர்க்கம். அக்கினி. ராக்ஷஸன்

अगु वि ஏழையான. துஷ்டனான गुः पु ராகு. இருள்.

अगुणः पु குற்றம்—वादिन् वि குற்றங்கண்டு பிடிக்கிற

अगुरु न रुः पु அகில். இங்குலீகம். குற்றெழுத்து

अगूढगंधः पु மறைக்க முடியாத வாஸனையுடையதானபெருங் காயம்.

अगृभीत त्रि வெல்ல, கைப்பற்றப் படாத. அறிய முடியாத.

अगृहः पु வானப் பிரஸ்தன்

अगोह्य त्रि மறைக்க முடியாத. பிரகாசமான

अग्निं वि ஆத்ம சுத்தியுள்ள ग्निः पु அக்கினி. அக்கினி தேவன். கார்ஹபத்ய, ஆஹவனீய, தக்ஷிணாக்கினிக்கள். ஜாடராக்கினி. பித்தம். இந்திரன். சூடு போடுதல். (அக்கினி கர்மம்.) பொன். எண் 3 ர் எழுத்துக்குப் பதிலானது. சேராங்கொட்டை மரம். சிகப்பு சித்திர மூலம்-अ (आ) गारः, आलयः,गृहः வைதிதாக்கினிவைக்குமிடம் -अस्त्रं ஆகாச பாணம்—आत्मक चि அக்கினி

ஸ்வபாவமான-आधानं அக்கினிப் பிரதிஷ்டை-आधेयः, आहितः அக்கினி வளர்க்கும் பிராம்மணன்-इध्‍ पु अग्नीध्रः வைதிகாக்கினியை ஜ்வலிப்பிப்பவன் - इन्धनं ஜ்வலிப்பித்தல் - उत्पातः தூமகேது. - उद्धरणं, उद्धारः இரு அரணிகளைத் தேய்த்து அக்கினி உண்டாக்கல். உதயத்திற்கு முன் யக்யாக்னியை எடுத்துத் தயார் செய்தல். -उपस्थानं அக்கினி பூஜை. அம்மந்திரம். -एधः வீடுகளைத் தீமூட்டிக் கொளுத்துவோன். கலஹக்காரன். - कणः, कला, स्तोकः தீப் பொறி - कर्मन्. சூடிடல். தீயின் வேலை. அக்கினி ஹோத்திரம். - कारिका அக்கினி கார்யம், பிரதிஷ்டை - काष्ठं அகிற்கட்டை - कुक्कुटः கொள்ளிக்கட்டை - कुंडं அக்கினி குண்டம். -कुमारः ஸாபரம் ஹண்யன். லேகியம். -केतुःபுகை -कोणः, दिक् தென்கிழக்கு மூலை. - क्रिया உத்தரக்கிரியை. சூடு போடல் - क्रीडा வாண வேடிக்கை. - गर्भः அக்கினியை கர்ப்பத்திலுடைய அரணி. வன்னிமரம். - ग्रंथः அக்கினி பூஜையைச் சொல்லும் நூல் -घृतं ஜீர்ண விருத்திக்காக லேஹியம். -चित् पु ஆஹிதாக்கினி. தணல் -चयः, चयनं, चित्या, चित्वत् அக்கினி வளர்த்தல்.-जः கார்த்திகேயன். விஷ்ணு. - जं,जातं பொன் -जिह्वा அக்கினி ரூபமான நாக்கு. அக்கினியின் ஓர் நாக்கு. —तप् वि அக்கினியின் தாபமுள்ள. அக்கினியால் தவம் செய்கிற -तपस् विபஞ்சாக்கினி மத்தியில் தவம் செய்கிற. அக்கினியைப்போல் ஜ்வலிக்கிற- तेजस् वि அக்கினியின் காந்தி, சக்தியுள்ள-द् वि தீயைக் கொடுக்கிற. ஜீர்ணம் செய்கிற. தீ மூட்டுகிற-दग्ध वि சிதாக்கினியில் கொளுத்தப்பட்ட. அக்கினி ஸம்ஸ்

காரமான -दग्धाः ஆஹிதாக்கினிகளாயிருந்த பிதிர்வர்க்கம். -दमनी நித்திரை யுண்டாக்கும் ஒஷதி -दातृ உத்தரக்கிரியைசெய்பவன் -दीपन वि ஜீர்ணத்தை அதிகரிப்பிக்கிற -दूत त्रि அக்கினியைத் தூதனுகவுடைய -दूषित त्रि சூடுபோடப்பட்ட -देवा கிருத்திகை -धान् அக்கினி ஹோத்திரம் செய்பவன் வீடு —धारणं வைதிகாக்கினி வளர்த்தல் -नामन् சேராங்கொட்டைமரம். சித்திர மூலம் -नेत्रः ஆஹுதிகளைக் கொண்டுவர அக்கினியை தூதனுகவுடைய தேவன் -पदं அக்கினி என்கிற பதம். அக்கினிஸ்தானம்-परि(ष्) क्रिया அக்கினி பூஜை செய்தல் -परिच्छदः யக்கிய ஸாமக்கிரியைகள் -परिधानं யக்யாக்கினியைத் திரையால்மூடல் -परीक्षा அகோரப்பிரமாணம் -पर्वतः எரிமலை -पुच्छः யாக சாலையின் பின் புறம். அக்கினி அணைதல் -पुराणं வியாஸப்ரோக்தமான 18 புராணங்களில் 1 -प्रणयनं, प्रतिष्ठा யக்யாக்கினிப்பிரதிஷ்டை -प्रवेशः அக்கினியில் நுழைதல். புருஷனைக்கொளுத்தின தீயில் மனைவி விழுந்து சாதல் -प्रस्कंदनं- அஹிதாக் கினியாயிருத்தல் -प्रस्तरः சக்கிமுக்கிக்கல் - वाहुः புகை- बीजं அக்கினியின்பீஜம். பொன். र् அக்ஷரம் - भं பொன். கிருத்திகை -भु न நீர். பொன் -भूः ஸுப்ரம்மண்யன். எண் 6. -भूत व தீயிலிருந்துண்டான - भूतिः தீயின் ஒளி, சக்தி -मणि ஸூர்ய காந்தக்கல் - मथ् पु அரணியைக் கடையும் யஜமானன் -मंथः புழுன்னைக்கீரை -मंथनं உரைத்து அக்கினி யுண்டாக்கல். அப்பொழுதுசொல்லும் மந்திரம் -मंथनी स्त्री தழுதாழை -मांद्यं அஜீர்ணம். -मारुतिः அகஸ்தியர் -मित्रः पु சுங்க வம்சத்தோரரசன். காற்று. -मुखः தேவன்.

விஸர்க்கம் போட்டுப் புல்லிங்கமாய்க் காட்டாமலேயே புல்லிங்கார்த்தம் கொடுக்கப்பட்டிருக்கும். அதனாலேயே தீர்க்கம் சேர்த்துக் கொண்டால் ஸ்திரீ லிங்கார்த்தமும் அனுஸ்வாரத்தால் நபும்ஸகங்களும் ஊஹிக்கத்தக்கன. உ-ம். **गम्य** நெருங்கத் தகுந்தவன் என்றால் விஸர்க்கமுஞ் சேர்த்துக் கொள்ளத்தகுந்தது. இதில் ஆகார தீர்க்கம் சேர்த்துப் படித்தால் **गम्या** அணுகத் தகுந்தவள், **गम्यं** அனுஸ்வாரம் சேர்த்தால் அடையத் தகுந்தது என்பது போல். ஸ்திரீ லிங்கங்களுக்குவெகுவாய் ஈகார தீர்க்கந்தான் வரும். சில விடங்களில் அவை காட்டப்பட்டு மிருக்கின்றன. கடைசியிலுள்ள லிங்கக்குறியை லோப:மடையச் செய்தால் ஸம்பந்தம் விசேஷணமாகிறது. அப்பொழுது வுடைய என்று சேர்த்துப் பொருள் கொள்ளவேண்டும் **क्षेत्रम्** நிலம் **क्षेत्र** நிலமுடைய. விரோத பாவத்தில் இல்லாத, முடியாத **अखण्डित** கண்டிக்கப்படாத, கண்டிக்க முடியாத போல்

சில விடங்களில் வேதத்தில் வரும் பதங்களும், நாட்டிய, ஜ்யோதிஷ, கணித, தர்க்க, வியாகரண, மீமாம்ஸா பரிபாஷைகளும் விளக்கி யிருக்கின்றன.

**उद्भवः**, **भावः**, போன்ற சில விடங்களில் தாது தெரியா விட்டாலும், கணம் தெரியாவிட்டாலும் உபஸர்க்கம் சேராத விடத்தைப் பார்க்கவும்.

**तृ** என்று பதத்தோடு சேர்ந்து விசேஷணமாக அத் தொழிலைச் செய்கிற அர்த்தத்தையும், புல்லிங்கமாய் அத் தொழிலுடையவன் என்பதையுங் காட்டும் (**दातृ** என்றால் கொடுக்கிற, கொடுக்கிறவன் போல்)

**अन** என்று தாதுவோடு சேர்த்தால் அது பெயர்ச் சொல்லர்த்தத்தைத் தரும் (**गमनं** போதல் **पचनं** சமைத்தல்)

**ता**, **त्वं** விசேஷண, ஸம்பந்தங்களோடு சேர்ந்து அதன் தன்மையைக் காட்டும் **आचार्यता**, **आचार्यत्वं** என்றால் குரு

வின் தன்மை. **णिच** ந்தத்தில் வரும்பொழுது ரூபம் தீர்க்கமாகும். **मरण** சாதல் **मारण** மரணத்தை விளைவித்தல்.

தாதுவோடு **य** காரம், அல்லது **नीय** சேர்த்தால் அதைச் செய்யத்தகுந்த என்று பொருள்படும் **गेय** அடையத்தகுந்த **दृश्य** பார்க்கத்தகுந்த **गमनीय, दर्शनीय** வும் அதே மாதிரியே

**वत्, मत्** பதத்தோடு சேர்ந்து அதையுடைய என்பதைச்சொல்லும் **बुद्धिमत्.**

**न** காராந்தம் குணத்தையுடைய விசேஷார்த்தத்தையும், அதையுடைய ஸம்பந்தத்தையுங் காட்டும் **ज्ञानिन् धन्विन्** **वि** வில்லையுடைய **पु** வில்லையுடையவன். இன்னும் சில ரூபங்கள் **ज्ञानं, ज्ञेयं, मानं, मेयं** அறிதல், அறியத்தகுந்தது) இதே மாதிரி மிக எளிதாகவே இருப்பது பாஷையில் கொஞ்ச ஞானமுள்ளவர்களுக்கு நாம் எழுதாமலே தெரிந்திருக்கும்.

பிழைதோன்றினல் தெரியப்படுத்தினல் வந்தனத்துடன் அங்கீகரித்து மறுபதிப்பில் திருத்தி அச்சிடுகிறோம்.

நே. ஈ. வேங்கடேச சர்மா.

இதில் வரும் எழுத்துக்கள், குறிகளின் விவரம் :—

**अ** அவ்யயம்
அனு அனுபந்தம்
**अल** அலங்காரம்
**आ** ஆத்மனே பதி
**उ** உபய பதி
உ-ம் உதாஹரணம்
**क** கர்மணிப் பிரயோகம் (செயப்பாட்டு வினைப் பிரயோகம். கொடு, கொடுக்கப்பட்டிரு)

**णिच्** ணிசந்தம் (செய்விக்கும் வினை)
**द्वि** த்வி வசனம் (இருமை)
**ना** நாமதாது (பெயரிடுவது)
**नि** நித்தியம் (எப்பொழுதும் மாறாதது)
**प** பரஸ்மைபதி
**पु** புல்லிங்கம் (ஆண்பால்)
**ब** பஹுவசனம் (பன்மை)
மு-ன முதலியன
**वि** விசேஷணம் (பண்பு, பெயருரிச் சொல்)
**व्या** வியாகரணம் (இலக்கண ஸம்பந்தம்)
**स** ஸந்நந்தம் (இச்சார்த்தகம். விரும்பல்)
**स्त्री** ஸ்திரீ லிங்கம் (பெண்பால்)
**स अ** ஸமாஸ அந்தம்

,, மேற்படி அதாவது இதற்கு நேராயுள்ள மேல் வரிப் பதமே இங்கும். = இக் குறிக்கு முன்னுள்ள அர்த்தமே இக் குறிக்குப் பின்னுள்ள பதத்திற்கும். அநேகார்த்தங்கள் வருமிடங்களில் அதே அர்த்தங்களுள்ள வேறு பதத்திற்கு இக்குறி கொடுக்கப்பட்டிருக்கும்.

—ஒரு பதத்தோடு அநேக பதங்கள் சேரும் பொழுது ஒவ்வொன்றிர்க்கும் இம் முதற் பதத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு வராமல் இக் குறியைக் கொடுத்துப் பதங்கள் சேர்க்கப்பட்டிருக்கும். ஒரு ஸம்ஸ்த பதத்தைப் பார்க்க ஸந்தி விதிப்படி அதைப் பிரித்துத்தான் இதில் பார்க்கமுடியும். சில விடங்களில் இக்குறியுங் கொடுக்கப் படாமலுமிருக்கும். இந்த இரண்டு பதங்களோடு இன்னொரு பதம் சேரும்பொழுது ( ) குறி போடப்பட்டிருக்கும் **आत्मन्** கட்டத்தில் **तत्त्व** பதத்தோடு (**ज्ञ**) சேர்க்கப்பட்டிருப்பதுபோல் **आत्मतत्त्वज्ञः**

ஒரு ஸமஸ்தபதத்தில் வேறு லிங்கத்தில் ரூபங் காட்ட மறுபடியும் அப்பதத்தை எழுதாது கடைசி மாறுன ரூபத்தைமட்டும் காட்டப்பட்டிருக்கும்.

() சில விடங்களில் இக் குறிக்கு முன்னெழுத்திற்குப் பதில்இதிலுள்ளதையும்உச்சரிக்கலாம் **अतिरेकः** என்பதற்குப்பதில் **अतीरेकः** என்றும்சிலவிடங்களில் **ब** விற்கு **व** வும்வரும். **वीज, वीज**. சில விடங்களிற் **क** போன்ற எழுத்திற்கு இது போடப்பட்டிருக்கும். அப்பொழுது இதிலுள்ளதை விட்டும் படிக்கலாம். விடாமலும் வரும் **आसेचन आसेचनकं** போல் **आषाढ(क)**:

( ) வில்லே என்ருல் வில்லே மட்டுமின்றி வில்லேப் போல் என்று ஊஹிக்கத் தக்கது. )( சிலவிடங்களிற் தனி ப்ராகட் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கும். அப்பொழுது இது விசேஷார்த்தத்தைக் காட்டும். உலகப்) பற்றின்மை. ஆசையில்லாமை என்பது ஸாமான்யார்த்தம். உலக வஸ்துக்கள் ஒன்றிலுமே யில்லாமை என்பது விசேஷார்த்தம். [இரண்டொரு பதங்களுக்கு ஒரு தனி வரி வளர்த்தாமல் காலி யிடமிருக்கும் மேல், கீழ் வரியில் இக்குறிக்குள் அடக்கப்பட்டிருக்கும்., கொடுக்க, பிரிக்க, செய்யப்படவேண்டிய போன்ற விடங்களில் படவேண்டிய என்பதை ஒவ்வொரு பதத்தோடும் சேர்த்துக் கொள்ள வேண்டியது.

,இன்னும் இரண்டு மூன்று சொற்களின் இடையில் ,வந்தால் அவைகளின் ஒரு பொதுவான தன்மையுள்ள பொருள் நிச்சயிக்கத் தக்கது. (உ-ம் உக்கிரமான, வேகமான என்பதில் உக்கிரமென்ருல் கோபம், வேகமென்ருல் ஓட்டம் இவ்விரண்டும் சேர்ந்த பாவம் ஆத்திரம், ஆவேசம் போல்). ஒன்று என்று வருமிடங்களி லெல்லாம் எந்த லிங்கங்களிலும் அர்த்தங்கொள்ளலாம் பொருளோ, மனிதனே, ஸ்திரீயோ. இதில் வெகுவாய்ப் புல்லிங்கத்தில் எழுதப் பட்டிருக்கிறது.)

# ஸம்ஸ்க்ருத—தமிழ் அகராதி

## अ

**अ** தேவ பாஷையான ஸம்ஸ்க்ருதத்தில் முதலெழுத்து.

**अः** பு விஷ்ணு. பிரம்மா. சிவன். பிரஹஸ்பதி. வாயு வைச்வானரன். சூர்யனுடைய குதிரை. சந்திரபிம்பம். ஆமை. கோழித்தலை. ஸித்தமந்திரம். பெருந்தன்மை. நிர்ப்பந்தித்தல். न பிரம்மம். வெளிச்சம். சண்டை. முற்றம். கௌரவம். அந்தப்புரம். காரணம். நகை. கால். சிகை. சக்கிரம். ஆக்ஞை. ஸப்தஸ்வர காலப் பிரமாணம். கை கூப்புதல். மிகவும் உயர்தல். (முதலிய இன்னும் அனேக அர்த்தங்கள் சப்தகல்பத்ருமம், வாசஸ்பத்யாதிகளின்படி இருக்கின்றன. இப் பதத்திற்கு மட்டும் படிப்பவர்கள் ஸந்தேகியா வண்ணம் சில அர்த்தங்களுக்கு இரண்டொரு பிரமாணங்களைக் காட்டலாம்.)

अकारो ब्रह्मविष्णवीश कमठेष्वङ्गणे रणे ।
गौरवेन्तःपुरे हेतौ भूषणेङ्ग्रावुमेज्ययोः ॥

என்பது நானார்த்தம். மாண்டூக்யோபநிஷத்தில்

जागरितस्थानो वैश्वानरोऽकारः

**अ** இனி அவ்யய ரீதியில் வரும் அர்த்தங்களுக்கு

तत्सादृश्यमभावश्च तदन्यत्वं तदल्पता ।
अप्राशस्त्यं विरोधश्च नञर्थाः षट् प्रकीर्तिताः ॥

என்பதில் போல் सादृश्यं போலி (பொய்த் தோற்றம்) உதாரணமாக अब्राह्मणः (பூணூலினால்) பிராம்மணனைப் போலிருப்பவன். ஆனால் க்ஷத்திரியனோ, வைச்யனோ

अभाव: இல்லாமை (உ-ம்) अज्ञानं அறிவின்மை. अन्यत्वं வித்தியாஸம். பேதம் (உ-ம்) अनश्वः குதிரையல்லாதது. வேறு எதுவாவது பசுவோ, பக்ஷியோ, மனிதனோ, மரமோ, கல்லோ अल्पता குறைவு. இழிவு. (உ-ம்) अयोधः இதரவீரர்களுக்கு ஸமமாயிராமல் திறமை குறைவான வீரன் अप्राशस्त्यं கெடுதி. தகாமை (உ-ம்) अकाल கிரம காலமின்றி முந்தியோ பிந்தியோ வேளை தப்பின विरोधः விரோதமான எதிரிடையானது (உ-ம்) अनकस्मात् நீடீ ரென்றின்றி, என்றபடி பெயர்ச்சொல், வினைச்சொல், விசேஷண பதம், அவ்வியயங்கள் இன்னும் தாதுவழியாகப் பிறக்கும் யாவற்றிற்கும் உதாரணங்களில் காட்டியபடி अच् உயிரெழுத்துப் பதம் முன் अन् என்றும் (உ-ம்) ऋतं अनृतं, हल् மெய்யெழுத்துப் பதத்தின் முன் अ (உ-ம்) सत्यं असत्यं என்றும் ந ஙர்த்தங்கள் வரும். ऋणिन् என்கிற பதத்திற்கு மட்டும் எதிரிடைப் பதம் अऋणिन्. வியப்பிடைச்சொல்லாக ஸம்போதனம் கூப்பிடுதல் अ कृष्ण! ஓ கிருஷ்ணனே! தயை अ अवद्यं ஐயோ சொல்லத் தகாதது நிந்தை अकरणि என்பதில் போலும் நிஷேதத்தையுங் காட்டும். இவ்வுப ஸர்க்கங்கள் சேர்ந்துவரும் ஸமாஸ பதங்கள் வெகுவாய் தத்புருஷமாகவோ, பஹுவ்ரீஹியாகவோத்தான் இருக்கும். தாது ரூபங்களில் लङ्, लुङ्, लृङ् களின் ஸங்கேதமாகும். முகவுரையில் கூறியிருக்கிறபடியே ஒவ்வொரு பதத்திற்கும் மேல் சுலோகத்திலுள்ளபடி ஆறுவித அர்த்தங்களில் கூடியவரையில் எத்தனை அர்த்தங்களையொட்டி ஊஹிக்கலாமோ அவ்வளவும் நல்லது. அவ்வாறு செய்வதில் யாது பிசகுமில்லை.

अक् 1 प வளைந்து வளைந்து போ अक वि அப்படிப் போகிற
अकं न பாவம். துக்கம்
अकच वि மொட்டையான चः கேது
अकडमं, अकथहं இவ்வக்ஷரங்களுள்ள சுபாசுபஸூசகஜோதிட
अकनिष्ठः पु கௌதம புத்தர் [சக்கிரம்
अकम्पनः पु ஓர் ராக்ஷஸன் अकरण वि இயற்கையான
अकरणिः स्त्री தோல்வி. தவறு (சாபத்தில்) अकरा நெல்லி
अकरिः पु சுங்கம்
अकर्ण वि காதுகளற்ற. செவிடான. र्णः பாம்பு
अकर्ण्य वि காதுகளுக்குத் தகாத. காதுகளில்லாத
अकर्तन वि வெட்டாத. குள்ளமான
अकर्मन् वि வேலையில்லாத. சோம்பலான. திறமையற்ற.
இழிவான. பதிதனான. செயப்படுபொருளற்ற.
न கடமைகளைத் தவிர்த்தல். தகாத காரியம்.
பாவம் - कृत् वि தொழிலின்மை - भोगः பல, அஹங்
अकर्मक वि செயப்படுபொருளற்ற [காரத் தியாகம்
अकर्मण्य वि செய்யமுடியாத. செய்யத்தகாத
अकल्का स्त्री நிலவு ल्कता நீதி. உண்மை.
अकल्कन, क वि கர்வமற்ற. வினயமான
अकल्प वि வசப்படாத. பலமற்ற. நிகரற்ற
अकल्पित वि இயற்கையான. கலப்பற்ற
अकल्य वि சுகமற்ற. உண்மையான
अकव, वा वि வர்ணிக்க முடியாத वि மூடனை
अकस्मात् अ திடீரென்று. வீணாக
अकाण्ड वि எதிர்பாராத.-पातः திடீரென்று நேரல் - पातजात
अकाण्डे अ திடீரென்று [वि பிறந்ததும் நசிக்கிற.
अकाम वि பிரக்ஞையற்ற. தொடர்ந்து வரும் र् க்கு முன்
மறையும் र् ஸந்தி விசேஷம்.

अकामता स्त्री இச்சையின்மை अकाय वि உடலற்ற यः ராகு
अकार्य न தகாத கார்யம் अकार वि காரியமற்ற रः அ எழுத்து
अकाल वि தகாத காலமான. கருமையாயில்லாத - कूष्माण्डः அகாலபூஷணி. அலவிண் ஜன்மம் -जलदोदयः மூடு பனி -सह वि கால தாமதத்தை ஸஹிக்காத, (கோட்டை முற்றுகையில்) நீண்ட காலம் நிற்க முடியாத
अकिञ्चन वि ஒன்றுமில்லாத. பரம ஏழையான
अकिञ्चनं न ஒன்றும் தாளாதது.
अकिञ्चनता स्त्री ஸர்வத்தியாகம். தரித்திரமாய் விடல்
अकिञ्चनिमन् पु ஏழ்மைத்தனம்
अकिंचित्कर वि ஒன்றுமே உண்டாகாத, உபயோகமற்ற
अकुण्ठ वि தடுக்கப்படாத. சுறுசுறுப்பான. நிலைநிறுத்தப் பட்ட धिष्ण्यं பரலோகம்
अकुतः अ எங்கிருந்துமின்றி - भय वि நிர்ப்பயமான
अकुप्यं न - வெள்ளி
अकुल वि இழிவான लः சிவன் ला பார்வதி
अकुलीन वि இழி பிறவியான. பூமி ஸம்பந்தமற்ற
अकूपार वि நல்லதில் முடிகிற. எல்லையற்ற
अकूपारः, वारः पु கடல். ஜலாசயம். ஸூரியன். கல். ஆமை. பூமியைத்தாங்கும் ஆமையரசன்.
अकृत वि பிசகாய்ச் செய்யப்பட்ட. அபூர்த்தியான. கிருஷ் டிக்கப்படாத ता புத்திர ஸ்தானத்தில் பாவிக்கப் படும் பெண் - अर्थ वि தேர்ச்சி பெறாத - अस्त्र वि ஆயுதப் பயிற்சியில்லாத - आत्मन् वि மூடனான - एनस् वि குற்றமற்ற - कारं अ முன்பு அவ்வாறு செய்யப்பட்டிராததாய் - ज्ञ वि நன்றி மறந்த - धी, बुद्धि [वि ஒன்றுந் தெரியாத
अकृतिन् वि திறமையற்ற
अकृत्यं न தகாத செய்கை. பச்சாத்தாபம்

9. **ஸம்ஸ்க்ருத பாஷா அனுபந்தம்** இது மேற்படி அகராதியில் அனு, அனு என்று காட்டி, விடப்பட்டிருக்கும் இதிஹாஸ புராண புருஷர்களின் சரித்திரச் சுருக்கங்கள், சிலவற்றின் லக்ஷணங்களைக் கூறும் ஆச்சர்யமான பிரமாண சுலோகங்கள், வியாகரண தாது பாடம் அர்த்தத்துடன், சுமார் 100 லௌகிக காகதாளீயம் போன்ற நியாயங்கள் முதலிய அரிய விஷயங்கள் அடங்கப்பெற்றுள்ளது. அகராதி வாங்காதவர்களும்கூட வாங்கிப் பார்க்கத்தகுந்தது. ... 1 0

10. **ஸம்ஸ்க்ருத வாசகம்** இது ப்ரஸித்தமான கிரந்தங்களின் திரட்சி. இதில் பதம் பிரித்து அர்த்தங்கள் ஒவ்வொன்றிர்க்கும் சப்தம், தாது, ஸமாஸம் போன்ற விஷயங்களுடன் ஸம்ஸ்க்ருத பாஷையில் திருட ஞானம் ஸம்பாதிக்க ஸாதனமானது. ... 1 0

2, 3, 7, 9, 10 எண்களுள்ள புஸ்தகங்கள் சீக்கிரத்தில் வெளிவரும். நமது புஸ்தகக் கடையில் இன்னும் இதரமான சாஸ்திர ஸஞ்ஜீவினி, கும்பகோணம், பாலக்காடு, கடலங்குடி நடேச சாஸ்திரிகள் முதலிய புஸ்தக வியாபாரிகளின் புஸ்தகங்களும் யாவும் கமிஷனுடன் கிடைக்கும். இனமாக அளிக்கப்படும் கீதோபதேசம் என்னும் சிறு புஸ்தகத்தில் இவை யாவும் அடங்கியிருக்கின்றன. கேட்லாக்கிற்கு எழுதினல் அனுப்பப்படும்.

வேதம், சாஸ்த்ரம், இதிஹாஸம், புராணம், கத்யம், பத்யம், நாடகம், அலங்காரம், ஜ்யோதிஷம், ஸம்ப்ரதாயம் முதலிய ஸர்வ சாஸ்திரங்களும் எல்லா எழுத்துக்களிலும் தமிழ், இங்க்லீஷ் அர்த்தங்களுடனும் கிடைக்கும். புஸ்தகங்களுக்குக் கடிதம் எழுதுபவர்கள் தங்கள் ஊருக்கு எது ரயில்வே ஸ்டேஷனே, அதையும் தெரியப்படுத்தினல், தபால் சார்ஜ் அதிகமாகும் பக்ஷத்தில் ரயில்வே பார்ஸலில் அனுப்பப்படும்.

கிரந்த அகராதியைத் தவிர்த்து, மற்றவையாவும் தேவநாகர லிபியில் டபில் க்ரௌன் 16 பக்கம் (இக் காகித அளவு) ஸைஸில் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் ஒபன் பயிண்டுடன் சுத்தமாய்ப் பிழைகளின்றி அச்சிடப்பட்டிருக்கின்றன. 7 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு 25% கமிஷன் எங்கள் சொந்த புஸ்தகங்களுக்கும், அயலாருடையவைகளுக்கு 6¼% கமிஷன் தள்ளி அனுப்பப்படும். தபாலிலோ நேரிலோ வந்து வாங்கிக்கொள்ளலாம். 10 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு 25% க்குக் குறையாமல் முன்பணம் அனுப்பினுல்தான் ரயில்வே பார்ஸலில் அனுப்பமுடியும். ஸெட்டாய் வாங்கினுல் 33⅓% கமிஷன். யாவற்றிற்கும் தபால், ரயில்வே சார்ஜ் பிரத்தியேகம்.

விலாஸம்:

**நே. ஈ. துரைஸாமி ஐயங்கார்,**

மாம்பலம் ஸ்மஸ்க்ருத புஸ்தகசாலை,

47, எல்லம்மன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம்

தியாகராஜ நகர் போஸ்ட், மதராஸ் ஸமீபம், S. I. Ry.

**N. E. DURAISWAMY IYENGAR**

*The Mambalam Sanskrit Book Depot,*

47, Ellammen Koil St., Mambalam West,

THYAGARAJANAGAR POST.

(near) MADRAS. S. I. Ry.

---

இது மாம்பலம் ரயில்வே ஸ்டேஷனுக்குக் கால் மைல் தென் மேற்கே கோதண்டராமஸ்வாமி கோவிலின்பின் தெருகடைசிவீடு.

# முகவுரை

நமது தமிழ் நாட்டில் ஸம்ஸ்க்ருத புஸ்தகங்களைப்படிப் பவர்களுக்கு அர்த்தம் பார்த்துக்கொள்ளப் பூர்த்தியான அகராதி இதுவரையில் ஒன்றும் வெளிவந்ததாய்த் தெரிய வில்லை. சில ப்ரயத்தினங்கள் பண்ணப்பட்டு அவைகள் விஸ்தாரமாயில்லாமல் சுருக்கமாய்ப் போய்விட்டன. அம் மாதிரியானவை நம்மாலும் இரண்டு புஸ்தகங்கள் ஒன்று கிரந்த லிபியிலும் மற்றொன்று நாகரியிலும் வெளியிடப் பட்டன. நமது புஸ்தகங்களைப் பார்த்தவர்களிற் சிலர் தாங்கள் கொடுத்த விலையைக் கவனியாது தாங்கள் பார்க் கும் பதங்கள் யாவும் எல்லா நிகண்டுகளிலேயும் கிடைக்கக் கூடிய அர்த்தங்களோடு இருக்கவில்லை யென்று குறை யடைந்தனர். அது நமக்கும் பெருங் குறையாகவே யிருந் தது. அதற்காகவே பிரசாரத்திலுள்ள பதங்கள் யாவை யும் ஸர்வார்த்தங்களுடன் எடுத்துத் திரட்டி இப் பெரிய சுமார் அரை லக்ஷம் (50,000) பதங்களடங்கிய நானார்த்த அகராதியை2000பக்கங்களில்வெளியிடமுயன்றோம்.கொடுக் கப்பட்டிருக்கும் அர்த்தங்களில்ஸந்தேகப்படுகிறவர்கள் அம ரம், மேதினி, வைஜயந்தி, விச்வம், ஹலாயுதம் முதலிய நிகண்டுகளைப் பார்க்கவும். ஒவ்வொருதாதுக்களின் மூலமாய் அநேக பதங்கள் அநேக ரூபங்களிற் பிறக்கின்றன. அவை களை யெல்லாம் சேர்த்துப் பார்த்தால் பதங்கள் லக்ஷக் கணக்கிலாகும். நாம் அவைகளை விட்டுவிடவும் செய்யாது ஆங்காங்கு ஸூசனைகள் செய்து ஒருவிதமான புனருக்தி யானது இராவண்ணம் சுருக்கி யிருக்கிறோம். அப்படிச் சுருக்காவிடில் இந்நூல் இன்னும் பதின்மடங்கு விருத்தி யாகி, விசேஷமாய்ப் பிரசாரம் ஆகவேண்டும் என்கிற எண் ணம் நிறைவேறாது, ஒருவருமே வாங்கிப் பிரயோஜனத்தை யடையாமற்படி வீணாகிவிட ஹேதுவாயிருக்கும்.

இந்நூல் சுருக்கப்பட்டிருக்கும் விவரமாவது :-புஸ்தக முதலிரண்டு பக்கங்களிற் கூறியபடி விரோத பாவம், முத

விய ஆறு அர்த்தங்களைக் கூறும் நஞர்த்தம் **अ, अन्** என்று உயிர் மெய்யெழுத்துக்களுக்குத் தகுந்தபடி பத முதலில் வரும். இவ்வறுவித அர்த்தங்களைச் சொல்லிக்கொண்டு வாாமல், விசேஷார்த்தங்கள் த்வனிக்கும் பதங்கள் மட்டும் எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன. விசேஷார்த்த மிராத பதங்கள் **अनच्छ, अनकस्मात्** போன்றவை விடப்பட்டிருக்கின்றன. ஆனல் அறுவித அர்த்தங்களும் முடியுமான வரையில் (வினைகளைத் தவிர்த்து) எல்லாப் பதங்களுக்கும் கிராஹ்யம். இதில் இன்னென்று கவனிக்கத் தகுந்ததாகும். ஒரே பதத்தில் இருமுறை நஞ் வந்தால் அப்பொழுது முதலிலிருந்த ரூபத்திற்கு என்ன அர்த்தமோ அதுவேதான் இதற்கும் வைத்துக்கொள்ளவேண்டும் (உ-ம் **अनमितंपच = मितंपच अनमित्र = मित्र** போல்). அதே மாதிரி தாதுக்களோடு சேர்க்கத்தகுந்த உபஸர்க்கங்கள் 22. (இவ்வுபஸர்க்கங்களைத் தெரிய விரும்புவோர் அனுபந்தத்திலாவது, உபஸர்க்க பதத்திலாவது கண்டு கொள்ளவும்.) அகாராதிக் கிரமத்தில் இந்த உபஸர்க்கங்கள் வரும்பொழுது அவைகளின் அர்த்தங்கள் ப்ரமாண ச்லோகங்களோடு உதாஹரணங்களுடன் அகாரத்தில்போல் எழுதப்பட்டிருக்கின்றன. இவை சேருவதால் அர்த்தங்கள் ஒரே தாதுவிற்குப் பலவிதமாய் மாறிவிடுகின்றன. (உ-ம் **हृ** தாதுவோடு **आ** சேர்த்தால் உணவாக்கிக் கொள்ளல், **वि** சேர்ந்தால் விளையாடல், **सं** சேர்ந்தால் அழித்கல் முதலிய ரீதிகளாயிருக்கின்றன). பெயர்ச்சொல்லில் போல் இதிலும் மாறுபாடில்லாத பதங்களை (**इष्, अभीष्** போல்) விட்டுவிட்டு ஸந்தர்ப்பானு ஸாரமாய் விசேஷார்த்தங்கள் த்வனிக்குமிடங்கள் மட்டும் எடுத்தெழுதப்பட்டிருக்கின்றன. உதாஹரணமாய் **दा** என்கிற தாதுவிற்குக் கொடு என்றர்த்தம். **कर्णं दः** என்றால் காதைக்கொடு. காதை அறுத்துக் கொடு என்றெண்ணிவிடாமல் காதின் சக்தியை இவ்விஷயத்தில் செலவிடு அதாவது கேள் என்றர்த்தமாகும். அதே மாதிரி **मनो दा** கவனி. **वाचं दा** உபந்யஸி. **आज्ञां दा** கட்டளையிடு. **दृष्टिं दा**

பார். आशिषं दा ஆசீர்வதி. प्रतिवचनं दा பதில் சொல். मार्गं दा வழிவிடு. शोकं दा துக்கம் விளைவி. श्राद्धं दा சிரார்த்தம் செய். संग्रामं दा சண்டைசெய். अर्गलं दा தாளிடு. निगडं दा விலங்கிடு. अग्निं दा கொளுத்திவிடு. संकेतं दा ஸங்கேதம் செய்துகொள். वृत्तिं दा வேலையிடு. दर्शनं दा தோன்று, பிரத்யக்ஷமாகு. शब्दं दा சப்தஞ்செய். तालं दा கைகொட்டு. आतपो दा வெல்யிலில் காயவைமுதலியவாறுஇருக்கின்றன. அதேமாதிரி (உபஸர்க்கங்கள் சேர்ந்தும், சேராமலும்) வினைகள் வருங்கால் அவைகளினடியாகப் பிறக்கும் பெயரெச்சங்கள், வினையெச்சங்களில் மறுபடியும் தாதுக்களின் அர்த்தங்களைக் கூறிக்கொண்டு வாராமல் சொற்களை எழுதி உடனே பிராகட்டுகளில் தாதுக்களைக்காட்டி (உ-ம் उषित விற்கு वस्, हित விற்கு धा, घातुक விற்கு हन् போல்) ஸங்தர்ப்பானுஸார விசேஷார்த்தங்கள் மட்டும் கூறப்பட்டிருக்கும். விசேஷண பதங்கள் வெகுவாய் தாதுவைச் சேர்ந்தாப்போல் வந்துவிடும். அனேக விடங்களில் தாதுக்களையும் எழுதியிருக்கிறோம். कृ விற்குப்பின் कृत पुर्र க்கு पुर போல் விடப்பட்டிருக்கலாம். உபஸர்க்கங்கள் சேர்ந்து வரும் தாதுக்களில் ஸர்வ ரூபங்களையும் எதிர்ப்பார்க்க முடியாது. உபஸர்க்கம் சேராது தனித்த விடங்களில்தான் எல்லாம் காண்பிக்கப்பட்டிருக்கும். அவைகளை யொட்டி மற்ற விடங்களிலும் ஊஹித்துக்கொள்ள வேண்டும். வரிகளில் இடமிருந்தால் சில ரூபங்கள் மட்டும் பொருள் கொடாமல் காட்டப்பட்டிருக்கும். (गम् , चर् முதலிய தாதுக்களைப் பார்த்தால் அவைகளடியாகப் பிறக்கும் ரூபங்கள் எவ்வளவிருக்கின்றன என்பது தெரியவரும்). இரு பதங்கள் மிக ஸம்பலபமாயிருந்தால் விசேஷார்த்தமிராத பக்ஷத்தில் விடப்பட்டிருக்கும் (अतिवृष्टिः, अल्पमूल्यं என்பவைகள்போல். இவைகளுக்கு நாமே பதத்தை யுடைத்துப் பொருள் கொள்ளலாம் अति அதிக वृष्टिः மழை. अल्प குறைவான मूल्य விலை. आत्मत्यागः போன்ற பதத்தில் பிராணனை

விடல் (தற்கொலை) என்கிற ஸாமான்யார்த்தத்தோடு, ஸுக த்தைவிடல் (வைராக்கியம்)என்கிறவிசேஷார்த்தமுடைய பதமாகிறது). அர்த்தங் கொடுக்குங்கால் ணிசந்தத்திலும், கூறின அர்த்தங்களையே கூறிக்கொண்டு வராமல் **णिच्** என்றெழுதி விடப்பட்டிருக்கின்றன. (**णिच्** ன் லக்ஷணமாவது முகருக்கு முகரச் செய்தல்; அனுகுவிற்கு அடைவிபோல் செய்விக்கும் வினையாகும்). ஸமஸ்த பதங்களில் ஒரு பதம் எடுக்கப்பட்டிருந்தால் முன் பதத்திற்கோ, பின்பதத்திற்கோ அதே அர்த்தமுள்ள பதங்கள் யாவும் அதேமாதிரி ஊஹிக்கத் தகுந்தவைகளே (உ-ம் **अचिर** வோடு **भा** சேரும் பொழுது **भा** வின் அர்த்தமுள்ள **अंशुः, आभा, द्युतिः, प्रभा, भास्, रोचिस्** முதலிய யாவும் போல். அதேமாதிரி **अद्रिजा, गिरिजा पर्वतजा** வும்)

—குறி கொடுத்து **अग्नि, आत्मा** முதலிய அநேக விடங்களில் புஸ்தகத்தைச் சுருக்கப்படுத்தப்படுகிறது. விசேஷண ரூபத்தில் வரும் அர்த்தங்களே அவ்வியயத்திற்கும் வருமாகையால் அந்த ரூபம்மட்டும் காண்பிக்கப்பட்டிருக்கும் (**अव्यय वि ग्र अ**)

இவ்வகராதியை உபயோகிக்க வேண்டிய விவரம்:—

மற்ற பாஷைகளைப் போலின்றி தெய்வ பாஷையான ஸம்ஸ்க்ருதம் மிகவுங் கஷ்டமானது. ஒரு பதத்திற்கு அர்த்தம் பார்க்கக் கொஞ்சமாவது பாஷாக்ஞானம் இருக்கவேண்டும். ஏனெனில், பதங்கள் சேர்ந்து வரு மிடங்களில் அவைகளை முதலில் பிரித்துத் தனித்தனியாக்கவேண்டும். அதற்கு ஸந்தி விதிகள் கொஞ்சம் அவசியம் தெரிந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் தாறுமாறாய்ப் பிரிக்கும்படி யேற்படும். பிறகு, ஸம்பந்தமானது எந்த விபக்தி (வேற்றுமை) ரூபத்திலிருந்தாலும் அதை முதல் வேற்றுமை ஒருமை ரூபத்திற்குக் கொண்டுவரவேண்டும். எது என்ன சப்தத்தைச் சேர்ந்தது என்று ஊஹிக்கவேண்டும் (**पिता** என்பதை ऋ காரந்தம் **पितृ** வில் பார்க்கவேண்டியது போல்). இம்மாதிரி

சப்த க்ஞானம் கொஞ்சமாவது இருக்கவேண்டும். அதே மாதிரி தாதுக்களின் தசலகாரங்களின் ரூபங்களும் கொஞ்சம் தெரிந்திருக்கவேண்டும். தெரிந்தாலொழிய இந்த தாது வென்று கண்டுபிடிக்க முடியாது.

கீழ்வரியில் தனியாக வரவேண்டிய பதத்திற்கு மேல் வரிப் பதத்தினர்த்தமிருந்தால் அம்மேல் வரியிலேயே = குறி கொடுத்து இக்கீழ்வரிப்பதமும் சேர்க்கப்பட்டிருக்கும்.

ஒரு பதத்தை அதன் முதற் சொல் ஆரம்பமுள்ள கட்டம் முழுதையும் பார்க்கவேண்டும். பிறகு அகராதி வரிசையிலும் பார்க்கவேண்டும் (**अरित्र** பதம் போல்)

ஸமஸ்தபத கோஷ்டியில் அவ்யயங்கள் சேர்க்கப்பட்டிராது. அவைகள் கீழே தனியாக அகராதிக் கிரமத்தில் எழுதப்பட்டிருக்கும்.

**अं, अः** ஒத்து சேரும் பதங்கள் **औ** ஒத்துக்குப் பிறகின்றி, அகார ஒத்தெழுத்துப் பதங்களுக்கு முதலிலேயே கொடுக்கப்பட்டிருக்கும்.

சில ரூபங்கள் ஒரு வரியிலிடமிருந்தால் தனிவரி வளர்த்தாது சற்று அகராதிக் கிரமத்திற்கு முந்தி பிந்தியிருந்தாலும் அதே வரியில் இடத்திற்குத் தக்கபடி ஸமயோசிதமாய் எழுதப்பட்டிருக்கும்.

அர்த்தம் பார்ப்பவர்களின் ஸௌகர்யத்தை உத்தேசித்துச் சில பொதுவான அம்சங்களைக் கூறுவோம் :—

ஒரு பதத்தின் ரூபமானது இரண்டு தாதுக்களை, உபஸர்க்கங்களை அனுஸரித்திருக்கலாம். அதில் அர்த்தங்கள் நேர் விரோத பாவத்திலுமிருக்கலாம். உ-ம். **अवरोधनं** என்பது **रुह्, रुध्** என்கிற இரு தாதுவிற்கும் ரூபமாகும். **आरात्** தூரமாக, ஸமீபமாக.

சில விடங்களில் அனுஸ்வாரம், தீர்க்கம் போன்ற ஒத்துக் குறிகள் அச்சுப் பிழையால் விடப்பட்டிருக்கலாம். அதற்காக முன்பின் பதங்களை ஸந்தேகமாக விருந்தால் பார்க்கவும்.

எப்பதத்திற்கும் முதலில் தாதுவைக் கண்டுபிடிக்க வேண்டும். வெகுவாய் இது பதத்தின் பக்கலிலேயே பிராகட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ சில விடங்களில் ஸுலபமான பதங்களுக்கு விடப்பட்டிருக்கும். அத்தாத்வர்த்தத்தைப் பார்த்துவிட்டுப் பிறகு விசேஷணம் முதலிய எல்லாப்பதங்களையும் பார்க்கவேண்டும். ஒன்றில் இல்லாத விசேஷ அர்த்தம் மட்டும் மற்றொருன்றிலும் அதிலில்லாத விசேஷ அர்த்தம் அதற்கடுத்த பதத்திலும் கொடுக்கப்பட்டிருக்கும். இதனால் கீழ்ப் பதங்களில் வந்த எல்லா அர்த்தங்களும் கிராஹ்யம் என்பதாகும். போ என்கிற வினைக்குப்போன, போதல், போகிற, போகிறவன் போன்ற ரூபங்களில் சொல்லின் ரீதிப்படி பொருள்கொள்ள வேண்டும். தாதுக்கள் ஒவ்வொரு பதத்திலுங் கொடுக்கப்பட்டிராமல் முதலில் ஒன்றிற்கு மட்டும் ஸூசிக்கப்பட்டிருக்கும். தாத்வர்த்தங்களோடு சேர்ந்தாப்போலும் சில ரூபங்கள் காட்டப்பட்டிருக்கும். வெகுவாய் தாதுவின் கீழ்தான் அதன் விசேஷண ரூபங்கள் வரும். **गत, नत** போல் **गम्, नम्** க்கு முந்தி வருமிடங்களில் தாது காட்டப்பட்டிருக்கும். சில விடங்களில் சில ரூபங்கள் தாதுவோடு கொடுக்கப்பட்டிருக்கும். அப்பொழுது அகராதிக் கிரமம் முந்தி பிந்தியிருக்கும். **घुष्**ன் கீழ் **घोष** போல்.

லிங்கங்கள் அநேக விடங்களில் எழுதப்பட்டிருக்கின்றன. புல்லிங்க பதங்களுக்கு அந்தங்கள் வெகுவாய் அ, உ, ரு வாகவும், ஸ்திரீ லிங்கங்களுக்கு ஆ, இ, ஈ, ஊ வாகவும், ம் உள்ளதான அனுஸ்வார பதங்களும் ஸகாராந்தங்களும் வெகுவாய் நபும்ஸகங்கள் என்றும் கிரஹிக்கத் தக்கன. தீர்க்க, விஸர்க்க, அனுஸ்வாரமில்லாத ஸுபந்தங்கள் நபும்ஸகபதங்களே (**मधु**); இது விசேஷண பதம் போலிருக்கும். விசேஷண பதமாவது மூன்றிலிங்கங்களிலும் (**मृदु**) விசேஷ்யத்தின்படி வரக்கூடியது. மாறாத விசேஷணங்களுக்கு நித்தியம் என்று ஸ்பஷ்டமாய்ப் படிக்கப்பட்டிருக்கிறது. இதில் விசேஷணம் என்று எழுதி வெகுவாய்

பிராம்மணன் மூட்டுப் பூச்சி. சேராங்கொட்டை மரம் - मुखीकायत्री மந்திரம். சமயலறை.- योजनं யக் யாக்கினியைஜ்வலிப்பித்தல் -रक्षणं கிருஹாக்கினியைப் பாதுகாத்தல். தூர்த்தேவதை அக்கினியை உபத்திர வியாதிருக்க மந்திரம். ஆஹிதாக்கினியின் வீடு. -रजः - रजस्‌ पु பொன். ஒருவிதச் சிறிய பறக்கும் பூச்சி. பக்ஷி. அக்கினியின் சக்தி -रूपं அக்கினியின் ஸ்வபாவம் - रेतस्‌ न அக்கினியின் பீஜம். பொன்-रोहिणी அக் குளில்கட்டி - लिंगं புகை-वधू தக்ஷ புத்திரியான ஸ்வாஹாதேவி-वासस्तक்ஷத்தவஸ்திரம் -वाहः புகை.வெள்ளாடு -वाहनः பித்ருதேவதைகளிலொருவன் -विद्‌ पु அக்கினி ரஹஸ்யம் தெரிந்தவன். ஆஹிதாக்கினி. -विमोचनं அக் கினிஉத்வாஸனம் -विहारः அக்கினிக்கு ஆஹுதிஅளித் தல். அக்கினியைக் கொண்டு வரல் -वीर्यं பொன். அக்கினியின் சக்தி - वृक्षः தரிமுருக்கை மரம்-शरणं, शाला அக்கினிக்கிரஹம் -शर्मन्‌ वि அதிக காமக் குரோதமுள்ள - शिखः தீபம். பாணம். குங்குமம் - शिखं பொன் -शिखाज्வாலை. கமுக்காணிச் செடி. குஸும்ப புஷ்பம். சிந்தூரம் -शुश्रूषा அக்கினி பூஜை. -शेखर वि சிகையில் அக்கினிபுள்ள. - शेखरम्‌ பொன். குங்குமப் பூ - शौच वि அக்கினிபோல் பிரகாசமான, சுத்தமான -श्री वि தீபோல் ஒளி வீசுகிற -संस्कारः தஹனக்கிரியை அக்கினிப் பிரதிஷ்டை. தீயால் சுத்தியடை தல். புருஷன் எரியும்தீயில்தானும் விழல்-संभवः காட்டு மஞ்சள். -सहः தவளை -सखः, सहायः காற்று. புகை காட்டுப்புறு -साक्षिक वि अ அக்கினியின் முன் அதை ஸாக்ஷியாக வைத்து-सूत्रम्‌ மௌஞ்ஜீமேகலை. கயிறு ரூபத்தில் தீ -स्तंभः அக்கினியின் தஹன

சக்தியை நிறுத்தல். இதில் சொல்லும் மந்திரம் - स्तुत् पु அக்கினிஷ்டோம யக்யாரம்ப தினம் - स्तोमः ஜ்யோதிஷ்டோம ஸம்பந்தக் கிரியை. இது ஸம்பந்த மான மந்திரம் - स्थ त्रि அக்கினியில், மேல், அருகே வைக்கப் பட்டிருக்கிற ष्ठः பொன் முதலியதுருக்கும் மூசை. இரும்புவாணு. அச்வமேதத்தில் 21ல் 11- வதான அக்கினியின் மிக அருகே யிருக்கும் யூபஸ் தம்பம் - स्वात्तः அக்கினிஷ்டோமாதிகள் செய்யா மல் ஆஹிதாக்கினிகளாயிருந்த பிதிர்வர்க்கம் - हुत्, होतृ पु அக்கினியை (ஹோதா) புரோஹிதனுகவுடைய - होत्रम् வைதிகாக்கினி. அதை வளர்த்தல்-होत्रह- वणी ஹோமக் கரண்டி - होत्रिन् वि அக்கினி ஹோத்திரம் செய்பவன். யாகசாலை ஜோடிப்பவன்.

अग्नायी स्त्री ஸ்வாஹாதேவி. திரேதாயுகம்

अग्निध् पु அக்கினிப் பிரதிஷ்டை செய்பவன்

अग्निमत्, वत् त्रि யக்யாக்கினியை வளர்க்கிற. நல்ல ஜீர்ண

अग्निसात् अ பொசுக்கிச் சாம்பலாக்குகிற [முடைய

अग्नीध्रः पु அக்கினியை ஜ்வலிப்பிக்கும் பிரம்மா. யக்யம்

अग्नीय वि அக்கினியின் அருகே யிருக்கிற

अग्नीषोमौ द्वि அக்கினியும் ஸோமனும்

अग्नीषोमीय वि அக்கினி, ஸோம ஸம்பந்தமான

अग्मन् न யுத்தம்

अग्र वि முதல். இனத்தில் முக்கிய. சிறந்த. அதிகமான अ முன்னே. எதிரே. முதல். மேலே ग्रं நுனி அக ூர்மை. மேற்புரம். லக்கு. அடையுமிடம். ஆரம்பம். கூட்டம். பல எடை. பிக்ஷான்னம். ஸூரியனின் விஸ்தீர்ணம். நான்கு கபளம். ஓரம் - अंशुः கேந்தி ரம், கிரணங்கள் கூடுமிடம்-अक्षि न நுட்பமான,

கடைக்கண் பார்வை - अद्मन् वि முந்திச் சாப்பிடுகிற - अनीकं முற்படை - अवलेहितं முக்கியாம்சம் ருசி பார்க்கப்பட்ட கிராத்தான்னம் -करः கேந்திரம். -गः, गामिन् முன்னே செல்லுபவன் -गण्य वि முதன்மையான-जः, जन्मन् தமயன். பிராம்மணன் जा தமக்கை-जङ्घा கணுக்கால் சதையின் முன் பாகம்-जिह्वा நுனிநாக்கு - ज्यासऽर्य விஸ்தீர்ணக் குறி -दानिन्, दानीयः உத்தரக் கிரியையில் தானம் வாங்கும் பிராம்மணன் -दूतः முன்னே வருகிறவன் -निरूपणं தீர்க்க தரிசனம் -नीः வழிகாட்டி. அக் கினி-पातिन् वि முன்பு நேரிடுகிற-पादः கால் விரல்கள் -पूजा சிறந்த உபசாரம்-पेयं முதலில் பருகல்-बीज त्रि அடி மரத்திலிருந்து துளிர்க்கிற-बीजः கிழ்க் கன்றுகள் விடும் செடி-भागः சிறந்த, சேஷமான அம்சம்-भुज् वि வயிர்தாலியான-भूः भूमिः स्त्री ஆசையின் முடிவு. உச்சி -मांसं ஹிருதயம். ஹிருதய மாம்ஸம்-यानं முற்படை-योधिन् பிரதான வீரன்-संख्या முதல் ஸ்தானம்-संधानी யமனின் மனிதர்கள் செய்யும் கிரியா குறிப்புப் புஸ்தகம்-संध्या விடிகாலை-सर वि முன் செல்லுகிற-सारा அதிகதொகைகளைக் கணக்கிடச் சுருக்கமான வழி. காயில்லாமல் நுனிகளுள்ள முளை -हायणः வருஷா ரம்பமான மார்கழிமீ -हस्तः முன்கை. துதிக்கை நுனி -हारः ஜீவனத்திற்காக ராஜாக்களால் பிராம்மணர் களுக்கு விடப்பட்ட நிலம். பிராம்மணக் கிராமம்.

**अग्रतः** अ முன்னே. முதலில். எதிரே. [யன் मा தமக்கை

**अग्रिम** वि முதலான. முந்தின. மூத்த. கோடியான. मः தம

**अग्रिय** वि சிறந்த यः தமையன் या தமக்கை

**अग्रे** अ எதிரே. தலைமையாக. தொடர்ந்து. முதலில்-गः தலை

वन् गा: எதிரே போதல் -दिधिषु:,षू: கலியாணமான வளை மணக்கும் த்விஜன்-दिधिषूः स्त्री கலியாண மாகாத தமக்கையை யுடைய கலியாணமானவள்-पा: ரக்ஷிப்ப தில் முதன்மையான-पू: ஒருவன் எதிரில் சுத்தி செய் கிற. குடிப்பதில் முந்தின-वनं காடோரம்-सरिकः வழி காட்டி. வேலைக்காரன்

अग्रय वि சிறந்த ग्रय: தமயன் ग्रयं வீட்டுக் கூரை

अग्राह्या स्त्री சுத்திக்கனர்ஹமான களி மண்

अग्रुः, ग्रूः स्त्री விரல். நதி. [அவசரப்படு

अघ् 10 उ பாவம் செய். பிசகு போ. நிந்தி. தொடங்கு.

अघ त्रि கெட்ட. கொடிய. பாவமான घं பாவம். துக்கம். தீட்டு. காமம். घा பாபாதிஷ்டான ஸ்திரீ தேவதை. மகம்-आयुस् त्रि தீ யொழுக்கமாய் வாழ்கிற-नाश त्रि பிராயச்சித்தமான-भोजिन् அதிதி, தேவதைகளுக் கின்றி தனக்காகவே சமைத்துண்ணும் பாவி -मर्षण, मार त्रि பாவத்தை அழிக்கிற-रुद् பாவத்தை அழச் செய்து பறக்கடிக்கும் மந்திரம். கஷ்டகாலங்களில் தவித்து அழிபவன்-विष: விஷப்பாம்பு-शंस: பாவத் தைச் சொல்லல். அயோக்கியன்-हार: பெயர் போன

अघल त्रि பாவத்தை யழிக்கிற [திருடன்

अघातं, त: पु தெய்வீகமான புண்ணிய தீர்த்தம்

अघायु त्रि தீங்கான. பாவமான यु: पु பாவி. பாம்பு. காக்கை.

अघारिन् त्रि வியஸனமுள்ள [சாமரம். கத்தி

अघोर: पु நரி. சிவன். சிவ பக்தன் रा புரட்டாசி (பாத்ர) கிருஷ்ண சதுர்த்தசியான சிவ தினம்-पथ:, मार्ग: சிவ பக்தன்-प्रमाणं காய்ந்த இரும்பைப் பிடித்துக்கொண்டு சபதம் செய்தல் முதலியன

अघ्न्य त्रि கொல்லக்கூடாத घ्न्यः பிரம்மா. காளை घ्न्या பசு

अग्रेय वि முகரத்தகாத யं சாராயம்
अंक् 1 आ வளைந்து போ. 10 उ குறி. கணக்கிடு. சூடிடு. போ
अङ्कः पु மடி. துடை. அடையாளம். எண். பக்கம். நாடக அங்கம். கொக்கி. இடம். வேடிக்கைச் சண்டை. நகை. கோபம். அத்தியாயம். குற்றம். வளைவு. தேகம். மலை क्षं மார்பு. பெயர். இடைச்சிகைவளை, கங்கணம். மந்திரம்-अंक நீர்-अवतारः நாடகத்தில் ஸங்கேதப்படி இடைவெளியின்றி இரண்டு அங்கங்கள் சேர்ந்தாப் போல் வருவது-आगत, गत கைக்கு எட்டின-करणं சூடிடல்-तंत्र கணித சாஸ்திரம்-धारणं, णा மேலே சின்னங்களை தரித்தல்-परिवर्तः மடிமேல், மேலே புரளல்-पालिः, ली மடியில் இடம். அணைதல். தாதி-पीली மரமஞ்சள்-पूरणं பெருக்கல் -भाज् மடிமேலுட்கார்ல். கைக்கு எட்டல்अरु. கிரம காலத்திற்குமுந்தியேபக்குவமாதல்-मुख எந்த அங்கத்தில் வரப்போகும் கதா விஷயங்கள் ஸூசிக்கப்படுகின்றனவோ அது -लोञ्च: இஞ்சி -लोपः கழித்தல் -विद्या கணிதசாஸ்திரம்-शय्या பூமியிற்படுக்கை. மரணம். [போகிறவன் -ती स्त्री
अंकतिः पु வாயு. அக்கினி. பிரம்மா. ஆஹிதாக்கினி. போதல்.
अंकनं அடையாளம். முத்திரையிடல்.
अंकस् न தேகம். ,, सं அடையாளங்களோடிருத்தல்
अंकिन् பறை விசேஷம். नी அநேக குறிகள். அநேக அடையாளங்களுள்ளவள்
अंकिलः पु முளை
अंकुटः पु சாவி
अंकु (कू)रः, रं முளை अरु வம்சகன். துளிர். நீர். ரத்தம். மயிர் வீக்கம்.
अंकुरकः पु கூடு. பொந்து. குகை. வலை
अंकुरित वि முளைத்த. துளிர்விட்ட
अंकुशः पु அங்குசம். தாற்றுக்கோல். தூண்டில் -ग्रहः யானைப்

पागन् -दुर्धरः முன் செல்ல இஷ்டமில்லாத யானை.-धारिन् पु யானை வைத்திருப்பவன் -मुद्रा மாவட்டி போன்றை முத்திரை.

अंकुशित वि அங்குசம், தாற்றுக் கோலால் குத்தப்பட்ட

अंकुशिन् वि அங்குசதாரியான

अंकुरं, रः पु முளை

अंकूटः पु சாவி

अंकोट, ठ, ड, लः पु அழிஞ்சல் லா தக்கோலச்செடி. -सारः அழிஞ்சலினுல் தயாரிக்கப்படும் ஓர் விஷம்.

अंकोलिका स्त्री அணைதல். தழுவல்

अंक्यः पु மடிமத்தளம்

अंख 10 प ஊர். பற்று. தடு [உரையிடு

अंगु 1 प போ 10 प சுற்றித்திரி. குறி परि + குழப்பு. विपलि +

क्षिप्रे च पुनरर्थे च संगमासूययोस्तथा ।
हर्षे संबोधने चैव ह्यंगशब्दः प्रयुज्यते ॥

अंग अ என்பதில் படி நல்லது. உண்மையில். மறுபடியும். கூப்பிடல் முதலியன ஸூசகம்

अंग न அவயவம். உடல். உட்பிரிவு, லக்கினம். எண் 6. மனம். ஸமீபம். உபாயம். முக்கிய மல்லாதது. गः அங்கதேசம். வங்காளம் वि சேர்ந்திருக்கிற. அங்கங்களையுடைய -अंगि தேகத்திற்கும் அங்கங்களுக்கும், பிராதனத்திற்கும் உட்பிரிவுகளுக்கு முள்ள ஸம்பந்தம். =-अंगीभावः அங்கத்துடன் அங்கம் சேருதல். ஓர் அலங்கார விசேஷம் = -अंगीभावसंकरः .-अधिपः கர்ணன் -अपूर्वं யக்கியாங்கபயன் -कर्मन् யக்கியாங்கக் கிரியை. வாஸனைத்திரவியத்தால் தேகத்தைப் பூசல் - ग्रहः நரம்புப் பிடிப்பு -जः பிள்ளை. மன்மதன். மயிர்.

காமம். வெறி. வியாதி. -ஜ ரத்தம். அழுக்கு-ज्वरः க்ஷயம் -दीर्घवत् (वान्) पु பக்ஷி விசேஷம். -न्यासः மந்திரத்தால் தேக அங்கங்களைத் தொட்டுப் பரிசுத்தமாக்கல் -पालिः அணைதல் -प्रायश्चित्त பிரேத ஸம்ஸ்காரம் -भू விதேகம்,மனதிலிருந்துண்டான -भूःபிள்ளை. மன்மதன் -मद् (क):, मदिन् पु உடம்பைப் பிடிக்கிறவன். -रक्षणी கவசம் -रागः சந்தனப் பூச்சு. சந்தனம் -राजः இளவரசன் -राज् கர்ணன் -रुहं மயிர்-लेपः வாஸனைப் பூச்சு. தைலந்தடவல் -लोद्यः இஞ்சி -विकल வி சோர்ந்த. களைத்த. அங்கஹீனமான -विकृतिः स्त्री தேக மாறுபாடு. இளைப்பு. காக்காய்வலி -विक्षेपः ஓர் வித நாட்டியம். அபிநயம். சைகை. ஜாடை -विद्या வியாகரணம். அங்க சலனங்களால் சுபாசுபங்களைச் சொல்லும் வித்தை. (இதன் விவரம் பிரஹத் ஸம்ஹிதை 51ம் அத்தியாயத்தில் பார்க்கலாம்)-वीरः பிரதான வீரன்-वैकृतं ந மனோ பாவனையை முகக் குறிப்பால் காட்டல். தலையாட்டல். கண் ஜாடை. அங்கவிகாரம் -वैगुण्यं விஷ்ணுஸ்மரணத்தால்துலையும் அல்பகிரியாதோஷம். -संस्कारः தேகாலங்காரம். அதைச் செய்விப்பவன்-संहतिः स्त्री அங்கந்தளராமை -संगः புணர்ச்சி -स्कंधः சாஸ்திரப் பிரிவு -स्पर्शः அயலாரால் தொட யோக்கியதை -हानिः, स्त्री हीनं அங்க ஹீனம் -हारः சைகை. அபிநயம் -हारिः [நடன சாலை.

अंगकं न அங்கம். சரீரம்

अंगतिः पु வண்டி. அக்கினி. பிராம்மணன். பிரம்மா. அக்கினி ஹோத்திரம் செய்பவன்

अंगद् न தோள்வளை दः வாலியின் பிள்ளை. ஊர்மிளைக்கும் லக்ஷ்மணனுக்கும் பிறந்த பிள்ளை. दा தென்திக்குப் பெண்யானை. உபயோகத்திற்குத்தன்னுடலைக்கொடுப்

பவள் (உபகாரார்த்தம் உழைப்பவள்) -नियूह: தோள்
अंगनं न போதல் (ண்) முற்றம். வண்டி. [வளையின் முகப்பு
अंगना स्त्री சிறந்த அங்கங்களையுடையவள். வடதிக்குப் பெண்
யானை. கன்னியாராசி. வாஹனம் -प्रिय: அசோகமரம்.
अंगवं न உலர்ந்த பழம். நெற்று.
अंगवसत्राद: पु சிலைப்பேன்.
अंगस् पु பக்ஷி.
अंगार वि சிவந்த र:, रं न தணல். கரி. செவ்வாய். சிவப்புநிறம்.
கருசிறுங்கணி -अवक्षेपणं கரியணைக்கப் பாத்திரம் -कर्पर:
பொன்னுருக்கும் மூசை -कारिन् விற்பனைக்குக் கரித
யார் செய்பவன் -धानी, धानिका, पात्री, शकटी கும்மட்டி
-परिपाचितं வருவல். பொரியல் -पर्ण: கந்தர்வராஜன் पुष्प:
பெருங்காய மரம்-पोलि: ரொட்டி -वल्लरी ஒருவிதப் புங்
கன் -वल्ली நாயவேளைச் செடி -वल्लिका சிறுகுறிஞ்சான்
செடி -वेणु: மூங்கிற் பேதம்
अंगारकं செவ்வாய்க்கிரஹம், கிழமை. தீப்பொறி. குறிஞ்சி
பேதம். கருப்பங்கழி. பலாசமொக்கு -मणि: பவழம்
अंगारकित वि வருக்கப்பட்ட
अङ्गारि: स्त्री கும்மட்டி. கன்னன்
अङ्गारिका स्त्री ,, அடிக்கரும்பு
अङ्गारिणी स्त्री ,, கொடி. ஸூரியனால்சூடாக்கப்பட்டவிடம்
अङ्गारित वि சுடப்பட்ட ता அரும்பு. பலாசமொக்கு. கொடி.
अङ्गारीय वि கரி தயாரிக்க உபயோகப்படுகிற [ஓர் நதி.
अङ्गार्या स्त्री கரிக்குவியல்
अङ्गिका स्त्री சொக்காய். ரவிக்கை
अङ्गिन् वि முக்கியமான. அங்கங்களையுடைய. தலைவன்
अङ्गिर:, रस् पु ஸப்த ரிஷிகளிலொருவர். மந்திர பலத்தால்
அபசகுனங்களினின்றும் யக்யத்தைரக்ஷிக்கும் புரோ

अंगीरस्वत् காற்று [ஷிதர். அதர்வணவேதம்
अङ्गिरसः पु பரசுராமாவதாரத்தில் விஷ்ணுவின் விரோதி
अङ्गिरसामयनं ஸத்திரயாகம்.
अङ्गीकृ 8 उ அங்கீகரி. ஸம்மதி. ஒத்துக்கொள். உரிமையாக்கிக் கொள் -कृतिः, करणं, कारः पु -कृत वि
अङ्गीय, अंग्य त्रि அங்க ஸம்பந்தமுள்ள अङ्गुः पु கை
अङ्गुलः पु விரல். கட்டை விரல். விரலளவு 8 கோதுமையின் அளவு. அங்குலம். எண்.
अङ्गुलिः, ली, रिः री स्त्री விரல். கால், கை கட்டை விரல். துதிக்கை நுனி. அங்குலப் பிரமாணம். குதம். யானை மணி-तोरणं நெற்றியில்சந்தனக்குறி. त्रं, त्राणं விரல்களுக்குக் காயமுண்டாகாதிருக்கத் தையற்காரன், வில்லாளிகள் தரிக்கும் ஸாதனம் -मुद्रा, मुद्रिका முத்திரை மோதிரம் -मोटनं, स्फोटनं விரலைச் சொடுக்கல் -वेष्टनं மோதிரம் -संगा விரல்களில் ஒட்டிக்கொள்ளல் -संज्ञा விரலால் ஜாடைகாட்டல் = -संदेशः -संभूतः நகம்
अङ्गुली(री) यं, कं -यकं म மோதிரம்.
अङ्गुष्टः கட்டைவிரல். அங்குலஅளவு ष्ठ्यः கட்டைவிரல் நகம்
अङ्गूषः पु அம்பு. கீரி. மாவட்டி
अंघ् आ போ. தொடங்கு. அவசரப்படு. நிந்தி.
अंघस् न பாவம்
अङ्घ्रिः पु கால். வேர். சுலோகபாதம். எண் 2. -नामकः மரத்தின்வேர் = -नामन् न -पः மரம் पर्णी,पर्णिका, वल्लिका சித்தாமல்லி -पान वि (குழந்தைபோல்) காலை உரிகிற -स्कंधः
अच् पु உயிரெழுத்து 1 उ = अंच् [கணுக்கால்
अचक्र वि அசையாத. சலிக்காத. சக்கிரங்களில்லாத
अचण्ड वि ஸாதுவான ण्डी ஸாதுவான பசு
अचरः पु விருஷப, ஸிம்ஹ,விருச்சிக, கும்ப ராசிகள்

अचल: पु மலை. பாறை. தாழ்ப்பாள். எண் 7. சிவன் ला பூமி. தேகத்திற்குள்ளிருக்கும் ஆகாசம் -त्विट् புகுயில் -भ्रातृ पु முனி பேதம்- सप्तमीஐப்பிசி சுக்ல ஸப்தமி.

अचित्त त्रि அறிய முடியாத. மூடமான. எதிர்பாராத

अचिन्त्य, अचिन्तनीय वि அறியமுடியாத त्यः சிவன்.

अचिराभा स्त्री மின்னல்

अचेतन, अचेतस् वि ஜடமான. பிரக்ஞை தவறின. नी स्त्री ஆகா [யத்தாமரை.

अचैतन्यं அக்ஞானம். ஜகத். ஜடம்.

अच्छ वि சுத்தமான-च्छः ஸ்படிகம். கரடி-उदन् वि சுத்த மான நீரையுடைய -टा கீழாநெல்லி-दनःசந்நியாசி-पिण्डा பேரீச்சஞ் செடி -भल्लः கரடி

अच्छावाकः पु ஓர் ரித்விக். वाकीयं அவன் வேலை

अच्छंदस् वि வேத மோதாத, ஓதக்கூடாத.

अच्छिन्न त्रि இடைவிடாத

अच्छेदिक वि अच्छैदिक वि வெட்டத்தகாத

अच्छुप्ता பாவத்தால்தொடப்படாதாதன16ல் 1 ஜைனஸ்திரீ [தேவதை

अच्छोटनं न வேட்டையாடல்

अच्छोदः पु குபேரன் விளையாடுந் தடாகம்

अच्युतः पु விஷ்ணு. சிவன். ஓர் யக்யம்.-अग्रजः பலராமன். இந் திரன் आवासः அரசு. -पुत्रः கிருஷ்ணனுக்கும் ருக்மணிக் கும் பிறந்த மன்மதன் -फला சுண்டைக்காய்

अज् 1 प போ.ஓட்டு.எறி 10 उ பிரகாசி 7प அபிஷேகம்செய்

अज त्रि பிறப்பற்ற जः पु பிரம்மம். திரிமூர்த்தி. ஜீவன். செம்மறி ஆடு. மேஷராசி. காமதேவன். மூன்று வரு ஷத்தின் நெல். ஓர் உலோகம். அசைபவன். ஸூர்ய னின் வண்டி. சந்திரன்.ராமனின் பாட்டனார் जा பெண் ணாடு. மாயை. பிரகிருதி जं ஆகாசம்--अविकं வெள்ளாடு செம்மறி ஆட்டுக்களின் மந்தை -अश्वः குதிரைகளுக்

காக வெள்ளாடுகளையுடைய பூஷன் -एकपाद्: 11ல் 1 ருத்திரன். அவனால் ஆளப்படும் பூரட்டாதி-गन्धा ஓஷதி பேதம்-गन्धिनी செம்மரம் -गरः மலைப்பாம்பு -गर्दः தண்ணீர்ப்பாம்பு- गलः சூது, சொக்கட்டானாடு கிறவன் -जीव ,जीविकः, जीविन् पु ஆட்டிடையன் -दा விருக்ஷ விசேஷம் -देवता பூரட்டாதி. வெள்ளாட்டின் அதிபதியான அக்கினி. -पतिः மேஷராசிக்குரிய அங் காரகன் -प(पा)दः ருத்திரன் -बंधुः மூடன் -मीढः தர்ம புத்திரர் -मोदा, मोदिका ஓமம். இலவ மெழுக்கு -लंबनं அஞ்சனக்கல், நீலாஞ்ஜனம் -वाहनः அன்னம் -वीथिः சுவர்க்க வழி-शृङ्गी ஆடு தீண்டாப்பாளை.வேலிப்பருத்தி -हा பூனைக்காஞ்சேரிச் செடி.

अजका, जिका स्त्री அஜாகளஸ்தனம். கண்விழி நோய். சிறுஆடு
अजकवं, वः पु சிவதனுஸ் [பூச்சி.
अजकावं, वः पु ,, யக்கிய மரப்பாத்திரம். கண்ணேய். விஷப்
अजगं, गवं न சிவதனுஸ. गः விஷ்ணு. அக்கினி
अजगावः சிவதனுஸ். கிரகங்களின் தென்கதி. ஓர் ஸர்ப்பகுரு
अजथ्या स्त्री வெள்ளாட்டுக் கூட்டம்
अजनः அப்பிரஸத்தமானவன். பிரம்மா
अजननिः पु சபித்தல் स्त्री பிறப்பில்லாமை
अजनिः पु வழி
अजन्मन् वि பிறவாத (பிரம்மம்) पु முக்தி
अजन्यं न பூகம்பம் போன்ற அமங்கல ஸம்பவம். உண்டா
अजपः पु பாடப் பிசகாய் ஓதுபவன் [கத் தகாதது
अजपा स्त्री हंस மந்திரம்
अजंभः पु தவளை. சூரியன். பல்லில்லாப் பருவம்.
अजया கெஞ்சாச் செடி. மாயை
अजय्य वि விளையாட்டில் அடையத் தகாத

अजर वि நசிக்காத रं பிரம்மம். रा பல்லி
अजर्य वि ஜீர்ணமாகாத. நித்தியமான र्यं சிநேகம்.
अजस्र वि எப்பொழுதுமான स्रं अ ஸதா
अजहल्लिङ्ग विசேஷணமா யுபயோகிக்கப்பட்டும் தன் முன் லிங்கம் மாறுபாடடையாத பெயர்ச் சொல் .
अजागलस्तनः पु ஆட்டின் கழுத்தில் தொங்கும் சதை अल பிரயோஜனமற்றவன், மற்றது
अजागवं न சிவதனுஸ்.
अजाजि:, जी स्त्री வெண்சீரகம்.
अजातशत्रु. पु தனக்கு ஓரி எதிரியின்றி தானும் ஒருவனுக்கு எதிரியாயிராதவன். யுதிஷ்டிரன். சிவன்.
अजाति त्रि ஜாதியில்லாத. நித்தியமான
अजादिनी स्त्री கண்டங்கத்தரி
अजानय त्रि பயமில்லாத
अजानिः पु இறந்தமனைவியோன்.
अजालिकः पु இடையன்.
अजानेय वि உயர்ந்த ஜாதியான यः அக்குதிரை
अजान्त्री स्त्री ஓர்க் கீரை
अजापक्वं न இருமல், க்ஷயம், சுவாஸகாசம் இவைகளுக்குப் பரிகாரமாக நெய் கூடின லேகியம்
अजापत्या स्त्री ஸத்திய லோகம்.
अजायुः पु மருந்து
अजावायुज् (त्) पु பாணத்திற்குத் தப்புகிற மிருகம்
अजाविक वि ஆட்டுக்குடைய
अजिः स्त्री அசைவு. எறிதல். யுத்தம். ஸமபூமி. க்ஷணம்
अजितः पु சிவன். விஷ்ணு. புத்தன்-आपीडः வெல்லமுடியாத மகுடத்தையுடைய. ஓர் அரசன்
अजिनं न கரும்மான் தோல் -पत्रा, पत्री, पत्रिका स्त्री துரிஞ்சல்.

வெளவால் -योनिः पु மான் -संघः மயிருள்ளநாணயமான தோல் வியாபாரம் செய்பவன்.
अजिर वि சீக்கிரமான रः காட்டெலி. சபிக்கும் முன் செய்யும் சடங்கு -रं வேலியிட்ட அரங்கம். முற்றம். தேகம். காற்று. தவளை. மஞ்சள் நிற வெட்டிவேர். சப்தாதி விஷயம். வணக்கம் रा துர்க்கை -शोचिस् ஒளி [வீசுகிற
अजिरीय वि அரங்க ஸம்பந்தமான
अजिह्मः पु தவளை. மீன்-गः நேராய்ப் போவதான அம்பு
अजिह्वः पु தவளை
अजीकवं, गवं, वः पु சிவதனுஸ்
अजीगर्तः पु பாம்பு
अजीत वि வாடாத. தளராத
अजीतिः स्त्री செழிமை. நாச மின்மை
अजीर्ण न மந்த,உப்பஸ வியாதி. பலம். வாட்ட மின்மை.
अजीव., वनं, वनिः स्त्री இல்லாதிருத்தல். சாவு.
अजुष्टिः स्त्री சுக மனுபவியாமை. திருப்தி யடையாமை.
अज्जु(ज्जू)का स्त्री நாட்டியத்தில்) வேசி
अज्झटा स्त्री அரிநெல்லி. கீழாநெல்லி
अज्झलं न கேடயம்
अज्ञ वि தெரியாத. மூடமான. ஜடமான ज्ञः पु ஊமை
अज्ञका स्त्री மூடஸ்திரீ
अज्ञातचर्या, वासः पु அறியப் படாமல் வஸித்தல்
अज्ञानं न பாரமார்த்மிகக்ஞான சூன்யம்
अज्मन् स्त्री பசு
अंच् 1 उ வளை. போ. பூஜி. பிரார்த்தி. முணுமுணு 10 उ णिच् தெளிவாக்கு अप + ஒதுக்கு. ஓடிப்போ. आ + வளை उप+தூக்கு (கீர்)परि + சுற்று. சுழற்று. நீட்டுஸ்+ஒன்று
अंचतिः पु காற்று. அக்கினி. போகிறவன் [கூடு

अनिरुक्तगानं न தெளிவற்ற பாட்டு. ஸாமகான விசேஷம்
अनिरुद्धः पु சாரன். விஷ்ணு. சிவன். பிரத்யும்னனின் பிள்ளை கிருஷ்ணனின் பேரன் द्ध तुம்பு -पथं ஆகாசம்
अनिर्दश, र्दशाह वि ஜனன, மரணசௌசதினங்களான பத்திற்குள்ளான
अनिर्भर वि கொஞ்சமான
अनिर्मल्या स्त्री ஓஷதி விசேஷம்
अनिर्वचनीय वि சொல்ல, வர்ணிக்க, நிச்சயிக்க முடியாத. (பிரம்மம்) குறிக்கத்தகாத यं மாயை. பிரபஞ்சம்.
अनिर्वाण वि கழுவப்படாத
अनिर्विण्णः (विद्) पु விஷ்ணு
अनिलः पु காற்று. வாயுதேவதை. ஐந்தாவது வஸு. தேஹ வாயு. வாதரோகம். 'ய்' எழுத்து. 49 என்பதைக் குறிப்பது. ஸ்வாதீ. விஷ்ணு-अशन् आशिन् பாம்பு-अंतकः செடி பேதம் (மணிப்புங்கை)-आमयः வாதரோகம். வயிற்றுப்பசம்-घ्नकः தானிமரம் -पर्यायःகண்ரப்பைகளின் வீக்கம் -प्रकृतिः சனி-व्याधिःதேஹவாயுக்களின்கோளார்
अनिलोचित वि எண்ணத் தகாத
अनिलोडित वि அனுபவமில்லாத
अतिलोडित वि நன்கு யோசிக்கப்படாத

अनिविशमान वि கலைப்பாருத. ஸதாசலனமுள்ள
अनिश विஎப்பொழுதும்பயப்படுகிறன் अ(இரவின்றி)ஓயாமல்
अनिशित वि இளைப்பாருத सर्ग ஸதா பெருகுகிற
अनिषिद्ध, अनिषेध्र वि ஆக்ஷேபிக்க, விலக்கப்படாத
अनिष्ट न தீங்கு -शंका தீமைக்காகப் பயம் -हेतुः அபசகுனம்
अनिष्टा स्त्री ஓர் மூலிகை
अनिष्टृत वि உபத்திரவிக்கப்படாத
अनिष्पत्र अ தைத்த அம்புவெளிவராத. அதிகபலத்தோடிராத
अनिस्तीर्ण त्रि குற்றத்திற்கு, ஆக்ஷேபணைக்கு மறுமொழி கூறப்படாத -अभियोगः ஆக்ஷேபித்துக் குற்றத்திலிருந் தும் மீட்டுக் கொள்ளாத பிரதிவாதி
अनीकं, कः पु சேனை. கூட்டம். சண்டை. வரிசை. முதன்மை. முகம். ஒளி. நுனி -दर्शिन् புத்தமுனி -स्थः வீரன். பாராகாரன். யானைப் பழக்குபவன். ரணபேரி. அடை யாளம். கொன்றை மரம்.
अनीकवत् त्रि முதன்மை, எதிர்வரிசையி லிருக்கிற
अनीकशः अ வரிசை வரிசைகளாக
अनीकिनी स्त्री சேனை. அக்ஷௌஹிணியில்10ல்1பங்கு தாமரை
अनीचानुवर्तिन् वि அல்ப ஸஹவாஸமில்லாத पु விச்வாஸ முள்ள கணவன்
अनीड वि வீடு (தேகம்) இல்லாத. அசரீரியான (தீ)
अनील वि வெளுத்த -वाजिन् வெள்ளைக் குதிரையை யுடைய
अनीशः पु விஷ்ணு. शा உதவியற்ற நிலைமை [அர்ஜுனன்.
अनीश्वरवादः पु தைவத்தை ஒப்புக்கொள்ளாமை
अनीहः ஓர் அயோத்தி அரசன். हा அலக்ஷியம். பேதமில்லாமை

आयामेऽपरभावे च (पश्चादर्थे) वीप्सायां सन्निधौ तथा ।
इत्थं भूते लक्षणे च भागसादृश्ययोरपि ॥

योग्यतायां तथा हीने तृतीयार्थे ह्यनुक्रमे ।
अर्थेष्वेतेषु बहुशो ह्यनुशब्दः प्रयुज्यते ॥

**अनु** अ இந்த சுலோகப்படி பின்னால் **अनुकथनं.** பக்கவாட்டாக **अनुपार्श्वं.** நீட்டாக **अनुपृष्ठ्य.** கூட **अनुपानं.** இழிவான. ஓர் குறிப்பான ஸம்பந்தத்தோடு. பாகமுள்ள. (பதத்தோடு) திரும்பித் திரும்பி **अनुदिनं** (பிரதிதினமும்) குறித்து. முறைப்படி. ஒத்த **अनुप्रवचनं.** போல **अनुनादः** சரியான **अनुकालं.** தொடர்ந்து **अनुकनीयस्** (இளமையில் அடுத்த) ஒன்றின் ஸம்பந்தமாக **अनुप्रश्नः** அதற்காக.

**अनुः** पु மனிதன்

**अनुक** वि காமாதுரமுள்ள. இச்சையுள்ள. சாய்வான

**अनुकंप्** 1 आ தயை கொள். णिच् மனமிரங்கு

**अनुकंपक, पन, पिन्** वि தயவு பாராட்டுகிறவன். தயை = कंपा

**अनुकंपित** वि தயவு பண்ணிய -आत्मन् இரக்கமுள்ள

**अनुकंपायिन्, कंप्यः** पु சன்னியாசி. செய்தி சொல்லும்சேவகன்

**अनुकरः** पु கூடயிருப்பவன்

**अनुकरणं, कृतिः** स्त्री சாயல். சம்மதி.

**अनुकर्तृ** पु நட்டுவன்

**अनुकर्मन्** कार्यं, क्रिया स्त्री பிந்திய கர்மாங்கம்.

**अनुकर्षः, र्षणं** மந்திரத்தால் ஆகர்ஷித்தல். குறிப்பிட்ட காலந் தள்ளிச் செய்தல். ஏர்க்காலுக்குக் கீழே யிருக்கும்மரம்

**अनुकर्षन्** पु வண்டியின் கீழ்ப்பாகம்.

**अनुकल्पः** पु கௌண பக்ஷ விதி. வேதாங்கமான கல்பத்தைச்

**अनुकांक्षा** स्त्री இச்சை [சேர்ந்த சாஸ்திரம்

**अनुकाम** वि இஷ்டப்படியான. காமமுள்ள **मं** अ யதேச்சையாய் **मः** தகுந்த விருப்பம் -कृत् ஒருவனின் இச்சையைப் பூர்த்திசெய்தல்

अनुकामीन वि இஷ்டப்படியிருக்கிற
अनुकारः पु ஒன்றைப்பார்த்து அதன்படி செய்தல் कारिन् वि
अनुकार्य, करणीय, कर्तव्य त्रि அனுகரிக்கத்தகுந்த
अनुकीर्तनं न பிரகடனம் செய்தல்
अनुकूल वि அனுகூலமான. சிநேகமான. இஷ்டமான लः பிரியமுள்ள கணவன். விஷ்ணு. ला விருக்ஷ விசேஷம். விருத்த விசேஷம் लं அனுகூலம். பிரதிகூல மனுகூலமாய் மாறுமோ ரலங்காரம்.
अनुकूलता, त्वं न அனுகூலம். சம்மதம். அபிவிருத்தி
अनुकूलयति ना प சமாதானம் செய்
अनुकृ 8 उ ஒன்றைப் பார்த்துப் பிந்திசெய். பதில் செய். பொருத்தமாக்கு.
अनुक्री: ஸாத்யஸ்க்ரம் என்னும் சடங்கு
अनुकृपायते ना आ மனமிரங்கு. கூடித் துக்கங்கொண்டாடு
अनुकृष् 1 प தன்பின்னிழுத்துச்செல். வசீகரி = णिच् [செய்
अनुक्लृप् 1 आ முறைப்படி தொடர் णिच् முறைப்படி தொடரச்
अनुक्त वि கேழ்க்கப்பட்டிராத
अनुक्रकच वि வாள்போல் பற்களுள்ள
अनुक्रंद् 1 प பிந்தி அழு क्रंदनं பதிற்குரல்
अनुक्रम् 1 उ 4 प பின் செல். கணக்கிடு. முறைப்படி போ
अनुक्रम वि முறைப் படியான मः வரிசைக்கிரமம். விஷய அட்டவணை. வேதம் கற்கும் ரீதி [வணை.
अनुक्रमणं न முறைப்படி செல்லல். தொடரல் णी, णिका அட்ட
अनुक्रुश् 1 प கூச்சலிடு णिच् கூடி அழு [றவன்
अनुक्रोशः पु தயை. க்ரோச (2 மைல்) தூரத்திற்கு மேற்சென்
अनुक्षणं अ ஒவ்வொரு நிமிஷமும். எப்பொழுதும் [பவன்
अनुक्षत्तृ पु (त्ता) தேரோட்டி, வாயிற்காப்போனின் கூட இருப்
अनुख्या 2 प தூரத்திலிருந்து கண்டறி

अनुख्यातिः स्त्री தூரத்திலிருந்து காணல், தெரிவித்தல்
अनुख्यातृ (ता) पु கண்டு பிடிப்பவன். அறிவிப்பவன்
अनुग वि பின் தொடருகிற गः தொடருபவன்
अनुगत वि தொடரப்பட்ட.நிறைந்த மூடப்பட்ட அவிந்த, அணைந்த. அடையப்பட்ட.கீழ்ப்படிகிற.பொருத்தமான. சாயல் கொள்ளுகிற. तं கீதத்தில் மத்தியம காலம் -अर्थ ஒத்த. அறியக்கூடிய கருத்துள்ள
अनुगम् 1 प தொடர்.முறையை அனுசரி.நாடு.வந்திரு. தகுதியாயிரு. நசித்திரு. உட்செல். णिच् தொடரச்செய்
अनुगतिः स्त्री தொடரல். ஸம்மதம்
अनुगमः, मनं न „ அறிந்து கொள்ளல். புருஷன் கொளுத்தப் பட்ட தீயில் தானும் விழுந்து சாதல். இணக்கம்.
अनुगम्य वि பின் செல்லத்தக்க [அனுகரித்தல்
अनुगर्ज् 1 प பிந்தி கர்ஜி
अनुगर्जित वि கர்ஜித்த. तं கர்ஜிக்கும் எதிரொலி
अनुगव वि காளைகளுக்குப் பொருத்தமான
अनुगवीनः पु இடையன்
अनुगामिन् त्रि தொடரல் पु தொடருபவன். தன்னிச்சைப் படி போகிறவன்
अनुगामुक त्रि வழக்கமாய்ப் பின் செல்லுகிற
अनुगादिन् त्रि எதிரொலி செய்கிற, சொல்லுகிற
अनुगिरं अ மலைப்பக்கமாக
अनुगीतं न பாடினதற்குப் பதிலாகப் பாடல்
अनुगीतिः स्त्री விருத்த விசேஷம்.
अनुगुण वि ஒரேமாதிரி குணங்களுள்ள. णः இயற்கையான விசேஷ குணம் णं अ அனுகூலமான. ஒத்த. இயற்கையான
अनुगुणत्वं न அனுகூலம்
अनुगुणयति ना प அனுகூலமாகச் செய்.

अनुगुप्त वि மூடப்பட்ட
अनुग्रह् 9 प தயவு புரி. (அக்கினியை) ரக்ஷி, வளர்த்து. வர வேற்று. தாங்கு. கைப்பற்று. கொள்ளையிடு. ஒத்திரு.
अनुग्रहः, हणं न தயை. உபகாரம். அங்கீகாரம். மந்திர பூர்வ கமான ஆசீர்வாதம். பின் காவல்-कातर वि திருப்தி செய் விக்க ஆசைப்படுகிற -सर्गः உணர்ச்சிகளை உண்டாக்கல்.
अनुग्राहक वि அனுகூலம் செய்கிற அன்புள்ள.
अनुग्रासकः पु கவளம். கவளப் பிரமாணம்
अनुघटनं न ஒன்றோடொன்று மாட்டிக்கொண்டிருத்தல்
अनुचर् 1 प தொடர். திரி. நாடு. நடந்து கொள்
अनुचरः पु தோழன். சாரனைத் தொடருபவன் -रा, री கூட யிருப்பவள்
अनुचरित वि தொடரப்பட்ட तं நடை. நடத்தை
अनुचारकः पु தொடருபவன் रिका தோழி
अनुचारिन् वि கூட ஸஞ்சரிக்கிற
अनुचर्चिः स्त्री வேத இருகக்ஷியாகச் சர்ச்சை சொல்லுதல்
अनुचित् 10 प யோசி. ஞாபகப் படுத்திக் கொள்
अनुचिंता, चिंतनं न ஸதா நினைத்துக்கொண்டிருத்தல். கவலை
अनुच्छादः पु வேஷ்டியின் முன் கச்சம். [முடியாமை.
अनुच्छित्तिः,छेदः पु வேரறுக்காமை. அழிக்காமை. அழிக்க
अनुजन् 4 आ பிந்தி பிறக்கப்பட்டிரு. சாயல் கொள்
अनुज, जात त्रि பிந்திப் பிறந்த -जः जातः தம்பி. சிறியது. சாயல் கொள்ளல். மறுபடியும் பிறத்தல். உபநயன ஸம்ஸ் காரம் ஆயிருத்தல் -जा जाता தங்கை. மருக்கொன்றை ज्ं புண்டரீக வாஸனைத் திரவியம் -अवर वि இளைய வனுக்கும் சிறிய. கடைசியான
अनुजन्मन् पु தம்பி
अनुजीव् 1 प பிழைப்பிற்காக அண்டியிரு. பொறுமை

யின்றிப் பார். ஒன்றிற்காகப் பிழைத்திரு. பிழைப்பில் ஒருவனை அநுசரித்திரு. ஒருவனுக்குப் பிந்தி ஜீவித்திரு.

अनुज्ञा 9 उ உத்திரவு கொடு. விவாக நிச்சயதாம்பூலஞ் செய். மன்னி. பச்சாத்தாபப்படு. தயவுபுரி. விலக்கு. வேண்டு

अनुज्ञा, ज्ञानं न உத்திரவு. மன்னிப்பு. -प्रार्थना உத்திரவுகேட்

अनुज्ञापकः पु கட்டளையிடுவோன். ஸம்மதிக்கிறவன் [டல்

अनुज्ञापनं, ज्ञप्तिः स्त्री அதிகாரம் கொடுத்தல். ஆக்ஞாபித்தல்

अनुज्येष्ठं वि மூத்தவனுக்கடுத்தது. ஜ்யேஷ்டத்துவமுறைப்படி

अनुतप् 1 प கொதிப்பிக்க கோபம் மூட்டு. பச்சாதப்படு णिच्

अनुतरं (तृ) न வண்டிச்சத்தம். ஓடக்கூலி [ஹிம்ஸி

अनुतर्षः पु தாகம். இச்சை. ஸுராபானம். கள்குடுவை. கள்ளு. சாராயம்

अनुतर्षणं न கள்குடித்தல். கள்குடுவை.

अनुतापः पु தோஷத்திற்கு மனம் வருந்தல். சூடு

अनुतापन वि துன்புறுத்துகிற तापिन् वि துக்கிக்கிற

अनुतिल वि எள்ளை (கொல்லையை)த் தொடருகிற लं अ ஒவ்வொரு தானியமாய். மிகக்கொஞ்சமாய்

अनुतूलयति ना प பஞ்சால் தேய்

अनुतूलनं न பஞ்சால் தேய்த்தல்

अनुतॄ 1 प தாண்டிச் செல். நீட்டுவாட்டாகப் பரப்பு

अनुत्क वि தன்வரையில் திருப்தியடைந்த

अनुत्त वि தள்ளப்படாத. தூண்ட, ஓட்டப்படாத

अनुत्तम वि மிகச்சிறந்த. மிகச் சிறந்ததல்லாத. உத்தம புருஷனல்லாத. मः சிவன். விஷ்ணு.

अनुत्तर वि முக்கியமான. சிறந்த. இழிவான. பதிலில்லாத. மௌனமான. பதில் சொல்லமுடியாத. அசையாத உறுதியான. தெற்கத்திய रं பதிலின்மை रा தெற்கு

**अनुत्पत्तिः** स्त्री உண்டாக்காமை, தவறு. **पत्तिक** वि இது வரையில் உண்டாக்கப்படாத- **धर्मक्षांतिः** வரும் காலத்திற்கு தயார் செய்துக் கொள்ளல் [धर्मक्षांति
**अनुत्पादः** வெளிவராமை. அமுலுக்கு வராமைक्षांति = अनुसत्ति-
**अनुत्सूत्र** वि தர்ம, வியாகரண விதிஸூத்திரத்திற்குத்தவறுதலில்லாத. ஒழுங்கான
**अनुद** वि தானத்தில் போட்டிபோட்டு முந்துகிற
**अनुदक** वि நீரில்லாத. அல்பநீருள்ள. ஜலதர்ப்பணமற்ற.
**अनुदर** वि மெல்லிய இடுப்புள்ள
**अनुदर्शन** ब சுற்றிப் பார்த்தல்.
**अनुदा** 3 उ திருப்பிக்கொடு. கொடு
**अनुदात्त** वि தாழ்ந்த ஸ்வரமான-**तर** वि அனுதாத்தைக் காட்டிலும் தாழ்ந்த குரலில் உச்சரிக்கப்படும் அனுதாத்த ஸ்வரமான(உதாத்த, ஸ்வரிதத்திற்கு முன் வருவது)
**अनुदार** वि பிசுநாரியான. தயாளுவான. மனைவியால் பின்பற்றப்படுகிற. பொருத்தமான மனைவியுள்ள
**अनुदिनं, दिवसं** अ தினந்தோறும்.
**अनुदिश्** 6 प குறித்துக் காட்டு
**अनुदिशं** अ திக்குகள் தோறும்
**अनुदृश्** 1 प சுற்றிப்பார். கருது -**णिच्** காட்டு. சொல்
**अनुदृष्टि** वि அனுகூலமானபார்வையுள்ள **दृष्टिः** स्त्री நற்பார்வை
**अनुदेयी** स्त्री தோழி. திருப்பிக் கொடுத்தல்
**अनुदेशः** पु முந்திய விதியைக் காட்டும் விதி. விதி
**अनुदैर्घ्य** वि நீர்க்கரேகை ஸம்பந்தமுள்ள. நீட்டுவாட்டான
**अनुद्धृत** वि நிலை நாட்டப்படாத -**अभ्यस्तमयः** அஸ்தமன கால ஸம்பவமான. கார்ஹபத்தியத்திலிருந்து ஆஹவனீயாக்கினி எடுக்கப்படாமுன்
**अनुद्भट** वि தைரியமில்லாத. சாதுவான. உயரமில்லாத

अनुद्यूतं न திருப்பிப் திருப்பி விளையாடல். சூதாடல்.
अनुद्रुत वि தொடரப்பட்ட. திரும்பிக் கொண்டுவரப்பட்ட
तं ஸங்கீதத்தில்ஓர்காலஅளவு ¼ மாத்திரை. ½ துருதம்.
अनुधावनं न பின்னேடுதல். ஆராய்ச்சி. சுத்தி செய்தல்.
அடைய முடியாதிருந்தாலும் ஒருத்தியை நாடல்
अनुध्या स्त्री நன்மையைக் கோறல்
अनुध्यान वि ஆழ்ந்த ஆலோசனை செய்த. அனுக்கிரஹித்த
तं, नं தியானம். ஆசீர்வாதம்.
अनुध्याय: पु நன்மையைக் கோருகிறவன்
अनुध्यै 1 प தீர்க்காலோசனை செய். ஆசீர்வதி
अनुनद् 1 प ஒன்றைக் குறித்துச் சப்தி. -णिच् சப்திக்க, எதிரொலிக்கச் செய்
अनुनयं अ (नी) தகுந்த.
अनुनयिन्, नायक वि வணக்கமுள்ள
अनुनाद: पु சப்தம். எதிரொலி नादिन् वि
अनुनाथिक वि சாந்தப்படுத்துகிற சகி தோழி. வேலைக்காரி
अनुनासिक वि மூக்கின் ஸம்பந்தமுள்ள. மூக்கால் உச்சரிக்கப்படுகிற (ய். வ் ல்.) இதற்குபயோகப் படுத்தும் குறி.
कं மூக்கினுலுண்டாகும் ஒருவித தொனி.
अनुनिर्देश. पु முன் விதியோடு ஸம்பந்தம் பெற்றது.
अनुनिर्वाप: पु கர்மாந்தியத்தில் நெய்யால் ஹோமம்
अनुनिर्वाप्या स्त्री ௸ ஸம்பந்தமான கர்மா
अनुनी 1 प சாந்தப்படுத்து. அன்புண்டாக்கு. அருகேகொண்டுவா. வேண்டு. சிக்ஷி. மரியாதை செய் नीतिः, नयः
अनुन्नतगात्र वि பருத்தாவது, உயர்ந்தாவது இராத அங்கங்[களையுடைய
अनुपं न அதிக ஜலமிருக்குமிடம் -अनूपं
अनुपकारिन् वि செய் நன்றி மறந்த.பிரத்யுபகாரம் செய்யாத
अनुपक्षित वि ஹிம்ஸிக்க, அழிக்கப்படாத

अनुपगीत वि துதிக்கப்படாத तं अ பின் பாட்டில்லாத
अनुपजीवनीय वि பிழைக்க இடங்கொடாத. பிழைப்பற்ற
अनुपठित वि குரு சொன்னபடி பிந்திச் சொன்ன. ஒப்பித்த
अनुपठितिन् वि கல்விக் தேர்ச்சி பெற்றவன்
अनुपतनं, पातः पु மேலே விழுல். ஒன்றின்பின்னொன்றாய் வந்திறங்கல். பின்தொடரல். ஒழுங்காய்ப்போதல். பாகங்களின் பரஸ்பர ஸம்பந்தம். திரய ராசிச் கணக்கு. तं अ ஒன்றின்பின் ஒன்றாய்த் தொடரல்
अनुपातिन् वि பயனாய் வரல் पु தொடருபவன்
अनुपथ वि வழியோடு போகிற थः நல்)வழி थं अ வழியோடு
अनुपद् 4 आ தொடர். ஆசையோடிரு. பிரவேசி. கீழேவிழு. ஒன்றைச் செய்யத் தொடங்கு. கண்டுபிடி. இழு. கையாள். பங்காசாரமாய் வா
अनुपद् वि கேரிடுகிற स्त्री உணவு.
अनुपद वि கால்களோ, பிரதிபதத்தையும் தொடருகிற -सूत्र பிரதி பதார்த்த வியாக்கியானம் दं பல்லவி.अகாலோடு காலினருகே. அடிக்கு அடி. பதத்திற்குப் பதம். பின் தொடர்ந்து.
अनुपदिक वि தொடருகிற पदिन् वि தேடுகிறவன்
अनुपदीना स्त्री காலுக்குச் சரியான செருப்பு
अनुपदवी स्त्री வழி. பாதை
अनुपन्यासः पु குறிக்க, சொல்லப்படாமை. சந்தேகம்
अनुपमा स्त्री தென்மேற்கு ஸ்திரீ கஜம் म ஒப்பில்லாத. சிறந்த = मेय मित
अनुपमर्दं न தோஷத்திற்குக் கண்டனமின்மை
अनुपशयः पु வியாதியை விருத்தி செய்விப்பது.
अनुपस्थापित वि தயாராயிராத. கொடுக்க, உண்டாக்கப்படாத
अनुपहत वि உபயோகிக்கப்படாத. புதிதான.

अनुपा 2 प ஒன்றின்பின் குடி. ஒன்றோடுசேர்த்துக்குடி.குடிப்பதில் பின்பற்று. காப்பாற்று. அனுஷ்டி

अनुपाकृत वि யாகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படாத -मांस யாகத்திற்குத் தயாரிக்கப்படாத மிருகத்தின் மாம்ஸம்

अनुपाख्य वि நன்கு புலப்படாத

अनुपातकं न கொடும்பாவம்

अनुपानं न கையிலிருக்கும் பானம்

अनुपानीय वि அனுபானமாயிருக்கிற यं அனுபானம்

अनुपार्श्व वि பக்கத்திலுள்ள. பக்கமான व ஓர் ஜனம்

अनुपावृत्त वि மேற்கத்திய

अनुपुरुषः पु கூடவருபவன்

अनुपुष्पः पु ஒரு வித நாணல்

अनुपूर्व वि ஒழுங்கான. அங்கலக்ஷணமுள்ள. தொடர்ச்சியாய் வருகிற. மிகஇழிவான -ज वि வரிசைக்கிரமத்தில் வந்த -वत्सा சரியாக ஈனும் பசு.

अनुपूर्वशः, पूर्वेण अ ஒவ்வொன்றாய். முறைப்படி

अनुपूर्व्य वि தொடர்ச்சியாய் वीं=आनुपूर्वी [(கயிறு)

अनुपृष्ठ्य वि முதுகுபக்கமாக.நீட்டுவாட்டத்தில் கட்டப்பட்ட

अनुपेत वि உபநயனமாகாத. இல்லாததான

अनुप्रशस्य वि காம்பான

अनुप्त्रिम वि விதையாதிருந்தே முளைத்துண்டான

अनुप्रज्ञानं न அடிச்சுவடு பிடித்துப் போதல்.

अनुप्रदानं न தானம்.

अनुप्रपातं, दं अ தொடர்ச்சியாய்ப் போதல்

अनुप्रयुज् 7 आ அதிகப்படியாய்) வேலையில் வை. பொருத்து

अनुप्रवचनं न குரு சொன்னதைத் திருப்பிச் சொல்லல்

अनुप्रविश् 6 प பிரவேசி.ஸரிப்படுத்திக்கொள்.சேர்ந்துறங்கு, செல். மேல்விழு. தகை प्रवेशः அனுகாரணம்

अनुप्रसक्ति स्त्री அதிகப்பற்று. (பதங்களின்) சாஸ்திரோக்தமான ஸம்பந்தம்.

अनुप्रसद् णिच् சாந்தமாக்கு. அருள்புரியச்செய்

अनुप्रसादनं न சந்தோஷப்படுத்தல்

अनुप्रस्थ वि அக்ஷரேகைவாட்டில். அகல வாட்டில்

अनुप्राण् 2 प பிந்தி) மூச்சுவிடு. உயிருண்டாக்கு प्राणनं

अनुप्राप् 5 प அடை. எட்டு. அனுகரி. வந்தடை

अनुप्रासः पु மோனை. அனுப்பிராஸம்

अनुप्लवः पु (प्लु) தொடருபவன். வேலைக்காரன்

अनुबंध् 9 प கட்டு. இணை. உண்டாக்கு. தொடங்கு. பீடி.பயனுய் வா.நிர்ப்பந்தஞ் செய். நெருங்கித் தொடர்.பின் துரத்து. ஒட்டிக்கொள். தொடர்ந்துச் செய். தொடர்ந்தோடு. ஸஹி.ஆதரி.தளராதிரு.ஸம்பந்தப்பட்டிரு

अनुबंधः पु ஸம்பந்தம். இடைவிடாத் தொடர்ச்சி. ஸந்ததி. பயன். அபிப்பிராயம். தோஷம். தடை. குடும்பப் பிரதி பந்தகம். பெற்றோர்களை அனுசரித்து நடக்கும் சிசு. ஆரம்பம். அதிக பற்று. போக்கு. துண்டு. கீழ்பாகம். ஒன்றோடு சேர்ந்திருப்பது. விஷயத்தின் ஸாரம் धी स्त्री விக்கல். இச்சை

अनुबंधक त्रि ஸம்பந்தித்திருக்கிற कः விக்கல்

अनुबंध्य वि முக்கியமான. கொல்லப்படவேண்டிய. ஜ்யோதிஷ்டோமத்தில் முக்கிய யக்ய பசு

अनुबलं ब பின் சேனை. தொடரும் சிறு சேனை.

अनुबुध् 4 आ அறி ஞாபகப் படுத்திக்கொள் णिच् அறிவி.

अनुबोधः பின் யோசனை. பழய ஞாபகம். தைலங்களால் சுகந்தத்தை வெளிப்படுத்தல்

अनुब्राह्मणं न பிராம்மணத்தை யொத்தக் கிரந்தம்

अनुब्राह्मणिन् ,कः पु அனுப்பிராம்மணம் தெரிந்தவன், அறிகிறவன்

अनुभवः (भू) पु அனுபவம். பயன் -सिद्ध वि அனுபவத்தாலறிந்த
अनुभावः पु கௌரவம். காம்பீர்யம். மனோபாவத்தை வெளிப்படுத்தும் முகக்குறி. உறுதியான தீர்மானம்
अनुभावक वि அறிவிக்கிற
अनुभावनं न கருத்தைச் சைகைகளால் வெளிப்படுத்தல்.
अनुभाविन् वि அறிகிற. சாக்ஷி. பின்தியிருக்கிற, வருகிற
अनुभाषणं न கண்டிக்க அனுவாதம் செய்தல். சொன்னதைச் சொல்லல். ஸம்பாஷணை
अनुभाषितृ वि பதிற் சொல்லுகிற
अनुभासः पु ஒருவிதக் காகம்
अनुभुज् 7 आ அனுபவி.
अनुभू 1 प அனுபவி. அறி. பரீக்ஷித்துப்பார். உள்ளடக்கிக் கொள். அடை णिच् அனுபவிக்கச் செய். நினை. அறி
अनुभू वि அறிகிற. भूः स्त्री அனுபவம்.
अनुभूतवाच् पु ஸத்தியவாதி
अनुभूतिः स्त्री அனுபவம். மேன்மை -प्रकाशः மாதவாசாரியரின் உபநிஷத் பாஷ்யம்.
अनुभृ 1. 3 प அனுகுணமாகத் தாங்கு. (भर्तृ)
अनुभोगः पु (भुज्) ஊழியத்திற்காக விடப்பட்ட மானியம்
अनुभ्रातृ पु சின்ன தம்பி [ஸம்மதம்.
अनुमत वि இஷ்டப்பட்ட. ஒரே மனதான. तः காதலன். तं
अनुमतिः स्त्री ஸம்மதி. 1 கலை குறைந்த பௌர்ணமி. -पत्रं ஸம்மதத்தை விளக்கும் தஸ்தாவேஜு
अनुमद् 1 प மிகவும் ஸந்தோஷி
अनुमन् 4 आ இணங்கு. சரணமடை. -णिच् அனுமதி பெறு. யாசி. பூஜி मननं சுதந்தரம்.
अनुमंत्र 10 आ ஆசீர்வதி.
अनुमंत्रणं न மந்திர பூர்வகமாய் சுத்தி, பிரதிஷ்டை செய்தல்.

अनुमंतृ वि ஸம்மதிக்கிற पु ஆலோசிக்கிறவன்
अनुमरणं (मृ) न தொடர்ந்துச்சாதல். உடன்கட்டையேறல்
अनुमरु. पु பாலைவன அருகாமைப் பிரதேசம்.
अनुमा 3 आ 2 प ஊகி. சமாதானம் செய். णिच् ஸமசி. ஊகிக்
अनुमा स्त्री ஊகை. मातृ वि ஊகிக்கிறவன். [கச் செய்.
अनुमाद्य वि தொடர்ச்சியாய்த் துதிக்கத் தகுந்த
अनुमानं न ஒத்ததன்மை. ஊகை = -उक्तिः स्त्री: தர்க்கம்.
अनुमापक वि ஊகைக்கு ஹேதுவான.
अनुमार्गं अ வழியோடு
अनुमाषं अ உளுந்தைப்போல். உளுந்திலுள்
अनुमासः पु தொடரும் மாதம் सं अ பிரதி மாதமும்
अनुमितिः स्त्री அனுமானத்தாலுண்டான அறிவு.
अनुमित्सा स्त्री ஊஹிக்க இச்சை
अनुमुद् 1 आ கூடிக்களி. இணங்கு. णिच् களிப்பி. (मोदनं)
अनुमेय वि ஊஹிக்கத் தகுந்த
अनुमोदः पु (मुद्) தயையாலுண்டான ஸந்தோஷம்
अनुया 2 प பின்பற்று. அனுகரி.
अनुया वि தொடருகிற या: உணவு.
अनुयाजः पु யக்கியாங்கம்
अनुयातृ (यात्रिकः) पु தொடருகிறவன்
अनुयातं,त्रा स्त्री பரிஜனம். तं अ பரிவாரத்தில். பரிவாரத்தின்பின்
अनुयायिन् वि ஓர் குருவை அனுஸரிக்கிற. पु தொடருபவன்
अल மதத்தைத் தழுவுகிறவன்.
अनुयुक्तिन् वि (युज्) கட்டளையிடுகிறவன். பரீக்ஷிக்கிறவன்
अनुयुज् 7 आ கேள். கேள்வி கேள். (குற்றவாளியைப்)பரீக்ஷி
விசாரி.(உபதேசம்) கொடு. விதி. தேர்ந்தெடு योजनं
अनुयोक्तृ पु (युज्) சம்பளம் வாங்கும் குரு. விசாரிப்பவன்
अनुयोगः पु கேள்வி. பரீக்ஷை. நிந்தை. முயற்சி. தியானம்.

ஆத்மைக்கியம். வேண்டல். வியாக்கியானம்.
अनुयोगिन् वि சேர்ப்பது. योज्यः கீழ்ப்படியும் வேலைக்காரன்
अनुरक्त -प्रजः, लोकःஜனங்களால் நேசிக்கப்பட்ட
अनुरक्तिः स्त्री பற்று. காமம்
अनुरंज् 4 उ சிவந்திரு. களித்திரு. காமப்பற்றுடிரு. णिच्
சிவப்பாக்கு.வர்ணங்கொடு. திருப்தி செய், அடைந்திரு
अनुरंजक वि திருப்தி செய்விக்கிற. [रक्त रंजित वि
अनुरणनं न ஒத்துச் சப்தித்தல். தீர்க்கமான எதிரொலி. விய
अनुरतिः स्त्री(रं) காமப் பற்று. [ங்கியார்த்தம்
अनुरथ्या स्त्री சாலையோரத்தில் கால்வழி
अनुरसः पु பிரதான ருசியல்லாதது. எதிரொலி. =रसितं
अनुरहस वि ரஹஸ்யமான सं अ ஏகாந்தத்தில்
अनुराग वि சிவந்த. गः சிவப்பு. பக்தி. பற்று. காமம்.
अनुरागिन्, रागवत् वि காமப் பற்றுள்ள. ஆசையுண்டாக்கு
கிற णी கீதாநாதம்.
अनुरात्र वि இரவைத் தொடருகிற त्रं अ ஒவ்வோரிரவும்
अनुराध वि ஹிதகரமான. அனுஷத்திற்பிறந்த धा அனுஷம்
अनुरुद् 2 प கூடி அழு துக்கங்கேள். மனமிரங்கு (रोदनं)
अनुरुधू 7 उ வழியைத் தடு. கட்டு. அனுசரித்து நட. நேசி.
கீழ்ப்படி. பேசியேய். நிர்ப்பந்தி. இணங்கு
अनुरुध वि கீழ்ப்படிந்து நடக்கிறவன். அனுஷ்டிக்கிற.
अनुरूप वि ஒத்திருக்கிற. தகுந்த. पं தோற்றம். தகுதி.
अनुरूपतः, पशः, पेण अ ஒத்து.
अनुरोधः, धनं न இச்சையை நிறைவேற்றல். ஒத்திருத்தல்.
பிரார்த்தனை. விதியோடிருத்தல்.
अनुरोधक, धिन् वि அனுகுணமான.
अनुलग्न वि பற்றியிருக்கிற. நாடுகிற
अनुलापः पु புனருக்தி. திருப்பித் திருப்பிச் சொல்லல்.

अनुलासः, स्यः पु மயில்
अनुलिप् 6 प தைலம் பூசு. மையிடு. (लेपक लेपिन् वि)
अनुलीन वि மறைந்த. ஒட்டிக்கொண்டிருக்கிற.
अनुलेपः, लेपनं न தைலம் பூசல். சந்தனப் பூச்சு. மை.
अनुलोम वि ஒழுங்கான. தொடர்ச்சியான. ஒத்த. (ஜாதிக்) கலப்பான मा உயர்ந்த ஜாதியனை மணந்த நீச ஸ்திரீ मं अ வரிசைப்படி माः ब மிச்ர ஜாதிக்கள். -अय அதிர் ஷ்டமுள்ள - अर्थ பரிந்து பேசுகிற [துண்ணல்.
अनुलोमनं न ஒழுங்கான முறை, வரிசை. முறைப்படி மருந்
अनुलोमयति ना. प. காலி செய். விரேசனங் கொடு. மயிரால், தானியத்தால் தேய்
अनुल्बण वि ஏற்றத்தாழ்வில்லாத. தெளிவாயிராத
अनुवंशः पु வம்சாவளி. தற்காலஜனம். புதுக்குடும்பம்
अनुवक्तृ पु(वच्) ஒப்பித்தல். [குள்ள
अनुवक्र वि மிகக் கோணலான. ग வக்கிரிக்கிற. பின் போக்
अनुवच् 2 प. பிந்திச் சொல். பரிந்து பேசு. திரும்பத் திரும் பச் சொல். வழிக்குவா. இசை. கூப்பிடு. णिच् ஒப்பித் துப் பார்த்துக்கொள். ஒப்பிக்கச் செய்.
अनुवचनं. न ஒப்பித்தல். போதனை. அத்தியாயம். பொருத்த மான மந்திரங்களைச் சொல்லல்.
अनुवत्सरः पु வருஷம்.
अनुवद् 1 प பரிஹாஸமாய் அனுகரித்துப் பேசு. சொன்ன தைத் திருப்பிச் சொல். பேசு. திட்டு. णिच् எதிரொலிக் அनुवनं अ வனங்கள் தோறும் [கச் செய்.
अनुवर्तिन् वि தொடருகிற
अनुवश वि பராதீனமான. शः பராதீனம்.
अनुवस् 1 प சேர்ந்து, அருகே வசி. वासिन् वि
अनुवलित वि உடுத்த, உரையிடப்பட்ட. கட்டப்பட்ட.

अनुवहः पु அக்கினியின் 7ல் 1 நாக்கு
अनुवाकः पु படித்தல். ஒப்பித்தல். வேதச் சிறு பிரிவு
अनुवाक्या स्त्री பலியை ஸ்வீகரிக்க ஹோதா சொல்லும் ரிக்
अनुवाच् स्त्री திருப்பித்திருப்பிச்சொல்லல். पु உபன்னியாஸம்
अनुवाचनं न போதனை. ஒப்பிக்கச் செய்தல். தானேபடித்தல்.
अनुवातः पु சிஷ்யனிடமிருந்து குருவிற்கு அடிக்கும் காற்று.
अनुवादः पु திருப்பிச் சொல்லல். வியாக்கியானம். பிரமாணம். உதாரணம். தூஷணை. விளம்பரம். பேசத்தொடங்கல். [சுரளி
अनुवादक, वादिन् वि விவரிக்கிற. ஒத்த. न् 3ல் 1 சுரக்கிரமம்.
अनुवाद्य वि விவரிக்கவேண்டிய. விஷயம். விசேஷ்யம்.
अनुवारं अ அடிக்கடி.
अनुवास् 10 प வாஸனை யூட்டு. ஆஸனத்துவாரத்தில் மருந்தைச் செலுத்து.
अनुवासः, सनं न துணி நுனிகளை வாஸனையில் தோய்த்தல். பீச்சாங் குழல். புகட்டு மருந்து. இருப்பு
अनुविद् 6 उ கண்டடை. கருது. மணம் புரி (वित्तिः)
अनुविद्ध वि (व्यध्) துளைக்கப்பட்ட. சுற்றப்பட்ட. ஸம்பந்தித்திருக்கிற. பதிக்கப்பட்ட
अनुविधा 3 उ விதி ஏற்படுத்து. ஒத்து நட. ஒத்திரு. விதிகளை அனுஷ்டிக்க, சிக்ஷிக்கப்பட்டிரு (-यिन् वि)
अनुविधेय वि தகுந்த
अनुविनश् 4 प மறைந்துபோ. சேர்ந்து நசி
अनुविश् 6 प தொடர்ந்துச் செல்
अनुविश्वः पु ब வட கிழக்குத் தேச ஜனம்
अनुविष्टंभः पु பயனுப்த்தடைபட்டிருத்தல்
अनुवृत् 1 आ பின்பற்று அல கீழ்ப்படி. அனுசரி. திருப்தி செய். தொடர். णिच् சுற்று. சுழற்று. கீழ்ப்படி. இணங்கு.

நிறைவேற்று. முன் ஸூத்திரத்துடன் ஸம்பந்தப்
பட்டிரு. உபயோகப்படுத்து. பற்றோடிரு. பரிந்து
பேசு. அனுகரி (वर्तनं वर्तिन् वृत्त वि)

अनुवृत्तिः स्त्री (वृत्) ஞாபகம். ஒத்திருத்தல்

अनुवृद्धि वि முறைப்படி அதிகரிக்கிற

अनुवेधः = अनुव्याधः

अनुवेलं अ அடிக்கடி. அப்போதப்போது.

अनुवेल्लित त्रि கீழ் வளைந்திருக்கிற. तं கட்டு கட்டல்

अनुवेशः, शनं न பின்தி நுழைதல். மூத்தவனிருக்க இளையவ

अनुष्य त्रि தொடருகிற. [னின் கல்யாணம்.

अनुव्यंजनं न அப்பிரதான அடையாளம்

अनुव्यध् 4 प மறுபடியும் குத்து. காயப்படுத்து. கல. தூண்டு

अनुव्याधः पु குத்தல். துளைத்தல். கலத்தல். தடுத்தல்

अनुव्याख्यानं न மந்திரவிவரணம்.

अनुव्याहरणं, व्याहारः पु அடிக்கடி சொல்லல். ஒருவிஷயத்தோடு
சேர்த்துச் சொல்லல். சாபம் (रिन् वि)

अनुव्रज् 1 प (அதிதியைப்) பின்தொடர். அணுகு. பார்வை
யிடு. வணங்கு व्रजनं, व्रज्या [ஸந்நியாசிகள்

अनुव्रत वि பக்தி, பற்றுள்ள. விருதசீலனான. तः ஓர் வித ஜைன

अनुव्राज्य பந்துக்களால் சுடுகாட்டிற்குத் தொடரத்தகுந்த

अनुशतिक त्रि நூறுல் தொடரப்பட்ட. நூறுக்குவாங்கப்பட்ட

अनुशयः (शी) துக்கம். அனுதாபம். கொடும்பகை வெறுப்பு.
நெருங்கிய ஸ்ம்பந்தம். கொஞ்சம் ஸுகமனுபவித்த
பின்னர் ஜன்மங்களைக் கொடுக்கிற துக்க கர்மங்களின்
பயன். यी பரு. கட்டி शयान वि மனம் வருந்துகிற

अनुशयाना स्त्री காதலனை யிழந்து துக்கிக்கிற ஸ்திரீ பேதம்

अनुशयिन् त्रि விச்வாஸமுள்ள. மனம் வருந்துகிற. மிக வெ
றுக்கிற. பயனைய் ஸம்பந்தப்பட்டிருக்கிற. (ஜீவனின்)

கர்மபலானுபவம் செய்தல்
अनुशरः पु ராக்ஷஸன்
अनुशस्त्रं न ஆயுதஸ்தானத்தில் உபயோகப்படுத்தப்படும் ஓர் இழிவானவஸ்து (நகம் போல்) [நிறைவேற்று
अनुशास् 2 प உபதேசி. போதி. விதி. ஆள். தண்டி. துதி.
अनुशासक, शासिन् , शास्तृ, शासितृ वि விதிகர்த்தா.
अनुशासनं न புத்திமதி. விதி. -पर கீழ்ப்படிகிற. -पर्वन् புத்திமதிகளைப் புகட்டும் பாரத 13ம் பருவம்.
अनुशिष्टिः (शास्) स्त्री போதனை, கட்டளை.
अनुशिक्षिन् वि படிக்கிற. அப்பியஸிக்கிற
अनुशिशुः स्त्री குட்டியால் தொடரப்படும் மிருகம்.
अनुशी 2 आ கூட, மேலே, அருகேபடு. ஒட்டிக்கொள். மனம்
अनुशीलनं न ஸதா அப்பியஸித்தல். படித்தல். [வருந்து
अनुशीलित वि முயற்சியுள்ள. ஜாக்கிரதையுள்ள.
अनुशुच् । प துக்கி. சேர்ந்தழு. णिच् ஒன்றிற்காக துக்கி
अनुशुचिका स्त्री ஓர் வைதிகக் கிரியை [शोकः शोचनं
अनुशोचक, शोचिन् वि பச்சாத்தாபப்படுகிற. துயருண்டாக்கு
अनुश्रवः पु வைதிக ஸம்பிரதாயம். [கிற
अनुश्रु 5 प கேள். அடிக்கடி வேத பாரம்பர்யமாய்க் கேள்.
अनुश्लोकं न ஸாம விசேஷம்.
अनुषक्, ट् अ தொடர்ச்சியாய். ஒன்றின்பின் ஒன்றாய்.
अनुषंगः पु நெருங்கிய சேர்க்கை. பதப் புணர்ச்சி. ஸந்தர்ப்பானுஸாரமாய் வந்த பதம், பதங்கள். தவிர்க்கக் கூடாத பயன். முன் காரியத்தோடு ஸம்பந்தம். கோரிக்கை. தயை. அகஸ்மாத்தாய்க் குறித்தல், சொல்லல். (षक्त षंगिक षंगिन् वि)
अनुषंजनं न ஒற்றுமை. இலக்கணப் பொருத்தம், ஸம்பந்தம்
अनुषंज् । प ஒட்டிக்கொள். நெருங்கித் தொடர். பற்று. முன்

விதியிலிருந்து சேர்க்கப்பட்டதாயிரு षिक्त கட்டப்பட்டிரு. பற்றியிரு. (விட்டதைச்) சேர்

अनुषेकः, सेचनं न மறுபடியும் நீர்ப்பாய்ச்சல், தெளித்தல்.

अनुष्टुतिः स्त्री துதி

अनुष्टुभ 1 प பின்துதித்துதி. துதியில் பின் தொடர்.

अनुष्टुभ् स्त्री துதியில் தொடர்தல். வாக்கு.ஸரஸ்வதி. பாதம் 1க்கு 8 எழுத்துக்கள் வீதம் 4 பாதங்களுள்ள ஓர் [சந்தஸ்

अनुष्ठ त्रि பின்னே, தொடர்ந்து நிற்கிற

अनुष्ठा 1 उ அனுஷ்டி. செய். ஆள். அருகே நில். தொடர். பின்பற்றி நட. ஓர் நிஷ்டையிலிரு ष्ठित त्रि

अनुष्ठातृ, ष्ठायिन् त्रि அனுஷ்டிக்கிற. ஆரம்பிக்கிற

अनुष्ठानं न செய்கை. ஆரம்பம். வைதிகானுஷ்டானம்நடத்தை

अनुष्ठानी செய்கை. ष्ठायिन् त्रि

अनुष्ठापक त्रि செய்யச் செய்கிற पनं செய்யச் செய்தல்

अनुष्ठिः ष्ठुः स्त्री சரியான முறை, கோர்வை

अनुष्ठेय, ष्ठातव्य त्रि அனுஷ்டிக்கப்படவேண்டியிருக்கிற

अनुष्ण त्रि சோம்பலான. ष्णः சீத உணர்ச்சி ष्णं கருநெய்தல் -गुः குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரன் -वल्लिका செடி விசேஷம்

अनुष्वध त्रि உணவால் தொடரப்பட்ட धं अ உணவோடு. உணவிற்குப்பின். இஷ்டப்படி

अनुष्यंदः पु பின் சக்கிரம்.

अनुसंरक्त त्रि ஆசையுடைய

अनुसंवरणं न தொடர்ச்சியாய் மறைத்தல்

अनुसंचर् 1 प பக்கத்தில் நட. தொடர். போய்ப்பார். குறுக்கில் போ. ஒரே தன்மை யுள்ளதாகு

अनुसंचरणं न தூரத்தல். अ வரும் ஒவ்வொரு ஸமயத்திலும்

अनुसंततिः स्त्री தொடர்ச்சியான வரிசை. தொடர்ச்சி

अनुसंतन् 8 उ முழுதும் பரவு. தொடர்.
अनुसंधा 3 उ விசாரி. சமனம் செய். கருது. ஏற்பாடு செய். தொடர். மேலே தொடங்கிச் செய்.
अनुसंधानिन्, संधायिन् वि ஆராய்ச்சி செய்கிற. ஆலோசிப்பதில் திறமை வாய்ந்த.
अनुसमयः पु (समि) (பதங்களின்) ஒழுங்கான பொருத்தம்
अनुसमापनं न ஒழுங்கான முடிவு.
अनुसमाहारः पु தொடர்தல்
अनुसमि 2 प தொடர்ச்சியாய்ப் போய்ப் பார். தொடர்வதில், வழிகாட்டப்படுவதில் சேர். லபி.
अनुसंबद्ध वि சேர்க்கப்பட்டிருக்கிற
अनुसरः (सृ) पु கூடவருபவன்
अनुसरणं न பின்பற்றல். ஒத்திருத்தல். வழக்கம்
अनुसर्पः पु பாம்பு போன்ற நகரும் ஜந்து. ஊர்வது.
अनुसवनं अ யாகத்திற்குப் பிறகு. ஒவ்வொரு யாகத்திலும். ஒவ்வொரு க்ஷணமும்
अनुसंहित त्रि விசாரிக்கப்பட்ட. ஒத்த. तं अ ஸம்ஹிதா பாடத்தில். இந்தப் பாடப்படி
अनुसाम वि பொருத்தமுள்ள. அனுகூலமுள்ள
अनुसायं अ ஒவ்வொரு ஸாயங்காலத்திலும்
अनुसारः (सृ) பின்பற்றல். வழக்கத்தையொட்டி யிருத்தல். வழக்கம். சாஸ்திரப்பிரமாணம். இயற்கை நிலை. பயன். வழங்கிவரல்
अनुसार, सारिन् वि தொடருகிற. ஒத்த. விசாரிக்கிற.
अनुसारणा स्त्री பின்பற்றல். தொடர்ந்தோடல்
अनुसारतः, सारेण ஒன்றின்படி. ஒத்து. பிரகாரம். அனுசரித்து
अनुसार्यकं வாசனைத் திரவியம். கற்றுழை. முசாம்பிரம்.
अनुसूचक त्रि சுட்டிக்காட்டுகிற. ஸூசிக்கிற सूचनं

अनुसृ 1 प தொடர். அனுஷ்டி. ஏற்றுக்கொள். போயடை
णिच् முன்தள். தொடரச் செய்
अनुसृतिः स्त्री அனுஸரித்தல். வியபிசாரி.
अनुसृप् 1 प சேர்ந்து போ. தொடர்.
अनुसृष्ट वि (सृज्) தொடர்ச்சியாய் உண்டு பண்ணப்பட்ட
अनुसृष्टिः स्त्री ,, விரைவில் கிரஹிக்கவும் யோசிப்பவளுமான
अनुसेविन् वि அனுஷ்டிக்கிற. வழக்கப்படி செய்கிற [வள்
अनुसैन्यं न பின் சேனை
अनुस्कंदं अ தொடர்ச்சியாய் உட்சென்ற
अनुस्तरणं न சுற்றிப் பரவியிருத்தல் णी மூடி. வைதரணீ
கோதானத்தில் கொடுக்கப்படும் பசு
अनुस्तोत्रं न பிந்தித்துதித்தல்
अनुस्नेहं अ எண்ணை சேர்த்த பின்
अनुस्पष्ट वि ஸ்பஷ்டமான. தெளிவான
अनुस्फुर वि (பாணத்தைப் போல்) சப்திக்கிற
अनुस्मृ 1 प ஞாபகப் படுத்திக்கொள். णिच् ஞாபகப்படுத்து
अनुस्मृतिः स्मरणं स्त्री மறவாத ஞாபகம். ஒன்றையே நினைத்தல்
अनुस्यूत वि இடைவிடாத. நெருக்கமாய்நெய்ய, தைக்க, கட்டப்
अनुस्वानः पु பொருந்தச்சப்தித்தல். எதிரொலி [பட்டதःவலை
अनुस्वारः पु உயிரெழுத்தோடு சேர்ந்துசப்திக்கப்படும் 'ம்'.
எழுத்திற்கு மேல் குறிக்கப்படும் ஸுன்னம். பிந்து
अनुहरणं, हारः पु (हृ) அனுகரித்தல். போலி. தோற்றம். சாயல்
अनुहवः पु அழைத்தல்.
अनुहार्य वि அனுகரிக்கத்தகுந்த र्यः தர்சசிராத்தம்
अनुहुंकृ 8 उ அனுசரித்து கர்ஜி कारः
अनुहोड. पु வண்டி
अनूकं, कः पु முதுகெலும்பு. யக்கிய பாத்திரம். முன் ஜன்
மம். कं வம்சம். தன்மை.

अनूकाशः पु பிரதி பிம்பம். ஸம்பந்தம்.
अनूक्त (वच) वि உள்ளபடி சொல்லப்பட்ட. படித்த நூலில் வருகிற. क्तं, क्तिः இடைஇடையே விவரணத்தில் ஸம்சித்தல். வேத மோதல்
अनूचानः (वच) पु அங்கங்களோடு வேத மோதினவன். வினயம், நன்னடத்தையுள்ளவன்.
अनूचीन वि தொடர்ந்து வருகிற अहं நாளுக்கு நாள். தொடரும் நாள். गर्भ தொடர்ச்சியாய்ப் பிறந்த
अनूच्यं न படுக்கை பக்கலில் பலகை, மணை.
अनूढा (वह्) स्त्री கலியாணமாகாதவள் -मान वि கூச்சமுள்ள -गमनं வியபிசாரம் -भ्रातृ पु ராஜனின் வைப்பாட்டியின் [சகோதரன்
अनूतिः स्त्री (உபகாரம் செய்யப்) போகாமை
अनूदकं न நீரில்லாமை. பஞ்சம்.
अनूद्य अनूदित वि பேசத்தகாத. वः ஞானோபதேசம்செய்பவன்
अनूनक वि எல்லாம். कः குலம். ஸ்வபாவம்
अनूप वि நீரினருகேயிருக்கிற. சதுப்பான पं, पः சதுப்புபூமி. குட்டை. கரை. எருமை. தவளை. யானை. கடல். மயில் -जं न இஞ்சி. -प्राय वि சதுப்பான.
अनूप्य त्रि குட்டையில், சதுப்பு நிலத்திலிருக்கிற
अनूबंध्य वि யக்ய பசுவாய்க் கட்டப்படவேண்டிய
अनूयाज, अनूराधा = अनुयाज, अनुराध
अनूरुः पु அருணன் -सारथिः ஸூரியன்
अनूर्मि वि கொந்தளிக்காத. தளும்பாத. மீறக்கூடாத
अनूव्रज पु விலாக்களின் ஸமீப ப்ரதேசம்
अनूषर त्रि உப்பான. உவர்ப்பில்லாத
अनृच्, च त्रि ரிக், ரிக்வேதமில்லாத. வேதமோதாத. வேதமோதப் பூணூல் போடப்பட்டிராத
अनृणता, आनृण्यं न கடனில்லாமை.

अनृतं न பொய்.மோசம்.பயிர் செய்கை. -देव யாருக்கு தெய்வம் உண்மையில்லாமலிருக்கிறதோ, பொய்த் தெய்வமோ -अख्यानं பொய். பொய்பேசல் -वादिन्, वाच् புளுகன் -व्रत விருதம், வாக்குப் பொய்யாகிவிட்ட
अनृतक, अनृतिन् वि பொய்சொல்லுகிற. புளுகன்
अनृतुः पु தகாத, ருதுவாகாத காலம். ருதுவுக்கு முன்காலம்
अनृतोद्यं न பொய்
अनेक वि ஒன்றல்லாத. பல. பிரிக்கப்பட்ட -अक्षर, अच् பல அசைகளுள்ள. அனேக அக்ஷரங்களுள்ள -अग्र அநேக தொழில்களையுடைய. ஏகாக்கிர சித்தமில்லாத -अंत தனித்திராத. சந்தேகமான तः உறுதியில்லாத நிலை சந்தேகம். முக்கியமல்லாத அம்சம். -अंतवादः ஈச்வரனிருப்பை ஸந்தேகித்தல். -अंतवादिन् पु நாஸ்திகன் -अर्थ அனேகம் என்னும் பத அர்த்தத்தையுடைய -आश्रया, अश्रित பல ஆதாரங்களையுடைய-कृत् पु சிவன் -गोत्र பிறந்த, ஸ்வீகாரம் போன இரண்டு கோத்திரங்களுள்ள -चर கூட்டமாய்ப்போகிற. மந்தையாய்ச் செல்லுகிற -चित्त சஞ்சல புத்தியுள்ள -चित्तमंत्रः ஒருவன் புத்தியை மட்டும் கேட்டு நடவாமை. -ज ஒரு தாத்திற்கு மேற்பிறந்த -जः பக்ஷி. -पः யானை-मुख (खी स्त्री) இறைந்த. பல வழிகளில் போகிற -मूर्तिः பல அவதாரங்கள்செய்த விஷ்ணு-युद्धविजयिन्, विजयिन् பல யுத்தங்களில் ஜயித்த -रूप நாநாவிதங்களான சஞ்சல புத்தியுள்ள. -रूपः பிரம்மம் -लोचनः சிவன். இந்திரன் -वर्ण वि नील, काल முதலிய கணக்கில் கண்டு பிடிக்கவேண்டிய அளவுகள் பல வுடைத்தாயிருக்கிற -वर्णसमीकरणं -गुणनं, -व्यवकलनं, -हारः தெரியாத அளவுகளின் ஏக கால ஸமீகரணம் பெருக்கல், கழித்தல்,

वகுத்தல் -विध वि பலவிதங்களான -शफ वि பிளவு பட்ட குளம்புள்ள-शब्द् ஸமானார்த்தமுள்ள. ஏகார்த்த முள்ள -साधारण பலருக்குப் பொதுவான, பொது சொத்து

अनेजत् वि அசையாத. ஒரே ரூபமாயுள்ள பிரம்மம்

अनेडः पु மூடன் -मूक செவிடும் ஊமையுமான. குருடான. மோசமுள்ள. கோண புத்தியுள்ள.

अनेद्य वि நிந்திக்கத் தகாத. துதிக்கத் தகுந்த. எல்லையில்லாத

अनेन(स् वि தோஷமற்ற. பாவமற்ற.

अनेनः पु தனக்குமேல் யஜமானனிராத சக்கிரவர்த்தி.

अनेमन् वि துதிக்கத் தகுந்த

अनेहस् वि தடுக்க, கொல்லப்படாத पु காலம்

अनैकांतिक वि (की स्त्री) உறுதியாய் நிற்காத. நிச்சயமில்லாத.

अनैक्यं न அனேகம். குழப்பம். அரசின்மை.

अनैकांत्यं न மாறுந்தன்மை

अनो अ இல்லை. அல்ல

अनोकशायिन् पु வீட்டிலுறங்காதவனான ஆண்டி

अनोकह वि வீட்டை விட்டுப் பிரியாத हः மரம்

अनोंकृत वि பிரணவ ரஹிதமான. அங்கீகரிக்கப்படாத

अनोवाह्य वि வண்டியிற் சுமந்து செல்லவேண்டியிருக்கிற

अनौरस वि தன்னுடையதல்லாத. ஸ்வீகரித்துக்கொண்ட [(பிள்ளை)

अंत् 1 प கட்டு

अन्त वि அருகாமையான. கடைசியான. அழகான. மிகவுந் தாழ்ந்த, இளமையான तः முடிவு. எல்லை. நுனி. வரம்பு. ஓரம். அருகாமை. சமீபம். தீர்மானம். சாவு. கடையெழுத்து, பதம். மிச்சத்தில் கடைப் பாகம். கீழ், நடு, உள்பாகம். முழுத்தொகை, அளவு. பெருந் தொகை. தன்மை.ஸாரம் -अवशा(सा)यिन् पु சக்கிலி.

அம்பட்டன். ஒரு ரிஷி. -कारिन् वि கொல்லுகிற. மரணம் விளைவிக்கிற -कर्मन् , कृत् पु சாவு -ग वि இறந்த. முடிவுவரையிற் சென்ற. முழுதும் மறிந்து கொண்ட -गति, गामिन् வி நாசமடைகிற - चरசுற்றுகிற. எல்லையை அடைகிற. (வேலையை) முடிக்கிற -दीपक अலங்கார விசேஷம் -पालः எல்லைக்காவலன். வாயிற்காப்போன் -भव, भाज् விகடைசியிலிருக்கிற முடிவான -लीन மறைக்கப்பட்ட -लोपः பத முடிவு லோபித்தல். -वासिन् वि எல்லையில், அருகே வஸிக்கிற पु சிஷ்யன். சண்டாளன். -शय्या தரைமேற் படுக்கை. கடைசி, மரணப் படுக்கை. சுடுகாடு. பாடை. பிணங் கொண்டுபோகும் வண்டி -सत्क्रिया உத்தரக்கிரியை -सद् पु சிஷ்யன் स्वरितः கடையெழுத்தில் ஸ்வரிதமுள்ள பதம்.

अंतक वि அழிக்கிற. कः சாவு. யமன். எல்லை.

अंततः अ கடைசியிலிருந்து. முடிவாக. பங்காய். உள்ளே

अंतवत् वि வரையறுக்கப்பட்ட

अंते अ முடிவில். உள்ளே. எதிரே. அருகே. -वासः அயலான். தோழன். சிஷ்யன். -वासि अ சிஷ்யனுயிருக்கும் நிலை

अंतम वि மிக அருகாமையான. அடுத்த [-वासिन्=अंतवासिन्

अंतर् अ நடுவில். உள்ளே. கீழே -अंसः மார்பு. -अंग वि உள்ளிருக்கிற. இஷ்டமான -अंगं ஹிருதயம். மனது. பிராண சிநேகிதன். பிரிக்கமுடியாத அம்சம் -अवयवः உள்பாகம் -आकाशः ஹிருதயத்திலிருக்கும் ஆகாசம், பிரம்மம் -आकूतं ரஹஸ்யமான அபிப்பிராயம். உட்கருத்து -आगमः 2எழுத்துக்களின் நடுவில் சந்தியில் அதிகமாய்ச் சேர்க்கிற வெழுத்து. -आत्मन् पु ஜீவன். மனது. உள்ளுணர்ச்சிகள். இருதயம். அந்தர்யாமி - आपणः நடுப்பட்டணத்தில் கடைத் தெருவு -आराम वि தனக்குள்

களிக்கிற -इंद्रियं அந்தக்கரணம். உள்ளுணர்ச்சி -उदयं ரஹஸியஸ்தானம் -करणं உள்ளவயம். ஹிருதயம். ஜீவன். மனது நினைவு -कुटिलः கிளிஞ்சல் -कृ(क्रि)मिः தேகத்தில் புழுக்களுள்ள நோய் -कोशः சாமான் அறையின் உள் பாகம் -गंगा மறைந்திருக்குங் கங்கை -गडु त्रि வீணை. -गम् , गत = अंत ेम् -गर्भ கர்ப்பமாயுள்ள -गिरं, -रि अ மலைகளில் -गुडवलयः தேக சதை விசேஷம் -गूढ உள்ளிருக்கிற. மறைக்கப்பட்ட -घहं, गेहं, भवनं வீட்டினுள் பாகம். காசியில் ஓர் புண்ணிய ஸ்தலம். -घणः, णं வாசல் மண்டபம் -घातः நடுவிலடிக்கிற -चर தேகத்தில் பரவுகிற. உள்ளிருக்கிற -ज உள்ளே பிறந்த, வளர்க்கப்பட்ட-जठरं இரைப்பை.अ இரைப்பையில்-जंभः தாடைகளின் உள்பாகம் -जात உள்ளே பிறந்த. இயற்கையான जानु, अ முழங்கால்களின் நடுவில் -ज्ञानं உள்ளறிவு ज्योतिस् त्रि உள்ளொளியுள்ள. ஆத்மசக்தி வாய்ந்த न ஒள்ளொளி. பிரம்ம ஜ்யோதிஸ் -ज्वलनं எரிச்சல் नः உள்தீ.ஜாடராக்கினி.மனக்கவலை -दमनं புளிக்கச் செய்யும் வஸ்து. சாராய மிறக்கல். -दशा மனிதனுக்கு ஓர் கிரஹம் பலாபலனைக் கொடுக்குங்காலம் -दशाहं இடையில் 10 நாள் அவகாசம் -दहनं, दाहः உள்தீ. -दुःख त्रि மனத்துயரமுள்ள -दुष्ट உள்ளே கெடுதியுள்ள -दृष्टिः தன்னைத்தான் விசாரித்தல் -देशः மூலைதிக்கு -द्वारं வீட்டிற்குள் ரஹஸியவழி. உள்வாசற்படி.-नगरं ராஜகிருஹம் -निहित உள்ளே மறைக்கப்பட்டிருக்கிற -निष्ठ ஆத்மத்தியானத்திலிருக்கிற -पटः, टं கூடவேண்டிய வேளை வருகிற வரையில் (குரு சிஷ்யர், தம்பதிகள்) இருவருக்கும் நடுவில் கட்டப்பட்டிருக்குந்திரை - पथ வழியிலிருக்கிற -पदं अ வேற்றுமையுருபேற்றபதநடுவில் -परि-

धानं மிகவும் உள்ளே அணியப்பட்டவுடை - पर्शव्य வி விலாக்களின் நடுவேயிருக்கிற(மாம்ஸம் போல்) -पवित्र: வடிகட்டும் பாத்திரத்திலிருக்கும் ஸோமம் -पशुः பசு மாடுகள் கொட்டகையிலிருக்குங்காலம் -पात:, पात्य: இடையே எழுத்தைச் சேர்த்தல். யாக சாலையின் நடுவில் புதைக்கப்பட்டிருக்குந் தூண் -पात्रं பாத்திரத்தினுள் -पाल: அந்தப்புரக் காவலன் -पुरं ராஜ கிருஹ உள்ளறை. ஸ்திரீகளறை. ராணியறை ஸ்திரீகளறையிலிருக்கும் பெண்கள். = -पुरजन: -पुरचर:, अध्यक्ष:, रक्षक:, वर्ती அந்தப்புர மணியகாரன் -पुरसहाय: அந்தப் புரத்திலிருப்பவர் -पुरिक: அந்தப்புர மணிய காரன் = चर (क:, का) அந்தப்புரத்திலிருப்பவள் -पुष्पं ருதுவாகும் முன் ஸ்திரீகளின் மாத விடாய் ஸம்பந்த மான வஸ்து -पूय புண் ஸம்பந்தமான -पेयं குடித்தல் -प्रकृति: மனிதனின் உள்ளிருக்குந்தன்மை. ராஜனின் மந்திரிக் கூட்டம். ஹிருதயம். ஜீவன். -प्रज्ञ தன்னைத் தானறிகிற -प्रतिष्ठानं உள்ளே இருக்குமிடம் -बाष्प அடக்கின கண்ணீரையுடைய -भाव:, भावना = अंतर्भू -भेद: உள் கலஹம் -भौम பூமியின் தரையின் கீழ்ப்ர தேசமான -मदावस्थ மதாவஸ்தையை உள்ளே மறை த்து வைத்திருக்கிற -मनस् துயரமுள்ள. தியானத்தில் மனது லயித்த -मुख वि (खी स्त्री) உள்ளே வாய்க்குள் போகிற. உள் பக்கம் திரும்பியிருக்கிற. உள் வழியை யுடைய. ஸுஷுப்தியில் ஸுகத்தை அனுபவிக்கும் प्राज्ञन் என்கிற ஜீவனின் அவஸ்தை. खं வைத்திய னின் கத்தரிக்கோல் -मुद्र உள்ளே முத்திரையுடைய தியான விசேஷம் -मृत वि கர்ப்பத்தில் மரித்துப் பிறந்த -याग: மானஸ பூஜை -याम: பேச்சு மூச்சை

யடக்கல் (पात्रं) யக்கிய பாத்திரம் -यामिन् पु ஜீவனை
திட்டம் செய்யும் பரமாத்மா. காற்று -योगः ஆழ்ந்தத்
தியானம் -लंबः க்ஷேத்திர கணிதத்தில் வரும் ஒருரே
கை -लीन மறைந்திருக்கிற. இயற்கையான -लोम
உள்ளே மயிரால் மூடப்பட்ட -लोमं மூடப்பட வேண்
டிய மயிர் -वंशः அந்தப்புரம். -वंशिकः, वासिकः அந்தப்
புர மணியகாரன் -व्रण (वन) காட்டிலிருக்கிற णअ
காட்டில் -वत् वि உள்ளேயிருக்கிற. உள்ளே கொஞ்சம்
வைத்திருக்கிற -वती (वत्नी) கர்ப்பிணி -वमिः அஜீர்ணம்.
வயிற்றுப்பஸம். ஏப்பம். -वर्तिन्, वासिन् वि உள்ளே
இருக்கிற. வஸிக்கிற. ஒன்றுள் அடங்கியிருக்கிற-वसुः
ஓர் ஸோம யாகம் -वस्त्रं, वासस् அரைத்துணி -वा वि
பசு, பிள்ளைகள்போல் ஒருவனைச் சேர்ந்த -वावत् ஸந்
தானம், பசுமாடுகளையுடைய अ உள்ளுக்குள் -वाणि
वि சாஸ்திரம் படித்திருக்கிற-विगाहः, हनं உள்ளே நுழை
தல். ஊடுருவல். -विद्वस् वि (विदुषी स्त्री) சரியாக அறிந்
திருக்கிற -वेगः உள்கலக்கம், கொதிப்பு -वेदि वि யாக
சாலையின் உள்பாக ஸம்பந்தமான. अ இந்த பூமிக்
குள். दिः, दी ஆர்யர்வஸிக்கும் புண்ணிய பூமியான
கங்கா யமுனை மத்தியப் பிரதேசம் व இத்தேசவாஸி
கள் -वेश्मन् न உள்ளறைகள் -वेश्मिकः அந்தப்புரமணிய
காரன் -शरः உள் பாணம், வியாதி -शरीरं தேக உள்பா
கம். ஆத்ம ஸம்பந்தமான உடல் பாகம். ஜீவன் -शल्य
உள்ளே பாணத்தை, அதுபோன்றதையுடைய. மன
தைக் காகரவென்கிற -शिला விந்திய பர்வதத்திலுண்
டாகும் ஓர் நதி. -संज्ञ (மரங்கள் போல்) உள்ளே பிர
க்ஞையுள்ள -सत्व உள்பலமுள்ள. त्वा கர்ப்பிணி. சேரா
ன் கொட்டை -संतापः உள்நோவு. துக்கம் -सरल நேர்

மனதான. உள்ளே ஸரள மரங்களையுடைய -सलिल பூமியின் கீழ் (பெருகும்) நீரையுடைய -सार உள்பல முள்ள. -सारः உள் பொக்கிஷம், சரக்குகள் -सुख உள்ளே, ஆத்மாவில் களிக்கிற -सेनं அ சேனைகள் நடு வில்-स्थ நடுவிலிருக்கிற. -स्थः, स्थाः உயிர் மெய்யெழுத் துக்களுக்கு நடுவிலிருக்கும் य्, र्, ल् व् -स्था பிராணு தார இந்திரியங்களின் தேவதை -स्वेदः (மத) யானை -हणनं நடுவிலடித்தல் -हननं ஓர் தேசம். -हस्तं அ கையில். கைக்கு எட்டும்படி -हासःஉள்ளுக்குள் சிரித்தல். அடக் கப்பட்ட சிரிப்பு. -हृदयं உள்ஹிருதம்.

अंतर वि உள்ளே யிருக்கிற. உள்ளான. அருகாமையான. நெருங்கிய ஸம்பந்தமுள்ள. ஒத்த. வித்தியாஸமான. வெளியான. வெளியிலிருக்கிற रं உள் ப்ரதேசம். ஸா ரம். சந்து. ஜீவன். ஹிருதயம். மனது. பரமாத்மா. இடைவெளி. அவகாசம். தூரம். ப்ரவேசம். காலம். தவணை. தருணம். வித்தியாஸம். மிச்சம். ஒழுங்கு. தாரதம்மியம். விசேஷகுணம். ஊழல். உத்தரவா தம். ஸம்பந்தம். சிறப்பு. கருத்து. ஒளித்தல். பிரதி.

अंतरमवकाशावधिपरिधानांतर्धिभेदतादर्थ्ये ।
छिद्रात्मीयविनाबहिरवसरमध्येऽतरात्मनि च ॥

இல்லாமை -अपत्या கர்ப்பிணி -ज्ञ உள்ளிருப்பதை யறி ந்த. ஞானியான -तत् वि பரவும் கொள்ளை, நாசம் -द உள்ளே, ஹிருதயத்தைப் பிளக்கிற. -दिशा நடு, மூலை திக்கு -दृश् वि பிரம்ம ஸாக்ஷாத்காரம் செய்கிற -पु (पू)रुषः ஜீவன். பரமாத்மா -प्रभवः ஓர் மிச்ரஜாதி -प्रश्नः முன் சொன்னதிலிருந்துண்டாகும் கேள்வி -शायिन्, स्थ, स्थायिन्, स्थित உள்ளினுடைய. இடையில் வருகிற. பிரிந்த. ஹிருதயத்திலிருக்கிற (ஜீவன்)

अंतरतः अ உள்ளே. இடையில்
अंतरतम वि அருகாமையான. நெருங்கிய ஸம்பந்தமுள்ள. ஒத்த मः ஒரே இனவெழுத்து.
अंतरीयं न அரைத்துணி
अंतर्यं वि உள்ளே, நடுவிலிருக்கிற. [எதிர்
अंतरयति णा प. இடையிற் பிரவேசிக்கச் செய். தடு. ஒதுக்கு.
अंतरा अ உள்ளே. நடுவில். அருகே. இது நடுவில். அடிக்கடி. தவிர்த்து -अंतः மார்பு -भवदेहः, भवसत्वं மரண ஜன்மங்களின் நடு அவஸ்தையிலிருக்கும் (தேகமுள்ள) ஜீவன் -वेदिः, दी स्त्री வாசல் மண்டபம். ஒருவிதச் சுவர். -शृंगं अ கொம்புகளின் நடுவில்
अंतरालं, रालकं எல்லா திக்குகளின் நடு. நடுவிடம், காலம். உள், நடு பாகம். மிச்ரஜாதி -दिश् स्त्री மூலை திக்கு.
अंतरि 2 प குறுக்கிடு. பிரி. தவிர். மறைந்துபோ
अंतर(रा)यः पु தடங்கல். தியானத்தடை. திரை.
अंतरित वि இடையில், உள்ளேசென்ற. தடுக்கப்பட்ட. அமிழ்ந்த நிந்திக்கப்பட்ட. மிச்சம். சில்பசாஸ்திரஓர்பரிபாஷை.
अंतरि(री)क्षं न ஆகாசம். வாழ்க்கைப் பிரிவு மூன்றில் நடு. அப்பிரகம் -उदर ஆகாசம் போல் அகன்ற உள் பாகமுடைய रं ஆகாசத்தின் உள் பாகம். -क्षित्, सद् वि ஆகாசத்தில் வசிக்கிற -गः, चरः பக்ஷி -जलं பனி. -प्रा वि ஆகாசத்தை நிரப்புகிற, ஒளிப்பிக்கிற. ஆகாயத்தில் ஸஞ்சரிக்கிற = -प्रुत् वि -लोकः புவர்லோகம் -सद्मं ஆகாய இருப்பு.
अंतरि, रीक्ष्य वि காற்று, ஆகாய ஸம்பந்தமான
अंतरीपः पु கடலுட் பாய்ந்த பூமி முனை. தீவு.
अंतरे இடையில்

अंतरेण अ தவிர்த்து. குறித்து. உள்ளே. இடையில்.
अंतर्ग 1 प குறுக்கிடு. உட்படுத்தப்பட்டிரு. மறைந்து போ -
अंतर्गत वि गामिन् वि உள்ளே யிருக்கிற. அழிக்கப்பட்ட
-उपमा மறைந்த உபமாலங்காரம் - मनस् = अंतर्मनस्.
अंतर्धा 3 उ உள்ளே வை. சேர்த்து வை. ஏற்றுக்கொள்.
ஸூசி. காட்டு. ஒளிந்துகொள். உரையிடு. லயித்திரு.
மறைக்கப்பட்டிரு णिच् மறை
अंतर्धा स्त्री மூடி. மறைவு.
अंतर्धानं न மறைதல்-चर தோன்றுமலே ஸஞ்சரிக்கிற
अंतर्धायक वि மறைக்கிற. தோன்றுதிருக்கச் செய்கிற
अंतर्धिः स्त्री மறைதல். ஒளிதல்.
अंतर्भावः அடக்கல். மறைதல். ஸ்வபாவம். [ரம்
अंतर्भावना स्त्री அடங்கப் பெற்றிருத்தல். உள் தியானம். விசா
अंतर्भू 1 प சேர்க்க, உள்ளடக்கப்பட்டிரு. णिच् அடக்கி,
சேர்த்துக்கொள். भव वि
अंतर्हित वि (धा) பிரிக்க, மறைக்கப்பட்ட -आत्मन् पु சிவன்
अंति अ அருகே. எதிரே. तिः स्त्री நாடகத்தில் தமக்கை
-ऊति वि சகாயத்தோடுதயாரான -ऊतिः स्त्री அருகே
யிருப்பதை ரக்ஷித்தல் - गृहं அயல் வீடு. வீட்டினருகாமை -देव वि தேவதையினருகேயிருக்கிற -मित्र, वाम,-
पुरण वि உபகாரம், பணம், விச்வாஸத்தோடு அருகே
யிருக்கிற
अंतिक वि அருகாமையான. எட்டுகிற. அது வரையில். நீடிக்
கிற. कं அருகாமை. अ அருகே
अंतिका स्त्री தமக்கை. அடுப்பு. ஓர் மூலிகை
अंतितः अ அருகே
अंतिम वि சேர்ந்துத் தொடருகிற. கடைசியான -अंकः எண் 9.
अंती स्त्री அடுப்பு

**अंत्य** वि கடைசியான. சேர்ந்துத் தொடருகிற. மிக இழிவான. **त्यः** இழிவான ஜாதியான். செடி விசேஷம். நீண்டதுங்கமுத்தக்காசு. பதக்கடைசியெழுத்து. பங்குனி. துருஷ்கன். அயல் தேசத்தான். **त्या** இழிகுலத்தவள். **त्यं** 1000,000,000,000,000 மீனராசி. கடைசித்தொகை -**अनुप्रासः** மோனை, அனுப்பிராஸ பேதம் -**अवसायिन्** **पु** நிஷாதஸ்திரீக்கும் சண்டாளனுக்கும் பிறந்தவன் -**आहुतिः**, **इष्टिः** **स्त्री** **कर्मन्**, **क्रिया** உத்தரக்கிரியை -**ऋणं** மூன்றில் கடைசியான பிரஜோத்பத்தி செய்ய வேண்டிய கடன் -**गमनं** உயர்ந்த ஜாதி ஸ்திரீக்கும் நீச ஜாதி புருஷனுக்கும் புணர்ச்சி -**ज** கடைசியாகப் பிறந்த. இளையவனை. மிகந்தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்த **जः**சூத்திரன்ல் 7.ஒரு தாழ்ந்த இனத்தைச்சேர்ந்தவன். சண்டாளன்-**धनं** வரிசையில்கடைசி உறுப்பு-**भं** ரேவதி. மீனராசியோனி: இழிபிறவி-**लोपः**பதத்தில்கடையெழுத்து மறைவது -**वर्णः** சூத்திரன் -**विपुला** விருத்த விசேஷம்.

**अंत्यकः** **पु** இழிகுலத்தோன்

**अंत्र** **न** குடல். புரீதம் என்னும் நாடி **त्री** செடி விசேஷம் -**आदः** நாக்குப்பூச்சி -**कूजः**, **वि)कूजनं** குடலிரைச்சல் -**प्राचक** ஓர் மூலிகை -**मांसं** வாட்டப்பட்ட மாம்ஸ விசேஷம் -**वृद्धिः** **स्त्री** குடல் பிரிவு. கால் வெடிப்பு -**शिला** விந்திய பர்வத நதி -**स्रज्** **स्त्री** குடல்கள் மாலை (நரஸிம்மன்)

**अंत्रघ्नि:** **स्त्री** அஜீர்ணம். குடல் வீக்கம், எரிச்சல்.

**अंद्** 1 **प** கட்டு

**अंदः** கட்டல்.

**अंदिका** **स्त्री** அடுப்பு. தமக்கை.

**अंदु**., **दूः** **स्त्री** யானைக்காற்) சங்கிலி. விலங்கு. கால்கொலுசு

**अंदोलः** **पु** தண்டிகை. டோலி

अंदोलयति ना प தொங்கலாடு. தளும்பு
अंदोलनं न ஊஞ்சலாடல். தொங்கலாடல்.
अंध् 10 उ குருடாக்கு. குருடாகு.
अंध वि குருடான -अल பார்க்க முடியாத. குருடாக்குகிற धं இருள். அக்ஞானம். (கலங்கின) நீர். धः பரிவ்ராஜக சந்நியாசி. சிலகாலங்களில் கிருஹப் பொருத்த விசேஷம் -अलजी கண்களில் திறவாத, உடையாத கட்டி -अहिः, अहिकः குருட்டுப் பாம்பு. அதாவது விஷமல்லாதது. விலாங்கு மீன் -कारः இருள் -कूपः பாழுங்கிணறு. அறிவீனம். மோகம். மிருகங்களை ஹிம்ஸிப்பவர் அடையும் ஓர் நரகம் -तमसं, तामसं, धातमसं இருட்டுக் கருக்கல் सा இரவு -तामिस्रः,स्रः, स्रं முழுஇருள். அக்ஞானம். வியபிசாரிகள், தற்கொலை புரிந்து கொள்ளுபவர்கள் அடையும் ஓர் நரகம் -धी மனக்குருடான -पूतना சிசுக்களுக்கு வியாதியை விளைவிப்பதாகக் கருதப்படும் பெண் முனி. பேய் -मूषा பக்கத்தில் சந்துள்ள மூசை -मूषिका திருண விசேஷம் -रात्री இருண்ட இரவு -वर्त्मन् पु வாயுவின் 7வது லோகம் -शलीमाची மரத்தின் மேலுண்டாகும் செடி
अंधक वि குருடான कः சிவனால் கொல்லப்பட்ட காச்யப திதிகளின் பிள்ளையான ஓர் அஸுரன். யதுகுலத்தைச் சேர்ந்த கிருஷ்ணனின் மூன்னோர். ஓர் ரிஷி. -घाती, असुहृद् சிவன் -वर्तः ஓர் மலை -वृष्णि पु ब அந்தக, விருஷ்ணிகளின் ஸந்ததிகள்.
अंधस् न சோறு [கண்ணோய்
अंधिका स्त्री இரவு. கண்ணு மூச்சி. ஸ்திரீ வகுப்பு விசேஷம்.
अंधीकृ 8 उ குருடாக்கு -कृतात्मा மனதில் குருடாக்கப்பட்ட
अंधुः पु கிணறு. ஆண் குறி.

अंघुलः पु காட்டு வாழை

अंध्राः पु ब தற்காலதெலிங்கனென்னும்ஆந்திரதேசம்,ஜனம். ஓர் ராஜவம்சம். வைதேக இனத்தானுக்கும் காராவர ஸ்திரீக்கம் பிறந்தவன். ஒருவித வேடன் -जातिः ஆந்திர இனம் -भृत्याः ஓர் ராஜ பரம்பரை

अन्न वि புஜிக்கப்பட்ட न्नं உணவு. ஸ்தூல சரீரமான அன்னமய கோசம். சோறு. தானியம். நீர். பூமி. விஷ்ணு न्नः ஸூரியன். கணவன் முடிவு. சாவு. நிச்சயம்-अद वि அன்னத்தை உண்கிற. நல்ல பசியுள்ள -अदः விஷ்ணு -अद्यं தகுந்த உணவு -आयुः அன்னத்தால் ஜீவித்தல் -किट्टः மலம். சாராயம்-कोष्ठकः களஞ்சியம். உக்கிராணம் விஷ்ணு. ஸூரியன். -गतिः स्त्री இரைக்குழல். தொண்டை-गंधिः சீதபேதி. கிராணி. அதிவிரேசனம் -जलं பிராணாதாரமான உணவும் நீரும் -तेजस् वि உணவாலேற்பட்ட பலத்தையுடைய -दा துர்க்கை. அன்னபூரணி -दातृ சிவன். -दासः உணவிற்காக அடிமையாகிறவன் -देवता உணவுப் பொருள்களின் அதிஷ்டான தேவதை -दोषः நிஷித்தாஹாரத்தைப் புசிப்பதாலுண்டாகும் தோஷம். உண்ட உணவில் தோஷம்,கோளாறு. -द्वेषः உணவிலிச்சையின்மை. -पतिः அன்னப் பிரபு. சிவன். அக்கினி. ஸவிதா -परिवर्तः பத்தியம் -पाकः சமைத்தல். ஜீரணம் (ஜாடராக்கினியால்)-पू वि அன்னத்தை சுத்தி செய்கிற. ஸூரியன். -पूर्ण वि அன்னம் நிறைந்த, உடைத்தாயிருக்கிற. -पूर्णा துர்க்கையின் ரூபவிசேஷம் = ईश्वरी -पेयं = वाजपेयं -प्रलयं இறந்தபின்சோற்றில்லயித்துவிடல் -प्राशः, प्राशनं குழந்தை பிறந்த ஆறும்மாதத்தில்முதன் முதலில்அன்னமூட்டும் ஹோம பூர்வக பதினாறில் ஓர் ஸம்ஸ்காரம் -ब्रह्मन्, आत्मन् पु அன்னரூபமான பிரம்மம்,

भक्त वि = -अन्नदास-भुज् वि உண்கிற. சிவன் .-मलं மலம். சாராயம். அரக்கு -रक्षा ஆஹாரநியமங்கள் -रसः அன்னரஸம், ஸாரம். சோறும் நீரும் लिप्सा பசி. -विकारः அன்னத்தின் மாறுபாடு. அஜீர்ணத்தால் குடல் கெட்டிருத்தல். ரேதக்கசிவு. ரேதஸ் -व्यवहारः அன்ன ஸம்பந்த ஆசாரம். அதாவது பங்க்தி போஜனம் செய்வதா கூடாதா என்னும் வழக்கம். -शेषः உண்ட மீதி. உச்சிஷ்டம். எச்சில் -संस्कारः அன்னத்தை மந்திர பூர்வகமாகச் சுத்தி செய்தல் -होमः அன்னத்தால் ஹோமம். அச்வமேதத்தில் 10 வஸ்துக்களால் செய்யப்படும் ஹோமம்

अन्नमय वि (यी स्त्री) அன்னத்தாலான -कोशः, षः ஸ்தூல சரீரம். ஸ்தூலாகாரப்பிரம்மமான இந்த லோகம். यं அன்னஸமிருத்தி.

अन्नावृध् वि அன்னபிவிருத்தி செய்கிற

अन्नायिन् वि பசித்த.

अन्य वि வேறான. புதிய. விசேஷ குணமான. ஸாதாரணமான. அதிகப்படியான -अकरण वि நாணைச -असाधारण त्रि மற்றவைகளைப் போல் பொது குணமில்லாத. விசேஷ குணமுள்ள - उदर्य त्रि வேறொருவனிடமிருந்து பிறந்த -उदर्यः மாற்றாந்தாயின் பிள்ளை.- कारुका நாக்குப் பூச்சி -गामिन् वि வேறொன்றிர்க்குப் போகிற. வியபிசாரமான धी त्रि தெய்வத்தினிடமிருந்து திரும்பிவிட்ட மனதுள்ள - नाभि वि வேறு குடும்பத்தைச் சேர்ந்த -पदार्थः வேறு வஸ்து. வேறு பதத்தின் பொருள் -पर வேறொன்றைப் பற்றுகிற, குறிக்கிற -पुष्टा, भृता காக்கையால் வளர்க்கப்படும் குயில் -पूर्वा வற்கனவேஒருவனுக்கு நிச்சயதார்த்தம்செய்யப்பட்டிருப்

பவள். மறுபடியும் பணந்த விதவை-बंधु:வேகிबीज,बीजस मुद्भव, समुद्भव ஸ்வீகாரம் செய்துக்கொள்ளப்பட்டவன் -भृत् पु குயில் முட்டையை அடைகாக்கும் காகம் .मातृजः மாற்றுந்தாயின் பிள்ளை - राजन्, राष्ट्रीय வேற்றாசனுக்கு, ராஜ்யத்தில் குடியாயிருக்கிற. - रूपेण வேறுருபத்தில் -लिंग(क) வேறு பதத்தின் லிங்கத்தை அடைகிற. விசேஷணமான - वादिन् वि பொய்சாக்ஷி சொல்லுகிற. பிரதிவாதி -वाप: பிறர் கூட்டில்முட்டையிட்டுச் செல்லுங்குயில் -वाह: காக்கை त्रिवर्धितः குயில் -व्रत वि வைதிகக் கொள்கைகளை விட்ட. பாஷண்டியான -शाखः, शाखकः ஸ்வசாகையைவிட்டு இதரவேதத்தை நாடினவன் -संक्रांत वि வேறொன்றில்நாட்ட, மாற்றப்பட்ட -संगमः சோரப்புணர்ச்சி -साधारण वि அனேகருக்குப் பொதுவான -स्त्री இதரனின் மனைவி (गः) விடன்.

**अन्यक** वि வேறான

**अन्यत्** वि ,, अ மறுபடியும். அதிகப்படியாக -आशिस् स्त्री அன்னியனின் ஆசீர்வாதம் -आस्था வேறொருவனிடத்தில் பற்று

**अन्यतम** वि அனேகத்திலொன்றான

**अन्यतर** वि இரண்டிலொன்றான

**अन्यतरतः** अ இரண்டிலொரு பக்கத்தில் -दंत ஒரு பக்கத்தில் பற்களையுடைய

**अन्यतरेद्युः** अ இரண்டிலொரு நாளில்.

**अन्यतः** अ வேறொன்றிலிருந்து. ஒரு பக்கத்தில். வேறிடத்திற்கு. வேறொன்றைக் குறித்து. வேறு காரணத்திலிருந்து. எதிரிடையாக. இல்லாவிட்டால். வேறிடத்தில். -अरण्यं இங்குமங்கும் காடாயிருக்கும் ப்ரதேசம் -एत, एतस्, एनी ஒரு பக்கத்தில் புள்ளிகளுள்ள -घातिन् वि ஒரு பக்கத்திலடிக்கிற -वात त्रि வாத (ரோக)த்தால்

வருந்துகிற -वात· ஒருவிதக் கண்ணோய்.

अन्यतस्त्य: पु சத்துரு

अन्यत्र अ வேறிடத்தில், சமயத்தில். தவிர்த்து. இல்லாவிடில்

अन्यथा अ வேறுவிதமாக. பொய்யாக. பிசகாக. வேறு காரணத்திலிருந்து -कार: மாறுதல் -कारं अ வேறு விதமாக -ख्याति: ஆத்மாவைப் பற்றிய) பிசகான கொள்கை. ஓர் வேதாந்த நூல் -भाव: மாறுபாடு -वा दिन् त्रि வேறு விதமாக, பொய்யாகப் பேசுகிற. இரண்டர்த்தமாகும்படிச் சொல்லுகிற, மெய் சொல்லாது தப்பித்துக்கொள்ளும் ஸாக்ஷி -वृत्ति वि மாற்றப்பட்ட. கலக்கமுண்டு பண்ணப்பட்ட सिद्ध, द्धि: स्त्री பிசகான நிரூபணம் - स्तोत्रं வசைப்பாட்டு. கேலியோடு கூடின தூஷணைக் காவியம்

अन्यथयति நா. ப. மாற்று.

अन्यदा अ வேறு சமயத்தில், விஷயத்தில். ஒரு காலத்தில் ஒரு தரம். சில சமயங்களில். அடிக்கடி

अन्यदीय वि வேறொன்றோடு ஸம்பந்தப்பட்டிருக்கிற. வேறொன்றிலிருக்கிற. வேறொன்றினுடைய

अन्यर्हि अ வேறு ஸமயத்தில்

अन्यंग वि புள்ளி, களங்கமில்லாத

अन्या वि காய்ந்து போகாத. உலராத

अन्यादक्ष, शं, श वि வேறு, புது மாதிரியான

अन्याय्य वि தகாத. நியாயம், பிரமாணமில்லாத

अन्येद्यु: अ வேறு, தொடர்ந்த நாளில். ஒரு நாள். ஒரு தரம்

अन्येद्युष्क वि பிரதிதினம் ஸம்பவிக்கிற. தின. स्क: தினஜ்வரம்.

अन्योन्य वि अ ஒன்றிற்கொன்று न्यं அலங்கார விசேஷம் -अपहृत பரஸ்பரம், ரஹஸ்யமாய் எடுத்துக்கொள்ளப்பட்ட -अभाव: பரஸ்பரமில்லாமை -आश्रय பரஸ்பர

ஸஹாயமான -उक्तिः स्त्री ஸம்பாஷணை -पक्षनयनं எண்ணை ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு மாற்றல். -भेदः பரஸ்பரத்வேஷம் -मिथुनं பரஸ்பர சேர்க்கை -विभागः தங்களுக்குள்ளே ஒருவருக்கொருவர் பங்கிட்டுக்கொள்ளல் -वृत्तिः स्त्री ஒன்றினால் மற்றொன்றிர்க்கேற்படும் பரஸ்பரபயன் -व्यतिकरः, संश्रयः காரணப் பயன்களான பரஸ்பர ஸம்பந்தம்.

**अन्योकस** वि தன் வீட்டில் வஸியாத அயல் வீட்டிலிருக்கிற

**अन्वक्ष** वि தோற்றமான. சேர்ந்துத் தொடருகிற क्ष अ பிற்பாடு. பிறகு. உடனே. அதன்பிறகு.

**अन्वक्षरसंधिः** உயிர்மெய் யெழுத்துக்கள் சேரும் ஓர் வேத ஸந்தி விசேஷம்

**अन्वंच्** वि தொடருகிற. நீட்டு வாட்டத்தில் கிடக்கிற -भावं अ மிக அனுகூலமாய்

**अन्वक्** अ பிற்பாடு. பின்னிருந்து. அனுகூலமாய். பிந்தி.

**अन्वन्** वि தொடருகிற

**अन्वयः** (न्वि) पु தொடர்தல். தொடருபவன். பரிஜனம். ஸம்பந்தம். வாக்கியத்தில் பதங்களின் இயற்கையான ஒழுங்கு. தாத்பர்யம். பரம்பரை. ஸந்ததி. காரண பயன்களின் தார்க்கிக ஸம்பந்தம். பிரத்தியக்ஷம் -ज्ञः வம்சாவளி யெழுதுவோன்

**अन्वयवत्** वि பயனையுடைய. தொடருகிற. குலீனனை

**अन्वयिन्** वि பயன் போன்றதோடு சேர்ந்த

**अन्वर्तितृ** पु அழைப்பவன்

**अन्वर्थ** वि அர்த்தம் விளங்குகிற. கருத்திற் கொத்த -ग्रहणं ரூடியர்த்தமின்றி ப்ரதிபதார்த்தம் -संज्ञा தகுந்தபெயர். அர்த்தத்திற் கிணங்கின பரிபாஷை.

**अन्ववकिरणं** न தொடர்ச்சியாய் இறைத்தல்

**अन्ववचारः** पु இறங்குதலும் தொடர்தலும்
**अन्ववसर्गः** पु தளர்த்தல். இஷ்டப்படியிருக்க இணங்கல். இஷ்டப்படி இருத்தல்
**अन्ववसित** वि சேர்ந்திருக்கிற. கட்டப்பட்டிருக்கிற
**अन्ववायः** குலம். பரம்பரை
**अन्ववेक्षा** स्त्री மரியாதை. கௌரவாதரணை
**अन्वष्टका** स्त्री தை, மாசி, பங்குனி கிருஷ்ண நவமி
**अन्वष्टक्यं** न அன்வஷ்டகாசிராத்தம்.
**अन्वष्टमदिशं** अ வடமேற்கு திக்காக
**अन्वस्त** वि விசிறி எறியப்பட்ட. எய்யப்பட்ட
**अन्वहं** अ நாளுக்கு நாள். தினந்தோறும்
**अन्वाख्यानं** न முன் சொன்னதைக் குறித்து விவரித்தல். வரிசையாய்ச் சொல்லல். அத்தியாயம்
**अन्वाचयः** पु பிரதான விஷயத்தைச் சொல்லி, கூட ஓர் கௌண விஷயத்தையும் சொல்லல். இவ்வித அப்பிரதானமான விஷயம். சேர்ந்திருத்தல்.
**अन्वाचित** वि அமுக்கியமான. இழிவான
**अन्वाजे** अ துர்பலமாயிருப்பதைத் தாங்க
**अन्वाटिकः** पु பாக்கு மரம்
**अन्वादेशः** पु (दिश्) முன் சொன்னதை அனுஸரித்து மறுபடியும், பிந்தியும் சொல்லல். ஒரே பதத்தைப் பின்னேயும் மறுபடியுமுபயோகித்துக்கொள்ளல்
**अन्वाधानं** न வைதிகாக்கினியில் விறகை வைத்தல்
**अन्वाधिः** स्त्री ஈடு. இரண்டாம் அடமானம். ஜாமீன் தாரன். பச்சாத்தாபம்.
**अन्वाधेयं, धेयकं** न கணவன் விட்டார் கலியாணத்தின் பிறகு [கொடுத்த சீதனம்
**अन्वाध्यः** पु ஓர் தேவகணம்
**अन्वांत्र्य** वि குடலிலிருக்கிற.

अन्वायतन वि அக்ஷபாகை ஸம்பந்தமான नं अ வீட்டில்
अन्वायत्त वि அனுகுணமான. பின் தொடருகிற
अन्वायत्या स्त्री அன்வாயா சப்தத்தினுல் பிரார்த்திக்கப்
अन्वारभ् 1 आ தொடங்கு. தொடு [படுந்தேவதை
अन्वारब्ध वि முதுகில், வேறு அங்கத்தில் தொடப்பட்ட
अन्वारभ्य वि சேர்த்துத் தொடப்படவேண்டிய
अन्वारंभः, भणं தொடல். பலானு பவத்திறகுரித் தாவதற்கு
अन्वरंभणीय स्त्री உபதேச கார்யம் [யஜமானனைத்தொடல்.
अन्वारुह् 1 प ஏறுதலில் தொடர். உடன் கட்டை) ஏறு[செய்
अन्वास् 2 आ அருகே, சுற்றிஉட்காரவைக்கப்பட்டிரு. உபசரி.
अन्वासनं न உபசரித்தல். ஒருவன் உட்கார்ந்தபின் உட்காரல். தியானம். தூக்கம். வேலை செய்யுமிடம். சில்பி
अन्वासीन वि பக்கலில் பிந்தி உட்கார்ந்த [சாலை.
अन्वाहार्यः (र्यं) र्यकं மாஸிகம். தர்ச சிராத்தம். புரோஹிதர்களுக்குக் கொடுக்கப்படும் தக்ஷிணை -पचनः அன்வாஹார்ய யக்கியத்தில் தக்ஷிணாக்கினி
अन्वाहिक वि (की स्त्री) தினந்தோறும். அன்றாடகச் செய்ய வேண்டிய
अन्वाहित वि ஒருவனுக்குக் கொடுக்கும்படி மற்றொருவனிடத்தில் பொதுவாய் வைக்கப்பட்டிருக்கிற
अन्वि 2 प பின்பற்று. (பதங்களில்) ஒன்றோடொன்று ஒழுங்காக ஸம்பந்தம் பெற்றிரு. விதிவசமாய் வா.
आन्वित वि தொடர, அறிய, கூட்டப்பட்டிருக்கிற तं கணக்குக் கூட்டல் -अर्थ ஸம்பந்தத்தை யொட்டி எளிதில் அறியக்கூடிய -अर्थवादः, अभिधानवादः பதங்களின் அர்த்தம் சுதந்தரமாயிராமல், ஒன்றோடொன்று ஸம்பந்தப்பட்டுப் பெற்றிருத்தல் என்கிற மீமாம்ஸகர்களின் கொள்கை

अन्विति वि வணங்கி அநுகூலமாக்கிக் கொள்ளப்பட்ட तिः
स्त्री தொடர்தல். உணவு
अन्विष् 6 4 प இச்சி. தேடு. ஆராய் -णिच् विष्ट वि
अन्वीक्ष् 1 आ பார்த்துக்கொண்டிரு. தேடு
अन्वीक्षणं, क्षा ஆராய்ச்சி. தியானம். சிந்தனை
अन्वीत = अन्वित
अन्वीप वि நீரினருகேயிருக்கிற. அநுகூலமான
अन्वृचं अ ரிக்குரிக்காக
अन्वेषः षणं, णा (विष्) स्त्री கவனிப்பு. சிரார்த்தாதிகளில் பிராம்மணர்களைத் தேடுதல்
अन्वेषक, षिन् न्वेष्टृ वि தேடுகிற. ஆராய்கிற
अप् स्त्री ब நீர். காற்று. கன்னியாராசி -कृत्स्नम् நீரால் ஆழ்ந்த தியானம் -चरः ஜலஜந்து -पतिः வருணன். கடல்-पित्त தீ

वर्जने विकृतौ चौर्ये विपरीतवियोगयोः ।
अपकृष्टे च निर्देशे हर्षे चापः प्रयुज्यते ॥

अप अ என்கிற சுலோகப்படி ஒதுங்கல்பிரிதல் (अपनी). மாறுபடல் (अपकृ). விபரீதமாதல் (अपकृष्). எடுத்துக் காட்டல் (अपदिश्). தவிர்த்தல் (अपवह्, सृ). ஸந்தோஷம் (अपहस्). ஒளித்தல் (अपलप्, वद्). இழிவு (अपशब्दं). கெடுதி (अपपाठं). கீழ் நோக்கு (अपान) ஸூசகம்
अपकलङ्क पु அழிக்கப்படக் கூடாத களங்கம்
अपकरणं न தீங்கிழைத்தல். முறை தப்பி நடந்து கொள்ளல்
अपकर्तृ वि ஹிம்ஸிக்கிற. விரோதமான पु எதிரி
अपकर्मन् वि தீயொழுக்கமுள்ள. न क्रिया (கடன்) தீர்த்தல். துர் நடத்தை. துஷ்டத்தனம். திறமையின்மை. இட்டுக் காரியம்.
अपकामः पु வெறுப்பு. அருவருப்பு सं अ இஷ்டமில்லாமல்
अपकारः पु கெடுதி. துரெண்ணம். துஷ்டத்தனம். பகை.

கெட்டநடத்தை-अथिन् பகையுள்ள-गिर् स्त्री शब्दः திட்டு
अपकारकः, कारिन् त्रि (री) தீங்கிழைப்பவன். விரோதி
अपकर्षः पु கீழேயிருத்தல். குறைத்தல். மரியாதையைக்குறைத்தல். எதிர்பார்த்திருந்து செய்யப்படும் சிராத்தம் போன்ற கிரியை. பிந்தி வரப்போகும் பதத்தை முந்தியே எதிர்பார்த்தல் कर्षक त्रि
अपकर्षणं न (कृष्) ஒன்றிற்குப் பதிலாய்வால். ரத்து செய்தல்.
अपकृ 8 उ ஒதுக்கு. ஹிம்ஸி=णिच्
अपकृत त्रि தீது செய்த. உத்தரக்கிரியை போன்ற திட்டுக் கர்மம் செய்த तं தீமை.
अपकृतिः स्त्री कृत्यं தீமை. பகை. திட்டுக்காரியம்
अपकृष् 1 प 6 उ அப்புறமிழு. குறை. வளை. அவமதி. பிடுங்கு. நீக்கு. இல்லாமற் பண். மறு. (வாக்கிய பதம்போல்) பிந்தி வருவதை இழுத்துக்கொள். णिच ஒதுக்கு. குறை
अपकृष्ट त्रि இழிவான. ष्टः காகம் -चेतन त्रि அற்ப புத்தியுள்ள.
अपकॄ 6 प (கீர்) பீரிட்டு வெளிவா. (பூமியை இறைக்காகக்) காலால் தோண்டு किरणं
अपकौशली स्त्री செய்தி. சமாசாரம்
अपक्तिः स्त्री பழுக்காமை. ருது காலம் வராமை. அஜீர்ணம்
अपक्रम् 1 प தப்பி ஓடு. ஒதுங்கிப்போ. பின்னடை. (காலம் போல்) கழிந்து போ. அடிவைப்பால் அளந்துவிடு
अपक्रमः पु பின்னடையக் கூடிய கடைசி எல்லை त्रि ஒழுங்கீனமான क्रमणं, क्रामः क्रमिन् त्रि
अपक्रयः पु விலை.
अपक्रोशः पु திட்டு. நிந்தை.
अपक्ष त्रि இறகுகள், பறக்கச் சக்தி இல்லாத. ஒரே கக்ஷியைச் சேராத. துணையில்லாத. பகையுள்ள
अपक्षयः पु குறைவு. வாட்டம்.

अपक्षि 1. 5. 9. प முடிவடையச் செய். அழி. क வாட்டமடை
अपक्षीण त्रि குறைவடைந்த
अपक्षेपः, क्षेपणं न (क्षिप्) ஒதுக்கல். கீழேதள்ளுதல்.
अपगंडः पु விவயஹார வயது வந்தவன்
अपग वि போகிற. திரும்புகிற गा நதி
अपगतिः स्त्री துர்க்கதி.
अपगम् 1 प பிரிந்து போ. (காலம் போற்) கழிந்து போ. ஒதுங்கு. விழுந்துவிடு. மறைந்துபோ. சா गमः
अपगरः पु நிந்தை. மனதிற்குப் பிடியாததைச் சொல்லுபவன். நிந்திப்பவன்
अपगर्जित वि (மேகம்போல்) இடியில்லாத.
अपगल्भ वि தைரியம் போராத. பக்கமான. மூத்ததிற்கு ஒருபடி வித்தியாஸமுள்ள
अपगल्भः पु தோஷமற்றவன். ருத்திரன்
अपगारं, गोरं (गुर्) अ உயர்ந்தெழுந்து, உயர்த்தப்பட்டு
अपगुर् 6 आ தள்ளிவிடு. பயமுறுத்து. இல்லாமற் பண்.
अपगुह् 1 उ மறை गोहः पु மறைவிடம். மறைதல்
अपगोपुर वि கோபுர வாயிலில்லாமற் பண்ணப்பட்டிருக்கிற
अपघनः पु அவயவம். त्रि மேகமில்லாத
अपघातः पु கொல்லல். மரணத்தில் முடியும்படியான கெட்ட ஸம்பவம். அடித்தல் (घातिन् वि) [ஸசேகம்)
अपचः पु சமைக்க முடியாமை. நன்குசமைக்காதவன் (நிந்தா
अपचयः (चि) पु குறைதல். நஷ்டம். செலவு. பூஜை. பூ பறித்தல். கிரஹ விசேஷங்கள்
अपचर् 1 प பிரிந்துபோ. வழி தப்பி நட. மீறு. பிசகு.
अपचाय् 1 आ பயப்படு. பூஜி. चायित वि
अपचारः पु பிரிதல். சாவு. கெடுதி. துர் நடத்தை. ஹிம்ஸை. குறை. அபத்தியம் (चरित चारिन् वि)

अपचि 3 प மரியாதை செய். வணங்கிக் கூப்பிடு. 5 उ குவி. क பலம், உருவத்தில் குறைக்கப்பட்டிரு. இழ.
अपचित वि மெலிவடையச் செய்ய, பூஜிக்க, கொளுத்தப் பட்ட. நிறைந்திருக்கிற तं பூஜை.
अपचित् स्त्री நாசகரமான பறக்கும் பூச்சி.
अपचितिः स्त्री குறைவு. அழிவு. செலவு. பிராயச்சித்தம். தவிர்த்தல். தண்டனை. பூஜை.
अपची स्त्री தொண்டை வீங்கும் நோய்.
अपचेतृ पु நாசம் செய்பவன். ஸொத்தை யழிப்பவன்
अपच्छाय वि நிழலில்லாத. கெடுதலான நிழலுள்ள. மங்க லான यः நிழலற்றதான தெய்வம் या பேய்
अपच्छेदः, दनं न வெட்டிச் சாய்த்தல், நஷ்டம். தடை
अपच्यवः पु (च्यु) வெளிவரல்
अपच्यु 1 आ அகல். விட்டொழி. நசி. சா (च्युत वि)
अपजयः प தோல்வி
अपजर्गुराण त्रि மூடியைத் தள்ளும் வழக்கமுள்ள
अपजातः पु பெற்றோர்களைப் போலின்றி தீ யொழுக்கமான
अपजि 1 प வெல். அப்புறப் படுத்து. [பிள்ளை.
अपज्ञा 9 आ இல்லாமற் பண். மறை. ज्ञानं ஒளித்தல்
अपंचीकृतं न பஞ்ச பூதங்களாலின்றிய ஸூக்ஷ்ம வஸ்து.
अपटांतर वि திரையால் மறைக்கப்பட்டிராத
अपटी स्त्री திரை. கூடாரச் சீலை -क्षेपः पु நாட்டியத்தில் வேக மாய் வரும் வேஷத்தின் பிரவேசம்.
अपतंत्रकः पु நரம்பு பிடிப்புள்ள ஒரு விதவாத ரோகம்.
अपतर्पणं न (ஜ்வரத்தில்) பட்டினிபோடல். திருப்தியில்லாமை
अपतल्पकं न அர்த்த சந்திராகார தலையணை
अपतानकः पु நரம்பு பிடிப்புள்ள நோய். किन् वि அதையுடைய
अपतिक त्रि யஜமானன், கணவனில்லாத. கலியாணமாகாத

अपतिः पु பிரபு, கணவனுகாதவன்
अपत्नी கலியாணமாகாத. கணவனில்லாத.
अपत्नीक वि மனைவியில்லாத. மனைவியில்லாமலே செய்தாக [வேண்டிய
अपतीर्थ वि நல்ல புண்ணிய தீர்த்தமாகாத
अपतोका स्त्री சினை யழிந்த பசு
अपत्यं न குழந்தை.குடிப் பெயர் -जीवः செடிவிசேஷம்= -दा மருத்துவச்சி -पथः पु பெண் குறி -प्रत्ययः குடிப்பெயர் -विक्रयिन् पु குழந்தையை விற்பவன். மாப்பிளைக்குப் பெண்ணை விற்பவன் -शत्रुः (குட்டியை சத்துருவாக வுடைய, குஞ்சிட்டதும் சாகிறதான) நண்டு. பாம்பு -साच् वि குட்டியால் தொடரப்பட்ட
अपत्रः पु துளிர். மூங்கல் குருத்து. இலையுதிர்ந்தமரம். இறக்கைகளில்லாத பக்ஷி
अपत्रप् 1 आ வெட்கித் திரு. கூச்சத்தால் தலை குனி
अपत्रप वि வெட்கங்கெட்ட पा, पणं லஜ்ஜை. குழப்பம். தொந் [திரவு
अपत्रपिष्णु वि லஜ்ஜையுள்ள
अपत्रस्त वि பயந்திருக்கிற.
अपथ वि வழியில்லாத थं, थः வழியில்லாமை. கெட்ட, தப்பு வழி. अल கெட்ட வழி. துர்நடத்தை. மதவிரோதம். பெண் குறி था செடி பேதங்கள் थं अ கெட்ட வழியில் -प्रपन्न वि தீ யொழுக்கமுள்ள. துர்விநியோகமான
अपद्, पाद् वि (पदी स्त्री) அறியமுடியாத. பாதமில்லாத
अपद् वि பாதமில்லாத. பதவி, வேலையில்லாத दः நகரும் ஜந்து. दं இடம், வீடில்லாமை. கெட்ட இடம். வேற்றுமையுரு பேற்காத சொல். ஆகாயம் - अंतर वि சேர்ந்தாப்போலிருக்கிற -अंतरं கிட்டேயிருத்தல் -रूहा, रोहिणी மற்றொன்றின் மேல் வளரும் செடி விசேஷம்.
अपद्म वि தன்னடக்கமில்லாத. சலிக்கும் அதிர்ஷ்டமுள்ள

अपदश वि பத்திற்கு தூரத்திலிருக்கிற
अपदंशः पु ஊறுகாய் -क्षमः முருங்கைமரம்
अपदानं, दानकं न சுத்தமான குணம். நற்காரியம். முடிந்த வேலை. துண்டித்தல்.
अपदार्थः पु இல்லாமை. சூனியம். வாக்கியத்தில் வந்த பதங்களின் அர்த்தமின்மை.
अपदिश् 6 प குறி. காட்டு. அறிவி. பாசாங்கு செய். ஒன்றோடு அன்வயம், ஸம்பந்தமடைந்திரு.
अपदिशं अ விதிக்கு. இரு திக்குகளின் நடுவிடம்.
अपदेवता स्त्री பேய். பிசாசு. இராக்ஷஸன்.
अपदेशः पु வியாஜம். நிபம். காரணம். பிரஸித்தி. குறிசொல்லல். அறிவிப்பு. பாசாங்கு. மாறு வேஷம். இடம். மறுப்பு. மோசம். தகாதவிடம்.
अपदेशिन् वि இல்லாததை இருப்பதாய் பாவிக்கிற.
अपदेश्य वि போலியான. கபடமான. தகாதவிடத்திலிருக்கிற.
अपद्रव्यं न கெடுதியான பொருள். சுத்தமில்லாத உலோஹம் கலும்புக்கலப்பு.
अपद्वारं न பக்க வாயில். சரியான வாசலல்லாதது
अपधा स्त्री மறைக்கப்பட்டிருத்தல்.
अपधाव् 1 प நிஜம் சொல்லாமல் தப்பித்துக்கொள்.
अपध्यै 1 प கெடுதி நினை. மனதிற்குள் சபித்துக்கொள்.
अपध्वंस् 1 आ புறப்பட்டுப் போய் விடு. திட்டு. णिच् தூசியிலிருந்து நீக்கு
अपध्वंसः पु (அந்தஸ்திலிருந்து) இறங்கு முகம். அவமானம் -जः தாயைக் காட்டிலும் இழிவான தகப்பனுள்ள ஓர் மிச்ரஜாத்யன்
अपध्वंसिन् वि அழிக்கிற. ஒதுக்குகிற.
अपध्वस्त वि நிந்திக்க, பொடிபண்ண, கைவிடப்பட்ட

अपध्वस्त: पु தௌர்ப்பாக்கியன். துர் ஜனன்.
अपध्वांत वि பிசகாய்ச் சப்திக்கிற तं பிசகான,கொடுஞ்சப்தம்
अपनय: पु ஒதுக்கல். கண்டித்தல். துர்நடத்தை. அபகாரம்.
வெளியில் எடுத்துப் போடல். [த்தல்
अपनयनं न ஒதுக்கல். குணப்படுத்தல். கடன் தீர்த்தல். கழி
अपनामन् वि கெட்ட பெயரையுடைய न கெட்ட பெயர்.
अपनी 1 प ஒதுக்கு. பின்னடையச் செய். அழி. திருடு.
பிடுங்கு. கற. கழற்று. மறு தவிர்.
अपनीत वि பிடுங்க, ஒதுக்கப்பட்ட. எதிரான. கெடுத்து
விடப்பட்ட. (கடன்) தீர்த்த तं துர்நடத்தை.
अपनुत्ति:, स्त्री नोद:, नोदनं (नुद्) ஒதுக்கல். அழித்தல். பிராயச்
अपनोदिन् वि போக்கடிக்கிற [சித்தம்.
अपन्नति: स्त्री நிராசை செய்தல்
अपपाठ: पु பிசகானபாடம். படிப்பதில் பிசகல்.
अपपात्र त्रि பொதுப் பாத்திரங்களை உபயோகிக்கக் கொடா
மல் வேறு பாத்திரங்களை உபயோகிக்கிற. இழிவான
ஜாதியான त्रि சுத்தமில்லாத பாத்திரம்.
अपपात्रित: पु தோஷத்தினால் ஜாதிப் பிரஷ்டம் செய்யப்
பட்டு சொம்புகளைத் தொடவிடப்படாதவன்
अपपाद् वि கெடுதியான கால்களையுடைய त्र செருப்பில்லாத.
अपपित्वं न பிரிவு [இடுப்புக்கள்
अपपूत वि கோண இடுப்பையுடைய तौ சரியாய் அமையாத
अपप्रजाता स्त्री அகாலப் பிரஸவ மடைந்தவள்.
अपप्रदानं न லஞ்சம்
अपप्रोषितं न கெடுதியான பிரிவாலேற்பட்ட தோஷம். [யாத
अपबर्हिस् वि பர்ஹிஸ் ஆகுதியின் பிரயோஜனத்தை யடை
अपबाहुक: पु கெட்டகை கையில் உரப்பு,வளைக்க முடியாமை.
अपभय वि பயமில்லாத. பயப்படாத.

अपभरणी स्त्री பரணி நக்ஷத்திரம்.
अपभर्तृ वि ஒதுக்குகிற. அழிக்கிற
अपभाष् 1 आ திட்டு. தூஷி. பெயரைக் கெடு. அபகீர்த்தி
अपभू 1 प ஒதுங்கி யிரு. இல்லாமலிரு. [யுண்டாக்கு
अपभूतिः स्त्री கெடுதி. தோல்வி
अपभ्रंश् 1 आ விழுந்துபோ. णिच् அகற்று. நீக்கு
अपभ्रंशः पु விழுதல். இலக்கண விதிக்கொவ்வாத பாஷை, சொல். அஸம்ஸ்க்ருத, பாமரரின் பாஷை.
अपभ्रष्ट वि விழுந்துவிட்ட. கொச்சை பாஷையான
अपम वि கடைசியான. மிக இழிவான मः கிராந்தி மண்டலம். ஸூர்யகதிபேதம். ज्या ஸூர்யகதி மார்க்கம் -मंडलं, वृत्तं ஸூர்யகதி.
अपमर्दः पु பெருக்கப்பட்டது. குப்பை
अपमर्शः पु தொடல். மேயல்.
अपमन् णिच् அவமதி मानः அவமானம். அவமதிப்பு.
अपमानिन् वि அவமதிக்கிற. मान्य वि மரியாதையற்ற
अपमार्गः पु பக்க, கெட்டவழி. உடம்புப் பிடித்தல்
अपमार्जनं न துடைத்தல். சுத்தி செய்தல். செதுக்கல். சிராய்
अपमित्य वि எறியப்படவேண்டிய. -त्यं, त्यकं கடன் त्या மாற்றிக் [கொள்ளுதல்,
अपमित वि அவமானம் செய்யப்பட்ட
अपमुख वि திருப்பப்பட்ட முகமுடைய. அவலக்ஷணமான.
अपमुखं अ முகமில்லாத.
अपमृत्युः पु அகால மரணம். எதிர் பாராமல் ஒருவன் ஆபத்தினின்றும் மீண்டுவரல்.
अपमृषित वि அர்த்தமாகாத (வாக்கியம்). ஸஹிக்கமுடியாத.
अपयानं न (या) ஓடிப் போதல். தப்பியோடல்.பிரிந்துபோதல்
अपर वि ஒப்பில்லாத. போட்டி, இரண்டாவதில்லாத. வேறான. அதிகப்படியான. நடுத்தரமான. தன்னு

டையதல்லாத. பிந்திய. கடைசியான. அடுத்த. தொடருகிற.மேற்கத்திய.இழிவான.அதிகமாய்ப்பரவாத. தூரமான रः யானையின் பின் கால்.விரோதி. தம்பிரா மேற்கு. யானையின் பின்னுடல். ஸாங்காத்பயனம். கர்ப்பப்பை. பார்வதி. கர்ப்பத்திலடக்கப்பட்ட மாதவிடாய் री எதிர் காலம்.=र्ं எதிர் காலத்தில் நடக்க வேண்டிய கார்யம். யானையின் பின் பாகம். अ மேலும். எதிர் காலத்தில் -अग्नि (ग्नी) द्वि தக்ஷிண, கார்ஹபத்தியாக்கினிக்கள். அபரக்கிராயாக்கினி.-अंत त्रि மேற்குக் கரையில் வசிக்கிற तः மேற்கோரம், எல்லே, கரை. व ஸஹ்யமலையருகே வஸிக்கும் மேற்கு தேச ஜனங்கள், அத்தேசம், அதன் அரசர்கள். சாவு. -अंतज्ञानं தன் முடிவை எதிர் பார்த்திருத்தல். யானையின் பின் கால் -अंतकः ஓர் பாட்டு -अंतिका 64 மாத்திரைகளுள்ள விருத்த விசேஷம். -अपराः, रे, राणि வெவ்வேறான -इतरा கிழக்கு -कान्यकुब्ज கான்ய குப்ஜாவைச் சேர்ந்த, அதிவிருக்கிற -ज பிந்தி, உலக முடிவிற்பிறந்த -जः பிரளயாக்கினி -जनः மேற்கத்தியார். -दक्षिण अ தென்மேற்கில் -पक्षः கிருஷ்ண பக்ஷம். பின் மாதம். எதிர்ப்பக்கம், கக்ஷி. பிரதிவாதி. -पंचालाः மேற்கு பாஞ்சாலம் पर वि நானுவிதமான. -पाणिनीयाः மேற்கே யிருக்கும் பாணினியின் சிஷ்யர்கள் -प्रणेय त्रि சொன்னதைக் கேழ்க்கிற. எளிதில் வசப்படுத்தக் கூடிய. -भावः வேறுயிருத்தல். மாறுபாடு. தொடர்ச்சி. -रात्रः இரவின் கடைப் பாகம், கடைக்காவல் -लोकः வேறு லோகம். ஸுவர்க்கம்-वक्त्रा, वक्त्रं ஓர் விருத்தம்-वैराग्यं பதஞ்சலிசொல்லும் வைக்ராக்கியவிசேஷம்-सक्थं புட்டம்.-स्वस्तिकं அடிவான மேற்கு துனி -हैमन பின் மழை கால ஸம்பந்தமான

अपरता, त्वं வேறுயிருத்தல். விரோதம். அருகாமை. தூரம்.
अपरत्र अ வேறிடத்தில்
अपरथा अ வேறு விதமாக.
अपरवत् वि தொடருவதைப் போன்ற
अपरतिः स्त्री திருப்தியின்மை. ஓய்வு. ஒழிவு.
अमरवः पु (பாகத்தில்) சண்டை சச்சரவு. அபகீர்த்தி. விகாரமான சப்தம் [செய்கையுள்ள
अपरस्पर वि தொடர்ச்சியாய். சிராத்தம்போல் இடைவிடாத
अपरांच् वि நேர்முகமான. நோக்குகிற. अ எதிரே -मुख (खी स्त्री) திருப்பாத முகமுடைய, தைரியமாய் நோக்கிப் பார்க்கிற
अपराजितः पु விஷப் பூச்சி. விஷ்ணு. சிவன். இந்திரனுடைய தேர். 11ல் 1 ருத்திரன். ஓர் ரிஷி ता விஜய தசமியன்று வணங்கப்படவேண்டிய துர்க்கை. ஓர் யோகினி. வடகிழக்கு மூலை. பாதத்திற்கு 14 அக்ஷரங்களுள்ள விருத்த விசேஷம். மணிக்கட்டில் ரக்ஷாபந்தனமாகக் கட்டிக்கொள்ளப்படும் மூலிகை. வெள்ளைக் காக்கணஞ்செடி. கோஷ்டம். கறுப்பு) விஷ்ணுக்கிராந்தம். சணம்பு.
अपराजिष्णु, पराजेय त्रि வெல்ல முடியாத.
अपराध 4. 5. प துன்புறுத்து. அலட்டு. தள்ளி விடு.
अपराधः, राद्धिः स्त्री குற்றம். தோஷம். -भंजनः பாவத்தைத் தொலைப்பவன். சிவன் -भंजनस्तोत्र சிவன்மேல் சங்கரரால் செய்யப்பட்ட ஸ்துதி. -राधिन् वि
अपराद्ध वि பாவஞ்செய்த. குறிதப்பிய. மீறின -इषुः, पृषत्कः குறி
अपरापरण वि ஸந்ததியில்லாத [தப்பின வில்லாளி
अपरिक्रम वि சுற்றித்திரிய முடியாத. சிரத்தையில்லாத
अपरिग्रहः पु தியாகம். தரித்திரம்.

अपरिचयिन् , परिचेय वि பரிசயமில்லாத. மனுஷ்யதுவேஷியான
अपरिज्यानिः स्त्री கிழமாகாமை. இழக்காமை. ஓர் சடங்கு.
अपरिपर वि வளைந்து வளைந்துபோகாத
अपरिम्लानः पु வாடாக்குரிஞ்சி
अपरियाणि (சாபத்தில்) திரியாத. अपर्याणियில்
अपरिशेष वि மீத்தாத. ஸர்வவியாபகமான ष: மிச்சம், எல்லை
अपरिष्टिः स्त्री பூஜை [யில்லாமை
अपरिस्कंद वि அசைவில்லாத
अपरिहरणीय, हार्य वि விலக்க முடியாத, கை விடக்கூடாத.
அவமதிக்கத்தகாத
अपरिहृत वि துன்புறுத்தப்படாத. யோக்கியமான
अपरीक्षित वि பரீக்ஷிக்கப்படாத. யோசனையில்லாத. நன்கு
நிரூபிக்க, நிலைநாட்டப்படாத
अपरीतः पु ஓர் ஜனம்
अपरूप (पा, पी स्त्री) वि குரூபியான. पं ஆச்சரியம். வி,குரூபம்
अपरोक्षानुभूतिः स्त्री நேரில் தெரிந்து, அறிந்து கொள்ளல்.
अपरेद्युः अ மறு, தொடர்ந்த நாளில்
अपरोक्षयति ना. प. தோற்றமாக்கு.
अपरोधः पु தவிர்ப்பு. விலக்கு. தடை. நிஷேதம்.
अपरोपः पु நிர்மூலமாக்கல். ஸிம்மாஸனத்தினின்றும்நீக்கல்.
अपर्ण वि இலையில்லாத णा பார்வதி.
अपर्तु वि அகாலமான. தூமை காலங்கடந்த.
अपर्युषित वि இரவு கடக்கும் வரை நிற்காத. புதிய (பூபோல்)
अपर्वन् वि சேர்க்கையில்லாத. -दंडः கரும்பு பேதம்
अपल वि மாம்ஸமில்லாத लं குண்டூசி
अपलप् । प மறு. மறை. கௌரவக் குறைவுண்டாக்கு णिच्
வஞ்சி. ஏய் (लापिन् वि)
अपलपनं, लापः पु மறைத்தல். ஞானத்தை, உண்மையை கரு

த்தை வெளியிடாமை. பற்று. தோளுக்கும், விலாக் களுக்கும் நடுபாகம் -देंः குற்றத்தை ஒப்புக்கொள்ளா
अपलाषिका स्त्री அதிகதாகம், இச்சை [தகற்கு அபராதம்.
अपलाषिन्, लाषुक वि தாகமுள்ள. தாகம், இச்சையில்லாத.
अपल्यूलनं न சுத்தி செய்யாமை.
अपवाचनं न பேசி யொதுக்கல் [(वादिन् , वादक वि)
अपवद् 1 उ திட்டு. நிந்தி. மறு. ஆக்ஷேபி. णिच् நிந்தி. தர்க்கி
अपवन वि காற்றில்லாத. காற்றினின்றும் ரக்ஷிக்கப்பட்ட
अपवनं न நகரத்தினருகே தோப்பு. தோட்டம்
अपवरकः, का (वृ) உள்ளறை. பிரஸவ அறை. (பிரை). மாடம்
अपवरणं (वृ) மூடி. துணி. மூடுதல்.
अपवर्गः पु வேலையின் முடிவு. விசேஷ விதி. முக்தி. தானம். தியாகம். எய்தல். விடல் (பாணம்). பயன்.
अपवर्जनं न (சொல்லை) நிறைவேற்றல். (கடனைத்) தீர்த்தல். தானம். முக்தி. தியாகம். ஆகாயம். யாகம்.பகுமானம்
अपवर्जित वि கைவிடப்பட்ட.
अपवर्तः (वृत्) पु இருபக்கங்களிலுமுள்ள அம்சங்களை வகுக்க முடியுமான பொது எண்.
अपवर्तकः (वृत्) पु பொது அளவு
अपवर्तनं न ஒதுக்கல். இடம் மாற்றிவைத்தல். இல்லாமற் பண்ணல். அம்சத்தைச் சுருக்கல்
अपवह् । प ஒதுக்கு. ஓட்டிவிடு. கைவிடு. கழி णिच् தூரத்திற் கிழு. நீக்கு. தூளாக்கு. நுகத்தடியைச் சுமக்கச் செய். (अपोढ अपवोढृ वि)
अपवादः पु பழி. சிறப்பு விதி. கட்டளை. கண்டனம்.மறுப்பு. நம்பிக்கை. நட்பு. மானை வஞ்சித்துப் பிடிக்க அடிக்கும் மணி போன்ற வாத்தியம். வாணியன். மயிலின்
अपवारकः पु மூடி. கூடாரம். [புணர்ச்சி

**अपवारणं** न மறைவு. மறைதல்.
**अपवारित** वि மூடப்பட்ட तं, तकं பதுங்கும் ரீதி. तं अ ஒது
**अपवासः** पृ மறைதல். செடி விசேஷம். [ங்கி. பக்கவில்
**अपवाहः**, हनं न விருத்த விசேஷம். ஊகை. ஸந்தேகம்
**अपविद्ध** वि ஒதுக்கப்பட்ட. அற்பமான. இழிவான **-पुत्रः** பெற்றோர்களால் நிராகரிக்கப்பட்டு அன்னியனால் ஸ்வீகாரம் செய்துக் கொள்ளப்பட்ட பிள்ளை. **-लोक** இறந்த. இவ்வுலகம் விட்டு நீங்கின.
**अपविद्या** स्त्री அக்ஞானம். மாயை.
**अपविष** त्रि விஷமில்லாத षा அதிவிடயம். வாஸனை வஸ்து
**अपवीणा** स्त्री கெடுதியான வீணை
**अपवृ** 5 उ திற. காட்டு णिच् 10 प. மூடு. **वृतिः** திறத்தல்
**अपवृज्** 7 आ சிதறடி. அழி. பிடுங்கித்தள். முடி. णिच् விலகு. விலக்கு. போகவிடு. எறி. தீர். நிறைவேற்று. பிரி. கவிழ். சூன்யமாக்கு. பூஜி. கொடு **वृक्त** वि **क्तिः** स्त्री
**अपवृत्** । आ திருப்பு. ஒதுக்கு = णिच् வளை. மிச்சமில்லாப் பொதுத் தொகையால் வகு பொது அளவிற்குக்குறை
**अपवृत्त** वि தலைகீழாய்த் திருப்பின. கலக்கின. முடித்த. மறைக்கப்படாத. त्तं ஸூர்யகதி. **त्तिः** முடிவு.
**अपवेधः** पुः (ரத்தினத்தில்) பிசகாய் உட்செலுத்தல்.
**अपव्यध्** 4 प குத்து. எறி. ஒதுக்கு. கைவிடு.
**अपव्ययः** पु வீண்செலவு. மிதமிஞ்சிச் செலவு செய்தல் [கிற
**अपव्ययिन्** व्ययमान वि வீண் செலவு செய்கிற. கடனை மறுக்
**अपव्रत** वि ஆசாரத்தை விடுகிற. விச்வாஸமற்ற. விபரீதபுத்தி
**अपशदः** पु சண்டாளன். இழி பிறவியான். நீசன் [யுள்ள.
**अपशब्दः** पु வியாகரண விதியை அனுஸரியாத சொல். பாமரப் பேச்சு. அஸம்ஸ்க்ருத பாஷை. நிந்தை
**अपशमः** पु ஒய்வு. ஒழிவு.

अपशव्य वि பசுமாட்டின் அபிவிருத்திக்குக் காரணமாகாத
अपशु वि பசுமாடில்லாத. शुः கெட்டப் பிராணி. பசு, குதிரையைத் தவிர்த்த மிருகம்.
अपशुच् वि துக்கமில்லாத. पु ஜீவன்.
अमशोक वि ,, कः அசோக மரம்.
अपश्चिम वि கடைசியான. வேறொன்றால் தொடரப்படாத. கடைசியில்லாத. முதன்மையான. மிகவும்
अपश्रयः पु தலையணை. பெருந்திண்டு
अपश्री वि சோபையை யிழக்கச் செய்த.
अपश्वासः पु அபானவாயு
अपष्ठ न மாவட்டியின் கூர்மை.
अपष्ठु वि விரோதமான. விபரீதமான. இடதான अ விரோதமாய். பொய்யாக. பிசகாக. குற்றமற்று. நன்கு ष्ठुः पु காலம் (ष्ठुर,ल वि) [அடைந்த.
अपस् न வேலை யாககார்யம். ஙீர் वि வேலையாயிருக்கிற.
अपसदः पु ஙீசன்.மேல் ஜாதி புருஷர்களுக்கும்அவர்களுக்குக் கீழுள்ள ஜாதி ஸ்திரீகளுக்கும் பிறந்த ஆறு இழிபிறவியைச் சேர்ந்தவர்கள்.
अपसमं अ கடைசி வருஷம். வருஷ முடிவில்.
अपसरः पु பிரிவு.
अपसर्जनं न கைவிடல். தானம். முக்தி
अपसर्पः पु தூதன். சாரன்
अपसल = अपसव्य
अपसलवि अ இடது பக்கமாக. கட்டை, ஆள் காட்டி விரல்களுக்கு நடுவிலிருக்கும் தர்ப்பணம் செய்யப் பிதிர்க்களுக்குப் புனிதமாயிருக்கும் ஒட்டை ப்ரதேசத்தில்
अपसव्य, सव्यक वि வலப்பக்கமாக. எதிரிடையான. व्यं अ பூணூலைப் பிராசீனவீதியாக இருக்கச் செய்து

अपसारणं, णा स्त्री தூரத்திற்கு ஒதுக்கல்.

अपसृ । प பிரிந்துபோ. பின்னடை. மறைந்துபோ. தப்பியோடு. णिच् ஒதுக்கு ( स, सारः)

अपसृत वि ஒதுங்கிச் சென்ற. நீட்டப்பட்ட. விடப்பட்ட

अपसृप् । प நகர்ந்துசெல். பின்னடை. உற்றுக் கவனி (சாரணைப்போல்) णिच् ஒதுக்கு (सर्पणं सृप्तिः)

अपस्कंभः पु கட்டல். உறுதியாக்கல்.

अपस्करः पु (சக்கிரம் தவிர) வண்டியினுருப்பு. யோனி. குதம். [மலம்.

अपस्कारः पु முழங்காலின் கீழ்பாகம்.

अपस्खलः पु துள்ளல். குதித்தல்.

अपस्तम वि மிகச்சுறுசுறுப்பான, வேகமான

अपस्तंभः पु பிராணவாயுவை யுடைய மார்பண்டை ஓர் நாடி

अपस्नात वि சாவு தீட்டு, உத்தரக்கிரியாரம்பம்முன் முழுகின.

अपस्नानं न சாவு தீட்டு முழுக்கு. (ஒருவன் ஸ்நானம் செய்த) அசுத்த ஜலத்தில் முழுகல்

अपस्पश वि சாரர்களில்லாத. விவரித்துச் சொல்லாத

अपस्पर्श वि உணர முடியாத. ஸ்பரிசம் கெட்ட

अपस्पृश वि தொடப்பட இடங்கொடாத

अपस्फिग वि நன்கமையாத இடுப்பை யுடைய

अपस्फुर् , र, रत् वि ஹிம்ஸிக்கப்பட்ட. வீங்கின

अपस्मरः, स्मृतिः स्त्री மறதி. காக்காய் வலி स्मारिन् वि அதுள்ள

अपस्य वि சுறுசுறுப்பான. स्या சுறுசுறுப்பு. நீர். வேதிகை கட்ட ஓர் விதச் செங்கல்.

अपस्यति ना. प. சுறுசுறுப்பாயிரு

अपस्यु वि சுறுசுறுப்பான. வேலையிலிச்சையுள்ள.

अपह वि (स· अ दिल्) தடுக்கிற. ஒதுக்குகிற. அழிக்கிற

अपहन् 2 प தடு. அழி. ஒதுக்கு. பற்று. உமியெடு. பாணத்தால் சுட்டுத்தள். (हतिः हननं)

**अपहर्तृ वि** திருடுகிறவன். பிராயச் சித்தம்செய்து கொள்ளல்
**अपहारः पु** திருடல். பிறர் ஸொத்தைக் கையாளல். நஷ்டம். திருடன். சொக்கட்டானுட்டம். முதலை.
**अपहंलिहः पु** எருது
**अपहसितं, हासः पु** அகாரண, பயித்தியக்காரச் சிரிப்பு. கண்ணீர் சொரிந்துச் சிரித்தல், பரஹாஸம்.
**अपहस्तः पु** ஒருவனை நெட்டித்தள்ளக் கழுத்தின் மேல் வைக்கப்பட்ட கை. அப்படித் தூரத்தப்பட்டவன். எறிதல். திருடல். கொள்ளையிடல்
**अपहस्तयति** ना. प. கழுத்தைப் பிடித்துத் தள். நீக்கு **अल**
**अपहस्तित त्रि** எறிய, கைவிடப்பட்ட.
**अपहा 2 प** விடு. கைவிடு. பாழாக்கு. குறைந்து போ. **हानं**
**अपहानिः स्त्री** கை விட்டு)விடல். நிறுத்தல். மறைதல். தவிர்த்
**अपहाय अ** விட்டுவிடுகிற. தவிர்க்கிற. இல்லாத [தல்
**अपहृ । प** எடுத்தோடு. பிடுங்கிச் செல். சுமந்தோடு. ஒதுக்கு. திருடு. பிரி. வெல். வசீகரி. அழி. இல்லாமற்பண். திரும்பியடை. கழி. ணிச்சு எடுத்தோடச் செய் (**हरणं**) **हारक, हारिन् हृत वि**
**अपह्नवः पु** ஒளித்தல். திருப்தி செய்தல். பற்று.
**अपह्नु 2 आ** மறை. மாறுவேஷங்கொள். கொடேனெனு. குற்றமற்றவனென்று தீர். மன்னி.
**अपह्नुतिः स्त्री** ஒளித்தல். மறுத்தல். ஓர் அலங்காரம்.
**अपहासः पु** குறைத்தல். சுருங்கல். ஒடுக்கம்.
**अपाक् अ** பின்னே. மேற்காக. தெற்காக
**अपाक वि** பக்கலில்,பின்னே பொருத்தப்பட்டிருக்கிற. தூரமான. தூரத்திலிருந்து வருகிற. நிகரற்ற. பழுக்காத. பக்குவமாகாத. அறிவுள்ள**क:** அஜீர்ணம். -**ज वि** சமைத்தோ, பழுத்தோ உண்டாகாத. இயற்கையான -**शाकं** இஞ்சி

**अपाकर्मन्** न (கடன்) தீர்த்தல். செலுத்தல்
**अपाकरिष्णु** वि ஒதுக்குகிற. மற்றொன்றை அடக்கிமேம்படுகிற
**अपाकृ** 8 उ ஒதுக்கு. தள்ளிவிடு. (கடன்) தீர். அழி
**अपाकृतिः** स्त्री தள்ளல். கோபபயங்களாலானமனக் கலக்கம்
**अपाक्ष** वि பிரத்யக்ஷமான. கண்ணில்லாத. கொடுங்கண்களை யுடைய. கட்டளை யிடுகிற
**अपांक्त, क्तेय, क्त्य** वि பஹிஷ்கரிக்கப்பட்ட उपहत ஜாதிப் பிரஷ்ட மானவனைப் பார்த்ததால் தீட்டான
**अपाग्र** वि அப்பிரதானமான
**अपांग, गक** वि அங்கப்பழுதுள்ள. அங்கச் சேதமடைந்த.
**अपांगः,गक.** पु கடைக்கண். நெற்றிக்குறி. மன்மதன். நாயுருவி -विलोकितं,वीक्षणं பக்கப்பார்வை. கீழ்ப்பார்வை. சிமிட்டல். கண்ஜாடை. இமை கொட்டல். -देशः கண் மூலை -नेत्र वि பாந்த கண்களையுடைய.
**अपाच्च पांच्** वि பிந்தி யிருக்கிற. பின்னே, தெளிவில்லாத. மேற்கத்திய. தெற்கத்திய (ची स्त्री चीन च्य वि)
**अपाणिनीय** वि பாணினியால் அவரது கிரந்தங்களில் சொல் லப்பட்டிராத. பாணினியின் வியாகரணம் கற்காத. ஸம்ஸ்க்ருத பாஷை அல்பமாயறிந்தவன்
**अपात्रं** न உபயோகமற்ற பாத்திரம். தானம் வாங்கத் தகாத வன். தகாத இடம் -कृत्या, **अपात्रीकरणं** தகாததைச் செய்தல்
**अपादानं** न ஒதுக்கல். 5,7ம் வேற்றுமைகளுக்கு ஸமானமான ஒருவேற்றுமை. 5ம்வேற்றுமையின் ஹேதுப்பொருள்.
**अपानः** पु (अपान्) மூச்சுவிடல். குத வழியால் கீழ்நோக்கிச் செல்லும் அபானவாயு. नं, नः ஆஸன வாய் -दा அபா னத்தைக் கொடுக்கிற -द्वारं ஆஸனவாய்-पवनः, वायुः குசு
**अपाननं** (अपान्) न மூச்சுவிடல். மல, மூத்திரங்களைக் கீழுக்

अपानृत वि நிஜமான. [குக் கொண்டுபோதல்
अपान्नाथः, न्निधिः पु கடல்.
अपाप, पिन् वि சுத்தமான. -काशिन् वि துஷ்டப் பார்வையில்லாத. கெடுதியைச் சொல்லாத. -वस्यसं க்ஷேமம். ஸௌக்கியம். பாக்கியம்.
अपांनपात्, अपोनपात्, नप्ता, नाप्त्रिय. நீரிலிருந்துண்டானதான
अपांपतिः पु கடல் [அக்கினி
अपांपित्तं अप्पित्तं न அக்கினி
अपामार्गः पु நாயுருவிச் செடி -क्षार) तैलं தைல விசேஷம்
अपामार्जनं न சுத்தி செய்தல். குணப்படுத்தல்
अपायः (अपे) पु புறப்படல். பிரிவு. மறைதல். அழிவு. அபாயம். நஷ்டம். (பத) முடிவு यिन् वि நசிக்கிற. பிரிகிற
अपार वि கரையில்லாத. எல்லையில்லாத. அதிகமான. எட்ட, கடக்க, வெல்ல முடியாத. रं அக்கரை. சம்மதியாமை -संख्या ஒரு கணக்கு रा பூமி
अपारक वि முடியாத. திறமையில்லாத.
अपार्ण वि தூரமான. ஸமீபமான
अपार्थ वि பிரயோஜனமில்லாத. அர்த்தமில்லாத. र्थं பொருத்தமில்லாத சொல் -करणं வியவஹாரத்தில் பொய்யான
अपालंकः पु செடி விசேஷம். [ஹேது.
अपालंबः पु வண்டியின் பின்பாகம்
अपावर्तनं, वृत्तिः स्त्री திரும்பிப் போதல். சுழற்சி. சுழலுதல்
अपावृ 5 प திற. வெளிப்படுத்து. மூடு. (वृतिः वरणं)
अपावृत वि விதிக்கப்பட்ட. யுக்தமான. ஸ்வாதீனமான
अपावृन् 1 आ திரும்பிப்போ. ஒன்றுமில்லாமற் போய் விடு णिच् திருப்பி அனுப்பிவிடு
अपावृत्त वि திரும்பின. பின் தூரத்தப்பட்ட. நீக்கப்பட்ட
अपावृत्तं न (குதிரையின்) தரையில் புரளல்

अपाङ्या அநேக வலைகள், கண்ணிகளிராத. கொஞ்சமான
अपाश्रय वि நிராதாரவான यः கதி, சரணம். தலை.முற்றத்தின் மேல் பரப்பப்பட்ட உரை, மேல்கட்டு
अपाश्रि । उ போயடு. அனுஸரி. உபயோகி. மேலே படு
अपाश्रित वि சரணம் புகுந்த. குடியேறப்பட்ட. சற்றிக்கட்டப் பட்ட. மேலே இருக்கிற, படுக்கிற
अपाष्टिः स्त्री குதிக்கால். [மான வேோமலதை
अपाष्ठः पु அம்பு நுனி. ष्टं பிழிந்தெடுக்கப் பட்ட பின் மிச்ச
अपास् 4 प எறி. ஒதுக்கு கைவிடு. பின்னடை. அனுதை யாய் விடு. கவனியாதிரு. சா (सित वि)
अपासंगः पु அம்பருத்தூணி
अपासरणं न புறப்படல். பின்னடைதல். ஒதுக்கல்
अपासु वि இறந்த स्त वि தள்ளப்பட்ட
अपाहा 3 प = अपह

अपिसंभावनाप्रश्न शंकागर्हा समुच्चये ।

तथायुक्तपदार्थेषु कामचारक्रियासु च !

अपि अ என்கிற விச்வநிகண்டு சுலோகப்படி மேலே, அருகே வைக்கிற. குறித்து, சேர்க்கப்பட்டு, எட்டுகிற, மேலும், அதிகப்படியாக, இருந்தாலும், ஆனால், எப்படியிருந் தாலும், சந்தேகமாய், எல்லாம், முழுதும், இருந் தால், ஒருக்கால், ஆகையால், கேள்வி. நிந்தை ஸமுச
अपिकक्ष अ அக்குளில் कक्ष वि அக்குளைச் சேர்ந்த [கம்.
अपिकथं अ அறிந்த காரணத்தைத் தெரிய விரும்புதல்
अपिकर्ण காதுப் பிரதேசம்
अपिगीर्ण वि துதிக்கப்பட்ட சொல்ல, வர்ணிக்கப்பட்ட
अपिच अ பின்னும்.
अपिच्छिल वि சேர், வண்டலில்லாத.சுத்தமான. ஆழமான

**अपिज** वि பிந்தி, மறுபடியும் பிறந்த ஜ: ஆனிபீ
**अपित्** वि உலர்ந்த (நதிபோல்). த், ப்பையுடையாத.
**अपि तु** अ பின்னையோவென்றால். ஆனல்.
**अपितृक** वि தகப்பனில்லாத. முன்னோர், பெற்றோர் ஸம்பந்தமில்லாத. பித்ரார்ஜிதமில்லாத = अपित्र्य, अपैतृक
**अपित्वं** न பங்கு
**अपिधानं, पिधानं** न (धा) மூடி. மறைவு. மூடல். மறைத்தல்.
**अपिधिः** स्त्री மறைத்தல். மூடி. திருப்தியாகும் வரையில் கொடுக்கப்பட்டது. [முடைய
**अपिनद्ध** वि கட்டப்பட்ட. சரீரத்தில் கட்டப்பட்ட கவச
**अपिप्राण** (णी स्त्री) ஸதா உயிர், உணர்ச்சி யுண்டாக்குகிற
**अपिभाग** वि பங்கு பெறுகிற. பங்கையுடைய
**अपव्रत** वि ஒரே சடங்கில் பாத்தியதையுடைய
**अपिशर्वर** वि இரவின் ஸமீபமான ं பிரதோஷ காலத்தில்
**अपिशलः** पु ஓர் இலக்கண வித்துவான். ला: அவன் ஸந்ததிகள்
**अपिशस** वि மீறுகிற. பிய்க்கிற. பிளக்கிற. கீறுகிற. கிழிக்கிற
**अपिहित-पिहित** (धा) மூடப்பட்ட. மறைக்கப்பட்ட अल மறைக்கப்படாத. வெளிப்படையான
**अपी** 2 प அணுகு. பங்குகொள். சேர். லயி. சா. வழி.
**अपीच्य** वि மிக அழகான. மறைக்கப்பட்ட. ரஹஸ்யமான
**अपीजु** वि ஏவுகிற. தூண்டுகிற.
**अपीतिः** (अपी) स्त्री பிரவேசித்தல். கரைந்து போதல். லயம். நாசம். பிரளயம். சண்டையிடல்
**अपीनसः** पु ஜலுப்பு. கபம். சிலேஷ்மம்
**अपीच्य** वि மிக அழகான
**अपुंस्का** स्त्री கணவனில்லாதவள்
**अपुच्छ** त्रि வாலில்லாத -च्छा விருக்ஷபேதம் [ததியில்லாத
**अपुत्रः** पु பிள்ளையல்லாதவன் = पुत्रकः, (त्रिका स्त्री) பிள்ளை, ஸந்

**अपुत्रिका** स्त्री பிள்ளையில்லாதவனின் பிள்ளையில்லாத மகள். தனக்குப் பிள்ளை பிறவாத பக்ஷத்தில் தன் தகப்பனால் அவனுக்காக புத்திரோத்பத்தி செய்ய நியமிக்கப்படாதவள். **क:** அப்படிப்பட்டவளின் தகப்பன்

**अपुनर्** अ மறுபடியுமின்றி. ஒரேதரமாய் -**अन्वय** वि திரும்பாத. இறந்த. -**आदानं** மறுபடியும் திருப்பி எடுத்துக் கொள்ளாமை -**आवृत्तिः** स्त्री திரும்பாமை. மோக்ஷம் -**भवः** முக்தி. மறுபடியும் பிறவாமை. பாரமாத்மிகக் ஞானம். புனர் ஜனனத்திலிருந்து விடுபட்டவன்.

**अपुरुष** वि பௌருஷமில்லாத -**अर्थः** கர்த்தாவின் பிரயோஜனத்திற்கின்றிய சடங்கு.

**अपुष्प** वि பூவில்லாத. பூர்க்காத -**ष्पः** அத்தி மரம் -**फल, फलद** वि பூர்க்காமல் பலிக்கிற. பூ, பழங்களில்லாத -**लः**, **दः** பலா. அத்தி -**ष्पा** கொட்டைக்கரந்தைச் செடி.

**अपुस्** न ரூபம்.

**अपूपः** पु அடை. அப்பம். கோதுமை. தேன் கூடு

**अपूपीय, अपूप्य** वि அடைக்காக, அடை ஸம்பந்தமான **प्यं** மாவு

**अपूरणी** स्त्री இலவம் பஞ்சுச் செடி [குடியில்லாத

**अपूरुष** वि உயிரில்லாத. அசேதனமான. ஜீவனில்லாத. ஜனம்,

**अपूर्ण** न பூர்த்தி யில்லாத தொகை, அம்சம். -**काल** वि அகாலமான. -**लः** பூர்த்தியில்லாத காலம் -**ज** அகாலப் பிரஸவமான

**अपूर्व** वि முன்னிராத. புதிதான. அஸாதாரணமான. முன் பின் தெரியாத. முதலாயிராத. ஆவை முன்னேயுடைய -**र्वं** ஒரு காரியத்தின் நெடுநாள் கழிந்து வரவேண்டிய பயன். பாவ புண்ணியம். **र्वः** பிரம்மம் -**कर्मन्** न முன்னே தெரியாத எதிர் கால பயனை யுடைய சடங்குகள். -**पतिः** स्त्री முன்னே கணவனையுடையாத

வள். கன்னிகை. -वाद: பிரம்மவிசாரம் -विधि: புதுப் பிரமாண விதி. (कर्म, गुण, विनियोग प्रयोग மென 4)

अपूर्वता, त्वं न முன்னே யிருந்திராதது. ஒப்பில்லாதது. விசே ஷத்தன்மை பொருந்தியது.

अपूर्वेण अ முன்னிராத

अपूर्वीय त्रि ஒரு காரியத்தின் தூர பல ஸம்பந்தமான.

अपूर्व्य त्रि முன்னே ஒன்றுமிராத. முதலான. நிகரற்ற. முன்னே கேள்விப்பட்டிராத

अपृक्त वि (पृच्) சேர்க்கப்பட்டிராத. क्तः ஒரே எழுத்தை யுடைய உருபு. விகுதி. ப்ராதிசாக்கியத்தில் आ உப ஸர்க்கமும் उ ப்ரத்யயமும்

अपृगत् वि லோபமுள்ள. லோபியான. நிறப்பாத

अपृथक् -धर्मशील त्रि ஒரே மதமான -धी वि அத்வைதக் கொள் கையுள்ள. ஸர்வத்தையும் பிரம்மமாய் பாவிக்கிற

अपेत (अपे) त्रि விலகின. மறைந்துபோன. வழி தப்புகிற. இல்லாத -राक्षसी செடி விசேஷம்.

अपेक्ष 1 आ எதிர்பார்த்திரு. காத்திரு. இச்சி. தேவை யோடிரு. ஒன்றைக் கருது. ஆலோசி. (क्षित, क्षिन् वि)

अपेक्षा, क्षणं न இச்சை. தேவை. கவனிப்பு. ஸம்பந்தம். தாக்ஷிண்யம். லக்ஷியம் பண்ணுதல். ख्या ஆகாங்க்ஷை -बुद्धि: பேத புத்தியை உண்டுபண்ணுகிற பகுத்தறிவு

अपेक्ष्य, क्षितव्य, क्षणीय त्रि இச்சிக்கத் தகுந்த

अपेहिवाता स्त्री காற்றை விலக்கும் செடி விசேஷம்

अपोगंड: पु அங்கம் அதிக, குறைவுள்ளவன். குழந்தை. 16 வயது கடந்தவன். பயப்படுகிற. சுருங்கின. இளகின

अपोढ त्रि अपवह् தாதுவில்

अपोदक त्रि நீரில்லாத. நீருக்குக் கஷ்டப்படுகிற. நீர்த்திராத

अपोदकं न நீரைவிலக்குவதான விஷம்

अपोदकी, दिका स्त्री ஒரு கீரை. [தார்க்கி
अपोह् 1 उ ஒதுக்கு. அழி. குணப்படுத்து. விட்டுவிடு. மறு.
अपोहः, हनं தார்க்கிக்குந் தன்மையால் ஸந்தேகந் தீர்த்தல். ஆக்ஷேபிக்குந் தன்மை. நிச்சயம்.
अपोह्य, अपोहनीय वि ஒதுக்க, பிராயச் சித்தம் செய்துகொள்ள, தார்க்கித்து ஸ்தாபிக்கப்படவேண்டிய
अप्नस् न யாகம். ஹோமம்.
अप्नु वि சுறுசுறுப்பான प्नुः पु சரீரம். ஸோமம். யாக பசு
अप्नुर् पु ,, நீரைத்தரும் இந்திரன். அக்கினி
अप्नु(प्नू)र्य न நீரைத் தரல்.
अप्नोर्यामः, मन् पु ஜ்யோதிஷ்டோமக் கடைப் பாகம்.
अप्त्य वि வேலையாயிருக்கிற. குழந்தை.
अप्नः, अप्नस् न நீர். சொத்து. சடங்கு. சிசு. ரூபம். அடையத் தகுந்தது -स्थ மேற்பார்வை யிடுகிற -राजः தனவான். வேலையிடுபவன். [ஓர் ரிஷி
अप्नवान् वि ஸந்ததியுள்ள. ஏழையான नः கை. பிருகு வம்ச
अप्यः पु அஷ்டவஸுக்களிலொருவர்.
अप्य वि நீர் ஸம்பந்தமான. அடையத்தகுந்த. சுறுசுறுப்பான. யாக ஸம்பந்தமான.
अप्यच् உட்சென்ற. எட்டுகிற. மறைந்த.
अप्ययः पु (अपी) அணுகல். சேரல். வழிதல். லயித்தல்
अप्ययनं न (अपी) சேர்க்கை. புணர்ச்சி.
अप्यर्धं अ அருகே.
अप्यत अ உண்மையாய்
अप्रकंप वि அசைக்கமுடியாத. உறுதியான. (ஆக்ஷேபணைக்கு) ஸமாதானம் சொல்லமுடியாத.
अप्रकर त्रि நன்கு நடிக்காத.
अप्रकरक वि தெளிவாய்ச் சொல்லப்படாத விதியான

**अप्रकांड** वि அடியற்ற. ड: புதர்.
**अप्रकाश** वि மங்கலான अलु ஆத்ம, உள் ஜ்யோதியுள்ள. மறைந்து கிடக்கிற श: அபிஜித் நக்ஷத்திரம் (பூராடத்தின் கடைசி பாதமும் உத்திராடத்தின் முதற் பாதமுமானது)
**अप्रकृतिः** स्त्री புருஷன். விகிருதி. விகுதி. வேற்றுமை யுருபு.
**अप्रकृष्ट** वि இழிவான ष: காக்கை.
**अप्रगम** वि இதரர்களால் அனுஸரிக்கப்படவேண்டி மிக வேகமாய்ச் செல்லுகிற.
**अप्रगुण** वि மதிமயங்கின. சிதறின. விடுதியான
**अप्रचंकश** वि பார்க்கும் சக்தியில்லாத.
**अप्रचेतस्** वि அறியத் திறமையில்லாத. மூடனான.
**अप्रच्छेद्य** वि அறிவிற் கெட்டாத. [கிற
**अप्रच्युत** वि அசைக்கப்படாத. வரம்பு கடவாத. அனுஷ்டிக்
**अप्रजा** स्त्री குழந்தையில்லாமை, பிறக்காமை. குடியேற்றமின் [மை
**अप्रजस्, अप्रजात** वि பிள்ளையில்லாத ता மலடி
**अप्रजज्ञि** वि பிள்ளையில்லாத. அனுபவமில்லாத
**अप्रणीतं** न ப்ரோக்ஷணமாகாத வெண்ணெயை யுருக்கல்
**अप्रतर्क्य** वि காரண, ஊஹைறகளாலறிய முடியாத.
**अप्रता** वि மிகப் பெரிய. விசாலமான
**अप्रति** वि எதிரியில்லாத. தடுக்கமுடியாத. நிகரற்ற अ எதிர்க்க [முடியாமல்
**अप्रतिक्रूर** वि நம்புகிற. நம்பிக்கையுள்ள
**अप्रतिकर्मन्** वि ஒப்பற்றபராக்கிரமசெய்கைகளையுள்ள. தடுக்க, பரிகரிக்க முடியாத. [படிப்பட்ட
**अप्रतिगृह्य** वि யாரிடமிருந்து தானம் வாங்கக்கூடாதோ அப்
**अप्रतिघ** वि வெல்ல, தடுக்க முடியாத. கோபமில்லாத
**अप्रतितालः** पु ஸங்கீத தாள பேதம்
**अप्रतिद्वंद्व** वि போரில் எதிரியில்லாத. நிகரற்ற.

अप्रतिधुर वि ஜோடிக்குதிரையில்லாத.
अप्रतिपक्ष वि போட்டி, விரோதியில்லாத. வேறு விதமான
अप्रतिपत्तिः स्त्री இன்னது செய்யவேண்டியது என்று தெரியாமல் மதி மயங்கியிருத்தல். அறியுந்தன்மையில்லாமை. செய்யாமை. விட்டு விடல். ஸமயோசித புத்தியில்லாமை.
अप्रतिबंध वि தடுக்கப்படாத. (தாயாதிபோல்) பிறவிச் சுதந்தரத்தாலடையப்பட்ட
अप्रतिबल वि நிகரற்ற, வெல்லமுடியாத பலமுள்ள.
अप्रतिभ वि கூச்சமுள்ள. எளிதில் அறியாத. மந்த புத்தியுள்ள.
अप्रतिभा स्त्री நாணம். கூச்சம்.
अप्रतिभट वि போட்டியில்லாத. टः எதிர்க்கமுடியாத வீரன்
अप्रतियत्नः पु இயற்கையான. தனக்குத் தானே யான நிலை
अप्रतिरथ वि போட்டி வீரனில்லாத. நிகரற்ற. थः ஓர் ரிஷி. யுத்தப் பிரயாணம். ஸாமரிக்=த்
अप्रतिरव वि ஆக்ஷேபிக்க, சண்டையிடப்படாத
अप्रतिरूप वि ஒத்திராத. தகாத. நிகரற்ற ரூபமுள்ள. ஒப்பற்ற -कथा ஒப்பில்லாத வார்த்தை -वीर्य எதிர்க்க முடியாத பலம்
अप्रतिवीर्य वि ஒப்பிட முடியாத பலமுள்ள
अप्रतिष्ठ वि எறியப்பட்ட. பிரயோஜனமில்லாத. ष्ठः ஓர் நரகம். ष्ठं பிரம்மம் ष्ठितः விஷ்ணு
अप्रतिसंक्रम वि கலப்பில்லாத
अप्रतिसंख्य वि கவனிக்க, பார்க்கப்படாத.
अप्रतिहत वि குற்றமில்லாத. -नेत्र वि பலவீனமில்லாத கண்களையுடைய -नेत्रः ஓர் புத்த தேவன்
अप्रतीत वि எதிர்க்கப்படாத.
अप्रतुलः पु எடையில்லாமை. தேவை. அவசியம்
अप्रत्यक्षशिष्ट वि நன்கு போதிக்கப்படாத

अप्रत्यृत वि எதிர்க்கப்படாத
अप्रदुग्ध वि முழுதும் கறந்துவிடப்படாத
अप्रपदनं न கெடுதியான அடைக்கல ஸ்தானம்
अप्रभ वि மங்கலான. அற்பமான.
अप्रभूतिः स्त्री அற்ப முயற்சி
अप्रमय वि நசியாத. அளவிடமுடியாத
अप्रमाणविद् वि ஸரியாக ஸாக்ஷியை விசாரித்தறிய முடியாத
अप्रमायुक वि திடீரென்று நசித்துப்போகாத
अप्रमूर, मूर्च्छित वि அறிவுள்ள
अप्रमृष्य वि அழிக்க, தகைக்கமுடியாத
अप्रमेयं न பிரம்மம் -अनुभाव त्रि அளவில்லாச் சக்தி யுடைய -आत्मन् அறிய முடியாத ஆத்மாவான சிவன்.
अप्रमोदः, दं न துயரத்தைப் போக்க முடியாமை. உற்சாக [மின்மை.
अप्रयाणिः स्त्री (சாபத்தில் சொல்லுவது) மேற் செல்லாத. மேன்மையடையாத
अप्रयापणि, नि: स्त्री செழிக்க, மேற்செல்ல விடாத
अप्रयावं अ இடைவிடாமல். ஜாக்கிரதையாய்.
अप्रयुच्छत् अप्रयुत, अप्रयुत्वन् वि ஓயாத. தொடர்ச்சியான. ஜாக்கிரதையான
अप्रयुक्त वि (பதம் போற்) பிசகாய்ப் பிரயோகிக்கப்பட்ட. அபூர்வப் பிரயோகமான [யான
अप्रवर्तक, वर्तिन् वि ஜடமான. வேலை செய்யாத. தொடர்ச்சி
अप्रवीत वि அணுகப்படாத ता சினைப்பிக்க, நேசிக்கப்படாத.
अप्रवृत्तिः स्त्री உற்சாகமுண்டாக்காமை. மலக்கட்டு
अप्रवेद वि கண்டு பிடிக்கப்பட அரிதான.
अप्रशस्त वि ஒத்துக்கொள்ளப்படாத. கீழ்ப்படியாத. குறைந்த
अप्रसक्तिः स्त्री ஸம்பந்தம், பற்றின்மை. மிதம். மட்டு.

**अप्रसाह** वि அபசகுனங்களால் பாதிக்கப்படாத
**अप्रसिद्धपदं** न தற்காலத்தில் வழங்கப்படாத பதம்
**अप्रस्ताविक** (की स्त्री) वि பேசும் விஷயத்திற்கு ஸம்பந்தமிராத
**अप्रस्तुतप्रशंसा** स्त्री விஷயமாயிராதிருந்தாலும் விஷயத்தோடு ஸம்பந்தப்பட்டிருக்கும் ஓர் அலங்காரம்.
**अप्रहत** वि விள்ள, உழ, ஸலவை செய்யப்படாத.
**अप्रहन्** वि அழிக்காத. உதவி புரிகிற.
**अप्रहित** वि அனுப்பப்படாத. எதிரிகளால் தகைக்கப்படாத
**अप्राप्त** वि விவாஹ வயதில்லாத. -कालं விஷயத்தைப் பற்றின ஒழுங்கினமான விசாரம் -प्रापक वि வேறு விதமாய்க் குறிக்கப் பட்டிராததினர்த்தத்தையுடைய. (காளை போல்) பழக்கப்படாத
**अप्रामि** वि ஹிம்ஸிக்க, கொடுக்கப்படாத
**अप्रायत्यं** न அசுத்தம். அடக்கி ஆளமுடியாமை.
**अप्रायु** वि மேன்மேற் செல்லாத. ஓயாத.
**अप्रायुस्** கெட்ட, குறைந்த ஆயுள், பலமுள்ள
**अप्रिया** स्त्री மீன் வகை. -भागिन् वि துரதிருஷ்டமான
**अप्रेतराक्षसी** स्त्री செடி விசேஷம்.
**अप्व** वि அடையமுடியுமான स्त्री நோய். ஆபத்து. தொண்டை
**अप्सः**, प्सा पु நீரைக் கொடுக்கிற. நீரின் ஸாராம்சமான. அழிக்காத प्सं ரூபம். அழகு.
**अप्सरः** पु ஜலஜந்து.
**अप्सरस्** स्त्री இந்திரன் வேலைக்காரிகளும் கந்தர்வர்களின் மனைவிகளுமான ஆகாய வாஸ ஸ்திரீகள். இவர்களுக்கு அமானுஷமான சக்தியுண்டு. -तीर्थं அப்ஸரஸ்கள் நீராடும் ஓர் புண்ணிய தீர்த்தம் -पतिः இந்திரன் सा [தேவதாசிகள்
**अप्सरा** स्त्री அப்ஸரஸ் பேதம்
**अप्सव** वि நீரின் ஸாரம் (சுத்தி) இல்லாத. நீரைக்கொடுக்கிற.

ரூபத்தையுடைய
अप्सव्य वि நீரிலிருக்கிற. நீருக்குத் தகுதியான
अप्सस् न ரூபம். அழகு. அழகான வஸ்து (கன்னம்)
अप्सु वि அழகு, உருவமில்லாமை -क्षित् தேவதை -जं தாமரைப்பூ -जाः, योनिः குதிரை. பிரம்பு. நாணல் -जित् ஆகாச அஸுரர்களை ஜயித்தல் -मत् वि நீரிலுடையதை யுடைத்தாயிருக்கிற. (மின்னலைப்போல்) நீரில் தன் தன்மையை இழவாத. போதுமான நீரைப் பெறுகிற
अफल वि மலடான அல வீணன. ஆண்மைத்தனம் இழக்கச் செய்யப்பட்டிருக்கிற. (கால் பிடிக்க,) விரையடிக்கப் பட்டிருக்கிற. लः வெள்ளாடு. செடிவிசேஷம் ला ஓர் கொடி. தாழை. लं காற்றில்லாத. கலப்பை.மோழி-आकांक्षिन् ; प्रेप्सु वि பல உத்தேசமின்றிச் செய்பவன்
अफेनं न அபினி
अब् । प போ. आ சப்தி
अबद्धक वि உளரலான -मुख वि திட்டுகிற. தூஷிக்கிற.
अबध वि காயப்படாத. கொல்லமுடியாததான धः சாவில்
अबंध्र वि பந்தங்களிராத. வெளியே விழுகிற. [லாமை
अबंधु, बांधव वि துணையில்லாத. தனித்த. உடைத்தாயிராத. -कृत् वि துணைவர்களை எதிர் பார்க்கச் செய்கிற -कृत वि சுற்றத்தாரால் வளர்க்கப்படாத. தானே வளருகிற.
अबल वि ரக்ஷிக்கப்படாத ला மாவலிங்கைச் செடி. ஸ்திரீ = -जनः -अबलः சிவன்.
अबलास वि குறையாத. க்ஷயமடையாத.
अबल्यं न பலக் குறைவு. நோய்
अबाधा स्त्री முக்கோணத்தின் நீண்டிருக்கும் அடிபாகம்.
अबिंधन. पु (கடல் நீரையுட்கொண்டிருக்கும்) வடவானலம்.
अबिभीवस् वि பயமில்லாத

अबुध्, ध वि மூடமான. पु மூடன். स्त्री அறியாமை.
अबुध्, बुध, घ्न वि வேர், அடியற்ற घ्नं ஆகாசம்
अबुध्य वि அறிந்துகொள்ள, எழுப்பப்படமுடியாத
अबोध वि மதிமயங்கின -गम्य वि அறியமுடியாத [பிராத.
अबोध्य, बोधनीय वि அர்த்தமாகாத. எழுப்பப்படவேண்டி
अब्ज वि நீரிலிருந்துண்டான. ब्जः சங்கு. சந்திரன். கற்பூரம். (ஆற்றலரி) நீர்க்கடம்பு மரம். தேவ வைத்தியரான தன்வந்தரி. பிரம்மா. -ब्जम् தாமரை. உப்பு. நூறு கோடி. -ब्जा (ब्जाः) पु நீரிலுண்டானது. स्त्री முத்துச் சிப்பி. ஒருவிதக்கள் -कर्णिका தாமரைமணி-जः, योनिः விஷ்ணுவின் நாபிக்கமலத்தினின்றுமுண்டான பிரம்மா -बांधवः தாமரைக்குத் தோழனான ஸூரியன் -भोगः தாமரைக் கிழங்கு. சோழி -वाहनः நெற்றியில் சந்திரனை தரிக்கும் சிவன் -वाहना தாமரைப் பூவை ஆஸனமாகவுடைய லக்ஷ்மி -स्थितः பிரம்மா -हस्तः ஒரு கையில் தாமரையையுடைய ஸூரியன் -हस्ता லக்ஷ்மீ
अब्जारिः पु சந்திரன்
अब्जिनी स्त्री தாமரைக் கொடி, ஓடை, பூக்குவியல் -पतिः [ஸூரியன்
अब्जस् न ரூபம். அழகு.
अब्जित् वि நீரை ஜயிக்கிற.
अब्द वि நீரைத் தருகிற ब्दः மேகம். ब्दं வருஷம். கோரைக் கிழங்கு. ஓர் மலை. கண்ணாடி. குடம். ஸூரியன். போகக் கஷ்டமான இடம். अर्धं பாதி வருஷம் -वाहनः சிவன் -शतं நூறு வருஷம் -सारः ஓர் கற்பூரம்.
अब्दया अ நீரைத்தர இச்சித்து
अब्दिः पु மேகம். -भृत् மேகங்களையுடைய. நீரைத் தருகிற.
अब्दिक वि வருஷத்திற்குரிய
अब्दुर्गः पु நீருக்குள் கோட்டை. ஏரியால்சூழப்பட்டிருப்பது

अब्देवताक, दैवत वि நீரைத் தெய்வமாகவுடைய, துதிக்கிற
अब्धिः पु கடல். ஜலாசயம். ஏரி. கணிதத்தில் 7 அல்லது 4க் குறிப்பது स्त्री ஆறு -अग्निः வடவானலம் -कफः, फेनः நுரை. பொங்குதல். கணவாய் மீனின் எலும்பு -जौ அச்வினீ தேவதைகள். -जः கற்பக விருக்ஷம். ராகு. ஸூர்யன் -जा கள். சாராயம். லக்ஷ்மீ -जं உப்பு -झषः சுறுமீன் द्वीपा பூமி. திவு -नगरी துவாரகை -नवनीतं அமிருதம் -नवनीतकः கடலின் வெண்ணெயான சந்திரன் -पल्लवः பவழம் -मण्डूकी முத்துச்சிப்பி -मेखला பூமி -वधू स्त्री ஆறு -शयनः விஷ்ணு -सारः ரத்தினம்
अब्भक्ष वि நீரில் உயிரை வைத்திருக்கிற क्षः பாம்பு
अब्भक्षणं न நீரையே உணவாகவுடைய ஓர் விருதம்
अब्रह्मण्य वि பிராம்மணனுக்குத் தகாத. பிராம்மணர்களுக்கு விரோதமான ण्यं பிராம்மணன் செய்யக் கூடாத காரியம். நாடகத்தில் பிராம்மணன் சொன்னால் 'உதவிக்கு வா, காப்பாற்று. இத்தொழில் செய்யப் பட்டிருக்கிறது. தூறிப்பலியாதே' என்பதைக் காட்டும்.
अब्रह्मन् वि பக்தியோடு கூடியிராத. பாரமார்த்திக அறிவில்லாத. பிராம்மணர்களிடமிருந்து பிரிக்கப்பட்ட. பிராம்மணர்களில்லாத -विद् वि பிரம்மத்தை யறியாத.
अब्राह्मण वि பிராம்மணர்களிராத, தவிர்த்து.
अ(ब्र)ब्राह्मण्यं न பிராம்மணனது அனுஷ்டானங்களை விடல்
अब्भ्रिः स्त्री காண்டி. ஓர் பலகாரை. [தித்தல்
अब्रूकृतं न அப்ரூ என்று உதடுகளை மூடிக்கொண்டு சப்
अब्लिंगं न ஜலஸ்தோத்திரமான ரிக், சுலோகம்.
अभक्त वि அங்கீகரிக்க, உண்ணப்படாத. क्तं உணவல்லாத छंदस्, रुच्च உண்ண இச்சையில்லாமை.
अभंगः पु பதங்களைப் பிரிக்காமலே வேறர்த்தமுதிக்கும் சிலே

ஷாலங்கார விசேஷம். ஸங்கீத தாளபேதம் —-लीलः -

**अभयः** पु பிரம்மம். பிரம்ம க்ஞானம். சிவன். ஸர்வ சொத்தையுமிழந்தவன். தைரியமாய் சாஸ்திர நியமங்களை அனுஷ்டிப்பவன். பிரயாணத்திற்குரிய ஓர் லக்கினம்

**अभया** स्त्री கடுக்காய் மரம். துர்க்கையின் ரூப விசேஷம்

**अभयं** न பயமின்மை. பத்திரமான நிலைமை. ஓர்யாகசிக். வெட்டிவேர். விலாமிச்சைவேர் -गिरिवासिन् पु பத்திரமான மலையில் வஸிப்பவன். காத்யாயனரின் சிஷ்யர்கள். -डिंडिमः பாது கார்க்கப் பிரகடனம். யுத்தத்தப்பட்டை -दः ரக்ஷகன். விஷ்ணு -दक्षिणा, (प्र)दानं, वाच् காப்பாற்றுவதாக வாக்களிப்பு -पत्रं காப்பாற்றுவதாக எழுத்துமூலம் -मुद्रा தந்திர சாஸ்திர முத்திரை விசேஷம். -याचना ரக்ஷிக்கக் கேட்டல் -सनि वि பாதுகாப்பளித்தல்.

**अभवः** पु இல்லாமை. முக்தி. பிரளயம். திரிமூர்த்தி

**अभवत्** वि இல்லாத -अभवन्मतयोगः, संयोगः அலங்கார சாஸ்திரத்தில் கவனப் பிழை விசேஷம்.

**अभस्त्रका, अभस्त्रिका अभस्त्राका** स्त्री கெடுதியான துருத்தி. துருத்தியில்லாத சிறுமி.

**अभाव** वि ஆசையில்லாத चः இல்லாமை. தேவை. சாவு. சூனியம். -संपत्तिः स्त्री பொய்யான ஆரோபணம்.

**अभावनीय** वि மனதிற்கெட்டாத.

**अभावयितृ** वि அறியாத. ஊஹிக்காத.

**अभाविन्** अभाव्य वि ஸம்பவிக்க, இருக்கப் போகாத

**अभाषितपुंस्कः** पु நித்திய ஸ்திரீலிங்கம்.

**अभि** अ சுற்றிலும். கு. குறித்து. நோக்கி. எதிராக. மேலே. குறைக்கே. அதிகமாய். அருகே. எதிரே. ஒன்றின் பின்னொன்றாய். சேர்ந்து ஒன்றின் விஷயமாய். உள்ளே.

अभि पूजाभृशार्थेच्छासौम्याभिमुख्यसौरूप्यवचनाहारस्वाध्यायेषु

அர்த்தங்களுள்ளன. अभिवादनं என்பதில் மரியாதையும் (पूजा), अभिनिवेशः என்பதில் மிகவும் (भृशे) अभिलाषः என்பதில் (इच्छायां), अभिकः என்பதில் பிரியம் (सौम्ये, माधुर्ये), अभ्यग्नि என்பதில் எதிராக (अभिमुखं) अभिरूपं என்பதில் (सौरूप्यं), अभिधानं என்பதில் (वचने), अभ्यवहृ என்பதில் (आहारं), अभ्यस् என்பதில் (स्वाध्याय) மும் உதாஹரணங்களாகும்.

अभि(भी)क वि காமாதுரமுள்ள. कः காமுகன்.

अभिकम् 10 आ மோகங்கொள். ஆசைப்படு.

अभिकरणं न செய்வித்தல். உச்சாடனம். மந்திரோச்சாரணம்

अभिकंप् 1 ஆபலமாய்க்குலுக்கு णिच् மோகிக்கச்செய். மயக்கு

अभिकांक्ष् 1 ஸ இச்சி. யாசி. பிரார்த்தி कांक्षा இச்சை

अभिकामः न நேசம். இச்சை मं अ இச்சையுடன்

अभिकामिक वि தன்னிஷ்டமான

अभिकृ 8 उ செய். ஒன்றிற்க்காகச் செய். பெறு.

अभिकृतिः स्त्री 100 அக்ஷரங்களுள்ள விருத்த விசேஷம்

अभिकृत्वन् वि पु மாயையான त्वा स्त्री மாயாவி.

अभिक्रतु वि மிகச் சக்தியுள்ள.

अभिक्रन्द् 1 प கூச்சலிடு. கர்ஜி. கனை -क्रंद. पु

अभिक्रम् । उ 4 प நெருங்கு. திரி. தகை. தொடங்கு. णिच् கிட்டே கொண்டுவா (क्रमणं. क्रांतिः)

अभिक्रमः पु தொடங்கப்படும் தொழில். தைரியமான யுத்தப் பிரயாணம். மேலுக்கேறல்

अभिक्रांतिन् वि வேலை தொடங்கின. கை தேர்ந்த

अभिक्रुश् 1 प ஒன்றைக் குறித்துக் கூச்சலிடு. திட்டிக் கூவு. குறித்து அழு. क्रोशः क्रौशकः தூதன்

अभिक्षत्तृ वि கொல்லுபவன் क्षद वि கேளாமலே கொடுப்பவன்

अभिक्षिप् 6 प நோக்கி எறி (சாட்டியால் அடியை). தூன்

புறத்து. மேம்படு. (क्षिप्त वि)
अभिक्ष्ण अ அடிக்கடி. எப்பொழுதும். மிகவும் स्त्री புத்தி. காந்தி. கீர்த்தி. பெயர். கூப்பிடல். தோற்றம். சமா னார்த்த) பதம்.
अभिख्या 2 प பார். கருணையோடு பார். णिच् அறிவி.
अभिख्यात वि அறிவிக்க, கொண்டாடப்பட்ட.
अभिख्यातृ वि மேற்பார்வை யிடுகிற.பார்க்கிற ख्यान् न கீர்த்தி
अभिगम् 1 प நெருங்கு. தொடர். எதிர்படு. புணர். செய்ய ஏற்றுக்கொள்.பங்குகொள்.கதிக்கு ஆளாகு. அறிணிச் அடைவி.விவரி.கற்பி.(गंतृ, गम्य वि गमनं,गमः गामिन् वि)
अभिगर्ज् 1 प குறித்துத் கூவு. கூக்குரலிடு (गर्जनं,गर्जित)
अभिगामुक वि அழைக்கிற. அணுகச் செய்கிற
अभिगुप् 10 प ரக்ஷி. பாதுகா. ஒளி. மறை गुप्तिः स्त्री गोप्तृ
अभिगूर्त वि (गुर् ) இணங்கின. ஸமர்ப்பிக்க, விதிக்கப்பட்டிருக்கிற. (துதியோடு) சொல்லப்பட்ட
अभिगूर्तिः स्त्री ஸ்துதி.ஸதா இச்சித்தல், சிந்தித்தல். முயற்சி
अभिगृ 9 उ இணங்கி ஸ்துதி. அங்கீகரி गरः துதி
अभिगै । प குறித்துப் பாடு. கீதத்தால் நிரப்பு, சப்தி. பாடிக் கொண்டாடு. சம்மதி गेय, णु वि பாடுகிற
अभिग्रह् 9 उ கைப் பற்று.மேல் விழு. பெறு (விருந்தாளியை) ஏற்றுக்கொள். (கைகளை) ஒன்று சேர். மடி. பலித மாக்கு. णिच् பிடி.
अभिग्रहः पु கொள்ளையிடல். எதிர்த்தல். போருக்கழைத்தல். பிராது. அதிகாரம்.
अभिग्रहणं न கொள்ளை. எதிராய்த்திருடுதல் [தல்
अभिघर्षणं न உரைத்தல். தேய்த்தல். பேய்பிடிக்கப்பட்டிருத்
अभि(भी)घातः पु(हन्) அடித்தல் அல உதை.மோதல். திருப்பி யடித்தல். தடுத்துவிடல். நிர் மூலம் செய்தல். (வேத

த்தைப்போல்) கடினேச்சாரணம் = घातिन् पु वि
**अभिघारः पु** நெய், ஹோமத்தில் ஹவிஸ்ஸுக்கு நெய் சேர்
**अभिघृ णिच्** சொட்ட விடு. தெளி घारणं [த்தல்.
**अभिघ्रा । प** முகர்ந்துப்பார். (முத்தமிடுவதில் போல்) மூக்கை இன்னொருவனது நெற்றியண்டை கொண்டுபோ
**अभिचक्ष् 2 आ** பார். கூப்பிடு. பெயராலழை. கருணையோடு பார். கொடுஞ்சொற்களால் தாக்கு.
**अचिचक्षणं न** தடுத்துக்கொள்ள உபாயம். (மந்திரத்தால்) பரிஹாரம். णा கருதுதல். ஸூசிப்பித்தல்.
**अचिचर् । प** குற்றம் புரி (கணவன், மனைவிபோல்) விச்வாஸ மற்றிரு. மந்திரத்தால் மயக்கு. அடை
**अभचर. पु** தொடருபவன். வேலைக்காரன்
**अभिचरणं न** மந்திரபலத்தால் கொடுங்கார்யங்களைச் செய்தல்
**अभिचरणीय त्रि** மந்திரோச்சாடனம் செய்யத்தகுந்த
**अभिचरितुः स्त्री** மயக்கல்
**अभिचारः पु** பேயோட்டல், சூன்யம் வைத்தல் முதலிய கொடுங்கார்யம் மந்திரத்தால் செய்தல். கொலை. -कल्पः உச்சாடன ஸம்பந்தமான ஓர் அதர்வணவேத பாகம் -ज्वरः மாயா மந்திரத்தாலேற்பட்டஜ்வரம் -मंत्रः உச்சாடனமந்திரம் - यज्ञः, होमः உச்சாடன ஹோமம்.
**अभिचारक, चारिन् वि** ஏவல் कः, री மாயாவி
**अभिचैद्यः पुं** சிசுபால அரசன்.
**अभिच्छाय वि** நிழலிலிருக்கிற. நிழலுக்காக अ நிழலில்.
**अभिज्ञ वि** சுற்றிலும் உண்டு பண்ணப்பட்ட.
**अचिजन् 4 आ** (உயர்குடியில்) பிறந்திரு. ஒருவனுக்குப்பிறந்திரு. மறுபடியும் உண்டாகு. ஆகு. மாற்றப்பட்டிரு. பிறவியுரிமையாலடை.
**अभिजनः पु** குலம். ஸந்ததி. உயர் பிறவி. முன்னோர். பிறந்த

பூமி. கீர்த்தி. குலத்தலைவன், பூஷணம். பரிவாரம். குலப்பெயர்.

**अभिजनन** (नी स्त्री) वि ஒருவனின் உயர் பிறவியாகிற.

**अभिजनितुः** स्त्री பிறந்த. உண்டு பண்ணப் பட்ட

**अभिजात** वि ஒன்றிற்குப் பிறந்த. சுற்றிலும் உண்டு பண்ணப் பட்ட. பயனுய் வந்த. இயல்பான. பிறந்த. உண்டான. உயர் பிறபியான. தகுந்த. பொருத்தமான. அழகான. பூஜிக்கத் தகுந்த. ஸாங்கமாய் வேத மோதின तं உயர் பிறவி अ மேன்மையாய்.மரியாதையாய். வணக்கமாய்.

**अभिजातिः** स्त्री உயர் பிறவி, குலம்.

**अभिजि** । प முழுதும் வெல். ஜயத்திலடை. स ஜயிக்க இச்சி. (जयः जितिः வெற்றி)

**अभिजित्** त्रि பூர்ண வெற்றியுள்ள. பூர்ண ஜயமடைவதில் உத விபுரிகிற. அபிஜித்நக்ஷத்திரத்தில் பிறந்த.पु விஷ்ணு. அதிராத்திர, கவாமயன யக்யங்களி னங்கம். பிரயா ணத்திற்கனுகுணமானஓர் லக்கினம். ஓர் நக்ஷத்திரம். பகலின் எட்டாவது முஹூர்த்தமான நடுப்பகலின் முன் பின் நாழிகைகள் = -मुहूर्तः. (अप्रकाशत्तில்)

**अभिजितः** ஓர் நக்ஷத்திரம். அதன் முஹூர்த்தம். ,,

**अभिजुष्** 6 आ போய்ப்பார். திருப்தியடைந்திரு -ष्ट वि

**अभिज्ञ** त्रि அறிந்திருக்கிற. பரிசயம், அனுபவமுள்ள. கை தேர்ந்த. ज्ञा ஞாபகம் பிடித்துக்கொள்ளல். ஞாபகம், நினைவூட்டிக்கொள்ளல். வேண்டியஉருவமெடுத்தல். எவ்வளவு தூரத்திலிருப்பதையும் கேட்டல், பார்த் தல், ஜனங்களின் மனதில் புகுதல், அவர்களின் முன் நிலைமைகளை அறியும் தைவசக்தி.

**अभिज्ञा** 9 उ ஞாபகப்படுத்திக்கொள். அறி. தெரிந்திரு. ஆலோசி. ஒத்துக்கொள். ஞாபகம்வை (ज्ञात वि)

**अभिज्ञानं** न ஞாபகம். அறிவு. நிச்சயக்ஞானம்.ஞாபகப்படுத்தும் அடையாளம். சந்திர களங்கம் -**आभरणं** ஞாபகப் படுத்தும் நகை,மோதிரம் -**पत्रं**யோக்கியதாபத்திரிகை. சிபார்சுக்கடிதம் -**शाकुंतलं** காளிதாஸனின் ஓர் நாடகம். இதில் அடையாள மோதிரத்தால் சகுந்தலையை துஷ்யந்தன் அறிகிறான்

**अभिज्ञु** वि முழங்கால்களில், முழங்கால் வரையில் வணங்குகிற.

**अभिडीनं** न நோக்கிப்பறத்தல்

**अभितड्** 10 प அடி. உதைத்துத் தட்டு अल காயப்படுத்து. பிம்பத்தின் பெரும் பாகத்தை மறை. ताडनं.

**अभितप्** 1 प சூட்டால் பிரகாசிக்கச் செய். எரி. நெருப்பு மூட்டு. துன்புறுத்து. क அதிகத் துயரடை णिच् துன்பப்படுத்து. (तप्त वि तापः).

**अभितरां** अ சற்றுச் சமீபத்திலிருக்கிற.

**अभितस्** अ சுற்றிலும். அருகே. நோக்கி. எதிரே. இருபக்கங்களிலும். முன்னேயும் பின்னேயும். முழுதும். விரைவில் -**अस्थि** वि எலும்புகளால் சூழப்பட்ட -**भाविन्** वि சுற்றியிருக்கிற -**रात्रं** இரவினருகே. முந்தி பிந்தி.

**अभिताम्र** वि மிகச் சிவந்த.

**अभितृप्** 10 प திருப்தி செய். இளைப்பாற்று तर्पणं.

**अभिदक्षिणं** अ வலப்பக்கமாக.

**अभिदापनं** न யானைகளால் மிதிக்கப்படும் ஜந்து.

**अभिदृश्** 1 प பார். णिच् குறி. காட்டு.தோன்று.எதிரே வா क பார்க்க, நினைக்கப்பட்டிரு. दर्शनं

**अभिद्यु** वि விண்ணுலகம் நோக்கிய. பரலோகமாய். பிரகாசமான. द्युः பாதி மாதம்.

**अभिद्रु** 1 प நோக்கி யோடு. படையெடு. மேலே வளர், படர். துன்பப்படுத்து. மேலே ஓடு. நேரிடு. णिच् தோற்க

டித்து ஓடச் செய் (द्रवः द्रवणं) (द्रुत वि).
अभिद्रुह् 4 प வெறு. பகை. சதி யோசனை செய் द्रोहः பழி.
अभिद्रुह् वि பகைக்கிற. ஹிம்ஸிக்கக் கருதுகிற.
अभिधर्मः पु பௌத்தமத முக்கியக் கொள்கை.
अभिधर्षणं न பேய் பிடித்துக் கொள்ளல். அமுக்கல். மோதல்.
अभिधा 3 उ சொல். குறி. பெயரிடு. கூப்பிடு. கட்டு. சமத்து.
அறி. பெறு. தாங்கு. குறித்துச்செல்.
अभिधा त्रि பெயரிடுகிற. துதிக்கப்பட்ட. स्त्री பெயர். பட்டம்.
சப்தம். பதத்தின் சரியானபாவம், சக்தி. பதார்த்த
ங்களின் ஸம்பந்தம். -ध्वंसिन् त्रि பெயரை இழக்கிற
-मूल त्रि பதத்தின் மூலார்த்தத்தை ஆதாரமாகவுடைய
अभिधानं न சொல்லல். பெயரிடல். பட்டம். சொல். வார்த்தை.
அகராதி. குணம், பொருளுள்ளபதம் -चिन्तामणिः ஹே
மசந்திரரின் நிகண்டு -माला நிகண்டு -रत्नमाला ஹலாயு
தரின் நிகண்டு.
अभिधानकं न சப்தம். குரல்.
अभिधानी स्त्री கயிறு [லுகிற.
अभिधायक(यिका स्त्री)धायिन् त्रि பெயரிடுகிற. குறிக்கிற. சொல்
अभिधाव् 1 प நோக்கியோடு. துரத்து. மேலேவிழு. தகை.
अभिधित्सा स्त्री சொல்ல விரும்புதல். கட்டளை. [धायक त्रि
अभिधृष्णु त्रि வெல்லுகிற.
अभिधेय त्रि சொல்ல, குறிக்க, பெயரிடவேண்டிய. यं கருத்து.
அர்த்தம். வஸ்து. விஷயம். பத உண்மைப்பொருள்.
குலப் பெயர் [स्त्री ध्यानं)
अभिध्यै 1 प தியானி. பிறர் பொருளிலாசைப்படு. இச்சி (ध्या
अभिनंद् 1 प ஒன்றிற்காக சந்தோஷி. கொண்டாடு. வாழ்த்து.
கூடிக்களி. மெச்சு. புகழ். இச்சி. ஆசிர்வதி. வரவேற்று
णिच् சந்தோஷப்படுத்து. नंदनं கூடிக்களித்தல்

अभिनन्द वि உற்சாகத்தை, களிப்பை யுண்டு பண்ணுகிற
अभिनंदः पु பிரம்மம் दा இச்சை. ஸந்தோஷம் (नंद्य नंदनीय वि)
अभिनन्दिन् वि (स-अ.) தில் சந்தோஷப்படுகிற.
अभिनभः, नभ्यं अ மேகத்தை, ஆகாயத்தைக் குறித்து
अभिनम् । प வணங்கு. வளை. ஒருவனுக்காகத் திரும்பு.
अभिनम्र वि மிகவும் வணங்கின, வளைக்கப்பட்ட
अभिनयः पु ஜாடை காட்டல். நாடகத்தில் உடம்பை சமயோசிதமாய் நடை, யுடை, பாவனைகளால் அசைத்து நடித்தல். அபிநயம். -आचार्यः கூத்து வாத்தியார் -विद्या கூத்து. நாட்டிய சாஸ்திரம்.
अभिनव वि மிகப்புதிதான, யௌவனமான, துளிரான, சிறிதான. அனுபவமில்லாத. वः முகஸ்துதி. இச்சகம் उद्भिद्, दः புது அரும்பு, முளை -चन्द्रार्धविधिः அமாவாசையில் செய்யப்படும் ஓர் சடங்கு -तामरसं புதிதாய் மலர்ந்த தாமரை. ஓர் விருத்தம் -यौवन, वयस्क वि மிக இளமையான -वैयाकरणः புதிதாய் வியாகரணம் படிக்க முயன்றவன். [ஜன்னல் கதவு, இலை.
अभिनहनं न (नह्) (கண்ணின் மேல்) கட்டு. மறைவு. திரை.
अभिनिधन वि சாக, நசிக்கப்போகிற नं மரணகாலத்தில் சொல்லப்படும் ஸாமகானம். [லும் உச்சாரண விசேஷம்.
अभिनिधानं न தொடுத்தல். அக்ஷரத்தை அழுத்திச்சொல்
अभिनियुक्त वि வேலையாயிருக்கிற.
अभिनियोगः पु நெருங்கிய ஸம்பந்தம். கவனிப்பு.
अभिनिर्मुक्त वि அஸ்தமிக்கும் ஸூர்யனால் விடப்பட்ட. அஸ்தமனத்தில் கடமைகளை விட்டு உறங்குகிற क्तः पु
अभिनिर्याणं न புறப்படல். யுத்தப்பிரயாணம்.
अभिनिवर्तः पु நோக்கித்திரும்பல். அடிக்கடி திரும்புதல்
अभिनिर्वृत्तिः स्त्री முடித்தல். பூர்த்தி.

**अभिनिविश्** 6 आ நுழை. பொருந்து. அடு. णिच् அடைவி
அல பொருத்து. (மனதைத்) திருப்பு.
**अभिनिविष्ट** त्रि வேலையிலிருக்கிற. உறுதியாய் நாட்டப்பட்ட.
கவனிப்பான. தீர்மானிக்கப்பட்ட. விபரீதபுத்தியுள்ள.
நன்கு படித்த. கைதேர்ந்த. ष्ट ஊக்கம். விடாமுயற்சி
**अभिनिविष्टता** स्त्री நிச்சயபுத்தி. பிறர்நிந்தை, ஏளனங்களைக்
கவனியாது காரியத்திலேயே கண்ணாயிருத்தல்.
**अभिनिवेशः** पु நெருங்கின ஸம்பந்தம். பக்தி. உண்மையான
அபிலாஷை. கார்ய நிச்சயம். விடாமுயற்சி. கருத்து.
ஓதுதல். யோகத்தில் மரணத்திற்காகப் பயப்படும் ஓர்
வித அக்ஞானம்.
**अभिनिवेशिन्** त्रि பற்றின மனதை நாட்டின. மனோ நிச்சயம்.
**अभिनिष्कारिन्** त्रि முழுதும்செய்கிற.கெடுதியைநினைக்கிறவன்.
**अभिनिष्क्रमणं** न புறப்படல். ஸன்னியாசியாதல்.
**अभिनिष्टानः** पु லோபிக்கும் சப்தம். எழுத்து. :விஸர்க்கக்குறி
**अभिनिष्पतनं** न (पत्) பாய்ந்து புறப்படல். பீறிட்டுவரல்.
**अभिनिष्पत्तिः** स्त्री முடிவு. பூர்த்தி [டைவி.
**अभिनिष्पद्** 4 आ வந்துசேர். நுழை ஆகு. தோன்று णिच् அ
**अभिनिह्नवः** पु மறுத்தல். ஒளித்தல்.
**अभिनी** । प அடைவி. நடி. சைகைகாட்டு. உதாரணமாய்ச்
சொல். கழிந்து போகவிடு. [தகுந்த.
**अभिनीत** त्रि நன்கு செய்ய,அலங்கரிக்கப்பட்ட.கோபமுள்ள.
**अभिनीतिः** स्त्री சைகை. ஜாடை. சிநேகம். பொறுமை.
**अभिनेय, नेतव्य** त्रि நாடகமாய் நடிக்கத்தகுந்த.
**अभिनेतृ** पु கூத்தாடி. त्री स्त्री நடிப்பவள்
**अभिन्यासः** पु ஒருவித ஜ்வரம்.
**अभिपत्** । प பறந்தணுகு. அவசரப்படு. தகை. கீழே விழு.
உட்செல். பறத்தலில் முந்து.குறுக்கிடு. பின் வாங்

கிக்கொள் 4ஆ யஜமானனுயிரு. णिच् உள்ளுக் கெறி,
अभिपद् 4 आ நெருங்கு. கவனி. யோசி. உதவு. பூஜி. அனு ஷ்டி. பெறு. வஹி. தரி. கைப்பற்று पत्तिः முடித்தல்
अभिपद्म वि மிகவும் அழகான.
अभिपन्नत वि சரணமடைந்த. துர்க்கதிக்காளான. ஏற்றுக் கொள்ளப்பட்ட, ஒதுக்கப்பட்ட. இறந்த. குற்றம் செய்த.
अभिपरिप्लुत वि வெள்ளத்தினால் முழுகிப் போன. அல முழுகச் செய்யப்பட்ட. தகைக்க, பாதிக்கப்பட்ட.
अभिपित्वं वि வந்த. அடைந்த. (சத்திரத்தில்) இரவு தங்குகிற. வருங்காலம். நாளின் முடிவு. காலை ஹோமம்.
अभिपुष्प वि பூக்களால் மறைந்திருக்கிற पुं சிறந்த பூ
अभिपूज् 10 प பூஜி. இணங்கு पूजनं ஸம்மதித்தல். பூஜை
अभिपूजित वि நன்றாகப் பூஜிக்கப்பட்ட तः அபிஜித்நக்ஷத்திரம்.
अभिपूर्वं अ ஒன்றின்பின்னொன்றாய். தொடர்ச்சியாய்
अभिपॄ 3. 9 प நிரப்பு क. நிறைந்துபோ. णिच् நிரப்பு. பார மேற்று. தானமளி. ஆட்கொள் पूरणं
अभिप्रज्ञा स्त्री ஸதா நினைத்தல்.
अभिप्रणयः (प्रणी) पु அன்பு. தயை. சமாதானம்.
अभिप्रणयनं न மந்திர பூர்வகமாய் அர்ப்பணம் செய்தல்.
अभिप्रतप्त वि பழுக்கக் காய்ச்சப்பட்ட. உலர்ந்து போன. வலி, ஜ்வரங்களால் இளைத்துப்போன.
अभिप्रथनं न மேலே பறப்பல், எறிதல்.
अभिप्रभुर् स्त्री அக்கினியின் நாக்கு. முழுதும் உயர்த்தப்பட்ட
अभिप्रवर्तनं न மேன்மேற் செல்லுகிற. பிரவர்த்தித்தல். வியர்வைபோல் வெளிவரல்
अभिप्रवृत् । आ நெருங்கிவிடு. ஒன்றில் விழு. பரிசயமாகு.

णिच् நோக்கி, மேலே உருளு, சுழலு.

अभिप्रवृत्त वि மேலே செல்லுகிற. நேரிடுகிற.வேலையிலிருக்கிற

अभिप्रश्निन् वि பல கேள்விகள் கேழ்க்க இச்சிக்கிற.

अपिप्रीतिः स्त्री இச்சை. சந்தோஷம்.

अभिप्राय वि (प्रे) நெருங்குகிற. यः தாத்பர்யம். கருத்து. அர்த்தம். அபிப்பிராயம். இச்சை. ஸம்பந்தம். விஷ்ணு

अभिप्रेत वि (प्रे) கருதின. இச்சிக்கப்பட்ட. ஒத்துக்கொண்ட. பிரியமான. கோருகிற

अभिप्लवः पु வருத்தம். வெள்ளத்தில் முழுகல். ஓர்யக்யாங்கம். பிராஜாபத்திய ஆதித்தியன்

अभिप्लु 4 आ மேலுக்கேறு, பாய். குதி. வெள்ளத்தினல் அமிழ்த்து. णिच् சிறு அலையாய் அசை, கழுவு.

अभिबलं न அலங்கார சாஸ்திரத்தில் ஓர் பரிபாஷை

अभिबुद्धिः स्त्री ஞானேந்திரியம்.கண் காதுநாக்குமூக்குதோல்

अभिभवः (भू) पु தோல்வி. வெல்லப்படல். திரஸ்காரம். கர்வபங்கம். பிரபலம். உயற்சி. अ(भा)वनं வெல்லல்

अभिभा 2 प பிரகாசி

अभिभा स्त्री கெட்டசகுனம்.பேய்.தோல்வி.துயரம்.மேன்மை

अभिभार वि மிகவும் பளுவான.

अभिभाविन् ,भाव(वु)क वि வெல்லுகிற. மேம்படுகிற. அவமதிக்கிற. தகைக்கிற.

अभिभु,: भूः மேம்படுகிறவன். சிறந்தவன்.

अभिभू 1 प வெல். தகை. அவமதி. நோக்கு णिच् மேம்படு.

अभिभूति वि தோற்கடிப்பது. तिः மேன்மை. வெற்றி. அவமரியாதை -ओजस् वि பெருஞ்சக்தி வாய்ந்த. न

अभिभूयं न மேன்மை.

अभिभूवन् वि வெற்றிபெறல். மேம்படல்

अभिमद् 4 प உற்சாகப்படுத்து.

अभिमन् 4 आ இச்சி. பிறர் பொருளுக்காசைப்படு. சம்மதி. கருது. ஊகி. பயமுறுத்து. 8आ தன்னைப்பற்றி நினைத்துக்கொள். मत त्रि तः பிரியன் तिः மரியாதை

अभिमनस् त्रि கருதின. இச்சிக்கிற

अभिमनायते ना. प. இச்சி. களித்திரு. உயிருள்ளதா யிரு

अभिमंतुः स्त्री ஹிம்ஸித்தல்.

अभिमंतृ त्रि இச்சிக்கிற. அகங்காரமுள்ள. பேராசைகொண்ட

अभिमंत्रण न மந்திரத்தால் சுத்தமாக்கல், அழைத்தல். உபதேசித்தல்.

अभिमंथ: पु अधिमंथ கண்ணோய்.

अभिमन्युः पु அர்ஜுன ஸுபத்திரைகளின் பிள்ளை (அனு)

अभिमरः पु கொலை. யுத்தம். தன் ஜனங்களாலேயே ஆபத்து. சிறை. விலங்கு. தன் சேனை, ஜனம். யானை, புலிகளோடு போர் புரியப் போகிறவன்.

अभिमर्दः पु (मृद्) தேய்த்தல். உரைத்தல். மிதித்தல். அமுக்கல். தேசத்தைப் பாழாக்கல். சண்டை. சாராயம்

अभिमर्शः, र्शनं, मर्षः, मर्षण न ஸ்பர்சம். மேலே விழல். காமத்தோடு தொடல். புணரல்.

अभिमर्शक, मर्षक, मर्शिन्, मर्षिन् त्रि தொடுகிற. தாக்குகிற

अभिमाति त्रि பகைக்கிற. ஹிம்ஸிக்கக் கருதுகிற.

अभिमातिः स्त्री சதியோசனை செய்தல். விரோதி तिन् त्रि

अभिमादः पु வெறி. லாகிரி.

अभिमाद्यत्क त्रि கொஞ்சங் குடித்திருக்கிற. வெறி பிடித்த. தள்ளாடுகிற.

अभि(भी)मानः पु கர்வம். அஹங்காரம். அறிவு. ஆசை. இச்சை. ஹிம்ஸை. ஆசையாலேற்பட்ட ஓர் நிலை. உரிமை பாராட்டல்

अभिमानितं न ஆத்ம ஸ்துதி. ஆசை. ஜோடி. புணர்ச்சி.

अभिमानिन् त्रि அகம்பாவம் படைத்த. ஸர்வத்தையும் தன்னுடையதாய் பாவிக்கிற. இல்லாததை இருப்பதாய்

பாவிக்கிற. पु அக்கினியின் ஓர் ரூபம்.

**अभिमानुक** त्रि தன்பம் விளைவிக்க முயலுகிற.

**अभिमाय** वि மதி மயங்கின. மூடமான. ஐயிக்கப்பட்ட

**अभिमि(मे)ह्य** वि நகைக்கப்படவேண்டியிருக்கிற.

**अभिमुख** वि (खी स्त्री) எதிர் முகமான. அருகே யிருக்கிற. கருதின. தயாரான. அனுகூலமான. நெருங்கின ஸம்பந்தமுள்ள. முகத்தை மேலே தூக்கின

**अभिमुखं, खे** अ குறித்து. எதிரே. அருகே.

**अभिमुखता** स्त्री ஸன்னிதானம். அருகாமை. அனுகூலம்.

**अभिमुखीकृ, मुखयति** ஸமாதானம் செய். வெல்.

**अभिमूर्छित** वि மிகவும் மயங்கின. மயக்கப்பட்ட

**अभिमृष्ट** वि (मृश्) தொட, அடிக்க, தேய்க்கப்பட்ட அருகே கொண்டு வரப்பட்ட

**अभिमेथिक** वि मेथिका திட்டு. சாபம்

**अभियज्ञः** पु யாக காரியம் -गाथा யக்ய ரிக்

**अभिया** 2 प நெருங்கு. (காலம் போல்) வா. எதிர்த்துச் செல். பங்கு கொள். செய்ய ஏற்றுக் கொள். णिच् அனுப்பிவிடு (यातृ, यातिन् वि यान्)

**अभिया** स्त्री पु நெருங்கல். தகைத்தல்.

**अभियाच्** । आ யாசி. பிரார்த்தி याचनं

**अभियातिः, यायिन्** -तृ पु(त्री.ता) பகையோடு நெருங்கல். தாக்குபவன். விரோதி तिः स्त्री தாக்கல்.

**अभियुक्त** वि ஊக்கமுள்ள. கைதேர்ந்த. நன்குணர்ந்த. படித்த (पु) பண்டிதன். குணக்கியன். ரஸக்கியன். சிறந்த நீதிபதி. குற்றஞ்சாட்டப்பட்ட. தகைக்கப்பட்ட. ஏற்படுத்தப்பட்ட. சொன்ன.

**अभियुग्व (ग्व)न्** पु விரோதி. தகைப்பவன்.

**अभियुज्** 7 आ உழல். தயாராக்கு. மேல்விழு.குற்றஞ்சாட்டு

யாகி. பேசு. ஏற்படுத்து. உபயோகிக்கப்படு. வேலையா யிரு. ஹிம்வி. (குதிரையை) வண்டியில் பூட்டு णिच् சேர். சம்பந்தப்படு योगिन् वि पु வாதி

अभियुज् स्त्री (कृ, ग्) தகைத்தல். விரோதி

अभियोक्तव्य, ज्य वि பழக்க,குற்றஞ்சாட்டப்படவேண்டிய

अभियोक्तृ वि पु வாதி. பொய் பாத்தியதை கொண்டாடுபவன்.

अभियोगः पु (युज्)ஒன்றை அறியவிருப்பம். படிப்பு. சண்டை. சாட்டப்பட்ட குற்றம். வழக்கு. திட்டு. ஆணை, அவமானம். அமிருதப்பெருக்கு [பார்த்தல்

अभियोजनं न (குதிரையை) வண்டிக்குப் பூட்டிப் பூட்டிப்

अभिरक्षा, रक्षणं न முழுதும், சுற்றிலும் பாதுகாப்பு.

अभिरक्षितृ वि காப்பாற்றல்.

अभिरक्त वि பற்றின. ஸம்பந்தப்பட்ட

अभिरंज् क வர்ணமிடப்பட்டிரு. உற்சாகப்படுத்தப்பட்டிரு णिच् வர்ணமிடு रंजनं

अभिरत वि (रं)திருப்தி, ஸந்தோஷப் படுத்தப்பட்ட. கவனிக்கிற. செய்கிற. பற்றியிருக்கிற रतिः रमणं

अभिराज् वि முழுதுமாளுகிற. மேலான. [राद्ध वि

अभिराध् णिच् அனுக்கிரக முண்டாக்கச் செய்.சாந்தி செய்

अभिराम वि சந்தோஷகரமான. மிக அழகான. மனதைக் கவருகிற. मः சிவன். मं अ சரசமாய். சிருங்காரமாய்

अभिरुच् 1 आ நன்கு தோன்று. இச்சி = णिच्

अभिरुचिः स्त्री ருசி. இன்பம். அவா. காந்தி. மேன்மையான பதத்தை விரும்பல். रुचित वि तः காதலன்.

अभिरुचिर वि மிக அழகான. மனோகரமான.

अभिरुत वि சப்திக்கப்பட்ட. (பக்ஷி) கூவின. तं கூச்சல்.

अभिरूप(क वि ஒத்த. இன்பமான. அழகான. பிரியமான. படித்த. ஞானியான. पः சந்திரன். சிவன். விஷ்ணு.

मன்மதன் -पतिः ஒத்த கணவனையுடைய. வேறுலகில் நல்ல புருஷனை யடைய ஓர் நோன்பு.

अभिरोरुद् वि ஆனந்தக் கண்ணீரைச் சொரிகச் செய்கிற.

अभिलक्षित वि அடையாளமிடப்பட்ட. குறிகளுள்ள

अभिलक्ष्यं अ குறியை நோக்கி [ஹிம்ஸி

अभिलंघ 10 प குறுக்கேபாய் மேலே விழு. கெடு. மீறு.

अभि सं)लापः पु (लप्)வார்த்தை. விவரிப்பு. வர்ணனை. விருத விஷய விவரணம். பொருளுடைய சொல்

अभिलष् 1. 4. प இச்சி.பேராசை பிடித்துக் திரி.लषण लषितं वि

अभिलावः (लू) पु அறுத்தல். கொய்தல். வெட்டல்.

अभिलाषः (सः) அவா. அன்பு. காதலனைக் கோரல்.

अभिलाषक, लाषि(सि)न्, लाषुक वि பேராசைப்படுகிற.

अभिलिखित वि எழுதப்பட்ட. செதுக்கப்பட்ட. तं, लेखनं. சாஸனம். எழுத்து மூலம். லேகனம். லிபி.

अभिलीन वि (ली) ஒட்டிக்கொண்ட. பற்றின. அணைகிற

अभिलुलित वि கலக்கப்பட்ட. சஞ்சலமான.

अभिलूता स्त्री ஒரு விதச் சிலந்தி.

अभिवद् । उ தெரியச் சொல். விவரி. பெயரிடு. அழை. வந்தனமளி. णिच् தன் பெயரைச் சொல்லி மரியாதையாய் வணங்கு. வணங்கச் செய். உச்சரி. வாத்தியம்

अभिवदनं, वादः, वादनं = துாஷணை वादकवादिन् वि वादयितृ पुவாசி.

अभिवंद् । आ மரியாதையாய் வணங்கு. वंदनं

अभिवयस् वि மிக யௌவனமான. அன்னமுடைய

अभिवर्षण न மழை, பனி பெய்தல்.நீர்ப்பாய்ச்சல். अभिवर्षिन् वि

अभिवाद्य, वादनीय वि வணங்கப்படவேண்டிய यः சிவன்.

अभिवाह वि நோக்கிச் சுமந்து செல்லுகிற. கிட்டே கொண்டு வருகிற. वहं

अभिवान्या, वान्यवत्सा स्त्री இதர பசுவின் கன்றுக்குப் பால்

கொடுக்கும் கன்றிறந்த பசு.
अभिवासः, सनं न துணியால் மூடல். மறைத்தல்.
अभिवासस् अ துணி மறைவின் மேல்
अभिवाह्य न கொண்டு போகுதல். ஸமர்ப்பித்தல். வாகனம்.
अभिविख्यात वि எங்குந் தெரிந்திருக்கிற. பிரஸித்தமான.
अभिविधिः पु முழுதும் அடங்கப் பெறல். பரவல்
अभिविनीत वि நன்கு நடந்து கொள்ளுகிற. சிக்ஷிதமான. கற்பிக்கப்பட்ட. சாதுவான. சுத்தமான.
अभिविमान वि எல்லையில்லா அளவுள்ள (பிரம்மம்) [பட்ட
अभिविश्रुत वि பெயர் பெற்ற. கீர்த்தியுள்ள. எங்கும் புகழ்ப்
अभिवीक्ष् । आ கவனி. பார். கருது. பரிசோதி. சார்ந்திரு.
अभिवीर वि வீரர்களால் சூழப்பட்ட
अभिवृत् 1 आ நெருங்கு. தகை. போரிடு. நீட்டு. தோன்று. தொடங்கு. இரு. இருக்க நேரிடு. சம்பாதித்துக் கொடு. णिच् அடைவி, வெல். ஆட்கொள் वर्तिन् वि
अभिवृध् 1 आ விருத்தியாகு. செழி. णिच् அதிகமாக்கு. நீட்டு
अभिवृष् 1 प மழைபெய். பனிபெய். கொட்டு. சொரி. மூடு. மறை. தெளி णिच् மேலே தெளி, மூடு. वृष्ट वि
अभिवेगः पु ஆராய்ச்சி. யோசனை. தீர்மானம்.
अभिवेदनं न ஆக்கிரமித்தல். கிரஹித்தல். வேறு பனைவியை வைத்துக் கொள்ளல். எருமையைக் கட்டுதல். [क्त अ
अभिव्यक्त वि அறிவிக்க, வெளிப்படுத்தப்பட்ட. தெளிவான
अभिव्यक्तिः स्त्री வெளிப்படுத்தல். ஒன்றோடொன்று கூடியி
अभिव्यंज् 7 प णिच् காட்டு.வெளிப்படையாக்கு व्यंजनं[ருத்தல்.
अभिव्यंजक वि காட்டுகிற. ஸூசிக்கிற. பகிரங்கமான
अभिव्यादानं न அடக்கப்பட்ட ஓசை. ஒரே சப்தத்தின் ஆவி
अभिव्याधिन् वि மிகவும் உபத்திரவிக்கிற [ருத்தி
अभिव्याप् 5 प பரவியிரு. சூழ். அடங்கப் பெற்றிரு. व्यापिन्

वि व्याप्तिः स्त्री व्याप्यं விதி முறை
अभिव्याहरणं व्याहारः पु (व्याहृ) உச்சரிப்பு. பெயர். பட்டம்
अभिव्याहारिन् वि உச்சரித்தல். சொல்லல்
अभिलंगः நோக்கி, எதிராகப் போதல். தகைத்தல்.
अभिशंस् 1 प நிந்தி. பழி. தூஷி. அபவாதங்கூறு. துதி
अभिशस्त वि பொய்க்) குற்றம் சாட்ட, ஹிம்ஸிக்க, சபிக்கப் பட்ட. துஷ்டையான. பாவியான. -अकः पु அபகீர்த்தியின் குறி.
अभिशस्तक वि பொய்க் குற்றஞ் சாட்டப்பட்ட. சாபத்தாலேற்பட்ட
अभिशस्तिः स्त्री சாபம். சாபத்தாலுண்டானது. கெடுதி. குற்றம். நிந்தை. யாசகம். சாப, ஆபத்தின் காரணம்.
अभिशंका स्त्री சந்தேகம். பயம். கவலை शंकित वि பயங்கரமான
अभिशप् 1 उ சபி. திட்டு णिच् ஜால வித்தை செய் शापनं
अभिशपनं, शापः पु பெயக் குற்றம். துன்பம். -ज्वरः சாபத்தால்
अभिशब्दित वि சொல்லப்பட்ட. கூப்பிடப்பட்ட [வந்தஜுரம்
अभिशस् 1 प ஹிம்ஸி. தகை. स्त्री குற்றம். சாபம் शस्त वि
अभिशस्तृ पु விரோதி. ஹிம்ஸிப்பவன்.
अभिशिरोग्र वि தலை, நுனிகள் திருப்பப்பட்ட
अभिशीत, श्यात वि குளிர்ச்சியான.
अभिशीन, श्यान वि உறைந்த. கட்டியாக்கப்பட்ட
अभिशोकः पु கொடுந்துயரம். வெப்பம். தீவிரம்.
अभिशोच वि சூட்டால் பிரகாசிக்கிற. துக்ககரமான.
अभिशोचनं न பெருந்துக்கம். உபத்திரவிப்பது. பேய்.
अभिशोचयिष्णु वि துன்பப்படுத்துகிற
अभिश्रवणं न சிராத்தபோஜனகாலத்தில்சொல்லப்படும்வேதம்
अभिश्रावः पु கேட்டல். பிரஸித்தமாதல்
अभिश्रिष्, श्लिष् स्त्री கட்டு. பந்தம் =श्लेषणं

**अभिश्री** சேர்க்கிற. கலக்கிற. நெருங்குகிற. கூடிப் பழகுகிற தகுந்த. பிரகாசிக்கிற. சக்தியுள்ள.

**अभिश्वस्** पु மேலே, நோக்கி மூச்சுவிடுகிறவன்

**अभिश्वसः** पु எப்பம். ஒக்காளம்.

**अभिश्वासः** पु மேலே மூச்சுவிடல். வீசல்.

**अभि(भी)षंगः (सङ्गः)** षंजनं न நெருங்கிய ஸம்பந்தம், லயம், பற்று. அபஜயம். பங்கம். திடீரென்றுண்டான துக்கம், கஷ்டம், பேய் பிடித்துக் கொள்ளல். அணைதல். புணர்ச்சி. சாபம். திட்டு. பழி. நிந்தை. அவமரியாதை அம்பறாத்தூணி. பொக்கிஷம். கதறுதல். கூப்பிடுதல். கயிறு -ज्वरः பேய் பிடித்ததாலுண்டான ஜ்வரம்.

**अभिषवः (षु)** पु கள் தயார் செய்தல். (சடங்காரம் பத்தில்) ஸ்நானம் செய்தல். ஸோமபானம் செய்தல். யாகம். மாம்ஸத் தொடுசுவை. பொங்க, புளிப்புண்டாக்கும் வஸ்து. ஸோமலதை பிழிய உபயோகப்படும் விரல்

**अभिषवं** न புளித்த, காடிக்கஞ்சி

**अभिषवणं** न ஸோமலதை பிழிய உபாயம். ஸநானம்.

**अभिषवणी** स्त्री ஸோமலதை பிழியும் யந்திரம்

**अभिषह्य** अ பலத்தோடு. பலாத்காரமாய்

**अभिषाच्** वि தொடருகிற. பூஜிக்கிற. தோற்கடிக்கிற.

**अभिषाह्** वि பொறுக்கிற. ஜயிக்கிற.

**अभिषिच्** 6 उ நீரைத் தெளி, கொட்டு अल அபிஷேகம் செய். பரிசுத்தம் செய். முடி சூட்டு. ஸ்தாபி. णिच् அபிஷேகம், முடி சூட்டப்பட்டிரு. षिक्त वि षेचनं

**अभिषु** 5 प ஸோமலதையைப் பிழி. நீர் சேர். பிழிந்தெடு. நனை. தெளி. षुत वि

**अभिषावकः** षोतृ पु ஸோமலதை பிழியும் புரோகிதன்

**अभिषुः** पु கிரணம்.

अभिषुतं न புளித்த கஞ்சி, சாத்தீர்த்தம்.
अभिषेकः पु எண்ணெய் தேய்த்தல். ப்ரோக்ஷித்துப்பரிசுத்தமாக்கல். பட்டாபிஷேகம். அபிஷேகம் செய்யவேண்டிய நல்ல பரிசுத்த ஜலம். வைதிக ஸ்நானம். புண்ணிய தீர்த்தத்தை ஒருவன் மீது ப்ரோக்ஷித்தல்
अभिषेक्तृ वि அபிஷேகம் செய்விப்பவன்
अभिषेचनीय, षेच्य, क्य वि முடிசூட்டத்தகுந்த. பட்டாபிஷேக ஸம்பந்தமான यः பட்டாபிஷேககால ஹோமம்
अभिषेण वि (சத்துருவைப்போல்) சேனையோடு நெருங்குகிறன்
अभिषेणयति ना प சேனையோடு புறப்படு. தகை
अभिषेणयिषु वि சேனையோடு எதிரியை நோக்கிப்போக இச்
अभिष्टवः पु துதिअभिष्टनः पु ஸிம்ஹநாதம். கர்ஜனை. [சிக்கிற
अभि (भी)ष्टि वि யாகங்களால் பூஜிக்கவேண்டிய. ष्टिः स्त्री உதவி. பூஜை. துதி.யாகம். மந்திரம். நெருங்கல்.
अभिष्टिमत् वि இச்சிக்கத்தகுந்த.
अभिष्टु 2 प துதி. மந்திரத்தால் துதித்தழை.ष्टुत वि
अभिष्यन्द् 1 आ கசி. ஒழுகு. சொட்டு. (தயை, காமத்தல்) உருகப்பட்டிரு. வழி.
अभिष्य(स्यं)दः पु கசிதல். கண்களின் பலஹீனம், நீர்ப்பெருக்கு. அதிகமான விருத்தி.
अभिष्य(स्यं)दिन् वि கசிதல். பேதியாதல். ஒழுக்குண்டாக்கல் -रमणं நகரத்தினருகே சிறு பட்டணம், பேட்டை
अभिष्वंगः पु ஸ்பர்சம். அதிக ஆசை, பற்று.
अभिसंयोगः पु நெருங்கிய ஸம்பந்தம், ஸ்பர்சம்.
अभिसंवृत वि உடுக்கப்பட்ட.
अभिसंशीन वि உறைவிக்க, கட்டியாக்கப்பட்ட.
अभिसंश्रयः पु சரணம். அடைக்கலம் [நெருங்கினதாய்
अभिसंसारः पु கூட்டங்கூட்டமாய் வரல் रं अ ஒன்று கூடி

**अभिसंस्कारः** पु எண்ணம். ஊகை. வீண் முயற்சி, வேலை
**अभिसंस्कृ** 8 उ உருவாக்கு. செய்.பிரதிஷ்டை,பரிசுத்தம்பண்
**अभिसंस्तवः** पु மேலான ஸ்தோத்திரம்.
**अभिसंख्य** त्रि ஊஹிக்கத் தகுந்த. ஸ்பஷ்டமாய் நிச்சயிக்க
**अभिसंख्या** 2 प கணக்கிடு. ஊகி [முடியுமான
**अभिसंचारिन्** वि திரிகிற. சஞ்சலமான. மாறுகிற
**अभिसत्वन्** वि வீரர்களால் சூழப்பட்ட
**अभिसंतप्** । प பீடி. வேதனைப் படுத்து. வருத்தமுண்டாக்கு
**अभिसंतापः** पु யுத்தம்.
**अभिसंतारः** पु கடல் முதலியவற்றைத் தாண்டுதல்
**अभिसंदष्ट** वि அமுக்க, இறுக்கிக்கட்டப்பட்ட
**अभिसंदेहः** पु மாற்றிக் கொள்ளல். குறி. லிங்கம்.
**अभिसंधः, धकः** पु வஞ்சகன். தூஷகன். பழிப்பவன்.
**अभिसंधा** स्त्री वாக்கு. உறுதிமொழி. மோசம்
**अभिसंधा** 3 उ சேர்த்துப்பிடி. நினைப்பு மூட்டிக்கொள். வில்
வில் பாணந்தொடு. (பாணம்) சுடு.கருது. வஞ்சி. ஒப்
பந்தம் செய்துக்கொள். சிநேகமாக்கிக்கொள். வாக்
களி. பழி. தூஷி. கூட்டு. தேர்ந்தெடு. संधत्ते संधायः
**अभिसंधिकृत** त्रि வேண்டுமென்றே செய்யப்பட்ட [संधिः स्त्री
**अभिसन्न** त्रि குற்றமுள்ள. பிடிபட்ட. ஆபத்தை யடைந்த.
சரணடைந்த. அறியப்பட்ட. அங்கீகரிக்கப்பட்ட.
**अभिसमवायः** पु ஐக்கியம் [குறிதப்பின பாணமுள்ள.
**अभिसंपत्** 1 प சேர்ந்து, நோக்கிப்பற. மேலே குதி. அவ
ஸரப்படு [ஆதல்.
**अभिसंपत्ति.** स्त्री (पद्) முழுதும் செய்யப்பட்டதாயிருத்தல்,
**अभिसंपद्** 4 आ ஓரே தன்மையை யடை. மாறுபாடடை.
வந்துசேர். பெறு. -णिच् ஓரே மாதிரியாக்கு. மாற்று.
**अभिसंपद्** स्त्री பூர்த்தியாதல் முழு எண்.

अभिसंपन्न वि பூர்த்தி செய்யப்பட்ட.
अभिसंपरायः पु எதிர்காலம்.
अभिसंपातः पु ஒன்றுகூடல். ஜனக்கூட்டம். யுத்தம். சாபம்
अभिसंवृ 9 प சேர்த்துக் கட்டு க ஸம்பந்தப்பட்டிரு.
अभिसंबाधः पु ஸம்பந்தம் உறவு. ஸ்திரீபுருஷர்களின்சேர்க்கை
अभिसंबाध वि மிகவும் சுருங்கிக்கொண்ட. சங்கடமான. தடுக் [கப்பட்ட
अभिसंमुख वि மரியாதையாய் எதிர் நோக்குகிற.
अभिसरः पु கூடவருபவன். தோழன். ஓர் ஜனம்.
अभिसरणं न நெருங்கல். சந்தித்தல். காமுகர்களின் குறிப் [பான சந்திப்பு
अभिसर्गः पु சிருஷ்டி.
अभिसर्जनं न தானம். கொலை
अभिसर्तृ वि தகைப்பவன். தோழன்.
अभिसर्पणं न (பகையோடு) நெருங்கல்.
अभिसां (शां)त्वः, त्वनं न கோபந்தணித்தல். சாந்தப்படுத்தல்
अभिसायं अ அஸ்தமனத்தில். ஸாயங்காலந்தோறும்
अभिसारः पु (स्र) (காதலன்) குறித்தபடி ஸந்திக்கப்போதல். காதலர்கள் சந்திக்க ஏற்படுத்திக் கொண்ட இடம். மேலே விழுதல். தகைத்தல். சண்டை. தோழன். பலம். ஆயுதம். சுத்திக்காகச் சடங்கு. ஓர் ஜனம். री ஓர் நகரம். -स्थानं ஏற்பாடுகள் செய்துக்கொள்ளத் தகுந்த இடம் [=सारिन् त्रि
अभिसारणं न காதலனை, காதலியை சந்திக்கப் போதல்.
अभिसारिका स्त्री சோரபுருஷன் சொல்லிய ஸங்கேத விடத் திற்குச் சோரம் போகும் பெண்.
अभिसारिणी = अभिसारिका ஓர் திருஷ்டுப் சந்தஸ் பேதம்.
अभिसिसारयिषु वि ஸங்கேத விடத்தை அடைவிக்க விரும்பு [கிற
अभिसृज् 6 प கொட்டு. கொடு. அவிழ். தளர்த்து. தகை
अभिसेवनं न அனுஷ்டித்தல். அப்பியஸித்தல். ஒன்றில் அவா

**अभिस्कंदः** पु மேலே விழல். விரோதி. दं अ தகைத்துக்கொண் [டே

**अभिस्नेहः** पु பற்று, காதல். இச்சை. ஆசை. அவா.

**अभिस्फुरित** वि முழுதும் விரிந்து விட்ட, மலர்ந்த, வளர்ந்த

**अभिस्वर्** स्त्री பிரார்த்தித்தழைத்தல். வேத ஸ்துதி

**अभिस्वरः** पु அவசரமாய் நோக்கிப்போதல். रे மிக அருகே.

**अभिस्वर्तृ** पु பிரார்த்தித்தழைத்தல்.

**अभिस्तृ** 1 प இணங்கு. துதி. பிரார்த்தி. வேண்டு.

**अभिहन्** 2 प அடி अरु. நசுக்கு. ஹிம்ஸி. கொல். தடுத்துக் கொள். தகை. வெல் णिच् அடி. பெருக்கு (हतिः) (हत)

**अभिहवः** पु (हु) வேண்டல். அழைத்தல். ஆகுதி. முழுதும் ஹோமம் செய்துவிடல்.

**अभिहस्य** वि பரிஹாஸத்திற்கிடமான.

**अभिहारः** पु திருடல். தகைத்தல். ஆயுதமெடுத்தல். கலந்து கொள்ளல். முயற்சி. குடியன். தர்மகார்யத்திற்கு [யாசித்தல்.

**अभिहासः** पु பரிஹாஸம்.

**अभिहित(धा)** वि சொல்ல, நிச்சயிக்க, மேலேவைக்கப்பட்ட

**अभिहितं** न பெயர். சொல் (हितिः स्त्री)

**अभिहूतिः** स्त्री கூப்பிடல். வேண்டல். வணங்கல்.

**अभिहृ** 1 प எடுத்துக்கொண்டு போய்விடு. ஓதுக்கு. கிழி. பிடுங்கு. அருகே கொண்டுவா. णिच् ஓதுக்கி விடச் செய். பரிமாறு. உடு. மேல்விழு. हरः हरणं हर्तृ पु

**अभिह्रुत्** त्रि வளைக்கிற. கோணலாக்குகிற. தீங்கிழைக்கிற स्त्री தோல்வி. நஷ்டம். இறக்கம்.

**आभिह्रुति** त्रि பாதகமான. பிசகாய் நடந்து கொள்ளுகிற

**अभिह्रुतिः** स्त्री விழச் செய்தல். தோல்வி. நஷ்டம். கெடுதி.

**अभिह्वर, ह्वार** त्रि விழுந்து விடுகிற. रं கோணல். பாவம்

**अभी** 2 प அணுகு. அனுஸரி. நுழை. அனுபவி. பங்காய் [வந்து சேர்

**अभी** त्रि பயமில்லாத

**अभीक** वि இச்சிக்கிற. காமமுள்ள. பயமில்லாத. அணுகின. பயங்கரமான. कः கணவன். காமுகன். கவி. பிரபு

**अभीकं** न அருகாமை. சண்டை.

**अभीके** अ அருகே. ஒரே காலத்தில், இடத்தில். சரியான காலத்தில். க்ஷணத்தில். ஒன்றிலிருந்து. ஒன்றிர்க்காக

**अभीक्ष्ण** वि அதிகமான. ஓயாத. திருப்பித்திருப்பி.

**अभीक्ष्णं** ஸதா. மிகவும் அதிகமாய். சீக்கிறமாய்.

**अभीक्ष्णशः** अ திருப்பித்திருப்பி

**अभीज्य** वि பலியிடவேண்டிய. யாரைக்குறித்து யாகம் செய் செய்யப்படுகிறதோ ज्यः தேவதை

**अभीत, ति** वि **तिः** स्त्री பயமின்மை. தகைத்தல். அருகாமை.

**अभीत्वन् त्वर** वि (री स्त्री) அணுகுகிற. தகைக்கிற.

**अभीद्ध** वि எரிகிற. பிரகாசிக்கிற.

**अभीतप्** पु போகிறவன். போய் அடைகிறவன். தீர்த்தேக் கம். தயவு.

**अभीप्सित** वि இச்சிக்கப்பட்ட. அழகான तं இச்சை.

**अभीप्सिन् भीप्सु** वि அடைய விரும்புகிற.

**अभीम** वि பயங்கரமில்லாத मः விஷ்ணு

**अभीमरः** पु வதம். சண்டை. தன் ஸேனையிலுண்டான பயம்

**अभीमोदः** पु சந்தோஷம் = मुद् अ மிகக்ககளித்த

**अभीरः** पु இடையன். ஓர் ஜனம். री அபீரஜன பாஷை.

**अभीरं** न ஓர் விருத்தம்-पल्ली இடையனின் குடிசை

**अभीरणी** स्त्री ஓர் விதப் பாம்பு.

**अभीराजी** ஒருவித விஷப்பூச்சி

**अभीरु,लु(क** वि தீங்கில்லாத न போர்க்களம் रुः சிவன். பைரவன் रुः =-पत्री தண்ணீர் முட்டான் கிழங்கு

**अभीरुण** वि பயமில்லாத. சாதுவான णं अ எதிரே

**अभीलं** न துயரம். ஆபத்து. பயங்கரமான தோற்றம்.

अभीवर्गः पु தேச சஞ்சாரம்.
अभीवर्तः पु பிரம்ம ஸாமன். சத்துருவைத் தகைக்கும் ஸம யத்தில் சொல்லப்படும் ஓர் வேதரிக். வருஷம். [ஹோம விசேஷம்.
अभीवृत् वि எங்குமிருக்கிற
अभीवृत वि மூடப்பட்ட. சூழப்பட்ட.
अभीशापः पु சாபம். [புள்ள पु ஸூரியன்.
अभीशुः, षुः पु கடிவாளம். கிரணம். கை. விரல் मत् वि காந்தி
अभीष् 6 प இச்சி. நாடு. அடைய முயல். इ वि பிரியமான
अभीषया अ பயமில்லாமல்
अभीषाह् वि வெல்லுகிற. அபயமளிக்கிற. स्त्री பெருஞ்சக்தி
अभीष्टा स्त्री பிரியமானவள். வெற்றிலைக்கொடி. வாஸனைவஸ்து
अभुक्तः पु அனுபவியாதவன்
अभुक्तमूलं கேட்டை முடிந்து மூலாரம்பம் வரையிலுள்ள [ஸந்தி காலம்.
अभुग्न वि ஆரோக்கியமான
अभुज् वि அனுபவியாதவன். வாக்கை நிறைவேற்றாதவன்.
अभुंजत् वि உண்ணாத. அனுபவிக்க விடாத. ரக்ஷிக்காத
अभूः பிறவாதவனான விஷ்ணு
अभूत वि முந்தியிராத. -प्रादुर्भावः முந்தியிராததாய் இப்பொழுது வெளிவரல். -शत्रु वि விரோதியில்லாத.
अभूमिः स्त्री பூமியல்லாதது. தகாத இடம், பொருள்
अभेद्य, अभैदिक वि துளைக்க, பகுக்கப்படாத यं வைரம்
अभोक्तृ, भोगिन् वि மிதாஹாரியான.
अभोज् वि யாகம் செய்யாத. தேவதைகளுக்குணவளிக்காத.
अभोज्य वि அசுத்தமான. நீக்கப்பட்ட உணவான -अन्न वि யாருடைய அன்னம் அயலாரால் புசிக்கப்பட நிஷேதிக்கப்பட்டிருக்கிறதோ
अभ्यक्त वि எண்ணை தேய்க்க, அபிஷேகம் செய்யப்பட்ட
अभ्यग्र वि புதிய ग्रं ஸமீபம்.

**अभ्यंक** वि இப்பொழுதுதான் அடையாளமிடப்பட்ட
**अभ्यंका** பசுபேதம்.
**अभ्यंगः** पु (வாஸனைப் பொடி, தைலத்தால் தேகத்தைப்) பூசல். தைலம்.
**अभ्यंज्** 7 प தைலத்தால் பூசு. அலங்கரி. அசுசியாக்கு
**अभ्यंजनं** न பூசல். கண்ணுக்குமையிடல். தைலம். நகை
**अभ्यतीत** वि போய்விட்ட. இறந்த
**अभ्यधिक** वि அளவிற்கு மேம்பட்ட. விசேஷமான कं अ மிக [அதிகமாய்
**अभ्यधीन** वि ஸ்வாதீனமான
**अभ्यध्वं** अ வழியை நோக்கி. வழியில். ध्वे வழியருகே
**अभ्यनुज्ञा** 7 उ இடங்கொடு. இணங்கு. போகவிடு. णिच् போக உத்திரவு பெறு.
**अभ्यनुज्ञा, ज्ञानं** न ஸம்மதி. கட்டளை. போக அனுமதி தரல். ஆக்ஷேபணையை அங்கீகரித்தல்
**अभ्यनूक्त** वि முன் சொல்லப்பட்டதை ஒத்துச் சொன்ன
**अभ्यंतर** वि உள். உள்ளடங்கியிருக்கிற. கூட்டத்தில் ஒன்றுன. கைதேர்ந்த. நெருங்கிய ஸம்பந்தம் பெற்ற
**अभ्यंतरं** न உள்பாகம். திக்குகளின்) நடு. இடைவெளி. மனது
**अभ्यंतरं. रतः** अ உள்ளே -आयामः நரம்புப் பிடிப்பால் முதுகு கோணியிருத்தல் -आराम वि உள்ளுக்குள் (ஆத்மாவில்) ஸந்தோஷப்படுகிற. -करण वि இந்திரியங்கள் உள்ளே (மறைபட்டு) இருக்கிற. அறியுஞ் சக்திகளை உள்ளேயுடைய -करणं அந்தக் கரணம்-कला ரஹஸ்ய கலை, லீலை. மயக்குதல். மோகிக்கச் செய்தல்.
**अभ्यंतरकः** पु அந்தரங்க சிநேகிதன்
**अभ्यंतरीकृ** 8 उ பரிசயம், அறிமுகம், பிரவேசம் செய்துவை
**अभ्यम्** 1 प துன்பப்படுத்து. வெல். கோபி अभ्यमनं நோய் (मिन्)
**अभ्यमित्रं** न விரோதியைத் தகைத்தல் अ எதிரியை நோக்கி

अभ्यमित्रीण:, य:, मित्र्य: पु தைரியமாய்ப் போய்ப் போர் செய்யும் வீரன். [மித்தல்

अभ्यम: (अमी) पु அணுகல். வந்து சேரல். நுழைதல். அஸ்த

अभ्यर्च् 1. 10 प பூஜி. துதி. பாடு. கொண்டாடு. (र्चनं, र्चा)

अभ्यर्ण वि அருகே.காலம்போல்)நெருங்குகிறர्णஸமீபம் = र्णता

अभ्यर्थ् 10 आ கேள். யாசி. பிரார்த்தி. இச்சி. ஒருத்தியை மணக்கக் கெஞ்சு

अभ्यर्थनीय, र्थ्य वि விக்ஞாபனம் செய்து கொள்ள வேண்டிய

अभ्यर्थिन् वि மன்றுடுபவன். மனுதாரன்

अभ्यर्दनं न பீடித்தல்

अभ्यर्ध वि இப் பக்கத்திலிருக்கிற. அருகாமையான. அதிகரிக்கிற र्ध ஸமீபம் -यज्वन् पु வரனளித்தல். யஜமானனின் ஐச்வர்யத்தை விருத்தி செய்தல்

अभ्यर्ह् 1. 10. प. நமஸ்கரி. பூஜி. மரியாதை செய் र्हणा பூஜை

अभ्यर्हणीय वि பூஜிக்கத் தக்க. போற்றத்தக்க -ता மரியாதை

अभ्यर्हित वि பூஜிக்கப்பட்ட. தகுந்த. சிறந்த [யான நிலைமை

अभ्यवकर्षणं न (தைத்த பாணம் போன்றதைப்) பிடுங்குதல்

अभ्यवकाश: पु திறந்த வெளி.

अभ्यवदान्य वि உதார குணமில்லாத.

अभ्यवस्कंद:, दनं न சத்துருவை பலமாய்த் தாக்கல். எதிர்த்துச் செல்லல். அடித்தல். வெல்லல். மோசத்தால் எதிரியின் சேனையை ஆக்கிரமித்தல். விழல்.

अभ्यवहरणं न உண்ணல். தொண்டையில் தள்ளல். எறிதல்

अभ्यवहित वि கீழே வைக்கப்பட்ட. குறைக்கப்பட்ட

अभ्यवहृ 1 प எறி. சேகரி. உணவாக்கிக் கொள் णिज् (நீரில்) எறியச் செய். உணவளி. தகை. हृत वि हार: हार्य: உணவு

अभ्यवे 2 प இறங்கு. கீழே செல். அறி (वायनं)

अभ्यश् 5 आ பரவு. எட்டு. அடை. பிரபுத்துவமடை.

**अभ्याश वि** அருகாமையான. **शः** எட்டுதல். ஸமீபம். பயன்.
லாபமடைய நம்பிக்கை.

**अभ्यस् 4 प** அப்பியஸி. பழக்கிக்கொள். திருப்பித் திருப்
பிச் செய், சொல். படி. அறி. அனுபவித்தறி. சேமி எய்

**अभ्यसनं न** சொன்னதை வாய்ப்பாடமாய்ச் சொல்லுதல்.
ஒன்றில் மனதைச் செலுத்தல் **अभ्यासिन् वि**

**अभ्यसूय (क वि** கோபமான. பொறாமையான. தூஷிக்கிற

**अभ्यसूयति ना. प** கோபி. பொறாமைப்படு. அகௌரவப்படுத்து

**अभ्यसूया स्त्री** பொறாமை. கோபம். நிக்கிரஹம். பகை.

**अभ्यस्त वि** பெருக்கப்பட்ட. **स्तं** இரட்டிக்கப்பட்டது.

**अभ्यस्तं अ** அஸ்தமனத்தில்

**अभ्यस्तमय: पु** அப்பொழுது ஸூர்யாஸ்தமனமாதல்

**अभ्यस्तमित वि** ஒருவன் தூங்கும்பொழுது ஸூர்யனஸ்தமித்த

**अभ्याकर्ष: पु** உள்ளங்கையால் மாரைத் தட்டிக்கொள்ளல்

**अभ्याकांक्षितं न** நிஷ்காரண, பொய்ப்பிராது. இச்சை.

**अभ्याकारं अ** தனக்காய் இழுத்துக் கொண்டு

**अभ्याक्रामं अ** அருகே, வேகமாய், பரஸ்பரம் அடிவைப்பதில்

**अभ्याख्यानं न** பழி. பொய்க்குற்றம். அகௌரவம் **ख्यात वि**

**अभ्यागत वि** வந்து சேர்ந்த. விருந்தாளியாய் வந்த **तः** அதிதி

**अभ्यागम् 1 प** அணுகு (காலம்போல்) வந்துசேர். ஒருநிலைக்குவா

**अभ्यागमः पु** வருகை. ஸமீபம். பயன் பெறல், அனுபவித்தல்.
எழல். அடித்தல். கொல்லல். தகைத்தல். சண்டை.

**अभ्यागारः पु** முயற்சி

**अभ्यागारिकः पु** குடும்பத்தைக்காப்பாற்றுவதில் திறமைவாய்
ந்தவன்

**अभ्याघात: (हन्) पु** தாக்கல். அடித்தல். திருடத்தூண்டல்.

**अभ्याचर् । प** நெருங்கு. அனுஷ்டி. செய். அப்பியஸி

**अभ्याचारः** (சத்துருவைப்போல்) நெருங்கல். எதிர்த்தல்

अभ्याज्ञाय: पु ஞாபகம் பிடித்துக் கொள்ளல். கட்டளை.
अभ्यातन् 8 उ குறிபார். (பாணம்) விடு. சுடு
अभ्यातान: पु மேலே பரவல். பரப்பல். விரிவு
अभ्यात्म वि தன்னுள்ளே திருப்பியிருக்கிறதை அதன்னைநோக்கி
अभ्यात्त वि அடையப்பட்ட. பரவின. பொருந்தின.(பிரம்மம்)
अभ्यादा 3 आ கைப்பற்று. உடு. (பேசத்) தொடங்கு
अभ्याधा 3 उ (ஸமித்தை) மேலேவை, சேர். பொருத்து.
अभ्यांत वि நோயுள்ள. ஹிம்ஸிக்கப்பட்ட.
अभ्यापात: पु கெடுதி. தீமை. ஆபத்து
अभ्यामर्द:, मर्दनं न யுத்தம்.
अभ्याय । प பரப்பு. நீட்டு(சப்தத்தை).(சுக்கான்போன்றதை)
இழு. கொடு. குறி. அடக்கு. வந்து பார்.
अभ्यायंसेन्य वि அடக்க, ஆளப்படவேண்டிய
अभ्याशं अ அருகே, அருகே யிருந்து, போய்
अभ्यारोह:, रोहणं (रुह्) மேலுக்கேறல். தியான நிஷ்டையில்
ஏறல். நிலைமாறல். அபிவிருத்தி
अभ्यारोहणीय: पु ஓர் சடங்கு [திரும்பச் சொல்லப்பட்டு
अभ्यावर्त: पु ஆவிருத்தி சொல்லப் படும் ரிக். र्तं अ திரும்பத்
अभ्यावृत् 1 आ போய் நெருங்கு. திரும்பவா. णिच् அணுகு.
अभ्यावृत्त: पु ஹோம சேஷத்திரவியம் [திருப்பிச் சொல்.
अभ्यावृत्ति: स्त्री ஆவிருத்தி. திரும்பித் திரும்பி வரல்
अभ्यास: पु திரும்பல். அனுஷ்டான அப்பியாஸம். வழக்கம். பழக்கம். பட்டாள சிக்ஷை. ஆவிருத்தி சொல்லல், படித்தல், சமீபம். இரட்டித்தல். இலக்கண இரட்டிப்பில் முதலில் வரும் சொல். பெருக்கல். பல்லவி -गत वि நெருங்கின. -परिवर्तिन् वि அருகே திரிகிற -योग: மனதைத் திருப்பித் தீவிரயமாய் லயிக்கச் செய்தல் -लोप: இரட்டித்து வரும் சொல்லின் மறைவு.

-व्यवाय: இரட்டிக்கும் எழுத்தின் நடு இடைவெளி
अभ्यासद् । प அடை. பொருந்து. ணிசூ மேல்விழு.
अभ्यासादनं न சத்துருவை எதிர் நோக்கல், தகைத்தல்.
अभ्याहत त्रि (हन्) அடிக்க. பாதிக்க, தடுக்கப்பட்ட.
अभ्याहार्य वि புசிக்கப்படவேண்டிய. திருடத்தகுந்த हार:
अभ्याहित वि (धा) வைக்க, உடுக்கப்பட்ட पशु: தானவிசேஷம்
अभ्याह । प அருகே கொண்டுவா. ஒப்புவி. கொள்ளையிடு
अभ्युक्त वि ஒன்றைக் குறித்துச் சொல்லப்பட்ட
अभ्युचित वि வழக்கமான.
अभ्युच्चय: पु வளர்த்தி. விருத்தி. செழிமை.
अभ्युच्छ्रित वि உயர்த்த. சிறப்பிக்கப்பட்ட
अभ्युण्डी स्त्री கூட்டிக் கொடுப்பவள்
अभ्युत्क्रुष्ट त्रि ஜயகோஷம் போட்டுத் துதிக்கப்பட்ட
अभ्युत्क्रोशनं न ஜயகோஷம்
अभ्युत्था । प மற்றொருவனுக்காகவாழ்த்த,மரியாதையாய்எழு
अभ्युत्थानं न மரியாதை செய்ய எழல். புறப்படல். உயற்சி
அரு அந்தஸ்து. மேன்மை. ஸூர்யோதயம்
अभ्युत्थायिन् वि மரியாதைக்கு எழுந்திருக்கிற [கிற
अभ्युत्थित वि எழுந்த. உயரேவந்த. உயர்த்தப்பட்ட, ஜ்வலிக்
अभ्युत्पत् ।प நோக்கிப்பற. மேலேபாய் ணிசூ பறக்கடி
अभ्युदय (उदि) वि எழுகிற. य: எழல். ஸூர்ய உதயம். மே
ன்மை. அதிர்ஷ்டம். உற்சவம். சடங்கு. ஆரம்பம்.
நேரிடல். இஷ்டம் நிறை வேறல். க்ஷௌரஸம்ஸ்கா
ரம். குழந்தை பிறந்ததற்காக அதன் அபிவிருத்திக்
குச் செய்யப்படும் சிராத்தம். -अर्थं அபிவிருத்திக்
காக சிராத்தம் -इष्टि: பிராயச்சித்தஹோம விசேஷம்.
अभ्युदि 2 प எழு அரு உதி. ஒருவனை அதிக்கிரமி. உண்டாகு.
நேரிடு. சண்டைசெய். செழி. மேன்மையடை

अभ्युदित वि யார்மேல் ஸூர்யன் உதயமானனோ, ஸூர்யோதயத்தில் தூங்குகிற. உத்ஸவமாய்க் கொண்டாடப்பட்ட ता ஓர் சடங்கு तं எழல். உதயமாதல்(दायिन् वि)
अभ्युद्र वि எழுந்திருக்கிற. மேலே வந்த
अभ्युद्गत वि சந்திக்கப் போகிற. பரப்ப, உயர்த்தப்பட்ட
अभ्युद्गमः, मनं, गतिः स्त्री மரியாதையாக வரவேற்கப் போதல். எழுந்திருத்தல். உண்டாதல். நேரிடல்
अभ्युद्दृष्टं न (நக்ஷத்திரம்) தோற்றமாதல் ष्ट ஓர் சடங்கு
अभ्युद्धृत वि வெளி, உயர எடுக்கப்பட்ட. கேளாமலே அடையப்பட்ட. பிரார்த்தித்தடையப்பட்ட
अभ्युद्यत वि (यं) உயர்த்த, தயாராக்கப்பட்ட. மிக உழலுகிற. வெளிவந்த. தோன்றுகிற. கேளாமலேகிடைத்த
अभ्युन्नत वि உயர்த்தப்பட்ட. மிக உயர்ந்த. மேலே நெட்டிக்கொண்டிருக்கிற
अभ्युन्नतिः स्त्री அதிக உயற்சி, மேன்மை.
अभ्युपगमः । प நெருங்கு. உதவி செய்யப் போ. கூடிப்பழகு. வந்து சேர். அடை. கொடு. செய்ய ஒத்துக்கொள். णिच् இணங்கச் செய்
अभ्युपगमः पु உத்தேசம். போலி. (ஒன்றைப்)போலிருத்தல். -सिद्धांतः ஒப்புக்கொள்ளப்பட்ட ஸித்தாந்தம்.
अभ्युपगमित णिच् वि ஒப்புக் கொள்ளச் செய்யப்பட்ட. ஸம்மதத்தினால் அடையப்பட்ட तः சில நாளைக்கு அடிமையாய் இருக்க வேண்டியவன்
अभ्युपपत्तिः,पादनं स्त्री (पद्)உதவிக்கு நெருங்கல்.உபகாரம்.ஆறுதல்.துக்க சமனம்.பாதுகாப்பு. ஒப்பந்தம்(கடமையாய் இறந்தசகோதரனின் மனைவியைக் கர்ப்பிணியாக்கல்
अभ्युपस्थित वि அநுஸரிக்க, உதவி செய்யப்பட்ட
अभ्युपाकृत वि சடங்கில் வேலை செய்யக் கூப்பிடப்பட்ட

**अभ्युपायनं** न ப்ரீதியினால் கொடுக்கப்படும் தானம். உற்சாகப் படுத்தல். லஞ்சம் (पाय:) உபாயம்

**अभ्युपे** 2 प நெருங்கு. இணங்கு. அங்கீகரி. கீழ்ப்படி. செய்ய ஒத்துக்கொள். ஓர் நிலைக்கு வா

**अभ्युपेत** वि அங்கீகரித்த **पेयिवत्** वि அங்கீகரிக்கிற

**अभ्युपेत्य** अ நெருங்கி. இணங்கி **-शुश्रूषा** ஒப்பந்தப்படி வேலைக்காரன் வேலை செய்யா திருத்தல்

**अभ्युषः अभ्यूषः अभ्योषः** पु போளி. பாதி வெந்த உணவு

**अभ्यु(भ्यू)ष्य, षीय अभ्योष्य अभ्योषीय** वि போளி ஸம்பந்தமான

**अभ्युषित** वि கூட அருகேவஸிக்கிற. **तः** கூடயிருக்கும்தாஸன்

**अभ्यूढ** त्रि அருகே கொண்டுவரப்பட்ட.

**अभ्यूह्** । उ மறை உடு. சதியோசனை செய். ஊகி. தர்க்கி. விட்டதைச் சேர். காரணமறி **अभ्यूहः**

**अभ्येषणं** न இச்சித்தல். நோக்கல். தகைத்தல்

**अभ्योपः** पु நனைத்து வறுத்த கடலை (முதலியன)

**अभ्र्** । प திரி

**अभ्रं** न மேகம். ஆகாசம். அப்பிர(க)ம். பொன். கற்பூரம். பூஜ்ஜியம். நாணல். கோரை **-अवकाशः** மேகங்களேயே ஆச்ரயமான தான மழை **-अवकाशिकः, काशिन्** त्रि மழையில் நனைகிற **-उत्थः** வஜ்ராயுதம். ஆகாசத்தில் பிறக்கிற இடி **-कूटं** (மலைபோன்ற) மேகத்தின் சிகரம் **-गंगा** ஆகாச கங்கை **-घनः** மேகத்திரள் **-जा** वि மேகத்திற்பிறந்த. ஆவியாலுண்டான **-नागः** பூமியைத் தாங்கும் பல யானைகளிலொன்று. ஐராவதம் **-पथः** ஆகாசம். புகை கூண்டு. விமானம் **-पिशाच(क)ः** ஆகாச பிசாசான ராகு **-पुष्पः** வஞ்சிக்கொடி **-पुष्पं** நீர். அஸம்பாவிதமான ஆகாசத் தாமரை **-प्रुष** ஸ்ரீ மேகங்களின் தெளிப்பு. மழை **-मांसी** ஜடாமாஞ்சிச் செடி **-मातंगः** ஐராவதம். **-मार्द्वः**

முள்ளங்கி -माला, वृन्दं மேகவரிசை, தொடர்ச்சி -रोहं வைடூர்யம் -लिप्ती அல்ப மேகமுள்ள ஆகாசம். கோ ரைப்புல்லால் பூசப்பட்டிருப்பவள் -वर्षं त्रि மழை, நீ ரால் நினைக்கப்பட்ட -वर्षः மழை கொட்டல்-वाटिक, கா இருளிமரம்- विलायं अ மேகங்கரைவது போல்

**अभ्रंलिह** वि மேகத்தைநக்குகிற. மிகவுயர்ந்த हः காற்று

**अभ्रकं** न அபிரேகம்-भस्मन् அப்பிரகத்தூள் -सत्वन् எஃகு

**अभ्रंकष** वि மேகங்களைப் பிருண்டுகிற. மிகவுயர்ந்த षः காற்று.

**अभ्रायते** ना अ மேகமுண்டாக்கு. மப்பாக்கு [மலை

**अभ्रमुः** स्त्री ஐராவதத்தின் பெட்டையான கிழக்குதிக்கஜம்

**अभ्रातृव्य** वि விரோதி, போட்டியில்லாத

**अभ्रि., श्री** स्त्री ஓடத்தைக் கழுவமரத்துடுப்பு, குந்தலி. மண் வெட்டி. கட்டப்பாரை-खातं உழுதநிலம்

**अभ्रित** वि மேகம் மூடின.

**अभ्रिय** वि மேகத்திலுண்டான, ஸம்பந்தமான यः மின்னல்

**अभ्रियं** न கர்ஜிக்கும் மேகக்கூட்டம்

**अभ्र्यूः** पु நிர்வாணமான அவதூத ஸந்நியாசி.

**अभ्व** वि பெரிய. பலமுள்ள. त्वं அதிக பலம், ஸ்தூலம்.

**अम्** अ விரைவில். கொஞ்சம்.

**अम्** 1 प போ. அணுகு. உபசரி. சப்தி. புசி 10 प णिच् நோயால் தாக்கப்படு. सं+ தீர்மானித்துக்கொள். ஒன்றோடுஸம்பந் தப்படு. பொருந்து.

**अम** वि பழுக்காத. मः போதல். பலம். பயம். நோய். துணை வன். பிராணன். ஆத்மா. அளவிடப் படாத் தன்மை

**अमंगलः अमंडः** पु சித்தாமணக்கு. [=मा ஜீவன்

**अमतः** पु நோய். சாவு. காலம். தூசி

**अमति** वि துஷ்டையான. கெடுக்கப்பட்ட तिः पु வஞ்சகன். காலம். சந்திரன். உருவம். ஏழ்மை. स्त्री தெரியாத்த

नम्-पूर्वं वि நினைவுதவறின. இஷ்டமில்லாத
अमतीवत वि துஷ்டையான. ஏழையான
अमत्र वि ஜயிக்கிற. செல்லுந்தன்மையுள்ள त्रं பாத்திரம் பலம். (मन् वि)
अमधन्य वि தித்திக்காத. ஸோமருசிக்குத்தகாத
अमनस् , स्क वि கவனியாத. பற்றில்லாத .न नः அறியாமை. கவனியாமை. पु பிரம்மம். -गत அறிய, யோசிக்கப் படாத -नीत, ज्ञ நிந்திக்கப்பட்ட. கெட்டுப் போன -योगः ஏகாக்கிரசித்தமின்மை. -हर वि இஷ்டமில்லாத
अमनस्विन् वि அர்த்தமாகாத.(பிசாசுபோல்) அமானுஷமான
अमनिः स्त्री போக்கு. வழி.
अमनुष्य वि மனுஷ்யத்தன்மை, ஸஞ்சாரமில்லாத ष्यः பேய்.
अमनोम वि ஸந்தோஷியாத
अमंतु वि மூடனான. ஸாதுவான. அலக்ஷியம் செய்கிற
अमंदः पु விருக்ஷ விசேஷம்
अमन्यमान वि தெரிந்திராத. வணங்கி மரியாதை செய்யாத
अमन्युत वि அன்னியனிடம் துரெண்ணமிராத
अमम वि உலகப்பற்றற்ற मः ஜைனமுனி अममता,त्वं உதாஸீ [னம்
अमत्रि वि நாசமில்லாத. நித்தியமான
अमर वि சாகாத. „ रः தேவதை. ஓர் மருத். சதுரக்கள் ளிச்செடி. பாதரஸம். பொன். மொகிழ மரம். (தேவதைகளின்தொகையாகிய) 33. அமரஸிம்ஹன். உகாராக்ஷர ஸூசகம். எலும்புக்குவியல் रा, री அமராவதி. நாபிக்கொடி. கர்ப்பப்பை. தூண். அருகு சிந்தற்கொடி. கள்ளிச்செடி. री தேவதாஸ்திரீ -अद्रिः மஹாமேரு பர்வதம் -इंद्रः, भर्ता,राजः இந்திரன். சிவன். விஷ்ணு. -अन्नं நெய். -इज्यः गुरुः, பிரஹஸ்பதி -आपगा स्त्री ஸ்வர்க்க நதியான கங்கை -आलयः ஸ்வர்க்கம் -उत्तम

वि தேவதைகளுட் சிறந்த -उपम वि தேவதை போன்ற -कंटकं நர்மதையாற்றினருகே யிருக்கும் விந்திய பர்வத பாகம் -कोशः,षः அமரஸிம்ஹரின் நிகண்டு -जः ஓர் மரம் -तरुः, दारुः தேவதாரு மரம். கற்பக விருக்ஷம். தேவலோக மரம் -द्विजः அர்ச்சகன். கோயில் மணியகாரன் -पुरं ஸ்வர்க்கம் -पुष्प(क): கற்பக விருக்ஷம். ஓர்ப் புல். தாழை. पुष्पिका சோம்புவிரை -प्रख्य, प्रभ वि தேவதை போன்ற -प्रभुः விஷ்ணு -माला ஓர்நிகண்டு- रत्नं பளிங்கு -लोकता ஸுவர்க்கானந்தம் -वल्लरीகொடி விசேஷம்-सर्षपा வேளைச் செடி -सिंहः விக்ரமாதித்யராஜனின் நவரத்தினங்கள் போன்ற 9ஆஸ்தான பண்டிதர்களுள் ஒருவரும் அமரநிகண்டுவுக்குக் கர்த்தாவுமான ஓர் ஜைனயர்

**अमरावती** स्त्री மேருவின் சிகரத்திலிருக்கும் தேவநகரி

**अमरिष्णु** वि சாச்வதமான

**अमरुः** पु அமருசதகம் நூலைக்கவனம் செய்த ஓர் அரசன்

**अमर्त** वि சாச்வதவான

**अमर्यादा** स्त्री வரம்பு கடத்தல். அலக்ஷியம் செய்தல்

**अमर्षहासः** கோவச் சிரிப்பு. பரிஹாஸ நிந்தை.

**अमल** वि வெண்மையான. பிரகாசிக்கிற ला லக்ஷ்மி. தொப்புள் கொடி. நிலநெல்லி. लं அபிரேகம். பிரம்மம் - आत्मन् वि சுத்தமான, கெடுதியடையாத மனதுடைய -पवित्रिन् पु பக்ஷி விசேஷம் रत्नं, मणिः பளிங்கு.

**अमलयति** ना. प சுத்தமாக்கு. ஒளிப்பி

**अमलावती** स्त्री வருண பட்டணம்.

**अमलिन्** वि சுத்தமான. தோஷமில்லாத.

**अमवत्** वि மும்மரமான. புயலான(காற்று). ஓயாத. தகுந்த. முடியுமான. மந்திரிகளால் சூழப்பட்ட. நோய்களால் பீடிக்கப்பட்ட. அஹங்காரமுள்ள अ மும்மரமாய்

अमविष्णु त्रि பலதிக்குகளில், மேலும் கீழும் போகிற
अमसः पु வியாதி. காலம். மூடன். மூடத்தனம் स्तु தயிர்
अमा वि அளவற்ற. अ வீட்டில். இவ்வுலகில். கூட. கிட்டே
अमा स्त्री அமாவாஸை. சந்திரனின் 15, 16 வது கலை. ஜீவன்
-अक्त वि ஒன்று கூடின -अंतः அமாவாசையின் முடிவு
-जुष् स्त्री வாழ்நாளில் வீட்டிலிருக்கிற. கணவனின்
றிப் பெற்றோர்களோடு ஒரே வீட்டிலிருக்கிற - पर्वन्
அமாவாஸை திதி
अमांस वि சதையில்லாத. இளைத்த -ओदनिक சோற்றோடு
மாம்ஸம் கலந்து தயாரிக்கப்பட்டதைச் சேராத
अमात् अ அருகேயிருக்கும். त्रि அளக்காத
अमातृभोगीण त्रि தாயினுபயோகத்திற்குத்தகுதியற்ற
अमात्यः पु (வீட்டில்) கூடவேயிருப்பவன். தோழன். மந்திரி.
अमात्र वि அளவிடமுடியாத. பூர்ணமில்லாத. மூலம், ஆர
ம்பமாயிராத. अ எழுத்து அளவுள்ள
अमात्रं न அளவின்மை. ஓர் அளவில்லாத. त्रः பிரம்மம்
अमात्रवत्वं न ஆத்மா. ஆத்மஸாரம். குறை.
अमाननं, ना स्त्री அவமரியாதை. கீழ்ப்படியாமை
अमानस्यं न துன்பம். வலி.
अमानुष विमனித ஸம்பந்தமில்லாத. பிசாசுபோன்ற. குடியில்
லாத षः, षी மனிதனல்லாதவன். சாது மிருகம்
अमानुष्य वि தைவீகமான
अमाय वि கபடமில்லாத. அளக்க முடியாத या யோக்கிய
தை. நியாயம். பிரம்மக்ஞானம் यं பிரம்மம்
अमार्ग त्रि வழியில்லாத र्गः. வழியில்லாத கெட்ட வழி.
अमाम(मा) सी, व(वा)सी, व(वा)स्या स्त्री ஸூர்யசந்திரர்சேரும்
தினமான அமாவாஸை. அன்று செய்யும்ஹோமம்,
யாகம்

अमावास्य (क वि அமாவாஸையிரவு பிறந்த. உண்டான
अमित वि அளக்கப்படமுடியாத. எல்லையில்லாத. பெரிய. தவிர்க்க, அவமதிக்கப்பட்ட. அறியப்படாத. பளபளக்கச் செய்யப்படாத.-अक्षर वि நிலையான அக்ஷரங்களில்லாத. வசனரூபமான-अशन: விழுங்குந் தன்மையுள்ளவன். சிவன். விஷ்ணு. -आभ:தேவதைகளின்ஓர்ப்பிரிவு -क्रतु विஅபரிமிதமான அறிவு,சக்தியுள்ள-विक्रम. விஷ்ணு
अमित्र: पु சிநேக மில்லாதவன். போட்டிக்காரன். விரோதி. =त्रा-खाद् இந்திரன் = स(सा)ह वि விரோதிகளைஜயிக்கிற
अमित्रयति ना. प. आ எதிரிபோல் நடி. பகை. விரோதித்துக்
अमित्रिन्, अमित्रीय, य्य वि பகைக்கிற. விரோதமுள்ள [கொள்
अमिथित वि தூஷிக்க, கோபமூட்டப்படாத
अमिन् वि நோயுள்ள न மீறக் கூடாத. ஏராளமான
अमीनत् वि துன்பப் படுத்தாத
अमिश्र, श्रित वि கலக்கப்படாத. இதரர்களால் பாகித்துக் கொள்ளப்படாத.
अमिषं न யோக்கியதை. மாம்ஸம். விசேஷ போகம்
अमीड:, डा स्त्री செம்மறியாடு. [டைய
अमीत वि அலட்டப்படாத वर्णा: அவிக்கக்கூடாத வர்ணமு
अमीवं न துன்பம். பாவம் व: விரோதி. ஹிம்ஸிப்பவன்
अमीवा स्त्री நோய். துன்பம். பயம்
अमुक वि (தெரியாத ஒரு பொருள், மனிதனைக் குறிக்க) பலானது (என்பது)
अमुक्त न (கத்தி, வாள் போல் ஸதா தரிக்கப்படும்) ஆயுதம் -हस्त वि திறந்த,தாராளமானகையில்லாத.சிக்கனமான
अमुक्ति: अमुचू स्त्री ஜனனமரணவிமோசனம்,சுதந்திரமின்மை
अमुची स्त्री (பிசாசைப் போல்) சுதந்திரமாயிருக்க விடாமை.

अमुतः अ அங்கே. அங்கிருந்து. அவ்விடத்திலிருந்து. மேலே யிருந்து. வேறுலகிலிருந்து. அதின்பேரில். அதன் மேல். இனி

अमुत्र अ அங்கே. அவ்விடத்தில். (சொன்ன) அவ்விஷயத்தில். வேறுலகில். ஜன்மாந்திரத்தில். அவ்விடத்திற்கு -भूयं வேறுலகிலிருக்கிற. சாகிற.

अमुत्रत्य वि வருஞ்ஜன்ம ஸம்பந்தமான. வேறுலகிலிருக்கிற.

अमुथा आ இப்படி. இதைப்போல் अस् இப்படியிருக்கவேண் [டிய

अमुया अ இந்தப்பிரகாரம். இவ்விவ்வாறு

अमुर्हि अ பிறகு. அந்த ஸமயத்தில் [போல்

अमुवत् अ பெயரைக் குறிக்காமல் பலானவனை, வஸ்துவைப்

अमुष्य அப்படிப்பட்ட -कुलं பிரஸித்தமான குலம் -पुत्रः, त्री அப்படிப்பட்ட பிரஸித்தமான நற்குலத்தில் பிறந்த பிள்ளை, பெண்

अमुष्यायण वि நற்குலத்திற் பிறந்த

अमूदृश, श, क्ष वि இவ்வண்ணமான. அப்படிப்பட்ட

अमूर्त वि அசரீரியான र्तः சிவன் -गुणः தர்மா தர்மங்கள் போன்ற ரூபமற்றதான குணம்.

अमूर्तिः पु விஷ்ணு स्त्री ரூபமற்ற தன்மை पु ब குறிப்பான ரூப மில்லாத ஓர் பிதிர் வர்க்கம்

अमूर्तिमत् वि ரூபமில்லாத पु விஷ்ணு

अमूल(क वि வேரில்லாத. अक ஆதாரம், ஹேதுவில்லாத. பிரமாணமில்லாத. மூலத்திலில்லாத. பூமியில் பொ றுத்தப்பட்டிராத. அசைகிற ला குப்பை மென்னி

अमूल्य वि விலையில்லாத. விலைமதிக்க முடியாத

अमृक्त वि உபத்திரவிக்கப்படாத. கழுவப்படாத.

अमृणालं न வெட்டிவேர்.

अमृत वि இறவாத. சாச்வதமான. அழிக்கமுடியாத. நித்தி

யத்துவமளிக்கிற. அழகான. இச்சிக்கத் தக்க

**अमृतः** पु தேவதை. தேவவைத்தியரான தன்வந்தரி. இந்திரன். ஸூர்யன். பிராஜாபதி. ஜீவன். சிவன். விஷ்ணு. காட்டுப் பயறு. மருளின் வேர். ता காடிச்சாராயம். நெல்லி. கடுக்காய். சிந்தற் கொடி. துளஸீ. ஒருவிதக் கீரை. கோவை. அதி விடயம். அருகம்புல். ஓர் நாடி. ஓர்க் கிரணம், சந்திரகலை त् சாகாத் தன்மை. முக்தி. தேவகணம். ஸ்வர்க்கம். சாகாவுலகம். நித்திய காந்தி. தேவாமிருதம். ஸோமரஸம். விஷத்தைத் திருப்பு மருந்து. யாக, ஹோமசேஷம். யாசியாமல் கிடைத்தது. நீர். மூலிகை. நெய். பால். உணவு. சோறு. ருசியுள்ள வஸ்து. சொத்து. பொன். பாதரஸம். விஷம். வத்ஸநாப விஷம். பிரம்மம். ஓர் புண்ணிய பூமி. வார நக்ஷத்திர, திதிவாரச் சேர்க்கை. எண் 4. காந்தி. ஆகாசம். ருசியான ஔஷதம். ஸோமயாக ஹவிஸ் **-अंशुः, करः, दीधितिः, द्युतिः , निर्गमः, रश्मिः** சந்திரன். **-अक्षर** वि நசிக்க முடியாத. சாச்வதமான **-अंधस्, अशनः, आशिन्** पु அமிர்தத்தை யுணவாகவுடைய தேவன் **-असु** वि அழியாத ஜீவனையுடைய **-आशः** விஷ்ணு. தேவதை **-आसंगः** ஓர் விதமை **-आहरणः** அமிர்தத்தைத் திருடினவனான கருடன் **-इष्टका** பசு, மனிதமுகம் போன்ற உருவமுள்ள யாகசாலைச் செங்கல் **-ईशः, ईश्वरः** சிவன் **-उत्पला** ஈ **-उत्पलम्, उद्भवं** ஓர் மை. **-उद्भवः** வில்வ மரம் **-उद्भूतः** வெங்காயம் **-कुंडं** தேவாமிருதமுள்ள பாத்திரம் **-क्षारं** நவாசாரம் **-गतिः** 40 அக்ஷரங்களுள்ள விருத்த விசேஷம் **-गर्भं** நீர், தேவாமிருதம் நிரம்பிய **-गर्भः** ஆத்மா **-चितिः** स्त्री நித்தியத்துவமளிக்கிற யாகச் செங்கல்களின் அடுக்கல், சயனம் **-ज** वि தேவாமிரு

தத்திலிருந்துண்டான -जः நெல்லி பேதம். -जटा ஜடாமாம்ஸி -तरंगिणी நிலவு -तिलका த்வரிதகதி யென்னும் விருத்த விசேஷம் -द्रव वि அமிருதத்தை வர்ஷிக்கிற -द्रवः அமிருதப் பெருக்கு -धार அமிருதத்தை வர்ஷிக்கிற -धारा ஓர் விருத்தம். அமிருதப்பெருக்கு. -पः அமிருத பானம் பண்ணுகிறவனான தேவதை. விஷ்ணு. மதுபானம் செய்பவன் -पक्षः ஸ்வர்ண, நித்திய ரக்கைகளையுடைய ஓர்ப் பருந்து விசேஷம். யக்யாக்கினி -पत्रकः மயலயடிச் செடி -फलः புடலஞ் செடி. விருக்ஷ விசேஷம் -फला திராக்ஷை. நெல்லி -फलं ஓர் வகை அத்தி மரம். -बंधुः தேவதை. சந்திரன். குதிரை. -भल्लातकी ஓர் லேஹியம் -भुज् पु தேவதை -भू பிறப்பற்ற -मतिः 40 அக்ஷரங்களுள்ள விருத்த விசேஷம். -मंथनं அமிருதத்திற்காகக் கடலைக் கடைதல் -मालिनी துர்க்கை -योगः வார நக்ஷத்திரப் பொருத்தம் -योनिः சந்திரன். மன்மதன் -रसः தேவாமிருதம். பிரம்மம் -रसा கருப்பு திராக்ஷை. ஓர் வித அடை -लता, लतिका, वल्ली சீந்தர்க் கொடி -वाक தேனொழுகப் பேசுகிற -संयावं ஒருவித போஜன பதார்த்தம் -सार वि அமிருதமான -सारः நெய் -सारजः பாகு -सूः, सूतिः அமிருதத்தைப் பெருக விடுகிற சந்திரன். தேவ மாதாவான அதிதி -सोदरः அமிருதத்தோடு கூடப் பிறந்த உச்சைச்ரவஸ் (முதலியன). குதிரை -स्रवः அமிருதக் கசிவு -स्रावा ஓர் செடி -स्रुत् वि அமிர்தத்தைப் பெருக விடுகிற

अमृतका स्त्री நெய்

अमृतमय वि (यी स्त्री) தேவாமிருதமான. சாகாத

अमृतकं न சாகாத்தன்மையை யளிக்கும் தேவாமிருதம்

अमृताफलं न புடல்ங்காய்.

अमृतायते ना. आ தேவாமிருதம் போலிரு [விஷ்ணு
अमृतेशय: पु (பார்க்கடல் மேல் பள்ளிகொண்டிருக்கும்)
अमृत्तिः स्त्री அமிருதக் கிண்ணம்
अमृत्यु वि சாச்வதமான. நித்தியத்துவமளிக்கிற -त्यु: சாகாமை
अमृध्र वि தாக்க முடியாத. வஜ்ரசரீரமான. ஓயாத [விஷ்ணு.
अमृषोद्यं न உண்மை
अमृष्ट वि தேய்க்கப்படாத -मृज वि பரிசுத்தமான
अमृष्य: पु விரோதி
अमेदस्क वि கொழுப்பில்லாத. இளைத்த
अमेधस् वि மூடனான. மூடன்
अमेध्य त्रि யாகத்திற்குத் தகாத. பரிசுத்தமில்லாத ध्यं மலம். அபசகுனம் -कुणपाशिन् वि அழுகின மாம்ஸத்தை யுண்டு ஜீவிக்கிற -युक्त, लिप्त त्रि அழுக்கடைந்த.
अमेन त्रि மனைவியில்லாத. இறந்தமனைவியோன். துன்பப் படுத்தாத
अमेय त्रि அளக்க முடியாத. எல்லையில்லாத. அறிய முடியாத -आत्मन् वि உதாரகுணமுடைய पु விஷ்ணு
अमेष्ट वि வீட்டிலேயே ஹோமம், யக்யம் செய்கிற
अमैथुन: पु பிரம்மசாரி
अमोक्य त्रि கட்டப்படாத
अमोघ वि தவறாத. குறியை யெட்டுகிற. ஸபலமான. घ: பிசகாமை. விஷ்ணு. சிவன். ஓர் நதி घा பாதிரிமரம். வாயுவிளங்கம். ராமபாணம். சிவனின்பத்னீ -दंड: தண்டிப் பதில்பிசகாதசிவன் -दर्शिन्, दृष्टि त्रि நினைவில் பிசகில் லாத-बल त्रि எப்பொழுதும் வீணாகாதவீர்யமுள்ள -वाच् स्त्री வீணான சொல்லில்லாத. நிறைவேற வேண்டிய வி பலிக்காத சொல்லையுடையாதவன் -वांछित त्रि எப்பொழுதும் ஏமாறாத -विक्रम: தவறாத சத்தியுடைய சிவன்

**अमोत** वि ஓரங்கள் வெட்டப்படாத. வீட்டிலேயே நெய்ய, கார்க்கப்பட்ட **पुत्रका** வீட்டிலேயே ரக்ஷிக்கப்படும் கன்னிகை.

**अमोतकः** पु வீட்டிலேயே ரக்ஷிக்கப்படுபவன். சிசு.சேணியன்

**अमौनं** न மௌன மின்மை. ஆத்மக்ஞானம்

**अम्नस्** अ அறியாத. தற்காலத்தில். கொஞ்சம்

**अंब्** 1 प போ. அசை आ சப்தி

**अंबः** पु தகப்பன். சப்தம். வேதம். சப்திக்கிறவன். **बं** கண். நீர் **ब** **अ** சரி. நல்லது

**अंबकं** न கண். தகப்பன். செப்பு. **कः** பாணம்.

**अंबया** தாய் (மரியாதைப் பட்டம்) அம்மா. நீரை தரித்தல்.

**अंबरं** न ஆகாசம். உடை. மஞ்சள். அபிரேகம். ஓர்ப்பரிமளம் பஞ்சு. ஓர் ஜனம். சுற்றளவு. விளிம்பு. பக்கதேசம். இடம், உதடு. கெடுதி. பாவம். யானைகளைக் கொல்லுபவன். உயிரெழுத்தைச் சார்ந்த அனுஸ்வாரக்குறி **-अंतः** துணியோரம். அடிவானம் **-ओकस्** पु ஸ்வர்க்கத்தில் வஸிக்கிற தேவதை **-दं** பஞ்சு - **मणिः** ஸூரியன் **-युगं** அரை மேல் வேஷ்டிகள் **-लेखिन्** वि ஆகாசத்தை எட்டுகிற **-शैलः** ஆகாசத்தை அளாவும் மலை **-स्थली** பூமி

**अंबर्यति** ना. प சேர்த்துக் கொண்டுவா

**अंबरीषं, षः** पु வாணுப். துயரம். சண்டை. ஓர் நரகம். குட்டி. குதிரைக் குட்டி. மழை. ஸூரியன். வில்வமரம், விஷ்ணு. சிவன். ஏகாதசி விருதத்தை நன்கனுஷ்டிப்பதில் பிரஸித்தி பெற்ற ஓர் விஷ்ணு பக்த ஸூர்ய குலத்தரசன்

**अंबष्ठः** पु பிராம்மணனுக்கும் வைச்ய ஸ்திரீக்கும் பிறந்த சிகித்ஸை செய்யும் ஓர் மிச்ரஜாத்யன். யானைப் பாகன் **ब** தேசபேதம், ஜனம். **ष्ठा** காட்டு முல்லை. பொ

ன்னுங்கணி. வட்டத்திரிப்பி. புளியாரை செவுங்கனூர்ப் பூண்டு முதலிய செடிகள். அம்பட்டஸ்திரீ = ष्ठी

**अंबष्ठकी स्त्री** அம்பஷ்ட ஜாதி ஸ்திரீ

**अंबा स्त्री** (நாடகத்தில்) தாய். அம்பணி (உத்திமியைக் கூப்பிட). செடி விசேஷம். சிவனின் பத்னியான துர்க்கை. நெய். பாண்டுவின் தாயின் சகோதரி. ஜ்யோதிஷத்தில் நான்காவது நிலை.

**अंबाडा, ला** தாய்

**अंबायुः स्त्री** தாய்.

**अंबालिका स्त्री** தாய். அம்மணீ. செடி விசேஷம். விசித்ர வீர்யனின் மனைவியும், வியாஸரால் பாண்டுவின் தாயாருமான காசி ராஜனின் கடைசிப் புதல்வி.

**अंबिः स्त्री** நீர். ஸ்திரீ. தாய். தாதி.

**अंबिका स्त्री** தாய். அம்மணி. செடி பேதங்கள். புளியன். தக்கோலம். மாமி. சிவனின் மனைவி. விசித்ரவீர்யனின் மனைவியும் வியாஸரால் திருதிராஷ்டனைப் பெற்றவளுமான காசி ராஜனின் நடுப்புதல்வி -कः மோசக்காரன் -सुतः திருதிராஷ்டன்

**अंबिकेय(क): पु** விநாயகர். கார்த்திகேயன். திருதராஷ்ட்ரன்

**अंबु न** நீர். ரத்தத்தில் நீர்ப்பாகம். ஓர் விருத்தம். ஜ்யோதிஷத்தில் நான்காம் ஸ்தானம். -कंटकः முதலை. = -किरातः -कीशः, कूर्मः கடல்பன்றி -केदारः விருக்ஷ விசேஷம் -क्रिया பிதிர் தர்ப்பணம் -घनः கல் மழை -चत्वरं ஏரி -चामरं கொத்துப் பாசி -जः, जन्मन् சந்திரன். கற்பூரம். ஸாரஸப்பக்ஷி. சங்கு. நீர்வஞ்சி -जं தாமரை. வஜ்ராயுதம் -तस्करः (நீரை யுலர்த்தும்) ஸூரியன் -तालः பாசி -दः நீர் தரும் மேகம் -धरः கோரை. அபிரேகம் -धिः ஜலாசயம். கடல். எண் 4. -धिः प्रसवा ஓர்ச் செடி. -निधिः

கடல். -पः கடல். வருணன். தகரச்செடி =-पत्रा-पद्धतिः, पातः மலைவீழாறு. நீர்ப்பெருக்கு-पुष्पं நீர்க் கீரை -प्रसादः, प्रसादनं தேத்தான் கொட்டை மரம் -सवं தாமரை -भृत् पु நீரைச்சுமப்பது. மேகம். கடல். பெரும் முத்தக்காசு. அபிரேகம். -मर्कटः முதலை -मात्रज நீரிலுண்டான जः பலகாரை -मुच् पु மேகம். -राजः வருணன். கடல் -राशिः ஜலசேகரம், ஆதாரம். -रुह् न ஸாரஸப் பக்ஷி. தாமரை =-रुहः, हं-हा நிலத்தாமரை. -रोहिणी தாமரை -लक्ष्मी நீத்தாளி. -वाची பூமிக்கு ரஜஸ்வலைத்திட்டான அசுத்தத்தால் உழக் கூடாத காலமான ஆடி கிருஷ்ண தசமி முதல் திரயோதசி வரையலான 4 தினங்கள் -वासिनी, वासी பாதிரிச் செடி. -वाहः மேகம். ஏரி. நீர் சுமப்பவன். எண் 17. ஒருவகைப் புல் -वाहिनी மரத் தொட்டி. நீர் கொண்டு வருபவள். ஓர் நதி -विहारः ஜலக் கிரீடை -वेतसः நீர் வஞ்சி -शिरीषिका செடி விசேஷம் -सरणं நீர்ப் பெருக்கு -सर्पिणी அட்டை. -सारं முத்து -सेचनी இறைக்கிற சால் -स्फोटः நீர்க்குமிழ்

अंबुमत् वि நீர் மயமான. நீருள்ள -ती ஓர் நதி

अंबूकृत वि எச்சில் தெரிக்கத் தெளிவின்றிப் பேசுகிற -तं துப்பிக்கொண்டு, உதட்டை மூடிப் பேசல். காடியினு [ருமல்

अंव्यः पु பாடகன்

अंभ् I आ சப்தி

अंभस् न நீர். ஆகாசம். ராசிசக்கிரத்தில் 4வது குறி. वं எழுத்து. தேவதை. மனிதன். பிதிர்லோகம். ராக்ஷஸன். அஸுரன். ஜீவனின் லயம். ஆனந்தம். பயன். சக்தி. காந்தி द्वि பூமியும் ஸ்வர்க்கமும் ब தேவர்கள், மனிதர்கள், பிதர்க்கள், அஸுரர்கள் -दः, धरः மேகம். கோரைக்கிழங்கு -रुह्, हं தாமரை -रुहः கொக்கு - सारं

முத்து -सुः புகை. மேகச் சூழ்ச்சி स्थ நீரையுடைய.

अंभोजजनिः,योनिः, जन्यन् पु பிரம்மா

अंभोजिनी தாமரைக் கொடி, ஓடை, குவியல்

अंभोधिपल्लवः, वल्लभः पु பவழம்.

अंभृण वि பெரிய. கர்ஜிக்கிறன:ஸோமரஸத்திற்குப்பாத்திரம்

अम्मय वि நீரா லுண்டான. ஜல விகாரமான

अम्यक् अ நோக்கி. அருகே.

अम्रः, म्रातकः இருளி, எருப்புமா மரம்.

अम्ल त्रि புளிப்பான. म्लः புளிப்பு. காடி. கிடாரை. ஏப்பம். நீர் வஞ்சி பேதம் म्ली புளியரத்தை म्लं காற் பங்குநீர் சேர்க்கப்பட்ட புளித்த மோர், தயிர் -अक्त वि புளிப் பாக்கப்பட்ட -अंकुशः புளிவஞ்சிக்கரணை -अध्युषितं கண் ணோய் -उद्गारः புளித்த ஏப்பம் -कांडं செடி விசேஷம் -केशरः கிடாரை-चुक्रिका, चूडा வஞ்சி பேதம் -जंबीरः,निंबकः எலிமிச்சை -नायकः புளிபரத்தை -निशा சிறு இரண்டஞ் செடி -पंचकं, पंचफलं எலிமிச்சை,நரிநாவல்,புளியன்,புளி யரத்தை,மாதுளை மரங்கள் -पुत्रः செம்பைச்செடி -पुत्री செடிபேதங்கள் -पनसः ரஸஎலிமிச்சை-पित्तं குடலிலிருக் குப் புளித்தநீர்-पूरं புளியன்-फलः,फलं புளி -भेदनः புளிய ரத்தை-मेहः மூத்திர வியாதி-रुहा மாளவதேசவெற்றிலை -लोणिका, लोणी, लोलिका புளியாரை -वर्गः புளிப்பான செடி, இலை, காய்கள் -वल्ली செடி விசேஷம் -वाटकः வில்வம் -वाटिका ஓர் வெற்றிலை -वस्तूकः புளியரத்தை -वृक्षः புளியன் -वेतसः புளிவஞ்சிக்கரணை = -शाकः, शाकं புளியரத்தை -सारः எலிமிச்சை. கூந்தற்பனை -सारं கஞ்சி -हरिद्रा இண்டஞ் செடி

अम्लकः पु ரஸ எலிமிச்சை

अम्लानं न தாமரை नः வாடாக்குரிஞ்சி

अम्लानिन् वि வாடாத னி தாமரைக் குவியல்
अम्लायनः पु மஞ்சள். குறிஞ்சி
अम्लि(म्ली)का स्त्री புளித்த ஏப்பம். புளியன். புளியரத்தை
अम्लिकावटकः पु புளித்தமாவுத்தப்பம்
अम्लिमन् न अम्लः புளிப்பு
अय् । आ போ
अय वि போகிற यः சலனம். ஜன்மாந்திரபுண்ணியம். அதிருஷ்டமுள்ள. சொக்கட்டானட்டத்தில் வலப்பக்கத்தில் வைத்தல், பாச்சிகை. கப்பம் -अन्वित,अयवत् அதிருஷ்டமுள்ள.
अयक्ष्म वि க்ஷயரோகமில்லாத. ஆரோக்கியமான क्ष्मं ஆரோக்கியம் = -ताति:
अयजुष्क वि யாக ஸம்பந்தமான மந்திரமில்லாத
अयज्ञ वि யாகம் செய்யாத ज्ञः யாக மின்மை. கெட்டுப்போன யாகம் -साच्च वि யாகம் செய்யாத -க்யாகத்திற்குற்குத் தகாத
अयज्ञिय वि யாகம் செய்ய யோக்கியதையில்லாத. ,, லௌகிகமான. தூஷணையான
अयज्यु वि அனசாரமான. யாகத்தைக் கெடுக்கிறவன்
अयज्वन् वि ஆசாரமாய் யஜிக்காத. அவைதிகமான
अयत् वि முயலாத.
अयतिन् वि அடக்கப்படாத காமமுள்ள. கடிவாளமற்ற
अयतिः स्त्री விரஹதாபம். பிரிவாலுண்டான துயரம்.
अयत्न वि முயற்சிவேண்டியிராத त्नः யத்தனியாமை त्नतः பிரயாசையின்றி, எளிதில் -कारिन् वि முயலாத. அக்கறையில்லாத
अयथं न கால்
अयथा अ வேறு விதமாக. தகாத. பிசகாக थं முயலாமல் -अर्थ वि கருத்திற் கொவ்வாத. உளரலான. பொருந்

தாத -अनुभवः பிசகான கொள்கை -इष्ट वि இச்சிக்கப் பட்டது போவிராத. வெறுக்கப் படுகிற. போதாத -उचित वि தகாத =-तं अ -तथ वि இல்லாத. தகாத. வீணான =-तथं -तथ्यं இணங்காமை. பொய்யாகுதல் -द्योतनं எதிர்பாராத ஸம்பவம் -पुर, पूर्व वि முன் நடந்திராத -वलं अ பலத்தை அதிக்கிரமித்து -मुखीन वि திருப்பப் பட்ட முகமுடைய -वृत्त वि பிசகாய் நடக்கிற

अयथावत् अ பிசகாய். தகாதபடி முறை தப்பி.

अयन वि (स. अ தில்) போகிற. ஸந்ததியாய் வந்த नं சலனம் அசைவு. நடை. வழி. வீடு. தங்குமிடம். ப்ரவேசம். வ்யூஹம். காலச் சுழற்சி. சில கிரியா விசேஷங்களுக் குரியகால விசேஷங்கள். ஸூர்யகதி. இதற்கு ஆகும் 6 மாதக்காலம். (உத்திர தக்ஷிணங்கள்). பத்ததி. சாஸ்திரம். முக்தி. வியாக்கியானம். அயனங்களின திஷ்டான தேவதை -कालः இரு அயனங்களின் மத் திய காலம் -जः அயனத்தைச் சேர்ந்தமாதம் -संक्रमः, संक्रांतिः ஸூர்யன் எதிர் திக்கை நோக்கித் திரும்பும் வழி -वृत्तं ஸூர்யகதி

अयंत्र न அடக்கப்படாமை. சத்துருவை யடக்க ஓர் பல முள்ள ஆயுதம்.

अयमित वि சுயேச்சையான. கத்தரித்து ஒழுங்கு படுத்தாத.

अयव वि குறைவான. யவையில்லாத. वः மலப்புழு. கிருஷ்ண பக்ஷம். இணங்காத சத்துரு

अयस् चि சுறுக்கான. அசைகிற न இரும்பு. எஃகு. பொன். உலோகம். அகில். இரும்பாயுதம். போதல். ஆனந் தம். மண்டூரம் पु அன்னம் - अग्रं, अग्रकं, உரல். சுத்தி -अपाष्टि वि இரும்பு நகங்களையுடைய -कांडः இரும்பு பா ணம், குவியல். நல்ல இரும்பு -कांतः காந்தம். ரத்தினம்

காந்தக்கல்.= कांतमणिः. -कारः கருமான். மேல்தொடை -कीटं துரு -कुशा இரும்பு ஸம்பந்தமுள்ள கயிறு -कृतिः இரும்பினற் செய்யப்பட்டது. (குஷ்டத்தைத்போக்க ஓர் வழி) -गः சம்மட்டி -गुडः இரும்பு ஸம்பந்தப்பட்ட மாத்திரை, இருப்புருண்டை -घनः சம்மட்டி -चूर्ण இரும்புத் தூள்கள். -जाल இரும்பு வலைகளையுடைய. மிகக் கடியான ஜால் வலை போன்ற இரும்பில் பின்னல் வேலை -ताप இரும்பைப் பழுக்கக் காய்ச்சுகிற -दत्, -दंष्ट्र இருப்புப்பற்களை, விளிப்புகளை (வண்டிபோல்), ஆயுதங்களையுடைய -दती பெயர்ச் சொல் -धातुः இருப்புலோஹம் -पचिः அக்கினி -पानं பழுக்கக்காய்ந்த இரும்பைத் தொண்டையில் செலுத்தப்படும் ஓர் நரகம் -मलं, रजः, रसः துரு -मुख இரும்பு முகம், மூக்கையுடைய இரும்பு நுனியையுடைய -मुखः இரும்பு நுனியுள்ள அம்பு -शय त्रि இரும்பால் செய்யப்பப்பட்ட, இரும்பில் படுத்திருக்கிற (தீ) -शूलं இரும்பு ஈட்டி. கொடுமையான உபாயம் -हृत இரும்பினற் பிதுக்கமாய்ச் செய்யப்பட்டிருக்கிற -हृदय கடின, கல் மனதுள்ள. தயையில்லாத. குரூரமான

अयस्मय वि இரும்பாலான यी மூன்றிலோர் அஸுர நகரம்

अया अ இப்படி. இவ்வாறு

अयाचितः पु உபாவர்ஷரிஷி -उपनत, उपस्थित वि கேளாமலே கிடைத்த -वृत्तिः, व्रतं யாசியாமல்கிடைப்பதில்ஜீவித்தல்

अयात वि சென்றுவிடாத -पूर्व தொடருகிற -याम वि உபயோகப்படுத்தப்படாத. புதிய -यामं யாக்யவல்க்கியருக்கு வெளிப்படுத்தப்பட்ட ஓர் யஜுர் வேத பாகம் -यामता புதுமை. சக்தி. சுத்தி -यामन् वि பலஹீனமற்ற.

अयातु त्रि துஷ்டாத்மாக்களால் பிடிக்கப்படாத [புதிய

अयानं न ஸஞ்சரியாமை. இயற்கைக்குணம்.
अयानयं न தூர், ஸௌபாக்கியம். சொக்கட்டானட்டத்தில் காய்களின் குறிப்பான ஓர் நிலை यः ஓர்த்தேசம்
अयाननीयः पु சொக்கட்டான் போன்ற ஓர் ஆட்டம்
अयावक वि இயற்கையாகவே சிவந்த
अयावनं न சேர்க்கச் செய்யாத. காரணமாகாத
अयाशु वि புணர்ச்சிக்குத்தகாத. நன்மையையழிக்கிற
अयास् वि சுறுக்கான. வேகமுள்ள याः अ அக்கினி
अयास्य वि சலியாத. இளைப்பில்லாத. வெல்லமுடியாத स्यः பிராணவாயுவிற்கு கூடமான பெயர். அங்கிரஸ்.
अयासोमीयं न சில ஸாம ரிக்குகள்.
अयि अ ஸ்நேகபாவத்தில் மெள்ளக்கூப்பிட அப்பா! கேள்வி, பிரார்த்தனை ஸூசகம்.
अयुक्त वि விவாகமாகாத.வெளிப்பக்கந்திறந்திருக்கிற. கஷ்டதசையடைந்த -पदार्थः (अपि போன்ற) பதத்தின் கருத்து தருவித்துக்கொள்ள வேண்டியிருப்பது. -रूप ஒவ்வாத. பொருந்தாத
अयुग(ल),युग्म वि ஒத்தப்படையான -अर्चिस् पु அக்கினி -च्छदः ஒத்தப்படை யான 7 இலைகளை யுடையஏழிலைப்பாலை -नयनः ஒத்தப்படையானகண்களையுடைய சிவன் -शरः ஒத்தப்படையான பாணங்களையுடைய மன்மதன்-सप्तिः 7 குதிரைகளையுடைய ஸூரியன்
अयुगपद् இடைவிட்டு -भावः கோர்வை.
अयुगूः स्त्री ஒரே பிள்ளை பெறுகிறவள்.
अयुज् वि (अयुग) ஒத்தையான -इषुः மன்மதன் -च्छदः ஏழிலைப்பாலை -पलाशः ஸப்தபலாசமரம் -पादयमकं முதல் மூன்றும் பாதங்களில் அர்த்த பேதமுள்ள ஒரே பதங்களுள்ள ப்ராஸ விசேஷம் -अक्ष, शक्तिः சிவன்,

**अयुज, युग** वि சமம், தோழனில்லாத. பிரிந்த. ஒத்தையான
**अयुत** वि இடைவிட்ட. ந 10,000. **-अध्यापकः** சிறந்த குரு
**-सिद्धिः** स्त्री சில பிரிக்க முடியாத தன்மைகளை யுடையன என்கிற கொள்கை **-होमः** ஹோம விசேஷம்
**अयुद्ध** वि ஜயிக்கப்படாத
**अयुद्धी** अ சண்டை செய்யாமல்
**अयुधः** पु சண்டை செய்யாதவன்
**अयुध्विन्** पु வீரனல்லாதவன்
**अयुत्र** वि அசைக்கப்படாத. சேர்க்கப்படாத
**अये** अ அடே! ஆச்சரியம், துக்கம், கோபம், பயஸூசகம்
**अयोगः** पु (தம்பதிகளின்) பிரிவு. இடைவெளி, மத்தியகாலம். மருந்தின் பலியாமை. பிசகாய் வைத்தியம் செய்தல். வாந்தியால் குணமாகும் ஓர் வியாதி. இறந்த மனைவியோன். சம்மட்டி. வெறுப்பு
**अयोगवः** पु தச்ச வேலையுள்ள சூத்திரனுக்கு வைச்ய ஸ்திரீயினிடம் பிறந்தவன்
**अयोगूः** पु கருமான்
**अयोच्छिष्टं** न துரு [தவன்
**अयोद्धृ** पु நல்வீரனல்லாதவன். இதர வீரர்களுக்கு நிகரில்லா
**अयोनामन्** न மிளகு
**अयोनि** वि பிறப்பில்லாத. சாச்வதமான. கர்ப்பத்திலுண்டாகாத. நியாய விரோதமின்றி வேறுவிதமாய்ப் பிறந்த.
**अयोनिः** கர்ப்பப்பையல்லாதது. पु பிரம்மா. சிவன். விஷ்ணு.
உலக்கை **-ज, जन्मन्** वि கர்ப்பத்தினின்றுண்டாகாத. பொது முறைப்படி பிறவாத **-जः** விஷ்ணு **-ईशः, ईश्वरः** சிவன் **-जा, संभवा** ஸீதை
**अयोनिक** वि एष ते योनिः என்கிற பதங்களிராத
**अयोवैरी** स्त्री இருப்பிலிச் செடி
**अयौगपद्यं** न ஒரே காலமாயிராமை.

**अर** वि வேகமான. கொஞ்சம். போகிற (பதமுடிவில்) **रः** சக்கிரத்தின் இலை. ஆர். விளிப்பு. கால சக்கிரத்தின் பிரிவு. கோணம். மூலை -**अंतर** (**व**) சக்கிர இலைகளின் ஒவ்வொன்றுக்குமுள்ள நடுவிடம் -**घट्ट**(**क**)**:** ராட்டிணம். ஆழமானகிணறு. -**घटी** ராட்டிணத்தில் தொங்க விடப்பட்டிருக்குந் தொட்டி. [மிகவும்

**अरं** अ வேகமாய். கிட்டே. பொருத்தமாய். போதுமான.
**अरंकृ** தயாராக்கு **कृत्** அலங்கரிக்கிற. திருப்திசெய்கிற. **कृतिः**
**अरक्षस्** वि பைசாசாதிகளினுபத்திரவமில்லாத. சாதுவான.
**अरंगम्** வந்திரு. தோன்று
**अरंगमः** पु தோன்றல். உதவிக்கு எதிரேவரல்
**अरंगरः** पु பொருத்தமாய்த்துதித்தல். செயற்கை விஷம்
**अरजाः** स्त्री ருதுவாகாத சிறுமி
**अरजायते** ना. आ தூசியற்றதாகு. மாதவிடாயிழ
**अरज्जु** वि கயிறில்லாத **न** சிறைச்சாலை
**अरण** त्रि (**णी** स्त्री) பிரிந்து போன. சொந்தமல்லாத. அயலாருடைய. வழக்கமில்லாத. தூரமான. விரோதமான. போர் செய்யாத **णं** போதல். உள்ளேநுழைகிற, நுழைகப்பட்டிருக்கிற. சரணம்.
**अरणिः** पु स्त्री **णी** स्त्री கடைந்து நெருப்பெடுக்க உபயோகப்படும் ஸாமி மரத்துண்டு **णी** द्वि இரு அரணிக்கட்டைகள். **णिः** पु ஸூரியன். அக்கினி. சக்கிமுக்கிக்கல். நெருப்புண்டாக்கும் செடிகளில் முக்கியமான முன்னைக்கீரை. स्त्री வழி. பிசுனுரித்தனம் -**सुतः** கிருதாசியைப் பார்த்து வியாஸரின் ரேதஸ்கலத்தால் அரணி மேல்விழுந்து அதினின்று முண்டானசுகப்பிரம்மரிஷி
**अरणिमत्** वि அரணிகளின் ஸம்பந்தமான. அவைகளினின்று முண்டாக வேண்டிய.

**अरण्यं, ण्य: पु** காடு -अध्यक्ष: காட்டிலாகாதிகாரி -अयनं, यानं வனம் புகல். வானப்பிரஸ்தனுதல்.-ओकस्,सद् वि காட்டிலிருக்கிற. வானப்பிரஸ்தனுன -कणा வனஜீரகம் -कदली காட்டு வாழை -गज: பழக்கப்படாத யானை -गानं காட்டில் கானம் செய்யவேண்டிய ஓர் ஸாமம்-चटक: காட்டுப் பக்ஷி விசேஷம். -चन्द्रिका காட்டுநிலா அல இது எப்படி மனித திருஷ்டிக்குத்தெரியாது பயனற்றிருக்கிறதோ அப்படி அலங்காரம் போன்ற வீணுன செய்கை-जीर காட்டில் வஸிக்கிற -जीरं காட்டு ஜீரகம்-दमन: செடி விசேஷம்-द्वादशी,व्रतं மார்கழி 12ம் நாள்செய்யப்படும் ஓர் சடங்கு -धर्म. காட்டுத் தன்மை,நிலே.வானப்பிரஸ்தனின் தர்மங்கள் -धान्यं, शालि: விதைக்காமல் தானே முளேக்குந்தான்யம்-नृपति: காட்டரசன்.சிங்கம் புலி -पंडित: மூடன் -मक्षिका ஒருவித ஈ-मुद्गक: ஓர்காட்டு தான்யம் -राज्यं காடுகளில் பிரபுத்துவம் -रुदितं காட்டழுகை அல வீணுன வார்த்தை, செய்கை -वायस: அண்டங்காகம் -वासिनी செடி விசேஷம் -श्वन् पु ஓநாய் -षष्ठी ஆனி சுக்லஷஷ்டியில் செய்யப்படும் உற்சவம்.

**अरण्यानि:, नी स्त्री** பெருவனம். வனதேவதை

**अरण्यीय त्रि** காட்டையுடைய. காட்டினருகே

**अरण्येऽनूच्य: पु** ஓர் ஹோமம். ஓர் மந்திரம்

**अरण्येतिलक: पु** எண்ணே கொடாதகாட்டெள் அல எதிர்பார்ப்பதைக் கொடாதது

**अरतत्रप वि** புணர்ச்சியில் வெட்கிக்காத प: நாய்

**अरति: स्त्री** இன்பமின்மை. துன்பம். கவலே. அதிருப்தி. மந்தம். களே. பித்தரோகம். पु காமம். குரோதம். வேகமாய்ப் போதல். அசையுந்தீ. தகைத்தல். துணைவன். யஜமானன். புத்திசாலியான ஜந்து.

अरत्निः पु स्त्री முழங்கை. முஷ்டி. $1\frac{1}{4}$ கஜமுள்ள ஓரளவு. பிடி குறைய முழ அளவு (சுண்டுவிரல்வரையில்)கை.
अरत्निकः पु முழங்கை.
अरथिन् वि ரதத்திலிருந்து போர் செய்யாதவன்
अरथीः தேர்க்காரனல்லாதவன்
अरध्र वि சோம்பலில்லாத. ஜயிக்கமுடியாத. செழிப்பான
अरपचनः पु 5புத்த தேவதைகளுக்கு ஓர் ஸங்கேதப் பெயர்.
अरम वि இழிவான. தாழ்ந்த
अरमणस् वि சத்துருவான. வணக்கமுள்ள. தெய்வபக்தியுள்ள
अरमति वि தங்காத. சுறுசுறுப்பான. तिः காந்தி. உபசரிப்பதில் தயாராயிருக்கிற. நன்மையை ரக்ஷிக்கும் ஓர்
अरमिष् वि வேகமாய் நெருங்குகிற. [ஸ்திரீ தேவதை
अरमण, अरममाण वि திருப்தி செய்விக்காத. ஓயாத.
अररं न கதவின் கொல் தடி. கதவு. மூங்கில் குருத்தின் உறை. மூடி. உறை रः செருப்பூசி. யுத்தம். யக்பாங்கம். சந்திரன். விஷ்ணு. சிவன்.
अररिः पु स्त्री கதவு. கொல்தடி -दं நீர்
अररिवस् पु स्त्री கொடாத. கடினமான. விரோதமான
अररु वि அசையுந் தன்மையுள்ள. பகையுள்ள
अररुः पु விரோதி. ஆயுதம். ஓர் அஸுரன்
अररे अ அவசரமாய், நிந்தையோடு கூப்பிடுதலை ஸூசிக்கும்
अरर्यति ना-प. செருப்பூசியால்தை. முயல். பரீக்ஷி
अरलुः पु சிவனுடைய ஆயுதம். கழக்கோடிச் செடி.
अरविंदं न தாமரை. செந்தாமரை. ஓர் மன்மத பாணம் दः பக்ஷிபேதம். செப்பு दा நிலத்தாமரை -अक्ष वि தாமரை போன்ற கண்ணையுடைய. விஷ்ணு -आलया லக்ஷ்மீ -दलप्रभं செப்பு -नाभिः, भः நாபியில் கமலத்தையுடையவரான விஷ்ணு -सद् पु பிரம்மா

अरविंदिनी स्त्री தாமரைக் கொடி, பூக்குவியல், ஓடை
अरस -आशः ஸாரமில்லாததை யுண்ணல். சரீரத்தை மெலி
வாக்கல் =-आशिन् वि
अरहायते ना आ. தெரிந்திருக்கப்பட்டிரு
अराजक वि அரசனில்லாத.
अराजन् पु ராஜனல்லாதவன் -भोगीन वि ராஜனின் உபயோ
கத்திற்குத் தகாத -स्थापित वि அரசனால் ஏற்படுத்தப்
படாத. நியாய விரோதமான
अराजिन् वि அடக்கப்படாத. காந்தியில்லாத
अराजी स्त्री பேயத்திச் செடி
अराटकी स्त्री ஆடு தீண்டாப்பாளை.
अरातिः पु விரோதி. எண் 6. ஜ்யோதிஷத்தில் 6வது இடம்
अराति(ती)यति ना. प. கொடாததிலிச்சி. பகை. [கிற
अरातीयत्, वन् वि கொடாத விரோதமாய் நடந்துகொள்ளு
अरातीयु वि பலி கொடுக்கிற வழக்கமில்லாத. விரோதமான
अराद्धिः स्त्री மீறல். பாவம். குற்றம். பகை. [யான
अराधस् वि ஏழையான. யக்யங்கள் செய்யமுடியாத. பிசுனி
अराय वि பணமில்லாத, தக்ஷிணை யில்லாத. பிசுனியான
यः, यी துவேஷமுள்ள ஜந்து. பேய்
अराल वि கோணலான लः கோணக்கை. ஓர் தூபம். மதயானை
ला வேசி. ஸாதுவானவள் -केशी சுருட்டை மயிர்க்காரி
अरावन वि பகையுள்ள (பேய் போன்ற) துஷ்டாத்மாக்கள்.
अराष्ट्र न ராஜ ஹோதா, சக்தியில்லாமை
अरि वि போகிற. அசைகிற. அடைகிற. எட்டுகிற. ஆசைப்
படுகிற. பற்றுள்ள. பிடிவாதமான रिः पु சத்துரு.
உள்பகையான காமக் குரோதாதிகள். எண் 6. காற்
றக்கருங்காலி. ஜ்யோதிஷத்தில் ஓர் நிலை. வண்டியனு
ருப்பு. சக்கிரம். யஜமானன். காற்று. புண்ணியாத்மா

-कुल्विरोधि -गत वि சத்துருக்களை யொழிக்கத்தயாரா யிருக்கிற -चिंतन, चिंता சத்துருக்கள் விஷயமான சதி யோசனை. வெளிநாட்டு வியவஹாரங்களைக் கவனித் தல். त्र சத்துருக்களிடமிருந்து ரக்ஷிக்கிற -वायस् वि பிரபுக்களால் மட்டும் உடைத்தாயிருக்கப்படுகிற, (மிக விலையுயர்ந்த) -भद्रः முக்கிய, பலமுள்ள பகை வன் -मर्दः ஓர் மரம் -मेदः நாற்றக் கருங்காலி. ஓர் தேசம். -मेदकः ஓர் மலப்புழு·स्थानकं தத்தளிப்பு.திகில்

अरिक्थभाज्, अरिक्थीय वि பித்ரார்ஜிதத்தில் பங்கில்லாத

अरिणिन् पु கோழி.

अरितृ पु மாலுமி. படகோட்டி

अरित्र वि முன்னுக்குத் தள்ளுகிற. எல்லாப் பக்கங்களிலும் ரக்ஷிக்கிற त्रं ஓடந்தள்ளுந்துடுப்பு. சுக்கான். ஓடம். வண்டியினுருப்பு. ஸோம பாத்திரம்=त्रः-गाध वि ஓடத்துடுப்பாழமுள்ள. ஆழமில்லாத -तरण वि துடுப்பு களால் தாண்டல்

अरिन् न சக்கிரம். விஷ்ணு சக்கிரம். [கருடன்

अरिन्दम वि சத்துருக்களை யடக்குகிற मः கத்தி. ஸூர்யன்.

अरिप्र वि பழி, பாவமில்லாத. புள்ளியில்லாத

अरिफित वि ர்ஆக மாறாத (விஸர்க்கம்)

अरिषं न விடாமழை. षः ஆஸனத்தில் நோவு

अरिषण्य वि உபத்திரவியாத. ण्यत् वि ஹிம்ஸிக்கப்படாத

अरिष्ट वि துன்பமடையாத. சுத்தமான. முழுதுமான. நசி யாத ष्टः நாரை. காக்கை. விரோதி. வேம்பு. பூவரசு. வெள்ளைப் பூண்டு. இறக்கப்பட்ட திராவகம். பலி யின் பிள்ளையாகிய கிருஷ்ணனால் கொல்லப்பட்ட ஓர் அஸுரன் ष्टा கட்டு. ஓர்ச் செடி (புங்கன்). காச்ய பரின் பார்யையான தக்ஷ புத்திரி. ष्टं ஆபத்து. துரு

திருஷ்டம். (பூகம்பம் போன்ற) அமங்கல ஸூசக ஏஷ்யம். சீக்கிறம் சாவதற்காக அனுகூல மில்லாத அடையாளங்கள். அதிர்ஷ்டம். அந்தப்புரம். பிரஸவ அறை. மோர். காடிச் சாராயம். **-असु वि** பிராணன் போகாமல் தப்பின **-गातु वि** பயமில்லாமல் வலிக்கிற **-गृहं** பிரஸவ அறை. **-ग्राम** பிரிவின்றிமுழுக் கூட்டத்தையுடைய **-ताति वि** சந்தோஷப் படுத்துகிற. **-तातिः स्त्री** பயமின்மை. அதிருஷ்டத் தொடர்ச்சி. நீடித்த இன்பம் **-दुग्धी वि** சாவிற்குப் பயப்படுகிற **-नेमिः** விஷ்ணு **-पुरं** ஓர் இடம் **-भर्मन् वि** அபயமளிக்கிற **-मथनः** சிவன். விஷ்ணு **-शय्या** பிரஸவப் படுக்கை **-सूदनः, हन् पु** அரிஷ்டனைக் கொன்ற விஷ்ணு

**अरिष्टकः पु** ஓர் மரம் (புங்கன், பூவத்தி)

**अरिष्टिः स्त्री** பத்திரம். பயமின்மை.

**अरिष्यत् वि** அலட்டப்படாத

**अरीलिह वि** நக்கப்படாத

**अरुः पु** ஸூர்யன். ஓர்மரம்

**अरुंषिका** தலையில் காயவடு [மில்லாமை

**अरुचिः स्त्री** வெறுப்பு. ஒக்காளம். திருப்தியான ஸமாதான

**अरुज् वि** நோயற்ற. உடையாத. சீழ்பிடிக்காத **जः** கொன்றை

**अरुण वि** சிவந்த. செங்கல் மங்கலான. கலக்க முண்டாக்குகிற. ஊமையான **णः** சிவப்பு. உதயா ஸ்தமன செம்மானச் சிவப்பு. அருணோதயம். ஸூர்ய ஸாரதி(அனு) சிவப்புப் புள்ளிகளுள்ள குஷ்டபேதம். ஓர் விஷப் பூச்சி. 12ல் ஒன்றான மாசி மாத ஸூரியன். பாகு. கைலாஸத்திற்குமேற்கேஓர் ஹிமயமலைச்சிகரம்புன்னைமரம். வருணன். க்ஷத்திரியன் **णा** அதிவிடயம். மஞ்ஜிஷ்டை. குன்றுமணி முதலியன. ஓர் நதி. செப்பு. **णी**

சிவப்புப் பசு. விடிகாலே. ண் சிவப்பு. பொன். மஞ்சள் -अग्रजः கருடன். = -अनुजः, अवरजः-अर्चिस् पु ஸூர்யன் -अश्व சிவப்புக் குதிரைகளையுடைய (மருத்துக்கள்) -आत्मजः அருணனின் பிள்ளை ஜடாயு. ஓர் மனு. சனி. கர்ணன். ஸுக்ரீவன். யமன். அச்வினீ தேவதைகள் -आत्मजा யமுனை, தபதி நதிகள் -आभः சிவன் -उदक् ஓர்வரி-उदका ஓர் நதிउपलःகெம்பு. மாணிக்கம். பத்மராகம் -कमलंசெங் கழுநீர் -ज्योतिस् पुசிவன் -दूर्वाசிவப்புசோம்பு-प्रियःரவி-प्रिया ஸூர்யனின் பத்னீ. நிழல். प्सु वि சிவப்புருவமுள்ள, வர்ணமுள்ள -बभ्रु செம்மஞ்சள் நிறமான - युज् वि சிவந்த கிரணங்களை யுடைய (விடிகாலே) -लोचनः புறு -सारथिः ஸூரியன்

अरुणित. अरुणीकृत वि சிவப்பாக்கப்பட்ட.

अरुणिमन् पु अरुणता स्त्री செந்நிறம்

अरुणीयः, योगः पु அதர்வண வேதத்தில் 25வது உபநிஷத்

अरुत वि உடைக்கப்படாத. அரிக்கிற

अरुंतुद् वि மர்மத்தைப் பிளக்கிற அல காரமான (புண்)

अरुंधती स्त्री வஸிஷ்டரின் தர்ம பத்னீ. கிருத்திகா நக்ஷத் திரத்தைச் சேர்ந்த அருந்ததீ நக்ஷத்திரம். (அனு) நாக்கு. ஓர் ஓங்கிவளரும் மூலிகை -जानिः, नाथः ஸப்த ரிஷி மண்டலத்திலுள்ள வஸிஷ்டரிஷி.

अरुष वि சாந்தமான. சிவந்த. பிரகாசமான. துன்புறுத்தப் படாத. போகிற. षः அக்கினியின் சிவந்த குதிரை. பாம்பு. ஸூரியன். ஜ்வாலே=षी விடிகாலே. ஊர்வரின் தாயாராகிய பிருகுவின் பத்னீ

अरुष(ष्य)ति ना. प. போ

अरुष्क(र): पु சேராங் கொட்டை மரம்

अरुस् वि புண்ணக்கப்பட்ட (रुः) पु எருக்கு. கருங்காலி பே

தம். ஸூர்யன் न உயிர் நிலை. புண். காயம். கண் -कर: சேராங் கொட்டை மரம் -करं சேராங்கொட்டை
अरुंषिका स्त्री உச்சந் தலையில் நோயுள்ளபிளப்பு, கொப்புளம்
अरुहा स्त्री நிலநெல்லி
अरुक्षित, क्ष्ण वि மென்மையான. மிருதுவான. இளகுகிற
अरूप वि ஒத்திராத ரூபமுள்ள. ரூபமற்ற. பிரம்மம்-हार्य அழகால்மயக்காத
अरूपक वि அலங்கார ரூபத்திலிராத. சப்தார்த்தமான
अरूषः पु ஸூரியன். பாம்பு
अरे अ தாழ்ந்தவனைக் கூப்பிட. டேய்! கோப ஸூசகம்.
अरेणु वि தூசியில்லாத.பூமி தூசியைத்தொடாத णु न ஆகாயம்
अरेरे अ கோபமாய், நிந்தையோடு நீசர்களைக் கூப்பிட ஸூசகம்
अरोगण वि நோயினின்றும் விடுவிக்கிற. நோயற்ற
अरोगिन्, अरोग्य वि ஆரோக்கியமான
अरोचकिन् वि அஜீர்ணத்தால் வருந்துகிற
अरोचमान वि பிரகாசியாத. பற்றில்லாத.
अर्क् 10 प தகி. காய்ச்சு. துதி
अर्क वि பூஜிக்கத் தகுந்த. र्कः கிரணம். ஒளி. ஸூரியன். அக்கினி. பளிங்கு. செப்பு. ஞாயற்றுக்கிழமை. பும்ஸ்த்வம். எருக்கு. இந்திரன். ஓர் சடங்கு. துதி. பாடகன் பண்டிதன். தமயன். உணவு. விஷ்ணு. அலங்கரித்தல் ஸப்தமி. உத்திரம். எண் 12.எருது.-अंशः, कला ஸூர்ய கலை, மண்டல 12ல் 1 பாகம் -अश्मन् पु उपलः பளிங்கு. மணி. ஸூர்ய காந்தக்கல். -आह्वः எருக்கு -कांता ஸூர்யனின் பத்னீ. நிழல். ஓர் செடி -क्षेत्रं ஸூர்யனின் ப்ரதேசம். ஸிம்ஹராசி. ஒரிஸ்ஸாவில் ஓர் க்ஷேத்திரம் -चंदनः செஞ்சந்தனம் -जः கர்ணன். யமன். ஸுக்ரீவன் -जौ இரு அச்வினீ தேவதைகளும் -तनयः = अरुणात्मजः-दुग्धं எருக்கம்பால்-नयन वि உற்றுப்பார்க்கப்படுவ

தற்குயாருடையகண்கள்கஷ்டமாயிருக்கிறதோஅவன் -नयनः விராட் புருஷன் -नामन् पु எருக்கு பேதம் -पत्रः, पर्णः எருக்கு -पत्रा எருக்கு பேதம் -पादपः வேப்பன். ஓர் மரம் -पुष्पिका, प्रिया செடி பேதங்கள் -बंधुः, बांधवः தாமரை. சாக்கியமுனி -भं ஸிம்மராசி. உத்திரம் -भक्त=कांता -मूलः, ला எருக்கு பேதங்கள் -राजः வெள்ளெருக்கு -वर्षः ஸௌரரீதியாக ஒரு வருஷம் -वल्ली மஞ்ஜிஷ்டை -वल्लभः தாமரை. உச்சித்திலதச் செடி -विवाहः மூன்றாங்கலியாணம் செய்துகொள்ளுமுன் எருக்கனுக்குத் தாலி கட்டிப் பிறகு அப்பெண்ணை மணந்தால் அவள் சாஸ்திரப்படிநாலாந்தாரம்போலா கிறாள் -वेधः தாளிசபத்ரீ -व्रतं, तः மாசி சுக்ல ஸப்தமியன்று அனுஷ்டிக்கப் படும் ஓர் விருதம். ஸூர்யன் எப்படி நீரைக் கிரஹித்து அநேக மடங்காய் வர்ஷிக்கிறானோ அதே மாதிரி அரசனும் வரி வசூலித்து ஜனங்களுக்கே செலவு செய்வதற்கு அர்க்கவிருதமனுஷ்டிப்பதாகச் சொல்லப்படுவது -शोकः கிரணங்களின் காந்தி -सातिः கிரணங்களைக் கண்டு பிடித்தல். கவியின் கவன சக்தி -सोदरः ஐராவதம் -हिता =कांता

अर्कवत् वि ஒளிவீசுதல்களையுடைய

अर्किन् वि பிரகாசிக்கிற. துதிக்கிற. பூஜிக்கப்பட்ட

अर्कीय, अर्क्य वि அர்க்கனைச் சேர்ந்த. பூஜிக்கவேண்டிய

अर्गडः,लः, लं, ला, ली स्त्री உழல்தடி. தாழ்ப்பாள். அலை. தடை. [கதவு. துதி விசேஷம்

अर्गलिका स्त्री சிறு தாழ்ப்பாள்

अर्गलित वि தாழ்ப்பாள் போடப்பட்ட

अर्गलीय, ह्य वि தாழ்ப்பாளின் ஸம்பந்தமான

अर्घ । प விலையாயிரு. விலையுடைத்தாயிரு. கொல்

अर्घः पु விலை. பூஜாத் திரவியம் -अर्हं பூஜாத் திரவியத்திற்

குரிய -दान नीர் முதலியவற்றால் உபசரித்தல் -बलाबलं விலைகளில் ஏற்றக்குறைச்சல் -संख्यानं, संस्थापनं சரக்குகளின் விலை போடல்

अर्घीशः पु சிவன்

अर्घ्य वि விலையுடைய. பூஜிக்க, மதிக்கத்தகுந்த. र्घं தெய்வத்திற்கு, பெரியோருக்குப் பூஜாத்திரவியம் ஸமர்ப்பித்தல். காட்டுத்தேன்

अर्घटं न சாம்பல்

अर्च् । उ பூஜி. வணங்கு. வரவேற்று. அலங்கரி. துதி. பிரகாசி 10 प णिच् பூஜி. துதி. பிரகாசிக்கச் செய். सं பூஜிக்க இச்சி अनु + கூடிக்களி प्र + துதி. வாழ்த்து. பூஜி णिच् பூஜி =सं நிலைநாட்டு.

अर्च वि பிரகாசிக்கிற

अर्चक वि தொழுகிற. कः பூஜை செய்பவன்

अर्चत्रि वि பூஜிக்கத்தகுந்த. உரத்துப்பாடுகிற

अर्चद्य वि துதிக்க, பூஜிக்கப்படவேண்டிய

अर्चन वि தொழுகிற. துதிக்கிற नं, ना பூஜை. மரியாதை

अर्चनीय, अर्च्य वि மரியாதை செய்யத்தகுந்த

अर्चा स्त्री பூஜை. விக்கிரஹம்.

अर्चिः स्त्री கிரணம். ஒளி -मत्, वत् वि பிரகாசிக்கிற

अर्चितिन् वि பூஜிக்கிற(र्ची)கிரணம் अर्चितः மன்மதனின் உலகு.

अर्चिन् वि துதிக்கிற. பூஜிக்கிற. ஒளிவீசுகிற पु

अर्चिस् न ஒளி. கிரணம் = पु அக்கினி

अर्चिष्मत् वि பிரகாசமான पु அக்கினி, ஸூர்யன். விஷ்ணு. ஓர் க்ஷுத்ர தேவதை -ती அக்கினி தேவதையின் நகரம்

अर्ज् । प ஸம்பாதி. ஏற்றுக் கொள் 10 प. णिच् சுத்தி செய். ஸம்பாதி. அடை. தயாரி. अति + அனுமதி கொடு. அப்புறப்படுத்து अनु+போக விடு. கொடுத்து விடு

अपि+ சேர் अन्वव+பின் பற்றச் செய். ஒரு வஸ்து வோடு போய்ப் பார். வெல். अत्यति+சேர். அதிகப் படியாய்ச் சொல் अव+விடுவி उद्+வெளியெடு प्र+ णिच् சம்பாதித்துக்கொடு. अर्जनं

अर्जक வி ஸம்பாதிக்கிற कः செடி பேதங்கள்

अर्जुन (ना, नी स्त्री) वि வெளுத்த. சுத்தமான. பிரகாசமான. வெள்ளி போன்ற नः கொடமல்லி. வெண்மை. மயில். சர்ம வியாதி. மருத மரம். குந்திக்கும் இந்திரனுக் கும் பிறந்து பாரத யுத்தத்தில் ஸாரதியாய் வந்த ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா வினிடம் கீதோப தேசம் பெற்ற நடுப்பாண்டவன். பாசு ராமனால் கொல்லப் பட்ட கார்த்த வீர்யார்ஜுனன். ஓர் தேசம். இந்தி ரன். தாயின் ஒரே பிள்ளை नी கூட்டி வைப்பவள். பசு. ஒருவிதப் பாம்பு. அனிருத்தனின் மனைவியான உஷா. காரதோயா நதி. द्वि व (न्यौ न्यः) பூரம் नं வெள்ளி. பொன். கண் வெளுப்பு பாகத்தில் உஷ் ணத்தால் சிவந்து எரிச்சலோடுவீக்கம். புல் नाः(व) அர் ஜுனனின் ஸந்ததிகள் -उपमः தேக்கு, மர விசேஷங் கள் -छवि वि வெண்ணிறமான -ध्वजः ஹனுமான் -पाकी செடி விசேஷம்.

अर्जुनक वि அர்ஜுனனைச் சேர்ந்த कः அர்ஜுனனை வணங்கு [பவன்

अर्जुनस वि மருத மரங்கள் நிறைந்த

अर्ण वि சஞ்சலிக்கிற.பொங்குகிற र्णः பெருக்கு. பிரவாஹம். தேக்கு. எழுத்து. 10 பாதமுள்ள விருத்த விசேஷம். தேன் र्णी நதி र्णं யுத்த கோஷம், கலவரம்

अर्णव वि கலக்கப்பட்ட. நுரைத்தெழுகிற. நீர் நிறைந்த वः வெள்ளம். பெருக்கு. அலை. கடல். अरु. காற்று. ஓர் விருத்தம். (நீர் தரும்) ஸூரியன், இந்திரன் -अंतः,

கடலோரம், கோடி -उद्भवः ஓர் செடி -जं, जः கணவாய் மீன் -पोतः, यानं ஓடம் -मंदिरः கடலை வீடாயுடைய வருணன். விஷ்ணு

अर्णस् न நீர். அலை. வெள்ளம். கடல். காற்று -दः மேகம். பெரு முத்தக்காசு -भवः கிளிஞ்சல் -वृत् वि நீரையடக்கிக் கொண்டிருக்கிற

अर्णस्वत् वि அதிக நீரையுடைய पु கடல்

अर्तगलः पु கரும் பூக் குறிஞ்சி

अर्तन वि தூஷிக்கிற. துக்கிக்கிற नं நிந்தை. திட்டு

अर्तिः स्त्री வலி. துக்கம். (शिरोर्तिः தலை வலி) வில் நுனி.

अर्तिक वि நோயுள்ள कः ஓர் பக்ஷணம்

अर्तिका स्त्री (நாடகத்தில்) தமக்கை

अर्तुक वि சண்டையிடுகிற

अर्थ 10 आ யாசி. வேண்டு. இச்சி. அடைய முயல்.

अर्थः पु அர்த்தம். கருத்து. இச்சை (स. अ தில்) ஒன்றிற்காக. காரணம். வஸ்து. வேலை. விஷயம். பணம். பணம் ஸம்பாதித்தலான ஒரு புருஷார்த்தம். பிரயோஜனம். நன்மை. தேவை. யாசகம். மனு.விண்ணப்பம். பிராது. உண்மையான நிலை. மாதிரி. தடை. விலை. பயன் தர்மரின் பிள்ளை. லக்னத்திற்கு இரண்டாமிடம். விஷ்ணு -अधिकारः பொக்கிஷாதிகாரி -अन्वेषणं உண்மை விசாரித்தல். -अंतरं வேறு அர்த்தம், காரணம். புது விஷயம். அர்த்தபேதம் -अन्वित பணக்காரனை. குறிக்கிற-अर्थिन् विஒரு பொருளை,பணத்தை அடைய முயலுகிற -अलंकारः சப்தமின்றி அர்தத்தை அனுஸரிக்குமோரலங்காரம். -आगमः வரும்படி. பணம்ஸம்பாதித்தல். சொத்து சேர்த்தல். ஓர் கருத்தை யுடைத்தாயிருத்தல் -आपत्तिः स्त्री ஸந்தர்ப்பானுஸார ஊகை.

-उत्पत्तिः பொருள்ஸம்பாதித்தல் -उपक्षेपकः (நாடகத்தில்) வருங்கதையை அறிமுகப் படுத்துங் காக்ஷி -उपमा சப்தமின்றி கருத்தையொட்டின உபமானம் -उपमन्यु பணசோலை. ஸம்பத்து -कर्मन् ந பிரதான கார்யம் -कामौ பண, போகங்களினிச்சை -कृच्छ्र கஷ்டமான கார்யம், விஷயம். பணக்கஷ்டம்-कृत्य நடவடிக்கையெடுத்துக் கொள்ளல். வேலையை முடித்தல் -गत वि அர்த்தத்தை யொட்டிய. அர்த்தமில்லாத -गौरवं ஆழ்ந்த கருத்து ঘ (घ्नी घ्नी) வீணாக்குகிற. அதிகச்செலவு செய்கிற-चिंतक त्रि லாபத்தை யுத்தேசிக்கிற. வியவஹாரங்களின் பொருப்பையுடைய -चिंता, चिंतनं ராஜாங்க கார்யநிர்வாஹம் -जात அர்த்தம் நிறைந்த. பணமுள்ள. -जातं வஸ்துக்களைச் சேகரித்தல். விசேஷ ஸொத்து. ஸமஸ்த வியவஹாரங்களும் -ज्ञ॰ वि கருத்தை யறிந்த -तत्वं விஷயத்தினுண்மை. ஒன்றின் உண்மையான தத்துவம், காரணம் द वि॰ உதாரமான, இணக்கமான. அனுகூலமான -दःகுபேரன் -दर्शनं வஸ்துக்களை உணரல் -दूषणं வீண் செலவு. சொத்தை அக்கிரமமாய், கொடாமல் வைத்திருத்தல். அர்த்தத்தில் குற்றங் கண்டு பிடித்தல். அயலார் சொத்தை சீர்குலைத்தல் (கிர்ந்தார்) -दोषः அர்த்தத்தை யனுசரித்த சொற் பிழை -निबंधन பணத்தை நம்பியிருக்கிற -पतिः அரசன். குபேரன் -पर वि பணத்தாசை பிடித்த. லோபியான -प्रयोगः வட்டிப் பணத்தால் ஜீவித்தல். ராஜாங்க வியவஹாரங்களைக் கவனித்தல் - प्राप्त वि கருத்திலிருந்தறிந்து கொண்ட -बंधः வியாஸம். செய்யுள். ஜீவனின் விஷய ஸம்பந்தம் -बुद्धि वि சுயநலம் பாராட்டுகிற -बोधः கருத்தை வெளிப்படுத்தல் -भाज् वि சொத்தில் பங்குரிமையுள்ள

-भृत वि அதிக கூலி பெறுகிற -मात्, त्रा சொத்து. பணம். முழுக் கருத்து -युक्त அர்த்த புஷ்டியுள்ள. குறிக்கிற -लुब्ध பணந்தேடுவதில் கருத்துள்ள. லோபியான -लोभ: பேராசை -वाद: கருத்தை வெளியிடல். உறுதிமொழி. ஒரு விதியை அநுஷ்டிப்பதால் உண்டாகும் நன்மைகளும், விடுவதாலுண்டாகும் தீமைகளையும் திருஷ்டாந்தங்களோடு சொல்லுவது. கருத்தையறிய 6 உபாயங்களில் 1. துதி. -विज्ञानं கருத்தையறிதல் -विद् वि யோசனையுள்ள -विप्रकर्ष: கருத்தையறியக் கஷ்டப்படல் -विकरणं அர்த்தமாறுபாடு -विकल्प: உண்மையினின்றும் நழுவல். இரண்டர்த்தமாகும்படி சொல்லல் -वैकल्यं, विशेषणं ஒருவர் சொன்னதை புத்திமதி ரூபமாய்த் திருப்பிச் சொல்லல் -व्ययज्ञ वि பண விஷயங்களை யறிந்த -शास्त्रं அர்த்த, திரவிய சாஸ்திரம். ராஜ்ய பரிபாலனம், பொது நன்மை, நித்திய வாழ்க்கைக்கு வேண்டிய விதிகளையுடைய சாஸ்திரம் -शास्त्रव्यवहारिन् ராஜநீதி நிபுணன். ராஜ்யதந்திரி -शौचं பணத்தில் நாணயம் -संस्थानं திரவிய சேகரம், பொக்கிஷம். -संग्रह:, संचय: பணம் சேகரித்தல். சொத்து -समाज: காரணங்களின் தொகுதி -संपद् स्त्री இச்சை நிறைவேறல் -समाहार: பணம் சேகரித்தல். பொக்கிஷம் -संबंध: பத அர்த்தங்களின் ஸம்பந்தம் -साधक वि வேலையை முடிக்கிற. விஷயத்தை ஒரு தீர்மானத்திற்குக் கொண்டு வருகிற -सार: விசேஷ ஐச்வர்யம் -सिद्ध वि ஸந்தர்ப்பத்திலிருந்தே அறியப்பட்ட -सिद्धि: स्त्री கருத்து நிறைவேறல், வெற்றி -हर वि சொத்தில் பங்கைப் பெறுகிற -हीन वि சொத்து பிடுங்கப்பட்டிருக்கிற. ஏழையான. உளரலான. பிசகுகிற

**अर्थतः** अ அர்த்த, ஒரு விஷயத்தைக் குறித்து. உண்மையில். பணம், லாபத்திற்காக. ஒரு காரணத்திற்காக. பண, காரிய நிமித்தமாய்

**अर्थता** स्त्री பிரார்த்தனை. விண்ணப்பம். பிராது

**अर्थवत्** वि பணமுள்ள. ஸூசிக்கிற. ஆர்த்தம் நிறைந்த. பயன் படுகிற. ஒரு காரியத்தின் படி पु (वान्) மனிதன்

**अर्थवत्ता** स्त्री பணம். சொத்து

**अर्थात्** अ உண்மையில். ஸந்தர்ப்பத்தின்படி. அதாவது

**अर्थिकः** पु ஏலங்கூறுவோன். காவலன். காலத்தின் படி உதயமாதல், உண்ணல், உறங்கல்களைப் பாடிச் சொல்லும் துதிபாடகன்

**अर्थित** वि பிரார்த்திக்கப்பட்ட. तं இச்சை. மனு.

**अर्थिता, त्वं** न யாசகனின் நிலை. யாசகம். விருப்பம்

**अर्थिन्** वि அடைய முயலுகிற. கோருகிற. पु யாசகன். வாதி. துணைவன். பிரபு. -भावः யாசகனின் நிலை. யாசனை -सात् अ யாசகர்களின் அதீனத்தில் [கிற.

**अर्थीय** वि (பதத்தோடு) விதிக்காளான. ஸம்பந்தப்பட்டிருக்

**अर्थ्य** वि கேழ்க்க, நாடத்தகுந்த. பொருத்தமான. அர்த்தத்தினின்றும் வழுவாத. பணமுள்ள. புத்திசாலி

**अर्थ्यं** न காவிக்கல் [யான

**अर्द्** । प பீடி. யாசி. போ. சிந்திப்போயிரு. णिच् ஹிம்ஸி. கலக்கு. கோணலாக்கு अति + மிகவும் ஹிம்ஸி अभि + துன்பப்படுத்து. नि + பாய். பெருகு प्र + உடம்பை அதிக வேலை செய்து அலட்டிக் கொள் प्रति + பதிலுக்குத்தகை वि + அலட்டு णिच् அழி. கரைந்துபோ

**अर्दनं** न குழப்பம். துயரம் नं, ना போதல். யாசகம். கொலை.

**अर्दनिः** पु அக்கினி. யாசகம். நோய்

**अर्दितं** न தாடை எலும்புகளின் நரம்புப் பிடிப்பு. பாரிசு,

இழுப்பு, தனுர்வாயு.

अर्दितिन् त्रि தாடையில் நரம்புப் பிடிப்பால் வருந்துகிற

अर्ध त्रि பாதியான -अर्धं ஒரு பாதி இன்னொரு பாதி र्धः இடம். வீடு. அபிவிருத்தி. காற்று. பாகம் र्धं பாதி. அருகாமை -अक्षि न பக்கப் பார்வை. -अंगं உடலில் பாதி -अंतरं பாதி தூரம் -अर्धः, र्धं பாதியில் பாதி. கால். பாதியும் பாதியும் -अवभेदकः ஒற்றைத்தலைபிடிப்பு क् சமமாய்ப் பங்கிடுகிற -आकारः அவில் அரையெழுத்து ऽ அவக்கிரஹம் -आसनं ஆஸனத்தில் பாதி. (தான் உட்கார்ந்திருப்பதிலேயே ஒருவனுக்குப் பாதியிடம்விடுவது மரியாதையைக் காட்டுவதாம்) மரியாதையாய் ஸந்தித்துப்பேசல். வணங்கல். நிந்தை. ஆக்ஷேபணைக்குள்படாமை -इंदुः இளம்பிறை. அர்த்தசந்திரன். கிள்ளுவதில்போல்நகத்தினாலுண்டான பாதிவட்டம்போன்ற பதிவு. அர்த்த சந்திராகார நுனியுள்ள பாணம் -चंद्रमौलि சிவன் -इंद्र त्रि எதில்பாதி இந்திரனைச்சேர்ந்ததோ -उक्तिः அரை குறையாய்ப்பேசிவிடப்பட்டது -उदकं பாதி உடலை யெட்டும் நீர் -उदयः இளம் பிறைச் சந்திரோதயம். பாதிஉதயமாயிருத்தல். உத்தராயணம், ஸோமவாரம், அமாவாஸை, திருவோணம் முதலிய ஒன்றுகூடி அமையும் ஓர் புண்ணிய காலம் -उदयासनं தியானத்தில் ஓர் நிலை -ऊरुक தொடைகளில் பாதி வரையில் எட்டுகிற क् பெண்களின் சல்லடம். ஸ்திரீகள் பாதி தொடை மறையும்படி உடுத்தியிருக்கும் சிறு துணி, பாவாடை -केतुः ருத்திரன் -कोशः ஒருவனின் பாதி பொக்கிஷம் -कौडविक त्रि பாதி உழக்கு (ஆழாக்கு) அளவுள்ள -खारं, री அரைபுட்டி யளவு -गंगा காவேரி நதி -गर्भ त्रि கர்ப்பப்பையின் நடுவான. ஸூர்ய கிரணங்

கள் -गुच्छः 24 ஸரங்களுள்ள ஹாரம் -गोलः அர்த்த
கோளம். பாதியுருண்டை -चक्रवर्तिन्, चक्रिन् पु விஷ்ணு
வின் 9 விரோதிகளும், 9 கருத்த வஸுதேவர்களும்
-चन्द्र பாதி சந்திரவுருவமுடைய द्रः இளம்பிறை.
மயில் தோகைக் கண்களிலுள்ள பாதிக்குறிகள். அர்த்த
சந்திராகார நுனியுள்ள பாணம். அர்த்த சந்திராகார
நக வடு. ஒன்றைப் பிடிக்க அர்த்த சந்திராகாரமாக
வளைக்கப்பட்ட கை. द्रं, द्रा கழுத்தைப் பிடித்துத்
தள்ள द्रा செடி விசேஷம் -चंद्रिका ஓங்கி வளரும் ஓர்
செடி -चोलकः சிறு ரவிக்கை -जाह्नवी காவேரி -तनुः स्त्री
அரையுடல் -तिक्तः நேபாள வேம்பு -तूरः வாத்திய விசே
ஷம் -दिनं, दिवसः பாதி நாள். நடுப்பகல், 12 மணிகள்
கொண்ட பாதிநாள். -देवः அவதார புருஷன். தேவ
தைகளினருகே யிருக்கிற-द्रौणिक பாதிபதக்கு(குருணி
1 மரக்கால்) அளவுள்ள -धारः வைத்தியத்திற்குபயோ
கப்படும் ஒரே ஓரமுள்ள கத்தி, ரண சிகித்ஸை ஆயு
தம் -नाराचः அர்த்த சந்திராகார இரும்பு நுனியுள்ள
பாணம் -नारायणः விஷ்ணுவின் ஓர் ரூபம் -नारीशः, नारी
श्वरः பாதி ஆணும்பாதி பெண்ணுமுள்ள சிவனின் ஓர்
ரூபம் -नावं ஓடத்தில் பாதி -निशा நடுராத்திரி -पंचा-
शत् स्त्री 25 -पणः பாதி பணமுள்ள ஓரளவு -पथं பாதி
வழி पथे நடுவழி -पादः பாதி பாதம் -पादिक பாதி பாத
முடைய -पांचालिक वि அர்த்த பாஞ்சால தேசத்தி
லுண்டான-पारावतः தித்திரிப்பக்ஷி -पुलायितः குதிரையின்
சற்றுப் பாய்ச்சலான நடை -प्रहरः $1\frac{1}{2}$ மணி. பாதி
காவல் -भागिक वि பாதி பங்கை யடைகிற -भाज् वि பங்
காளி. கூட்டாளி. தோழன் भास्करः நடுப்பகல் -भोटिका
ஒருவித அடை - भ्रम(क)ः கவன விசேஷம் -माणव (क)ः

24ல் பாதியான 12 ஸரஹாரம் -मात्रा பாதிமாத்திரையளவு. மெய்யெழுத்து मार्गे அநடுவழியில்-मासः பக்ஷம் பாதி மாதம் -मासिक ஒவ்வொரு பக்ஷமும் நேரிடுகிற. பக்ஷகாலம் நீடிக்கிற -मुष्टिः स्त्री பாதி மூடின கை -यामः பாதி காவல் -रथः இன்னொருவனோடு சேர்ந்து ரதத்தில் போர் செய்யும் வீரன் -रात्रः நடுராத்திரி. 12 மணி காலமுள்ள இரவு -रश्मिः 12 ஸரஹாரம்- रात्रार्ध-दिवसः விஷு. சித்திரை, ஐப்பசி மாதப் பிறப்புகள். -लक्ष्मीहरिः பாதி லக்ஷ்மியின் உருவமுள்ள விஷ்ணுவின் ரூபம்-विसर्गः, विसर्जनीयः क्, ख्, प्, फ् களுக்குமுன் விஸர்க்க உச்சாரணமுள்ள அரை விஸர்க்கக் குறி- वीक्षणं பக்கப் பார்வை. கடைக்கண் பார்வை. கண்ணோட்டம் -वृद्ध वि நடுவயதுள்ள -वैनाशिकः அல்ப நாசத்தை ஆக்ஷேபிக்கும் காணாதானின் சிஷ்யர்கள் -वैशसं அரைகுறைக்கொலை -व्यासः வட்டத்தில் மத்தியிலிருந்து ஓரம் வரைக்கும் இழுக்கப்பட்ட கோடு -शतं 50 -शनं அரைச் சாப்பாடு -शफरः மீன் வகை -शब्द वि தாழ்ந்த குரலுள்ள -शेष वि பாதிமட்டும்மிகுந்த -श्याम वि பாதி மேகம் மூடின -सम वि பாதிக்கு ஸரியான -समं 1-ம் 3-ம், 2-ம் 4-ம் ஒரே கணக்கான அக்ஷரங்களுள்ள விருத்தங்களின் பிரிவு -सीरिन् पु பாதி வாரம் பெறும் குடியானவன்-हर, हारिन् वि (உடலில்) பாதி பரவுகிற -हारः 64 வடமுள்ள ஹாரம் -ह्रस्वः பாதி சிறு அசை, எழுத்து

अर्धक वि பாதியான

अर्धर्चः, र्चं न அரையடி சுலோகம். குறைச் செய்யுள்

अर्धिक (की स्त्री) वि பாதியளவுள்ள, பாகவுரிமையுள்ள कः மிச்ரஜாத்யன். பிராம்மணனுக்கு வைச்ய ஸ்திரீயினிடம் பிறந்தவன்

अर्धित् वि பாதிக்குரிமை யுள்ள

अर्धुक वि விருத்தியடைகிற
अर्ध्य वि பாதிபினுடைய. விருத்தி செய்யத் தக்க
अर्पः पु பிரப்பு
अर्पण (ऋ) न கொடுத்தல். திருப்பிக் கொடுத்தல். துளைத்தல்
अर्पित वि கொடுக்கப்பட்ட
अर्पितकर वि விவாகம் செய்து கொண்ட
अर्प्य वि கொடுக்கத் தக்க
अर्पिशः, सः पु ஹிருதயம். ஹிருதயமாம்ஸம்
अर्व । प நெருங்கு. ஹிம்ஸி. கொல்
अर्बु(र्बु)दं, दः पु வீக்கம். கண்ணேய். மாம்ஸ பிண்டம். 10 கோடி. நமது தேசத்திற்கு மேற்கே யுள்ள ஓர் மலை. இந்திரனுல் கொல்லப்பட்ட ஸர்ப்பம் போன்ற ஓர் அஸுரன். பாம்பு. மேகம். ஓர் ஜைன்யஸ்தலம். ஓர் ஜனம். ஓர் நரகம்
अर्बुदिः இந்திரனுல் கொல்லப்பட்ட ஓர் அஸுரன். எங்கும் பரவியுள்ள பிரபு
अर्बुदिन् वि கட்டியால் பாதைப்படுகிற
अर्भ वि சிறிய. முக்கியமில்லாத र्भः குழந்தை
अर्भक वि ,, நட்பமான. இளைத்த. மூடனை. குழந்தையான. ஸமானமான कः சிறுவன். குழந்தை. குட்டி.
अर्भग वि சிறிய. இளையவனை [மூடன்
अर्मः, र्मं கண்ணேய். போய்ச் சேரவேண்டிய இடம். சுடுகாடு
अर्मक वि குறுகலான. இளைத்த कं குறுகல்
अर्मण न துரோண அளவு. பதக்கு
अर्मन् न ஐவிதக் கண்ணேய்களில் ஒன்று.
अर्मपिः स्त्री குதிரைக் கொறடா
अर्य वि மிகச்சிறந்த பூஜிக்கத்தகுந்த. பற்றுள்ள .பிரியமான र्यः (ஸ்வாமின்) பிரபு. வைச்யன். அந்தப்புரக்கா

वलन् र्यी யஜமானி. வைச்ய ஜாதி ஸ்திரீ. வைச்யனின் மனைவி -जारा ஆர்யனின் பத்னீ -पत्नी தர்மபத்னீ -वर्यः வைச்யகுலத்தோன்.

**अर्यमन्** पु ஸூர்யன். பிதிர்க்களின் தலைவன். உத்திரம். எருக்கு. ஓர் ஆதித்தியன். பிராண ஸ்நேகிதன் -देवा [மகம்

**अर्यमिक** वि இரக்கமுள்ள

**अर्यम्यः** पु ஸூர்யன்.

**अर्याणी, र्यी** स्त्री வைச்ய ஜாதி ஸ்திரீ

**अर्व्** । प கொல்

**अर्वट** न சாம்பல்

**अर्वन्** वि அசைகிற. ஓடுகிற. அல்பமான. நிந்திக்கத் தகுந்த पु குதிரை.சந்திரனின்12ல் 1குதிரை.குதிரைக்காரன். இந்திரன். சாண்டி பெண் குதிரை. கூட்டிவிடுபவள். ஜல, வன தேவதை -वसुः ஸூர்யனின் 7 முக்கிய கிரணங்களில் ஒன்று.

**अर्वश** वि வேகமான. வேக, பந்தயக் குதிரைகளையுடைய.

**अर्वाच्** वि இப்பக்கம் வருகிற, இருக்கிற. ஸந்திக்க வருகிற. பின்னே. பிந்தியிருக்கிற. தொடருகிற क् अ இப்பக்கத்தில். ஓரிடத்திலிருந்து. பின்னே. கீழ் நோக்கி. உடனே. அருகே. முன்னே -कालः பிந்தியகாலம் -कालिक ஸமீப, தற்காலத்திய-कूल ஆற்றின் ஸமீபக்கரை -बिल சந்தை, வாயை இப்பக்கமாய் உடைத்தாயிருக்கிற -वसु वि ஐச்வர்யத்தையளிக்கிற -वसुः மழை. மேகம் -सामन् न ஸோமயாகம் செய்யப்படும் மூன்று நாட்களும் -स्रोतस् पु ஆஹார வழியை அடிப்பக்க முடைய ஜந்து

**अर्वाकि** अ அருகாமையில் [விசேஷங்கள்

**अर्वाचीन** वि நோக்கித்திரும்புகிற. அனுகூலமான. கீழே. இப்பக்கமிருக்கிற. பின்னே பிறந்த. தற்காலத்திய,

விரோதமான. ता விரோத நிலை. காலத்தில் பிற்பட்ட நிலை ं अ இப்பக்கமாய். அது முதல். அன்று தொடங்கி. குறைவாய். பிந்தி

**अर्वावत्** त्रि தற்காலத்திய स्त्री அருகாமை

**अर्वावसु** தேவதைகளின் ஹோதா [ராஜாக்கள்

**अर्बुक** ஸஹதேவனால் ஜயிக்கப்பட்ட தென்னாட்டு ஜனம்,

**अर्श** நிமைவிளைவிக்கிற र्शः கெடுதி. மூலவியாதி ஆணையட்டை

**अर्शस्** न மூலவியாதி -घ्न மூலத்தைத்தொலைக்கிற -घ्नः கரணை. மும்மடங்கு நீர் கொண்ட மோர் -घ्नी ஒருவிதப் பூண்டு. சேரான் கொட்டைமரம் -युजू त्रि மூல வியாதியுள்ள -हित மூலத்தை குணப்படுத்துகிற-हितः சேரான் கொட்டை மரம்.

**अर्शस** त्रि மூல வியாதியுள்ள = अर्शिन् त्रि

**अर्शसान** त्रि தீங்கிழைக்க முயலுகிற नः தீ. ஓர் அஸுரன்

**अर्षण** त्रि போகிற. णं போதல் णी வண்டி. குத்தல். நோவு

**अर्ह्** । प தகுதியாயிரு. உரிமையுடைத்தாயிரு. ஸஹாயத்திற்குக் கோரப்பட்டிரு. செய்து முடிக்கத் தகுந்திரு. தாளிக்கையாயிரு. ஸமானமாயிரு. முடியுமாயிரு. பூஜி

**अर्ह** त्रि பூஜிக்கத்தகுந்த.உரிமையுள்ள தேவையோடிருக்கிற, ஆகிற. தகுந்த. தாளுகிற. र्हः புலிக்குட்டி. விலை. விஷ்ணு இந்திரன். தகுதி. போக்கு र्हा பூஜை

**अर्हण**, णा பூஜை. மரியாதை

**अर्हणा** अ வரும்படிக்குத் தகுந்தபடி

**अर्हणीय** त्रि பூஜிக்கத் தகுந்த.

**अर्हत्** त्रि தகுந்த. பூஜிக்கத் தகுந்த. துதிக்க, மெச்சப்பட்ட. தாளிக்கையுள்ள. पु ஓர் பௌத்தன். ஜைன்யதேவதை

**अर्हत** त्रि தகுந்த. तः பௌத்தன் (சந்நியாசி). சிவன்.

**अर्हती** स्त्री பூஜிக்கத் தகுந்த யோக்கியதை. பூஜை.

अर्ह्य वि அடைய, துதிக்கத்தக்க. சரியான.
अर्हरिष्वणि वि சத்துருக்களை மிகவும் அழப் பண்ணுகிற
अल् 1 उ அலங்கரி. சக்தனாயிரு. தடுத்துக்கொள்.
अलकः पु (நெற்றியில் தொங்கும்) சுருட்டைமயிர். நெற்றி. பசுமஞ்சள். பைத்தியம் பிடித்த நாய். ஓர் எருக்கு கா 8-10 வயதிற்குட்பட்டவள். மேரு, ஹிமாலயங்களினுச்சியில் சிவன், யக்ஷர்கள் வஸிக்கும் குபேர நகரம் -अधिपः குபேரன் -अंतः சுருட்டை மயிர். அதன் நுனி -नंदा கங்கை, அதில் விழும் ஓர் நதி. 8-10 வயதிற்குட்பட்டவள் -प्रभा குபேர நகரம் -प्रियः வேங்கை மரம் -संहति: மயிர்ச்சுருள் வரிசைகள்
अलकं अ வீணை. ஒன்றுக்குமின்றி
अलक्त(क): அரக்கு -रसः ஒருவிதச் சாயம், பால், பசை. அரக்கின் சிவப்பு -मूलं சாய வேர்.
अलक्षण वि விசேஷ குணங்களிராத. णं அமங்கலக் குறி.
अलक्षित वि -अंतक திடீரென் றிறந்த -उपस्थित:காணப்படாமலே நெருங்கினவன்
अलक्ष्य वि (அர்த்தத்தில்) அப்பிரதானமாயிராத -गति வி தோன்றாமலே போகிற. -जन्मता தெரிந்திராத, அப்பிரஸித்தமான பிறப்பையுடைய -लिंग மாறுவேடம் பூண்ட -वाच् वि தோன்றாத பொருளைக் குறித்துப் பேசுகிற
अलक्ष्मीः स्त्री துரதிருஷ்டம். துன்பம். தரித்திரம் [பேசுகிற
अलगर्दः, र्थः पु தண்ணீர்ப் பாம்பு र्दा பெரிய விஷ அட்டை
अलग्न वि தத்திப் பேசுகிற. ஸம்பந்தமில்லாத பேச்சான
अलंघनीयता स्त्री அருகே செல்லக்கூடாமை. கௌரவிக்க வேண்டிய தன்மை. ஸர்வாதிகாரத்தோடு ஆளல்
अलजः पु ஒருவிதப் பக்ஷி
अलजी स्त्री கண்ணெரிச்சல். எலும்புப் பூட்டுகளில் நோய்

**अलज्ज** वि கூச்சமில்லாத ஜா தைரியம். வெட்கமின்மை

**अलंजरः, जुरः** पु மண் சால்.

**अलतिः** पु சுருதி மூட்டல். ஆலாபனை

**अलथः** पु கல்லொளி மரம். திப்பிலி. பௌர்ணமி

**अलम्** न தேள் கொடுக்கின் முள். ஹரிதளம். ஹரிதாளகம் अ போதுமானதாய். சக்தனாய். ஸமமாய். தேவையின்றி. முழுதும். மிகவும். வீணாய். நிச்சயமாய். அலங்காரமாய். இருப்பை யுடையதாய் **-कर्मीण** திறமை வாய்ந்த **-कुमारि** वि ஒரு சிறுமியின் ஜீவனத்திற்குப் போதுமான (தனம்) **-गामिन्** वि முறைப்படி தொடருகிற **-गामीनः** வழி நடப்போன் **-जीविक, जीवन** वि ஜீவனத்திற்குப் போதுமான **-जुष** वि உணவிற்குப்) போதுமான =**-तम** वि சக்தியுள்ள **-धन** போதுமான சொத்துள்ள **-पशुः** (யாகத்திற்குதவாத) மிருகம் त्रि பசுமாடுடைய **-पुरुषीण** புருஷனுக்குத் தகுந்த, போதுமான **णः** எதிரியின் சேனைத்தலைவன் **-बल** वि போதுமான சக்தியுள்ள. சிவன் **-बुद्धिः** போதுமான அறிவு. பிசகான கொள்கை **-भूष्णु** वि திறமையுள்ள

**अलंकरिष्णु** वि நகைப் பிரியமுள்ள. (திறமையாய்) அலங்கரிக்கிற. அலங்கரிக்கப்பட்ட **ष्णुः** சிவன்

**अलंकर्तृ** वि (திறமையாய்) அலங்கரிப்பவன்.

**अलंकारः** पु அலங்கரித்தல். நகை **अल** அலங்கார சாஸ்திரம். சொல் அலங்காரம். அணி. **-चंद्रिका** குவலயானந்தத்தின் வியாக்கியானம் **-शास्त्रं** ஸாஹித்யம். சொல் அலங்காரம். **-सुवर्णं** நகைகளுக்குபயோகப்படுத்தும் தங்கம். **-सूरः** பௌத்தர்களின் ஓர் நிஷ்டை

**अलंकारकः** पु அலங்காரம். நகை. =**कृतिः** அலங்கார சாஸ்திரம்

**अलंकृ** 8 उ தபாராக்கு அலங்கரி. தடுத்துக்கொள்

अलंपट वि காமாதுரமில்லாத. பதிவிருதையான. ஸ்திரீகள்
अलंबुभूषः पु வருணன். [அறை
अलंबुषः पु வாந்தி. விரல்கள் நீட்டின உள்ளங்கை. ராவணனின் மந்திரியான பிரஹஸ்தன். கடோத்கஜனால் கொல்லப்பட்ட ஓர் அஸுரன் பெளர் அப்ஸாஸ், அப்ஸரஸ் பேதம். ஓர் செடி. உள்ளேவராதிருக்கநீர்த்தடை
अलय वि வீடில்லாத. நாடோடியான. நசியாத. यः அழியாமை. சாச்வதம். பிறப்பு. உற்பத்தி
अलंबुसा स्त्री ஓர் தேசம்.
अलर्कः पु வெறி, பைத்தியம் பிடித்த நாய். வெள்ளெருக்கு. தூதுவளை. 8 கால்களுள்ள ஓர்க் கட்டுக்கதை மிருகம்.
अलपस् न யோக்கியதை. [ஓர்ப்புழு.
अलले अ நாடகத்தில் வரும் பைசாச பாஷையில் ஓர் அர்த்தமில்லாச் சொல்
अलवालं न மரத்தைச்சுற்றி நீருக்காகப் பாத்தி
अलस् वि பிரகாசியாத
अलस वि மந்தமான. சோம்பலான. களைத்த. மிருதுவான. மெதுவான सः கால்விரல்களின் நடுவே சேற்றுப்புண் போன்ற ரணம். ஓர்மரம். ஓர்ரிஷி. ஓர் விஷப்பூச்சி. सा ஓர் பூண்டு .ईक्षणा சோர்ந்தபார்வை யுடையவள்
अलसक वि சோம்பலான कः மலச்சிக்கல், வாதங்களோடு
अलसंतकः, सान्द पु காராமணி பேதம் [வயிற்றுப் பஸம்
अलस्य वि சோம்பலான
अलांडुः, पु ஓர் ஹிம்ஸிக்கும் புழு, ஜந்து
अलातः, तं न கொள்ளிக்கட்டை
अलातृण वि மிகவும் உபத்திரவிக்குந்தன்மையுள்ள. ஒன்றுமே கொடாதிருக்கிற णः மேகம்
अलाबुः, बूः स्त्री சொரைக்காய்ச் செடி बु சொரைக்காய்க்

குடுவை. நீரில் மிதக்கும்சொரைக்காய்-कटं சுரைக்காய் மேல் படிந்திருக்கும் தூசி -पात्रं சுரைக்காய் ஜாடி
**अलाण्य** त्रि (ஸந்திக்கப்)போகிற. தாக்கும்விரோதி.இந்திரன்
**अलारं** न கதவு
**अलासः** पु அடிநாக்கில் எரிச்சலோடு புண்
**अलास्य** त्रि நடனமில்லாத. சோம்பலான. வேலையற்ற.
**अलिः** पु வண்டு. தேள். காக்கை. குயில். விருச்சிகராசி. கள். நத்தை -(सं)कुलं வண்டுக் கூட்டம் -कुलसंकुलः ஜாஜிச் செடி -जिह्वा, ह्विका உண்ணாக்கு -दूर्वा ஓர்ப் பூண்டு -पत्रिका, पर्णी ஓர் மரம். -प्रियः, वल्लभः வண்டுகளுக்குப் பிரியமானசெங்கழுநீர்ப்பூ-प्रिया ஓர்ப்பூ -माला வண்டுக் கூட்டம் -मोदा செடி விசேஷம்
**अलिकं** न நெற்றி
**अलिक्कवः** पु பக்ஷி பேதம்
**अलिगर्दः** पु கரும் பாம்பு. நல்ல பாம்பு
**अलिंशः** पु ஒருவிதப் பைசாசம்
**अलिंग** त्रि நீக்குறிகளையுடைய. ग्या பாலில்லாத. गः பிரம்மம்
**अलिंगिन्** पु கபட ஸந்நியாசி. வஞ்சகன்.
**अलिंजरः** पु சால்
**अलिंदः** पु தெரு வாசற்படிக்கடுத்த திண்ணை, தலைவாசற் படிக்குமுன்னேயிருக்குமிடம்.ஓர்தேசம்,ஜனம்,ராஜன்
**अलिन्** पु தேள். வண்டு. नी வண்டுக் கூட்டம்.
**अलिन** वि அதிக தபோவிருத்தியுள்ள नः ஓர் குலம்
**अलिपकः** पु குயில். பெரிய வண்டு. நாய். தாமரை நூல்
**अलिमकः** = **अनिमकः**
**अलिपक, बक** = **अनिमक**
**अलिसुहृद्** पु முல்லை
**अलीक** त्रि திருப்தியில்லாத. பொய்யான. பாசாங்கு செய்

கிற. சில. கொஞ்சம். क्‍ நெற்றி. அருவருப்புண்டாக்குவது. பொய். ஸ்வர்க்கம். அம்பு. நாயின் புணர்ச்சி -मत्स्यः மீன் போன்ற ருசியுள்ள சமையல் விசேஷம்
अलीकायते நா ஆ வஞ்சிக்கப்பட்டிரு
अलीकिन् वि பிரியமில்லாத. வஞ்சிக்கிற பொய்யான. =लीक्य
अलीगर्दः पु கருநாகம். நல்ல பாம்பு
अलुः पु சிறு நீர்க்குடம்
अलुक्समासः पु வேற்றுமை யுருபுகள் லோபியாத ஸமாஸம்
अलुब्ध वि மிதமான. திருப்தியுள்ள. பேராசையற்ற त्वं திருப்தி
अलक्ष वि மிருதுவான
अले(ले अ நாடகத்தில் அர்த்தமில்லாதஓர் பைசாசபாஷை
अलेपक वि மாசற்ற. தோஷமில்லாத कः பிரம்மம்.
अलेश அதிகமான शं अ ஒருபொழுதுமில்லை
अलैशज वि உறுதியான. அசையாத
अलोक वि பார்க்கமுடியாததான. இடம்,ஜனமில்லாத. இறந்தபின் வேறுலகம் போகாதவனை (புண்ணியம் செய்யாத) कं, कः லோகமல்லாதது. உலக முடிவு. ஜனமின்மை. ஸூக்ஷ்மலோகம். பாதாளம். யாகபுரோஹிதன். பாராதவன். का ஒருவிதப்பக்ஷி -सामान्य वि விசேஷமான. பொதுவல்லாத
अलोकनं न தோன்றுமை. மறைந்துவிடல்
अलोकनीय वि தோன்றுத
अलोकित वि பார்க்கப்படாத
अलोक्य वि பரலோகத்தை ஸம்பாதியாத ता ஸ்வர்க்கத்திற்குத் தகுதியிராமை
अलोपांग वि ஒரு அவயவத்தில் குறைவில்லாத
अलोभः पु பேராசையில்லாமை. மிதம். குழப்பமின்மை.
अलोभिन् नि ஒன்றையும் இச்சிக்காத, தேவையாயிராத

अलोलं न 14 எழுத்துக்களுள்ள ஓர் விருத்தம்.
अलोलु वि விஷயஸுகங்களில் அலக்ஷியமான त्वं அத்தன்மை
अलोलुप वि விஷய ஸுக) இச்சையில்லாத
अलोहित वि ரத்தமில்லாத. சிவப்பாயிராத. तं செந்தாமரை
अलौकिक वि லோக ஸம்பந்தமில்லாத. இயல்பாயிராத. அபூர்வமான. பேச்சில் வழங்காத. வேத ஸம்பந்தமான. ஊஹிக்கப்பட்ட. அமானுஷ.
अल्कः पु மரம். அவயவம். கூட்டம்.
अल्प त्रि அற்பமான. முக்கியமல்லாத. சிறிய. அற்பாயுளுள்ள. இளைய. அபூர்வமான. ल्पं மிகவும் கொஞ்சம். ल्पं, ल्पेन, ल्पात् अ கொஞ்சமாய். அல்பகாரணத்திற்காக. எளிதாக -अल्प वि மிகச் சிறிய. கொஞ்சங் கொஞ்சமாய் -आकांक्षिन् वि கொஞ்சத்தோடு திருப்தியடைகிற -आयुः पु குட்டி. வெள்ளாடு -इतर वि அற்பத்திற்கு வேறான. பெரிய. பல -ईशाख्य वि அற்பயஜமானனின் பின் பெயரிடப்பட்ட. இழிபிறவியான -केशी வசம்புவேர். ஜடாமாம்ஸி -क्रीत वि ஸ்வல்பத்துகைக்கு வாங்கின. நயமான. -गंध செங்கழுநீர். -चेष्टित वि ஜடமான. அசேதனமான -छद, छाद वि அற்ப ஆடையுடுத்த -ज्ञ वि அற்பஞானமுள்ள -तनु वि குட்டையான. இளைத்த. சிறு எலும்புக்களையுடைய -तनुः ஒருவித மரம் -दृष्टि वि அற்ப புத்தியுள்ள. தூரத்திலிருப்பது தெரியாத -पत्रः செடி விசேஷம். ஓர் மரம் -पद्मं செங்கழுநீர் -पशु वि அல்ப பசுமாடுகளையுடைய வெள்ளெரி பேதம் -प्रयोग அபூர்வமாய் உபயோகப் படுத்தப் படுகிற -प्राण, असु वि சுவாஸ காசமுள்ள. கொஞ்சம்பலம், பிராணனுள்ள -प्राणः கஷ்டமின்றி உச்சரிக்கக் கூடியஎழுத்துக்களின்பெயர் (क् च् ट् त् प् ग् ज् ड् द् ब्)

-भाषिन् वि அதிகமாய்ப் பேசாத. மௌனியான -मात्र கொஞ்சம் மாத்திரம். சிறுகாலம், பொழுது -मारिष: ஒருவகைக் கீரை -मूर्ति वि குள்ளமான -मेधस् वि சிற்றறிவுள்ள. மூடனான -वयस् இளம்பிராயமான -विद्य वि படிக்காத. மூடனான -विषय वि அற்பமான விஷயங்களில் தலையிட்டுக் கொண்டிருக்கிற. ஸ்வல்ப அவகாச முள்ள, ப்ரதேச முடைய-शमी வன்னிபோன்ற ஓர் விருக்ஷம் -सरस् न குட்டை [சிறு காஞ்சோரி

अल्पक वि சிறிய. நுட்பமான. இழிவான. कं கொஞ்சம். क:

अल्पता, त्वं न சிறுமை. நுண்மை. மூடத்தனம். தாழ்மை

अल्पंपच वि கொஞ்சம் சமைக்கிற. பிசுனாரியான च: லோபி

अल्पश: अ கொஞ்சமாக. தனியாக. கொஞ்சங்கொஞ்சமாய்

अल्पित वि குறைக்கப்பட்ட. அவமதிக்கப்பட்ட

अल्पिष्ठ वि மிகக் குறைவான

अल्पीकृ 8 उ குறை. பொடியாக்கு. சிறிதாக்கு

अल्पीभूत वि சிறிதான. குறைக்கப்பட்ட

अल्पीयस् वि சற்றுச் சிறிய

अल्लकं न கோவணம்

अल्ला स्त्री தாய். பராம்பிகை.

अव् । प ரக்ஷி. திருப்தி செய். இச்சி. விருத்தி செய். போ. விளங்கு. அறி. நுழை. கேள். திறமைவாய்ந்திரு. யாசி. செய். பிரகாசி. அடை. பெறு. பரவு. அணை. ஹிம்ஸி. இழுத்துக்கொள். தஹி. இரு. பாகங்கொள் अनु+ உற்சாகப்படுத்து. उद्+மதி. உபசரி. முன்னுக்குத் தள்ளு उप+ சிநேகம் பாராட்டு. உற்சாகப்படுத்து सं+ திருப்தி செய். ஆதரி. अवत् अवित वि

अव अ ஒதுங்கி, கீழே. (अवकर्षण) தீர்மானம். (अवघ, सो) பரவல் (अवकृ) அவமதிப்பு. (अवमन्) சிறுமை. (अवहंति) ஆதா

ரம் (अवलंब) சக்தி (अवदात)வெளனம். (अवहंति)கட்டளை
(अवक्लृप्) தாழ்தல். (अवतृ) அறிவையுங் (अवगं)காட்டும்.

अवकट वि கிழாக. பிந்திய. விரோதமான. தோன்றாத. தெற்கேயுண்டான ं பரஸ்பர விரோதம்.

अवकटिका स्त्री கபடம்

अवकरः पु தூம்பு. தூசி. குப்பை

अवकर्ण 10 प கேள். காது கொடு कर्णने

अवकर्तः (कृत्) पु துண்டு. கிழிச்சல் कर्तिन् वि துண்டிக்கிற

अवकर्तनं न வெட்டித்தள்ளல். நாசம். நிர்மூலம்

अवकलित वि அறிய, பெற, பார்க்கப்பட்ட.விபரீதபுத்தியுள்ள

अवका स्त्री சதுப்பு நிலத்திலுண்டாகும் புற்பூண்டு பாசி -उल्व புற்பூண்டு நிறைந்த. மூடின

अवकाश् 1. 4. आ தோற்றத்திலிரு णिच् பார்க்கச் செய்

अवकाशः पु ஸமசம். இடம். ப்ரவேசம். ஸந்தர்ப்பம். ஒழிவு. இடைவெளி. நடுவிலுள்ள காலம், இடம். தொளை. ஒன்றின் கண்ணோட்டம். சில வஸ்துக்களை உற்று நோக்குங்கால் சொல்லப்படும் சுலோகங்கள்.

अवकाशवत् वि விசாலமான (பட்ட

अवकाश्य वि அவகாசமந்திரம் கூடச்சொல்ல அனுமதிக்கப்

अवकीर्ण वि இறைக்க, அழிக்க,நிரப்ப, மூடப்பட்ட. கரடுமுரடாய் உடைக்கப்பட்ட. (விருதம்) தவறின

अवकीर्णिन् वि பிரம்மசர்ய விருதபங்கமுள்ள पु விருதங் கெட்ட பிரம்மசாரி व्रतंவிருதங்கெட்டதற்காகத்தவம்

अवकुंचनं न வளைந்திருத்தல். ஓர் நோய்

अवकुटार वि மிக ஆழமான. கீழே. பின்னே ं விகாரம்

अवकुट्टित वि கோபமூட்டப்பட்ட. அறவெட்டின

अवकुंठनं न சூழ்ந்துகொள்ளல். ஆகர்ஷித்தல் ठित वि

अवकुत्स् 10 उ நிந்தி. பழி. திரஸ்கரி कुत्सित वि तं நிந்தை

अवकुधारिका स्त्री பயிர்க் கூச்சுமுதலியவிகாரத்தைமறைத்தல்

अवकृत् 6 प வெட்டித்தள் णिच् வெட்டி எடுக்கச்செய்

अवकृष् 1 प ஒதுக்கு. இழுத்துத்தள். பிடுங்கியெடு कर्षण

अवकृष्ट त्रि கீழுக்கிழுக்கப்பட்ட. இழிவான. தாழ்ந்த ष्टः இழி தொழில் புரியுமாள்

अवकॄ 6 प கொட்டு. நிரப்பு. வெளித்தள்ளு. விட்டொழி आ பரவு. வெளிவிடு. விச்வாஸ மற்றிரு.

अवकॢप् । आ ஒத்திரு. தகுதியாயிரு. உதவு. முடி. णिच् தகுந்தபடி உபயோகி. தயாராக்கு. முடியுமாயிரு.

अवक्लृप्तिः स्त्री ஸாத்தியம் கூடுந்தன்மை. தகுதி

अवकेश त्रि தொங்குகிற தலை மயிரை யுடைய

अवकेशिन् त्रि பலிக்காத. மலடான. சிறுதலை மயிருடைய पु பயன் கொடாமரம்

अवकोकिल त्रि குயிலால் அருகே இழுக்கப்பட்ட

अवक्तव्य त्रि நிந்தையான. பொய்யான. சொல்ல, விவரிக்க

अवक्त्र त्रि (புண்ணில்போல்) சந்தில்லாத [முடியாத

अवक्षिन् त्रि மேல் விழுகிற. வெல்லுகிற

अवक्रंद् । उ கூச்சலிடு. கர்ஜி. உரத்து அழு

अवक्रंद त्रि மெதுவாய்க் கூவுகிற. கனைக்கிற दः கூசல்

अवक्रम् । उ 4 प ஒதுங்கிவிடு மிதி. வெல். இறங்கு णिच्

अवक्रमिन् त्रि ஓடிப் போய் விடுகிற. தப்பித்துக்கொள்ளுகிற

अवक्रयः पु விலை. கூலி. சத்தம். வரி. வாடகைக்கு விடல்.

अवक्रिया स्त्री விதிப்படி நடவாமை. விட்டு விடல்.

अवक्री 9 उ வாங்கு, வாடகைக்கு விடு. லஞ்சத்திலைடை.

अवक्रुष्ट त्रि (क्रुश) நிந்திக்க, துறத்தப்பட்ட ष्टा நாடகாங்க பேதம்

अवक्रोशः पु ,, திட்டு. நிந்தை. சாபம். பொருந்தாத சப்தம்.

अवक्लिन्न त्रि (क्लिद्) முழுதும்) நனைக்கப்பட்ட क्लेदनं ஒழுக்கு

अवक्लेदः पु ,, ஈரம். கசிவு. நனைவு சவிறு. புண்ணிலிருந்து

वडியும் நீர். வேர்வை. வஞ்சனை
अवक्कणः पु பொருந்தாதராகம், ஸ்வரம்
अवक्काथः पु அஜீர்ணம். சரியானபடியல்லாத கஷாயம்
अवक्षयः पु நாசம். பாழ். நஷ்டம். ஒருவித நோய்
अवक्षयणं न (தீயை) அணைக்க ஸாதனம், கருவி
अवक्षामः पु சாந்திகரமான நைவேத்தியம். நஷ்டத்திற்குச் சரிக்கட்டுதல்.
अवक्षि 1. 5. 9. प ஒதுக்கு. அழிக வாடு. அழி
अवक्षिप् 6 उ விசிறி எறி. வீசு. பறந்து போகச் செய். அதட்டு. கண்டி. நிந்தி णिच् விழச் செய்
अवक्षिप्त वि நிந்தை, ஜாடை, பரிஹாஸமாய்ச் சொல்லப்பட்ட
अवक्षीण वि பாழாக்கப்பட்ட. இளைத்த. ण अழிவு.
अवक्षु 2 प மேலேதும்மு क्षुत वि
अवक्षेपः पु நிந்தை. ஆக்ஷேபணை
अवक्षेपणं न அடக்கல். வெல்லல். णी கடிவாளம் = क्षेपणिका
अवखंड् 10 प வெட்டி, உடைத்துத்தள். தேயப்பண். அழி.
अवखातं न அகழ்
अवखादः पु இழிவான உணவு, நைவேத்தியம்.
अवगण वि சிநேகிதர்களிடமிருந்து பிரிக்கப்பட்ட. (णित वि)
अवगणनं न (गण्) அவமதிப்பு. நிந்தை. அவமானம். தோல்வி
अवगंड पु முகப்பருவு. புரைகுழல்
अवगतिः, गमः, गमनं அறிவு. அறிதல். தீர்ந்த அறிவு.
अवगथ वि விடிகாலையில் ஸ்நானம் செய்த
अवगद्दितः पु விலக்குள்ளது. நிந்திக்கப்பட்டது.
अवगम् 1 प இறங்கு. போய்ப்பார். அடை. அறி. யோசி. நம்பச்செய் णिच् கிட்டே கொண்டுவா. அறிந்திரு. அறியப் பண். சொல். குறி. காட்டு
अवगाढ (गाह्) वि முழுகின. அமுக்கப்பட்ட. ஆழமான अल

ஸ்நானம்செய்யப்படுவதான.(ரத்தம்போல்)தோய்ந்த

**अवगाद:** पु ஓடத்திலிருந்து நீரையிறைக்க மரப் பாத்திரம்

**अवगाह्** । आ அமிழ். முழுகு அல நுழை णिच् குளிப்பாட்டு

**अवगाह:, हनं** न முழுகல். அலமுழுதுமறிதல் துறை.தொட்டி

**अवगीत (गै)** वि இசைவின்றிப் பாடின. பாடுவதில் பிறரால் தூஷிக்கப்பட்ட. நிந்தையான. இழிவான. அடிக்கடி பார்க்கப்பட்ட.நன்கு தெரிந்திருக்கிற तं பொருந்தாத பாட்டு. நிந்திக்கத்தக்க பாடல். கேலி.

**अवगीर्ण** वि துதிக்கப்பட்ட

**अवगुण:** पु குறை. குற்றம்.

**अवगुंठनं** न **(गुंठ्)** முக்காடிடல். மூடல். முகத்தில் போட்டுக் கொள்ளும் மெல்லிய முக்காடு.போர்வை.துடைப்பம். -मुद्रा ஒருவிதச் சடங்கு

**अवगुंठनवत्** वि முக்காடிடப்பட்ட, மூடின.

**अवगुंठिका** மூடல். முக்காடிடல். முக்காடு. திரை

**अवगुंठित** वि மறைத்த. முக்காடிட்ட. அரைக்கப்பட்ட

**अवगुंडित** वि அரைக்கப்பட்ட

**अवगुंफित** वि நெய்யப்பட்ட

**अवगुरणं, गोरणं (गुर्)** न ஆயுதத்தால் அடித்தல். பயமுறுத்தல்

**अवगुह्** । उ மூடு. மறை. உள்ளே வை. அணை गूहनं.

**अवगृह्य** वि பிரிக்கக் கூடிய ஹ். प्रगृह्य வையுடைய பாதம்

**अवगै** 1 प பொருத்த மில்லாத குரலில், நிந்திக்கும்படி பாடு.

**अवग्रह्** 1 उ தளர்த்து (கடிவாளத்தை). பதத்தைப் பகு. பிரி. தண்டி. கைப்பற்று. தடு. எதிர். காலால் நசுக்கு णिच् பிசை गृहीत वि.

**अवग्रह:, ग्राह:** पु ஸமாஸ பதத்தைப் பிரித்தல்.அப்பிரிவிலுள்ள நடு இடைவெளி,அக்குறி.பிரிக்கப்படுவதின் முந்தினதில் கடைசி எழுத்து. 2 உயரெழுத்துக்கள்ஓரிடத்

தில் வந்து ஸந்தியில்லாமை. ஏ, ஓக்களின்பின் லோபிக்கும் அகாரத்திற்குக் காட்டப்படும்sஇக்குறி. பஞ்சம். தடை. யானைக் கூட்டம், நெற்றி. இயற்கைக் குணம். பிசகான அபிப்பிராயம். தண்டனை. சாபம். திட்டு. அங்குசம்

**अवग्रहणं** न தடை. அவமரியாதை. அறிவு.

**अवघट्ट्** । आ ஒதுக்கு. தடைத்துத்தள். பிள. கிழி. தேய். தொடு. கலக்கு घट्टनं

**अवघट्टः** पु குகை. பாழி. எந்திரம். குலுக்கல்.

**अवघर्षणं** न அரைத்தல். தேய்த்தல். சுத்தமாக்கல்.

**अवघातः** (हन्) पु அடி. கொலை. உதை. தான்யத்தைக் குத்தல். திடீரென்று சாதல். घातिन् त्रि

**अवघुष्** । प கோஷித்துப் பிரகடனம் செய். கூட்டம் போடு. சபை கூட்டு. சப்தத்தால் நிரப்பு.

**अवघूर्ण्** 1 उ சுழற்று. (கத்தி) ஆட்டு घूर्णनं புரளல்

**अवघूर्णः** पु சுழற்றல். நீர்ச் சுழி

**अवघृष्** । उ பொடியாக்கு. தடைத்துத்தள் = णिच् சொறி

**अवघोटित** त्रि முழுதும் மூடப்பட்ட

**अवघोषः**, षणं न பிரகடனம் செய்தல். णा பிரகடனம்

**अवघ्रा** 1 प முகர். முத்தமிடு णिच् घ्राणं முகரல்.

**अवच** त्रि தாழ்ந்த

**अवचक्रः** पु பக்ஷிவிசேஷம்

**अवचक्ष्** 2 आ பார். அவமதி. (चक्षणं)

**अवचक्षणः** त्रि நிந்தையான சரித்திரம் சொல்லுபவன்

**अवचनं** न நிந்தை. -कर त्रि சொன்னதைச் செய்யாத.

**अवचनीय** त्रि சொல்லக் கூடாத. நிந்தையில்லாத

**अवचस्कर** त्रि பேசாத. மௌனமான.

**अवचंद्रमसं** न சந்திரனின் கீழ் நோக்குப் பார்வை

**अवचर्** 1 उ அசை. இறங்கு. நோக்கு. **णिच्** இறங்கச் செய். உபயோகி. பிரயோகி

**अवचार** वि மேலேவந்திறங்குகிற. **रः** இறங்கி வருமிடம். பாதை. வேலை செய்யுமிடம்.

**अवचारण** वि அசைகிற **णं** பிரயோகித்தல். உபயோகிக்கும் விதம். (க்ஷார) உப்பு தயாரிக்கும் விதி

**अवचार्य** वि தள்ள, கொடுக்க, பிரயோகிக்கத்தக்க

**अवचि** 3 प பூஜி. 5 उ பொருக்கு. கொய். பிடுங்கு. **चायिन्** वि

**अवचित** वि திரட்ட, ஜனம் நிரப்பப்பட்ட **च(चा) यः**

**अवचूडः, लः** पु தேர்ச்சீலை. கொடியின் கொச்சு

**अवचूर्ण्** 10 प உணவோடு தெளி. மேலேமூடு, பதி

**अवचूर्णनं** न தூளாக்கல். காயத்தின்மேல் தெளித்தல். நோய். [காயம்.

**अवचूलः = अवचूडः**

**अवचूलकं,कः** पु ஈக்களையோட்ட மயில் தோகையால் செய்யப்பட்ட மயிர்க்குச்சு, சாமரம்.

**अवच्छद्** 10 प மேலே பரப்பு, மூடு. மறை. இருட்டில் விடு

**अवच्छ(च्छा)दः** पु மறைவு. மூடி

**अवच्छिद्** 7 उ அறுத்து, உடைத்துத்தள். தூளாய்க்கிழி. பகுத்தறி. லக்ஷணஞ் சொல். வரையறு. பிரித்தெடு. ஒரு நூலிலிருந்து எடுத்துக்கொள்

**अवच्छिन्न** वि விசேஷ குணத்தால் பிரிக்கப்பட்ட **न्नं** புலியின்

**अवच्छुरित** वि கலக்கப்பட்ட. **तं** பெருநகை. கனைப்பு [பூத்காரம்

**अवच्छेदः** पु பாகம். எல்லை. பிரிவு. வித்தியாஸம். விசேஷ குணம். பரவுதல் -**अवच्छेदः** ஸமானமாக்குதல். வித்தியாஸங்களை யொழித்தல்

**अवच्छेदक** वि நிச்சயிக்கிற. பரவுகிற. விசேஷப்படுத்துகிற **कः** பிரித்துக்காட்டுவது. விசேஷத்தன்மை. எல்லை **छेदनं**

**अवजि** 1 प சீர்குலை. கெலி. திரும்பியடை. தடு. ஜயி

**अवजितिः, जयः पु** ஜயம்

**अवजुष्ट वि** போய்ப் பார்க்கப்பட்ட. அடிக்கடி போகப்பட்ட

**अवज्ञा 9 प** அவமதி. நிந்தி ज्ञात वि ज्ञानं அவமரியாதை

**अवज्ञा स्त्री** அவமதிப்பு. அலக்ஷியம் -उपहत वि அவமரியாதையாய்நடத்தப்பட்ட -दुःखं அவமதிப்பாலுண்டான துக்கம்

**अवज्ञेय वि** அவமதிக்கவேண்டிய. நிந்திக்கத் தக்க.

**अवटंकः पु** வில் நாண்

**अवट वि** பள்ளத்திலுண்டான टः குழி. பள்ளம். கிணறு. நாடி. உடலில் பள்ளமான பாகம். செப்படிவித்தைக்காரன் -कच्छपः சந்துக்குள்ளாமை அல லோகானுபவந்தெரியாதவன் -निरोधनः ஓர் நரகம்

**अवटिः, टी स्त्री** சந்து. கிணறு. நாடி.

**अवटीट वि** சப்பை மூக்குள்ள

**अवटुः पु** பாழி. கிணறு. பிடரி. தேகத்தில் பள்ளமான அமுங்கும் பாகம். ஓர் மரம். स्त्री கழுத்தின் உயர்ந்த பாகம். टु न தொளை. வெடிப்பு. கிழிவு. -जः பின் குடுமி கன்னுக்குடுமி. பிடரி. ஓர் தேகச் சுழி

**अवट्य वि** சந்திலிருக்கிற.

**अवडंकः, गः पु** சந்தை.

**अवडीनं न** பக்ஷியின் கீழ் நோக்கிப் பறப்பு

**अवंड वि** வாலுள்ள

**अवतः पु** கிணறு. தொட்டி. பீப்பாய்

**अवतंसं, सः पु** மாலை. காது நகை. ஓலை. கடுக்கன் அல. தலை நகை. கொண்டை அல. நகையாய் உபயோகப்படுவது

**अवतंसयति ना-प** காது நகையாயுபயோகி

**अवतंसकः पु** காது) நகை.

**अवतंसित वि** மாலை, சிகையுள்ள. அல அலங்கரிக்கப்பட்ட. காதிலிடப்பட்ட. தலையிலணிந்த

**अवतक्षणं** न துண்டு துண்டாய் நறுக்கப்பட்டிருப்பது வைக்
**अवतड्** 10 प கீழ் நோக்கியடி. மிதி. நசுக்கு ताडनं [கோல்
**अवतत** वि (तनू) கீழே,மேலேபறப்பப்பட்ட.(நாணை) தளர்த்
தப்பட்ட धन्वा வளைக்கப்படாத வில்லையுடையவனை
**अवततिः** स्त्री விசாலம். பரப்பல். விதானம்
**अवतप्** 1 प கீழ்நோக்கித்தபி. णिच् கொளுத்து. ஒளிப்பி स वि
**अवतमसं** न மங்கலான) இருள். பிரசித்தமின்மை.
**अवत्तरं** अ வெகுதூரத்தில்
**अवतरः** पु இறங்கல்.
**अवतरणं** न ,, அவதாரம். தாண்டல். நீடீரென்று மறை
தல். படித்துறை. புண்ணிய தீர்த்தம். ஒரு பாஷை
யிலிருந்து மற்றொன்றிர்க்கு மொழி பெயர்த்தல்.
ப்ரவேசம், பீடிகை. மேற்கோள். நூலின் ஓரம்சம்.
நாடக அங்கபேதம்.
**अवतरणिका** स्त्री வேலையின் தொடக்கத்தில் தேவதாப் பிரார்த்
தனை முகவுரை
**अवतरणी** முகவுரை. கோர்வை. ஒழுங்கு
**अवतर्पणं** न ஆற்றும் மருந்து
**अवतस्** अ கீழே. கீழுலகில்
**अवतानः** पु நீட்டல். வில்லை வளைக்காமை. தொங்கும் முகம்.
செடியின் படற்சி. மூடி. விதானம்
**अवतापिन्** वि ஸூரியன் நேராய்க் கீழே காய்கிற (இடம்)
**अवतारः** पु மேலிருந்து கீழிறங்கல் अप போயடைதல்.
பொருந்தல். ரூபம். பிரத்தியக்ஷம். அவதாரம் செய்
தல். ஓர்த்தேவதை பூலோகத்திற்கு வரல். விஷ்ணு
வின் அவதாரம் (10). ஓர் புதுத் தோற்றம். குண
விசேஷத்திற்காகப் பிரஸித்தி பெற்றிருப்பவன்
(அவதார புருஷன்). ஒன்றைக் கருதல். துறை. புண்
ணிய தீர்த்தம். மொழி பெயர்ப்பு. குளம். பீடிகை.

கடத்தல். வஸந்தகாலம்-कथा அவதார விவரம் சங்கர விஜயத்தில் ஓர் அத்தியாயம் -मंत्रः ஓர் தேவதை அவதாரம் செய்ய மந்திரம்.

**अवतारक** (रिका स्त्री) तारिन् वि இறங்கி வருகிற. தோன்றுகிற

**अवतारणं** न இறங்குதல். மொழி பெயர்ப்பு. பேய்பிடித்துக் கொள்ளல். பூஜை. துணிநுனிகள், ஓரம். முகவுரை

**अवतीर्ण** वि இறங்கின. ஸ்நானம் செய்த. அவதாரமாய்த் தோன்றின. தாண்டப்பட்ட (இரவுபோல்)வந்த. மொழிபெயர்க்கப்பட்ட -ऋण वि கடனிலிருந்து மீண்ட

**अवतूलयति** ना प. பஞ்சால் தேய்

**अवतृ** । प இறங்கு. பாய், இருப்பதை வெளித்தள். கொட்டு (நதிபோல்) சேர். பிரவேசி. தோன்று. (தேவன்)மனிதனைப் பூலோகத்திற்கு வந்திறங்கு. மேற் கொள். णिच् இறங்கச் செய். இறக்கு. ஒதுக்கு. கீழுக்குக் கொண்டுவா. கீழே சாய். தொடங்கு.

**अवतोका** स्त्री சினையழிந்த பசு

**अवत्त** वि (दो) அற வெட்டப்பட்ட (त्तिन् वि)

**अवत्रस्त** वि மிகவும் பயந்த

**अवत्सीय** वि கன்றிற்குத் தகுந்ததாயிராத

**अवदंशः** पु ஊறுகாய்

**अवदत्त** वि கொடுத்து விடப்பட்ட. முடிக்கப்பட்ட.

**अवदरणं** (दृ) न (கட்டி) உடைதல். வெடித்தல். பிரித்தல்.

**अवदह्**। प கொளுத்தித்தள். அழி दाघः சூடு. கோடை

**अवदात** वि அழகான. சுத்தமான. பிரகாசமான. வெண்மையான. புண்ணியமான.மஞ்சளான तः மஞ்சள், வெண்ணிறம்

**अवदानं** न சுத்தமான, ஒப்புக்கொள்ளத் தகுந்த, முடிந்த வேலை. வீரச்செயல். கதாவிஷயம். (दो) துண்டு

துண்டாக்கல். பாகம். மீறல். ஓர்வேர்

**अवदारणं** न (दॄ) மண்வெட்டி. தோண்டல். கெட்ட பாறை. கெட்ட யுத்தம்.

**अवदावद** वि கெட்ட பெயரில்லாத.

**अवदाहं, ह** पु (दह्) இலாமிச்சைவேர். தாபம்.

**अवदाहेष्टं, हेष्टकापथं** न இலாமிச்சை வேர்

**अवदीर्ण** (दॄ) वि இரண்டாய்ப் பிளக்கப்பட்ட. உடைக்க. வகுக்கப்பட்ட. உருக்கின. மயங்கின.

**अवदून** वि துதிக்கப்பட்ட

**अवदॄ** 9 प இழுத்துத்தள். णिच् வெடிக்கச் செய். கிழி. பிள. கீறு. தோண்டு

**अवदो** 4 प வெட்டிச்சாய். வகு. (கோபம்) ஆற்று.

**अवदोहः** पु பால் கறத்தல். பால்

**अवद्य** वि நிந்திக்கத்தக்க. சொல்லத் தாழ்வான. द्यं குறை. குற்றம். பழி. பாவம். அவமானம் -गोहन वि தேவையை மறைக்கிற -धी त्रि மூடனை -भीः स्त्री பாப பயம்

**अवद्यवत्** वि அவமானமான. சோகிக்கத்தக்க

**अवद्रंगः** पु சந்தை

**अवध** वि கொல்ல முடியாத धः இறப்பு. நீக்கல், தவிர்ப்பு

**अवधा** 3 आ கீழே வை, போடு.(மனதைப்போல்) பொருத்து கவனி. சேர்த்து மூடு. வைக்க, பொருத்தப்பட்டிரு

**अवधातव्य, धानीय** वि கவனிக்கப்படவேண்டிய.

**अवधानं** न கவனிப்பு. ஜாக்கிரதை. கவலை. निन् वि.

**अवधाव्** । उ கீழே. பின்னேயோடு. சொட்டு.

**अवधावनं** न தொடரல். கைப்பற்றல். கழுவல்

**अवधिः** पु (धा) பற்று. கவலை கடைசி எல்லை (கால, இட) முடிவு. தீர்மானம். காலஅளவு. வேலை. பிரிவு. குழி. சலியாமை

अवधीर् 10 प அவமதி. धीरणं. धीरणा धीरित वि धीरिन् त्रि மேம் படுகிற.

अवधू 5 उ குலுக்கு. நடுங்கச் செய். இங்கு மங்கும் வீசு அல ஒதுக்கு அல மேற்கொள். அவமதி णिच् குலுக்கு

अवधूत त्रि வெல்ல, உயரெடுக்கப்பட்ட, உலகப் பற்றற்ற तः ஸந்நியாஸி -वेश त्रि நிர்வாணமான.

अवधूननं न (धू) சிகித்ஸை. மிதித்தல்.

अवधूकः पु மனைவி யில்லாதவன்.

अवधूलनं न புண்களின் மேல் உறிஞ்சும் பொடிகளைத் தூவல்

अवधृ 10 उ முடிவாய்த் தீர்மானித்துக்கொள். பிசகின்றி நிச்சயி. யோசி. கவனி. நினை. வரையறு. நிர்ப்பந்தத் திற்குட்படுத்து. धारः धारकः, रण त्रि रणं, णा धारणीय धार्य वि धारित धृत वि

अवधेय त्रि (धा) வைக்க, கவனிக்க, நம்ப, அறியத் தகுந்த यं கவனிப்பு

अव(ब)ध्र वि துன்பப்படுத்தாத. ஹிதமான

अवध्वंस् 1 आ தலையிட்டுக்கொள். எறி. தூவு = णिच्

अवध्वंसः पु நீக்கல். பொடி. நிந்தை. விழுந்துவிடல்.

अवध्वस्त वि நசித்த. தெளிக்க, கொல்லப்பட்ட

अवनक्षत्र न நக்ஷத்திரங்களின் மறைந்துவிடல்

अवनत त्रि (नं) வளைக்கப்பட்ட. தொங்கவிடப்பட்ட. தலை குனிந்த. மேற்கை அணுகின. அஸ்தமித்த. வணங்கின. வளைந்த. வணக்கமுள்ள -शीर्षन् त्रि தலை வணங்குகிற.

अवनतिः स्त्री ஸாஷ்டாங்க) நமஸ்காரம். (வில்லைப் போல்) வளைத்தல்

अवनद्ध वि (नह्) உருவாக்க, செய்ய, நாட்ட, அமர்த்த, மூட சூழ, உடுத்த, கட்டப்பட்ட -द्धं தோல்வாத்தியம். பறை

नाहः கீழே, தலை கீழாய்த் தள்ளல்

**अवनम्र** वि வளைக்கப்பட்ட

**अवनयः** पु (नी) குனியச் செய்தல்.

**अवनाट** वि சப்பை மூக்குள்ள ट சப்பை மூக்குள்ள நிலைமை

**अवनामः** पु காலில் விழுதல். வணங்கச் செய்தல்

**अवनामक** वि அமுக்குகிற, வளையச்செய்வதான.

**अवनामिन्** वि குனிகிற. வளைகிற

**अवनिः, नी** स्त्री பூமி. (स अ த்தில்) இடம். தரை. விரல். ஒரு செடி. நதி. நதிப்போக்கு, உள்ளிடம். -गत ஸாஷ்டாங்க மாய்க் கீழே விழுந்த -चरः நாடோடி. -ध्रः மலை- रुह्, द्र மரம்.

**अवनिक्त** वि (निज्) தேட, அலம்பப்பட்ட

**अवनिज्** 3 உகமுவு. நிரப்பு.

**अवनी** 1 प கீழே கொண்டுவா. உள்ளே தள்ளு. இறங்க, பாயச் செய். ஒதுக்கு. கீழே, மேலே கொட்டு. नयनं नायः नायक वि

**अवनेज्य** वि சுத்தி செய்ய உபயோகப்படுகிற.

**अवनेजनं** न (निज्) ஸ்நானம். கழுவநீர். காலலும்புதல். சிராத்தத்தில் தர்ப்பத்தை ப்ரோக்ஷித்தல்

**अवंतिः, ती** स्त्री முக்தி தரும் 7ல் 1 ஆன தற்கால உஜ்ஜயினீ நகரம். ஓர் நதி. தமக்கை. கழுநீர் -सोमः சாத்திர்த்தம்

**अवन्तिकः** पु ஒருவிதக் கொழுக்கட்டை. பணியாரம்.

**अवपट्** 10 प உடை. பிள. கிழி अ உடைந்துபோ.

**अवपत्** 1 प கீழிறங்கு. மேலேபாய். णिच् வெட்டித்தள்ளு

**अवपद्** 4 आ கீழிறங்கு. (கர்ப்பம், தலை மயிர்போல்) வெளி வந்து விழு. இல்லாமற் பண்ணப்பட்டிரு. தற்செயலாய் நேரப் பெற்றிரு. பாழாக்கு णिच् (पादः)

**अवपन्न** वि கலக்க, சேர்த்துச் சமைக்கப்பட்டிருக்கிற.

**अवपाक** वि நன்கு சமைக்கப்பட்டிராத. சிக்கு, வலையில்லாத

अवपाटिका स्त्री நுனித் தோலின் காயம்
अवपातः पु யானை பிடிக்கப்) பள்ளம். पातनं (पत्)
अवपात्र वि யாருபயோகிப்பதால் பாத்திரத்திற்கு அசுசி
யேற்படுகிறதோ அப்படிப்பட்ட மிலேச்சன்
अवपात्रित वि பாத்திரங்களைத்தொடக்கூடாதஜாதிப்ரஷ்டன்
अवपाशित वि வலையுட் சிக்கின. சுற்றிவலையுள்ள
अवपीड वि (पीड्) சுற்றிலும்) அமுக்கப்பட்ட. डः அமுக்கல்.
ஒருவித சிகித்ஸை. தும்மலுண்டாக்கும் மருந்து
=पीडनं पीडना கெடுதி.
अवप्रजन: पु சிலந்திக்கூட்டு நூலோரம்
अवफः पु வயிற்றில் அதிகவாயு. குடலிலிருந்து வாயு.
अवव्रघा स्त्री முக்கோண அடியின் துண்டு
अवबंध् 9 प கட்டு अल. ஆணியடித்து இறுக்கு. தடு.
अववंत्रः पु எல்லாப்பக்கங்களிலும்கட்டல்.கண்ரொப்பையின்)
अवबाधा स्त्री துயரம். எதிர்த்தல் [ஓர் நோய்.
अवबाहुकः पु கையில் சுளுக்கு.
अवबुध् 4 आ எழுப்பு. அறிவிற்குவா. அறி. णिच् விழிக்கச்
செய். அறிவி. ஞாபகப்படுத்து. கற்பி.
अवबुद्ध वि அறியப்பட்ட. அறிபவன்
अवबोधः पु பகுத்து) அறிதல். தீர்மானம். அறிவு. போதனை
अवबोधक वि ஸூசிப்பிக்கிற. कः எழுப்புபவன். ஸூரியன்.
துதி பாடகன். குரு. எண்ணம். बोधनं அறிவு.
अवब्रवः पु அபவாதம்.
अवभंगः पु (भंज्) அடக்கல். தோற்கடித்தல்
अवभंजनं न (भंज्) ,, உடைத்தல் ,, கிழித்தல்.
अवभास् । आ பிரகாசி. வெளிப்படையாகு. தோன்று णिच्
अवभासः पु அறிவு. பிசகான கொள்கை. எல்லை. ஒளி. தோற்
றம் -करः ஓர் தேவதை -प्रभाः ब ஓர் தேவவர்க்கம். भा-

सक वि कं பிரம்மம் भासित, नू वि नी மேல் தோல்.

**अवभृथः** पु பிரதான யக்ய முடிவு. யாக முடிவில் ஸ்நானம். முழுக்கால் யஜமானன், யக்ய பாத்திரங்களின் சுத்தி. சுத்தி செய்யும் தீர்த்தம்.ந்யூநதிரிக்தப் பிராயச்சித்த ஹோமம். யாகம் -स्नानं யக்யாந்தரத்தில் ஸ்நானம்.

**अवभ्रः** पु ஸ்திரீ, சிசுசோரம். கொண்டு போய்விடல்.

**अवभ्रट** त्रि சப்பை மூக்குள்ள. टं அதுள்ள நிலைமை.

**अवम** वि பாவியான. இழிவான. தாழ்ந்த. அடுத்த. இளைய. கடைசியான. குறைகிற मः குரு. மூன்றில் ஒரு பிதிர் வர்க்கம் मं பாவம். சுக்ல பக்ஷநாள்.

**अवमतांकुशः** पु மதயானை. முன் செல்லாதது. அங்குசத்தை அவமதிப்பது.

**अवमन्** 4 आ அவமதி. அலக்ஷியம் செய். णिच् मानः,माननं नना

**अवमतिः** पु பிரபு. அவமரியாதை. வெறுப்பு.

**अतमंतव्य, मान्य** वि அலக்ஷியம் செய்யப்பட வேண்டிய. இழி

**अवमंतृ** वि மிகக் கர்வியான. திரஸ்கரிக்கிற = मानिन् वि [வான

**अवमंथ** वि வீங்கப் பண்ணுகிற थः நசுக்கு, இடிப்பு, கட்டிக ளால் வீக்கங்களடைகிற ஓர் நோய்

**अवमर्दः** पु (मृद्) மிதித்தல். பொடி பண்ணல். உழைப்பு. கஷ் டம். அன்னிய தேசத்தைப் பாழாக்கல். கொலை

**अवमर्दनं** न உடம்பைப் பிடித்தல். தலை) தேய்த்தல்.

**अवमर्षः** पु ஆராய்ச்சி. மேல் விழல். நாடகத்தில் 5 அம்சங் கள், ஸந்திகளில் 1.

**अवमर्षणं** न பொறுமையின்மை. ஞாபகத்திலிருந்து) நீக்கல்

**अवमुच्** 6 प தளர்த்து. அவிழ்த்துவிடு. விடுவி (உடை) கழற்று. வண்டிக் குதிரையின் ஸாமான்களைக் கழற்று

**अवमूर्धन्** वि தலையைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கிற. -शयः पु தலை குனிந்து கொண்டு தூங்குபவன் वि வணா

ங்கச்செய்கிற.

अवमृज् 2 प துடைத்துத் தள். ஒதுக்கு. मार्जनं கழுவல்.

अवमृश् 6 प. தொடு. யோசி. णिच् தடு. கெடு. मर्शः

अवयज् । आ பிராயச்சித்தம் செய். ஹோமத்தால் (சத்துருக்களைத்) துலை. பூஜியாமலிரு यजनं சுத்தி செய்தல்.

अवयवः पु அங்கம். அம்சம். உடல். உபகரணம். தர்க்கவாதம் -अर्थः பதத்தின் உறுப்புக்களின் அர்த்தம்.

अवयवशः अ அங்கமங்கமாய். வெவ்வேறாய். துண்டுதுண்டாய்

अवयविन् वि அங்கங்களையுடைய पु (वी) பூர்ணமானது. நியாயம். வாதம்.

अवया 2 उ கீழிறங்கு. ஒன்றிலிருந்து நீங்கு. விட்டொழி. அறி

अवया(त वि இடங்கொடுக்கிற. நிறுத்துகிற हेळः கோபந் தணிக்கப்பட்டவன்

अवयाज् स्त्री யக்யாங்க விசேஷம் पु ரித்விக் விசேஷம்.

अवयातृ वि பிரிப்பவன். ஒதுக்கல். தணித்தல்.

अवयानं न பின்னடைதல். பிராயச்சித்தம்."

अवयुन त्रि அறிவில்லாத

अवर वि இளைய. பிந்தின. தொடருகிற. கீழே. இழிவான. குறைவான. கடைசியான. மேற்கத்திய. அடுத்த. மிகச் சிறந்த रः பின் தேசம். போன காலம் रा திக்கு. துர்க்கை. रं, रा யானையின் பின் கணுக்கால் -अर्ध्यः கூடிய மட்டிலும் மிகக் குறைவானது. பின்னுடல் र्ध्यं अ தொடர்ச்சியாய் र्धतः अ கீழிருந்து -अर्ध्यै கீழ், அருகாமையிலிருக்கிற. கீழிருந்து ஆரம்பிக்கிற. குறைவுள்ள. र्ध्यं குறைவான, மிகச் சிறிய அம்சம். -अवर ஸர்வத்திற்குங் கேவலமான -जः தம்பி. இழி பிறவியான சூத்திரன் -जा தங்கை -परं अ ஒன்றின் பின்னொன்றாய் -पुरुषाः ब ஒருவனின் ஸந்ததி -व्रत விருத ..சூன்ய

मான தः ஸூரியன். எருக்கு
अवरणः पु மாவிலிங்க மரம் [நோக்கி
अवरतः, रस्तात् अ பின்னே. பிந்தி. கீழே. கீழிருந்து. கீழ்
अवरतिः स्त्री (रं) நிறுத்தல். ஓய்தல். ஒழிவு. रत वि
अवरहस वि ஜனமற்ற. பாழடைந்த
अवरीण वि அவமதிக்கப்பட்ட
अवरुग्ण वि உடைந்த. கிழிந்த. நோயுள்ள
अवरुध् 7 उ தடு. நிறுத்து. முற்றுகை போடு. கொடுத்துதவு. தொங்கி, ஒட்டியிருந்தி: அடைதல்
अवरुद्ध वि மாறுவேடம் பூண்ட. மறைந்து ரக்ஷிக்கப்பட்டிருக்கிற. தனியாய், சிறையில் வைத்திருக்கப்பட்டிருக்கிற -देह கைதி செய்யப்பட்டிருக்கிற
अवरुह् । प இறங்கு. णिच् இறக்கு. குறை. நடு. ஸிம்மாஸனத்திலிருந்து நீக்கு. ஒதுக்கு.
अवरूढ वि நிர்மூலம் செய்யப்பட்ட
अवरूप वि விகாரமாக்கப்பட்ட. இழிவாக்கப்பட்ட
अवरेण अ கீழே.
अवरोकिन् वि பிரகாசிக்கிற.
अवरोचकः पु உணவி விச்சையில்லாத நோய்
अवरोधः पु (रुध्) அந்தப்புரம். ஸ்திரீகளினறை. ராஜனின் எல்லா மனைவிகளும். வேலி. சிறை, முற்றுகை. மூடி. காவற்காரன். உள்ளே பள்ளம். ஸ்வர்க்கம் -अयनं முற்றுகை. அந்தப்புரம் -कः காவலன் -कं வேலி. தடை (रुह्) வேரில் துளிர்ப்பு. இறங்கல்
अवरोधनं न ரஹஸ்யமானயிடம். உள்பாகம். அந்தப்புரம், ஸ்திரீ. (रुह्) இறங்கல். இறங்குமுகம்
अवरोधिक, धिन् वि தடுக்கிற कः அந்தப்புற மணியகாரன் का அந்தப்புரத்திலிருப்பவள், வைப்பாட்டி. வேலி

**अवरोपणं** न (रुह्) இல்லாமற்பண்ணல். அஸ்தமித்தல். रोपित वि

**अवरोहः** पु (रुह्) மரவேர்முதல் நுனிவரையில் படர்ந்தகொடி விழுது. ஸுவர்க்கம். இறங்கல். ஏறல். செடிபடர்தல். ராகத்தின் தாழ்ந்த குரல் -शाखः, शाखिन्, शयिन् ஆல்

**अवरोहणं** न இறங்கல். ஏறல். रोहिका அமுக்கிறுன் செடி

**अवरोहित** वि இளஞ்சிவப்பு நிறமான

**अवरोहिन्** वि இறங்குகிற पु (ही) ஆல். கால தசை.

**अवर्गः** पु உயிரெழுத்துக்கள்.

**अवर्चस्** वि பார்க்க அவலக்ஷணமான

**अवर्जिवस्** वि தடுக்காத. தடுக்கமுடியாத

**अवर्ण** वि இழிவான. நற்குணங்களற்ற. र्णः பழி. நிந்தை. ह्रस्व, दीर्घ, प्लुत, उदात्त, अनुदात्त முதலிய ரீதியாகவுள்ள 18 எழுத்துக்களும் -वादः அவதூறு.

**अवर्तिः** स्त्री துரதிருஷ்டம். ஏழ்மை. துயரம். கஷ்டநிலை

**अवर्त्र** वि திரும்பாத

**अवर्यति** ना. प தாழ்ந்ததாகு

**अवर्ष्य** वि மழையின்றி ஒளியுள்ள பொழுதில் சுறுசுறுப்பா[யிருக்கிற

**अवलक्ष** वि வெளுப்பான. क्षः வெண்ணிறம்

**अवलग्न** वि ஒட்டிக்கொண்டு, தொங்கிக்கொண்டிருக்கிற. சேர்ந்தாப்போல் வைக்கப்பட்டிருக்கிற ग्नः இடுப்பு. சிசு.

**अवलम्ब** 1 आ தொங்கு. தொங்கவிடப்பட்டிரு. தங்கு. பற்றியிரு. சார். தாங்கு. ஆச்ரயி. நிதானமாயிரு णिच्

**अवलम्बः** पु சார்ந்திருத்தல் अल ஆதாரம் अल. உதவி अल ஊன்றுகோல். தொங்கவிடும் வஸ்து. அனுபந்தம். லம்பரேகை. செங்குத்தான கோடு. -कः ஓர் சந்தஸ்

**अवलम्बनं** न பிடிப்பு. உதவி. ஆச்ரயம். அனுஸரணை. ஊன்றுகோல்

**अवलम्बित** वि சீக்கிரமான. இறங்குகிற. நம்பியிருக்கிற. ரக்ஷிக்கப்பட்ட तं புணர்ச்சி நிலை விசேஷம் बिन् वि

**अवलंबितव्य** वि பிடித்துக்கொள்ளத்தக்க. விரைவான
**अवलिप्त** वि கர்வமுள்ள, பூச, கொல்லப்பட்ட.
**अवलीन** वि (ली) ஒட்டிக் கொண்டிருக்கிற பற்றின
**अवलीढ** वि(लिह्)நக்கதொடப்பட்ட அலுபுசிக்க, பொசுக்கமெல் லருசிபார்க்க, விழுங்க,அழிக்கப்பட்ட दा அவமதிப்பு.
**अवलीला** स्त्री வேடிக்கை. விளையாட்டு. அவமதிப்பு
**अवलुंचनं** न (लुञ्च) கிழித்தல். பிளத்தல். வேரறுத்தல். கட் டாமை. தொங்கவிடல். வெளியெடுத்தல்
**अवलुंठनं** न சுருட்டுதல். தரையில் புரளல். கொள்ளையிடல்.
**अवलुप्** 6 उ மேலே வந்துபாய். தின். விழுங்கு அல அடக்கு. அமுக்கு.
**अवलेखः** पु உடைத்தல். கிறல். சுரண்டி எடுத்தல். எடுக்கப் பட்டது
**अवलेखा** स्त्री தேய்த்தல். அலங்கரித்தல்
**अवलेपः** पु கர்வம். மேலே விழல். பூசல். அலங்கரித்தல். சேரல்
**अवलेपनं** न ,, எண்ணெ. தைலம். சந்தன மரம். ,,
**अवलेहः** पु (लिह्) நக்கல். திராவகம். லேஹியம். பாகு = हिका
**अवलोक्** । आ 10 प பார். கவனி. கிரஹம் பார், வேலை செய். கண்டறி. ஆராய். किन् चि
**अवलोकः** पु தயவோடு) பார்த்தல். लोकक विपार्க்கவிரும்புகிற
**अवलोकनं** न கம்பீரமான) பார்வை. கண். கண்ணோட்டம்.
**अवलोकयितृ** वि ஆலோசிக்கிற. விசாரிக்கிற. தேடல்.
**अवलोकितः** पु ஓர் புத்தர் तं பார்வை -ईश्वरः ஓர் புத்ததேவதை
**अवलोपः** पु (लुप्) வெட்டல். அழித்தல். பல்லால் நக்கல், முத்தமிடல்
**अवलोभनं** न காம விகார இச்சை
**अवलोम** वि தகுந்த, அனுகூலமாயிருப்பவன்
**अवल्गुज** वि நற் பிறவி, குலமில்லாத. जः எருமையாட்டாங் கொடி
**अवल्गुली** स्त्री ஓர் விஷப் பூச்சி
**अववदः**, वदनं न பழி. அபவாதம்.

अववदितृ वि தீர்மானிப்பவன். விதி கர்த்தா.
अववाद: पु நிந்தை. நம்பிக்கை. அவமதிப்பு. ஆதாரம். அபவாதம். கட்டளை. சமாசாரம்
अववरक: पु தொளை. ஜன்னல்
अवविद्ध वि எறியப்பட்ட
अवव्रश्च 6 प சீவு. செதுக்கு व्रश्च: சிராய், செலும்பு.
अवश वि சுதந்திரமான. கீழ்ப்படியாத. ஆளுகைக்குட்படாத. தன்னதீனமின்றி இந்திரியங்களுக்குட்பட்ட. சுதந்திரமில்லாத. உதவி, சக்தியில்லாத. அவசியமான
अवशंगम: पु அன்னியனின் இஷ்டத்தை ஒப்பாத
अवशक्थिका = अवसक्थिका
अवशस् स्त्री பிசகான இச்சை. திட்டு. நிந்தை
अवशातनं न வெட்டித் தள்ளல். அழித்தல். வாடல். உலரல். [இளைத்தல்
अवशिरस् वि தொங்கவிட்ட முகமுடைய
अवशिष् மீற்றிவைக்கப்பட்டிரு. णिच् மீற்று. மிச்சம்வை.
अवशिष्ट वि அதிகப்படியாய்மிருந்தது, ष्टकं மீதி = शेष: शेषित वि
अवशीन: पु தேள். = अवश
अवशीभूत वि சுதந்திரமான. மந்திரத்தால் வசப்படாத शिका
अवशीर्ष(क वि தலைகுனிந்திருக்கிற र्ष: ஒருவிதக் கண்ணோய். உறங்கும் பொழுது பிசகாய்ப்படுக்கல்
अवश्य वि அவசியமான. தவிர்க்கக்கூடாத. அடங்காத श्यं अ அவசியம். எப்படியாவது. உண்மையில் -भाविन् கட்டாயம் நேரிடப்போகிற.
अवश्यक वि அவசியமான. தப்பாத -ता, त्वं அவசியம். உண்மை
अवश्या स्त्री உறைந்தபனி. பனிக்கட்டி. சுதந்திரமானவள்
अवश्याय: पु கர்வம். பனி,, ,,
अवश्रयणं न தீயினின்றும் ஒன்றை வெளியெடுத்தல்.
अवष्कयणी स्त्री நெடு நாள் விட்டுக் கன்று போடும் பசு

**अवष्टब्ध** वि தொங்கிக் கொண்டிருக்கிற. கட்ட, எதிர்க்க, வெல்லப்பட்ட.நியாயமான ध्य: இனுப்பை-क: பிரஸவ ஸமீபகாலம் ष्टम्भं

**अवष्टंभ** 5. 9. प சார்ந்திரு. தடு. சுற்றிக்கொள். உரையிடு. தாங்கு. அணை. நிறுத்து. அருகேயிரு. மதிமயங்கியிரு

**अवष्टंभः** पु ஆதாரம். டாம்பீககர்வம். தூண். பொன். ஆரம்பம். தங்கல். தைரியம். விடா முயற்சி. தடை. மேன்மை. குடம்.

**अवष्टु** वि பிரதிகூலமான. வலப்பக்கமான

**अवष्वन्** । प உதடடி. நாக்கடி. உண்ணும் பொழுது உறிஞ்

**अवष्वाणः** पु சப்திக்துண்ணல். உதடடிப்பு [சிப் சப்தி

**अवस्** न உதவி. கீர்த்தி. உணவு. பணம். இச்சை. இன்பம். போதல் अ கீழே. கீழ் நோக்கி. மிகத் தாழ்ந்த விடத்தில். இல்லாமல். வெளிப்பக்கத்தில் -द्‌त् वि மிக ஆசைப்படுகிற.

**अवसः** पु ராஜன். ஸூரியன். எருக்கு सं (பிரயாணத்திற்கு) உணவு. ரக்ஷித்தல்.

**अवसक्त** वि (संज्) வைக்க, தொங்கவிடப்பட்ட. தொடுகிற. பொறுப்பாக்கப்பட்ட. வேலையாயிருக்கிற क्त ஸ்பர்சம்

**अवसक्थिका** स्त्री கட்டில். கட்டு. முழங்கால் தொடைகளைக் கட்டல்.

**अवसंजनं, सजनं** न அணைதல். ஒட்டிக்கொண்டிருத்தல்

**अवसंडीनं** न பக்ஷிகள் கூட்டமாய்க் கீழ் நோக்கிப் பறத்தல்

**अवसथः** पु ஊர். மடம். பாடசாலை. வீடு = सथं,सथ्य:பாடசாலை

**अवसद्** । प தளர். வாடு. தவிர்க்கப்பட்டிரு. ஊக்கக் குறைவடை. நசி. முடிவடை. णिच्

**अवसन्न** वि பலவீனப் படுத்தப்பட்ட. துக்கிக்கிற. முடிக்கப்பட்ட. போய்விட்ட. தன் தொழிலைச் செய்ய முடி

यாத. இழந்த. இல்லாமற் பண்ணப்பட்ட. வாதி வழக்கைக் கைவிட்ட

**अवसभ** वि கோஷ்டியிலிருந்து நீக்கப்பட்ட

**अवसरः** पु (सृ) சரியான) சமயம். இடம். ஸந்தர்ப்பம். அவகாசம். அறிமுகம். வருஷம். மழை. இறங்கல். ரஹஸ்ய ஆலோசனை

**अवसर्गः** पु (सृज्) தன்னிஷ்டப்படி யிருக்கவிடல். சுதந்திரம்.

**अवसर्पः** पु சாரன். தூதன். सर्पण इறங்கல்

**अवसर्पिन्** वि இறங்குகிற. णी ஜைன்யரீதியில் கோடிக்கணக்கான வருஷ காலம்

**अवसव्य** वि இடதில்லாத

**अवसादः** पु (सद्) களைப்பு. கீழே உட்காரல்

**अवसादक** वि களைப்புண்டாக்குகிற மிச்சமின்றிச் செலவழிக்கிற

**अवसादनं** न புண்ணுக்கும் காரம். காரம் போட்டுப் புண்ணின் தோலையெடுத்தல் सादिन् वि சோர்வடைகிற

**अवसामं** न தீதான பாட்டு

**अवसारणं** न (सृ) ஒதுக்கல். அசையச் செய்தல்

**अवसा** स्त्री விடுதலை. -तृ पु விடுவிப்பவன்

**अवसानं** (सो) சாவு. எல்லை. நிறுத்தல். பத. காலமுடிவு. சுலோகம். அதன் முடிவு. குதிரைமேலிருந்து இழியுமிடம். தங்குமிடம். सानक वि முடிவடைகிற. சாகிற.

**अवसान्य** वि சுலோக முடிவைச் சேர்ந்த.

**अवसायः** पु (सो) முடிவு. அழிவு. பூர்த்தி. மீதி. தீர்மானம்.

**अवसायिन्** वि வஸிக்கிற. தங்குகிற.

**अवसिच्** 6 प தெளி. பனியால்நனை. அழுக்குப்படுத்து सिक्त वि

**अवसित** वि (सो) பரிபக்குவமான. நிற்கவேண்டிய விடத்தில் நிற்கிற. நிதானிக்கிற. சேகரித்த. குத்தப்பட்டகட்டப்பட்ட. சென்ற. தங்குகிற. तवीடு. குத்தப்பட்டதான்யம்

**अवसृज्** 6 प தளர்த்து விடுவி. கொடுத்துவிடு. எறி. தள்ளு. கொட்டு. உண்டுபண். மேலேவை. கைவிடு सर्जनं सृष्ट वि
**अवसेकः** पु (सिच्) ஒருவிதக் கண்ணோய்
**अवसेकिमः** पु வெண்ணை, எண்ணை பருப்பாலான வடை விசேஷம்
**अवसेचनं** न (सिच्) ரத்தக்கசிவு. தெளிக்க நீர். தெளித்தல்
**अवसेय** वि நசிக்கக்கூடிய. தீர்மானிக்க, முடிக்கவேண்டிய
**अवसो** 4 प. முடி. அழி. அறி. தீர்மானி. பிசகியிரு. தங்கு. தளர்த்து. விடுவி. நெருங்கு. வசி. நாட்டு. உறுதியாய் நில். பிடிவாதமாய்நில். அடை. எட்டு. णिच् [கொட்டு
**अवस्कंद्** 1 प மேல் விழு. மேற்கொள். கீழே குதி. வெளிக்
**अवस्कंदः, दनं** தகைத்தல். இறங்கல். ஸ்நானம். கூடாரம். முகாம்
**अवस्कंदित** वि கண்டிக்கப்பட்ட. ஸ்நானஞ்செய்த. नृचि முழுகிற
**अवस्करः** पु (स्कृ) மலம். மர்மஸ்தானங்கள் குப்பை. மலக்குவியல் -मंदिरं எப்பொழுதும் நீரோடிச் சுத்தமாயிருக்கும் கொல்லை, சௌசஸ்தலம். (கக்கூசு)
**अवस्करक** वि மலத்திலிருக்கிற कः புழு. துடைப்பம். பெருக்கு
**अवस्कव** वि ஹிம்ஸிக்கிற वः ஓர்ப்புழு [கிறவன். சக்கிலி.
**अवस्कृ** 6 उ முட்டு. இடி. பிராண்டு
**अवस्तात्** अ கடைசியான. கீழே கீழிருந்து. கீழ் நோக்கி
**अवस्तारः** पु (स्तृ) மத்து. பரப்பல். திரை பாய். மூடி. மறைவு. தட்டி स्तरणं
**अवस्तु** न பிரயோஜனமற்ற வஸ்து. வஸ்துவின் இல்லாமை.
**अवस्थः** पु ஆண் குறி. स्था நிலைமை. ஸந்தர்ப்பம். பால்யாதி பருவம். உருவம். அளவு. திட்டம். உறுதியான நிலை. நியாஸ்தலத்தில் தோன்றல். யோனி -अंतरं மாறுபாடான நிலை -चतुष्टयं பால்ய, யௌவன, கௌமார, வார்த்தகங்கள் -त्रयं ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி அவஸ்தைகள் -द्वयं ஸுக துக்க நிலைகள் -षट्कं உண்டாதல்,

இருத்தல், வளர்தல், பரிபக்குவமாதல், க்ஷயித்தல், நசித்தல்

**अवस्था** । आ தங்கு. வசி. ஒத்திரு. கீழ்ப்படி. பிழைத்திரு. சற்றுநில், தங்கு. இருக்க நேரிடு. லபி. நுழை. எட்டு. பிரிந்துநில். இறங்கு. வை णिच् நாட்டு. ஸ்தாபி. பிரி. பகு. தேற்று. திரட்டு. பொருத்து.

**अवस्थानं** न நிலை, பதம். இடம். வீடு. தங்குங்காலம்

**अवस्थापनं** न வீடு. நாட்டல். स्थायिन् वि தங்குகிற

**अवस्थित** वि கருத்தில் திருடமாயிருக்கிற. ஒன்றை ஆதாரமாகவுடைய. தீர்மானித்த. அறிய, தகையப்பட்ட

**अवस्थितिः** स्त्री வஸித்தல். அனுஷ்டித்தல். வீடு.

**अवस्पर्तृ** वि ரக்ஷகன்

**अवस्फूर्जितं** न இடி முழக்கம். கர்ஜனை.

**अवस्फोटः** पु தோற்றம்

**अवस्यति** ना प உதவியை நாடு स्यु वि ரக்ஷணத்தைக் கோறல்.

**अवस्रस्** वि விழும்போலிருக்கிற. பிளவு வெடிப்பு.

**अवस्वत्** वि ரக்ஷிக்கப்பட்ட.

**अवस्वन्** । प உதட்டி. சாப்பிடுவதில் உறிஞ்சிச்) சப்தி.

**अवस्वन्य** वि சப்தம் செய்கிற न्यः சிவன். மயில். ராக்ஷஸன். அமிர்தம்.

**अवहः** पु காற்று விசேஷம்

**अवहन्** 2 प அடி. கொல். ஒதுக்கு. தூற்று. புடை हत वि तिः

**अवहननं** அரிசியைப் புடைத்துச் சுத்தமாக்கல். சுவாசாசயம்

**अवहरणं** न (हृ) அபராதம் விதித்தல். கொஞ்ச கால யுத்த ஓய்வு. கொள்ளை. போர்க்களத்திலிருந்து கூடாரத்திற்குக் கொண்டு போதல். திருப்பிக்கொடுத்தல்.

**अवहस्तः** पु பின் கை

**अवहारः** पु (हृ) திருடன். நீர்யானை. அழைக்கப்பட்டப் பிராம்மணர்களின் சொத்தை அபகரித்தல். ஓய்வு. அழைத்

தல். அருகே கொண்டு வரத்தகுந்தது. தன் மதத்தைவிடல். பலம். சூதாட்டம். யுத்தம். சொல்லி அழைப்பிவித்த பொருள்.

**अवहारक वि** சண்டையினின்றும் ஒழிவடைகிறவன். தடுத்தல். நிறுத்தல் **कः** சுறுமீன்

**अवहार्य वि** தண்டிக்கத் தகுந்த. முடிக்க, திருப்பிக் கொடுத்தாக வேண்டிய. மீட்க வேண்டிய

**अवहालिका स्त्री** சுவர் [கத்தக்க

**अवहासः पु** ஒளி. புன் நகை. பரிஹாஸம் **हास्य वि** பரிஹஸிக்

**अवहित त्रि (धा)** அறியப்பட்டிருக்கிற. **ता** கவனம். **-अंजलि** சேர்க்கப்பட்ட கைகளோடு

**अवहित्था, त्थं न** கபடம். நிஜமான எண்ணத்தை மறைத்தல்

**अवहृ । प** அப்புறப்படுத்து. அடங்கப்பெற்றிரு. கீழே கொ

**अवहेतुः पु** தானி மரம். [ட்டு **त वि**

**अवहेलः, ला, लनं, लना, लितं न** அவமதிப்பு **लित वि**

**अवह्वर वि** கோணலான **रः** கோணவழி. **अल** மோசம்.

**अवाक् अ** கீழ்நோக்கி. தெற்கத்திய. தென்பக்கமாய் **-ज्ञानं** அவமரியாதை **-पुष्पी** பிரம்மதண்டுப்பூண்டு **-भागः** கீழ்ப்பாகம் **-भव** தெற்கத்திய **-मुख (खी स्त्री)** கீழ்நோக்கிப் பார்க்கிற. தலை கீழான **खः** ஓர் பாணம் **-शाखः** அரசு

**अवाकरः पु** தங்கசாலை. நாணயங்கள் செய்யுமிடம்.

**अवाकिन्न** பேசாத **वाक्क** பேசசில்லாத

**अवाक्ष वि** காவற்காரன். ரக்ஷணம்.

**अवाग्र वि** வணங்கின. தலை குனிந்த.

**अवाच् वि** பேசாத. ஊமையான. **न** பிரம்மம் **-मनसगोचर** புத்திக்கும் பேச்சிற்கும் எட்டாத. வர்ணிக்க, நினைக்க முடியாத **-श्रुति** செவிடும் ஊமையுமான

**अवाच्य** वि ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்படாத. பதங்களால் சொல்லமுடியாத. தெற்கத்திய. ता, च्यं பழி. நிந்தை -देश: யோனி

**अवाच्** वि கீழ் நோக்கித் திரும்பின. வளைந்த. குனிந்த. கீழே யிருக்கிற. தலை கீழான. தெற்கான पु न பிரம்மம் -ची தெற்கு. கீழ்ப் பிரதேசம்.

**अवाचीन** वि கீழ் நோக்கின. தலை கீழான. தெற்கத்திய. இறங்கின. **वांचित** வளைந்த. தாழ்ந்த.

**अवात** वि காற்றால் அசைக்கப்படாத. காற்றால் மூச்சு விடாத. காற்றிலிராத. உலர்ந்த, ஜயிக்கப் படாத

**अवादिन्** वि நடவடிக்கை நடத்தாதவன். சமானமாய்ப் போகிறவன்.

**अवान** वि உலர்ந்த. न: (अवान्) மூச்சிழுத்தல், வாங்கல்.

**अवांतर** वि இடையில் நிற்கிற. உள்ளடக்கமான. கௌணமான. நெருங்கிய ஸம்பந்தமில்லாத. வேறான. அதிகப்படியான -दिश्, शा மூலை திக்கு -देश: நடுவிடம்.

**अवांतराम्** अ இடையில்.

**अवाप्** 5 उ அடை. எட்டு. சுக, துக்கத்திற்காளாகு स वि

**अवाप्तव्य, अवाप्य** वि அடையத் தகுந்த प्ति: பெறல். [கூடாத

**अवाप्य** वि வெட்டப்படாத. (மயிரைப்போல்) அறுக்கக்

**अवापित** वि விதைக்கப்படாமல் நடப்பட்ட. „ „

**अवाय:** पु அவயவம். இடங்கொடல், ஸரியென்று ஒத்துக் கொள்ளல்.

**अवारं, र:** पु இக்கரை. இப்பக்கம். -तस् अ இப்பக்கமாய் -पार: கடல் -पारीण கடலைச்சேர்ந்த. நதியைக்கடக்கிற

**अवार्य** वि இப்பக்கத்திலிருக்கிற = रीण: वि தடுத்துக்கொள்ள, பரிகரிக்க முடியாத = **अवारण, अवारयितव्य** वि

**अवारणीय** वि தடுத்துக்கொள்ள முடியாத. குணப்படுத்த

முடியாததைக் கவனிக்கிற

**अवारिका** स्त्री கொத்தமல்லிவிரை

**अवावट:** पु ஒருத்தியின் தன் இன இதரபுருஷனுக்குப்பிறந்த [பிள்ளை.

**अवावन्** पु திருடன்

**अवासस्** वि ஆடையில்லாத पु புத்தர்

**अवाहन** वि வண்டியிற்செல்லாத

**अवि** वि அனுகூலமான वि: पु செம்மறி ஆடு =(स्त्री). ஸூரியன். எருக்கு. வெள்ளாடு. மலை. காற்று. கம்பளம். சால்வை. ஸோமரஸம் வடிகட்ட ரோமத்தாலான ஸாதனம். பிரபு. சுவர். வேலி. எலி ஆகாசம். -स्त्री தூரஸ்திரீ. பூமி. அவமானம். புருவப் பெண்ணாடு. -कट: செம்மறி ஆட்டு மந்தை -कटोरण: (செம்மறி ஆடுகளாலான) கட்டணம், காணிக்கை விசேஷம் -गंधा, गंधिका நாய்வேளைச் செடி -दूसं, मरीसं, सोढं ஆட்டுப்பால் -पट: கம்பளி -प्रिय: திருண விசேஷம் -प्रिया ஓர்ச் செடி -स्थलं ஓர் நகர்

**अविक:** पु செம்மறி ஆடு कं வைரம் का பெண்ணாடு =ता

**अविकल** वि ஒழுங்கான. பொருத்தமான நிறைந்த. குறைவற்ற

**अविकल्प** वि மாறாத. ल्प: வாஸ்தவமான விதி ल्प: अ சந்தேகமின்றி

**अविकृति:** स्त्री ஜகத்காரணப்ரகிருதி (ஸாங்கியத்தில்)

**अविघ्न:** पु பெருங்களாச்செடி

**अविग्रह** वि அசரீரியான. அறியப்படாத. ह: நித்தியஸமாஸம்

**अविचाचल** वि தளும்பாத. தள்ளாடாத. உறுதியாய் நிற்கிற

**अविचार** वि சாரர்களையுடைய र: ஆடுமேயத் தகுந்த விடம்

**अविचारित** वि நன்கு ஆலோசிக்கப்படாத. தீர்மானிக்கப்பட்ட. நிச்சயமான -निर्णय: தூரபிமானம். பக்ஷபாதம்

**अविचालित** वि அசைக்கப்படாத. ஜயமுள்ள

**अविचृत्य** वि களர்த்தப்படாத.

अविच्युत वि அசித்தியமான
अविज्ञातगद वि சாதுர்யமின்றித் தாறுமாறாய்ப் பேசுகிற
अविज्ञातृ वि அறியாத पु பிரம்மம். விஷ்ணு
अविज्ञेय वि பகுத்தறிபமுடியாத यः பிரம்மம் ஓர் சங்கீததாளம்
अविडीनं न பக்ஷிகளின் நேராய்ப் பறத்தல்
अवितथं अ உண்மையாகவே था விருத்த விசேஷம்
अवितारिन् वि உபத்திரவிக்காத. பிரிந்து போகாத. தங்குகிற.
अवित्यजः, जं न பாதரஸம்
अविथुर वि பிரிக்கப்படாத. இணைக்கப்பட்ட
अविथ्य स्त्री ஆட்டிற்குத் தகுந்த थ्या செடி விசேஷம்
अविदाहिन् वि நன்கு ஜீர்ணமடையாத. வயிற்றில் எரிச்சலுண்டாக்குகிற. எரியாத. துன்பப்படுத்தாத
अविदस्य वि ஓயாத. நிலையான =दासिन् वि
अविदीध्यु वि தாமதிக்காத. பிரகாசிக்கிற.
अविद्ध-कर्णा, कर्णी பங்கப்பாளை -दृश् ஸர்வத்தையும் பார்க்கிற -वर्चस् மிக மகிமை வாய்ந்த
अविद्य वि படிப்பில்லாத द्या அறியாமை. மூடத்தனம். பாரமாத்மிகக்ஞான சூன்யம். மாயை -मय அக்ஞானத்தாலுண்டான
अविद्रिय वि சந்தில்லாத. துளைக்கமுடியாத. கெட்டியான
अविधा अ ஆபத்தில் 'காப்பாற்று காப்பாற்று' என்பது
अविनः पु யஜமானன். ரித்விக்
अविनयः पु குற்றம். தோஷம். கர்வம். नीता வியபிசாரி
अविनश्वर वि கெட, அழிய, நாசமாகத்தக்க रः பிரம்மம்.
अविनाभाव. पु பிரியாமை. பிரிக்கமுடியாத) ஸம்பந்தம்
अविनिगमः पु நியாய லக்ஷண விரோதமான முடிவு.
अविन्दा स्त्री இறந்த குழந்தை பெற்றவள்
अविंध्यः पु ராவணனின் ஓர் மந்திரி ध्या ஓர் நதி

अविपाकः पु அஜீர்ணம். அதால் வரும் நோய். பழுக்காநிலை
अविपन्न वि ஹிம்ஸிக்க, கொடுக்க, தீட்டாக்கப்படாத. சுத்த
अविभक्त वि எங்கு மிருக்கிற [மான
अविभावनीय वि அறிய, பகுத்தறிய முடியாத
अविमुक्त न காசி. அதனருகே ஓர் தீர்த்தம். மோவாய்க்கும்
தலைக்குமுள்ள நடுவிடம் -ईश्वरः காசியில் ஓர் லிங்கம்
अविमृष्य वि சந்தேகிக்கக்கூடாத, இடமில்லாத
अविमोक्य वि தளர்த்தப்படாத, கூடாத
अवियोग-तृतीया ஓர் பண்டிகை -व्रतं மார்கழி முதல் திரிதிகை
யில் ஸ்திரீகள் அனுஷ்டிக்கும் ஓர் நோன்பு
अविरत वि விட்டு விடப்பட்ட. ஓயாத तं अ எப்பொழுதும்
अविरलितकपोलं நெற்றியோடு நெற்றி
अविराधयत वि பின்வாங்காத
अविलक्ष्य वि நோக்கம், குறி, கபடமில்லாத. தீராத.
अविलंघनीय वि விதிக்கப்பட்டிருக்கிற. தீர்மானமான.
अविलंब, लंबेन अ தாமதமின்றி. விரைவில் = लंबितं अ
अविला स्त्री பெண்ணாடு
अविवाहिन् वि கலியாண ஸம்பந்தமில்லாத, தடுக்கப்பட்ட
अविविक्तदृश् ஸர்வத்தையும் பிரம்மமாய்ப் பார்த்தல்
अविवेकः पु (विविच्) ஆத்திரம். ஆலோசியாமை. துடுக்கு
अविघ्नेन वि பிரியம் கெடாத नं अ அனுகூலமாக [பிராமல்
अविशंक, केन अ சந்தேகம் (யோசித்துக்கொண்டு) நிதானமா
अविशस्तृ पु (யாகத்தில்) மிருக வதத்தில் திறமையற்றவன்.
अविशेषज्ञ वि (வஸ்துக்களில்) பேதமுணராத. பகுத்தறிவற்ற
अविश्रांत वि தீங்கடையாத तं अ ஓய்வின்றி. தொடர்ச்சியாய்
अविश्वासा स्त्री வெகுகாலங்கழித்துக்கழித்துகன்றுபோடும்பசு
अविष वि விஷமுறிப்பான. ரக்ஷிக்கிற षः கடல். ராஜன்.
ஆகாசம் षी நதி. பூமி. ஸ்வர்க்கம் षा ஓர் மூலிகை

अविषय वि புக்கி; இந்திரியங்களுக்கெட்டாத. விஷயப்பற்றற்ற यः இல்லாமை. மறைதல். यीकरणं ஒன்றை ஒரு பொருளாய்ச் செய்யாமை
अविष्ट वि பிரியமாய் அங்கீகரிக்கிற. ஜாக்கிரதையாய்ப் பாது [காக்கிற.
अविष्या स्त्री இச்சை. போவதற்கு இச்சை
अविष्यु वि தகைக்கிற. ரக்ஷிக்க) இச்சிக்கிற. உக்கிரமான. வேகமான. [பவன்
अविस् न ரக்ஷணம். போதல் पु பெரிதாக்குபவன். விஸ்தரிப்
अविसर्गिन् वि நீங்காத. பற்றியிருக்கிற पु (र्गी) தொடர்ச்சி [யான ஜுரம்.
अविस्पष्ट न தெளிவில்லாப் பேச்சு
अविहर्यत वि இச்சிக்கப்படாத. [உடைக்கப்படாத
अविहृत वि கொல்ல, தாக்கப்படாத. வளைவில்லாத. வளைக்க,
अविह्वृत वि நழுகாத. விழாத. வழி தப்பிப் போகாத
अवी स्त्री தூரஸ்திரீ
अवीचिः पु ஓர் நரகம். मयः பொய்யர்கள் தண்டிக்கப்படுமிடம்
अवी(बी)ज(क वि விரையில்லாத அலியான. முக்கியகாரணமில்லாத जः மனோ நிக்கிரஹம் जा திராக்ஷை -हन् वि மனிதர்களுக்குக் கெடுதி, நாசமில்லாத
अवीत न அநுமான விசேஷம்
अवीर वि தைரியம், பிள்ளை, துணை, மனிதர்களில்லாத रा கணவனும் பிள்ளைகளுமில்லாதவள் [சாந்தி
अवृक वि துன்பப்படுத்தாத. ஒளிகிறவனில்லாத कं பத்திரம்.
अवृजिन உண்மையான. (நண்பர்களைக்) கைவிடாத (ஆதித்தி
अवृथार्थ वि கோரினதை அடைகிற [யர்கள்)
अवृद्धिक वि வட்டியடையாத. விருத்தியடையாத कं மூலதனம்
अवृत्र वि மேன்மைப் படுத்தாத. விருத்தியடையாத
अवृष्यफलभोजन वि அல்பமான பழத்தையே புசித்து ஜீவிக்கின்ற
अवे 2 प அறி. தெரிந்துகொள். ஆலோசி. ஒதுங்கு. நெருங்கு.

மேலே விழு. க மன்னிப்பு கேள். சமாதானப்படுத்து
**अवेत** वि கழிந்து, கடந்துபோன. அடைய, சேர்க்கப்பட்ட
**अवेक्ष** | आ பார். கவனி. கருது. வேலையைப் பார். பாதுகா.
யோசி. ஆலோசி. பரீக்ஷி. பார்வையிடு. எதிர்பார். மதி
**अवेक्षक** वि சுற்றிக்) காட்டுகிற. மேற் பார்வையிடுபவன்
**अवेक्षा** स्त्री எச்சரித்தல். ஒப்பந்தம். இச்சை. தொழில்
**अवेदयान** वि அறியாத. நிச்சயிக்காத.
**अवेदिः** स्त्री அறிவின்மை.
**अवेद्यः** पु கன்று या கலியாணம் செய்துக்கொள்ளத்தகாத
**अवेनत्** वि பிரக்ஞைதவறின [(ஸ்திரீ)
**अवेला** स्त्री மென்ற வெற்றிலை ल: வித்தையை ரக்ஷித்தல்
**अवेष्टिः** पु யக்யங்களால் பாவங்களுக்குப் பிராயச்சித்தம்
செய்து கொள்ளல்
**अवैरहत्यं** न கொலையினின்றும் ரக்ஷித்தல்
**अवोक्षणं** न கையைச் சற்று மடக்கிக்கொண்டு தெளித்தல்
**अवोद** वि நனைந்த द: தெளித்தல். நனைத்தல். நனைந்தநிலம்.
**अवोदेव** वि தேவதைகளைக் கீழே கொண்டுவருகிற. தைவ
**अवोषः** पु உஷ்ணமான உணவு [(ப்ரதேச)த்தின் கீழே.
**अव्य** वि செம்மறி ஆட்டின் ஸம்பந்தமான
**अव्यक्तः** पु பிரம்மா. விஷ்ணு. சிவன். மன்மதன். விரோதி.
மூடன். ஜகத்காரணமான மூலப்பிரகிருதி = ஈபிரம்மம்
பாராமாத்தமிக அக்ஞானம். ஸூக்ஷ்ம சரீரம். ஸூக்ஷ்ம
ப்தி யவஸ்தை. ஜீவன். ஸ்வபாவம். अ தெளிவின்றி
-**अनुकरणं** தெளிவில்லாச் சப்தங்களை அனுகரித்தல்
-**आदि** वि யாருடைய ஆரம்பம் அறிவிற் கெட்டாதோ
-**क्रिया** ஓர் பீஜகணிதக் கணக்கு -**मूलप्रभवः** ஸம்ஸார
விருக்ஷம் -**रागः** அருணோதய செந்நிறம் -**राशिः** (பீஜ
கணிதத்தில்) தெரியாத் தொகை, அளவு-**लक्षणः**, **व्यक्तः**

சிவன் -लिंग: சன்னியாசி -लिंगं மூலப்பிரகிருதி(மஹத்)
-साम्यं தெரியாத் தொகைகளின் ஸமீகரணம்

अव्यग्र वि ஜாக்கிரதையான. கவனமுள்ள ग्रं अ சாந்தமாய்

अव्यंगा, व्यंडा स्त्री யவையின் முள்,கோது,மேல்தோல். பூனைக் காஞ்சேரி

अव्यंजनः पु (व्यंज्) வயதுவந்தும்கொம்பு முளையாதமிருகம்ना,,

अव्यतिः स्त्री இச்சை. திருப்தி. திருப்தி செய்வித்தல்

अव्यथः पु பாம்பு था உறுதி. அசையாமை.இஞ்ஜி. கடுக்காய்.

अव्यथयः पु குதிரை [நில, ஓரிதழ்த்தாமரை

अव्यथि वि அடிவைப்பதில் உறுதியான. தள்ளாடாத(அச்வினீதேவர்களின் குதிரைகள்) थिः பயப்படாமை. உறுதியான அடிவைப்பு

अव्यथिन् वि துயரம்,பயமில்லாத. துன்பப்படுத்தாத=थ्य वि

अव्यथिषः पु ஸூரியன். கடல். षी பூமி. நடு) ராத்திரி

अव्यनत् वि மூச்சுவிடாத. பிராணன் போன

अव्यय वि நசியாப்பயனை யளிக்கிற यः விஷ்ணு. சிவன் यं பிரம்மம்.அங்கம்.அம்சம்.பகாப்பதம். இடைச்சொல். உறுபேறகாதது. ஸர்வலிங்கவசனங்களிலும் ஒரே ரூபமாயிருப்பது-आत्मन्நசியாத்தன்மையுள்ள.ஆத்மா

अव्ययीभावः पु அவ்யயஸம்பந்தமான ஓர் ஸமாஸம் ,(உபஸர்க்மாவது,அவ்யயமாவது பெயர்ச்சொல்லோடுவருவது). செலவின்மை. நசியாத்தன்மை.

अव्यवहार्य वि ஜாதிப்பிரஷ்டத்துவத்தினுல் பங்திக்கனர்ஹமான. [ப்ரகிருதி.

अव्याकृतं न ஆதிபூதம். மூலாதார வஸ்து. பிரதானம். மூல

अव्याख्या(नं न தெளிவின்மை. விவரணம் வேண்டியிருத்தல்

अव्याख्येय वि அர்த்தமாகாத. விவரம் வேண்டியிராத சுலப

अव्यापत्रिका स्त्री கருங் கச்சோலச் செடி [மான

अव्यापिन्, इ वि விசேஷ குணமான. வரையறுக்கப்பட்ட.
அம்சமான [தொழில்
अव्यापारः செய்ய அறியப்படாத. தனக்கு ஸம்பந்தமில்லாத
अव्याहत वि உடைக்க, குறிக்கிட, தடுக்கப்படாத. கீழ்ப்படியப்
பட்ட तं ஆக்ஷேபிக்கப்படாத, நிஜமான ஸித்தாந்தம்.
अव्युत्पन्नः பூர்ப் பாஷையின் வியாகரணக்ஞான மில்லாதவன்
अव्रणं न கண்ணின் நான்கு வித நோய்களிலொன்று.
अव्रत्यं न ஸ்வதர்மானுஷ்டான மின்மை. யதிதர்மத்தின்
விரோதமான தோஷம்
अश् 5. आ முழுதும் பரவு. நிரப்பு. ஊடுருவு. எட்டு. அடை.
அனுபவி. ஒன்றில் சேர்ச்சிபெறு, வசிகரி. திரட்டு
अनु + எட்டு, சமானமாகு. आ + எட்டு. பெறு. வழக்
கப்படுத்து. उद् + நுனியை எட்டு. அடை. பெறு. வசி
கரி. उप + அடை. அனுபவி. परि + அடை எட்டு. நிரப்பு.
பரவு. प्र + முழுதும் நிரப்பு. எட்டு. விதிவசயாய்நேரிடு
9 प புசி. போசுக்கு. ருசிபார். அனுபவி. णिच् உணவளி.
ஊட்டு अति + உண்பதில் முந்திக்கொள். उप + உண்.
ருசிபார். அனுபவி,
अशक्तिः स्त्री அறிவையுண்டாக்கபுத்திக்குள்ள திறமைக்குறைவு
अशत्रु वि விரோதி யல்லாத. ஒருவனை ஒரு விரோதியும்
போருக்கழைக்காமை. விரோதிகளிடமிருந்து எதிர்த்
தலில்லாத न விரோதிகளில்லா நிலை त्रुः சந்திரன்
अशन् पु கவண் எறியக்) கல். மேகம்.
अशन वि குறுக்காய் எட்டுகிற नः வேங்கை மரம் नं உணவு.
-कृत् वि உணவைத் தயாரிக்கிற -पतिः உண்டிக்கிசன்
-पर्णि ஓர்மரம் ना உண்ண விருப்பம். பசி = नाया
अशनायति ना- प உணவை யிச்சி. பசியோடிரு
अशनायित, युक वि பசியுள்ள. உண்ண விருப்பமுள்ள

अशनिः स्त्री पु இந்திரனின் வஜ்ராயுதம். இடி. மின்னல். வீசி யெறியத்தக்க ஆயுதம். பாணம். அதன் நுனி. சத்துருவைக் கொல்ல ஓர் (அனு) யாகம். பிரபு. पु இந்திரன் மின்னலிலுண்டான அக்கினி.

अशब्द वि சொற்களால் சொல்லப்படாத. न्दं சொல்லமுடியாதது. பிரம்மம். பிரதானம். மூலப்பிரகிருதி.

अशरीरः, रिन् पु தேவதை. பிரம்மம். மன்மதன். வைராகி -त्वं ता. முக்தி

अशस् वि ஆசீர்வதியாமை. துதியாமை. சபித்தல். வெறுத்தல்

अशस्त वि சொல்லமுடியாத, படாத -वार वि பொருள் கேழ்க்கப்படாத. தானே சொரிகிற. வர்ணிக்க முடியாத நிதிகளையுடைய

अशस्तिः स्त्री சாபம். சபிப்பவன். வெறுப்பவன்.

अशांत वि பரிசுத்தமில்லாத. துராசாரமான. கவலைப்படுகிற.

अशाम्य वि சாந்தி, ஸமாதானப் படுத்த முடியாத. [மாறு.

अशासनं न ஆளுகை வேண்டியிருத்தல். அரசின்மை. தாறு

अशास्त्र वि சாஸ்திரவிதியை அனுசரித்திராத சமயபேதமான

अशितंगवीन वि முன்பு பசுமாடுகளால் மேயப்பட்டிருக்கிற

अशितृ वि உண்கிற. உண்பவன்

अशित्रः पु திருடன். அரிசியால் ஹோமம். தண்டுலாஹுதி.

अशिन् वि வெகு தூரம் எட்டுகிற. பொறுக்கிற. தாளுகிற.

अशिरः, रस् पु அக்கினி. ஸூர்யன். வாயு. அஸுரன். रा ஓர் ராக்ஷஸீ र वைரம்

अशिरस् -कः ராகு -स्नानं தலை நீங்கலாக ஸ்நானம்

अशिवः पु ஓர் தேவதை वा ஓர் ராக்ஷஸி, பேய்

अशिश्विका, श्वी स्त्री குழந்தையில்லாதவள். குட்டியற்றது.

अशिष्ट वि நாஸ்திகமான. சாஸ்திரப் பிரமாணமில்லாத. ता, त्वं முரட்டுத்தனம்

अशिष्य वि போதிக்க, அறிவிக்கக் கூடாத
अशिष्ट वि மிகவும் உண்கிற, எட்டுகிற पुः அக்கினி
अशीतिः स्त्री 80 -भागः 80ல் 1 பங்கு-तम எண்பதாவதான
अशीतिक वि 80 வயதானவன், அளவுள்ள [முகம்
अशुचिः पु கறுமை. स्त्री அசுத்தம். பதவியிலிருந்து இறங்கு
अशुद्ध वि அறிய, நிச்சயிக்கப்படாத. - वासकः நாடோடி. சந்தேகப் படுகிறவன்
अशुनिः पु வஜ்ராயுதம்.
अशुभं न பாவம். வெட்கமுண்டாக்கும்வேலை उदयः அபசகுனம்
अशुष वि பெருந்தீனி) தின்கிற. அணைக்கப்படாத. உலர்த்தச் செய்யாத.
अशून्य वि செய்ய, நிறைவேற்றப்பட்ட ःयं இன்னொன்றைத் தொடர, கூட அனுப்பப்பட்டிருப்பது (கடிதத்தோடு சீர் வருவது போல்) -शयनं, शयनद्वितीया, शयनव्रतं விருத
अशूला स्त्री விருக்ஷ விசேஷம் [விசேஷம்.
अशृथित वि அவிழ்த்துவிடப்படாத
अशेषं, शेषेण, शेषतः अ முழுதும் -साम्राज्यः சிவன் षता முழுமை
अशेषयति ना. प பூர்த்தியாய் முடி
अशेषम् वि சிசுக்கள், ஸந்ததியில்லாத
अशोकः पु அசோக, மொகிழ மரம். விஷ்ணு. தசரதனின் ஓர் மந்திரி कं கடுகுரோகிணீ சித்திரை 6 ம் நாள். ஓர் ஜைனஸ்திரீ கிருஹ தேவதை. का பாதரஸம். ஓர் மன்மத பாணம் -अरिः கடப்ப மரம் -अष्टमी சித்திரை 8 ம் நாள் -तीर्थं காசியில் ஓர் தீர்த்தம் -त्रिरात्रं, त्रः 3 இரவுகளாகும் ஓர் விருதம், உத்ஸவம் -पूर्णिमा பங்குனி 15ம் நாள் செய்யப்படும் ஓர் சடங்கு -मंजरी விருத்த விசேஷம் -रोहिणी கடுகுரோஹிணி
अशोचः पु கவலையின்மை. சாந்தி, வணக்கம் [திட்டு

अचौचं न ஜனன, மரணகால 10 நாள் தீட்டு ·संकरः தீட்டில்
अक्ष वि பரவுகிற. உண்கிற. நிறைந்த क्षः ஓர் அஸுரன்.
மேகம். ஸோம மரைக்க அம்மி
अक्षया स्त्री பசி
अक्षीतपिबता स्त्री விருந்திற்கு அழைக்கப்படல் पिबतीयत् वि உ
अश्नुवान वि பரவுகின்ற. [ண்பதிலேயே கருத்துள்ள
अश्मः पु பலே (स -अ தில்) பாறை. மேகம
अश्मकः पु ஓர் ரிஷி. தென்தேசம்சால்வதேசத்தைச்சேர்ந்தது.
अश्मन् वि புசிக்கிற. பரவுகிற. पु கல். பாறை. சக்கிமுக்கிக்
கல. மேகம். இடி. பலே -आस्य கல் வாயையுடைய.
அதாவது பாறையிலுண்டாகிப் பெருகுகிற -उत्थ சிலா
ஜது. மண்ணெண்ணெய் -कदली ஒருவித வாழை-कुट्टक கல்
களில் உடைக்கிற. கல்லால் உடைக்கப்பட்ட ट (क):
வானப்பிரஸ்தர். கல்தச்சன். கல்லுளி - केतु. ஓர்
செடி =-गंध्या-गंध(क): கந்தகம் -गर्भ,र्भः,गर्भजः, जं, மரகதம்
பச்சைக்கல் -गर्भजः சக்கிமுக்கிக்கல்லிலிருந்துண்டான
தீ -गुडः, डा ஓர் ஆயுதம் -घ्नः பாஷாண பேதினிச்செடி
-जं, जः காவிக்கல். இரும்பு -जतु(कं மண்ணெண்ணெய், சிலா
ஜது. நீலக்கல் - जाता ஒரு செடி -जातिः பான்ற என்
கிற மரகதம் -दारणः கல்லுளி -दिद्यु वि கல்லாயுதத்தை
யுடையவன். வைரம் போன்ற கெட்டியான ஆயுதத்
தை யடைந்தவன் -नः அருணன் -नगरं பலிச் சக்கிர
வர்த்தியின் பட்டணம் -पुष्पं சிலாஜத்து. சாம்பிராணி
-भालं இரும்பு, கல்லுரல் -भिद्, भेद(क): குடலிலிருக்கும்
கல்லைக் கரைக்கும் ஓர் செடி -मयः ஓர் தாது-योनिः ஒரு
செடி. நீலக்கல் -रथः ஓர் ரிஷி -व्रज பாறைகளில் சேர்க்
கப்பட்டிருக்கிற -सार கல், இரும்பைப்போல் सारः, रं
இரும்பு. நீலமணி. இந்திரநீலம் -हन्मन् இரும்பாயுதம்.

இடிவிழல்

**अश्ममय, वत्, श्मर** वि கல்ஸம்பந்தமான. கல்லாலான

**अश्मरी** स्त्री நீரடைப்பு வியாதி. நீர்க்கட்டு. **घ्न**: மாவிலிங்கமரம் (இதைத்தலைப்பது) =-**हर**: விருக்ஷ விசேஷம்

**अश्मीर, र**: पु கூழாங்கல். பருக்கைக்கல். கல். பாறை

**अश्मन्त** वि அசுபமான. எல்லையில்லாத **त**: ஓர் மருக் **त**: அடுப்பு. சாவு. கழனி வெளி. மைதானம்

**अश्मंतक, क**: पु அடுப்பு. விளக்குநிழல். முஞ்சப்புல் **क**: செம்பைச் செடி. மலையகத்தி.

**अश्र**: पु மூலை. ஆயுதத்தின் கூரு **श्रं** கண்ணீர். ரத்தம். **प**: நர [மாம்ஸபக்ஷணி

**अश्रिन्** वि கண்ணீருடைய

**अश्रद्धान** वि சிரத்தை, நம்பிக்கையில்லாத

**अश्रद्धेय** वि நம்பத்தகாத

**अश्रवण** वि காதுகளில்லாத. செவிடான் **ण**: பாம்பு

**अश्रातसु** अ சளைக்காமல். பச்சையாய் [யாய்

**अश्रांतं** न अ இளைப்பாறுதலின்மை. **अ** ஓயாமல் தொடர்ச்சி

**अश्राद्ध** वि சிராத்தம் செய்யாத, செய்யத்தகாத. அதுஸம்பந்தமான -**भोजिन्** वि சிராத்த காலத்தில் உண்ணுவிரதங் கொண்டவன்

**अश्रिः, श्री** स्त्री (வீட்டு) மூலை. கோணம். ஆயுத)கூர்மையான [துனிபாகம்

**अश्रित** वि அணுக முடியாத

**अ**ॢ**ीक** वि காந்தியில்லாத. மங்கலான. துருதிருஷ்டமான. பாக்கியமற்ற

**अश्रीर** वि கோரமான. மங்கலான. **अश्रील** = **अश्रीक**

**अश्रु** न கண்ணீர் -**उपहत** वि கண்ணீரால் பாதிக்கப்படுகிற. கண்ணீர் ததும்புகிற -**कला** கண்ணீர்த்துளி -**नाली** கண்ணீருண்டாக்கும் நாடிபேதம். இசைக்குழல் -**परिप्लुत** கண்ணீரில் முழுகின, நிறைந்த -**पात**: கண்ணீர்விடல்

-मुख கண்ணீர் நிறைந்த, திடீரென்று சொரிகிற

अश्रुत वि கேழ்க்கப்படாத. செவிக்கெட்டும்படி சொல்லப் படாத. வேத விருத்தமான. சாஸ்திரபரிசயமில்லாத படிக்காத. மூடனை

अश्रुतिः स्त्री கேளாமை.மறதி-धरकாதில்படாதவேதமோதாத

उश्लीक वि துரதிருஷ்டமான. பிரியம், அனுகூலமற்ற.

अश्लील न நாகரீகமில்லாத,நாட்டுப் புறத்தான் பேச்சு [சாந்தி

अश्लेषा स्त्री ஆயில்யம் -भव: கேது -शांति: இதில் பிறந்ததற்கு

अश्वः पु குதிரை. எண் 7. மனிதரின் ஓட்டம். श्वौ द्वि ஆண் பெண்குதிரைகள் -अक्षः ஓர்மரம் -अजनी ஜாட்டி -अविक குதிரைப் பட்டாளம் பெருத்த -अध्यक्षः குதிரைப்பட் டாளத் தலைவன் -अनीकं குதிரைப் பட்டாளம் -अरिः எருமைக்கிடா -अव,आरोहकः, कंदा, कंदिका அமுக்கிருன் செடி-आशः கட்லை-आयुर्वेदः மிருக வைத்திய சாஸ்திரம் -आरोहः குதிரைக்காரன். சவாரி. சவாரி செய்பவன். சண்டை செய்பவன் -उरस குதிரை போல் அகன்ற மார்புள்ள सं முக்கிய குதிரை --कर्ण (क): ஸால விருக்ஷம். குதிரையின் காது. எலும்பு முறிந்திருத்தல். ஓர் மலை -कुटी குதிரைலாயம் -कुशल, कोविद குதிரைகளை அடக்குவதில் திறமைவாய்ந்த -क्रंदः ஓர்பக்ஷி.தேவதை களின் ஸேனாதிபதி -खरजः கோவேறு கழுதை ஸங் கர ஜாதி ஜந்து -खुरः ஓர் வாஸனை रा செம்பை. விஷ் ணுக்கிராந்தம். மந்தாரை -गतिः பாதத்திற்கு 16எழுத் துக்களுள்ள விருத்த விசேஷம். -गंधा அமுக்கிருன் செடி- गंधातैलं ஒருவிதத் தைலம். -गोयुगः,गं ஜதைக் குதிரைகள் -गोष्ठ குதிரைலாயம் -ग्रीवः விஷ்ணுவின் ஓர் அவதாரம்.ஹயக்ரீவன் என்னும் விஷ்ணுவால்கொல்லப் பட்ட ஓர் அஸுரன் -घ्नः அவிரி -चक्रं குதிரைகளின்சேக

ரம். ஒருவிதச் சக்கிரம் -चेष्टितं குதிரைகளின் அசைவு. சகுனம் -जवन: குதிரைபோன்றகீழ் அவயவங்களுடைய மிருகம் -जित् ஜயத்தில் குதிரைகளை அடைதல் -तिक्त: நேபாள வேம்பு --तीर्थं கங்கைக் கரையில் கான்யகுப்ஜாவினருகே ஓர் தீர்த்தம் -दंष्ट्रा நெரிஞ்சல் -द:, दा:, दावन् पु குதிரைகளைக் கொடுத்தல் -दूत: சவாரி செய்யும் தூதன் -द्रु: ஓர் மரம் -नदी ஓர் நதி -नाय: ராவுத்தன். குதிரைப் பாகன் = -निबंधिक: -निर्णिज् குதிரைகளால் அலங்கரிக்கப்பட்ட -प: குதிரைக்காரன் -पति: ஸாவித்திரியின் பிதாவான ஓர் மதுராதேச ராஜன். இன்னும் அநேக அரசர்களின் பெயர் -पर्ण குதிரைகளையுடைய. (எங்கும் துளைத்துச் செல்லுகிற) மேகம் -पुच्छी பெருவிடுங்கொள்ளு -पेशल् त्रि குதிரைகளால் சிங்காரிக்கப்பட்ட -बंध: குதிரைக்காரன் -बंधन त्रि குதிரைகளைக் கட்ட உபயோகப்படுகிற -बला ஓர் சாகம், கந்தமூலம் -बाल: குதிரையின் வால் மயிர். ஓர் நாணல் -बुध्न குதிரைகளின் மேல் நிற்கிற. குதிரைகளாலிழுக்கப்பட்ட வண்டியிலிருக்கிற -बुध्य குதிரைகளை அடிப்படையாக, மூலமாகவுடைய (தனம் போல்). குதிரைகளால் சிறந்ததான -भा மின்னல் -महिषिका குதிரைக்கும் எருமைக்குமுள்ள இயற்கையானபகை -मार (क): அலரி -माल: ஒரு விதப் பாம்பு -मुख: கின்னரன் -मुष् पु குதிரையைத் திருடுபவன் -मेध: ஓர் குதிரையை ஒரு அரசன் அவிழ்த்து விட்டுவிட்டால் அது எங்கெங்கு போகிறதோ அத்தேச வரசர்களை இவன் ஜயித்து ஒரு வருஷமுடிவில் அது திரும்பி வந்ததும் ஸார்வபௌமனாகி விட்ட இவ்வரசன் இதால் யாகம் செய்வான். இம்மாதிரி நூறு தரம் செய்பவன் இந்திர

பதத்திற்கு யோக்கியனாகிறான் -मेधिकः, मेध्यीयः அச்வமேதத்திற்கு யோக்கியமான குதிரை - मेधिकं பாரதத்தில் 14வது பருவம் -युज् அச்வினி. அச்வினியில் பிறந்த. ஐப்பிசிமீ. குதிரையைப் பூட்டல். குதிரைகள் பூட்டப்பட்ட (ரதம்)-योग குதிரைகளைப் பூட்டச்செய்கிற. குதிரைகளைப் போல் விரைவில் எட்டுகிற, சேருகிற -रथा ஓர் நதி -रत्नं, राज. குதிரைகளுட் சிறந்தது. உச்சைச்ரவஸ் -राधस् त्रि குதிரைகளை ஜோடிக்கிற -रोधकः அலரி -लक्षणं குதிரையின் அடையாளம் -ललितं விக்ருதி விருத்த விசேஷம் -लाला ஒருவிதப் பாம்பு=-लोमन्-वडवं ஆண்,பெண் பொலிக்குதிரைகளிருக்குமிடம் वौ ஆண் பெண் குதிரைகள் वाः ஆண் குதிரைகளும பெண் குதிரைகளும் -व(वा)ह(कः): குதிரைக்காரன் =-वार(क):, वाल. -वारणं அலைதாடியில்லாத காட்டெருது -विद् त्रि குதிரையைப் பழக்குவதில் தேர்ச்சி பெற்ற. குதிரையை ஸம்பாதிக்கிற पु பந்தயக்குதிரை யேறுவோன். நளன் -वृषः விரையடியாத குதிரை -शकृत्, शकं ஓர் நதி -शिरस् குதிரைத்தலையுடைய. நாராயணன். ஓர் தானவன் -शृगालिका குதிரைக்கும் நரிக்கும் உள்ள இயற்கையான விரோதம் -षड्वं ஆறு குதிரைகளின் வரிசை, ஜதை -सनि, -षा,सा குதிரைகளைக் கொடுக்கிற,அடைகிற -सादः,सादिन् குதிரைவீரன் -सारथ्यं குதிரை யோட்டும் திறமை -सूनृत त्रि குதிரைகளுக்காக உண்மையாகத் துதித்த. யாருடைய குதிரைகளுக்காக துதிஉண்மையும் வாஸ்தவமோ-सेनः ஓர் அரசன். ஓர் நாகம் -स्तोमीय त्रि யாகக் குதிரையின் துதிக்கு ஸம்பந்தப்பட்டுள்ள -स्थान குதிரை லாயத்திற் பிறந்த -हंता ஓர் வாசனைப் பூண்டு -हय குதிரை

மேற்சவாரிசெய்கிற. குதிரையாற் செல்லவேண்டியி ருக்கிற -हृद्यं குதிரைக்கு இச்சை. குதிரைநடத்துமசமர்த்து. அச்வசிக்ஷை. அச்வசாஸ்திர விசேஷம்.

**अश्वक** वि குதிரை போன்ற. குதிரைபோல் நடிக்கிற

**अश्वकः** पु சிறு, கெடுதியான, சத்தத்திற்கான, சொந்தக்காரன் தெரியாத) குதிரை

**अश्वकिनी** स्त्री அச்வினீ

**अश्वतर** वि வேகமான **र:** கோவேறு கழுதை. பாதாள லோகத்தில் நாகங்களின் ஓர்த்தலைவன். ஆண் கன்று. ஓர் கந்தர்வ இனம் **री** கோவேறு கழுதை

**अश्वति** ना. प. குதிரையைப் போல் நடி

**अश्वत्थः** पु அரசு. படுகாணை. கல்லொளி மரம். அச்வினீ. அச்வினியின் காலம். அரச மரப் பாத்திரம். அரசங்காய். அது பிஞ்சுவிடும்காலம். ஓர் ஜனம். ஸூர்யன். அக்கினி. விஷ்ணு **त्था** ஐப்பிசிப் பருவம். **त्थी** அரசங்கன்று **-कुणः** அரசு பிஞ்சுவிடுங்காலம் **-भेदः** ஓர் மரம்

**अश्वत्थक** वि அரசு பிஞ்சு விடுங்காலத்தில் கொடுக்க, செய்யப்பட வேண்டிய **कः** அக்காலத்தில் கொடுக்க வேண்டிய கடன். அரசு

**अश्वत्थामन्** पु சிரஞ்ஜீவிகளில் ஒருவரும் கௌரவஸேனையில் ஓர் பிரதான தலைவரும் கிருபீமூலம் துரோணாசார்யருக்குப் பிறந்தவர். கௌரவர் ஸேனையில் ஓர் யானை

**अश्वत्थिक** वि அரசைத் தின்றுபிழைத்திருக்கிற **का** கல்லொளி

**अश्वंत** वि அசுபமான. எல்லையற்ற. **तः** சாவு. கழனி. எல்லை.

**अश्वर्यति** ना. प. குதிரைகளுக்கு ஆசைப்படு [அடுப்பு

**अश्वया** स्त्री குதிரைகளை அடைய ஆசை

**अश्वयु** वि குதிரைகளையுடைய, இச்சிக்கிற

**अश्वलः** पु ஜனகரின் யக்ய புரோஹிதரான ஓர் ரிஷி

**अश्वस्तन, निक** वि இன்றைக்கான. மறுநாளைக்கு உணவு வைத்துக் கொள்ளாத

**अश्वस्यति** ना. प. விரையடியாத குதிரைக்கு ஆசைப்படு

**अश्वा** स्त्री பெண் குதிரை -मय குதிரைகள் நிறைந்த

**अश्वातरः** पु காடு. அந்துப்பூச்சி. அச்வமேதம். குதிரை வரிசை

**अश्वायति** ना. प குதிரைகளுக்கு ஆசைப்படு

**अश्विक** वि குதிரைகளால் இழுக்க, சுமக்கப்பட்ட

**अश्विन्** वि குதிரைகளையுடைய. குதிரைகளாலான पु குதிரைவீரன், பழக்குபவன் नौ द्वि குதிரை ரூபமான ஓர் நாககன்னிகைக்கு ஸூர்யன் மூலம் இரட்டையாய்ப் பிறந்தவர்களான தேவவைத்தியர்கள். இரு குதிரைகள். மிதுன ராசி

**अश्विनी** स्त्री 3 நக்ஷத்திரங்களையுடைய அச்வினீ. குதிரை ரூபமான அச்வினீ தேவதைகளின் தாய். பிசாசு

**अश्विमत्** वि அச்வின் என்கிற பதத்தையுடைய

**अश्विय** वि குதிரைகளைக் குறிக்கிற या व குதிரைக்கூட்டம்

**अश्विसालोक्यं** न ஸுவர்க்கம்

**अश्वीन** वि தூரமான. குதிரையின் ஒருநாள் பிரயாண தூரம்

**अश्वीय** वि குதிரை ஸம்பந்தமான, குறிக்கிற, தகுந்த यं குதிரைப்பட்டாளம்

**अश्व्य** वि குதிரை ஸம்பந்தமான. குதிரைகளையுடைய श्व्यं அநேக குதிரைகள். அவைகளை யுடைத்தாயிருத்தல்

**अंश्** 10 उ பகு

**अंशः** पु பாகம். சொத்தில் பங்கு. பின்னத்தில் வகுக்கப்பட வேண்டியதான அம்சம். சுற்றளவில் 360ல் 1 பங்கு. தோள். 12ல் ஓர் ஆதித்தியன். கிரணம். ஸங்கீதாம்சம் **-अंशः** அம்சத்தின் அம்சம் **-अंशि** अ பங்கு பங்காய் **-अवतारः** பூர்ணகலைகளின்றி பின்ன, அம்சாவதாரம்

-भाज्, हरः, हारिन् पु स्त्री பங்காளி -विवर्तिन् वि சற்றுத்திரும்பின -सवर्ण பின்னங்களை ஒரே வகுக்கும் எண்ணுக்குக் கொண்டுவரல்.

**अंशकः** पु பங்காளி. உறவினன். பாகம் க் தினம்.

**अंशल** वि பங்குள்ள. பங்கிற்குரிமையுள்ள.

**अंशयितृ** पु பங்காளி

**अंशिन्** वि ஸமாம்சகன். தாயாதி. அம்சங்களையுடையது.

**अंशुः** पु கிரணம். நுனி. அணு. கொஞ்சம். திரி நுனி. நூல். நார். அலங்காரம். வேகம். -जाल கிரணக்கூட்டம். -पट्ट ஓர்விதப் பட்டுத்துணி -माला பரிவேடம். ஸூர்ய, சந்திரனைச் சுற்றிய ஒளி -मालिन् ஸூரியன். எண் 12. கிரண ஸமூஹங்களையுடைய -धरः, पतिः, बाणः भृत्, भर्तृ, स्वामी, हस्तः ஸூரியன்

**अंशुमत्** वि பிரகாசமான. கூரான நாருள்ள. (मान्) पु ஸூரியன். விஷ்ணு. தயாளு. ஓர்மலை. திலீபனின் தகப்பன் -फला வாழை. ती யமுனாநதி. மேர்மல்லி.

**अंशुकं** न துணி. இலை. ஜவி. உத்தரீயம். ரவிக்கை.

**अंशुल** त्रि காந்தியுடைய लः சாணக்கிய முனி

**अंस्** 10 उ வகு

**अंसः** पु அம்சம். தோள் (பட்டை -कूटः முசுப்பு. கழுத்து வீக்கம் -त्र தோள் கவசம். வில் -फलकः முதுகெலும்பு -भारिक, भारिन् वि முதுகில் நுகத்தடியை, பாரத்தைச் சுமக்கிற -विवर्तिन् தோளுக்காய்த் திரும்பின -रंगिकः பவழமல்லி

**अंसल** वि பலமான. தோள்வலிவுள்ள

**अष्** १ उ பிரகாசி. அசை. பெறு. கிரஹி

**अषडक्षीण** वि ஆறு கண்களால் பார்க்கப்படாத. இருவரால் மட்டும் அறிய, நிச்சயிக்கப்பட்ட णं ரகஸியம்

**अषतर** वि மிக அணுக, அடைய முடியுமான

**अषाढ** वि ஜயிக்க முடியாத. ஆஷாடத்திற் பிறந்த **ढः** ஆடி. பலாசதண்டம். மலயமலை. **ढा** பூராடம் உத்திராடம்

**अषाढकः** पु ஆடி

**अष्टन्** वि 8 (स. கில் अष्टा) **-अक्षरः** ஓர் சந்தஸ்- **अंग** 8 உறுப்புக்கள் யோகத்தில், வியவஹாரத்தில், வணங்குவதில் (அனு) **-अंगधूपः** ஜ்வரத்தை நீக்கும் ஓர்புகைரூப மருந்து **-अंगमैथुनं** எண் விதமான ஸ்திரீ அனுபவம் **-अंगहृदयं** ஓர் வைத்திய நூல் **-अंगार्घ्यं** 8 வஸ்துக்களை மரியாதையாய்க் கொடுத்தல் **-अध्यायी** பாணினியின் 8 அத்தியாயங்களையுடைய வியாகரணக் கிரந்தம் **-अस्त्र** எண் கோணம். அஷ்டகோணம் **-अहन्** वि 8 நாள் நீடித்திருக்கிற **-आदिशाब्दिकाः** வியாகரண சாஸ்திர ஸ்தாபகர்களான 8 மூல புருஷர்கள் (அனு) **-कपाल** (**ष्टा**) 8 தாலங்களில் நெய்வைத்து, சமைத்து ஹோமம் செய்யப்படும் யாகம் **-कर्ण** 8 என்று காதில் சுடப்பட்ட அடையாளமுடைய **र्णः** 8 காதுகளுடையவனான பிரம்மன் **-कर्मन्**, **गतिकः** 8 கடமைகளையுடையவனான அரசன் (அனு) **-कोणः** எண் கோணம்- ஓர் யந்திரம் **-खंडः** ரிக்வேத பாகங்களின் திரட்சி **-गवं** 8 பசுக்களின் சேகரம் **-गंधिका** மல்லிகை **-गाद्** पु 8 கால்களையுடைய சரப மிருகம். 8 கால்பூச்சி **-गुण** எண் மடங்கான **णः** பிராம்மணனிட மிருக்க வேண்டிய எண் குணங்கள் (அனு) **-गुणाश्रय** இவ்வெட்டு குணங்களை யுடைய **-तय** எண்மடங்கான **-तारिणी** அம்பாளின் எண்ரூபங்கள் (அனு) **-त्रिकं** 24 **-दलं** 8 இதள்களையுடைய தாமரை. அஷ்டகோணம் **-दिश्** கிழக்கு தென் கிழக்கு முதலிய திக் விதிக்குகள் இன்னும் 8 திக் கஜங்கள், அவைகளின் பெட்டை

கள், அஷ்டதிக் பாலர்கள் இவைகளுக்கு அனுபந்தத்தில் பார்க்கவும் -धातु 8 பொன் முதலிய தாதுக்கள். (அனு.) -पद, द् (ष्ट, ष्टा) 8கால்களையுடைய சினைப்பட்ட மிருகம் -प(पा)द: (ष्टा) 8 கால் பூச்சி. சரபமிருகம். புழு. தாழ்ப்பாள். கைலாஸ மலை.குரங்கு =-पदी காட்டு மல்லிகை.ஜயதேவரின் கீத கோவிந்தத்தில் வரும்போன்ற ஓர் விருத்தம் -पदं பொன். ஊமத்தை. சொக்கட்டாடும் மனை-पदपदं தங்கத்தகடு -प(पा)दिका ஓர் செடி -पलं ஓர் லேஹியம் -पाद्य எண் மடங்கான -मंगल: வெளுத்த முகம், வால், பிடரி, மார்பு, குளம்புகளையுடைய குதிரை -मंगलं 8 பாக்கிய வஸ்துக்களின் திரட்சி. (அனு) -मानं உழக்கு -मासिक 8 மாதத்திற்கொருமுறை வருவதான -मुष्टि: 8 முஷ்டி (பிடி) அள்வுள்ள कुंचि என்னும் ஓரளவு -मूर्ति எண் ரூபங்களையுடையவனை. சிவன் =-मूर्तिधर:-रत्नं நீதிகளைப் புகட்டும் 8 சுலோகங்களடங்கிய ஓர் நூல் -रसा: எண்வித சிருங்கார, ஹாஸ்யாதி மனோவிகாரங்கள் (அனு.) -लोहकं 8 உலோஹங்கள் வங்கம் முதலியன. (அனு.) क: 8 வஸ்துக்களாலான ஓர் மருந்து -वर्ग: சுபாசுபங்களைக் கூறும் ஓர் ஜோதிட சக்கிரம். எண் இன எழுத்துக்கள் அவர்க்க, க, ச, ட, த, ப, ய, ஷக்கள். 3 முக்கிய மருந்துகள் -शतं 800 -श्रवण:, श्रवस् பிரம்மா

अष्टक त्रि 8 பாகங்களையுடைய.எண் மடங்கான क: பாணினியின் வியாகரண8 புஸ்தகங்களையும்படிப்பவன்,படித்தவன்.விச்வாமித்திரரின் பிள்ளை का கிருஷ்ண ஸப்தமி, அஷ்டமி, நவமிக்களின் சேர்க்கை. பிதிர்க்களைத் திருப்தி செய்விக்க வேண்டிய மும்மாத அஷ்டமிக்கள். அத்தினங்களில் செய்ய வேண்டிய சிராத்தம்.

மாத 8ம் நாள் कं 8 அத்தியாயங்களான பாணினியின் ஸூத்திரங்கள். அவைகளைப் படித்தல். ரிக், யஜுர் வேத விபாகங்கள். எண் இனங்கள், பாகங்களை யுடையது. எண் 8 -अंग, ग: சூதப்பலகை.
अष्टकिक, किन् விஎட்டுருப்புக்களையுடைய की அஷ்டகைசெய்ப
अष्टक्र वि எட்டிற்கு வாங்கப்பட்ட. [வன்
अष्टतय वि எட்டுருப்புக்கள், பாகங்களையுடைய. यं 8ன்
अष्टधा अ எண் மடங்கு, எண் பிரிவுகளில் [சேர்க்கை.
अष्टम वि(मी श्री) எட்டாவது मः அரைக்கால் பாகம் मी அஷ்டமி. ஓர் செடி -कालिक 3½ நாள் (7 வேளை) தவிர்த்து 4ம் நாளிரவு உண்பவன் -भाव: ஜ்யோதிஷ எட்டாமிடம், நிலை
अष्टमक वि எட்டாவது. அரைக்காலான मिका 4 தோலா
अष्टशस् अ எட்டெட்டாய் [எடை.
अष्टा स्त्री 8 தந்தி வீணை
अष्टातय वि 8 பாகங்களை யுடைய यः 8 வஸ்துக்களின்
अष्टादशकं न எண் 18 [சேர்க்கை
अष्टादशन् वि 18 -अंग, ग: வைத்திய சாஸ்திர 18 அம்சங்கள் -उपचार: 18 வித உபசாரங்கள். (அனு) -उपपुराणं 18 அப்பிரதான புராணங்கள். (அனு) -धान्यं 18 வித தான்யங்கள் (அனு) -पुराणं 18 புராணங்கள் (அனு) -भुजा மஹாலக்ஷ்மி -विद्या 18 சாஸ்திரங்கள் (அனு) -विवादपदं சண்டைக்குக் காரணங்கள் 18 (அவை மனு 8ல் 4-7) -स्मृतिकारिन् पु ब தர்ம சாஸ்திர கிரந்த கர்த்தாக்கள் 18 பெயர்கள் (அனு).
अष्टावक्रः पु கஹோாத முனிவரின் பிள்ளை. இவர் தன் தகப்பனரால் கோணலாகி அவரைக் காப்பாற்றின தற்காக அவர் மூலமாகவே நேராகி விட்டார்.

अष्टिः स्त्री பாச்சிகை. 64 எழுத்துக்களுள்ள ஓர் விருத்தம். பரவல். எட்டல். (போகஹேதுவான) தேகம். எண் 16. கொட்டை. கொட்டைக் குள்ளிருக்கும் பருப்பு

अष्टिन् वि 18 பாகங்களை யுடைய

अष्ठा स्त्री ஜாட்டி. தாற்றுக்கோல். வண்டிச் சக்கிர உருப்பு

अष्ठिः स्त्री விதை. பருப்பு. கொட்டை.

अष्ठीला स्त्री „ „ „ பருக்காங்கல். மூத்திர ரோகம். வாயுவாலுண்டான தொப்புளின் கீழ் வீக்கம். வட்டரூபம்.

अष्ठीलिका स्त्री பருக்காங்கல். ஒரு விதப் புண், ரணம்

अष्ठीवत् पु स्त्री முழங்கால். முழங்கா லெலும்பு

अस् 1. 2. प. இரு. வசி. பிழைத்திரு. தங்கு. உடைத்தாயிரு. விதிக்கு ஆளாகு. நேரிடு. உண்டாகு. ஆகு. ஏற்படு. போது மானதாயிரு. ஸ்ம்பந்தம் பெற்றிரு. अति + அதிகமாயிரு. மேம்படு. अनु + கைக் கெட்டும் படி யிரு अपि + எதிலாவதிரு. ஸம்பந்தப்பட்டிரு = अभि + விதிவசமாய் வா. முந்து. அதிகமாயிரு. ஆள். அதிகாரம் செய் आविस् + கிளம்பு. தோன்று. उप + உள்ளே, அருகே யிரு परि+வழியிலிரு. மேம்படு. (காலத்தைப்) போக்கு. பரவு प्र+எதிரே யிரு. விசேஷித்திரு प्रति + சமமாயிரு. போட்டி போடு. பதிலாயிரு प्रादुस्+ வெளிவா. தோன்று. व्यति+ அதிகப்படு. மேம்பட்டிரு 4 प எறி. எய். விடு. ஒதுக்கு. பயமுறுத்து. போகவிடு. अति + பாணம் விடுவதில் மேம்படு, மேற்கொள். अभिप्र + வீசு. விசிறியெறி. परिनि + நீட்டு 1 उ போ. அடை. பெறு. பிரகாசி

असकौ वि இது. அது

असक्त अ உலகப்) பற்றின்றி. தடையின்றி. விரைவில் ஓயாமல்

असक्त वि கிற்காமல்பாய்கிற. உலராத. வேறெங்கும்போகாத.
असंकुल वि கூட்டமில்லாத. விசாலமான ல: விசாலமான [பாதை
असंक्रांतमास: पु அதிகமாஸம்
असंख्या वि எண்ணமுடியாத -ता, त्वं அளவின்மை. அனந்தம்
असंख्यात वि ,, = असंख्येय. य: விஷ்ணு. சிவன் -गुण அளவற்ற.
असंग: पु உலகப்)பற்றின்மை. புருஷன் ஜீவன் -वत् विபற்றின்றி
असंगत वि ஸமானமாகாத. கௌரவிக்கப் படாத. முரடான அசாஸ்திரமான.
असंगति: स्त्री காரண பயன்களுக்கு ஸம்பந்தமில்லாத ஓர் அலங்காரம்.
असंघस वि போஜன மற்ற
असच्चद्विष् वि (தன்னை) வணங்காதவர்களைக் குற்றஞ்சாட்டு கிற. விரோதிகளை உடைத்தாயிராத.
असजात वि ரத்த ஸம்பந்த மில்லாத = जात्य.
असंज्ञ वि அறிவிற் கெட்டாத ज्ञा பொருத்த மின்மை
असत् वि கொடுக்க வேண்டியதை, கேட்டதைக் கொடாத पु (न्) இந்திரன் न இல்லாமை ती வியபிசாரி-अध्येतृस्व சாகையை விட்டு அன்னியத்தைநாடும் அதமப் பிராம் மணன். ஸமய பிரஷ்டன் -आगम: மத விரோத சாஸ் திரம், ஸித்தாந்தம். அக்கிரமமாய்ப் பணம் ஸம்பா தித்தல். அநியாய வழி -कल्पना நடந்திராதபொய்யான காரியம். பொய்யான சிருஷ்டி, கட்டுதல், கல்பனை. -ख्याति: பிசகாய் அறிந்து கொள்ளல் -ग्र(ग्रा)ह: கெடுத லான சூழ்ச்சி, அபிப்பிராயம். துரபிமானம். பால்ய சபலம் -पथ: கெட்ட வழி. கோணசாரம், ஸித்தாந் தம் -परिग्रह: கெட்ட வழியைப் பற்றல் -पुत्र: அகீர்த்தி கரப்பிள்ளை. குழந்தை யில்லாதவன் -प्रतिग्रह: கெட்ட வஸ்துக்களின் தானம். தகாத (எள் போன்ற) வஸ்

துக்களை, இடத்திலிருந்து, வாங்கல் -हेतुः சிறப்பு விதிகளையுடைய ஸூத்திரம், வாக்கியம். பொய்யான ஹேது. ஹேத்வாபாஸம்.
असतायी स्त्री கெட்ட நடத்தை
असत्क्र 8 उ அவமதி. நன்கு வரவேற்கா திரு
असत्वं न இருள். இருவர் பாடும் இசைப்பாட்டு
असत्य वि ஊஹையான -सन्निभ சம்பவிக்கக் கூடாத.
असन् न (असृज्) ரத்தம்
असनः पु வேங்கை மரம். ना அம்பு -पर्णी ஓர்மரம்
असनिः पु (अस्) எறிபவன் (முதலியன).
असंदिग्ध वि (संदिह्) மறையாத ध्यं अ சந்தேக மின்றி
असंदित, न वि அடக்கப் படாத. சுயேச்சையான
असन्नद्ध वि பண்டிதனென்று)வீண்கர்வப்படுகிற. உண்டான
असन्निकर्षः पु விஷயங்களை உணராமை.கவனப்படுத்திக் கொள்ளாமை.
असपत्नं न சாந்தி.ஒருவிதச்செங்கல்.போட்டிமனைவியின்மை
असभिकः पु சூதாடுகிறவன்
असमः पु புத்தர் -सायकः ஒத்தப்படையான பாணங்களையுடைய மன்மதன் -नेत्रः சிவன் -वृत्तं குணபேதவிருத்தம். [திரன்.
असमंजसं अ தகுதியின்றி. தாறுமாறாய் सः ஸகாராஜ புத்
असमद् स्त्री சண்டையின்மை. பொருத்தம். ஒற்றுமை.
असमद वि சண்டைசச்சரவில்லாத [நிறங்களுள்ள
असमन विசமனற்ற. பலவழிகளிற்போகிற. பலயோசனைகள்,
असमर्थ वि கருத்தையுடையாத குறைவுள்ள பதமான -समासः பத ஸந்தி முந்தி பிந்தியிருக்கிற ஸமாஸ விசேஷம்.
असमवायिकारणं न முக்கியகாரணத்திற்கடுத்தகாரணம்
असमवेतरूपं अ ஒன்றுக் கொன்று ஸம்பந்தமில்லாமல்

असमस्तं न ஸமாஸ பதமல்லாதது(ஸந்திமறைந்தவாக்கியம்)
असमाति, मान वि ஒன்றையும் ஸமானமாயுடையாத. நிகரற்ற.
असमवृत्त(क):,वर्तकः,वृत्तिकः पु குருகுலவாஸம்முடியாதசிஷ்யன்
असंप्रज्ञात वि பேதத்தினல் தெரிந்து கொள்ளப்படாத நிர்
விகல்ப ஸமாதி
असंबद्धं न அர்த்தமில்லாத பேச்சு. உளறல்
असंबाधं न திறந்த வெளி धा 56 எழுத்துக்களுள்ள விருத்தம்
असंभवं, वा स्त्री அபூர்வமான ஸம்பவம். [யில்
असंभव्य, भाविन् वि அறிய முடியாத व्य अ விசேஷத்தன்மை
असंभूतिः स्त्री மறுபடியும் பிறவாமை. இல்லாமை. ப்ரகிருதி.
असंमतः पु விரோதி -आदायिन् वि சொந்தக்காரன் உத்தர
வின்றி எடுக்கிற
असंमित वि வரையறுக்கப்படாத. ஏராளமான
असंसृष्ट वि இணைக்கப்பட்டிராத. உபத்திரவிக்கப்படாத
असरुः पु ஒரு வகைப் பூண்டு
असर्ववीर वि தன்மனிதர்கள் யாவரையும் ஒன்றுகூட்டப்படாத
असलं न இரும்பு. அஸ்திரம் பாணப்ரயோககாலமந்திரம்
असश्चत् वि போகாத. சளையாத. தடுக்க, தொடப்படாத
असस्त् वि தூங்காத. விழித்துக் கொண்டிருக்கிற.
असहं न நடுமார்பு -हनं பொறுக்காமை.பொறுமை नः சத்துரு
असहनीय, सहितव्य, सह्य वि பொறுக்க முடியாத
असहमान वि பொறுக்காத. —हिष्णु वि சண்டையிடுகிற.
असंयतः, युतः पु விஷ்ணு -आत्मन् ஒன்றிக்குட்படாதவனை
असंयुक्तं न சேராமை. 2 உயிரெழுத்துக்கள் ஓரிடத்தில் வரு
असंविदान वि மூடனை [தல்
असंवृत वि மூடப்படாத. வெளிப்படையான तं ஓர் நரகம்
असंव्यवहित वि நடுவில் இடைவெளி, கால மின்றி உடனே
असंश्रव वि கேழ்க்கப்படாத. காதுக்கெட்டாத [யான

**असंश्लिष्ट** वि இணைக்கப்படாத. ष्टः சிவன்
**असंसृतिः** स्त्री ஸம்ஸாரத்திற்குத் திரும்பாமை. பிரம்ம ஸாயுஜ்யமாதல்
**असंसृष्ट** वि பாகமானபின் சேர்ந்து வசியாமலிருக்கிற
**असंस्कृतः** पु இலக்கண விதிக்கொவ்வாத அபசப்தம். [மை
**असंस्थानं** न ஸம்பந்த மின்மை. தாறுமாறு. தேவை. இல்லா
**असंस्थित** वि ஒழுங்கீனமான. சேர்க்கப்பட்டிராத. அசைகிற
**असंहतः** पु புருஷன். ஜீவன் तं சேனைகளின் வியூக விசேஷம்
**असाक्षिक** वि (की स्त्री) ஆளுகிறவன் இல்லாத
**असाक्षिन्** वि யாருடைய சாக்ஷி ஒத்துக் கொள்ளக் கூடாததோ. ஸாக்ஷி சொல்லயோக்கியதையில்லாதவனை
**असाद** वि உட்காராத. ஆஸனமில்லாத.
**असाधारणं** न பொதுவின்றி ஒன்றிர்க்கே உரித்தானது. ப்ரத்யேகமான சொத்து
**असाधुवृत्ता** स्त्री வியபிசாரி = असाध्वी
**असामान्यं** न பொது வின்றி தனி ஸொத்து. விசேஷகுணம்
**असामि** वि பாதியில்லாத अ முழுதும்
**असात्म्यं** न (மருந்து, உணவில்) ஒத்து, தகுதியாயிராமை
**असारं, रः** पु அகில். ஆமணக்கு
**असिः** पु வாள். பட்டாக்கத்தி. மிருகங்களைக்கொல்லஉபயோகப்படுங்கத்தி. காசிக்குத்தெற்கே ஓர் நதி. மூச்சு.-असि अ கத்திக்கு எதிர்கத்தி -गंडः சிறுதலையணை -रलौडिकः உள்ளிப் பூண்டு -जीविन् वि கத்தியால் பிழைப்பவன். சிப்பாய் -दंष्ट्र (क): முதலை = -दंतः -धरः குபேரன் -धारा கத்தி நுனி -धाराव्रतं கத்தி நுனியில் நிற்கும் விருதம். புது மனைவியின் பக்கலில் படுத்தும் புணராவிருதம் அல ஓர் அஸாத்தியமான தொழில் -धाव (क): ஆயுதம் செய்கிறவன், சாணைபிடிப்பவன் -धेनुः, धेनुका சிறு

कत्ति-पत्रः கத்தி போல் இலைகளைப் பரப்பப்பட்டிருக்கும் ஓர் நரகம். கரும்பு. கீழ்லோக மர விசேஷம் त्सं கத்தி நுனி, உரை. ஒருவிதப்புல் - पत्रवनं கத்திகள் போன்ற இலைகளையுடைய மரங்களாலான ஓர் நரகம் -पत्रकः கரும்பு -पुच्छ (क): நீர்ப் பன்றி-पुत्रिका, पुत्री கத்தி -भेदः நாற்றக்கருங்காலி -हत्य கத்தியால் கொல்லப்பட வேண்டிய ःयं கத்திகளால் சண்டையிடல் -हेतिः வாள் காரன்

असिकं न கீழுதட்டிற்கும் மோவாய்க்கட்டைக்கும் நடுவிடம்

असिक्निका स्त्री அந்தப் புற வேலைக்காரச் சிறுமி. இரவு. பஞ்சாப்தேச ஓர்நதி = क्नी

असितं त्रि पु கறுப்பு. கருநீலம். கிருஷ்ண பக்ஷம். சனி. கருநாகம். தேவலரிஷி. இருளுக்கும் மாயைக்கும் அதிஷ்டான ஜீவன் ता அவிரி. அந்தப் புற வேலைக்காரச் சிறுமி. யமுனை. தக்ஷனின் மனைவி. அஸிக்னீ நதி -अंगः கத்தி -अंबुजं, उत्पलं கருநெய்தல் -अर्चिस् पु அக்கினி -अश्मन् , उपलः கரு நீலக்கல். வைடூர்யம் -आननः கொண்டமுஸர். ஒரு விதக்குரங்கு -ग्रीवः அக்கினி -मृगः கருப்புமான்.

असित्व त्रि திருப்தி யடையாத. பேராசை யுள்ள

असिरः पु கிரணம். பாணம். தாழ்ப்பாள்

असी स्त्री காசிக்குத் தெற்கே ஓர் நதி

असुः पु உயிர். இறந்தவர்களின்) பிராணன். நீர். சூடு. (ब) தேகப் பஞ்சப் பிராணன்கள். பிரக்ஞை. 10 ப்லு தாக்ஷரங்களை உச்சரிக்கக் கொள்ளும் காலம். 6ல் 1 பலம் न எண்ணம். மனது. துக்கம் - धारणं, णा வாழ்வு -नीतः உயிர்களின் யஜமானன் तं உயிர் களின் உலகு = -नीतिः-भृत् पु ஜந்து -समः கணவன். காதலன்

असुख-उदय, उदर्क वि துக்ககரமான, துக்கத்தில் முடிகிற
असुत वि குழந்தையில்லாத. (ஸோமரஸம் போல்) பிழிய, சுத்தி செய்யப்படாத
असुतील: पु கள் விற்கிறவன். யாகம் செய்பவன்
असुन्व वि ஸோமரஸத்தைப் பிழியாத
असुतृप् वि திருப்தி யடையாத पु: ஓர் யமகிங்கரன்
असुप्तदृश् वि தூக்கத்தில் கண்களை மூடாத
असुमत् वि ஜீவிக்கிற पु ஜந்து. பிராணன்
असुम्न वि விரோதமான. பகையுள்ள
असुर वि பிழைத்திருக்கிற. அமானுஷமான. தைவசக்தியுள்ள. பிரம்மம். வருணன் र: துஷ்டாத்மா. அஸுரன். தேவ விரோதி. பேய். ஸூரியன். யானை. ராஹு. மேகம். ஓர் க்ஷத்திரிய வர்க்கம். रा இரவு. தாஸீ. ராசிக்கிரஹம். री அஸுர ஸ்திரீ. கடுகு -क्ष கசிக்கத்தக்க. -ज:, राज् பலிச் சக்கிரவர்த்தி -गुरु: சுக்கிராசாரியர். வெள்ளிக் கிரஹம் -आह्व வெண்கலம் -द्विष् पु தேவதை -रक्षस न ब அஸுரர்களும் ராக்ஷஸர்களும் -सं இரு தன்மைகளும் பொருந்திய ஓர் அஸுர ஜந்து -सूदन: விஷ்ணு =-हन् पु இந்திரன். அக்கினி.
असुरत्वं न அசரீரத்துவம். தைவத்தன்மை.
असुरसा स्त्री துளஸி பேதம்
असुर्य त्रि சரீரமில்லாத. தைவீகமான. அஸுர ஸம்பந்தமான र्य மேகத்தின் ஜலம். அசரீரஜீவன்களின் தொகுதி.
असुष्वि वि ஸோம ரஸத்தைப் பிழியாத. துராசாரமான. [துஷ்டனை
असुसू: பாணம்
असू वि பிரஸவியாத. மலடான =सूत, सूतिक वि மலடி
असूक त्रि கோட் சொல்லுகிற
असूति: स्त्री மலடு. தடை. ஓதுக்கம்.

असू(सु) क्ष(क्षे)णं न अस्तक्षणं न அவமரியாதை [டவன்.
असूयक त्रि பொறாமைப்படுகிற. அதிருப்தியடைந்த கஃபழிப்
असूयति ना. प பொறாமைப்படு. அதிருப்தியடைந்திரு. முணு
असूयनं न அபவாதம். தூஷணை. பொறாமை. [முணு ணிசு
असूया स्त्री கோபம். ,, ,, यितृ युः त्रि பொறாமைப்படுகிற
असूर त्रि துதி, பூஜையில்லாத र्ं ஸோமரஸம் பிழிய மனித
னில்லாமை. மந்திரம் சொல்லப்படாத விடம்
असृतं वि அசையாத. ஓட்டப்படாத [மியாத
असुर्यं वि ஸூர்யனில்லாத -ग ஸூர்யனுள்செல்லாத அஸ்த
असुर्यंपश्य वि ஸூர்யனைப் பார்க்கமுடியாத र्या அந்தப்புறத்தி
லடைபட்டிருக்கும் ஸ்திரீ. தர்ம பத்னீ
असृज़ न ரத்தம். அங்காரகன். மஞ்சள். 27ல் 16வது யோகம்
-कर. நிண நீர். மாம்ஸ நீர். -दरः அதிகமான, ஒழுங்கீன
மான ருதுரக்தக்கசிவு -दोहः ரத்தங்கொட்டல் -धरा
தோல் = -धारा ரத்தப்பெருக்கு -पः, पाः ராக்ஷஸன் -पातः
ரத்தங்கொட்டல் ब ரத்தத்துளிகள் -पावन् ரத்தத்
தைக் குடிக்கிற -वमिः पु ரத்த பித்தரோகம் -वहा ரத்
தக் குழாய். தாது. -विमोक्षणः ரத்தத்தை விடல். ரத்
தம் வடிதல், கொட்டல் = -श्रा(स्रा)वः
असृपाटः, टी ரத்தப் பெருக்கு, ஓட்டம்
असृणि अ அடக்கப்படாத
असृष्ट वि தொடரப்பட்ட -अन्न அன்னத்தைப் பங்கிட்டுக்
கொடாதவன்.
असेचन(क वि பார்த்துப் பார்த்துத் திருப்தியடையாததான
असेन्य वि சேனைக்குத் தகாத. அடிக்காத
असेवित वि தவிர்க்கப்பட்ட -ईश्वर, द्वार பணக்காரன் வீட்
டண்டை காத்துக் கொண்டிராத
असौनामन् वि பலான பலான பெயரையுடைய

**अस्कन्न** त्रि உடைக்க, மூடப்படாத. நீடித்திருக்கிற.

**अस्कन्दित** वि தகைக்கப்படாத. -व्रतविருதத்தில்சிரத்தையுள்ள

**अस्कृधोयु** त्रि குறைவுபடாத. நிறைந்த. தொடர்ச்சியான

**अस्त** वि முடித்த. அனுப்பப்பட்ட स्ता பாணம் -करुण தயையில்லாத -कोप, रुष् त्रि யாருடைய கோபம் தணிக்கப்பட்டிருக்கிறதோ -धी மூடனை -व्यस्त சிதறின. ஒழுங்கீனமான. மதிமயங்கின -संख्य எண்ணமுடியாத

**अस्तः** पु ஸூரியன் அஸ்தமிக்கும் மேற்குமலை. ஸூர்ய) அஸ்தமனம் अल இறங்குமுகம். ஒடுக்கம். ஸூர்யனோடுஓர் கிரஹத்தின்ஸம்பந்தம் स्तं வீடு. சாவு. ஜோதிடத்தில் ஏழாமிடம் अ வீட்டில் தோன்றாமல்.-अवलंबनं கிரஹம் அஸ்தமித்தல் -उदयौ द्वि உதித்தலுமஸ்தமித்தலும் எழலும் விழலும் -ग மறைகிற -गमनं அஸ்தமனம்.

**अस्तकः** पु மோக்ஷம். कं வீடு = अस्ततातिः [சாவு.

**अस्तम(य)नं** न ஸூர்யன்) அஸ்தமித்தல்

**अस्तमयः** पु ,, ,, சாவு. இறங்குமுகம். ஒடுக்கம். மறைத்தல். (கிரஹம்) ஸூர்யனோடு கூடல்

**अस्तंबः** पु கொம்பில்லாமல் இலைமாத்திரம்பிரதானமான செடி

**अस्तमिके अस्ता** अ கையில் அருகே **अस्तवत्** वि தகையப்பட்ட

**अस्तब्ध** वि தைரியம், உறுதியில்லாத. மயங்கின

**अस्तक्षणं** न அவமரியாதை

**अस्ताघ** वि மிக ஆழமான. பள்ளமான

**अस्ति** अ இருக்கின்றது. स्त्री கம்ஸனின் மனைவி -कायः ஸ்திதி. இனம். -क्षीर பாலையுடைய -नास्ति अ சந்தேகமாக -त्वं இருப்பு-मज्जा ஸாரப்பருப்பு

**अस्तिकः** पु ஜனமேஜயன் ஸர்ப்பயாகத்தில் ஸர்ப்பங்கள் எறியா வண்ணம் பரிந்து பேசின ஓர் ரிஷி.

**अस्तिमत्** वि தனமுள்ள ती மோர்மல்லிகை

**अस्तु** अ அப்படியே இருக்கட்டும். நல்லது. ஆகட்டும். துன்பம். வழக்கு. பொறுமை. மேன்மை. இணக்கம். துதி ஸூசகம். பொறுமையோடு அங்கீகாரம்.

**अस्तुंकार** वि (மருந்து போல்) வேலை செய்கிற. குணப் படுத்துந் தன்மையுள்ள. வைத்தியன் சொற்படி செய்கிற

**अस्तृ** वि (अस्) எறிகிற पु பாணம் சுடுகிறவன்

**अस्तृत** त्रि ஜயசீலனான -यज्वन् वि சலிக்காமல் யாகம்செய்கிற

**अस्त्यानं** न நிந்தை.

**अस्त्र** न பாணம். வீசி எறியத்தக்க) ஆயுதம். வில். கத்தி. யாகத்தில் சொல்லப்படும் ஓர் மந்திரம் -अ(आ)गारं ஆயுதசாலை -आघात: காயம் -कंटक: அம்பு -कार: ஆயுதம் செய்பவன் -चिकित्सा ரண, சஸ்திரவைத்தியம் -चिचु वि ஆயுதமுள்ள -जित पु விருக்ஷ விசேஷம்-जीव: धारिन् போர்ச்சேவகன் -मंत्र: பாணம் விடும்பொழுதும் இழுத்துக்கொள்ளும் பொழுதும்சொல்ல வேண்டிய மந்திரம்-मार्ज: சாணைபிடிப்பவன் -लाघवं பாணம்விடும் பொழுது தன் கைத்திரத்தைக் காட்டல் -शस्त्रं நானா ஆயுதங்கள் -सायक: இரும்பு பாணம்.நாராச அஸ்திரம்

**अस्त्रिन्** वि ஆயுதத்தால் சண்டை போடுகிற. வில்லாளி

**अस्त्री** स्त्री நபும்ஸக புல்லிங்கங்கள் -क ஸ்திரீ, மனைவியற்ற.

**अस्त्रैण** वि மனைவியில்லாத

**अस्थन्** न எலும்பு (अस्थि யின் சிலவிபக்திக்கு வருவது)

**अस्था** स्त्री இடி -ग, न, र மிக ஆழமான

**अस्थाने** अ தகாத இடத்தில், சமயத்தில், விஷயத்தில்

**अस्थि** न எலும்பு (स. अ தில்स्थ) காயின் பருப்பு, கொட்டை -उपदेहिका ஒரு விதக்கறுப் பெறும்பு.

**अस्थि-कं** வஜ்ராயுதம்-कृत्, जं, ञ्ज மூளை -कृन्, तेजस्, संभव:, सार:, स्नेह: எலும்புக்குள்ளிருக்கும் கொழுப்பு -छलितं

எலும்பு முறிப்பு விசேஷம். -ज: எலும்பின் கொழுப்பு. இடி -तुंड: பக்ஷி விசேஷம் -तोद: எலும்புக்களில் பாதை. ஓர் நரம்பு வியாதி-धन्वन् சிவன் -पंजर: எலும்புக்கூடு -प्रक्षेप: கங்கைபோன்ற புண்ணிய தீர்த்தத்தில் ஸஞ்சயன அஸ்திகளைப் போடுதல் -भक्ष:, भुक् நாய் -भूयस् முக்கியமாய்எலும்புக்கள் தானிருக்கிற.உலர்ந்த -भेद: எலும்புடைப்பு. ஒருவித எலும்பு -मालिन् சிவன் -युज् ஓர் மரம் -योग: உடைந்த அங்கத்தை இணைத்தல் -विग्रह எலும்பாய் இளைத்துவிட்ட ह: ஓர் சிவகிங்கரன் -शृंखला, संहार:, संहारिका பெரண்டை -शेष எலும்பு மாத்திரமிருக்கிற. மிக இளைத்த -संहारक: பெருங்கொக்கு -संचय: கொளுத்தப்பட்டபிண எலும்புகளை, அச் சாம்பலைப் பொருக்கும் ஓர் அபரக்கிரியை -संधि: முட்டி. கணுவு. உடைந்த எலும்பைஇணைத்தல் -समर्पण பிண எலும்பை நீரில் சேர்த்து விடல் -सार: மூளை-स्थूण: தேகம் -स्रंसஎலும்புகளை வெளியே விழச்செய்கிற -हार: சிவன்.

**अस्थन्वत् अस्थिमत्, मय** वि எலும்பாலான

**अस्थूरि:** त्रि ஒரு குதிரைக்கு மேல் பூட்டப்பட்ட வண்டி

**अस्नाविर** वि ஸ்தூல சரீரம், நரம்புகள், பந்தங்களிராத

**अस्निग्धदारु** न ஒருவித தேவதாரு மரம்

**अस्पृशा** स्त्री அவிரி. ஆட்டாங் கொடி शी கண்டங்கத்திரி

**अस्पृत** वि வெல்ல, எதிர்க்கக் கூடாத.

**अस्फुटं** न தெளிவில்லாப் பேச்சு-वाक् पु தத்துவாயன்

**अस्मद्** தன்னிலை. பொதுப் பெயர்நான் நாம்-द्रुह् என்னை, நம்மைக் குறித்து கலஹம் செய்கிற. விரோதமான. -विध, **अस्मादृश** நம்மைப் போல்

**अस्मत्र** अ நமக்கு. நம்மோடு. நம்முள்

अस्मदीय वि நம்முடைய. எங்கள் ஸம்பந்தமான
अस्मद्र्यंच् वि நம்மை நோக்கித்திரும்பின க्र अ நம்மைக் குறித்து
अस्मयु वि நம்மை விரும்புகிற. எங்களை அடைய முயலுகிற
अस्मंत न அடுப்பு
अ(आ)स्माक वि நம்முடைய. எங்களுடையது कीन எங்கள் ஸம்பந்தமான
अस्मि अ நான் -ता அகம் பாவம். ஆத்மஸ்துதி.
अस्मृति अ சிரத்தை யின்றி. பராக்காக
अस्मेर वि சிடு சிடென்றிராத. விச்வாஸமுள்ள
अस्यवामीयं न अस्य वा என்று தொடங்கும் ஓர் ரிக்
अस्युग्रत वि உயர்த்தப்பட்ட கத்தியை யுடைய
अस्रः पु மூலை. கோணம். தலைமயிர். துக்கம் स्त्र கண்ணீர். ரத்தம் -अजक ரத்தமுண்டாக்குகிற कः வெண்துளஸி. ரத்த முண்டாக்கும் சரீரத்தி லுள்ள திரவம் -कंठः அம்பு -खदिरः ஓர்மரம் -जे சதை -पः ராக்ஷஸன். பேய். மூல நக்ஷத்திரம் -पा அட்டை. பெண்குட்டிச் சாத்தான் -पत्रकः ஓர் மரம் -पित्तं மூக்கு, வாயிலிருந்து தானே ரத்தங் கொட்டல் -फला, ली (ஸல்லகி) ஓர் மரம் -मातृका அன்னரஸம், ஸாரம், பாகம். கஞ்சி -रोधिनी ஔஷதி பேதம் -विंदुच्छदा ஓர் கிழங்குச் செடி
अस्रायते ना. आ கண்ணீர்ச் சொரி
अस्रिः पु கோணம். கோடித் தொகை
अस्रिध् अस्रेवत् वि பக்தி சிரத்தை யுள்ள
अस्रेमन् वि துதிக்கத் தகுந்த. நசியாத. சாச்வதமான
अस्वक स्वकीय, स्विक वि தன்னுடைய தல்லாத -ग தன் வீட்டிற்குப் போகாத -गता வீடற்ற நிலை
अस्वत्वं, ता சொந்த மில்லாமை.

**अस्वंत** त्रि முடிகிற. நோயுள்ள **तः** சாவு **तं** அடுப்பு

**अस्वप्न** त्रि தூங்காத **प्नः** தேவதை. தூக்கமின்மை. விழிப்பு

**अस्वरः** पु மெய்யெழுத்து. தாழ்ந்தகுரல் **रं** अ உரத்தின்றி

**अस्वपुष्** पु காக்கை

**अस्वरूप** त्रि ஒத்திராத. வேறுதன்மை யுள்ள.

**अस्ववेश** त्रि வீட்டிலிருந்து துரத்தப்பட்ட

**अस्वाध्यायः** पु அத்யயனம் தொடங்காதவன். பூணூலாகாதவன். வேதமோதுதல் கூடாத அனத்யயன காலம்

**अस्वामिक** त्रि சொந்தமாகாத -**कं** பாத்யதை கொண்டாடப்படாத சொத்து.

**अस्वामिन्** त्रि ஒன்றிற்கும் உரிமையில்லாத. சொந்தக்காரனுகாத. -**विक्रयः** சொந்தமில்லாத விக்கிரியம்

**अस्वाम्य** त्रि உரிமை, சொந்தமில்லாத **म्यं** சொத்திற்கு உரிமையின்மை

**अह्** । आ 10 उ புறப்படு. நெருங்கு. பிரகாசி 1 प சேர்ந்துப்பாடு. கவனம் செய். புகழ் 5 प பரவு. சொல். குறி. ஒத்துக்கொள். ஸூசி. விவரி. யோசி. கூப்பிடு

**अह** अ ஆச்சர்யம், துதி, பிரிவு, சரி, நிசமாய், தள்ளுபடி, சார்பு, வழிதப்பல் ஸூசகம்

**अहत** त्रि தோய்க்கப்படாத, சலவையாகாத. புதிய. அழுக்காக்கப்படாத. **तं** நனைக்கப்படாத புதுத்துணி

**अह(हं)तिः** स्त्री பத்திரம். ஆபத்திலிருந்தும் ரக்ஷணம்

**अहत्य, हंत्र, हन्य** त्रि அழிக்க, வெல்லமுடியாத

**अहन्** न முழுநாள். பகல். ஆகாசம். யாக, உத்ஸவ நாள். ஒருநாள் வேலை. விஷ்ணு. இரவு. புஸ்தகத்தில் ஒரு நாளுக்கு ஏற்படுத்தப்பட்ட அம்சம். 8ல் 1 வஸுவாய் புருஷாகாரம் ஆரோபிக்கப்படும் தினம் **नी** ரவும் பகலும். (स -अ தில் **अहं, हः,** **ह्न** பத முதலில் **अहं,**

अहर्) -कर: ஸூரியன். ஒரு வித மரம்.-गण: தொடர்ந்த யக்ய தினங்கள். மாதம். கணக்கிடப்பட்ட காலம்.-जर: வருஷம் -दिव ஒவ்வொரு நாளுமிருக்கிற वं अ தினந் தோறும். நாளுக்குநாள் =-दिवि अ ஓயாமல்-दृश् பகற் காலத்திய. வசிக்கிற. -नाथ: ஸூரியன். ஒரு வித மரம். -निशं अ முழு நாளும். தொடர்ச்சியாய் -पति: = नाथ: சிவன். தூக்கணங் குருவி -बांधव: ஸூரியன். -भाज्, लोक நாளில் பங்கு கொள்ளுகிற -मणि: ஸூரியன் -मुखं விடி காலை -रथंतरं பகலில் சொல்ல வேண்டிய ஓர் ஸாமம் -रात्र:, त्रं ஒரு பகலுமிரவும். பிதிர்க்களின் ஒரு நாள். தேவதைகளின் ஒரு மாதம். பிரம்மனின் ஒரு வரு ஷம் -विद् பலநாளிருக்கிற. முன்னமே அறியப்பட் டிருக்கிற. யாகத்திற்குத் தகுந்த நாள் தெரிந்திருப் பவன் -शेष:, षं சாயங்காலம். தீட்டின் கடைசி நாள்

**अहना** स्त्री விடி) காலை.

**अहम्** நான் -अग्रिका போட்டி. மேன்மையைப் பற்றி சச்சரவு -अहमिका தானே சிறந்தவன் என்கிற வீம்பு, வீர்யப் பேச்சு. அகங்காரம் = -कार:, कृति: கர்வம்-कर्तव्य தன்னைக் குறிக்கிற व्यं அஹங்கார விஷயம் -कार्य தன்னாலேயே செய்யப்படவேண்டியது. -कृत கர்வியான. அஹங் காரம் படைத்த -पूर्व முதலாயிருக்க ஆசைப்படுகிற -पूर्विका, प्रथमिका போட்டியோடு போர்வீரர்கள் ஓடல். நான் முன்னே நான் முன்னே என்று செய்யப்படும் வீர வாதம். வீம்பு -प्रत्यय: அஹங்காரம். கர்வம் -भद्र தன் சிறப்பைப்பற்றி மேன்மையாய் நினைத்திருத்தல் -भाव: கர்வம். அஹங்காரம் = -मति: மமதை. அக்ஞானம் -वादिन् தன்னைப் பற்றியே பேசிக் கொள்ளுகிற. கர்வ முள்ள -श्रेयस् தனக்கே மேன்மையைக் கோரல் -सन

தனக்கே ஸம்பாதித்துக்கொள்ளுகிற
**अहंता स्त्री** அஹங்காரம்
**अहमिस्यकं न** ஈடு வைத்து வாங்கின எரவல் நகை
**अहंयु वि** கர்வியான. சுயநயமுள்ள **यु:** வீரன்
**अहरः पु** சுத்தமான, சரியான அளவு. திட்டம்
**अहरणीय, अहार्य वि** (மோசத்தால்) அடைந்து விடமுடியாத. பக்தி, விச்வாஸமுள்ள. வேண்டுகோளுக்கிணங்காத. மன உறுதியுள்ள **र्यः** மலை
**अहरहः अ** தினந்தோறும்
**अहल, लि वि** உழப்படாத
**अहल्य वि** பயிரிடத்தகாத ,, **ल्या** கௌதம பத்னியான ஓர் மஹா பதிவிருதை (அனு). ஓர் கடல் **-जारः** இந்திரன் **-नंदनः** அஹல்யையின் குமாரரான ஸதாநந்த ரிஷி **-ह्रदः** கௌதமாச்ரமத்தினருகே ஓர் தீர்த்தம்
**अहलिकः पु** பிணம். பேசுகிறவன்
**अहस्त वि** வெட்டப்பட்ட கையையுடைய. கையில்லாத
**अहह, हा अ** துக்கம், ஆச்சரியம். தயை, கூப்பிடல், சோர்வு ஸூசகம்
**अहि वि** கொல்லுகிற. பரவுகிற **हिः पु** பாம்பு. ஸூரியன். ராஹு. பிரயாணி. விருத்ராஸுரன். துஷ்டன். வஞ்சகன். ஆயில்யம். நீர். பூமி. கறவைப் பசு. ஈயம். தொப்புள். மேகம். வஜ்ராயுதம். விரோதி **हि द्वि** பூமியும் ஆகாசமும். **-अंशु** விரோதியை எதிர் நோக்காது நழுவிப்போகிற **-कांतः** காற்று **-केसरः** நாககேஸர மரம் **-कोषः** பாம்பின் உரிக்கும் தோல் **-क्षत्रः, क्षेत्रः** கிழக்கே ஒரு தேசம் **-गोप** பாம்பால் காற்கப் படுகிற **-घ्न, घ्नी पु** பாம்புகளைக் கொல்லல் **-छत्रः** அர்ஜுனனால் ஜயிக்கப் பட்டு துரோணருக்குக்

கொடுக்கப்பட்ட ஒரு தேசம். ஒருவித செடி ஸம்பந்தமான விஷம் त्रा சர்க்கரை. ஓர் மரம்(क्)நாய்க் கொடை-जित् காளியனைக் கொன்ற கிருஷ்ணன். இந்திரன் -जिह्वा ஒரு கொடி -जीविका தண்ணீர் முட்டாங் கிழங்கு -तुंडिकः பாம்பாட்டி -दंष्ट्रा தேள் கொடுக்குச் செடி -द्रुह्, वि)द्विष् पु கருடன். கீரி, மயில், இந்திரன், கிருஷ்ணன் -नकुलं பாம்புகளும் கீரிகளும் -नकुलिका பாம்பிற்கும் கீரிக்குமுள்ள இயற்கையான விரோதம்.-नाम भृत् पु பலதேவர் -निर्मोकः, निल्वयनी பாம்புரிக்குந் தோல் -पताकः (விஷமில்லாத) பாம்பு விசேஷம் - पतिः வாஸுகி - पुत्रकः (பாம்பு உருவமுள்ள) சிறு ஓடம் -पूतनं, ना ஓர் நோய்-फेनं, नः அபினி-(बु)बुध्नः,ब्रध्नः ध्नयः ஓர் ருத்திரன். சிவன். ஓர் முஹூர்த்தம். உத்திரட்டாதி =(देवता)-भयं தன் ஜனங்களாலேயேஉண்டாகும் ஆபத்து. ஒளிந்திருக்கும் பாம்பு மூலம்ஏற்படும் பயம்(द्रा) கிழாநெல்லி-भानु वि பாம்புகளைப் போல்பிரகாசிக்கிற. ஸூர்ய சலனத்திற்கு ஹேதுவான.மருத்துக்கள்.-भुज् கருடன். மயில்.கீரி. ஒரு விதக்கிழங்கு-=भूषणःசிவன் =-भृत्-मन्यु கொன்றுவிடும்படி கோபமடைகிற.பாம்புகளைப் போல் சுறுசுறுப்பான. மருத்துக்கள் न्यु : பாம்பின் கோபம்- मर्दनी ஒருவிதக் கிழங்கு -माय பல விதமான ரூபமுள்ள. பாம்பைப்போல் பல மாறுகிற ரூபங்களுள்ள -मांशुः ஸூரியன் -माक्रिन् நாற்றக்கருங் காலி -मारकः ஓர் இலவமரம் -मेद(क):நாற்றக்கருங்காலி வெள்வேலமரன் -रूपधृत् பாம்புத்தோல் -लता வெற்றிலைக் கொடி. ஸர்ப்பாக்ஷி -विषहा கறுப்பு விஷ்ணுக்கிராந்தி -शुष्म எங்கும் பரவும் சக்கியுள்ள (सत्वन्) பாம்பைப்போல் சீறும்மணிதர்களையுடையவன்.எவனோ सवथ

பாம்பைப்போல் நீண்ட தொடையுள்ள சுய: ஓர் தேசம் -हन् (हा) கருடன். இந்திரன்

अहिकः पु துருவ நக்ஷத்திரம். குருட்டுப்பாம்பு.(स-अதில்)இத்தனை நாள் நீடிக்கிற. का இலவமரம்

अहिंसान वि ஹிம்ஸிக்காத.

अहिंस्र न ஸாதுவாயிருத்தல் स्रा பெருங்களாச் செடி

अहिंडुका स्त्री ஒருவிதச் சிறு விஷ ஜந்து

अहितं न உணவு -नामन् वि ஒப்படைக்க ஒரு பெயரையுங் குறிக்காத -हितं நன்மையுங் கெடுதியும்

अहीन त्रि பலநாள் நீடிக்கிற नः, नं நெடுநாள் யாகம். பெரிய பாம்பு. வாஸுகி -गुः ஓர் ஸூர்ய வம்சத்தரசன்·वादिन् சாக்ஷி சொல்லத் திறமையற்றவன்

अहीरः पु பசுமாட்டுக்காரன்

अहीरणिः पु இருதலைப் பாம்பு

अहीश्रवः पु விரோதி

अहु वि குறுகலான. பரவுகிற

अहुतः पु காணிக்கை, பலியை யடையாதவன் तः ஜபம். அத்யயனம் -अद् யக்யத்தை யுண்ணாத, பங்கடையாத

अहृणान वि கோபியாத. சிநேகமான =णीयमान சம்மதிக்கிற.

अहृदय वि ஹிருதயமில்லாத: கவனியாத

अहे अ ஆச்சரியம், நிந்தை, துயரம், பிரிவு ஸூசகம்.

अहेल(ड)त् , हेडमान त्रि இஷ்டமுள்ள. சம்மதிக்கிற.

अहेरुः पु தண்ணி முட்டாங்கிழங்கு

अहो अ துயரத்தோடு கூடின) வியப்பு. துயரம், துதி, நிந்தை, பொறுமை, கூப்பிடல், திருப்தி, களைப்பு, சந்தேகம், தயை, பாதபூரணம் ஸூசகம். -पुरुषिका கர்வத்தினால் தனக்குத் தடங்கலில்லாத ஸாமர்த்திய முண்டென நினைத்தல்

अहोबत अ தயை, துக்கம், அழைத்தல் ஸூசகம்.

अहो, हि अ ஆச்சரிய ஸூசகம்

अह्न (ஸமாஸத்தில், கடைசியில் வரும்) अहन्ल் பார்க்கவும்

अह्नवाय्य वि ஒளிக்காத. மறைக்க, ஒதுக்கக்கூடாத.

अह्नाय अ உடனே. விரைவில்

अहय, याण वि வெட்கங்கெட்ட. குண்டு தைரியமுள்ள

अंहि वि பணம் நிறைந்த. கொழுத்த. நன்கு கற்றுணர்ந்த

अह्रीक वि வெட்கங்கெட்ட कः பௌத்த ஸந்நியாசி

अह्रुत वि தட்டாத. தடுமாடாத. தளும்பாத. கோணியிராத
ःसु நேர்மையான தோற்றம்

अह्लल वि ஆடாத. உறுதியான ला சேராங்கொட்டை மரம்

अंह् । आ போ. புறப்படு. णिच् அனுப்பு. பேசு. விளங்கு

अंहुर वि அசைகிற

अंहूरण, अंहोयु वि உபத்திரவிக்கிற

अंहतिः, ती स्त्री தானம். மனக்கவலை

अंहस् न हः, हसी பாவம். „ -पतिः அதிக மாஸம்

अंहितिः, ती स्त्री தானம். விடுதல். ரோகம்

अंहु न மனக்கவலை. குற்றம். பாவம். யோனி. -भेद, दी யோ
னிப்பிளவுள்ள

अंह्रिः पु பாதம். வேர் எண் 4.-पः மரம் -स्कंधः மேற்குதிகால்

## आ

आ अ ஸம்மதி (ஆம், வாஸ்தவம்), தயை, வருத்தம், ஞாப
கம், அழைத்தல், ஆனல், உம்,பாத பூரணம்,அருகே,
நோக்கி,எல்லா பக்கங்களிலிருந்தும், சுற்றிலும், வரை
யில், முதற்கொண்டு, ஒன்றிலிருந்து, (விசேஷணத்
தில்) குறைவு आपांडुर (வினையில்) விரோதம் (आगं)
ஸூசகம்.

आः पु பிரம்மா. பாரம். பரிதாபம். இருப்பிடம். ஜலம். பானே. ஆக்ஷேபம். கருத்து. எரசலான வஸ்து. உண்டாதல் स्त्री லக்ஷ்மி. பார்வதி. யாகம்

आकरः पु (कृ) சுரங்கம். அல ஒன்றின் விசேஷ உத்பத்தி ஹேது. திரட்சி. இனம். ஓர் தேசம். மஹா பாஷ்யம். மிகச் சிறந்த

आकरिकः पु சுரங்கத்தை மேற்பார்வையிடுமதிகாரி

आकरिन् वि நற்பிறவியான. சுரங்கத்திலுண்டான லோஹ ஸம்பந்தமான

आकर्षः पु (कृष्) விலகல். மயக்கல்.மோஹம். நரம்புப் பிடிப்பு. சொக்கட்டான் காய். சூதாடல், அப்பலகை. இந்திரியம். காந்தம். உரை, மாற்றுக்கல்.

आकर्षक वि மயக்குகிற. மனதையிழுக்கிற कः காந்தம். ஓர்லீலே

आकर्षणं न துர்ப்புத்தி யுண்டாக்குதல். णी பிடுங்க ஆயுதம். தேகத்தின் மேல் முத்திரை. தொரடு = आकर्षिणी

आकल् 10 प கைப்பற்று. கட்டு. கட்டிப்போடு,குலுக்கு. எறி. ஒப்புவி. அள.யோசி. மதி. எண். அறி.

आकलनं न இச்சை. விசாரித்தல். அறிதல். கணக்கிடல்.

आकल्पः पु அலங்காரம். உடை. நோய். அதிகப்படுத்தல். ஆட்டத்தில் வரும் வேஷம்.

आकल्पकः पु இழத்தல். துயரத்தோடு நினைத்தல். சோர்வடைதல். ஞாபகந்தவறல். கணு. இருள். களிப்பு

आकल्यं न நோய்.

आकषः पु உரைகல் [आकषिक

आकषक वि வெட்டுகிற. தேய்க்கிற. உரைக்கிற.பரீக்ஷிக்கிற =

आकसनं न மயிர்க்கூச்சம்

आक(स्म)स्मिक वि (की स्त्री) தற்செயலாயுண்டான.

आकांक्ष । उ இச்சி. எதிர் பார். ஓரிடத்தை அடையமுயல்

அர்த்த பூர்த்திக்காக சொற்கள்) தேவையோடிரு.
आकांक्षा स्त्री இச்சை. அர்த்த பூர்த்திக்குப் பதம் வரல். நோக்கிப் பார்த்தல். பதத்தின்) கருத்து. விசாரித்தல்
आकांक्ष्यं न அர்த்த பூர்த்திக்குப் பதங்கள் தருவிக்கவேண்டிய ஆவச்யகத்வம்
आकायः पु சிதாக்கினி. சிதை. வீடு. சவம்புதைக்குமிடம்.
आकाय्य त्रि இச்சிக்கத்தகுந்த. எவ்விதத்திலும் மெச்சத்தகுந்த
आकारः पु (कृ) உருவம். சாயல். உள் கருத்தைக் காட்டும் முகக்குறிப்பு. ஸங்கேதம். ஐக்கியம். ஆ எழுத்து. அபேதத்தை ஒத்துக்கொள்ளல் -गुप्तिः गोपनं கபடம்.
आका(क)रणं, णा (कृ) சண்டைக்குக்) கூப்பிடல் [முள்ள
आकारवत् वि மூர்த்திகரித்த. உருவமெடுத்த. அங்கலக்ஷண
आकारित वि கூப்பிட்ட. ஒத்துக்கொண்ட. நிர்ப்பந்தித்துக் கேழ்க்கப்பட்ட
आकालः पु சரியான, பிசகானகாலம்
आकालिक वि (की स्त्री) நிலையில்லாத. அகாலத்திலுண்டான
आकालिकी स्त्री மின்னல்
आकाश् । आ பிரகாசி. நோக்கு. ஞாபகம் பிடித்துக்கொள்.
आकाशः, शः पु ஆகாசம். இடைவெளி. பிரம்மம். ஒளி. விளக்கம். சந்து. புள்ளி. சுன்னம் -आनंत्यायतनं அளவில்லாததின் இடம், உலகு-ईशः இந்திரன். காற்றைத்தவிரகதியில்லாதவனான உதவியற்றவன்-कक्षा அடிவானம். பூமியும் ஆகாசமும் தொடும் போல் தோன்றுகிற இடம் -कल्पः பிரம்மம்-गःபக்ஷி-गा, गंगा ஆகாசகங்கை-चमसःசந்திரன் -जननिन् சுவற்றில் சந்து. ஜன்னல். கோட்டையிலிருந்து பீரங்கிகள் சுடுவதற்காகஏற்பட்டதுவாரம் -प्र)दीपः விஷ்ணு, லக்ஷ்மி ப்ரீதியாக கார்த்திகையன்று

ஆகாசத்தில் கோலில் கட்டி உயர்த்தப்படும் விளக்கு. கோல் மேல் விளக்கு. கப்பல்களுக்குஇரவில் அபாயங் காட்டும் விளக்கு -भाषितं ஆகாயத்திலுண்டாகும் சப் தம். நாடகத்தில் ஏதோ பேச்சுபேசப்பட்டுக்கேழ்க் கப்பட்டது போல் பதில் சொல்லப்படும் பேச்சு -मांसी க்ஷுத்ரஜடாமாம்ஸிச்செடி-மூலிஆகாசத்தாமரை-यानं ஆகாயத்தில் செல்லல், செல்லுகிறவன். விமானம்-रक्षिन् पु கோட்டை வெளி அலங்கம், சேனுமுகத்தின் காவலன் -वचनं=भाषितं -वर्त्मन् ஆகாசம். வாயு-வல்லிமரக் கிளைகளின் மீது முளைக்கும் புல்லுருவிக் கொடி -वाणी ஆகாயத்தில் அசரீர வாக்கு -सलिलं மழை. பனி-स्फटिकः ஆகாசத்தில் உண்டாகும் ஓர் பளிங்கு. கல்மழை

आकाशवत् वि கொஞ்சமிடத்தை நிரப்புகிற ஆகாசத்தில்போ
आकाशीय,श्य वि ஆகாச ஸம்பந்தமான आकाशे अ [கிற

आकिंचनं, न्यं न தாரித்திரயம். வறுமை

आकीम् अ இருந்து. தவிர்த்து.

आकीर्ण वि (कृ) பரப்ப, நிரப்பப்பட்ட, நிறைந்த णं கும்பல்

आकुंच् । आ 6 प வளை णिचू சுருக்கு. அமுக்கு. உள்ளுக்குள் வளை. குறை

आकुंचनं न குவித்தல். திருகல். முறுக்கு. கோணல்

आकुल वि நிறைந்த. நிறைக்கப்பட்ட. பாதிக்கப்பட்ட. ஒன் றிர்க்கதீனமான. ஒன்றில் கண்ணுங் கருத்துமாயிருக் கிற. மதிமயங்கின. தலை அவிழ்த்துவிட்டுக் கொண் டிருக்கிற. முரடான. இயற்கைத் தன்மையிலிருந்து பிரிக்கப்பட்ட. பொருந்தாத लः युक्त கோஷம். लं குடியிருக்கப்படுமிடம். अ பிரமித்துக்கொண்டு

आकुलता, त्वं न கூட்டம். பிரமை. தடுமாற்றம்

आकुलयति ना. प. குழப்பு. கோளாறு செய். மதிமயக்கு

आकुलित वि சிக்கிலகப்பட்ட. மங்கின. திருஷ்டிக்குத் தெரி யாமற்பண்ணப்பட்டிருக்கிற. தாறுமாறான. உழப்பட்ட
आकुलिन् पु ஆவாரஞ்செடி. ஸீகு வெல். மயக்கு ஸீபூ மயங்கு
आकुल्यं न பொன்னுவாரை
आकुष्ट वि ஸாராம்சத்தை மாத்திரம் எடுத்தெழுதப்பட்ட
आकूणित वि சுருக்கப்பட்ட. கொஞ்சமான [ति:
आकूतं न உணர்ச்சி. மனோவிகாரம். இச்சை. வியப்பு. கருத்து=
आकृ 8उ 5 प அருகே கொண்டுவா, ஒட்டு. உருவாக்கு णिच् அழை. தூண்டு. போருக்கழை. உண்டு பண். ஒன் றைக் கேள்
आकृतिः स्त्री நல்ல ரூபம். சரீரம். தோற்றம். இனம். மாதிரி குணம் -छात्रा செடி விசேஷம் -मत् மூர்த்திகரித்த. தானே உண்டான.
आकृष् । प 6 उ தனக்காய் இழு. மயக்கு अरु(வில்லை)வளை. வெ ளியெடு. ஒன்றிலிருந்து எடுத்துக்கொள், கடன்வாங்கு. கொண்டுபோகப்படு. மிதந்துபோ. பிடுங்கிக்கொள். வேறு விதியிலிருந்து பதங்கள் சேர்த்துக்கொள். णिच् சேர்த்திழு.
आकृष्टिः स्त्री (கிருஹங்களின்) ஆகர்ஷண சக்தி. -मंत्रः மந் திரத்தால் ஒருவனை வசீகரித்தல்
आकृ 6 प இறை. பரப்பு. மேலே. மூடு. நிரப்பு. குவி. தோண்டு
आके अ அருகே. பக்கத்தில். தூரத்தில்
आकेकर वि கண்களைப்) பாதிமூடின रा स्त्री ஒருவிதப்பார்வை.
आकेनिप वि (கிரணங்களைப்போல்) அணுகுகிற. புத்தியுள்ள.
आकोके(क)रः पु மகரராசி
आकौशलम् न திறமையின்மை [படுத்து.
आक्रंद् । उ = क्रंद् णिच् பறையடித்து தைரியத்தை அதிகப்
आक्रंदः पु அழுகை. யுத்த) கோஷம். தோழன். ரக்ஷகன்

கொடும் யுத்தம். அழுமிடம். இன்னொருவனுக்கு உதவுவதைத் தடுக்கும் அரசன். பக்க தேசத்திற் கடுத்ததேச அரசன். சகோதரன். அழைத்தல்

आक्रंदिक वि அழுகைக்குரல் கேழ்க்குமிடத்திற்கு ஓடுபவன்

आक्रम् । उ நெருங்கு. ஆக்கிரமி. சுவாதீனப்படுத்திக்கொள். பொருந்து. மேலே பரவு. படையெடு. தகை. வெல். மேம்படு. தொடங்கு. உதயமாகு. வெளிவா. ஏறு. (ஸிம்மாஸனம், ஆகாயத்தில் போல்) பொருந்து. (பாரம் போல்) அமுக்கு, சுமத்து. அடை. உடைத்தாயிரு. தொடர். அலட்டு णिच् நுழையச் செய். அறிமுகப்படுத்து

आक्रमः, मणं न சக்தி. உணவு. படிப்பை அடைந்திருத்தல்

आक्रांतिः स्त्री பலம். क्रामकः படையெடுப்பவன்

आक्रीडः, डं न விளையாட்டு. சோலை. உத்தியானவனம்

आक्रुश । प உரத்து) அழு, இரை. நிந்தி. சபி. திட்டு = क्रुष्ट

आक्रोडं, डं पु மார்பு

आक्रोशः, शनं न சபதம். क्रोशक, क्रोष्टृ இரைகிற. பழிப்பவன்.

आक्षकः पु சூதாடுகிறவன் द्यूतिक சூதால் உண்டான

आक्षपणं न உபவாஸம். அதால் சுத்தி செய்துக்கொள்ளல்

आक्षपाटिकः पु சூதாடுமிடத்தில்) நியாயாதிபதி.

आक्षपाद वि (दी स्त्री) கௌதமரால் கற்பிக்கப்பட்ட. दं நியாய சாஸ்திரம் दः தார்க்கீகன்

आक्षर् 10 प திட்டு. பொய்க்குற்றஞ்சாட்டு. பழி. தண்டி

आक्षारः पु வியபிசாரமென்னும்) அபவாதம் = क्षारणं, णा क्षारित वि வியபிசாரத்தால் கணவனும் மனைவியும் பரஸ்பரம் திட்டிக் கொள்ளல்

आक्षि 2 6. प வசி. தங்கு. இரு. பிழைத்திரு. உடைத்தாயிரு

आक्षिक वि (की स्त्री) சொக்கட்டானுடுகிறவன். சூதில் அடை

ப்வன். பெரும்பாச்சிகைகளை உபயோகப்படுத்துபவன். சூதால் அடையப்பட்ட. சூது ஸம்பந்தமான कः ஓர் மரம். क्तं சூதில் அடைந்த, துலைந்த திரவியம். -पणः பந்தயம்

आक्षित् वि (आक्षि) வஸிக்கிற

आक्षिप् 6 उ தள்ளிவிடு. மயக்கு. வசீகரி. பாணத்தால் அடி. சேர்த்திழு. சுருக்கு. குறை. இழுத்துக் கொள். பிடுங்கு. ஒதுக்கு. தூரத்து. தொங்கவிடு. தெரியும்படி வை. ஸம்சி. அவமதி. ஆக்ஷேபி. வருத்து. மறை. மங்கலாக்கு. லங்கி. நிந்தா ஸ்துதியாய்ச் சொல். (காலம்போல்) கழிந்து போ. துடி, குலை स वि ஸமமான

आक्षिप्तिका स्त्री நாடக மேடையை அணுகும் முன் வேஷதாரி சொல்லும் பாட்டு விசேஷம்.

आक्षेपः पु நிந்தை. அபவாதம். இடல். கொடுத்துவைக்கப்பட்டது (பணம், நகைபோல்) விடாமல் தரிக்கிற.

आक्षेपकः पु வேடன். நரம்புப் பிடிப்பு, வலி. இழுப்பு, குலைப்பு

आक्षेपिन् वि குறிப்பானபார்வையோடு இழுத்துக்கொள்ளுகிற. பொருத்துகிற

आक्षीव वि குடித்த, குடிவெறிகொண்ட वः முருங்கை.

आक्षेत्रज्ञं न பாரமார்த்திக க்ஞானமின்மை

आक्षैवज्ञं न பகுத்தறி வின்மை.

अक्षोटः, डः पु மலை உவ்வைக்காய். கடுக்காய்

आक्षोदः, दनं न வேட்டையாடல்

आक्षयत् वि (நாட்களைப்போல்) முடிவை அடைவிக்கிற. ஆதித்தியாள், அங்கிரஸர்களுக்குச் செய்யப்படும் அயனச்சடங்கு முடியும் சில தினங்கள்.

आखः (न) पु மண்வெட்டி

आखण्ड वि (தோண்டகல்லைப்போல்) கடினமான लः இந்திரன்

आखनिकः पु குழி) தோண்டுவோன். சுரங்கமறுப்போன். ஓட்

டன். எலி. பெருச்சாளி.பன்றி.திருடன்.மண்வெட்டி

**आखनिकबकः** पु நாரைக்கும் சுண்டெலிக்கு முள்ள தாரதம் மியம். அலு இலேத்தவனிடம் தன் சௌர்யத்தைக்காட்டும் வீரன். தோண்டுகிறவன். மண்வெட்டி. திருடன். பன்றி. பெருச்சாளி

**आखरः** पु மண்வெட்டி. குழி தோண்டுபவன். மிருகத்திற்கு உறை, லாயம்.

**आखातं, तः** पु இயற்கையான தடாகம்.குடாக்கடல் [வெட்டி

**आखानः** पु சுற்றித்தோண்டல்.தோண்டுகிறவன். பெரியமண்

**आखुः** पु எலி. சுண்டெலி. காட்டெலி. பெருச்சாளி. பன்றி. திருடன். லோபி. மண்வெட்டி. தேவதாள விருக்ஷம். -उत्करः காட்டெலி வலேயின் மண்மேடு-उत्थ சுண்டெலியினின்றும் உண்டான रथः எலிகளின் கூட்டம், தோற்றம் -करीषं எலிவலே -कर्ण) पर्णिका, कर्णी, पर्णी எலிச்செவிசெடி -गः, पत्रः, रथः, वाहनः விஞயகர் --घातः எலிபிடிக்கிறவன், வில்லி -पाषाणः எலிபாஷாணம்.ஓர் லோசஹம். காந்தக்கல்-भुज्, भुजः பூனே -विषघ्नी, हा தேவதாள விருக்ஷம். ஒருவகைக் கொடி [பான தரை

**आखेटः** पु வேட்டை. பயம் -शीर्षकं சுரங்கம். குகை. மழமழப்

**आखेटक** वि பயமுறுத்துகிற. வேட்டையாடுகிற. कं வேட்டை कः வேடன்

**आखेटिक** वि வேட்டையிற்கைதேர்ந்த. பயங்கரமான कः வேடன். வேட்டை நாய்.

**आखोटः** पु கடுக்காய்மரம். உவ்வைக்காய்

**आख्या** 2 प சொல். அறிவி. தெரிவி. விவரி.பேர்வை. கவனி எண். ஒப்பி. णिच् சொல்லச் சொல்

**आख्या** स्त्री பெயர் रयं பானே, தவலே முதலிய வற்றில் சமைக்கப்படும் மாவு பணியாரம்

**आख्यात** वि வேற்றுமையுரு பேற்றப்பட்ட. தாது ரூபங்களு ரைக்கப்பட்ட. तं வினைச் சொல்

**आख्यातिः** स्त्री பிரகடனம். பெயர். கீர்த்தி. அறிவிப்பு.

**आख्यातृ** पु அறிவிப்பவன். போதகன். குரு. **ख्येय** वि சொல் லத் தக்க

**आख्यानं** न பாரதம் போன்ற இதிஹாஸம். புராண) கதை பதில். காண்டம். விருத்தாந்த உதாஹரணம். பேத குணம்

**आख्यानकं** न की உபாக்கியானம். உபகதை. की ஓர்விருத்தம்

**आख्यायक** वि அறிவிக்கிற कः தூதன். செய்தி, கதைகூறுபவன்

**आख्यायिका** स्त्री சரித்திரம். கதை. கத்யம். यिन् वि சொல்லுகிற

**आगं** । प வா. அணுகு. வந்துசேர். எட்டு. அடை. விதிக்கு ஆளாகு. பரிசயம் கொள். णिच् அடைவி. சுமந்துச்செல். வருகையைத் தெரிவி. அறிவி. படி. அறிந்துகொள். காத்திரு.

**आगं** वि எதிர் பாராத त्वं எதிர்பாராத ஸம்பவம்.

**आगत** वि நேர்ந்த. வசிக்கிற. तं வருகை. சம்பவம்

**आगतिः** स्त्री வருகை. வரும்படி. திரும்பல். உத்பத்திஸம்பவம்

**आगंतव्य** वि வரக்கூடுமான. அவசியம்வருகிற. அடையவாதக்க.

**आगंतु** वि வருகிற. வழிதப்பின. எதிர்பாராத. வெளியிலிருந்து வந்த तुः புதுமனிதன். விருந்தாளி -ज தற்செயலாயுண்டான

**आगंतुक** वि (का, की स्त्री) தானுகவே வந்த. வழிதப்பிப்போன. தெய்வீகமான. புதிதாய்க் கல்ப்பித்துச் சேர்க்கப் பட்ட. कः புதிதாய் ஏற்பட்ட பாடம். அழைக்காமல். பாத்திய மில்லாமல் புதிதாய் வந்தவன்

**आगमः** पु வருகை. தோற்றம். வித்தை, பணம் ஸம்பாத்தியம். உத்பத்தி. (நீர்ப்) போக்கு. எழுத்துமூல சாக்ஷி

யம், ரசிது. அறிவு.வரும்படி.தீர்வை.நியாயமான ஸம்பாதனம்.சொத்துஅதிகமாதல்.சாஸ்திரம்.சாஸ்திரப் படிப்பு. வேதம். நையாயிகர்களின் 4ல் கடைசியான சப்த ஆப்த வாக்ய ப்ரமாணம். உபஸர்க்கம். ப்ருகிருதிப்பிரத்யயம். விகுதி இடையில்ஓர்எழுத்தைச் சேர்த்தல். ஸந்தியில் அதிகமாய்ச் சேர்க்கிற வெழுத்து. கோட்பாடு.தஸ்தாவேஜு.சிவ,சக்தி பூஜா தந்திரசாஸ்திரம். ஆற்றின் வாய். எண் 28 -आवर्त செடி விசேஷம் -निरपेक्ष பத்திர சுத்தியுள்ள -नीत படித்த. பரீக்ஷிக்கப்பட்ட -वृद्ध वि மிகவும் கற்றறிந்த. மஹாவித்வான் -वेदिन् சங்கராசாரியரின் குருவான கௌடபாதர் -साक्षेय ரசிதால் ஊஹிக்கப்பட்ட

**आगमवत्** वि விருத்தியையுடைய. புணர நெருங்கின

**आगमन** न வரல். திரும்பல். ஸ்திரீயைப் புணர நெருங்கல்

**आगमापायिन्** वि பிறப்பிறப்பையுடைய

**आग(गा)मिन्** वि வரப்போகிற. நேரிடப்போகிற. படித்த. விருத்தி, அதிகப்படியான சேர்க்கையையுடைய.

**आगमिष्ठ** वि மிக வேகமாய், சந்தோஷத்துடன் வருகிற.

**आगामिक** वि (की) எதிர்காலஸம்பந்தமான. நேரப்போகிற

**आगामुक** वि வருகிற. எதிர் காலமான **गम्य** वि வரத்தக்க.

**आगर:** पु அமாவாஸை

**आगलित** वि சோர்ந்திருக்கிற. சோகிக்கிற. தொங்கின.

**आगवीन** वि பசுக்கள் வருகிற வரையில் வேலையாயிருக்கிற

**आगस्** न குற்றம். அபராதம். பாவம். தண்டனை -कृत् वि குற்றவாளியான

**आगस्ती** स्त्री தெற்கு -य அகஸ்திஸம்பந்தமான = आगस्त्यायन

**आगस्त्य** वि தெற்கான. அகஸ்தியர், அகத்தி ஸம்பந்தமான.

**आगस्त्य:** स्यी அகஸ்திய ஸந்ததி, அகஸ்திய கோத்திரத்தார்

आगाध वि मிக ஆழமான அல அடைய, அளக்கமுடியாத
आगारं न வீடு -गोधिका பல்லி -धूमः வீட்டுப் புகை. ஓர் செடி
-दाहः வீட்டைக் கொளுத்தல். அதாலேற்பட்டகுற்றம்.
आगुर् 6 आ இணங்கு. வாக்களி. ஆகுரைச் சொல்.
आगुर् स्त्री பிரதிக்ஞை. யக்யத்தில் ரித்விக்குகள் சொல்லும் விதிகள்
आगुरव वि (वी स्त्री) அகில் ஸம்பந்தமான. அதிக பாரமான
आगु(गू)रणं न ஆகுரைச் சொல்லல். ரஹஸ்யயுக்தி, யோசனே
आगूर्ण, र्तं वि சொல்லப்பட்ட र्णं,र्तं முயற்சி गूः வாக்களிப்பு.
आगूर्तिन् वि ஆகுரைச் சொல்லுகிற,செய்கிற. விடா முயற்சி யுள்ள.
आगै । प ஒன்றைக் குறித்துப் பாடு. பாடியடை गातृ वि
आग्नायी स्त्री அக்கினி பார்யை
आग्नावैष्णव वि அக்னி, விஷ்ணு ஸம்பந்தமான. अग्नाविष्णू என்னும் பதமுடைய (அனுவாகம்போல்)
आग्निपद वि அடுப்பண்டை செய்யப்படவேண்டிய, அடுப்பில் போடவேண்டிய [தவன்
आग्निष्टोमिक वि அக்னிஷ்டோமம் சொல்லுகிறவன், தெரிந்
आग्नीध्र वि அக்கினியை மூட்டும் யக்யபுரோஹிதன் ஸம்பந்தமான ध्रं யக்யாக்கினி மூட்டப்படுமிடம் அக்னீத்ரனின் தொழில். ध्रा யக்யாக்கினியின் ரக்ஷணம் ध्रः யக்யாக்கினி மூட்டுபவன்
आग्नीध्रीय वि ஆக்கினீத்திரத்திலிருக்கிற यः ஆக்கினீத்திரத்திலிருக்கும் அக்கினி, அக்கினி ஸ்தானம்
आग्नीध्रय वि ஆக்கினீத்திரனின் ஸம்பந்தான ध्रया அக்கினி ஸ்தானம்.
आग्नेय वि(यी स्त्री) அக்கினி ஸம்பந்தமான. அனலுள்ள. அக்கினிக்குக் கொடுக்க, நிவேதனம் செய்யப்பட்ட. தீ

போன்ற. ஜாடராக்கினியை, ஜீர்ணத்தை விருத்தி பண்ணுகிற. (நெய்போல்) தீயைப் பிரகாசிப்பிக்கிற. அக்கினியின் ஸம்பந்தமான यः சுப்பிரம்மணியர். அகஸ்தியர். பாணினி. ஓர் தேசம். அக்கினி உபாஸகன். ஸ்வாஹாவுக்கு ஹோமம் यी அக்கினியின் பார்யை. தென் கிழக்கு. பிரதமை. यं கிருத்திகை. பொன். ரத்தம். அரக்கு. நெய். அக்கினியினால் ஆளப்படும் ஓர்பாணம். அக்கினி பூஜைக்கு வேண்டிய மந்திரம். அக்கினியின் ஸந்ததியைச் சேர்ந்தவன். உடம்பில் பஸ்மத்தைப் பூசிக்கொண்டு முழுகல். ஓர் புழு -कीटः அக்கினியை நோக்கிப் பறந்தோடும் பூச்சி

**आग्न्याधानिकी** स्त्री பிராம்மணர்களுக்குக் கொடுக்கப்படும் தக்ஷிணை, ஸம்பாவனை.

**आग्रभोजनिकः** पु போஜனத்தில் முதலில் உட்கார யோக்கியதையுள்ள பிராம்மணன்

**आग्रयणः**पु அக்கினிஷ்டோமயக்யத்தில்முதல்ஸோமாஹுதி. ஓர் அக்கனியின் ரூபம். பாகக் காலம் णी முதல் பயனை மார்கழிமாத அறுவடையில் செய்ய வருவதான ஓர் நைவேத்தியம்

**आग्रह्** 9 उ கைப்பற்று. (கடிவாளத்தைப்போல்) இழுத்துப் பிடி. பிடிவாதமாயிரு

**आग्रहः** पु விசேஷப்பற்று. ஹடம். பிடிவாதம். அனுக்கிரஹம். கிரஹித்தல். மேல் விழுதல். தாக்கல். மேன்மை. தைரியம்.

**आग्रहिका** स्त्री தயை. உதவி

**आग्रहायणः** पु மார்கழி णी அப்பருவம். பாகயக்ய விசேஷம். மிருகசீர்ஷம்

**आग्रहायण(णि)क** त्रि (கடன் போல்) அன்று கொடுக்கப்பட

वेण्டிய. க: மார்கழி
आग्रहारिक वि (की स्त्री) பிராம்மணர்களுக்கு விடப்பட்டமான்யத்தைத் தான் அனுபவிப்பவன்
आग्रिय वि தன் கூட்டத்திற் சிறந்த
आग्रेयः पु மூத்தவன் यी स्त्री மூத்தவள்
आघट्ट 10 प மோது. தொடு. அசை ट्टित वि
आघट्टक वि அசைகிற क: சிவப்பு நாயுருவிச்செடி
आघट्टना स्त्री குலுக்கல். உரைப்பு. = नं
आघर्षणी स्त्री (घृषू) மயிர்க்கற்றை (ப்ரஷ். ரப்பர்). எழுத்து முதலிய வற்றைத்துடைக்கும் ஸாதனம்
आघाटः पु நாயுருவிச்செடி. எல்லை. கொலை வாத்தியம். கைத்தாளம். பிள்ளைகள் விளையாடும் கிலுகிலுப்பை
आघाटिः पु स्त्री நானு வாத்தியங்கள்.
आघातः पु (हन्) அடி. கொலை. காயம். அடிப்பவன். தீங்கு. துயரம். ஆடு மாடடிக்கும் தொட்டி. மூத்திரக்கட்டு
आघातनं न அடித்தல். கொல்லல். ஆடுமாடடிக்குந் தொட்டி
आघारः पु (घृ) நெய். நெய்யை அக்கினியில் தெளித்தல்
आघुषू । प இரை. துதி. கவனி.சப்தம் கேழ்க்கும்படி செய்து கொள் 10प णिच् பஹிரங்கப்படுத்து. ஸதாமுறையிடு
आघूर्ण । आ 6 प சுற்று. சுழல். கிறு கிறு. (கண்விழிகளை) உருட்டு
आघृ 10 प णिच् கொட்டு. தெளி.
आघृणि वि ஜ்வலிக்கிற விசேஷஐச்வர்யமுடைய णिः ஸூரியன்
आघोषः पु பிரார்த்தனை घोषणं, णा பொது அறிவிப்பு
आघ्रात त्रि முகரப்பட்ட. திருப்தியடைந்த. தெவிட்டின. மேம்பட்ட.
आंक्षी स्त्री வாத்தியம். ஒரு வித சதங்கையில்லாத பறை
आंकुशिकः पु அங்குசம், தாற்றுக்கோலால் குத்துபவன்
आंग वि அங்க, நாடகத்தில் அமுக்கிய நாடகர்கள், வேத

பாக ஸம்பந்தமான. அங்க தேசத்திற் பிறந்த, உண்
டான गः அங்கதேச இளவரசன் र्ग मென்மையான
சரீரம். [அரசன்
आंगक वि அங்க தேசத்திலுண்டான कः அங்க தேசத்தான்,
आंगविद्य वि ஸாமுத்ரிகா சாஸ்திரம் தெரிந்த द्यः அந்தநூல்
आंगारं न நெருப்புத்தணல் கூட்டம் [மடிப்பவன்
आंगिक वि சரீர ஸம்பந்தமான. அபிநயமுள்ள कः மத்தள
आंगिरस वि (सी स्त्री) அங்கிரஸின் ஸம்பந்தமுள்ள, ஸந்ததி
யான सः அங்கிரஸின் பிள்ளை பிரஹஸ்பதி. ஓர் அதர்
வண வேத பாகம். ஜீவன். தொழிலினுல் க்ஷத்திரியன்.
आंगूषः पु துதி, மந்திரம் [ஓர் ஹஸ்த. புஷ்யம்
आचक्ष 2 आ சொல். அறிவி. கற்பி. கூப்பிடு. பரிசயம் செய்து
கொள், வை. வரப்போவதைச் சொல். முன்னதா
आचक्षुस् पु பண்டிதன் [கச் சொல்
आचतुरं अ நான்காம் தலை முறை வரையில்
आचतुर्यं न மட்டித்தனம். மந்தம் [ணிச்சு
आचम् । प உறி. நக்கு. வாயை அலம்பு. உள்வாங்கிக்கொள்
आचमः, मनं न ஆசமனம். அந்நீர். தொண்டையை யலம்பல்.
கொப்பளித்தல். குருவேர். मनकं தம்பலப்படிகம்.
आचमनीयं न ஆசமனத்திற்கு ஜலம். கொப்பளிக்கும் நீர்,
आचयक त्रि திரட்டுவதில் திறமையுள்ள [மருந்து
आचर् । प. அனுஷ்டி. அப்பியஸி. நடி. நடத்து. வழக்கத்
தைக் கொண்டாடு. அணுகு. அடை. ஆச்ரி. கூடிவஸி.
அரி, தின். காண்பித்துக்கொடு.
आचरणं न சிஷ்டாசாரம். நடத்தை. வழக்கம். வரல். வண்டி
आचरणीय, चरितव्य, चर्य वि சரியான. அனுஷ்டிக்கத்தகுந்த.
आ^च^रण्यति ना. प. (பாசி போல்) தானே போ, பரவி அணுகு.
आचरित वि வாடிக்கையான. விதிப்படியான तं குணம். கடன்
கொடுத்ததை அடைய 5ல்: உபாயம்

आचांत वि (நீரைப் போல்) கொப்புளிக்கிற, உறிந்த. அதற்குத் தகுந்த. ஆசமனம் பண்ணிமுடித்த

आचामः पु ஆசமனம். வடித்தகஞ்சி मक ஆசமனம்செய்கிற.

आचामनकं न தம்பலப் படிகம், चाम्यं ஆசமனத்திற்கு ஜலம்

आचारः पु நன்) நடத்தை. குணம். சீலம். பழக்கம். சிஷ்ட, ஸம்ப்ரதாய) வழக்கம். முறை. விதி. நியாயம். வழக்கமான வந்தனம். உணவு. பத்தியம் -अंग ஜைனர்களின் நூல் விசேஷம்.-तंत्र பௌத்தர்களின் 4ல் 1 தந்திரம் -दीपः ஆசார முறைகளைக் கூறும் ஓர் நூல். மங்களாரதி தீபம் -धूमग्रहणं (ஆத்ம ஸமாரோபணத்தில் போல்) புகையை உட்கொள்ளல் -पूत அநுஷ்டானத்தால் சுத்தனை -लाजः ब அரசன், பெரியவர்களின் மேல் மரியாதையைக் காட்டத் தெறிக்கும் பொறி -वर्जित, हीन वि நியாய விரோதமான. விராத்தியனை -वेदी ஆர்யர்களின் புண்ணிய பூமியான ஆர்யா வர்த்தம் -वत् वि ஆசார சீலனை.

आचारिक वि விதிவத்தான कं ஆரோக்கிய சாஸ்திரம்.

आचारिन् त्रि சாஸ்திர விதிகளை அநுஷ்டிக்கிற

आचारी स्त्री சக்கிரவர்த்திக் கீரை.

आचार्यः पु குரு. ஆசார்யன். பிரம்மோபதேசம் செய்பவன். ஸம்ப்ரதாயப் பிரசாரகன். யாகத்தில் குரு, உபதேசகன். துரோணுசார் (பெயர்களின் முன்) பூஜ்ய, பண்டித ஸூசகம் र्या பெண் வாத்தியார் -करणं குருவாய் நடித்தல் देवः யாருடைய குரு தெய்வமோ -भोगीन குருவுக்குப் பிரியமான -मिश्र பூஜ்யனை.

आचार्यक त्रि குருவினிடமிருந்து வந்த. कं உபதேசம். ஆசார்யனின் பாண்டித்தியம் यत्वं, यता குருவின் தன்மை.

आचार्यानी स्त्री ஆசார்யனின் பத்னி

आचि 5 उ திரட்டு. நிரப்பு. பரப்பு. பாரமேற்று.
आचित वि पु கயிற்றால் கட்ட,கோர்க்கப்பட்ட. வண்டிபாரம் 10 பார எடை (80,000 தோலா 2000 பலம்)
आचितिक वि 10 பார ஸமமுள்ள, சுமக்கிற, சமைக்கிற.
आचीर्ण वि விழுங்க, தின்று விடப்பட்ட
आचितीनं न பத்து பாரமுள்ளது
आचूषणं न உறிஞ்சுதல். கன்றுக்குட்டி முதலியவை ஊட்டுதல். வைத்தியத்தில் கண்ணாடிக் கிண்ணங்களைத் தோல் மேல் வைத்தல்
आच्छद् 10 प மூடு. மறை. உடு. உடுத்து. स्त्री மூடி. உறை. ரக்ஷித்துக்கொள்ள, மறைக்க உபாயம்
आच्छाद: पु உடை. दक वि மூடுகிற. மறைக்கிற -दिन् वि
आच्छादनं न மூடி. உறை. உடை. உத்தரீயம். போர்வை. மறைந்து விடல். கூறையின் வலிச்சல். அணுகல்
आच्छा(च्छु)क: पु விருக்ஷ விசேஷம்
आच्छाय: पु ஒருவிதமான குதிரை நடை.
आच्छिद् 7 उ உடை. கிழித்துத் தள். துண்டு துண்டாய் வெட்டு. பிடுங்கிக்கொண்டு போய் விடு. அலக்ஷியம் செய். தவிர். பிடுங்கியெறி छेद:. दनं
आच्छुरित वि பிசிறிக் கொண்டிருக்கிற. சொறியப்பட்ட. கோபமூட்டப்பட்ட तं கை நகங்களை ஒன்றின்மீதொன்று தேய்த்துச் சப்த முண்டாக்குதல். கையினால் தவடை முதலியவற்றைக் குத்திக் கொண்டு நகைத்தல். பெருநகை. அட்டகாஸம் = तकं
आच्छोटनं न விரல்களைச் சொடுக்கல்.
आच्छोदनं न வேட்டை
आज वि வெள்ளாட்டு ஸம்பந்தமான. ज: ராஜாளி जं நெய்.
आजकं न வெள்ளாட்டு மந்தை [எறிதல்

आजकारः पु பரமசிவனின் ரிஷபம்
आजगर वि (री स्त्री) மலைப்பாம்பின் ஸம்பந்தமான பாரதத்தில் ஓர் அத்தியாயம்.
आजगवं न சிவதனுஸ். சிவனது போன்ற உறுதியான வில்.
आजन् 5 आ பிற. உண்டாகு. உண்டாக்கு. जातिःபிறவி.
आजननं न உயர் பிறவி. நற்குலம். अ பிறந்தது முதல்=आजन्म, न्मं अ -सुरभिपत्रः செடி விசேஷம்
आजयनं न (जि) வெற்றி. சண்டை. அடைதல்
आजलोमी स्त्री ஒரு வித அவிரி
आजानः पु உத்பத்தி ஹேது. பிறவி. नं பிறந்த விடம். अ ஸிருஷ்டிகாலம் முதல் -ज ஸிருஷ்டி முதலிலேயே பிறந்திருக்கிற. -देवः பிறவி முதலே தேவனான
आजानिः स्त्री பிறப்பிப்பவள். தாய். பிறவி.
आजानेय वि (यी स्त्री) நற்பிறவியான. यः ஜாதிக்குதிரை
आजानेरय वि நல்ல ஜாதி, குலமான.
आजमीढ वि அஜ்மீர் தேசத்திலுண்டான ढाः அவ்வரசர்கள்
आजवनं न மேல் விழல் தகைத்தல். எதிர்த்தல்.
आजानु अ முழங்கால்கள் வரையில்
आजिः पु स्त्री இடைவிடாச்) சண்டை. பந்தயத்திற்காகச் சண்டை செய்தல். பந்தயம் ஓடும் நிலம். மேடு பள்ளமின்றி ஸம பூபாகம். போர்க்களம். எல்லை. பாதை. க்ஷணகாலம். தூஷணம். திட்டு. முடித்தல். அநிருத்தன். யமன். தசரதன். செல்லல் -कृत् वि வெகுமதிக்காக ஓடுகிற -तुर वि சண்டைகளில் ஜயிக்கிற
आजिगीषु वि மேம்பட, முந்த ஆசைப்படுகிற
आजिग्रह वि பெறுபவன். கைப்பற்றுபவன்
आजिज्ञासेन्य वि விமர்சிக்கத் தகுந்த. न्याः ஓர் வேதரிக்
आजिनं न தோல் கும்பல்

आजिरि वि வெளிவாசலில் இருக்கிற, நிலை கொண்ட
आजिरेय वि வெளிவாசலிலுண்டான, ஸம்பந்தப்பட்ட
आजीव् । प ஒன்றால் பிழைத்திரு. ஒன்றை அனுபவி.
आजीवः, वनं பிழைப்பு ஜீவனோபாயம் वः ஓர்ஜைனஸந்நியாசி.
आजीवकः पु பிச்சைக்காரன். எங்கும்சம்பாதித்துபிழைபவன்
आजाविका स्त्री பிழைப்பு.विन् பிழைப்புள்ள. ஆண்டிவிசேஷம்
आजीव्य वि அப்பியவஸிக்கத் தகுந்த.பிழைக்கயோக்கியமான, ஹேதுவான. வசிக்கத்தக்க. செழிப்பான व्यं ஜீவனாதாரம்
आजुर् स्त्री जू स्त्री கூலியின்றி வேலை செய்கிற. அமிஞ்சி வேலைக்காரன். நரகவாஸம் விதிக்கப்பட்டிருக்கிற
आज्ञप्तिः स्त्री கட்டளை. -हर செய்தி சொல்லுகிற.
आज्ञा 9 प அறி णिच् கட்டளையிடு. நம்பும்படிச் சொல்
आज्ञा स्त्री கட்டளை. உத்தரவு -संपादक, वह அடங்கி நடக்கிற. -कर, कारिन् சொன்னதைச் செய்கிற रः வேலைக்காரன் -करत्वमाधिगम्य கீழ்ப்படியும் வேலைக்காரனாயிருக்கிற-चक्र செங்கோல் தந்திர சாஸ்திர 6ல் 1. கூடமான, ரஹஸ்ய சக்கிரம் -पत्रं எழுத்து மூலக் கட்டளை. ராஜாக்கினை. தாக்கீது. -प्रतिघातः, भंगः அடங்காமை. ராஜ விரோத கலஹம்.
आज्ञातृ वि ஆக்ஞாபித்தவன் — ज्ञापकः ज्ञात वि
आज्ञानं न பார்த்தல். கவனித்தல். தெரிந்து கொள்ளல்.
आज्ञापक वि கட்டளையிடுகிற. पत्रं கட்டளை. அறிவிப்பு.
आज्ञायिन् वि பார்க்கிற. அறிகிற. கிரஹிக்கிற.
आज्यं न நெய். நெய்க்குப் பதிலாகஉபயோகப்படும்எண்ணெ. பால். ஓர் ஸாமகானம். கற்பூரத் தைலம் என்கிற தேவதாரு மரப்பிசின் -दोहं ஸாமகனால் சொல்லப்பட வேண்டிய ஓர் மந்திரம் -पाः புலஸ்திய புத்திரர்களும்

வைசிய வகுப்பின் முன்னோர்களுமான ஓர் பிதிர் வர்க்கம் -भज्ञ अक्கினி. தேவதை -वारि நெய்க் கடலான 7ல் 1 ஸமுத்திரம்.

आंचनं न தேகத்திலிருந்து முட்களை, பாணங்களைப் பிடுங்கல்

आंछ् । प நீட்டு. பரப்பு. நேராக்கு. சரிப்படுத்து (எலும்பை)

आंछनं न நீட்டியோ, இழுத்தோ, வளைத்தோ சரியான இடத்தில் (எலும்பைக்)கொண்டுவந்துபொருத்துதல்

आंजन वि தைலம் பூசுகிற. மை ஸம்பந்தமான. नं கண்)மை. கொழுப்பு. न: ஹனுமார், மாருதி

आंजनिक्यं न மைகள் தயாரிக்க உபயோகப்படுவது

आंजनी स्त्री கண்ணுக்கு) மை -कारी மையிடுபவள், தயாரிப்பவள்

आंजनेय: पु ஹனுமார்

आंजलिक्यं न பிரார்த்தனை, வேண்டுகோளில் கைகூப்பல்

आंज(जि)नेय: पु ஒருவிதப் பல்லி

आटक: पु ஊர்க்குருவி. குழமிக்கடுவம் பக்ஷி का தோல் தருத்தி

आटरूष: पु ஆடாதோடைச் செடி

आटविक: पु வனவாஸி. காட்டுக்கதிகாரி. வழி) உண்டாக்குவோன், சீர்படுத்துபவன். ஆறுவிதப் படைகளிலொன்று

आटवी स्त्री தெற்கே ஓர் யவனர்களின் பட்டணம்

आटि: पु தராவு பக்ஷி. மீன் வகை-मुख, ख: ரணவைத்தியஆயுதம்

आटिक, क्य वि பிரயாணத்திலிருக்கிற की வெளியே போகத் தகுந்தவன்.

आटीकनं न கன்றுக்குட்டியின் துள்ளல்

आटीकर: पु எருது

आटीत: पु படுகரணை

आटोप: पु அஹங்காரம். வயிற்று) உப்பலம். வீக்கம்.பரவல்

आडंबर: पु கர்வம். டம்பம், ரணபேரி (யடித்தல். தொடக்

कम्. காம, க்ரோத ஆவேசம். இன்பம். மேக கர்ஜனை யானையின் வீரிடல். கண்ணிமை. யுத்த கோஷம். ं உடம்பைத் துடைத்தல் -रिन् वि

आडि: स्त्री தராவு பக்ஷி

आडू: पु தெப்பம். [ஒருவிதவாஸனை மண்

आढक:, कं न குறுணி. (கால் துரோண அளவு) की துவரை.

आढकिक, कीन वि ஆடகந் தரிக்கிற, சமைக்க, விரைக்கப்படுகிற

आढ्य वि பணக்காரனுயுள்ள. செழிப்பான. ஏராளமான. கலக்க, நீர் சேர்க்கப்பட்ட. அறிவுள்ள -भाडु பணம் ஸம்பாதிக்கப் பாடு படுகிற, चर (री स्त्री) முன்பு பாக்கியவந்தனு யிருந்த -वात: பாரிசு வாயுவினல் இடுப்புப் பிடித்துக்கொண்டிருக்கிற

आढ्यंकरण वि (णी स्त्री) செழிக்கிற ण ஐச்வர்யம் =ढयता

आढ्यंभविष्णु, भावुक वि ,, செல்வாக்கடைகிற.

आणक वि இழிவான. कं புணர்ச்சி விசேஷம்

आणव वि (वी स्त्री) மிகச் சிறிய. वं மிகச் சிறுமை

आणवीन वि அணுதான்யம் உண்டாகத் தக்க, விளைகிற

आणि: पु स्त्री கடையாணி. முழங்காலுக்கு மேற்பாகம். வீட்டின் மூலை. கத்தியின் கூர்மைப் பக்கம். எல்லை.

आण्ड वि முட்டையிலிருந்துண்டான ड: பிரம்மா डं முட்டையின் கூட்டம். (ஒரு தடவை பொரித்த) குஞ்சுகள். அண்ட விரைக் கொட்டை डौ அண்டம் -जं பக்ஷியின் தேகம் -ज: பக்ஷி. பாம்பு.

आण्डी स्त्री அண்டம். பீஜம். விரை. ஆண் குறி

आण्डीक वि முட்டையிடுகிற

आण्डीर वि அநேக முட்டைகளையுடைய. வளர்ந்த

आत् अ. अ பிறகு. பிந்தி. மேலும். ஊன்றி உச்சரிக்கவருவது

आत वि சுற்றிப் பரவின त: திக்கு. சாரம். கதவுப்பலகை,

கொல்தடி.

आतंकः पु நோய். ஜுரம். மனக்கவலை. துன்பம். சந்தேகம். பயம். வாத்திய ஓசை. க் சிவனின் கேடயம் कित वि

आतङ्गः पु பயம். வாத்திய ஓசை

आतंचनं न(तंच् 7 प)புரை குத்தல். சுருங்கச்செய்தல் தோயச் செய்யும் புரை. தோய்க்கப்பட்ட பால். ஏடு. சுமத்தல். திருப்தி செய்தல். எறிதல். அழித்தல். ஆபத்து. வேகம். கொழுக்கடித்தல். உலோகங்களை உருக்குதல். அதற்கு உருக்க உபயோகமாகும் அதிசாரம்.

आततायिन् वि ஸர்வத்திற்கும் துணிந்த துஷ்டன். யாருடைய வில் இன்னொருவனின் உயிரை வாங்க வளைக்கப் பட்டிருக்கிறதோ அவன் यिता, यित्वं கொலை. கொள்ளை. அழித்தல்.

आततावित् वि வளைக்கப்பட்ட வில்லையுடையவன்.

आतन् 8 उ மேலே பரப்பு பரவுகல. உண்டுபண். செய்துமுடி. ஒளிப்பி. பிடித்துக்கொள். நீட்டு. இழு, வாங்கு. கோபி

आतनं न பரப்பல். உட்செல்லல். விரிதல். பார்வை.

आतनि वि பரப்புகிற. பரவுகிற.

आतप् । प தபி. துயரடை. वि தஹிக்கிற. स्त्री உஷ்ணம்.

आतपः पु வெய்யில். ஒளி -अत्ययः அஸ்தமனம் -अभावः நிழல் -उदकं கானல் -त्रं त्रकं குடை -लंवनं வெய்யிலிலடிபடல் -वर्षं வெய்யில் காயும் பொழுது மழை மூலம் உண்டான -वारणं சிறு, கைக்) குடை -शुष्क வெய்யிலில் உலர்ந்து போன.

आतपनः पु சிவன்

आतपवत् वि வெய்யிலில்காய்கிற. வெய்யிலுள்ள = अतपीय वि

आतप्य वि வெய்யிலிலிருக்கிற

आतमाम् अ மிக அருகே

आतर(ता)रः पु ஓடக்கூலி

आतानः पु இழுக்கப்பட்ட நாண். மிகுவும் பரவல்

आतर्पणं न திருப்தி (செய்வித்தல். வெள்ளையடித்தல். அதற்குபயோகப்படும் வர்ணம், பசை.

आतापिः पु ஓர் அஸுரன்

आताम्रफलः पु அழிஞ்சல்

आतापि(यि)न् पु வல்லூறு

आतार्य वि (तॄ) தாண்டத்தகுந்த. கரையை யடைந்த.

आताली अ अस्, भू, कृ வோடு சேர்க்கப்பட்ட

आतिः स्त्री தராவு பக்ஷி. மீன் வகை

आतिथेय वि (यी स्त्री) அதிதியை உபசரிக்கிற. அதிதிக்குத்தகுந்த यं அதிதிபூஜை =यी

आतिथ्य वि நன்கு உபசரிக்கிற थ्यः விருந்தாளி थ्यं அதிதிபூஜை. யக்யசாலையில் ஸோமத்தை ஸ்வீகரித்தல் -रूप ஆதித்தியச் சடங்கிலிருக்கிற.

आतिदेशिक वि (की स्त्री) அதிதேச ஸம்பந்தமான

आतिरे(रै)क्यं न ஏராளம். அளவுக்கு மிக மேம்பட்டது

आतिवाहक वि வேறுலகத்திற்குக் கொண்ட போக உபயோகிக்கப்படுகிற कं மனோ வேகத்தை அதிக்கிரமிக்கிற ஸூக்ஷ்ம சரீரம்.

आतिशय्यं न ஏராளம். அளவிற்கு மிக மேம்பட்டது.

आतिष्ठं न லோகத்தை ஆளுகிறவனாயிருத்தல்

आतुः तु தெப்பம்

आतुच् स्त्री சாயங்காலம். இருள் வரல்

अतुज् पु சத்துருக்களை யழிப்பவன். தனமளிப்பவன்

आतुजि वि அவசரமாய் வருகிற. சுமந்து செல்கிற.

आतुर वि துன்புறுத்தப்பட்ட. நோயுள்ள. சக்தியற்ற. அதியாவலுள்ள. रः நோய். நோயாளி -शाला வைத்திய

சாலே -संन्यासः கதியற்று ஆண்டியாதல்
आतुर्य न நோய். ஒருவித ஜ்வரம்
आतृद् 7 प உடை. பிள. கிழி. துளை. குத்தித் திற तर्दनं
आतृण्ण वि வெட்டப்பட்ட ண் துளை. வாய்திறந்த காயம்
आतृप्य वि திருப்தி செய்யத்தக்கरेय: சித்தாமரம் प्यं அப்பழம்
आतॄ । प கடந்து, தாண்டிச்செல். ஜயி. பெரிதாக்கு
आतोदिन् वि அடிக்கிற. அறைகிற. தள்ளுகிற. குத்துகிற.
आतोद्य, द्यकं न வீணை முதலிய 4 கம்பி வாத்தியம். [(तुद्)
आत्त = आदत्त
आत्मन् पु ஜீவன். தான். பிரம்மம். ஸாரம். தன்மை. விசேஷ) குணம். ஸ்வபாவம். முழு உடல். மனது. புத்தி. அறிவு. விவேகம். உயிர். பிராணன். வீர்யம். சௌர் யம். உருவம். இந்திரியம். பிள்ளை. கவலை, முயற்சி. அக்கினி. ஸூர்யன். வாயு. (स. अतिल्) உடைய. செய் யப்பட்ட -अधीन वि சுதந்திரமான. சைதன்னியமுள்ள नः பிள்ளை. மனைவியின் சகோதரன். விகடகவி -अनुरूप தனக்குத் தகுந்த -अपहार: தன்னை மறைத்துக் கொள் ளல் -अपहारकः மேற்குலத்தவன்போல் வேஷம்போடு பவன். வஞ்சகன். தேகத்தை ஆத்மாவென்று நினைத்த வன் -आदिष्ट தனக்குத்தானே யோசித்துக் கொள்ளு கிற ष्टः சமாதானத்தைக் கோருபவனே செய்து கொள் ளும் சமாதானம் -आराम ஆத்ம) ஞானத்தை அடைய முயலுகிற. ஆத்மாவில்களிக்கிற, திருப்தியடைகிற -आशिन् தன் (இனக்) குட்டிகளையே தின்று ஜீவிக்கும் மீன் -ईश्वर சுயம்ப்ரபுவான. தைரியமுள்ள -उद्भवः துயரம் वा அறிவு. பெருவிடுங்கொள்ளுச்செடி -उपजीविन् पु தன் கஷ்டத்தாலேயே பிழைப்பவன். ஒரு நாள் உழைப்பு. தன் மனைவியால் பிழைப்பவன். நட்டுவன் उपनिषद् பா

மாத்மாவை விசாரிக்கும் ஓர் உபநிஷத் -उपम: பிள்ளை -काम அஹங்காரம் படைத்த.பிரம்மத்தை இச்சிக்கிற -कार्य சொந்த கார்யம் -कृत தன்மன ஸாக்ஷிக்கு விரோதமாய்த்) தன்னால் செய்யப்பட்ட -गत தன் மனதிலுண்டான त अ (தனக்குப்) பின்னே. ரஹஸ்யமாய்ப் பேசப்படவேண்டியது போலிருக்கிற अ தனக்குத் தானாய்ச் சிந்தித்து, பேசிக்கொண்டு -गति: வாழ்க்கையின் போக்கு, தன் வழி -गत्या தன் காரியத்தினாலேயே -गुप्त பூனைக்காஞ்சோரி -गुप्ति: குகை-ग्राहिन् वि சுயநலமுள்ள. பேராசைப்படுகிற -घात: தற்கொலை. மதவிரோதம் -घोष: காக்கை. கோழி -ज: பிள்ளை. ஸந்ததி. மன்மதன் -जा பெண். விவேகட்-जय: தன் ஜயம்.ஆத்மபரித்தியாகம். வைராக்கியம். துறவு -ज्ञ:, विद् पु ரிஷி -ज्ञान தன்னைப் பற்றின ஞானம். ப்ரம்மக்ஞானம். சரியான க்ஞானம் -तत्त्व ஆத்மாவின் உண்மையான தன்மை. மிகச் சிறந்த வஸ்து (ज्ञ:) வேதாந்தத்துவம் தெரிந்த ரிஷி -तुष्टि தன்வரையில்திருப்தியடைந்த -त्याग: ஆத்ம ஸுக பரித்தியாகம். தற்கொலை -त्यागिन् தற்கொலை செய்தவன். தன் மதத்தை நம்பாதவன் -त्राण தன் ரக்ஷணம். அங்கரக்ஷகன் -दर्श: கண்ணாடி-दर्शन தன்னைப் பார்த்தல். ஆத்மக்ஞானம் -दा वि ஒருவனின் பிராணனை, பிழைப்பைக் கொடுக்கிற -दान வைராக்கியம் -दूषि वि ஆத்மாவைக்கெடுக்கிற தன்னைப் பாழாக்கிக் கொள்ளுகிற -देवता குலதேவதை -द्रोहिन् वि முன்கோபியான. தற்கொலைக்காரன் -निष्ठ ஸதா ஆத்மாவிலிருக்கிற -निवेदन தன்னையே அர்ப்பணம் செய்து கொள்ளல் (ஒரு தேவதைக்கு பலியாக) -पराजित தன்னை இழந்து கொண்டவன் -पुराण 18 அத்தியாய

ங்கள் கொண்ட உபநிஷத்துக்களை விவரிக்கும் நூல் -प्रबोध: தன்னுணர்ச்சி. தன்னை அறிதல். ஓர் உபநிஷத் -प्रभ ஆத்மஞானியான -प्रवाद: பிரம்மவிசாரம் -बंधुः, बांधव: பிதா, தாயின் சகோதரிப்பிள்ளை அம்மாஞ்சி இவர்கள் ஒருவனின் சொந்த உறவினர். தான். ஜீவன் -बोध: ஜீவ, பரமாத்மக் ஞானம் -भाव: ஜீவனின் இருப்பு. ஜீவன். அதன் ஸ்வபாவ விசேஷம். தேகம் -भू वि தானு யுண்டான -भूः, योनिः பிரம்மா. விஷ்ணு. சிவன். மன்மதன். பிள்ளை स्त्री பெண். விவேகம் -भूत பக்தி, பற்றுள்ள -भूय விசேஷகுணம். பிரம்மம் -मात्रा ஆத்மாவின் அம்சம் -मानिन् கர்வியான. அஹங்காரமுள்ள -मूर्तिः சகோதரன். ஆத்மா -मूली செடி விசேஷம் -मूलि ஜகத் -याजिन् பரித்தியாகம் செய்பவன். ஸர்வப் பிராணிகளையும் தன்னைப் போல் பார்ப்பவன் -रक्षा கொம்மடி மாதுளை. தன்னை ரக்ஷித்துக் கொள்ளல் -लाभः பிறவி. உத்பத்தி -लोमन् மயிர். தாடி -वंचना பிரமை -वश தன்புத்தியையேகதியாகவுடைய शः தன்னடக்கம். ஒருவனின் வசம், அதீனம். -वश्य தன்னை வசப்படுத்திக் கொண்ட. தன்னடக்கமுள்ள -विक्रय: தன் சுதந்திரத்தை விற்றல் -विद् पु ஞானி. ரிஷி. சிவன் -विद्या ஆத்மக்ஞானம் -वीर சக்தி வாய்ந்த. (ஆகாரம்போல்) தனக்குத் தகுந்ததான. குணம்; சைதன்னியமுள்ள र: பிள்ளை. மனைவியின் சகோதரன். விகடகவி -वृत्त தன் சரித்திரம் -वृत्ति त्रि ஆத்மாவில்வசிக்கிற त्तिः ஹிருதயத்தின் நிலை. தன் தொழில், நிலை. தன் சொந்தக் கடமைகளை, தொழிலைச் செய்கிற -शक्तिः தன் சுபாவ சக்தி, முயற்சி. மாயை பிரமை. -शल्या தண்ணீர் முட்டான் செடி -संतुष्ट தனக்குப் போதுமான -सनि பிரா

ணனைக் கொடுக்கிற -सम தனக்குத் தகுந்த, ஸமான மான -संदेहः தன் உள்ளுக்குள்ளுண்டான, சொந்த சந்தேகம். பிராணுபத்து -संभवः, समुद्भवः = उद्भवः பிரம மம். விஷ்ணு. சிவன். பிரம்மா -संपन्न தைரியம், தன் னடக்கமுள்ள. புத்தி சக்திகளையுடைய -सिद्धिः தனது மேன்மை -सुख தன்னில் களிக்கிற ख பிரம்மானந்தம் -हन् தன்னைக் கொலை செய்து கொள்ளுபவன். தன் க்ஷேமத்தைக் கவனியாதவன். தன் மத நம்பிக்கை யில்லாதவன். கோயில் அர்ச்சகன், பரிசாரகன்[யுள்ள

आत्मक वि (स. अ தில்) செய்யப்பட்ட, ஆன, உடையதன்மை

आत्मकीय, त्मीय वि தன்னுடையதான

आत्मता, त्वं न ஆத்மாவில் ஐக்கியம் ஆத்மக்ஞானம்.நிஷ்டை

आत्मना अ தன்னோடு

आत्मनीन वि தன்னுடையதான. தனக்கு ஹிதமான. னை தன்னியமுள்ளன:பிள்ளை விகடகவி.மனைவிசகோதரன்

आत्मनेपदं न தனக்காக ஏற்பட்டுள்ள வாசகம், சப்தப்.அதன் முடிவிற் குண்டான ப்ரத்யயங்கள் [விடுகிற

आत्मंभरि वि சுயநயமுள்ள. பேராசையான. தானே தின்று

आत्मन्वत्, त्मन्विन् உணர்ச்சி, உயிருள்ள. அதுஉண்டாக் கப்பட்ட

आत्मवत् वि தைரியம், தன்னடக்கம், சாந்தி, ஞானமுள்ள அ தன்னைப்போல் त्ता

आत्मसात् अ தன்னதீனத்தில். தன்னுடையதான कृ தனக் காக ஆக்கி, எடுத்துக்கொள், உபயோகித்துக்கொள் -भू ஒருவனின் அதீனத்திற்கு வா

आत्मीकृ 8 उ அடக்கு. வெல்

आत्मीभावः पु பரமாத்மாவில் லயமாதல். பிரம்ம ஸாயுஜ்யம்

आत्म्य, त्मीय वि தன்னுடையதான.சொந்தமான (स. अ தில்)

தன்மையுள்ள

**आत्यंतिक** वि (की स्त्री) இடைவிடாத. முடிவில்லாத. நித்திய மான. ஏராளமான. சுதந்திரமான. கலப்பற்ற. பூர்ண மான दुःखनिवृत्तिः முக்தி. -प्रलयः ஜகத்பிரளயம்

**आत्ययिक** वि (की स्त्री) நாசம் செய்கிற. ஆபத்தான. துன்ப மான. அமங்கலமான. அவசரமான.

**आत्यहः** पु நீர்க்கோழி

**आत्रेय** वि (यी स्त्री) அத்திரியின் ஸம்பந்தம் பெற்ற. அந்த ஸந்ததியான. அவரிடமிருந்துண்டான यः அத்திரி யின் ஸந்ததி. அதில் முக்யஸ்தர். யாகத்தில் உபரித் விக்கின் ஸகா. சிவன். நிணநீர், தேகஸார நீர் यी அத் திரியின் தர்மபத்னீ. அத்திரவம்சஸ்தவள். தூரஸ்திரீ. பிராம்மண ஸ்திரீ. தீஸ்தா என்னும் வடவங்காள தேசநதி यिका स्त्री தூரஸ்திரீ

**आथर्वण** वि அதர்வணத்திலிருந்துண்டான, ஸம்பந்தமான णः அதர்வணமறிந்தவன். அதர்வனின் ஸந்ததியைச் சேர்ந்தவன். அதர்வண புரோஹிதன். வீட்டுப் புரோஹிதன் णं அதர்வணவேதம், ஸமூஹம். ரிக்விக் கால் யஜமானன் யாகத்தின் ஸந்தோஷச் செய்தி யைச் சொல்லப்படும் வீடு.

**आथर्वणिकः** पु அதர்வணமோதும் பிராம்மணன்

**आद** वि (स- अ தில்) எடுக்கிற. பெறுகிற

**आद्न** वि வாய்வரையில் எட்டுகிற

**आदत्त** -आत्त वि (दा) तः, அடிமை-गंत्र முன்பேமுகறப்பட்ட.கர் வமடக்கப்பட்ட= -गर्व -मनस्क மனது பரவசமான (ஆனந்தம் போன்றதால்) -लक्ष्मी ஐச்வர்யமில்லாமற் பண்ணப்பட்டிருக்கிற -वचस् பேசத் தொடங்கின. பேச்சில்லாத

आददान वि எடுத்துக்கொள்ளுகிற आद्दि वि எடுக்கிற
आदधान वि தரிக்கிற [நேசம்
आदरः पु (द) பூஜை. ஆவல். பிரார்த்தனை. உழைப்பு. ஆரம்பம்.
आदरणीय, आदर्तव्य, आदर्य वि மரியாதை செய்யத்தக்க
आदर्दरि वि உடைக்கிற. பிளக்கிற.
आदर्शः पु (दृश्) கண்ணாடி. மூலநூல், அசல் அல்ல மாதிரி. நூலின் பிரதி, நகல். உரை. எல்லை விசேஷம். ஓர் தேசம் -मंडलः வட்டமான கண்ணாடி. கண்ணாடியின் மேற்புறம். ळ (வட்டமான புள்ளியுள்ள) ஸர்ப்பவிசேஷம்
आदर्शकः, दर्शनं न கண்ணாடி
आदहनं न கொளுத்தல். ஹிம்ஸித்தல். கொல்லல். நிந்தித்தல். ஸ்மசானம்.
आदा 3 आ பெறு. அடை. எடு. பேசத்தொடங்கு. சொல். கைப்பற்று. உடு. உறி. உள்வாங்கிக்கொள். நிர்ப்பந்தித்து வாங்கு. வெளிப்படுத்து. பிடுங்கு. பிரி. சும. தரி. அறி. இணங்கு. தொடங்கு. சிறைப்படுத்து. णिच्. स.
आदानं न பெறல். ஸம்பாதித்தல். (வியாதிக்கு) அறிகுறி. கட்டல். விலங்கிடல். குதிரையின் சிங்காரங்கள். ஹஸ்திகோஷாச் செடி -पाकी புல்லாந்திச் செடி
आदापनं न அழைத்தல். ஒருவனை ஒன்று பெறச் செய்தல்
आदाय अ எடுத்துக் கொண்டு यः பெறல். பொருள். லாபம் -चर वि ஒன்றைக் பெற்றுக்கொண்டு செல்லுபவன்
आदायिन् वि பெறுகிற. (தானம்) பெற இச்சிக்கிற
आदादिक वि अद् தைமுதலாகவுடைய 2ம் கணத்தைச்சேர்ந்த
आदारः पु (दृ) மயக்கல். ஸோமமகப் படாதகாலத்தில் அதன் பிரதியான செடி விசேஷம்
आदारिन् वि (दृ, दृ) மயக்குகிற. அழிக்கிற. அமுக்குகிற
आदि वि முதலான. மூலமான. முக்கியமான. दिः नि -पु (स.

अ தில்) ஆரம்பிக்கிற. முதலான. அப்படிப்பட்ட.
ஆரம்பம். முதற்பலன், பாகம். தலையீற்றுக்கன்று.
முதற் சிசு. பிரதான காரணம். ஸமீபம் -अंतर्वर्तिन् முத
லிடை கடையுடைய. முழுதிலுமிருக்கிற -उपांतं अ
முதல் முதற்கடைசி வரையில் -कर: சிருஷ்டிப்பவன்.
பிரம்மா-कर्मन् வேலையின் தொடக்கம் -कवि: பிரம்மா.
வால்மீகி -कारणं மூலகாரணம். பகுப்பு. பீஜகணிதம்.
-काव्यं ராமாயணம்-ताल: ஸங்கீத காலபேதம் -देव:பிரம்
மம். நாராயணன். சிவன். ஸூரியன்-दैत्य: ஹிரண்யக
சிபு-पुराणं முதலான பிரம்ம புராணம் -बलं பிறப்பிக்கும்,
ஸிருஷ்டிசெய்யும் சக்தி -बुद्ध முதலில் அறியப்பட்ட
-भव., सूत: பிரம்மா. விஷ்ணு. தமயன் -मूलं மூலகார
ணம் -योगाचार्य: சிவன் -रस: சிருங்காரம். காமம் -राज:
பிருது என்கிற மனு-वराह: முதல் பன்றி. மூன்றுமவ
தாரமானபன்றிஉருவமெடுத்தவிஷ்ணு-विद्वस् पु முதல்
பண்டிதரான கபிலர். -शक्ति: மாயை. துர்க்கை -शरीरं
முதற் சரீரம். அக்ஞானம். ஸூக்ஷ்மசரீரம்.

आदिक वि (स. அதில்) முதலான

आदित:, आदौ अ முதலில். ஆரம்பம், முதலிலிருந்து.

अदित:, त्वं न முன்னை, மற்றொருவனுக்கு மேலாயிருத்தல்

अदितेय: पु அதிதியின் பிள்ளை. தேவதை. ஸூரியன்

आदित्य वि ஸூர்யஸம்பந்தமான, குலத்திற் பிறந்த. அதிதி
யினிடமிருந்துண்டான. அவளைச்சார்ந்த. ஆதித்தி
யர்களிடமிருந்துண்டான, ஸம்பந்தம் பெற்ற -त्य:
அதிதியின் பிள்ளை. தேவதை. ஸூரியன். வாமனாவ
தார விஷ்ணு. எருக்கு. 12 மாதத்திற்கு12 ஆதித்திய
ர்கள். (அனு) त्या ஸரஸ்வதி त्यौ द्वि புனர்வஸு -केतु:
ஓர் திருதிராஷ்ட்ரனின் பிள்ளை. ஸூர்யஸாரதி-चंद्रौ द्वि

ஸூர்ய சந்திரர்கள் -पत्रः ஓர் செடி வெருக்கிலை -पर्णिनी நீர்க்கரையில் பொன்னிறப்பூக்களையுடைய ஓர்க்கொடி -पुष्पिका செவ்வெருக்கு -भक्ता-ஓர் செடி व्रतं ஸூர்யோபாஸனை -सूनुः ஸுக்ரீவன். யமன். சனி. கர்ணன்

आदित्सु वि கிரஹிக்க விரும்புகிற

आदिन् त्रि (ஸமாஸத்தில்) உண்கிற

आदि(दी)नवं, वः पु துரதிருஷ்டம். துயரம். தடை. குற்றம் -दर्श பாச்சிகையில் கூட ஆடுபவனிடம் துரெண்ணங்கள்.

आदिश् 6 उ சுட்டிக்காட்டு. கட்டளையிடு. ஸூசி. கருது. போதி. அறிவித்துக்கொள். விதி. புத்திசொல். நிச்சயி. முன்சொல். சொல். தொடங்கு. போருக்கழை. கோபமூட்டு. தனக்குத் தெரியுமென்று சொல். णिच्

आदिशि स्त्री கருத்து. யுக்தி. யோசனை. ப்ரதேசம். யாகம்

आदिष्ट वि பதிலாய்வைக்கப்பட்ட ष्ट் உண்டமீதி.

आदिष्टिन् वि விதிகர்த்தா. पु ஓதும் பிரம்மசாரி. அனுதாபப்படுகிறவன். பிராயச்சித்தம் செய்து கொள்ளுபவன்

आदीनवः पु துயரமுண்டாக்குவது. அஸௌகர்யம். மீறல்.

आदीपनं न விசேஷ காலங்களில் தரை,சுவர்களுக்கு வெள்ளையடித்தல். தீ, கோபம் மூட்டல்.ஜோடித்தல். கிளப்பல்

आदुरि वि(द, दृ)கவனமுள்ள. ஜாக்கிரதையான. அமுக்குகிற

आदृ 6 आ ஆதரி. கவனி. மனம் வை. பற்றோடிரு. இச்சி. மரியாதையை அனுபவி.

आदृत वि சிரத்தையுள்ள. மரியாதையுள்ள. பூஜிக்கப்பட்ட

आदृत्य वि ஆதரிக்கத்தகுந்த

आदर्श । प பார் णिच् காட்டு आदर्शः

आदृष्टिः स्त्री (दृश) பார்க்கும் சக்தி.

आदृ उ 9 அமுக்கு. அமுக்கித்திற. வெளிப்படையாக்கு

**आदेशः** पु (दिश्) பிரம்மம் दया பதிலாய் வருவது. தோன்றல் விகாரம். கிருஹபலன் -कारिन् கீழ்ப்படிகிற देशन

**आदेशिन्** त्रि உண்டாக்குகிற தூண்டுகிறபுஜ் ஜோதிஷன். கட்டளையிடுபவன் = देष्टृ பாகயஜமானன் -देशिकः விருந்தாளி

**आदेवक** त्रि விளையாடுகிறவன்

**आदेवनं** न சொக்கட்டான் காய், பலகை, ஆ-இடம், ஆட்டம்

**आद्य** त्रि முதலான. மூலமான. முதலிலிருக்கிற. தலைமையான. மிகவும் சிறந்த. (स. अ தில்) முதலான. அடுத்த முந்தின. புசிக்கத் தகுந்த द्याः पु ब ஒருவித தேவதைகள் द्या துர்க்கை. மாத முதல்நாள். பிரதமை द्यं ஆரம்பம். தானியம். உணவு. பிதிர்சிராத்த பேதம். -बीजं ஜகத்தின் மூல காரணம் பிரதானம் -माषकः 5 குன்றுமணி எடை

**आद्यन** त्रि ஆதியற்ற. மிகவும் மானங்கெட்டவயிர்தாலியான.

**आद्योपांतं** अ ஆதி முதல் அந்தம் வரையில்

**आद्रिसार** त्रि இரும்பால் செய்யப்பட்ட

**आद्वयिकः** पु அத்வைத மதப்பிரசாரகன்

**आधमनं** न அடமானம். வியாபாரத்தில் மோசத்தால்சரக்கை உப்பச் செய்தல்.

**आधमर्ण्य** न கடனாளி நிலை.

**आधर्मिक** त्रि அதர்மமான. நியாய விரோதமான

**आधवः** पु குலுக்குபவன். குலுக்கப்படுவது. கலப்பு. எறிதல்

**आधवनीयः** पु ஸோமலதை அலசிச்சுத்தப்படுத்தும் பாத்திரம்

**आधा** 3 उ வை. பொருப்பில் வை. தங்கச்செய். பொருத்து. தான் உபயோகித்துக்கொள், உடைத்தாயிரு. தாங்கு. உண்டு பண். (பயம், வியப்புகளைக்) கிளப்பு. வேண்டியதைக் கொடு. ஏற்படுத்து. பிரதிஷ்டை செய் (அக்கினியைப் போல்). (விருதப்) அனுஷ்டி

**आघातु: स्त्री** ஒரு செடி

**आधानं न** திரும்பிப்)பெறல். வைதிகாக்கினி வளர்த்தல். வைதிகாக்கினியில் செய்யப்படும் சடங்கு. மனதில்பதியச் செய்தல். புகட்டல். ஆரோபித்தல். பாடு. கொதுவை. பத்திரமாய்வைக்கப்பட்டிருக்கும் இடம்,வஸ்து.ஜாமீன். உத்தரவாதம். வேலி. கர்ப்பந்தரிக்கும் முன்செய்யப்படும் சடங்கு.

**आधानिक: पु** கர்ப்பந்தரிக்க சோபனுந்தரம் செய்யப்படும் [சடங்கு.

**आधाय: पु** ஒன்றை வைத்தவன் यक वि வைக்கிற

**आधार: पु (धृ)** ஆதாரம். முட்டு. பிடிப்பு. உதவி. ஆச்ரயம். ஒன்று சேகரித்து வைக்கப்பட்டிருக்குமிடம். ஜலாசயம். கொள்வது. பாத்திரம்.பெறுகிறவன். நாடகவேஷதாரி. பாத்தி.கால்வாய்.(7ப)வேற்றுமையின் பாவம் இடம். பாத்தியம். பாயு. ஆஸனவாய்-आधेयभाव: தாங்குவதும்,தாங்கப்படுவதினதும் ஸம்பந்தம். -दंड: முதுகெலும்பு -शक्ति: மாயை. பரமாத்ம சக்தி. சக்தி என்கிற மிகச் சிறந்த ஸ்திரீ தேவதை.

**आधारक: पु** அஸ்திவாரம். धारणं தரித்தல்

**आधार्य वि** வைக்க, பொருத்த, நிலைநாட்டப் படவேண்டிய

**आधारि स्त्री** கொரிந்த மரம்.

**आधि: पु (धा)** வேதனை. கவலை துக்கம். கேடு. ஈடு. வீடு. இடம்.லக்ஷணம்.விசேஷணம். தர்மசிந்தை.நம்பிக்கை, எதிர்பார்த்தல். குடும்பத்தில் அக்கறையுள்ளவன் -ज्ञ துக்கத்தை அனுபவிக்கிற. கோணலான -भोग: கொதுவை வஸ்துவைக் கையாளல் -मन्यव: ब ஜ்வாரக் கொதிப்பு -स्तन: சொந்தக்காரன் அனுமதியின்றிக் கொதுவை வஸ்துவைக் கையாளல்

**आधिकरणिक: पु** நியாயாதிபதி. करणं ஈடுவைத்தல்.

आधिकारण्यं न ஸ்வாதீனம். தன்னிடம் வைத்திருத்தல்
आधिकारिक वि (की स्त्री) அதிகாரி, கார ஸம்பந்தமான. சிறந்த
आधिक्यं न அதிகம். மேன்மை. சிறப்பு
आधिदैविक वि (की स्त्री) விதி, அதி, குலதேவதை ஸம்பந்தமான
आधिपत्यं न பிரபுத்துவம். ராஜனின் கடமைகள்
आधिभौतिक वि (की स्त्री) பஞ்சபூத, ஜந்துக்களாலுண்டான
आधिराज्यं न ஏகசக்கிராதிபத்தியம்.
आधिवेदनिकं न 2ம் விவாஹத்தில் மூத்தாளுக்குக் கணவன் கொடுக்கும் தனம்.
आधी स्त्री (ध्यै) நினைத்தல். கோரல். கவலை. तं நினைத்த, இச்சிக்கப்படுவது.
आधु 5 उ குலுக்கு. கலக்கு. குழப்புவ்ரவன. घावः குலுக்கப்படுவது
आधूनिक त्रि (की स्त्री) புதிய. தற்காலத்திய. இப்பொழுதுண்டான
आधूयं न பலமில்லாமை.
आधूसरच्छदः पु ஒருவித அன்னப்பக்ஷி
आधृ 1 10 प தாங்கு. தரி. வைத்திரு. கொண்டுவா. வேண்டியதைக் கொடு
आधृष् 5 प மேல்விழு. எதிர். சண்டைக்கழை. ஹிம்ஸி. வெல். கிந்தி. 10 प. णिच् ஆக்ஷேபி. கண்டி. குற்றிவாளி என்று தீர்மானி धर्षः, धर्षणं धर्षित धृष्ट वि ष्टिः தகைப்பு
आधेनवं न பசுக்கள் வேண்டியிருத்தல்
आधेय वि கொடுக்க, ஆரோபிக்க, பெற, அடங்கப்பட வேண்டிய यं = आधानं
आधोरणः पु யானைப்பாகன்
आध्मात वि காற்றினால் நிரப்ப, உப்பச் செய்யப்பட்டஅல கர் வடைந்த. விருத்தியான. மிகவும் பாதிக்கப்பட்ட, பெரிதாய்ப் போய்விட்ட. சப்திக்கிற. சப்திக்கச்செய்யப்பட்ட. கொளுத்தப்பட்ட. வயிற்று வீக்கத்தால் நோயடைந்த तः இறைச்சலோடு கூடினகுடல்வீக்கம்,

சண்டை

**आध्मानं** न ஊதல். உப்பல். கர்வம். அரூ வளர்ச்சி. பெருமை பாராட்டிக் கொள்ளல். டம்பம். திருத்தி. வயிற்றுவீக்கம். எருதின் உக்காரம். நீ நளிகை யென்னும் வாஸனை

**आध्मापनं** न சப்திக்க உபாயம், ஸாதனம் [வஸ்து

**आध्यक्षं** न மேற்பார்வை. சந்நிதி. சமுகம். சந்நிதானம்.

**आध्यात्मिक** वि பரமாத்ம ஸம்பந்தமான. பரிசுத்தமான. மனதிலிருந்துண்டான (வலி, துக்கம் போல்)

**आध्यापकः** पु உபாத்தியாயர். குரு. ஆசார்யன்.

**आध्यायिक** वि (की स्त्री) (வேதம்) ஓதிக்கொண்டிருக்கிற

**आध्यासिक** वि (की स्त्री) ஆரோபித்ததாலுண்டான

**आध्या** स्त्री (ध्यै) வியஸனத்துடன்) சிந்தித்தல் = ध्यानं கவலை. தியானம்.

**आध्र** वि எளிய. ஏழையான. பலமற்ற ध्रः ஆதாரம்

**आध्वनिक** वि (की स्त्री) பிரயாணத்திலிருக்கிற, பண்ணுகிற.

**आध्वरिक** वि (की स्त्री) (ஸோம) யாக ஸம்பந்த மறிந்தவன் कः அந்நூல்.

**आध्वर्यव** वि (वी स्त्री) அத்வர்யு, யஜுர் வேதஸம்பந்தமான யஜுர்வேதமறிந்தவன் वं யாகத்தில் அத்வர்யுவான) பரிசாரகம்.

**आनः** पु மூச்சிழுத்தல். இழுக்கப்பட்ட மூச்சு. வாய். முகம் ஊதல் नी ஜீவன்

**आनकः** पु தப்பட்டை. மத்தளம். கர்ஜிக்கும் மேகம் -दुंदुभिः ரண) பேரி. பறை. நகாரா = भी- स्थली ஓர் தேசம்.

**आनक्यः** पु முனி

**आनडुह** वि(ही स्त्री) எருது ஸம்பந்தமான, அதிலிருந்துண்டான

**आनत** वि (नं) வணக்கமான. கீழ்ப்படிகிற. அடக்கமுள்ள. சாந்தமான [ந்தம்.

आनतिः स्त्री வணங்கல். அல நமஸ்காரம். அபிவாதனம். ஆன
आनद्ध वि (नह्) கட்டப்பட்ட. மலக்கட்டான द्ध:பறை.உடை.
அலங்காரம். -बस्ता மல, மூத்திரக்கட்டு
आननं न வாய். முகம். அத்தியாயம். காண்டம்
आनंतर्यं न மிகவும் ஸமீபம், தொடர்ச்சி. [ஸுகம்.
आनंत्यं न அளவில்லாமை. சாச்வதம். ஸ்வர்க்கம். எதிர்கால
आनन्दः पु ஆனந்தம். பிரம்மம். 48ம்வருஷ. விஷ்ணு. சிவன்.
பலராமன். ஸூத்திரகாரரான புத்த சாக்கிய முனி
யின் சிஷ்யர். ஓர் விருத்தம் दा, दी இரு செடிகள் दं
பிரம்மம். ஸுரா.ஒருவித வீடு -अर्णवः பிரம்மானந்தம்
-आत्मन् பிரம்மா. -आनंदनः ராஜன்-கானல், वनं காசி-गिरिः,
ज्ञानः, ज्ञानगिरिः சங்கராசார்யக் கிரந்த வியாக்யாதா
-दत्तः ஆண் குறி-पटः கலியாண வஸ்திரம் -पूर्णः பிரம்மம்
-प्रभवः ரேதஸ் -भैरव பயம், இன்பம் இரண்டையும்
விளைவிக்கிற वः சிவன் -लहरिः, ஸ்ரீ சங்கராசார்யரின்
பார்வதீ ஸ்தோத்திரம்.
आनंदक वि களிப்பிக்கிற. வாழ்த்துகிற दता சந்தோஷம்
आनंदथु वि சந்தோஷிக்கிற थुः இன்பம்
आनंदन वि திருப்தி செய்கிற नं சிநேகிதர், அதிதிகளுக்கு
மரியாதை செய்தல், நடத்துதல். சந்தோஷத்தை
விளைவிப்பது नी பிரம்ம புரி.
आनंदमय वि ஸுக ஸ்வரூபமான यः பிரம்மம் या துர்க்கா
ரூப விசேஷம் -कोशः ஜீவனின் மேலிருக்கும் முதல்
கோசம். ஸுஷுப்தி.
आनंदयितव्यं न விஷயஸுகத்திற்குவஸ்துத் ரு விசுகம் தருவது
आनंदिः पु இன்பம். அறிய ஆவல் दित ஸந்தோஷிக்கப்பட்ட
आनंदिन् वि ஸந்தோஷிக்கிற. இன்பந்தருகிற
आनपत्यं न குழந்தையில்லாமை

आनम् । प வளை. வணங்கு. குனி. நமஸ்கரி. இழிவுபடுத்து. தாழ்த்து. அடக்கு णिच् வளையச் செய் नत वि
आनमः पु வளை(த்)தல் (வில்லைப்போல்) मित வளைக்கப்பட்ட.
आनम्र वि கொஞ்சம் வளைந்த. குனிந்த. வணங்குகிற
आनयः, नयनं न (नी) கொண்டுவரல். பூணூல் தரிப்பித்தல்
आनर्तः पु நடனசாலை. சண்டை. ஓர் ஸூர்ய வம்சத்தரசன். ஓர்த்தேசம், அதன் ஜனம், ராஜன். तीरं.நடனம் = -कं
आनर्थक्यं न வீண். தகாமை. பயனின்மை.
आनव वि மானிட. தயவுள்ள वः வெளி நாட்டு) ஜனம்.
आनस वि (सी स्त्री) வண்டி, தகப்பன் ஸம்பந்தமான
आनह् 4 उ கட்டு आ நிறுத்தப்பட்டிரு नद्ध, नाहः नाहिक
आनायः पु வலை यिन् செம்படவன् य्य वि கொண்டுவரத்தக்க
आनाय्यः पु கார்ஹ பத்தியத்திலிருந்து தக்ஷிணாக் கினிக்குக் கொண்டு வரல்.
आनाहः पु கட்டல். துணியின்) நீளம். மலமூத்திரக் கட்டும்
आनाहिक वि மலக்கட்டில் உபயோகிக்கவேண்டிய [வியாதி
आनाथ्य न திக்கற்ற நிலை. பெற்றோரில்லாமை.
आनिनीषु न. पु கொண்டுவர விருப்பமுள்ள
आनिर्हत वि நித்தியமான. உலகிலிருந்து முழுதும் போய் விட்ட तः ஓர் முக்கிய தேவ கணம்
आनिल वि (ली स्त्री) காற்றிலிருந்துண்டான. வாயுதேவதைக் குச் செய்யவேண்டிய लः,लिः ஹனுமார்பீமன்லி ஸ்வாதி
आनी । प கொண்டுவா. உண்டு பண். சும. கலந்து போ. வச மாகு. ஓர் நிலைக்குவா. ஒதுக்கு. ஒதுங்கு णिच् न(ना)यः
आनील वि கறுத்த. சற்றுநீலமான लः கருங் குதிரை -यष्टिका ஓர் ஔஷதி
आनुकल्पिक वि அனுகல்பம் தெரிந்தவன், படிக்கிறவன். அனு கல்பத்தால் அடையப்படவேண்டிய

आनुकूलिक वि (कः स्त्री) அனுகூலமான. ஒத்திருக்கிற
आनुकूल्यं न அனுகூலம். தகுதி. அன்பு. தயவு
आनुगत्यं न பரிசயம். பழக்கம்
आनुगतिक वि (की स्त्री) ஆள், தோழன், தொடர்பவன் ஸம்பந்
आनुगुण्यं न தகுதி. அனுகூலம். ஒத்திருத்தல் [தமான
आनुग्रामिक वि (की स्त्री) கிராமீயமான. நாட்டுப்புறமான
आनुजावर वि தந்தை, தாய் இறந்தபின் பிறந்த
आनुनासिक्यं न மூக்கின் ஸம்பந்தமுள்ளது
आनुपदिक वि (की स्त्री) தொடர்ந் தோடுகிற. சுவடுபிடிக்கிற.
பயிலுகிற. சொல்லப் போகிற
आनुपं न நீருள்ள தேசம். சதுப்பு நிலம்
आनपूर्व, र्व्यम्, र्वी स्त्री ஒழுங்கு. ஜாதிக்களின் வரிசைக்கிரமம்.
ஒழுங்காய், வாதத்தில் அடைந்த ஸித்தாந்தம். அத்
தியயனத்தின் கிரமம் [ஒன்றாய்
आनुपूर्वं, र्व्यं, ण, पूर्व्येण अ வரிசைக்கிரமத்தில் ஒன்றின் பின்
आनुमानिक वि (की स्त्री) தீர்மானத்தைச் சேர்ந்த. ஊஹையி
லிருந்துண்டான. ஊஹிக்கப்பட்ட क் பிரதானம்
आनुयात्रिकः पु தொடருபவன்.
आनुरक्तिः स्त्री காமம். பற்று. ஆசை.
आनुलोमिक वि ஒழுங்கான. அனுகூலமான. ஒத்த
आनुलोम्य वि (தலை மயிர்திக்கில்) ஒழுங்காயுண்டான ग्यं சரி
யான முறை, தொடர்ச்சி. ஒன்றின் சரியான இடத்
திற்குக் கொண்டு வரல். தகுதி. நற்பொருத்தம்
आनुवात वि எதிரொலி செய்யப்பட்ட
आनुविधित्सा स्त्री நன்றியீனம். செய் நன்றி மறத்தல்
अनुवेश्यः पु மூன்றும் வீட்டுக்காரன் [மான
आनुशासनिक वि (की स्त्री) போதனைகள் விஷயமாக, ஸம்பந்த
आनुशूक वि ,, ,, நெல்முள்ளில், முள்ளோடிருக்கிற

आनुश्र(श्रा)विक वि की स्त्री கேட்டபடி,ஐதிஹ்யத்தைச்சார்ந்த क: பரலோகம், முக்தி அடைய உபாயம்
आनुषक् अ வரிசைக் கிரமமாய். இடைவிடாமல். ஒன்றின் பின்னொன்றாய்
आनुषंगिक वि ஸம்பந்தித்த, அனுஸரித்துக்கொண்டிருக்கிற ஸ்வபாவமான, உள்ளடங்கிய, தவிர்க்கக்கூடாத. தவறாத. அவச்யமான. இரண்டாவதான. முக்கியமில்லாத. பற்றின. நேசிக்கிற.உவமையுள்ள.போன்ற. பாகங்களின் பரஸ்பர ஸம்பந்தமான. அண்டாகாரமான. எச்சமான (வாக்கியத்திலில்லாத அதிகப்படியான பதங்களையுடைய)
आनुषजू अ ஒழுங்காய். தொடர்ச்சியாய்
आनुषूक वि மேன்மையாக்குகிற. தூண்டுகிற. மேலுக்குத் தள்ளுகிற
आनुष्टुभ वि (भी स्त्री) அனுஷ்டுப்புக்களை யுடைய, ஸம்பந்தமான सं அனுஷ்டுப் சந்தஸ்
आनुसूय वी அனஸூயையிடமிருந்துவந்த, கொடுக்கப்பட்ட
आनूकं अ ஏராளமாய். பெரிதாய்
आनूप वि நீரான. சதுப்பான. நனைந்த प: நீரை நாடும் ஜந்து
आनूपक वि நீரில் வஸிக்கிற
आनृण्यं न கடன் நிவர்த்தி செய்தல்.
आनृत वि எப்பொழுதும் பொய் பேசுகிற
आनृशंस, स्यं न சாந்தம். அன்பு. தயை. இரக்கம்.
आनेय वि கொண்டு வரத்தகுந்த = नेतव्य, नेतृ கொண்டுவரல், வருபவன்
आनैपुणं, ण्यं न ஸாமர்த்திய மில்லாமை. மூடத்தனம்.
आनैश्वर्यं न சக்தி,ஆதிபத்தியமின்மை. கீர்த்தியின் விருப்பம்
आंत वि (ती स्त्री) முடிவான. கடைசியான तं अ முழுதும்.

முடிவு வரையில்

**आंत्यः** पु முடிப்பவன் [பர்மம்

**आंतर** वि உட்புறமான. உள்ளான. ரஹஸ்யமான, மறைந்த த்

**आंतरतम्यं, तर्यं** மிகவும் நெருங்கிய ஸம்பந்தம்

**आंतरागारिक** वि உக்கிராணக்காரன், அந்தப்புர பணியகாரன்

**आंतराल** वि உள் மர்ம மறிந்தவன். [ஸம்பந்தமான

**आंतरि(री)क्ष** वि (क्षी स्त्री) ஆகாசத்திலுண்டான, ஸம்பந்தம்
பெற்ற क्षं ஆகாசம், பூமிக்கும் வானத்திற்கு முள்ள
நடுவிடம் [கிற

**आंतर्गणिक** वि (की स्त्री) உள்ளடங்கிய, கூட்டத்தில் கலந்திருக்

**आंतर्गेहिक** वि(कीस्त्री) வீட்டினுள்ளிருக்கிற, வீட்டிலுண்டான

**आंतिका** स्त्री தமக்கை

**आंत्र** त्रि குடல் ஸம்பந்தமான त्रं குடல். ஒரு விதநரம்பு

**आंत्रसमावृतः** पु நீர்க்கோழி [பந்தமான.

**आंत्रिक** वि (की स्त्री) குடலிலிருக்கிற. தேக உள்ளுருப்பு ஸம்

**आंदोल्** 10 प ஊசலாடு. குலுக்கு. நடுங்கு अल लित वि

**आंदोलः** दोलनं न உசலாடல்.ஊஞ்சல்.நடுங்கல் ஆடல்.அசைவு

**आंदोलिक** स्त्री பல்லாக்கு. அசைதல். ஊசலாடல். தொட்டில்

**आंधकी** स्त्री தென்மேற்குக் குருடர் கூட்டம் धती அங்கரம்

**आंधसः** पु கொதித்து வரும் கஞ்சி धसिकः சமையற்காரன்

**आंध्यं** न குருட்டுத்தனம் [தெலிங்கானம்

**आंध्र** वि ஆந்திரத்தைச் சேர்ந்த ध्राः ब தெலுங்கு தேசமான

**आन्न** त्रि(नी स्त्री) உணவளிக்கப்பட்ட. அன்னத்திலுண்டான
சோறுள்ள. சோறு ஸம்பந்தமான

**आन्यभाव्यं** न வேறுருவம்

**आन्यायः** पु அரசன்

**आन्वयिक** वि நற்குலத்திற் பிறந்த. ஒழுங்கான

**आन्वाहिक** वि (की स्त्री) நித்திய ஸம்பந்தமான. தினம்அனுஷ்

டிக்கவேண்டிய

आन्वी(क्ष)क्षिकी स्त्री தர்க்கசாஸ்திரம். தத்வவிசாரம்.

आन्वीपिक त्रि (की स्त्री) அநுகூலமான

आप् 5 प அடை. பெறு. எட்டு.தொடர்ந்து பிடி.சந்தி.நேர் படு. வியாபி. பொருந்து. நுழை. ஆளாகு, அநுபவி. ஸமனுக்கு. अ முடிவடைந்திரு. அடைய, நிறைக்கப் பட்டிரு णिच् உணர, அறியச்செய்.அடி,முட்டு.தாக்கு

आपः पु ஓர் வஸு ப नं நீர்(ப்பெருக்கு. ஆகாசம். பாவம்

आपक त्रि அடைகிற. பெறுகிற. पनं சம்பாதித்தல்.மிளகு यितृ

आपकर त्रि (री स्त्री) குற்றமுள்ள. சிநேகமற்ற. துஷ்டனான

आपक्व त्रि பரிஷ்காரமாகாத. பச்சையான. பாதி வெந்த

आपक्कं न அடை. ரொட்டி

आपगा स्त्री நதி. நீர்ப்பெருக்கு गेयः நதியின் பிள்ளை. பீஷ்மர். [கிருஷ்ணன்.

आपञ्चनखः पु ஒருவிதத் தேக்கு

आपणः पु கடை पणिक त्रि வியாபார ஸம்பந்தமான. कः வியா பாரி. கடைவரி. விலைப்பட்டி

आपत् 1 प தாக்கு. நெருங்கு. மேல் விழு. இறங்கு. நேரிடு. நேர். விதிக்கு ஆளாகு. (மனதில்) வீசு. உணரப்பட் டிரு णिच् அணுகு

आपतनं न அடைதல். அறிவு இயற்கையான தொடர்ச்சி

आपति त्रि வேகமாய் வருகிற. மேல் விழுகிற तिः காற்று

आपतिक त्रि (की स्त्री) தற்செயலாயுண்டான. எதிர்பாராத. பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட कः ராஜாளி.

आपतित त्रि பங்காசாரமாய் நேர்ந்த. மேலிருந்திறங்கின

आपत्तिः स्त्री(पद्) அடைவித்தல். குற்றம் நிந்தை.மீறல்.கோண வாதம். காரணங்கள் காட்டிப் புத்தி சொல்லுதல்

आपत्य त्रि (त्यी स्त्री) சிசு, தத்திதப்ரத்யய ப்ரகரண ஸம்பந்த மான [யாணி

आपथि त्रि வழியில், பிரயாணத்திலிருக்கிற थिः थीः थ्यः பிர
आपद् 4 आ நெருங்கு. உட்செல். ஓர் நிலைக்கு வா. தாக்கதிக்காளாகு. நேரிடு. णिच् செய்து முடி. ஆளாக்கு. உண்டுபண். அடை. எட்டு. (செய்தி) எட்டவிடு. மாறுபாடடை.
आपद्, दा स्त्री ஆபத்து -कल्पः ஆபத்கால தர்மம் --कालिक (का, की स्त्री) ஆபத் காலத்திலுண்டான ·ஞீ பாரதத்தில் ஓர் பர்வம்.
आपनिकः पु பச்சைக்கல். மரகதம். இந்திர) நீலம். நீலக்கல்,
आपन्न त्रि (पद्) துயர்) அடைந்த -सत्वा கர்ப்பிணி [மணி
आपमित्यक त्रि மாற்றலில் வந்த. ऋ ஆலோசனைக்கு வந்திருப்
आपया स्त्री ஸரஸ்வதி நதியினருகே ஓர் நதி [பது
आपराह्णिक त्रि (की स्त्री) மத்தியான்னத்திற்கு மேலிருக்கிற
आपर्तुक त्रि (की स्त्री) குறிப்பானகாலங்களுக்காகஏற்பட்டிராத
आपवः पु வஸிஷ்டமுனி
आपवर्ग्य त्रि முக்தி யளிக்கிற
आपस् न ஜலம். பாவம். சடங்கு. வைதிக கார்யம்
आपस्कार न தேகத்தின் நுனி, முனை.
आपस्तंबः पु யாஜுஷ ஸூத்திரகாராகி ஓர் முனி
आपा स्त्री 1 प குடித்துவிடுஅல கேள். பார். அடக்கிமேம்படு
आपाकः पु சூளை
आपांग्य न கண்ணோரங்களுக்கு மையிட உபயோகப்படுவது
आपातः पु (पत्) மேல்விழல். கீழே தள்ளல். இந்த க்ஷணம். முதல் தோற்றம். உருவம் -दुःसह त्रि முதல் தாக்கலை யே ஸஹிக்க முடியாத -दुष्प्रसह त्रि உக்கிரமாய்த்தாக்குகிற
आपाततः अ முதற் பார்வை, தாக்கலில். உடனே [குகிற
आपातिन् त्रि மேல்விழுகிற, தகைக்கிற. கீழிறங்குகிறநேரிடுகிற
आपादः पु அடைதல். பரிசு. செய்ததிற்குக் கைம்மாறு. பிரதி

आपादनं न அடைவித்தல். உத்தேசித்தல் [பலன்
आपानं, नकं न கும்புசேர்ந்துக் குடிக்குமிடம். விருந்து. சாரயக்
आपायिन् वि குடிக்கிற. குடிப்பதில் பிரியமுள்ள [கடை
आपालि. पु பேன்
आपि: पु கனமடைதல். சிநேகிதன். அறிமுகம் त्वं சிநேகம்
आपिंजर वि சற்றுச்சிவந்த. மங்கல் சிவப்பான रं பொன்
आपिशलि: पु ஓர் பழைய வியாகரண வித்துவான் लः அவர்
आपी वि கொழுத்த. பருமனான पीः பூராடம் [சிஷ்யன்
आपीडू 10 प அமுக்கு. அழுத்து. சுருக்கு. பிழி. அலட்டு.
கலவரப்படுத்து.
आपीडः पु தலையிலணியும்) பூமாலை. சிரோ பூஷணம்
आपीडनं न அழுத்திக்கட்டல். தழுவல். ஆலிங்கனம்செய்தல்.
आपीडित वि பூமாலைகளால் அலங்கரித்த. அழுத்தின. தழுவின
आपीत वि சற்று மஞ்சளான तं தீக்கல், சுவர்ணமாக்ஷிகம்
आपीन वि (प्यै) கொழுத்த. பருத்த. பலமான नः கிணறு.
आपीनं न மடி. முலைக்கண்.
आपूपिक वि (की स्त्री) தோசை, அப்பஞ்சுடுகிற, இச்சிக்கிற,
தின்னும் பழக்கமுள்ள, தின்கிற, விற்கிற, அதோடு
சேர்க்கப்பட்ட. மிட்டாய்க் கடைக்காரன். பணியாரம்
சுடுபவன் =कः कं தோசை அடுக்கு. அப்பக்குவியல்
आपूप्य: पु மாவு
आपूषं न தகரம்
आपृच् 7 उ நிரப்பு. பரவு. முழுதும் பொருந்து. கலந்துபோ.
திருப்தி செய்துக்கொள்.
आपृक्त वि சேர்க்கப்பட்டிருக்கிற अं கலப்படமாய். கலவரமாய்
आपृ 7 उ णिच् நிரப்பு. பூர்த்திசெய். காற்றால்) நிரப்பப்பட்டிரு
आपूर वि நிறைக்கிற रः நிரப்பல். நிறைத்தல். பெருக்கு. அளவு
आपूरण वि ,, णं ,, ,, पूर्ण நிறைக்கப்பட்ட

अपूर्तिः स्त्री நிரப்பல். முழுமை. திருப்தி.
आपूर्यमाण वि நிரைகிற.நிரைக்கப்பட்டபக்ஷ: அர்த்தஇளம்பிறை
आपृच्छा स्त्री (प्रच्छ्) ஸம்பாஷணை.வந்தனங்கூறல் அறிய ஆவல்.
आपृच्छ्य वि வணங்க, வரவேற்க.துதிக்கத்தகுந்த. அழகான
आपेक्षिक वि (की स्त्री) விருப்பங்களைச் சொல்லுகிற.
आपोक्लिम 3, 6, 9, 12ம் ஸ்தானப் பெயர்
आपोमय वि (यी स्त्री) ஜலமயமான
आपोमात्रा स्त्री நீரின் ஸூக்ஷ்ம பௌதிக மூலகாரணம்
आपोशान: पु பூர்வ,உத்திராபோசனமந்திரம்ச் அதைச்செய்தல்
आप्त वि நம்பிக்கையுள்ள. நம்பத்தகுந்த. திறமையுள்ள தகுந்த. நிறைந்த. ஏராளமான. உண்மையான. நெருங்கிய பரிசயமுள்ள, ஸம்பந்தமுள்ள. ஏற்படுத்தப்பட்ட. பொது உபயோகமான. குற்றஞ் சாட்டப்பட்ட. நியாயமான.பங்கையடைந்த स: நம்பத்தகுந்த மனிதன், ஆதாரம், மூலம். சிநேகிதன். உறவினன். प्ता சிக்கான தலைமயிர்ச் வகுத்து வந்தவண்.சவு.-उक्तिः சந்தியில் அதிகமாய்ச் சேர்க்கிற எழுத்து. விகுதி. வேற்றுமையுருபு. ஒத்துக் கொள்ளத் தகுந்தசொல். ஸித்தாந்த வாக்கியம். -काम वि இச்சையை அடைந்தவன். துறவி. म: பிரம்மம் -कारिन् தகுந்தபடி, ரஹஸ்யமாய்ச் செய்பவன் पु நம்பத்தகுந்த ஆள் -गर्भा கர்ப்பிணி -दक्षिण விசேஷ தக்ஷிணைகளை யுடைய -वचनं வெளிப்படுத்தப்பட்ட விஷயம். நம்பத்தகுந்தவனின் சொல். -वाक्यं நிஜமான வாக்கியம் = -वचनं-वाच् நம்பத்தகுந்தது. स्त्री சிநேகிதனின் புத்திமதி. வேதம், பிரமாண வாக்கியம் (சாஸ்திரம்.இதிஹாஸம். புராணம்) -श्रुतिः வேதம். தர்ம சாஸ்திரம்.
आप्तिः स्त्री ஸ்திரீயோடு) ஸங்கம். கட்டல்,ஸம்பந்தம். தகுதி.

பூர்த்தி. வருங்காலம். 12 ரிக்குகள் விசேஷம். திருதம்
आप्स्य: पु தேவகண விசேஷம். அதில் முக்கியம ணம். य
आप्य वि நீரான. அடையத் தகுந்த य: ஓர் சே ர்ந்துகொள்
சிநேகம். பரஸ்பர ஸஹாய நிமித்தம்
ளல். ஒருவிதத் தேன். கீழாநெல்லி
आप्यान वि கொழுத்த. பருத்த. பலமுள் திருப்தியடை
ந்த नं அன்பு. வளர்ச்சி. प्याय: மு ழுத்தல். நிறைதல்
आप्यायनं न स्त्री (प्यै) மேன்மைக்குக் காண்டுவரல். கொழு
க்கடிப்பது.புஷ்டிக்குமருந்து ஸாமத்தில்நீரை யூற்றி
உப்பச் செய்தல் -शील தி திசெய்விக்கிற =यितृ वि
अप्यै । आ கொழு. உப்பு. வள பூரணமாகு. நிரப்பு. பெரி
தாக்கு பலப்படுத்து ணிச் சந்தோஷப்படுத்து. திரு
ப்திசெய். பெருவி த்துசெய்
आप्र·वि நிறப்புகிற.எட -முடியுமான.ஊக்கம்,பிடிவாதமான
आप्रच्छ 6 आ பிரிய பொழுது நமஸ்கரித்து உத்திரவு
பெறு. நம ஸ்கரித்துப் பெறு. கேள். மெச்சு. புகழ்.
வாழ்த்து வரவேற்று
आप्रदिवं अ பொழுதும்
आप्रपदं अ ால் வரையில் எட்டுகிற न. அவ்விதச்சொக்காய்.
आप्रपदीन न பாவாடை
आप्री स्त्री சாந்தி, ஸமாதானம் செய்தல். ஒருவனின் தபவை
யடைதல் ब சாந்திபாடம், யாகத்தில் சொல்லப்படும்
அப்ரீ ரிக்
आप्रीतपः,पाः கோபந்தணித்தவர்களை ரக்ஷிக்கிறவரான விஷ்ணு
आप्लव, प्लुत,-व्रतिन् விருதஸ்நானம் செய்து கிருஹஸ்தாச்ரம
மடைந்த பிரம்மசாரி — प्लुत:, तं முழுகல் प्लावित ஸ்நா
னம் செய்விக்கப்பட்ட
आप्लाव: पु ஸ்நானம். ஜலப்பிரளயம். முழுகிப்போதல்

आ... आ குதி. தாள். முழுகு. அமிழ் ரிச்ச நனே. தெளி.
...ள்ளமிடு. முழுக்கடி. மேல் வழி. கலக்கு. குழப்ப
ம...பச்செய்

आप्वन् पु ...று. ஆகாசம் ப्वा கழுத்து

आफूकं न அட...

आबद्ध वि அடை...ப்பட்ட. தடுக்கப்பட்ட द्ध பூட்டல். நுகத்
தடி. நகை. ...ன்பு -माल மாலை, வரிசையாயிருக்கிற

आबधः पु கட்டல்

आबंधः, धनं न கட்டு அ... நுகத்தடிக்கட்டு. எருதை, நுகத்
தடியில், நுகத்தடி...பக் கலப்பைக்குக் கட்டுவது.
அன்பு. நகை.

आबंधू 9 प கட்டு. பூட்டு. வை...பாருத்து. உருவாக்கு. பற்று.

आबर्ह वि கிழிக்க, பிடுங்கியெறியச்...கியுள்ள र्ह, र्हणं கொலை.

आबर्हिन् वि கிழித்தெறியத் தகுந்த

आबल्यं न பலமின்மை

आबाधू 1 आ தடு. அடக்கு. ஹிம்ஸி. பிச...ய்வர்ணி, அறிவி

आबाधः पु கெடுதி. தகைப்பு धा துன்பம். வே...தனை. முக்கோ
ணத்தின் நீண்ட அடிப்பாகம்.

आबाल्यं न பால்யதசை முடிவு

आबिल वि கலங்கலான. உடைக்கிற, தெளிவிக்கிற

आबोधनं न கற்பித்தல். அறிதல். அறிவு. போதனை

आब्द वि (ब्दी स्त्री) மேக ஸம்பந்தமான, அதிலுண்டான

आब्दिक वि (की स्त्री) வருஷத்திய.

आभगः पु கூட்டாளி. பாகிக்கப்பட வேண்டிய.

आभरणं न (भृ) நகை. அலங்காரம் அரு போஷணே

आभा 2 प பிரகாசி. எரி. தோன்று. பிரகாசத்தில் மிஞ்சு

आभा स्त्री ஒளி. நிறம். மேனி. (स अ. தில்) தோற்றம். பிரதி
பிம்பம். நிழல் =भातिः ஒளி.

आभाणकः पु பழமொழி. அகாரணமாய் அபவாதமடைந்தவன்
आभाषः पु சொல்லல். முகவுரை भाष्यं பிரசங்கிக்கப்பட வேண்டியது.
आभास् 1 आ பிரகாசி. தோன்று. பொய்த்தோற்றங்கொள்ணிச்
आभास् स्त्री ஒளி. காந்தி
आभासः पु „ „ பிரதி பிம்பம். பொய்த்) தோற்றம். கருத்து. போலி (நியாயம்.
आभासनं न தெளிவாக்கல். பிரகாசிப் பித்தல். [கணம்
आभासु(स्व)र वि பிரகாசமான रः 64 போடங்கிய ஓர் தேவ
अभिचरणिक, चारिक वि மாயையான. कं மந்திரம். சாபம்.
आभिजन वि பிறவிஸம்பந்தமான. முன்னோர் பெயராலுண்டான (பெயர்போல்) नं உயற்பிறவி. பாண்டித்யம்.
अभिजात्यं न உயர் பிறவி. அந்தஸ்து. சோபை. „
आभिजित वि அபிஜிந் நக்ஷத்திரத்திற் பிறந்த
आभिधा स्त्री ஓசை. பதம். பெயர். சொல்லல்
आभिधानिक वि அகராதியிலிருக்கிற कः நிகண்டாசிரியன்.
आभिधानीयक वि பத ஸம்பந்தமான कं சொல்லின் லக்ஷணம்
आभिप्लविक वि அபிப்பிலவச் சடங்கு ஸம்பந்தமான.
आभिमुख्यं न திக்கு நோக்கல். எதிராக இருத்தல். அனுகூலம்
आभिरामिक वि நல்ல. மனோஹரமான
आभिरूपकं, रूप्यं न அழகு
आभिषेचनिक त्रि பட்டாபிஷேக ஸம்பந்தமான
आभिहारिक वि தானமாய்க் கொடுக்கப்படவேண்டிய. மோசத்தில், பலாத்காரமாய் எடுத்துக் கொண்டு போகப் பட்ட कं தானம். வீட்டறை.
आभीकं न ஓர் ஸாமகான விசேஷம்
आभीक्ष्ण्यं न திரும்பித்திரும்பி வால். அதிகம். முடிவின்மை
आभीय वि भவில்முடியும்பாணினியின் அத்தியாயத்திலுள்ள

आभीरः पु இடையன் राः ஓர் தேசம், ஜனம். री இடைச்சி. இடையரின் பாஷை -पल्लिः, ल्ली, ल्लिका இடைச்சேரி
आभील வி பயங்கரமான. பாதைப்படுகிற. लं சரீர பாதை
आभीषुः पु கிரணம். கயிறு.
आभु வி பரவுகிற. எட்டுகிற. கை) சூனியமான. லோபியான
आभुक வி சூனியமான. சக்தியற்ற.
आभुग्न வி சற்று வளைந்த, கோணலான
आभू । प ஆஜராயிரு. உயிரோடிரு
आभू வி நெருங்குகிற. பிரயோஜனப்படுகிற. விதிப்படி பிரயோகிக்கப்பட்ட (மந்திரம் போல்). மிகச் செழுமையான पु சிறை भूषेण्य துதிக்கத் தகுந்த.
आभूतिः स्त्री பரவல். வெல்லும் சக்தி. ஸாமர்த்தியம்.
आभृ । प கொண்டுவா. சும. நிரப்பு. தாங்கு. भरित ஜோடித்த
आभेरी स्त्री ஸ்திரீயாய் பாவிக்கபப்படும் ஸங்கீதத்தில்ராகம்
आभोगः पु வளைவு. கோணல். சுற்றளவு. எல்லை. பருமன். விஸ்தீர்ணம். நீளம். முயற்சி. (வருணனால் குடையாக உபயோகிக்கப்படும்)பாம்பின்படமெடுத்ததலை. பாம்பு அனுபவம். பூர்த்தி. உபஹாரம். மாலை. புனுகுபூனை
आभोग्य வி(ஸோமரஸம்)அனுபவிக்க வேண்டிய. यं பிழைப்பு
आभ्यंतर வி உட்புறமான. பேசஹேதுவாகும் 2ல் 1 முயற்சி
आभ्यवकाशिक வி திறந்த வெளியில் வசிக்கிற
आभ्यवहारिक வி சாப்பிடத் தகுந்த
आभ्यादायिकं न ஸ்திரீயின் ஸொத்து விசேஷம் [கிற
आभ्यासिक வி பழக்கத்தின் பயனான. பயிலுகிற அருகேயிருக்
आभ्युदयिक வி நன்மை விளைவிக்கிற' ஒன்றின்எழுல், மேன்மையின் ஸம்பந்தமான. சிறந்த. உயர்த்தப்பட்ட. நாந்தீ சிராத்தம், சுபகாலம்.
आभ्रिक வி கட்டப்பாரையால் தோண்டுகிறவன் [ஸஒசகம்

आम् अ ஆம். சரி. நல்லது. ஞாபகம். உறுதி. உண்மையில்
आम वि பச்சையான. சமைக்கப்படாத. பழுக்காத. ருது வாகாத. ஜீர்ணமாகாத. சுட, சூளைபோட, காய்ச்சிப் பதனுக்கப் படாத सं மல விஸர்ஜனத்தில் முக்கல், மலக்கட்டு. தூற்றப்பட்ட தான்யம். मः நோய். அஜீர் ணம் -अतिसारः குடல் கோளாரால் உண்டான சீத பேதி -आशयः இரைப்பை -गंधि பச்சை மாம்ஸம், எரியும் பிண நாற்றமுள்ள -त्वच् மிருதுவான தோல் -पाकः மகோதரரோக ஆரம்பநிலை -पीनसः மூக்கில்ஒழுகு தல் (சளி)-रक्त சீ, ரத்தமான மலவிஸர்ஜனம் - रसः ஜீர்ணமாகாத அன்னரஸம் -वातः மலக்கட்டு -शूलः அஜீர்ணத்தால் வயிற்றுவலி
आमक वि பச்சையான आमता, त्वं பச்சை. தயாராகாமை
आमंजु वि அழகான. ரம்யமான
आमंडः पु சிற்றாமணக்கு
आमनं न சிநேக பாவம். நேசம்
आम(मा)नस्यं न துன்பம். துயரம்
आमंत्र् 10 आ (பிரியும் பொழுது)நமஸ்கரி.ஸம்பாஷி.சொல். (சிராத்தத்திற்குப்) பிரார்த்தி, வரி. அழை
आमंत्रणं, णा வாழ்த்தல். வரவேற்றல். உத்தரவு. ஸம்போத னவிபக்தி. கேள்வி. [வன்.
आमंत्रयितृ वि கேட்டல்.पु(ता)பிராம்மணபோஜனம்செய்விப்ப
आमंत्रित वि அவச்யமானவைகளைச்செய்யவற்படுத்தப்பட்ட तं ஸம்போதனவிபக்தி.
आमंत्र्यं नஸம்போதனவிபக்தி பதம் मंत्रः சித்தாமணக்கு
आमंद्रः पु சற்று மெதுவான உரத்தசப்தம். கடகடசப்தம்
आमयः पु நோய். கெடுதி. அஜீர்ணம். यं மூலிகைவிசேஷம்
आमयाविन् वि அஜீர்ணத்தால் வருந்துகிற. நோயுள்ள.

आमरः पु குரு வேர். रा, री இந்திராணி. அமராவதி [மூள்ள
आमरणांत, तिक वि வாழ்நாள் முழுதும். மரணம் வரையிலு
आमरितृ पु அழிப்பவன்
आमर्षः, र्षण न கோபம். பொறுமை யின்மை.
आमलकः, की நெல்லி. ஆடாதோடை कं நெல்லிக்காய்
आमहीया स्त्री ஓர் ரிக் வேத ரிக் விசேஷம்
आमात्यः पु மந்திரி. புத்தி சொல்லுபவன். சேனபதி.
आमानस्यं न வலி. துக்கம்
आमालकः, कं न மலைக்குஅடுத்தபூமி.இருமலைநடுவில்கணவாய்
आमावास्य वि அமாவாஸை, அன்று உத்ஸவ ஸம்பந்தமான
அன்று பிறந்த, நேர்ந்த. स्यं அன்று செய்யும்சடங்கு.
आमि(मी)क्षा स्त्री பால் திரிசல் क्षयं क्षीयं, क्षीणं திரிசலுண்டா
க்கும்மோர் [யின் சிசு
आमित्र वि விரோதமான, அருவருப்பான त्रिः पु स्त्री விரோதி
आमिश्र, श्लृ वि தயாராய்க் கலக்குகிற
आमिष् न மாம்ஸம்
आमि(मी)षं,षी त्रि,, பலி. இரை. அனுபவவஸ்து. உணவு. லஞ்
சம். இச்சை. காமம். அனுபவித்தல். இன்பப்பொருள்.
உருவம். இலை. எலிமிச்சம் பழம். தலையணை -प्रियः,भुज्
आमिषी स्त्री ஜடாமாம்ஸி [கழுகு
आमिस्र पु பச்சை மாம்ஸம். பிணம்.
आमील् । प (கண்களை) மூடு. मीलनं கண்களை மூடல்
आमीवत् वि மேல் விழுகிற.
आमुक्ति अ மோக்ஷமடையும் வரையில் क्तिः स्त्री முக்தி. விடுதலை
आमुखं न ஆரம்பம். நாடகப் பிரஸ்தாவனை अ எதிராய்
आमुच् 6 उ தளர்த்து. போகவிடு. விடுவி. உடு. ஜோடி. எறி.
எய். களை. கழற்று. मुक्त वि मुक्तिः मोचनं
आमुपः पु முள் மூங்கில்

**आमुर्, रि वि** அழிக்கிற. ஹிம்ஸிக்கிற
**आमुष्मिक वि** பரலோக ஸம்பந்தமான
**आमुष्यायण, णः पु** நன்கு பிறந்த. நற்குலத்தில், பிரஸித்த புருஷனுக்குப்பிறந்தவன்
**आमूलं अ** முழுதும்
**आमृण त्रि** காயம், சேதப்படத்தக்க
**आमृद् 9 प.** அமுக்கு. நசுக்கு. பிழி. முரடாய்க்கையாள் **मर्दः** ஓர் நகரம்
**आमृश् 6 प** தொடு.மேலேகைபோடு.கைப்பற்று.தகை.துடை ஹிம்ஸி **मर्शः, मर्शनं** புத்திமதி. **मृष्ट** ருசியாக்கப்பட்ட
**आमृष्यमाण त्रि** நோயுள்ள
**आमेन्य वि** எல்லாப் பக்கங்களிலுமிருந்து அளக்கப்பட வேண்டிய. பாணத்தால், தாழ்ப்பாளால் அடையப் பட்ட வேண்டிய
**आम्रोटनं न** அமுக்கல். மிதித்தல்.
**आमोदः पु** சந்தோஷம். உக்கிரமான) வாஸனை. **मोदित**
**आमोदनं न** களிப்பித்தல்.வாஸனையுண்டுபண்ணல்
**आमोदिन् त्रि** களிக்கிற. வாஸனையுள்ள. **पु** 17 வயதுள்ள யானை **दी** முகவாஸனை. (கற்பூரமாத்திரை)
**आमोष वि** திருடுகிற. கொள்ளை யடிக்கிற **षः** திருடு **षिन्** திருடன்
**आमोहनिका स्त्री** ஒருவித நல் வாஸனை
**आम्ना । प** பரம்பரையாய் வா. மதி. விதி.மனதில்தரி.மெச்சு
**आम्नात वि** சிக்ஷிக்கப்பட்ட. சேனையைப் பிரித்த. நற்குண மான **तं** படிப்பு. **तिन्** **वि** வேத மோதினவன் **नं** வேத மோதல், ஆவிர்த்தி
**आम्नायः पु** பரம்பரையாய் வந்த வைதிக கிரந்தங்கள்.வேதம். சிஷ்டாசாரம். ஸம்பிரதாயம். உபதேசம் பெற்றது. போதனை. தந்திரம். வம்சங்களின் பரம்பரை **-सारिन्**

ஸம்பிரதாயத்தைக் கொண்டாடுகிற. வேதத்தின் ஸாரத்தையுடைய

आम्नायवत् वि பரம்பரா உபதேசமாய் அறிய,தொடரப்பட்ட

आंबरीषपुत्रकः पु அம்பரீஷபுத்திரர்களால்வசிக்கப்பட்டதேசம்

आंबष्ठः पु அம்பஷ்ட தேசவாஸி

आंबिकेयः पु திருதராஷ்ட்ரன். விநாயகர். ஸுப்ரம்ஹண்யன்

आंबुदः पु பாணம்

आंभस वि நீரான. सिक ஜலத்திலிருக்கிற कः மீன்

आम्रः पु மா त्रं மாம்பழம் -आवर्तः எரிப்பு மாமரம். தடிக்கச் செய்த மாம்பழ ரஸம் -कुटः ஓர்மலை -गंधकः பெருங் கரணை -पेशी மாங்காய் வத்தல் -वणं மாந்தோட்டம்.

आम्रातः पु எருப்பு மா तं. அதன் பழம்.

आम्रातकः पु ,, தடிக்கச்செய்த மாம்பழரஸம். ஓர் மலை.

आम्रिमन् पु புளிப்பு

आम्रेड णिच् திருப்பித்திருப்பிச்சொல் डनं 2,3 தரம்சொல்லல்

आम्रेडितं न சொன்னதையே சொல்லல். ,, இரட்டிப்பில் பின்பதம். புனருக்தி

आम्लः, म्ला स्त्री புளியமரம். म्लं புளி. புளிப்பு -खलः சாறு.குழம்பு -लोणिका புளியாரை

आम्लि(म्ली)का स्त्री புளிய மரம். குடலில் புளிப்பு

आयः पु வருகை. வரவு. வரும்படி தீர்வை.லாபம்.அந்தப்புரக்காவலன். லக்கின 11ம் வீடுஎயிது வரவு செலவு -स्थानं தீர்வை வஸூலிக்கப்படுமிடம்

आयत् वि வருகிற. நெருங்குகிற वसु யாருக்குப்பணம்,நன்மை வருகிறதோ அவன். आयनं வரல். आयिन् வருகிற

आयतीगवत् अ பசுக்கள் வீட்டிற்குத் திரும்பும் வேளையில்

आयःशूलिक சுறு சுறுப்பான, சலியாத. இளைப்பில்லாத. தோற்காத कः கார்யத்தைமுடித்துக்கொள்ளபலாத்காரம்

செய்பவன். [ர்ப்பி

**आयज्** । आ(தேவதைகளை)பூஜி.வேண்டியதைக் கொடு. ஸம

**आयजि**वि எல்லாபக்கங்களிலும்ஹோமஞ்செய்கிறகொடுக்கிற

**आयजिष्ठ** त्रि யாகஞ்செய்கிற. சிறந்ததையளிக்கிற

**आयज्यु** त्रि யாகஞ்செய்யக்கருதுகிற

**आयत्** । आ பாடுபடு. தங்கு.ஆதரவிலிரு.வந்துசேர்.எட்டு வசி

**आयत** वि (यं) பெரிய. அதிகமான. இழுக்க, மயக்கப்பட்ட. தூரமானதः அகலத்தைப்பார்க்கிலும்நீளம்அதிகமான உருவம் अ தீர்க்கமாய் -आयतिः நீண்டதொடர்ச்சி. தூரமான எதிர்காலம் -छदा வாழை -लेख நீண்டு வளைந்த -स्तूः पु ஸ்துதி பாடகன்

**आयतनं** न தங்கும்) இடம். வீடு. ஆச்ரயம். ஆகாரம்.கர்ப்பக்கிருஹம். வைதிகாக்கினி வைக்குமிடம். பலிபீடஸ்தானம். யாகத்திற்கு பூமி.மனை.களஞ்சியம்.ரோகஹேது.

**आयतनत्वं** न இடமாயிருக்குந்தன்மை

**आयतनवत्** वि இடம், வீடுடைய. பிரம்மனின் 4ம் பாதம்

**आयत्त** वि சொன்னதைக் கேழ்க்கிற. கீழ்ப்படிகிறதா, त्वं அதீனம். வணக்கம்

**आयत्तिः** स्त्री பராதீனமாயிருத்தல். அன்பு. பலம். எல்லை. உபாயம். பரிஹாரம். மகிமை. அந்தஸ்து.நாள். நெறியோடிருத்தல். எதிர்காலம். நீட்டு

**आयतिः** स्त्री (यं) நீளம். எதிர்காலம். வரும்பயன். மகிமை. கையை நீட்டல், அங்கிகரித்தல். வேலை. சேர்க்கை. ஸம்பந்தம். மூலம், உத்பத்தி. (மனதை) அடக்கல்

**आयथातथ्यं** न தகாமை. பொருந்தாமை

**आयम्** । उ நீட்டு. பரப்பு. (மூச்சை) அடக்கு. பெறு. உடைத்தாயிரு. நோக்கி எடுத்துச் செல் **णिच्** வெளியெடு. ஒதுக்கு. இடம் மாற்றிவை.

आयंतृ पु அணுகுபவன். கட்டுகிறவன். தூக்குகிறவன்.
आयमनं न (வில்லை) வளைத்தல். मान त्रि வருகிற
आयल्लकः पु பொறுமையின்மை ஏக்கம். தவறுதல்
आयवनं न துழாவக் கரண்டி
आयवसं, सः पु மேயப் புற்றரை
आयस् 4 प உழல். சோர்வடை. णिच् அலட்டு. கொல். ஆயா
ஸப்படுத்து. சலிப்புண்டாக்கு. குறை. கயிறு பூட்டு
आयस वि இரும்பாலான. ஆயுதந் தரித்த सी இரும்புடுப்பு.
सं இரும்பு (ப் பொருள், ஆயுதம். ஊதும் வாத்தியம்
आयस्कारः पु யானையின் மேல் தொடைப்பாகம்
आयस्त त्रि எறிய, அனுப்பப்பட்ட. சாணை பிடிக்கப்பட்ட.
தள்ள, கோபிக்க, எடுத்துக் கொள்ளப்பட்ட
आया 2 प வா. நெருங்கு. வந்துசேர். அடை. எட்டு. ஒரு
நிலைக்கு வா. பயனுப் வா.முடியுமா யிரு [லடைந்த
आयागः पु யாகத்தில் கொடுக்கப் படுந்தானம் -भूत யாகத்தா
आयाचित वि அவசரமாய்க் கேட்டனுப்பிய, பிரார்த்தித்த
आयात वि வந்த. நெருங்கின तं அதிகம். அபரிமிதம் तिःवரல்.
आयानं न வருகை. ஸ்வபாவமான குணம் यापनं அழைத்தல்.
வரப்பண்ணல். [ண்ட.
आयामः पु நீளம். விரிவு. பரப்பல். அடக்கல். நிறுத்தல்.वत् நீ
आयामित वि நீட்ட, பரப்பப்பட்ட. मिन् त्रि அடக்குபவன் ,,
आयासः पु பாடு. கஷ்டம். தளர்ச்சி. வேதனைஸகளைப்பிக்கிற
आयासिन् वि சோர்ந்த. பாடுபடுகிற.
आयु वि உயிரோடிருக்கிற. அசைகிற. युः ஐந்து. மனிதன்.
மனிதவர்க்கம். பிராணிவர்க்கம். சரம். முதல் மனி
தன். வாழ்நாள். காற்று. பிள்ளை. ஸந்ததி. புரூரவஸ்
ஊர்வலிகளின் பிள்ளை -पक्व वि மனிதரோடு சேர்க்கப்
பட்ட [பதிலாய் வந்தவன்,

आयुक्तः पु மந்திரி. பிரதிநிதி. ஏஜண்ட். அதிகாரம் பெற்று
आयुज् 7 उ णिच् இணை. பூட்டு. நியமி. (மனதை) திருப்பு,
நாட்டு=णिच् வை. உருவாக்கு युक्त वि [ண் ணை
आयुत वि கலக்க, உருக்கப்பட்ட. तं பாதி உறக்கப்பட்ட வெ
आयुध् 4 आ தகை. எதிர். சண்டை செய்=णिच् மேல் விழு
आयुधं,धः पु ஆயுதம். சொப்பு. धं நகைகளுக் குபயோகப் படும் தங்கம். धानि ब நீர் -इंद्रः விஷ்ணுசக்கிரம் -जीविन् சிப்பாய். -धर्मिणी தழுதாழை -पिशाचिका யுத்தாவேசம்
आयुधिक वि யுத்தாயுத ஸம்பந்தமான कः வீரன்
आयुधिन् धीय वि ஆயுததாரியானவீ (यः ,,
आयुस् न வாழ்வு. வாழ்நாள். பிராணதாரசக்தி. நெய். உண வு. தீர்க்காயுளுக்காகச் செய்யப்படும் ஆயுஷ்டோமம். (கடைசி स् ஸந்தியில்ष, र् ஆக மாறும்) -द्रव्यं நெய். மருந்து -योगः ஜ்யோதிஷரீதியாக ஓர் யோகம் -वेदः அதர்வவேதத்தைச் சேர்ந்த தான வைத்திய சாஸ் திரம். (இதன் 8 விதம் அறு) -शेषः மீதி காலம்.ஆயுள் முடிவு. குறைவு. -स्तोमः ஆயுஷ்யஹோமம்.
आयुष्मत् वि உயிரோடிருக்கிற. நெடுநாள் வாழ்ந்த. நீடிக்கிற. பழய. पु கிருத்திகை. 27ல் 3வது யோகம்.
आयुषं (स. अ தில்) வாழ்நாள்.
आयुष्कः पु வாழ்நாளைச் சொல்லுவது.
आयुष्य वि ஆயுள் விருத்திகர, பிராணதாரமான ष्यं வீர்ய சக்தி. வாழ்நாளின் ஆதிக்கியம். குழந்தைபிறந்தபின் செய்யப்படும் சடங்கு
आये अ ஆசையைக் காட்டும் ஸம்போதன ஸூசகம்
आयोगः पु நியமித்தல். கார்யம். கரை.கப்பல்,படகுகள் தங்க நீ ரோரம் கற்களால் கட்டப் பட்டிருப்பது. தடை. உபஹாரம்.

आयोगवः पु வைச்யச்சிக்கும்சூத்திரனுக்கும்பிறந்தவன்வீ स्त्री
आयोजनं न இணைத்தல்.கிரஹித்தல். திரட்டல்.உழைப்பு. जित
आयोधनं न யுத்தம். போர்க்களம். கொல்லுதல்
आरं, रः पु பித்தளை. தரு. மூலை. ஓர் மரம். சனி. செவ்வாய். போதல். தூரம். சமீபம். எல்லை முடிவு रं பொன் रा தோல் தைக்கும் ஆயுதம். சலாகை. நாராசம். தாற்றுக்கோல். ஜாட்டி. சக்கிர இலை, ஆர், சிற்கம்பு -अग्रं தாற்றுக்கோல் நுனி முள் -आवलिः விந்தியபர்வதத்தில் தொடர்ச்சியான ஒரு பாகம் -कूटं, टः பித்தளை.
आरकात् अ தூரத்திலிருந்து
आरक्ष वि காப்பாற்றப்பட்ட, தகுந்த. क्षः,क्षा பாதுகாப்பு.யானையின் கும்பஸ்தலஸந்தி,அதன் கீழ்ப்ரதேசம் சேனை
आरक्ष(क्षि)कः पु ரோந்துக்காரன். உலாவுங்காவலன். பாராகாரன். போலீஸ், அதிகாரி. கிராமாதிபதி.
आरग्वधः पु வைத்திய உபயோகமான தான கொன்றை धं [அக்காய்.
आरघट्टः पु பெரிய, பாழுங்கிணறு
आरटः पु நடிப்பவன்
आरट्टः पु குதிரைக்குப் பிரவலித்தமான பஞ்சாப்தென்கிழக்கே ஹயரத் தேசம். இத்தேசக்குதிரை ट्टाः இத்தேசஜனம் =-जः
आरणं न ஆழம். பாதாளம். மிகச்சரிவானப்ரதேசம்
आरणिः पु நீர்ச்சுழல். கோழி
आरणेय त्रि அரணியிலிருந்துண்டான यः சுகர்
आरण्य त्रि காடான. காட்டிலுண்டான, ஸம்பந்தமான. ण्यः, ण्यं காடு. விரையாமலே முளைக்கும் ஓர் தான்யம். சிலராசிகள்.சாணி-गानं ஸாமகானவிசேஷம்-मुद्गः ஓர் தான்யம் -राशिः ஸிம்ஹ, மேஷ, விருஷபராசிகள். மகரராசியின் முன் பாதி

आरण्यक त्रि காடுஸம்பந்தமான, உண்டான कः வனவாசிக்கா ட்டிலோதப்பட வேண்டியவேதத்தில்வேதாந்த பாகம்
आरत त्रि (रं) சாந்தமான. तिः ஓய்வு.தெய்வத்திற்குதீபாரதி
आरथः पु ஒத்தை மாட்டு, குதிரை வண்டி
आरनालं न கஞ்சி. காடி சாத்தீர்த்தம்
आरब्ध त्रि (रभ्) தொடங்கப்பட்ட ब्धं ஆரம்பம் = ब्धिः स्त्री
आरभ् । आ தொடங்கு. சுறு சுறுப்பாயிரு. நம்பியிரு. அடை. எட்டு, பெறு. கைப்பற்று. உருவாக்கு
आरभटः पु தைர்யஸ்தன் टः, टी தைர்யம். टी நாட்யவிசேஷம் வியாசநடை விசேஷம் 4ல் 1. பயங்கரமானதைவத்த ன்மை பொருந்திய செய்திகளை நடித்துக்காட்டல்
आरभ्य अ ஆரம்பித்து. ஆரம்பத்தில். முதற்கொண்டு.
आरंभः पु தொடக்கம். முகவுரை.செய்கை. தயாரித்தல்.ஆரம் பிக்கப்பட்டது. வேகம். பாடு. கர்வம்.கொலை.நடிக்கை. நாடகக்காக்ஷி, திரை.
आरंभक त्रि ஆரம்பிக்கிற. செய்ய ஏற்றுக்கொண்ட
आरंभणं न கைப்பற்றல். பற்றுமிடம். கைப்பிடி
आरंभिन् त्रि ஊக்கமுள்ள. புதுயோசனை,யுக்திகள்செய்பவன்
आरम् । प ஸுகம் காண்.நில்.நிறுத்து(பேச்சை) இளைப்பாறு
आरमणं न உற்சாகம். வேடிக்கை. ஓய்வு. தங்குமிடம்
आरंवणं न ஆதாரம். பிடிப்பு
आर(रा)वः पु (रु) சப்தம். கூச்சல். ஊளை. கத்தல் ஓர்ஜனம்
आरस्यं न ருசி, ஸாரம் இன்மை
आरात् अ அருகே. தூரத்தில். நேராக, உடனே
आरातिः पु விரோதி
आरातीय त्रि அருகாமையான. தூரத்திய.
आरात्तात् अ தூரத்திலிருந்து
आरात्रिकं न தெய்வத்திற்குத்தீபாரத்திசெய்தல். அவ்விளக்கு

आराध् 5 10. प. ஆராதி. சாந்தப்படுத்து. திருப்தியாயிரு
आराधक वि அர்ச்சகன்
आराधनं न விருந்து. உபசரணை. திருப்தி செய்விக்க உபாயம். பூஜை. சமைத்தல். அடைதல். நிரைவேற்றல் —
— ना உபசாரம் नी (தெய்வத்தின்) கோபந்தணித்தல்
आराधनीय, आराध्य वि பூஜிக்கத் தகுந்த. धयितृ பூஜகன்
आराधयिष्णु वि திருப்திசெய்விக்கமுயலுகிற.பூஜிக்க இச்சிக்கிற
आराम वि இன்பமான. मः ஆனந்தம். தோட்டம். ஓர் மீன்
-शाका அறைக்கீரை -शीतला ஓர் வாஸனைச் செடி
आरामिकः पु தோட்டக்காரன். [ளுபவன்
आरालिकः पु சமையற்காரன். ஒழுங்கீனமாய் நடந்துகொள்
आरावः पु கூவல் राविन् वि சப்திக்கிற. சப்தமுள்ள
आरित्रिक वि ஓடத்தின் துடுப்பு ஸம்பந்தமான.
आरीण त्रि போன
आरु 2 प கத்து. கதறு. இரை. உக்காளமிடு. ஊளையிடு. துதி
आरुः पु பன்றி. நண்டு. ஓர்மரம் स्त्री கமண்டலு.
आरुकः पु சீத கரமான ஹிமயமலையிலகப்படும் ஓர் மூலிகை
आरुच् णिच् இன்பமாய்க் கருது.வரி.பிரியப்படுத்து காலியாக்கு
आरुज, जवि துன்பப்படுத்துகிற.கொல்லுகிற.உடைக்கிற — जत्नु
आरुणि वि அருணனிடமிருந்துண்டான, ஸம்பந்தமான
णिः உத்தாலகர், அருணரின் ஸந்ததி. ஸூர்ய புத்திரன். யமன். வைனதேயன்
आरुणी स्त्री மருத்துக்களின் பெட்டை, சிவப்புக் குதிரைகள்
आरुध् 7 उ தடு. ஒதுக்கு. அடக்கு. அடை (சிறையில்). முற்றுகை போடு, கெட்டியாய்ப் பிடித்துக்கொள் णिच्
आरुरुक्षु वि ஏற, எட்ட இச்சிக்கிற (रुह्)
आरुषी स्त्री ஔர்வரின் தாயாரான மனுவின் புத்திரி
आरुष्करं न செராய் மரத்தின் காய்

**आरुह्** । प ஏறு. கால்களுக்கு மத்தியில் வைத்துக் கொண்டு நில். சவாரி செய் அல அதிகாரம் செய். ஒருவேலையில் துணிந்திறங்கு. அடை, பெறு णिच् உயர்த்து. வளரச்செய். நடு. நிலை நாட்டு. பிரதிஷ்டைசெய் அலஉண்டு பண். வை. நாட்டு. நியமி. ஓர் நிலைக்குக் கொண்டுவா. சுமத்து, சாட்டு. கயிறு பூட்டு

**आरुह्** वि ஏறுகிற स्त्री தேகச் சதை சுரப்பு, அனுவச்யமாய் தேகத்தின் மேல் சதை வளர்ந்திருத்தல். குருத்து

**आरुह** वि மேலுக்கேறுகிற हः ஏறல்

**आरू** पु பொன் நிறம். ஹிமயமலையில்ஓர்மூலிகை = आरुः

**आरूढ** वि ஏறின. மேலே உட்கார்ந்த ढिः स्त्री ஏறல். மேன்மை உயற்சி அல

**आरे** अ தூரத்திலிருந்து. தூரே. கிட்டே -अघ தூரேஒதுக்கப்பட்ட தீமையையுடைய -शत्रु விரோதி துலைந்த

**आरेकः** पु (रिच्) காலிசெய்தல். சுருங்கல். சந்தேகம். அதிகம்

**आरेचित** वि (रिच्) காலி செய்ய, கலக்க. சுருக்கப்பட்ட

**आरेवतः** पु கொன்றை तं அதன் காய்

**आरेहण** न நக்கல். முத்தமிடல்

**आरोकः** पु (रुच्) சிலந்திக்கூட்டு நூல்களின் நடுவில் சிறுஒளி. உள்ளே பிரகாசிக்கிற = आरोचन

**आरोग्य** न நோயின்மை -शाला வைத்திய சாலை

**आरोढृ** वि ஏறுகிறவன்

**आरोपः** पु (रुह्) ஒன்றின் தன்மையை இன்னொன்றிர்க்குஏற்றுவித்தல். ஸமமாய்ப்பாவித்தல். அபேதம். சுமத்தல், இடல். உள்ளே, மேலே வைத்தல். ஸம்பந்தப்பட்டிருத்தல். மேன்மையான நிலை.

**आरोपक** वि வைக்கிற. நாட்டுகிற. நடுகிற

आरोपणं न (रुह्) உள்ளே, மேலே,பொறுப்பில் வைத்தல் அரு
நிலை நாட்டல் (ஸுவர்க்கத்திக்கு)
आरोपित त्रि பரிசுத்தமாக்கப்பட்ட. தற்செயலான. ஆரோபி
க்க,இட்டுக்கட்டப்பட்ட
आरोह:पु ஏறுபவன் (ஸாரத்தியம்செய்பவன்குதிரை,தேரில்).
உன்னதஸ்தானம். உயற்சி. உயரம். கர்வம். மலை,குவி
யல். ஸ்திரீயின் புட்டங்கள்.நீளம்.சுரங்கம்.ஓர் அளவு.
இறங்கல்
आरोहक वि ஏறுகிற.சவாரிசெய்கிற.உயர்த்துகிற.எழுந்திருக்
கிற कः ஓட்டுபவன். மரம்
आरोहणं न (रुह्) ஏணி. படிக்கட்டு. செடிகள்முளைத்தல்,துளி
ர்கள் விடல். வண்டி. நாட்டிய மேடை
आरोहणिक वि ஏறும் ஸம்பந்தமான हिन्‌ त्रि ஏறுகிற.ஸங்கீதா
லங்கார பேதம். रोहः கட்டு மரம்
आर्कत्रकं न தேன் போன்ற ஓர் தாது விசேஷம்
आर्कः पु யமன். சனி. ஸுக்ரீவன். கர்ணன். வைவஸ்வதமனு
आर्क्ष त्रि (र्क्षी स्त्री) நக்ஷத்திரஸம்பந்தமானது र्क्षः ரிக்ஷனின்
ஸந்ததி, பிள்ளை -वर्षः நக்ஷத்திரராசிகளின் சுழற்சி
आर्क्षोद ரிக்ஷா தாமலையில் வஸிக்கிற, குடிகொண்ட
आर्गलः, ली स्त्री தாழ்ப்பாள். வண்டியின் அச்சாணி
अर्ग्वधः पु கொன்றை மரம். [தேன்.
आर्घा स्त्री மஞ்சள் தேனீ र्घ्यं இச்சம்பந்தமான र्घ्यं காட்டுத்
आर्च त्रि பக்தியுள்ள. பூஜிக்கிற. ரிக், ரிக்வேதஸம் பந்தமான
आर्चिक त्रि ரிக் வேத ஸம்பந்தமான. விவரிக்கிற कं ஸாமம்.
आर्चीक त्रि ரிசிகமலை ஸம்பந்தமான कः ரிசிக மலை
आर्जक त्रि ஸம்பாதிக்கிற कः ஓர் மரம்
आर्जवं न (ऋजु) நேர்மை. கபடமின்மை. வணக்கம். கருப்பு
க்கஞ்சாங் கோரை

आर्जीक वि ரிஜீக தேச, பாத்திரஸம்பந்தமான कः அத்தேச ஏரி. ஸோமம் சுத்தி செய்யப்படும் ஓர் தேவலோக பால் பாத்திரம்

अर्जीकीय = आर्जीक या விபாசைநதி. ஓர் பூலோக நதி.

आर्जुनिः पु அர்ஜுனனின் பிள்ளையான அபிமன்யு.

आर्त वि பிடிக்கப்பட்ட. நோயுள்ள. துக்கிக்கிற. நாசமடைகிற -नादः அழுகுரல் -बंधुः, साधु துயரப்படுகிறவர்களின் தோழன்.

आर्त-गलः पु கரும்பூ பூர்க்கும் குறிஞ்சிச்செடி. குழலாதண்டை -दल: கோவை

आर्तना स्त्री சாவுண்டாக்கும் சண்டை. கரம்பு பூமி.

आर्तव वि (वा, वी स्त्री) (ऋतु) ருது, தூமை ஸம்பந்தமான वः ஓர் பாகம், அநேக ருது, காலங்களின் சேர்க்கை. वी பெண்குதிரை. वं தூமை. பூ. தூமைகழிந்து கர்ப்பாதானஞ் செய்யத்தகுந்த காலம் वेयी தூரஸ்திரீ

आर्तिः स्त्री துயரம். வேதனை. கெடுதி. நோய். நாசம். வில்நுனி.

आर्त्निः पु வில் நுனி

आर्त्विजीन वि (नी स्त्री) ரித்விஜுக்கு யோக்கியதையான ज्यं அத்தன்மை, பதவி.

आर्थ वि வஸ்து, பணம், அர்த்த ஸம்பந்தமான. முக்கியமான

आर्थपत्यं न ஒன்றின்மேல் ஆதிபத்தியம். ஒன்றை உடைத்தாயிருத்தல்.

आर्थिक वि குறிக்கிற. ஞானமுள்ள. பணமுள்ள உருவுள்ள. நிஜமான. कं வட்டியால் ஜீவித்தல்

आर्द्र वि நனைந்த. ரஸம், பசுமையுள்ள. புதிய. மிருதுவான (ஆசை, தயை உருகுகிற என்பதில் போல்). உணர்ச்சியுள்ள. தளர்ந்த. द्रा ஓரே நக்ஷத்திரமான திருவாதிரை -शाखः பச்சை மரம் -दानु ஈரத்தைத் தருகிற. -नयन

அழுகிற -पदी ஈரமான கால்களையுடையவள் -पवित्र ஈரமானவடிகட்டுங்கருவியையுடைய (ஸோமம்). -पृष्ठ நீருற்றப்பட்ட.களைதீர்ந்த -माषा பெருவிடுங்கொள்ளு -शाक इஞ்சி -लुब्धक: கேது.

आर्द्रक त्रि ஆகிரையிற்பிறந்த कं இஞ்சிकः விச்வேதேவபேதம். ஒருவிதப்புழு द्रेता ஈரம்.

आर्द्रयति ना. प. நனை. ஈரமாக்கு.

आर्ध वि (स अ हिल्) பாதி -धातुकं விகுதிவிசேஷம். ஸார்வ தாதுக விரோதமானது -प्रस्थिक, कंसिक அரை ப்ரஸ்தம், கம்ஸத்திற்கு வாங்கப்பட்ட -मासिक பாதிமாதத்திற்கு, ஒரு பக்ஷம் விருத மனுஷ்டிக்கிற -रात्रिकः நடு நிசியிலிருந்து கிரஹசாரங்களைக் கணக்கிடும் வான சாஸ்திரிகளின் ஸமூஹம்.

आर्धिक वि பாதி பெறுகிற, ஸம்பந்தமான

आर्धिकः पु பாதி வாரத்திற்குப் பயிரிடுபவன். வைச்யஸ்திரீக்குப்பிறந்துப்பிராம்மணனுல்வளர்க்கப்பட்டுவருபவன்

आर्धुक त्रि ஸித்தி, லாபம், அனுகூலஹேதுவான

आर्पयितृ पु துன்பப்படுத்துகிறவன்

आर्भव त्रि ரிபுக்களின் ஸம்பந்தமான, பரிசுத்தமான.

आर्य वि பூஜ்யமான. மேன்மையான. ஆர்யனுக்குத் தகுந்த. பெருந்தன்மையான. நியாயமான. அடையக்கூடிய र्यः இந்தியன். ஆசாரசீலன். த்விஜன். பெரியவர். உயர் குலத்தோன். குரு பிரபு. தோழன். வைச்யன். மாமனுர். புத்தன். புத்தாசாரசீலன். ஓர் மனுவின் புத்திரன் .(ஸவர்னன்). நாடகம் நடத்துபவன் र्या பார்வதி. மாமியார். பூஜிக்கத்தகுந்தவள். ஓர் விருத்தம் -अष्टशतं 800 சுலோகங்களடங்கிய ஆர்ய பட்டரின் கிரந்தம் -आवर्तः கிழக்கு, மேற்கு ஸமுத்திரங்

களுக்கும் விந்திய ஹிமாசலங்களுக்கும் நடுப்ரதேச மான ஆர்ய பூமி—गृह्य பெரியோர்களால் பூஜிக்கத் தகுந்த. பெரியோர்களுக்குத்தோழன். பூஜ்யர்களுக்கு ஸாலபனை. ஒழுக்கம், வினயமுள்ள -पुत्रः (நாடக ஸம்போதத்தில்) கணவன். யஜமானன். தமயன் பிள்ளைகளுக்கு மரியாதைப்பட்டம். பூஜ்யன், குரு வின் பிள்ளை -प्राय ஆர்யர்களால் வஸிக்கப்பட்ட, பெரியோர்கள் நிறைந்த -भट्टः பீஜ கணிதம் கண்டு பிடித்த ஓர் பிரவஸித்த வானசாஸ்திரி-मिश्र பூஜ்ய மான. தகுந்த. பிரவஸித்தமான श्रः முக்யஸ்தன். ஸாதுஸங்கம். கனம் பொருந்திய. -रूपः, लिंगिन् பாஷண்டி -वृत्त நன் நடத்தை -वेश நன்கு அணிந்திருக் கிற -व्रत ஆர்யர்களின் தர்மத்தைக் கடைப்பிடித்த -श्वेतः பெரிய மனிதன் -सत्यं உண்மையான கொள்கை

**आर्यहलं** அ பலாத்காரமாய்

**आर्यकः** पु பூஜ்யன். பாட்டன். அரசனுகிவிட்ட ஓர் இடையன்

**आर्यकं** न பிதிர்காரியம். அதனுடயோகிக்கப்படும் பாத்திரம்

**आर्य(र्यि)का** स्त्री பெரிய மனுஷி ஓர் நக்ஷத்திரம்

**आर्याणी** स्त्री பூஜ்யமானவள். வைச்யனின் மனைவி.

**आर्वाक्** अ பின்னே. பிறகு பிந்தி.

**आर्श** वि மானின் ஸம்பந்தமான

**आर्ष** वि ரிஷியால் உபயோகிக்கப்பட்ட. ரிஷி ஸம்பந்தமான. வைதிகமான. பரிசுத்தமான, தைவசக்தி வாய்ந்த र्षः இரண்டொரு ஜதைப் பசுக்களை மாப்பிள்ளையினிட மிருந்து வாங்கிக்கொண்டு தன் பெண்ணைக் கொடுக் கும் ரிஷி மூலமாய் வந்த 8ல் ஒரு வித விவாஹம். -ऊढा இவ்விதமாய் மணக்கப்பட்டமனைவி र्षं ஓர் வேத விருத்த கணம். र्षं பரிசுத்த கிரந்தம். வேதம். வைதிக

வம்சப் பிறவி. ரிஷிப்ரோக்தமானது (காவ்யம்)
आर्षभ वि எருது மூல முண்டான, வந்த भिः பரதன்
आर्षभ्यः पु விதை யடிக்கத்தகுந்த, திரியவிடவேண்டியசேங்
आर्षेय वि ரிஷிஸம்பந்தமான. தகுந்த. பூஜ்யமான [கன்று
आर्षेयं वि ரிஷிஸமூஹம். வைதிக ஸந்ததி, பிறவி.
आर्हत वि ஜைனமதக் கோட்பாடைச் சேர்ந்த
आर्हतः पु ஜைனன். ஜைனமதத்தைச் சேர்ந்தவன்.
आर्हती, त्यं न அர்ஹத்தின் தன்மை, அனுஷ்டானம
आर्हती, त्यं न தகுதி. ஜைனமதம்
आल वि விசாலமான लं, लः விஷஜந்துக்களிடமிருந்து வெளி வரும் விஷம். சூது. அரிதளம். लः தலைமயிர். பெண் குறி. சாவு. தேள் கொடுக்கு முள்.
आलकः पु பெரிய நீலிச் செடி
आलक्ष 10 उ தூரத்திலிருந்து பார். கண்டறி. क्षि वि அறிகிற
आलक्ष्य वि துளி) தோற்றமான
आलक्षण्यं न துரதிருஷ்டம். தோஷம்.
आलगर्दः पु தண்ணீர்ப் பாம்பு
आलप् । प ஸம்பாஷி. பேசு. தெரியச்சொல். णिच् கேள்
आलब्ध वि (लभ्) இணைக்கப்பட்ட लब्धिः स्त्री लंबिन् वि
आलभ् । आ தொடு. அடை. பெறு. கொல்(யாகத்தில்).கைப் பற்று. வசிகரி. णिच् தொடு. தொடங்கு लं, लभनं
आलभ्य,लं(ल)भनीय वि தேய்க்க, யாகத்தில் வதிக்கப்படவேண் [டிய
आलंभः, भनं न செடிகளைப்பிடுங்கி யெறிதல்
आलंब् । आ சார்ந்திரு. கைப்பற்று. தாங்கு. வெல். அண்டு. பரிசயமடை. தொங்கியிரு. நம்பியிரு. பரப்பு, விரி, வீசு. (வாத்தியம்) அடி, வாசி लंबित, बिन् वि உடுக்கிற
आलंब वि தொங்கிக்கொண்டிருக்கிற बः ஆதாரம், தாங்குவது. (சுவற்றில்) பிதுக்கம். ஆச்ரயம். லம்பரேகை. விஷ

இலைகளையுடைய ஓர் செடி

**आलंबनं** न பிடிப்பு. இருப்பிடம். காரணம். அடி. எதோடு ஓர் ரஸம்அலங்காரத்தில்ஸம்பந்தப்பட்டிருக்கிறதோ. தியான மூர்த்தியைமனதில்நிலைநிறுத்தயோகிசெய்யும் முயற்சி. மௌன ஜபம். பௌத்தர்களின் ரூபரஸ தன்மாத்திரைகளை யொத்த 5தன்மைகள். மனதை யொத்த தர்மம், விதி

**आलयः, यं** न (ली) வீடு. இடம். ஸ்தானம். இருப்பிடம். ஸ்பர்சம். यं अ பிரளயம் வரையில்

**आलर्क** वि பைத்தியம்பிடித்தநாயாலுண்டான, ஸம்பந்தமான

**आलप्तिः** स्त्री ஆலாபனம் செய்தல் (ஸங்கீதத்தில்)

**आलवण्यं** न ருசு, அழகு இல்லாமை

**आलवालं** न பாத்தி

**आलस, स्य** वि சோம்பலான स्यं சோம்பல். स्यः நீர்ப்பன்றி.

**आलातं** न கொள்ளிக்கட்டை

**आलानं** न யானைகட்டும் மரம், கயிறு. கட்டு. கயிறு. விலங்கு

**आलानिक** वि யானைகட்ட மரமாயிருக்கிற

**आलापः** पु உபன்னியாஸம். விவரிப்பு. ஸங்கீத सा, रि, ग, म, प, ध, नि. கேள்வி, பீஜ) கணிதத்தில் கேள்விவிவரம்.

**आलापन** वि பேசச் செய்கிற. नं சேர்ந்து ஸந்தோஷித்தல்

**आलाप्य, लापनीय** त्रि சொல்ல, பேச, விவரிக்கப்படவேண்டிய

**आलापिन्** वि பேசுகிற नी சுரக்காய் வீணை

**आलाबुः, बू** स्त्री சுரை

**आलावर्तं** न துணியாலான விசிறி

**आलास्यः** पु முதலை

**आलि** त्रि வீணான. சோம்பலான. அர்த்தமில்லாத. யோக்கியமானலிः தேள். தேனீ. लिः, ली தோழி. வரிசை. கோடு. பாலம். அணை. குலம். பாணம்

आलिख् 6 प எழுது. கோடுகள் கிழி. சித்திரம் வரை. உருவ மெழுது. வர்ணங்கொடு. சீவு. சுரண்டு. பிறாண்டு
आलिङ् । उ 10 प கட்டி அணை. தழுவு. சூழ். சுற்று. गन्
आलिङ्गितं न அணைத்தல். तः 20 அக்ஷரங்களுள்ள ஓர் மந்திரம்
आलिङ्गिन् वि அணைகிற पु (ङ्गी) लिङ्ग्यः மத்தள பேதம்
आलिंजरः पु மண் சால்.
आलिन् पु தேள்
आलिंद(क): पु வாசற்படியின் வெளிப் புறம். திண்ணை [போடு.
आलिन्दकः पु உடம்பு.
आलिप् 6 प தைலம் பூசு, தேய். மெழுகு. காரை,பிளாஸ்திரி
आलिप त्रि பூசுகிற लिपनं சுவர்களுக்கு வெள்ளையடித்தல்
आली = आलि 4 आ வந்துதங்கு. சோர்வடை. உருகு
आलीढ वि நக்க, காயப்படுத்த (தூக்கத்தில்போல்) மூடப் பட்ட. ढं சுடுவதில் வலக்கால் முந்தியும் இடக்கால் பிந்தியும் நிற்கிற ஓர் நிலை.
आलीढकं न கன்றுக்குட்டியின் குதித்தோடல், துள்ளல்
आलीन वि கட்டியணையப்பட்ட. ஒட்டிக்கொண்டிருக்கிற. உருகின नं, नकं தகரம். ஈயம். ஸ்பர்சம்
आलु न கட்டு மரம் लुः स्त्री நீர்க்குடம்,கூஜா पु ஆந்தை. புசிக் கத்தக்க ஓர் கிழங்கு. கருங்காலி
आलुकः पु கருங்காலி விசேஷம்.சேஷன் कं தின்னும் கிழங்கு
आलुञ्चनं न தாளாய்க் கிழித்தல்.கீறல்.பிளத்தல்.உடைத்தல்
आलुड् । प णिच् கலக்கு, குழப்பு. ஆழ்ந்து விசாரி
आलुटनं न கொள்ளையடித்தல். பலாத்காரமாய்க் கிரஹித்தல்
आलुल त्रि சஞ்சலமான
आलून वि வெட்டித் தள்ளப்பட்ட
आलेख: पु எழுதல். கடிதம். தஸ்தாவேஜு
आलेखनं न வரைதல் नी எழுதுகோல். மயிர்க்குச்சு

आलेख्य वि वரையத் தகுந்த ख्यं எழுத்து மூலம். வர்ணங் கொடுக்கப்பட்ட படம். लेखा வர்ணங்கொடுத்தல். -शेष இறந்த
आलेप वि பூசத் தகுந்த पः, पनं பூசல். தேய்க்குந்தைலம்
आलोकृ । आ 10 प பார். கண்டறி. ஆலோசி. கூடிக்களிவாழ்த்து
आलोकः, कनं न பார்த்தல். பார்வை. தோற்றம். திருஷ்டிசெல்லத் தகுந்த தூரம். ஒளி. அத்தியாயம். ஜயத்துதி
आलोकित वि பார்க்கப்பட்ட तं பார்வை. கண்ணோட்டம். किन् वि
आलोच् । आ 10 उ பார். ஆராய். அறி. [ஹேது
आलोचक वि பார்க்கச் செய்கிற. कं பார்க்கும் சக்தி. பார்க்க
आलोचनं, ना பார்வை. ஆலோசனை.
आलोडनं न கலக்கல். கலத்தல் डित वि பொடியாக்கப்பட்ட.
आलोल वि சஞ்சலமான. கண்களைச் சுழற்றுகிற लं குலுக்கல்
आलोलः पु கொடியின் குச்சு. लित वि குழப்பப்பட்ட
आवक वि ரக்ஷிக்கிற
आवत् स्त्री ஸமீபம் [யீ வீதை.
आवनेयः पु பூமியின் பிள்ளையான செவ்வாய், நரகாஸுரன்
आवंतः वि அவந்தி ராஜன் तिक அவந்திஸம்பந்தமான, உண்
आवंत्यः ,, தேசத்தான், பிராம்மணத்தமனின்பிள்ளை वि " [டான
आवप् । उ இறை. விதை உள்ளே நுழை. வெளிக்கொட்டு. யஜி. (சிராத்தம்) செய். णिच् கல. சீவு. சீர்திருத்து. வழி.
आवपनं न வார்த்தல். ஊற்றல். உடுத்தல். க்ஷௌரம். கூஜா = नी
आवपंतिक त्रि இறைக்கிற
आवयः पु வரல். வருகிறவன். ஓர்த்தேசம் यः, या நீர் यं மலடு
आवयाज् पु தேவதைகளையடையயஜிப்பவன். யஜித்துத்தடுத்துக் கொள்ளுபவன்.
आवरक त्रि (वृ) மூடுகிற. மறைக்கிற कं மூடி. முக்காடு
आवरणं न(वृ) மூடி. வேலி. अरु ரக்ஷணம். தடை. சுவர். தாழ்ப்

பாள்.கவசம். சலாக்கு. நியாயம் விசாரிக்கிற ஸபை. -शक्तिः அக்ஞானம்

आवरि(री)तृ वि மூடுகிறவன். உரையிடுகிறவன்

आवरसमक वि அடுத்த வருஷம தீர்க்கவேண்டிய(கடன்)

आव(ब)र्तः पु(वृत्)சுற்றல்.சுழலல்.திரும்புதல்கவலைநீர்ச்சுழல். மயிர்ச்சுழி.உருபோடுதல்.சுருண்ட மயிர், பிடரி. புருவங்களுக்குமேலுள்ள பள்ளங்கள். நெருங்கிவஸிக்கப்படுமிடம்.ஓர்நகை र्ति ராஜாவர்த்தரத்தினம்.மேகவிசேஷம். (உலோகங்களை)உருக்கல்.ஸம்ஸாரம். र्त्तं ஓர்தாது

आवर्तकः ஓர் விஷப்பூச்சி की ஓர் படரும் கொடி = वर्तः

आवर्तनं न (वृत्) = वर्तः நடுப்பகல்.न:விஷ்ணுநீகரண்டி.மூசை

आवर्तिन् पु (र्तीं) உடலில் சுருண்ட மயிர்களையுடையகுதிரை

आवर्तिनी स्त्री நீர்ச்சுழல். ஆடு தீண்டாப்பாளை. சடைப்பூண்டு

आव(ब)र्हित वि நிர்மூலம் செய்யப்பட்ட.

आवलिः,ली स्त्री வரிசை. கோர்வை. பரம்பரை

आवलित वि கொஞ்சந் திரும்பின, திருப்பப்பட்ட

आवल्गित वि மெதுவாய்க் குலுக்குகிற.

आवल्गुज वि அவல்குஜச் செடியிலிருந்துண்டான [தாந்தம்

आवश्यं न அவசியம். தவிர்க்கக்கூடாதகாரியம், மாறுதவிர்க்

आवश्यक वि ,, कृ பிரகிருதியால் தூண்டப்பட்டுச் செய்

आवस् । प வசி. ஏற்றுக்கொள், செய் புணர். (காலம்) கழி. णिच्मரியாதையாய்வரவேற்று.(இரவு)தங்கு. குடியேறு

आवसतिः स्त्री (இளைப்பாறுங் காலமான) நடு) ராத்திரி.

आवसथः पु வீடு. தங்குமிடம். மடம்.கிராமம்.வைதிகாக்கினி வைக்கபபடுமிடம். சடங்கு விசேஷம்.

आवसथिक वि வீட்டில்வைதிகாக்கினியைவைக்கிற,வஸிக்கிற. குடும்பத்திற்குரிய

आवसथ्य वि வீட்டிலிருக்கிற. थ्यः கிருஹாக்கினி.

आवसथ्यं न வீடு. வைதிகாக்கினியை வளர்த்தல். மடம்=थ्यः
आवसान वि (சண்டாளனைப்போல்) ஊர்கோடியில் வசிக்கிற
आवसित वि முடிக்க, தீர்மானிக்க, புடைக்க,சேகரிக்கப்பட்ட
பழுத்த.நன்குவளர்ந்துவிட்டதக்குத்தப்பட்டதானியம்
आवस्थिक वि சமயோசிதமாய் நடந்து கொள்ளுகிற
आवह् । प கொண்டுவா. (மனைவியை) அழைத்துவா. காரண
மாகு. கொடு, தீர். அடைவி. (ரத்தம்போற்) பெருகு
பாய். சும. தாங்கு. உபயோகி. णिच् அனுப்பு. தேவ
தாவாஹனம் செய்.
आवह वि (स. அதில்)உண்டுபண்ணுகிற. हः அக்கினியின் 7ல்
1 நாக்கு. புவர் லோகத்தைச் சேர்ந்த 7ல் 1 காற்று
आवहमान वि அருகேகொண்டுவருகிற.தொடரப்பட்ட[ஹாநதி.
आवप वि இறைக்கிற पः கலத்தல். அதிக சம்பாரம் சேர்த்
துச் சமைத்தல். பாத்தி ஓடக்கூலி. ஒருவிதப்பானம்.
முர்கிய ஆஹுதி. அயலரசன் மீது பகை. சமனற்ற
பூமி. தான்னியப்புட்டி. பாத்திரங்களை ஒழுங்காக
வைத்தல். கைக்காப்பு =पकः
आवापनं न நெசவுத்தறி நூல் சுற்றும் சட்டம். க்ஷௌரம்
आवापिक वि விதைக்க, க்ஷௌரம்செய்யநல்லதான. அதிகப்
आवारः पु (वृ) சூழல். ஒதுக்கல் रिः पु கடை [படியான
आवालं न பாத்தி.
आवासः पु வீடு. அறை. அடைக்கலம் புகுமிடம். சரணம்.
आवाहः पु கலியாணம் [सकः கைக்காப்பு.
आवाहनं न (वह्)அழைத்தல். அக்கினிக்குஹோமம்செய்தல்.
தேவதாவாஹனம். அதில் கைகளை வைத்திருக்க
வேண்டிய விதம்
अविक वि செம்மறியாட்டின் ஸம்பந்தமான. ரோமத்தால்
செய்த कं கம்பளி -सौत्रिक கம்பள நூலாலான

आविघ्न नि தடையடைந்த घ्नः பெருங்களாச் செடி
आविद् णिच् அறிவி. தெரிவி. சொல். கொண்டுவா. கொடு
आविद् वि அறிவு. आविद्, आवित्त என்று தொடங்கும் வைதிக ஸூத்திர பரிபாஷை आविद्वस् वि முழுது மறிந்த. [திறமை வாய்ந்த.
आविदूर्यं न ஸமீபம்
आविद्ध वि (व्यध्) வளைந்த. கோணலான. எதிர்பார்த்ததில் ஏமார்ந்துபோன. பொய்யான. மூடனான. -कर्णी, कर्णिका பங்க [ப்பாளை
आविधः पु தூரப்பணம். செருப்பூசி. கல்லுளி
आविनं न புதையல் [களின் குணம்
आविर्भावः पु வெளிப்படல். தோன்றல். அவதாரம். வஸ்துக்
आविल वि கலங்கலான. சேரான. அசுத்தமான. கருத்த.
आविलयति ना. प. அழுக்காக்கு. கறைப்படுத்து. மங்கலாக்கு
आविश् 6 उ பிரவேசி. கைப்பற்று. உடைத்தாயிரு. ஓர் நிலைக்குவா. [உபாயம்.
आविष्कृ 8 उ வெளிப்படையாக்கு ष्करणं, कारः தோற்றமாக்க
आविष्ट वि (பேய்) பிடித்துக்கொண்ட. நிரப்பப்பட்ட. நிறைந்த வெல்லப்பட்ட. கருத்தாயிருக்கிற. -लिंग தன் லிங்கம் எப்பொழுதும் மாறாத பெயர்ச் சொல்லான.
आविष्य वि வெளிப்படையான
आविस् अ கண்முன். வியக்தமாய். தெளிவாய் (-अस्, भू, कृ)
आविस्तराम् அதிகவும் வெளிபடையாய் [வோடு
आवी स्त्री பிரஸவ வேதனை. கர்ப்பிணீ. தூரஸ்திரீ
आवीत वि(व्ये) உடுக்க, வைக்கப்பட்ட. சென்ற. தபூணூலின் ஓர்
आवीतिन् पु பூணூலைப் பிராசீனாவீதியாய்த் தரிப்பவன் [நிலை
आवीरचूर्णः पु விருக்ஷ விசேஷம்
आवुकः पु (நாடகத்தில்) தகப்பன்
आवुत्तः पु சகோதரியின் கணவன். அத்திம்பேர்.
आवृ 5. 9. 10 उ மூடு. மறை. நிரப்பு. பரவு. கோறு. அடை,

தடு.வளை. சாற்று. சுற்று. சூழ். ஒதுக்கு णिच् तिः स्त्री
आवृत. पु பிராம்மணனுக்கு உக்கிர ஸ்திரீ மூலம்பிறந்தவன்
आवृज् । आ கொடு. நோக்கித் திரும்பு. தேர்ந்தெடு णिच्
வளை. சாய். சரி. குனி. வசீகரி. வெல். கொண்டுவா,
சேகரி. கொட்டு, வெளியெடு. பிடுங்கு. காலியாக்கு.
आवृत् । आ சுற்றிவா. சுழல். திரும்பிவா, நோக்கிச் செல்.
ஓய்வின்றியிரு. णिच् புரள். சொரி(கண்ணீர்). மயக்கு.
வசிகரி. திருப்பித்திருப்பிச் சொல், செய்
आवृत् स्त्री நோக்கச் செய்தல். திரும்பல். ஒழுங்கு. மாதிரி.
விதம். ஸம்பவம். வழி. சாந்தி கருமம். பின் பாட்டு.
आवृत्त वि மனனம் (நெட்டுருவு) செய்யப்பட்ட. பின்ன
டைந்த. முன்பின்னாய்த் திருப்பப்பட்ட.நீக்கப்பட்ட.
திரும்பின.
आवृत्तिः स्त्री திரும்பித்திரும்பி (ஸூர்யன்) ஒரே இடத்
திற்கு வரல். மாற்றிக் கொள்ளல். ஜனனமரணசுழற்சி.
பதிப்பு (தற்காலத்திய). படிப்பு. உபபோகம். வழிப்
போக்கு. ஸம்பவம் -दीपकं ஓர் அலங்காரம்
आवेगः புகவலை.குழப்பம்.அவசரம்.नी(விருத்தாரக)விருக்ஷம்
आवेदक वि அறிவிக்கிற. कः செய்தி சொல்லுபவன், வாதி
आवेदनं न தாவா.மனு. விண்ணப்பம்.முறையிட்டுக்கொள்ளல்
आवेदनीय,वेद्य वि அறிவிக்கப்படவேண்டிய.விஷயமாயிருக்கிற
आवेदित त्रि அறிவிக்கப்பட்ட.तः பட்டவன்.तं சொல்லப்பட்டது
आवेदिन् वि அறிவிக்கிற. கட்டளையிடுகிற.
आवेलं न தம்பலம்
आवेशः पु கர்வம். பதை பதைப்பு.காமம்.கோபம்.பேய்பிடித்
துக்கொள்ளல் தலைசுழற்சி,மயக்கம்காக்காய்வலியால்.
आवेशनं न ஆவேசம். சிற்பிசாலை. வீடு. சந்திர,ஸூர்யபிம்பம்
आवेशिक वि விசேஷ குணமான. இயல்பான. [வேசம்

आवेशिकः पु விருந்தாளி. புதிதாய்வந்தவன்க்கு உபசரணை. பிர
आवेष्ट् 10 प சூழ் वेष्टकःசுவர்.வேலி = वेष्टनंஉரை.சுற்றல்.கட்டல்
आव्य वि செம்மறியாட்டு ஸம்பந்தமான. கம்பளமான
आव्यध् 4 प அடி. குத்து. துளை. காயப்படுத்து. புகுந்துச் செல். உடு. சுடு. எய். நோக்கி யெறி. (கத்தி) ஆட்டு, வீசு. ஆணியடி. குண்டுசியைக் குத்து. குத்து.கிளப்பு, ஒதுக்கு. கலக்கு
आव्याधिन् वि மேல்விழுகிற ஹிம்ஸிக்கிறஎ திருடர் கூட்டம்
आव्रश्च् 6 ப தூளாய்க்கிழி.தடை பண்ணு.व्रश्चनं தறித்தமரவடி
आव्रस्कः पु கிழிக்கப்பட்டிருத்தல். கிழிந்து போதல்
आव्रीडकः पु வெட்கமற்றவர்களின் ப்ரதேசம்
आश वि உண்பவன் (ஸ.அதில்)शः பரவல்.தோள்.உண்ணல் =
आशयितृ वि உணவளிக்கிற(வன். பாதுகாப்பு. [आशकं
आशंस् 1 उ இச்சி. எதிர்பார். நம்பு. ஆசீர்வதி. சொல்.யாசி. துதி. ஒப்பி, பாடு. பயந்திரு. णिच् பிரஸித்தமாக்கு
आशंसा स्त्री குறித்துச்சொல்லல்.ஊகை. இச்சை. நம்பிக்கை.
आशंसितृ, शंसिन् त्रि இச்சிக்கிற. சொல்லுகிற शंसित वि[சொல்
आशंसु वि ஆவலுள்ள. நம்பிக்கையுள்ள.
आशंस् वि நம்புகிற. स्त्री துதி இச்சை
आशंक् 5 प பிரபு, சக்தனுக, ஒன்றை உடையவனுக ஆக்கு
आशंकमान वि பயந்த
आशंकितं न பயம். சந்தேகம். = शंक्
आशन वि உணவளிப்பவன் नः இடி. ஓர்மரம்
आशयः पु(शी)படுக்கையறை.தங்குமிடம்.ஆச்ரயம்.இடம்.வீடு. சுரங்கம். படுத்தல். உறங்கல். வஸ்துசேகரிக்கப்பட்ட விடம். நீர்த்தேக்கம். தேகத்திற்பெற்றுக்கொள்ளுகிற உள்ளானபாகம். குடல். அர்த்தம், கருத்து. மனது. இருதயம். மனோநிலை.செழிமை.களஞ்சியம்.இஷ்டம்,

ஸம்மதம். சுக, துக்க ஹேதுவான புண்ணிய பாவங்கள். விதி. அதிர்ஷ்டம். சொத்து. லோபி(மிருகங்களைப் பிடிக்க) பள்ளம். பலா -आशः தீ யா ஞாழல்

**आशयेशयः** पु மன்மதன்

**आशरः** पु அக்கினி. வாயு. பிரம்மராக்ஷஸ்.

**आशलः** पु வேங்கைமரம்

**आशवं** न வேகம். வடிக்கப்பட்ட சாராயம். கள்.

**आशसनं** न (கொல்லும்பொழுது) மிருகத்தைத் துண்டுதுண்டாய் வெட்டல்.

**आशा** स्त्री ஆசை. நம்பிக்கை. வீணாய் எதிர்பார்த்தல். திக்கு. இடம் -अन्वित, जनन அசட்டு நம்பிக்கையுள்ள -कृत கார்ய ஸித்தியில் நம்பிக்கையுள்ள -तंतुः அல்ப நம்பிக்கை -पिशाचिका வீண்பிரமை -पुरगुग्गुलुः, संभवः மைஸாக்ஷியெனும் ஓர் மருந்து எடுக்கும் செடி விசேஷம் -बंधः நம்பிக்கை. தேத்திரவு. சிலந்திப்பூச்சியின் கூண்டு-वह நம்பிக்கை யுண்டாக்குகிற हः தேவ புத்திரன்.

**आशारः** पु சரணம். ஆச்ரயம். ரக்ஷணம்.

**आशास्** 2 आ ஆசீர்வதி. கோறு. எதிர்பார். துதி. கட்டளையிடு

**आशास्य** वि வரத்தாலடையத்தகுந்த. ஆசீர்வதிக்க, இச்சிக்கத் தகுந்த स्यं ஆசீர்வாதம்=शस्तिः

**आशारिकः** पु அவயவங்களில் மிகுந்த நோவு

**आशिः** स्त्री உண்ணுந் தொழில்

**आशित** वि உண்ணப்பட்ட. உண்ணக் கொடுக்கப்பட்ட. உண்டு திருப்தியடைந்த. வயிர்தாலியான तं உண்ணல்

**आशितंगवीन** त्रि முன்பு பசுக்களால் மேயப்பட்ட

**आशितंभव** वि திருப்தியடைந்த, செய்விக்கிற. वं உணவு. திருப்தி

**आशितृ** वि பெருந்திண்டி தின்கிற **शिन्** உண்கிற

**आशिन** वि வயதான [கப்பட்ட பால்

**आशिर्** स्त्री கொதிக்கும்பால். சுத்திக்காகஸோமரஸத்தில்கலக்

**आशिर** வயிர்தாலியானர: உணவு. பால்திரிசல் அஸுரன் ரவி. தீ

**आशिस्** स्त्री ஆசிர்வாதம். அன்னியர்களை ஆசிர்வதித்தல். பிரார்த்தனை. இச்சை. பாம்பின் கோரப்பல். 8ல் 1 மருந்து. -विष. பாம்பு.

**आशी** स्त्री பாம்பின் கோரப்பல். ஒருவித விஷம். ஆசீர்வாதம். —विषः பாம்பு (விசேஷம்.

**आशी** 2 आ மேலே படு, உறங்கு. (இரவை) தூக்கத்தில்கழி. வசி. தங்கு. இச்சி. பிரார்த்தி.

**आशु** वि விரைவாக शुः குதிரை. சிவந்த நெல். अ உடனே. சீக்கிரமாக -आपस् वि விரைவிலடைகிற -कृत् वि (மருந்தைப் போல்) விரைவில் வேலை செய்கிற. சுறுசுறுப்பான -क्रिया மருந்தின் சீக்கிரகுணம் -गः காற்று. பாணம் ஸூரியன் = -गामिन् -तोषः எளிதில்சாந்தப்படுத்தப்படுகிற சிவன் -पत्री குந்துரு வாஸனைத் திரவியம். -पत्त्रन् वि வேகமாய்ப் பறக்கிற -बोत्र விரைவில் போதிக்கிற. ஓர் வியாகரணம் -या वि விரைவில் போகிற अ சீக்கிரமாக -व्रीहिः மழை காலத்தில் விளையுங் நெல் षेण வேகமான பாணங்களையுடைய -हेमन् விரைந்தோடுகிற, குதிரைகளைத் தூண்டுகிற -हेषस् விரைவில் கனைக்கிற, குதிரைகளையுடைய. விரைவில் துதிக்கப்பட்ட

**आशुमन्** पु வேகம்

**आशुवक्रोष्टिः** पु स्त्री அறைக்கீரை.

**आशुशुक्षणि** त्रि விரைவில் பிரகாசிப்பதினால், விரோதிகளுக்குத் துயரம் விளைவிப்பதால் பூஜிக்கப்படுகிற. ஒளி வீசுகிற. णिः காற்று. நெருப்பு. பல்லெச்சில்

**आशू** त्रि விரைவில். வேகமாக

**आशेकुटिन्** पु மலை.

**आशोकेय** वि அசோகமர அருகாமையான
**आशोषणं** न உலர்த்தல்
**अशौचं** न அசுத்தம், தீட்டு
**आश्चर्यं** वि ஆச்சர்யமான भूत வியப்புக்கு விஷயமான
**आश्चो, श्च्योतनं** न தெளித்தல். கண்ரெப்பைகளில் நெய் தடவல். பெருகுதல்
**आश्म** वि கல்லா(லா)ன -मारिक கல்குவியல்களையுடைய
**आश्मरथ्यः** पु ஓர் ஆசார, ஸம்ஸ்கார சாஸ்திர விதி குரு
**आश्मन** वि கல்லாலான नः ஸூர்ய ஸாரதியான அருணன்
**आश्मरिक** वि மூத்திராசயத்தில் கட்டியுள்ள,நோயுள்ள.कः அந் [நோய்
**आश्मिक** वि கல்லாலான. கற்களைச் சுமக்கிற, உடைய
**आश्याय** त्रि (श्यै) சற்றுலர்ந்த. உறைந்த. கெட்டியான
**आश्र** न கண்ணீர்.
**आश्रपणं** न சமைத்தல். காய்ச்சல்
**आश्रमं, मः** पु யதியின் குடிசை.பிரம்மசர்ய,கிருஹஸ்த, வாநப்பிரஸ்த, ஸந்நியாச மென்கிற த்விஜர்களின் 4 வாழ்க்கைப் பிரிவுகள். பாடசாலை.தபோவனம். விஷ்ணு -गुरुः பாடசாலையின் பிரதான உபாத்தியார் (பிரின்ஸிபல்). வைதிக பத்ததிக்கு வழிகாட்டும் முக்கியஸ்தன் உபதேசகன் -धर्मः ஒவ்வோராச்ரமத்திற்கும் உள்ள தர்மங்கள். யதிதர்மங்கள் -पदं, मंडलं, स्थानं தபோவனம். 4ல் ஓர் அச்ரமம் -वासिक ஆச்ரமவாழ்க்கை ஸம்பந்தமான. பாரத 15ம் பர்வம் -वासिन्, सद्, पु आलयः ஸந்நியாசி
**आश्रमिक् मिन्** वि தபோவனம், 4ல்1 ஆச்ரமத்தைச்சேர்ந்த.
**आश्रयः** पु தங்குமிடம். அடிப்படை, ஆதாரம், அடி, மூலம். கொள்பவன், பெறுகிறது.போயடையுமிடம்.சரணம். இருப்பிடம். வீடு. பரிசயம். ஸஹவாஸம்.அனுஷ்டானம். தெரிந்தெடுத்துக் கொள்ளல், பற்றல். பாதீன

மாயிருத்தல். பிடிப்பு, முட்டு. உதவி, ரக்ஷணம். அம்பறுத்தூணி. ஒருவன் ஒருவனுக்கு அதிகாரங்கொடுத்தல். ஸம்பந்தம். சேர்க்கை, பற்று.சாக்கு,நிபம்.அயல். ஸமீபம். தொட்டுக்கொண்டிருத்தல். அடைக்கலம்புகல்.தகுந்த, குணத்திற்கேற்ற காரியம். மூலம், உற்பத்தி. கார்த்தா,எழுவாய்.(பௌத்தர்களின்)மனதோடு சேர்ந்த பஞ்சேந்திரியங்கள்-आशः, भज् தான் ஸம்பந்தப்படுவதைப்பொசித்துவிடுகிற शः कृ ति. தஞ்சமிழத்தல்.கிருத்திகை -भूतःசரணமளிப்பவன் -लिंगविசேஷ்ய லிங்கத்தோடுபொருந்தியிருக்கவேண்டியவிசேஷணம்

**आश्रयण** वि சரணமடைகிற. குறிக்கிற ण सரணம். ஏற்றுக்கொள்ளல். பெற்றுக்கொள்ளல். இணைத்தல்

**आश्रयणीय** वि அப்பியஸிக்க, பரிசயம் செய்து கொள்ள வேண்டிய

**आश्रयिन्** वि ஆச்ரயித்த, அண்டியிருக்கிற. ஸம்பந்தப்பட்ட

**आश्रव**:पु நதி.குற்றம். மீறல்( ु)கீழ்ப்படிகிற.கேள்வியறிவுள்ள

**अश्रावण** न (श्र) சடங்குகளில் உச்சரிக்கப்படும் சிறுபத விசேஷங்கள். கவனித்துக் கேழ்க்க இரைதல். = श्रुतं

**आश्रि** । उ அண்டு, அடை. ஆச்ரி.சகாயம்கோறு.சரண்புகு. சேர்ந்துவசி. அனுபவத்திலறி. சார்ந்திரு. ஒட்டிக்கொள். நேர்படு. உதவு. தெரிந்தெடு.

**आश्रिः** स्त्री கத்தி முனை, கூர்.

**आश्रित** वि நம்பியிருக்கிற. உபயோகிக்கிற. அனுஷ்டிக்கிற. இயற்கையான, அங்கமாய்ப் பெறுகிற

**आश्रितः** पु அண்டின தாஸன். தொடருபவன். तं (व) இந்திரிய விஷயங்கள்.

**आश्रु** 5 प கேள். கவனி. வாக்களி. ஏற்றுக்கொள்.णिच् அழை. அணுகு, வசிகரி. (மந்திரம்) சொல். கேழ்ப்பி श्रुतिः

**आश्रुकर्ण** वि சுற்றிலும் கேழ்க்கிற காதுகளையுடையவன்

**आश्लिष्ट** वि (श्लिष्) தழுவ, கட்டி அணைத்த. ஒட்டிக்கொண்ட. பிடித்துக்கொண்ட. இணைக்க, கலக்க, நெய்யப்பட்ட. தொடுகிற. பரப்பப்பட்ட. தீர்மானிக்கப்பட்ட

**आश्लेषः** पु நெருங்கிய ஸம்பந்தம். தழுவல் षा ஆயில்யம்

**आश्व** वि குதிரை ஸம்பந்தமான, அதனிடமிருந்துண்டான

**आश्वं** न குதிரைக்கூட்டம்,வண்டி. குதிரையின்நிலை,செய்கை

**आश्वत्थ** वि அரசுமரஸம்பந்தமான. அதலான. இதுகாய்க்கும் கால ஸம்பந்தமான त्थं அரசம்பழம்

**आश्वत्था** स्त्री அச்வினி நக்ஷத்திரமுடைய இரவு

**आश्वमेधिक** वि அச்வமேத ஸம்பந்தமான कं பாரத14ம் பருவம்

**आश्वयुज** वि அற்பிசி மாதத்திய. அச்வினியிற் பிறந்த.जः ஐப்பிசிமீ. जी ஐப்பிசிப் பருவம்

**आश्वयुजक** वि ஐப்பிசிப் பருவத்தில் விதைத்த

**आश्वरथ** वि குதிரைகள் பூட்டப்பட்ட ரத ஸம்பந்தமான

**आश्वलक्षिणक** वि குதிரைலக்ஷணங்களறிந்த कः குதிரைக்காரன், வைத்தியன், லாடங் கட்டுகிறவன் [ஒரு ரிஷி

**आश्वलायनः** पु சடங்குகளின் ஸூத்திர கிரந்த கர்த்தாவான

**आश्वस्** 2 प மூச்சுவிடு. மூச்சுவா. தைரியங்கொள். மறுபடி ஜீவி. நம்பு. णिच् தேற்று. சமனம்செய். இளைப்பாற்று.

**आश्वसत्** वि ஜீவித்திருக்கின்ற सित वि ஸந்தோஷப்படுத்தப் பட்ட [கூடியகதை

**आश्वासः** पु அபய ப்ரதானம். ஓய்வு. அத்தியாயம். நம்பக்

**आश्वासक** वि தேற்றுகிற कः உடுத்தல் श्वासनं தேத்திரவு

**आश्विक** वि குதிரை, அவ்வண்டி, பிரயாண ஸம்பந்தமான कः குதிரைவீரன். குதிரைகளின் ஸம்பாத்ய அறிகுறியான சகுனங்கள், நக்ஷத்திரங்களினமைப்பு.

**आश्विन** वि அச்வினி தேவதைகளுக்குப் பரிசுத்தமான,அவர்

கள் ஸம்பந்தமான. பரவுகிற नः ஐப்பிசி. அவர்களா லாளப்படும் ஓர் யக்யம், ஆயுதம் नौ அச்விநீ தேவதைகள் [பருவம்.

आश्विनी स्त्री சில செங்கற்கள். போர், அடுக்கு. அச்விநீ கூடின

आश्विन न ஒருநாள் குதிரை, குதிரைக்காரனின் பிரயாணம்

आश्विनेयौ पु द्वि அச்விநீதேவதைகள் नः,, நகுலஸஹதேவர்கள்

आश्वीन वि குதிரையால் செல்லப்பட்ட नं, नः அதன் ஒரு [நாள் தூரம்

आश्वीय न குதிரைக்கூட்டம்

आषाढः पु ஆடிமீ. யதியின் தண்டம். மலயமலை. ढा பூராட உத்திராடங்கள். ढी ஆடிப்பருவம் -भव, भू ஆடியிற் பிறந்த वः,भू செவ்வாய்

आषाढकः पु ஆடி. பலாச தண்டம் दिम् பலாசதண்டந்தரித்த

आषाढीय वि ஆஷாட நக்ஷத்திரத்திற் பிறந்த

आष्टमः पु 8ம் பாகம்

आष्ट्र न ஆகாசம் ष्ट्री விசாலமான காடு. சமயலறை. [கம்

आस् आ:अ ஆச்சரியம்,ஞாபகம்,கோபம், துன்பம்,துக்கஸூச

आस् 2 आ உட்கார். படு. தங்கு. வசி. வெறுமனே இரு. அடங்கப்பெற்றிரு. இரு. ஜீவி. ஓர் நிலையிலிரு. ஒன் றைச் செய்து கொண்டிரு. பயனுகு. ஒய். முடிவடை: முறைப்பிரகாரம் நடத்து, ஆசரி, கொண்டாடு.போக விடு. வெளியேவை.सं உட்கார இச்சி. 4 प சூழ், அடை, அடக்கஞ்செய்.(நீரைப்போல்) உட்கொள், சேர்த்துக் கொள்.

आसः पु ஆஸனம்.இடம்.வில்(सं)சாம்பல்स्त्र சமீபம்.அடிவுடல்.

आसक्त वि(सञ्ज ) கண்ணுங்கருத்துமாயிருக்கிற. சூழப்பட்ட. தொடர்ச்சியான. நித்தியமான =क्त अ ஸதா

आसक्ति अ வேண்டுமென்று क्तिः சதிசெய்யக்காத்திருத்தல்

आसंग वि இடைவிடாத. गः பற்று. சேர்க்கை. தான் ஒன்றிர்

க்குக்கர்த்தாவாக விருப்பதற்காக கர்வம். கட்டல். கட்டப்பட்டது ग ஓர் வாஸனைமண் अ எப்பொழுதும்
**आसंगत्यं** न பிரிவு
**आसंगिनी** स्त्री சுழல் காற்று
**आसंगिमः** पु ஒரு விதக்கட்டு
**आसंज्** । प கட்டு.நாட்டு.பற்று. உடு. கொடு, உதவு.சார்ந்திரு.ஏற்றுக்கொள் णिच् ஏற்படுத்து. क ஒட்டிக்கொள்.
**आसंजनं** न சிக்கிலகப்படல். ஸ்பர்சம். கைப்பிடி. கொக்கி.
**आसज्जनं** न சித்தப்படுத்தல்
**आसत्तिः** स्त्री (सद्) கூடல். நெருங்கிய ஸம்பந்தம். லாபம்
**आसद्** । प கீழே, அருகே உட்கார்.காத்திரு.பாயப்பதிந்திரு. அணுகு, நோக்கு, எட்டு. எதிர்படு,நேரிடு.மேல் விழு. தொடங்கு.வை, இடு. 10 प णिच् கண்டடை. பெறு. தொடர்ந்துப்பிடி.செய்துமுடி.உட்காரச்செய் (सादनं)
**आसदनं** न ஆஸனம். உட்காரல், ஸமீபம். சேர்க்கை. லாபம்.
**आसन्** न வாய். (आस्य விற்குப்பதில்)-वत् वि வாயுள்ள
**आसनं** न இடம். கீழே உட்காரல். ஒருவித உட்காரல். முகம். புணர்ச்சி 84 விதங்களில் ஏதாவது ஒன்று. எதிரிக்கு எதிராக ஓரிடத்தி லமரல். யானையின் முன்னுடல். ஏறிதல் (अस्) வேங்கைமரம். நாற்காலி. மணை. ना. நீதங்கல். உட்காரல். மணை. கடை. -बंधधीर தன் இருப்பில் உறுதியான, ஸ்திரமாயிருக்கிற
**आसंदः** पु விஷ்ணு.दीமேடை.பாடை.கைப்பிடியுள்ளநாற்காலி
**आसंदिका** स्त्री சிறு நாற்காலி. ஸோபா. பாடை.
**आसन्न** विகால,இட, எண்ணிக்கையில்நெருங்கின.தொட்டுக் கொண்டிருக்கிற. நன்கு பொருத்தப்பட்ட. சாகப் போகிற चः அஸ்தமன ஸூரியன் -कालः சாகும் நேரம். யாருக்கு மரணம் சமீபித்துவிட்டதோ. -परिचारकः,

चारिका அங்கரக்ஷகன். கூட இருப்பவன்.
आसन्य वि வாயிலிருக்கிற
आसंबाध वि (சுற்றி) அடைத்துவிட்ட. தடுக்கப்பட்ட
आसया அருகே. எதிரே.
आसवः पु (सु) திராவகமிறக்கல். கஷாயம். சாராயம். அதற்குப் பாத்திரம். தூண்டல் -द्रुः பனைமரம்.
आसंसार, संसृति वि மாறக்கூடிய. रं, ति अ உலகம், ஸம்ஸார முடிவு வரையில். உலகவாழ்க்கைக்குள்.
आसा, आसः கண்முன். நேரில். அருகே. அருகாமை.
आसादः पु மெத்தை, திண்டு தைத்த நாற்காலி
आसादयितव्य, आसाद्य वि அடையத்தகுந்த, வேண்டிய
आसादित वि அடையப்பட்ட. வெல்லப்பட்ட. பரப்பப்பட்ட
आसाधानं न அடைதல். முடித்தல்.
आसारः पु விடாமழை. எதிரிபைச்சூழல். முற்றுகை. படையெடுத்தல். நாட்டுக்குள் பகைவர் செல்லுதல். அயல் நாட்டு சிநேகித அரசனின் சேனை. உணவுப் பொருள்கள். பரப்புதல். முருங்கை. எருக்கு.
आसावः पु (सु) துதிப்பவன். ஸோமரஸம் கிரஹிப்பவன்
आसिकः पु வாள்காரன்.
आसिका स्त्री உட்காரல். உட்காரும் முறை. [வீடு. நகரம்.
आसित वि (आस्) உட்கார்ந்த. तं உட்காரல். வாழ்ந்த)இடம்.
आसिच् 6 प நனை. தெளி. கொட்டு.நிரப்பு. நீர்ப்பாய்ச்சு.णिच्
आसिच् स्त्री வெளியே கொட்டப்பட்ட ஆஹுதி.பாத்திரம்
आसिध् 1 प பிடித்துக்கொள். பொறுப்பில் வை.
असिधारं न आसिधारा स्त्री விருத விசேஷம்
आसीन वि உட்கார்ந்த. உட்கார்ந்திருக்கிற -प्रचलयितं உட்கார்ந்திருக்கும்பொழுது தலையாட்டுகிற, தூங்கி விழுகிற
आसु 5 उ ஸோமரஸம்கிரஹி,இறக்கு.உற்சாகப்படுத்து सवः

**आसुतिः** स्त्री திராவகமிறக்கல். கஷாயம். இறக்கப்பட்டரஸம். உத்பத்தி. பிரஸவம். உற்சாகப்படுத்தல்.

**आसुतीवलः** पु ஸோம ரஸம் கிரஹிக்கும் ரித்விக். பருவகாலத்தில் யாகம் செய்பவன். சாராயங் காய்ச்சுவோன். சிறுமிகளை ரக்ஷிப்பவன்.

**आसुर** वि (री स्त्री) அஸுர, பேய் ஸம்பந்தமான. யாகங்கள் செய்யாத. தைவஸம்பந்தமான. रः அஸுரன். ஓர் பெண்ணை அவள் பந்து, தகப்பனிடமிருந்து வாங்கி மணக்கும் 8ல் ஓர் இழிவான விவாகம். அண்டங் காக்கை राः உலகத் தென்பாக நக்ஷத்திரங்கள். க்ஷத்திரிய குல அஸுர ராஜகுமாரன் री ரண வைத்தியம். சஸ்திரங்களால் அறுத்துகுணப்படுத்துவது. அஸுர ஜாதிப்பெண். கருங்கடுகு. மூலநக்ஷத்திரம். மந்திர பேதம். ஓர் செடி. रं ரத்தம். சவட்டுப்புரிய அஸுர ஸம்பந்தமான.

**आसुरिः** पु கபிலரின் ஓர் சிஷ்யர்

**आसूत्रित** वि மாலை தரித்திருக்கிற. நெருங்கி இழைக்கப்பட்ட

**आसेकः** पु (सिच्) क्यः ஒருவித அலி.

**आसेचन(वि)** (नी स्त्री) அழகான नं திரவபதார்த்தங்களுக்குப் பாத்திரம். नी சிறு பாத்திரம்.

**आसेचनकं** न பார்க்கப்பார்க்க இன்பமானது.

**आसेदिवस्** वि அடைந்த. [தடுப்பவன்

**आसेद्धृ** पु இன்னொருவனைப் பிடிப்பவன் (குற்றவாளிபோல்).

**आसेधः** पु தடை. காவல். ஓரிடத்தில் வெளியே விடாமல் கொஞ்சகாலம் ஒன்றுஞ் செய்யவொட்டாமல் அடை

**आसेधक** वि காவலில் வைக்கிற. [த்துவைத்தல்

**आसेव्** । आ நிறைவேற்று. ஊக்கமாய் அனுஷ்டி. ரமி. முடி.

**आसेवा,** वनं न திருப்பித்திருப்பிச் செய்தல். கூட வஸித்தல்

आस्कंद् । प படையெடு. மிதி. சார்ந்திரு குதி. துள்.
आस्कंद:, दनं न ஏறல். திட்டு. தாக்குபவன். குதிரையின் நடை. யுத்தம். உலர்த்தல். போதல். அழித்தல்.
आस्कंदितं, तकं न குதிரையின் பாய்ச்சலான ஓட்டம்.
आस्कंदिन् वि மேலேபாய்கிற.பாயச்செய்கிற.கொடுக்கிற.கழிக்
आस्क्र वि எதிரிகளைத் தாக்குகிற. நெருங்கின.சேர்ந்த. [கிற
आस्तर: पु (तृ) மெத்தை) உறை.படுக்கைஜமக்காளம்.பரப்பல்
आस्तरण वि பறப்புகிற. णं படுக்கை. மெத்தை.கம்பளி.யானையின்மேல் போடும் ரத்தின கம்பளம். தர்ப்பாஸனம்.
आस्तरणिक वि பரப்ப. கம்பளத்தில் பொருந்துகிற.
आस्ताव: पु மந்திரம். யாகசாலையில் வேதபாராயணஸ்தானம்
आस्तार: पु பரப்பல். இறைத்தல் -पंक्ति: ஓர் விருத்தம்
आस्तिक वि பரலோகத்திலும், வேத சாஸ்திரத்திலும் சிரத்தையுள்ளவன். பக்தியுள்ள क: ஓர் முனி
आस्तिकता,त्वं, आस्तिक्यं न பரலோக, வேத சாஸ்திர சிரத்தை
आस्तीक वि ஆஸ்திகரின் ஸம்பந்தமான क: தக்ஷனை அழிக்காது விட்டுவிட ஜனமேஜயனைக் கேட்ட ஜரத்காருவின் குமாரர் क் மஹா பாரதத்தில்முதலில்ஓர்கட்டம்
आस्तिकार्थद: पु ஜனமேஜய மஹாராஜன்
आस्तीर्ण, स्तृत वि பரப்பப்பட்ட.
आस्तृ, स्तृ 5 9 उ மேலே பரப்பு.மூடு.அலங்கரி இறை.தெளி.
आस्त्र वि பாண ஸம்பந்தமான. [சிதறு
आस्था । उ அருகே நில், தங்கு. பொருந்து. வசி. மேலுக்கேறு. அனுஷ்டி, ஏற்றுக்கொள், அண்டு. செய். நிறைவேற்று. ஒப்புக்கொள்.காட்டு.காண்பி. வாக்களி. நடந்துகொள் णिच् பிடித்துக்கொள். பற்று. திரட்டு. பெறு. உள்ளேநாட்டு.அறிமுகம்செய்துவை.அடிவை
आस्था स्त्री மதிப்பு. கவனிப்பு. ஆதாரம். நம்பிக்கை. முயற்சி.

நிலைமை. கூட்டம். வஸிக்க, இடம், உபாயம். வாக்குறுதி.

**आस्थानं** न இடம். பூமி. கூட்டம். கவனிப்பு. சபையோர்களுள்ள மண்டபம். இளைப்பாறுமிடம். नी சபை—गृहं, मंडपः

**आस्थापनं** न நிற்கச்செய்தல். நடல். பலமுண்டாக்கும் மருந்து ஆஸனத்துவாரத்தினுட் செலுத்தும் நெய், எண்ணை ஸம்பந்தமான மருந்து, உணவு.

**आस्थायिका** स्त्री சபையோர்.

**आस्थित** वि அடைந்த. சூழ்ந்துகொண்ட. பரவின. கருத்தாயிருக்கிற

**आस्थानं** न சுத்தி. ஸ்நானத்திற்குத் தண்ணீர். ஸ்நானம்.

**आस्नेय** वि வாயிலிருக்கிற. ரத்தமயமான. ரத்தம் போன்ற

**आस्पदं** न இடம். அது வீடு. விஷயம். கொள்கலம். அந்தஸ்து. படி, ஸ்தானம். கௌரவம். அதிகாரம். தொழில், ஆதாரம். லக்கினத்திற்குப் பத்தாமிடம்.

**आस्फन्दनं** न அசைதல்.

**आस्फल, स्फुल** 10 प णिच् ஆட்டு. நோக்கி அமுக்கு. தட்டு. வில் நாண் சப்திக்கச்செய். வாத்தியம் வாசி, அடி. துளாய்க் கிழி.

**आस्फालः** पु யானையின் காதுகளை) அடித்துக்கொள்ளல்.

**आस्फालनं** न தேய்த்தல். சிறகடித்தல். திமிர். கர்வம்.

**आःफुजित्** पु சுக்கிரன், வெள்ளி

**आस्फुटः** पु எருக்கஞ்செடி

**आस्फोटः** पु ,, நடுங்கல். அடித்துக்கொள்ளல் (சிறகை, வாலை) தோள்களைத்தட்டிக் கொள்ளல். —टक. टा இருவாட்சி

**आस्फोटनं** न சிறிகடித்துக் கொள்ளல். ஆடல். அசைதல். உப்பல். விரிதல். சுருங்கல். மூடிக்கொள்ளல். உள்ளங்கையால் அடித்தல், அச்சப்தம். வெளிக்காட்டிக்கொள்ளல். புடைத்தல். சுமையடித்தல். नी முறப்பணம்.

आस्फोत(क): पु எருக்கு. பலேயத்தி. ता, तका. மல்லி. நன்னரி
आस्माक वि நம்முடைய. எங்களுடைய
आस्य वि முகஸம்பந்தமான. स्यं முகம். வாய். தாடை. சொற்களுண்டாகும் வாய் பாகம்.மாஸம்स्या இருப்பு. உட்காரல். ஒய்வு நிலே. -आसवः எச்சில்.சொள்ளு -पत्रं தாமரை -लांगलः நாய். பன்றி -लोमन् மீசை, தாடி
आस्यंदनं न பாய்தல், பெருகல், கசிதல்
आस्यंधय वि முத்தமிடுகிற.
आस्रं न ரத்தம் -पः ராக்ஷஸன். மூலாநக்ஷத்திரம்.
आस्रवः पु வலி. துன்பம். அனுப்புகை, விடுதல். தோஷம் மீறல். கஞ்சி. विनूபாய்கிற. மதஜலம் கசிகிற (யானே)
आस्राव वि ஓடுகிற, பாய்கிற. वः காயம். வெளிவருகை. எச்சில். வலி. நோய் -भेषजं மருந்து.
आस्वनित, आस्वांत वि சப்திக்கப்பட்ட
आस्वाद वि (स्वद्) ருசி பார்க்கிற दः புசித்தல். ருசி. அனுபவித்தல். அனுபவித்தறிதல் दक அனுபவிக்கிற.
आस्वाद्य वि ருசி பார்க்கத்தகுந்த. மதுரமான. ரம்மியமான.
आह अ கண்டிப்பு, கடுமை, கட்டளே, எறிதல், அனுப்பல். ஆச்சரியம் ஸூசகம். சொல்லுகிருன் (ब्रू இப்பதம் ப்ரசாரத்தில் இல்லே)
आहकः पु ஒருவித மூக்கு நோய்
आहंकार्यं न அகம்பாவம்
आहत वि (हन्) (மணி, பறைபோல்) அடிக்க, உதைக்க, கொல்ல, மிதிக்க, ஹிம்ஸிக்க, ஓதுக்க, பெருக்க, அறிய, (பாச்சிகை) உருட்ட, பொய் சொல்லப்பட்ட तः நகாரா. तं புது வஸ்திரம். பழய உடை. உளரல். (மலடியின் பிள்ளேபோல்) -लक्षण விசேஷ குணம்
आहतिः स्त्री கொலே. வரல். हननं கோல் [பொருந்திய

आहननीय वि பறையடித்துத்தன்னை அறிவித்துக்கொள்ளுகிற
आहनस् वि (ஸோமம்போல்) அடித்து, அமுக்கியெடுக்க வேண்டிய
आहर वि (स.अदिल्) கொண்டுவருகிற. பற்றுகிற [அம் மூச்சு.
आहरः पु கைப்பற்றல். செய்தல். முடித்தல். மூச்சிழுத்தல்.
आहार ण वि திருடிக்கொண்டு போய்விடுகிற. தூண்டுகிற. பிடுங்குகிற. ஒருத்திக்குக் கலியாணத்தில் கொடுத்த சீதனம். [வரல். செய்தல்.
आहर्तृ वि கிரஹிப்பவன். பூமியின் பாத்தியக்காரன். கொண்டு
आहवः पु (हु) யாகம் (ह्वे) யுத்தம். சண்டைக் கழைத்தல்
आहवनं न (हु) ,, ஹோமம்
आहवनीय वि ஹோமம் செய்யப்பட வேண்டிய. யக்யத்தில் கார்ஹபத்தியாக்கினியிலிருந்து ப்ரதிஷ்டையான கிழக்கு திக்கக்கினி.
आहवनीयक वि பசனம் செய்து ஹோமம் செய்வதற்குரிய कः பிரதிஷ்டையான அக்கினி.
आहार वि (हृ) கொண்டு வருகிற, வரப்போகிற. கொடுக்கிற.
आहारः (हृ) கொண்டு வரல். உபயோகித்தல். உண்ணல். உணவு. பந்து. யானை வாய் பிடிக்குமளவு உணவு.-निः सरणमार्गः மலத்துவாரம் -पाकः சமைத்தல். ஜீரணம்-विरहः உணவின்மை. பட்டினி. -संभवः அன்னரஸம்.
आहारक वि கொண்டு வரப் போகிற
आहारिकं न (ஜைநமதப்படி) ஜீவனின் ஐந்திலோர்தேஹம்
आहार्य वि உண்ண, பூஜிக்க, பெற, கொண்டுவர, ஒதுக்க, பரவத்தகுந்த செயற்கையான, துணையான. கருதப்பட்ட. நாடகத்தில் அலங்காரத்தால்ஜோடிக்கப்பட்ட. र्यः ஒருவிதக்கட்டு. र्यं நாடகத்தில் நகை. அலங்கார வேஷாம்சம். பாத்திரம். பிடுங்குதல். எடுக்குகை

பிடுங்கி எடுத்து குணப்படுத்தவேண்டிய ஓர் நோய்
आहावः पु (हु ह्वे) அக்கினி. கிணற்றண்டை நீர்த்தொட்டி. சண்டை. அழைத்தல்.
आहिकः पु கேது. பாணினி முனி. வாத்தியபேதம்.
आहिंडिकः पु வைதேஹஸ்திரீக்கும் நிஷாதனுக்கும் பிறந்த காவல்கார்த்தல் தொழிலையுடைய ஓர் கலப்பு ஜாதி.
आहित वि (आधा) வைக்கப்பட் உணர்ந்த. அடங்கப்பெற்றிருக்கிற-अग्नि वि பல ...த்தின் மேல் அக்கினியை வைப்பவன், யஜமான . வைதிகாக்கினி வளர்ப்பவன் -अंक குறி, முத்திரைபோடப்பட்ட -औत्सुक्य கவலையை உண்டு பண்ணிவிடுகிற. -क्लम களைத்த -लक्षण விசேஷ குணம் பொருந்திய -व्यथ துன்புறுத்துகிற -स्वन கோஷ
आहितिः स्त्री மேலே வைத்தல், வைக்கப்பட்டது [முள்ள
आहितुंडिकः पु பாம்பாட்டி. ஜாலக்காரன். செப்படிவித்தைக்
आहिरणिन् पु இருதலைப்பாம்பு. [காரன்.
आहुकः கிருஷ்ணனின் பாட்டனை ஓர் அரசன் का:ஓர் ஜனம்
आहुत वि (हु) ஹோமம், பலியிடப்பட்ட. तं அதிதி பூஜை. பூதயக்கம்.
आहुतिः स्त्री ஹோமம். தேவபூஜை. போருக்கழைத்தல். வேண்
आहुल्यं न காய்தானியத்திற்குரிய ஓர்புதர் (तगर, तरवट) [டல்.
आहूः स्त्री வேண்டல். அழைத்தல்.
आहूत वि (ह्वे) அழைக்கப்பட்ட. பெயரிடப்பட்ட. तं கூப்பிடல் -प्रपलायिन् पु உத்திரவின்படி ஆஜராகாதப்பிரதிவாதி -संप्लवः ஜகப்பிரளயம் तिः கூப்பிடல்.
आहूय वि (ह्वे) வேண்ட, அனுகூலப்படுத்த, வளைக்க, அருகே கொண்டுவரப்படவேண்டிய
आह । प போய்க் கொண்டுவா. அருகேவை. கொடு. திரும்பிப் பெறு. அடை. உடைத்தாயிரு, வகி, தரி. உண்டுபண்,

அடைவி. (மணிவிபோல்) அங்கேகொண்டுவா, மணம் புரி. உடு. யஜி. செய். முடி. ஒதுக்கு மயக்கு. பிடுங்கு. பிரி. பயமுறுத்து. உணவாக்கிக்கொள். உண் निच् திரட்டு. காட்டு. வெளிவை. நிர்ப்பந்தித்துக்கேள்.

आहृत त्रि கொண்டு வரப்பட்ட.

आहेय त्रि பாம்பின் ஸம்பந்தமான

आहेरुः स्त्री தண்ணீர்முட்டான்

आहो अ சந்தேகம் (இரண்டில் எது), கேள்வி ஸூசகம் -पुरुषिका யுத்தத்தில்பிறரைத்தூஷித்துத்தன்னைப்பூஷித்துக் கொள்ளும்) அஹம்பாவம்-स्वित् अ சந்தேகம் (ஒருக்கால், இருக்கட்டும்) ஸூசகம்.

आह्न त्रि (ह्नी स्त्री) தினந்தோறும். ஒருநாளில்செய்யவேண்டிய

आह्नं न தொடர்ச்சியாய்ப்) பலநாட்கள்.

आह्निक त्रि (की स्त्री) தினத்திய. தினம்செய்யவேண்டிய. தினம் நேரிடுகிற. உபயோகித்துக்கொள்ளுகிற. कं குறித்த காலத்தில் பிரதிதினம் அனுஷ்டிக்கப்படவேண்டியது. நித்தியகர்மம், உணவு. பாராயணம். காரியம். அத்தியாயம் (மஹாபாஷ்யத்தினதுபோல்) -आचारः நித்திய கர்மானுஷ்டானம்.

अह्लादः पु ஸந்தோஷம். -दुघ ஆனந்தத்தையளிக்கிற = ह्लादन

आह्लादिन् त्रि களித்த. இன்பந்தருகிற

आह्व त्रि கூப்பிடுபவன். கூப்பிடுவது. கூப்பிடப்பட்ட

आह्वरकः पु (ह्वृ) சிராத்தமுடிவில் பிண்டத்தைத்தானே எடுத்துக் கொள்ளும் ஓர் நீசப்பிரஷ்டன்

आह्वयः पु (ह्वे) பெயர். மிருகச்சண்டையில் வரும் வழக்கு

आह्वयन त्रि ஒருவனின் பெயரை வகிக்கிற. नं பெயர்

आह्वा स्त्री கூப்பிடல். பெயர் (स. अ தில்)

आह्वानं न (ह्वे) பெயர். ஓர் ஜபமந்திரம். தேவதாப்பிரார்த்தனை,

ஆஜராககக்கட்டளை -दर्शनं விசாரணை நாள்

आह्वानयति நா. प. அழை. அழைப்பி.

आह्वायः பு பெயர். ஆஜராக ராஜாங்க உத்திரவு.

आह्वायक வி அழைக்கிற கः தூதன். செய்தி கொண்டுவருப

आह्वारकः பு கிருஷ்ணயஜுர்வேதத்தைப்பரிஷ்கரித்தல்[வன்

आह्वतभेषज வளைக்க, கொடுக்கப்பட்டதைக் குணப்படுத்துகிற

आह्वृ । प கோணலாக்கு. ஹிம்ஸி. -ति: கோணலாக்கல்

आह्वे । प அழை. பிரார்த்தி. ஆவாஹனம்செய்.கோபமூட்டு. போருக்கழை. ராஜாங்கக்கட்டளை மூலம் அழைப்பி

## इ

इ अ கோபம், தயை, வியப்பு, துன்பம், நிந்தை. கூப்பிடல் ஸம்சகம் इः பு மன்மதன். பாம்பு. ஒளி. பிரம்மா.விஷ்ணு. சிவன். சந்திரகிரணம்.ஸுப்ரம்ஹண்யன்.ரத்தம் स्त्री பெண்யானை

इ 2 प போ. நெருங்கு. வந்து சேர். எட்டு. அடை. ஓர் நிலைக்குவா. திரும்பு. போய்விடு. கழிந்து போ. மேலுக்கு வந்து தோன்று. தொடங்கு. யாசி. இரு. ஒருவித ஸம்பந்தம் பெற்றிரு. செழி 1 उ=अयु 4 आ திரி.வேகமாய், அடிக்கடி போ. णिचू

इकटः பு நாணலின் அடி, நுனி

इक्कटः பு பாய்க்குதவுகிற ஒரு வகைக் கோரை

इक्कवालः பு (ஜ்யோதிஷத்தில்) ஸௌபாக்கியம். செழிப்பு.

इक्षवः பு கரும்பு

इक्षु பு,, கோபில விருக்ஷம்.இச்சை -कन्दका இருளங்கிழங்கு -कांडः, डः நாணல் முஞ்ஜைப்புல்-कुट्टकःகரும்பைச்சேர்ப்பவன். கள் விற்போன் -गंधा நெரிஞ்சல். நீர் முள்ளி. வெள்ளை இரளி -गंधिका ஓர் இரளி -जं வெல்லம். -जः

முத்து -डिंभः கரும்பு தின்பவன் -तगरी நாகநந்திச் செடி -तुलया ஓர் நாணல் -दर्भा தர்ப்பபேதம் -दाளர்நதி -नेत्र கரும்பின்கண், மூலம். கரும்புபேதம் -पत्र ஓர் தான்யம் -पाकःபாகு -पुंखः (मणिकाश) செடி -प्रः (शरं) விருக்ஷம் -बालिका நாணல்-भक्षिका சர்க்கரை, பாகு, கரும்பைத்தின்னல் भक्षितीகரும்பைத்தின்பவள்-मती,मालिनी, मालवी ஓர் நதி. -मूलं கரும்புபேதம் -मेहः அதிமூத்திர ரோகம் -मेहिन् அதிமூத்திர ரோகமுடைய -यंत्र கருப்பாலை -योनिः கரும்பு பேதம் -रसः ஒருவித நாணல். வெல்லம், (क्वाथः) -रसोदः இக்ஷுஸமுத்திரம் -वणं கரும்புத்தோட்டம் -वल्लरी, चक्री பாலிரளிக் கிழங்கு -वालिका ஓர் மரம். நாணல் -वाटी, वाटिका கரும்பு பேதம், தோட்டம் -विकारः சர்க்கரை. வெல்லம். மதுரமான தின்பண்டம் -शाकटं, शाकिनं கரும்பு பயிராகத் தகுந்த பூமி -शिक्षिका செணம்பு தானியம் -सायकः மன்மதன் -सारः [பாகு. வெல்லம்

इक्षुकः पु கரும்பு

इक्षुकीया स्त्री கரும்பு நிறைந்த விடம்

इक्षुर(क): पु கரும்பு. நீர் முள்ளி. நாணல்

इक्षूदः पु இக்ஷு ஸமுத்திரம்

इक्ष्वाकुः पु வைவஸ்வத மனுவின் பிள்ளையாகிய முதல் ஸூர்யவம்சத்தரசன். स्त्री பேய்ச்சுரை. ஒருவிதவாஸனைத்திரவியம்

इक्ष्वालिकः पु ஒருவித நாணல்

इ(इं)ख् । प அசை. போ.

इंग् । उ அசை. குலுக்கு. கலக்கப்பட்டிரு. போ णिच् ஸமஸ்த பதத்தைப் பிரி.

इंग वि அசைகிற. ஆச்சரியமான गः ஜாடை. குறிப்பு. மனோபாவத்தை ஜாடையால் ஸூசிப்பித்தல். அறிவு. गा

ஒருவிதமான எண்ணிக்கை

इंगनं न அறிவு அவக்கிரஹத்தால்ஸமாஸத்தைஉடைத்தல்

इंगाल: पु மரக்கரி

इंगितं न துடிப்பு. குலைப்பு. மனோபாவம். சைகை. மனோபாவத்தை யொத்த சேஷ்டை -कोविद:, ज्ञ ஜாடைகளை நன்குணருகிற.

इंगु: पु நோய்

इंगुद:, दी, गुल: पु மணிப் புங்கை दं இதன் கொட்டை

इंग्य वि தன்னிடத்திலிருந்து அசைக்கத் தகுந்த, பத பாடத்தில் அவக்கிரஹத்தால்பிரிக்கப்படுவதின் பரிபாஷை

इचिकिल. पु குட்டை.சேறு.

इच्छक वि (इष्) இச்சிக்கிற. क. கிடாரை. நாடப்பட்டதொகை

इच्छत् वि இச்சிக்கிற. இஷ்டப்படுகிற. ஸம்மதிக்கிற.

इच्छा स्त्री இச்சை. இஷ்டம். ஸம்மதம். கணக்கில் பிரச்னைருஜு செய்யவேண்டிய அம்சம். ०या ஸங்கதம். இச்சார்த்தகம்-फल விடை. -रतं நல்ல பொழுதுபோக்கு. விநோதம்.-वती காமுகி. -वसु: இஷ்டப்படிஐச்வர்யத்தையுடைத்தாயிருக்கிறவனான குபேரன் -संपद् ஆசையை நிறைவேற்றல்

इच्छु कि वि இச்சிக்கிற

इज्जल: पु நீர்வஞ்சி

इज्य वि (यजू) பூஜிக்கத்தகுந்த. ०ज्य: குரு. பிரஹஸ்பதி. புஷ்யம். பிரம்மம். விஷ்ணு. ०ज्या யாகம். தானம். விக்கிரஹம். பூஜை. சேரல். பசு. கூட்டிக்கொடுப்பவள் -शील: அடிக்கடி யாகஞ் செய்கிறவன்

इंचाक: पु நீர்த்தேள். இரால்மீன்

इट्ट् । प போ. நெருங்கு. பிசகு. அவசரப்படு

इट: पु பிரம்பு. கோரை. பாய். பிரப்பம்பாய்,படல் -सूनं பாய்

इट्चर: इट्टर: पु யதேச்சையாய்த் திரியும் பொலி சேங்கன்று

इड इल्, स्त्री ஹோமம். ஸ்துதி. பூமி. உணவு. மழைகாலம்.

5ல் 3வது ப்ரயாகம். குடிகள். ब பூஜிக்கப்படும் வஸ்து -देववा எந்த தேவதையைக் குறித்து ஹோமமோ அது
इड(ल)स्पति. पु விஷ்ணு, பூஷன்
इडः पु அக்கினி
इडा, ला स्त्री பூமி. வாக்கு. ப்ரயாக, அனுயாகங்களின் நடுவில் ஹோமம். களைதீர்க்கும் உறிஞ்சல், இழுப்பு உணவு. अल வாயிலிருந்து (ஸரஸ்வதி) ஸ்துதி பெருகல். பாலால் நைவேத்தியம். பசு. ஸ்வர்க்கம்.மூக்கு வலப்பக்க நாடி பேதம். துர்க்கை. மனுவின் பெண்ணை ஓர் ஸ்திரீ தேவதை. புரோடாச பாத்திரம்
इडाचिका स्त्री குளவி. வண்டு.
इडावत् वि பலிமை யுடைத்தாயிருக்கிற. களைதீர்க்கிற.
इडिका स्त्री பூமி
इडिक्कः पु காட்டாடு
इड्वरः पु இஷ்டப்படி திரியும் சேங்கன்று
इंड्, ड्वः (इंड्वं) न ब நெருப்பெடுக்கும் சட்டியை எடுக்க கைகளை மூடிக்கொள்ள உபயோகமாகும் இருசிறு வட்டமான தட்டுகள்
इंडीरथः पु சூர் கத்தி
इत् वि போகிற (स. अ தில்) अகார்யார்த்தமாய்வந்தஎழுத்து
इत वि சென்ற.அடைய தொடரப்பட்ட நினைத்துக்கொண்ட
इतं न வழி. போக்கு. அறிவு.इतिःபோதல்इत्वन् वि போகிற
इतर वि (रा स्त्री रत् न) வேறான. இரண்டில், பலவற்றுள்வேறான.எதிரான. இழிவான. கேவலமான -इतरஒன்றிர்க்கொன்று.
इतरतः. त्र अ இதைக் காட்டிலும் வேறாக. வேறிடத்தில்.
इतरथा अ வேறு வழியில், எதிராய். விபரீதமாய். அப்படிக்கின்றி
इतरेद्युः अ வேறு நாளில்.
इतस् अ இங்கிருந்து. இம்மனிதன், என்னிடமிருந்து. இப்

பக்கத்தில். எனக்காய். இக்காரணத்தினால். இவ்வுலகி
லிருந்து. இக்காலம் முதல் -इतःपडि இப்புமப்படியும்.
இவ்விடத்திலும் வேறிடத்திலும், चेतश्च, -ततः இங்கு
மங்கும். போக வர

इति அ என்று -अर्थः விஷயத்தின் ஸாராம்சம் -अर्थं அ இதற்
காக, ஆகையால் -आदि முதலிய -उक्त செய்தி. -कथ त्रि
நம்பமுடியாத. துஷ்டையான. था உளரல் -कर्तव्यं,
करणीयं கடமை, விதி -मात्र அவ்வளவளவுள்ள -वृत्तं ஸம்

इतिथ वि அப்படிப்பட்ட, அதில்சேர்ந்த [பவம். கதை

इतिवत् அ இதே மாதிரி

इतिह அ அப்படியே. இவ்வாறு. புராணத்தைமிகவும் ஒத்து

इतिहासः पु அநுஷ்டானத்திற்குப் பிரமாண ஹேதுவான
ராமாயண, பாரதாதிகள் -निबंधनं பௌராணிகவிஷயம்
-वादः புராணம். பழய சரித்திரம்

इतीयत् वि இவ்வளவான

इत्कटः पु ஒருவித நாணல்

इत्किला स्त्री ஓர் வாஸனை

इत्थं அ இவ்வாறு. இப்படி -कारं அ இந்தப் பிரகாரம் -भूत
இவ்வாறு நேர்ந்த. இந்நிலையில். உண்மையான (கதை
போல்) -भावः இவ்வித குணங்களையுடைய =-विध

इत्थशालः पु மூன்றும் யோகம்

इत्था அ உண்மையில். இவ்வாறு =इत्थात् अ

इत्य त्रि போகத்தக்க. त्या போதல். வழி. டோலி. பல்லக்கு

इत्वर वि (री स्त्री) போகிற. குரூரமான. இழிவான. நிந்திக்கப்
பட்ட. ஏழையான பிரயாணி. பொலி எருது रः பேடி

इदू அ एव மாத்திரம் [ரி வியபிசாரி

इदं இது. இந்த. அ இங்கே. இவ்விடத்திற்கு. இப்பொழுது
அங்ஙக. இதோடு -प्रथम ஒன்றை முதல்தாம் செய்

கிற. -वसु இகிலுமகிலும் ஐச்வர்யம் வாய்ந்த
इदंतन वि தற்காலத்திய
इदंता स्त्री ஐக்கியம். ஒரே தன்மை
इदंमय वि இதாலான. இதுவான
इदंयु वि இதை இச்சிக்கிற
इदा अ இப்பொழுது -वत्सरः, इदुवत्सरः, इद्वत्सरः பெரிய ஸம் மானங்களிலிருந்து அன்ன வஸ்திரதானங்கள் உண் டாகும் ஐந்தில் ஒரு வருஷம்.
इदानीं अ இப்பொழுது. இவ்விஷயத்தில். இப்பொழுதுதான்
इदानींतन वि தற்காலத்திய [இன்னமும்
इद्ध वि (इंध् 7आ) கொளுத்தப்பட்ட. பிரகாசிக்கிற. தெளிவா ன. ஆச்சர்யமான. கீழ்ப்படிகிற द्ध वெய்யில். சூடு. ஒளி. வியப்பு. -दीधितिः அக்கினி -बोधः பண்டிதன் -मन्यु கோபம் மூட்டப்பட்ட
इध्मः पु மன்மதன். வஸந்தகாலம். ஸமித். விறகு = ध्म-जिह्वः அக்கினி -प्रव्रश्चनः கோடாலி
इध्या स्त्री கொளுத்தல். வெளிச்ச முண்டு பண்ணல்
इन् 6. 8. प போ. மேல் விழு. அமுக்கு. ஓட்டு. பலமுண் டாக்கு. நிர்ப்பந்தி. ஒதுக்கு. கைப்பற்று. பரவு. நிரப்பு. ஆட்கொள். சரிப்படுத்து [யுள்ள.
इन वि முடியுமான. சக்தியுள்ள. திருடசித்தமுள்ள. மகிமை
इनः पु பிரபு. ஸூரியன். ராஜன். ஹஸ்தம் -कांतः ஸூர்ய காந்தக்கல் -सभं ராஜஸபை
इनक्षति அடைய) முயல். எட்டு
इनानिन् पु ஓர் விருக்ஷம் (वटपत्री)
इंद् । प சக்தனுயிரு.
इंदंबरं न கரு நெய்தல்
इंदिदिरः पु வண்டு

इंदिरा स्त्री லக்ஷ்மி = न्दी -आलयं தாமரை =-मंदिरं. रः விஷ்ணு
इंदि(दी)वरं न கருநெய்தல் தாமரை. रः விஷ்ணு ரீதண்ணீர் முட்டான் கிழங்குவரிணி கரு நெய்தற் கூட்டம்
इंदीवारः पु கருநெய்தல்
इंदुः पु சந்திரன். மிருகசீர்ஷம். எண் 1. கற்பூரம். சந்திரனின் மாறுபாடு. நிலவு காலம், இரவு. தும்பை.மூக்கினிடச் சந்து. -मलं வெண்டாமரை. ஆம்பல். -कला சிந்தர்க்கொடி. நெல்லி.கடுக்காய்.ஆட்டாங்கொடி. ஸோமலதை. சந்திரகலை =-कलिका தாழை -कांतःசந்திரகாந்தக்கல். ता இரவு. தாழை -क्षयः அமாவாஸை -जः புதன் -जा நர்மதை -जनकः கடல். அத்ரிமஹரிஷி -दलः இளம்பிறை, அர்த்தசந்திரன் -नामन् கற்பூரம். ஓர் வாஸனைப் புல் -पुष्पिका ஓர் செடி -भं கற்கடராசி. மிருகசீர்ஷம் -भा அல்லி விசேஷம் -भृत्, शेखरः சிவன் -मणिः சந்திரகாந்தக்கல். முத்து = -रत्नं-लेखा = कला -लोकःசந்திரலோகம் - लोहकं, लौहं வெள்ளி -वदना ஓர் விருத்தம் -वल्ली ஸோமலதை -व्रारः ஓர் யோகம் -वासरः திங்கள் -व्रतं சாந்திராயண விருதம்
इंदुमत् पु அக்கினி [சகோதரி
इदुमती स्त्री பருவம். அஜனின் மனைவியான போஜனின்
इंदु(दू)रः पु எலி. சுண்டெலி
इन्द्रः पु தேவதைகளின் பிரபு. மழைக்கு தேவதை. மழை. மேகம். (स. अ தில்) சிறந்தது, அரசன் ராஜன். ராஜபுத்திரன். வலக்கண்மணி. இரவு. பாரதவர்ஷத்தில் ஓர் பிரிவு. 26வது யோகம். ஜீவன். பெருமை. வெட்பாலை. செடி ஸம்பந்தமான விஷம். உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் யோகநக்ஷத்திரம் द्रा இந்திராணி-अक्षः நொச்சில் -अग्निः மேகங்களுராய்வதாலுண்டாகுந்தீ. (धूमः) பனி

(देवाता) விசாகம் -अवरजः விஷ்ணு. நாராயணன் -अरिः
அஸுரன்-अवसानः பாலைவனம்-अशनः குன்றுமணி. சண
ல்-आयुधं வானவில்घः கண்களைச்சுற்றிக்கருமையுள்ளகு
திரை घा ஒருவித அட்டை -आसनं ஸிம்ஹாஸனம்.5
எழுத்துக்களுள்ளபாதம்-इज्यः பிரஹஸ்பதி-ईश्वरः சிவலி
ங்க ரூபங்களிலொன்று. -उत्सवः இந்திரனுக்குத்ஸவம்
-ऋषभ இந்திரனைக்காளையாகவுடைய, இந்திரனால் கர்ப்ப
முண்டாக்கப்பட்ட (பூமி)-कर्मन् விஷ்ணு -कीलः மந்திர
மலை.பாறை लं இந்திரனின் கொடி -कूटः ஓர்மலை-कृष्ट
மிகச் செழித்து வளருகிற ष्टः மழை ஜலத்தால் உண்
டாகும் ஓர் தானியம்-कोपः மழையிலுண்டாகும்பட்டுப்
பூச்சி -कोशः,षः, षकः படுக்கும் மெத்தை. மேடை கூரை
முகப்பு (முன்வந்திருப்பது). சுவற்றில் முளை -गिरिः
மஹேந்திரமலை -गुरुः பிரஹஸ்பதி -गोप(क)ः ஒருவிதப்
பூச்சி-चंदनं வெண் சந்தனமரம் -चापं வானவில். அவன்
வில் -छंदस् 1000 ஸரமுகதுமாலை-जा இந்திரனிடமிருந்
து வருகிற, உண்டான -जालं இந்திரனின் வலை. யுத்
தச் சூழ்ச்சி. மோசம். மாயை.செப்படிவித்தை-जालिक
பொய்யான कः தொம்பரவன்.மாந்தரீகன்-जित् இந்திர
னைஜயித்தலக்ஷ்மணனால்கொல்லப் பட்டராவணனின்
பிள்ளை (அனு)(सूः) ராவணன் -ज्येष्ठ वि இந்திரனால்
நடத்தப்பட்ட -तापनः பேககர்ஜனை -तूलं, लकं பஞ்சுப்
பொதி-दमनः பாணாஸுரனின் பிள்ளை -दारुः தேவதாரு
-द्रुः, द्रुमः மருதமரம். வெட்பாலை -द्वीपं, पः இக்கண்டபி
ரிவு 9த்வீபங்களில்1-ध्वजः புரட்டாசி சுக்லத்துவாதசி
யன்றுஉயர்த்தப்படுங்கொடி-नामन् குங்கிலியமரம்.கோ
ட்டான்-नीलः இந்திர) நீலம். -नक्षत्रं உத்திரம் -नीलकः பச்
சைக்கல் -नेत्रं எண்1000-पर्णी,पुष्पा ஓர் மூலிகை-पर्वतः ஓர்

நீலமலை.மஹேந்திரமலை -पुत्रा அதிதி-पुरोगम, पुरःसर, श्रेष्ठ இந்திரனைத்தலைவனுகவுடைய -पुरोहितः பிரஹஸ்பதி ता पुष्यम् -प्रस्थं பாண்டவர்களின் இருப்பிடமான தற்கால டில்லி-प्रहरणं இந்திராயுதம்,இடி.-भेषजं சுக்கு-मखः இந்திரனைக்குறித்துயாகம்-महः இந்திரனுக்குத்ஸவம்.மழைகாலம் (कार्मुकः) நாய்-मूर्धन् புற்று.-मेदिन् வியாருக்குஇந்திரன் தோழனே-यवः, वं வெட்பாலையரிசி-लुप्त, प्तः, प्तकं முழு மொட்டை.தாடியின்மை.அதற்கேதுவானஓர் ரோகம் -लोकेशः இந்திரன். அனமிட்டவனுக்கு ஸ்வர்க்க மளிக்கும் அதிதி. -वंशा, वज्रा விருத்த விசேஷங்கள் -वल्लरा, वल्ली முடக்குற்றன்கீரை -वस्तिः கணுக்கால் சதை -वाततम वि இந்திரனால் இச்சிக்கப்பட்ட -वायू द्वि இந்திரனும் வாயுவும் -वारुणी, णिका கொம்மடிமாதுளை. பேய்த்துமட்டி -वृक्षः தேவதாரு -वृद्धा ஒருவித ரணம் -वैडूर्यं ரத்ன விசேஷம் -व्रतं குடிகளுக்கு நன்மையை இந்திரன் மழையை வர்ஷிப்பதுபோல் அனுஷ்டிக்கத் தகுந்ததான ராஜனின் கடமை -शक्तिः இந்திராணி -शत्रुः இந்திரனின்விரோதி. (கடையெழுத்தை அழுத்தி உச்சரித்தால்) யாருக்கு இந்திரன் விரோதியோ (முதலெழுத்தை அழுத்தி உச்சரித்தால்)விருத்திரன். இவன் தகப்பன் இந்திரனைக் கொல்ல इंद्रशत्रुर्वर्धस्व என்று சொல்லச் சொல்ல இவன் அதை அபஸ்வரமாய்ச் சொல்லவே இந்திரனால் இவனைகொல்லப்பட்டவனுனன் -संधा இந்திரனுடன்தோழமை-सारथि மாதலி. இந்திரனோடு ஓரே ரதத்தில் செல்லுகிற வாயு -सावर्णिः 14 ம்மனு -सूनुः ஜயந்தன். அர்ஜுனன். வாலி. மருதமரம் -सुरसः, सुरा, सुरिसः நொச்சில் -सेना இந்திரனின் பாணம், சேனை -सेनानीः ஸுப்ரம்ஹ

ண்யன் -स्तुत्, स्तोमः இந்திரனைத் துதிக்கும் ஓர் மந்திரம், யாகம். -हस्तः ஓர் மருந்து

**इंद्रकं** न சபை. கூடம்.

**इंद्रतम** वि மிகவும் இந்திரனைப்போல். பலமுள்ள

**इंद्रता, त्वं** न இந்திரனின் பலம், கௌரவம்.

**इंद्रस्वत्** वि இந்திரனால் தொடரப்பட்ட. சக்தி வாய்ந்த

**इंद्रयु** वि இந்திரனையடைய இச்சிக்கிற

**इंद्राणिका** स्त्री நொச்சில்

**इंद्राणी** स्त्री இந்திரனின் மனைவி. எண் சக்திகளில் ஒன்றான துர்க்கை. புணர்ச்சி விசேஷம். நொச்சில். சிவப்பு வசம்பு. பெரு ஏலம்.

**इंद्रिय** वि இந்திரனுக்குத் தகுந்த, பிரியமான, ஸம்பந்தமான

**इंद्रियः** पु இந்திரனின் தோழன் ॰யं பலம். இந்திரனின் தன்மை. இந்திரியம். கண், காது, நாக்கு, மூக்கு, தோல் எனக் ஞானேந்திரியங்கள் 5. கை, கால், வாய், மல மூத்திரத் துவாரங்கள் என கர்மேந்திரியங்கள் 5. மனோ, புத்தி, சித்தம், அஹங்காரமென 4 உள்ளிந்திரியங்களாக மொத்தம் 14. இவைகள் ஒவ்வொன்றிற்கும் அதிஷ்டான தேவதை தனி. வீர்ய, இந்திரிய சக்தி. ரேதஸ். எண் 5 ன் ஸங்கேதம் -अर्थः சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தங்களென விஷயங்கள் 5. விஷயங்களைத் தூண்டுவது -आस्मन् விஷ்ணு. இந்திரியம் -आदिः அஹங்காரம் -आयतनं தேகம். ஜீவன் -आराम விஷய ஸுகத்திலீடுபடுகிற -ईशः ஜீவன் -गोचरः விஷயம் -ज எதிரான. தோற்றமான -ज्ञानं அறியுந்தன்மை. நினைவு -बुद्धिः இந்திரியங்களாலறிதல். இந்திரியத்தொழில் -बोधनं இந்திரியங்களைத் தூண்டல். உத்தீபனமருந்து -वधः பிரக்ஞையின்மை. -विप्रतिपत्तिः பிசகாய் அறிதல்

-सन्निकर्ष: இந்திரியம் விஷயத்தோடாவது, மன தோடாவது ஸம்பந்தப்பட்டிருத்தல் -स्वाप: மயக்கம், சோர்வு. மதிதவறல்.

इंद्रियवत् वि இந்திரியங்களை யடக்கினவன், உடையவன்

इंध वि கொளுத்துகிற. ஒளிப்பிக்கிற. ध: பிரம்மம். விறகு = ·नं

इंधन्वत्, न्वन् वि விறகையுடைய

इन्व् 6 प போ. பரவு. சூழ். கைப்பற்று. களிப்பி. பலப்படுத்து

इन्वका: स्त्री पु மிருகசீர்ஷத்தின் தலை மேலிருக்கும் 5 நக்ஷத்திரங்கள்.

इभ् 10 प குவி

इभ: पु யானை. அதீனத்திலிருப்பவர்கள். தாஸர்கள். சந்திரன். கணபதி. भी பெண் யானை -अश्वप्रिया கோஷ்டம் -आह्वय:, केशरा நாக கேசரம் -उषणा, कणा யானைத் திப்பிலி -गंधा விஷக்காயுள்ள ஓர் மூலிகை -दंता ஸூர்ய காந்தச் செடி. -निमिलिका சணல். தீக்ஷ்ண புத்தி -पोटा சிறு பெண் யானை -भर: யானைக் கூட்டம் -युवति: பெண் யானை

इभमाचल: पु ஸிம்ஹம்

इभया स्त्री குகநீர்

इभेरम: पु 14 வருஷத்திய யானை

इभ्य वि பணக்காரனான. வேலைக்காரர்களின் ஸம்பந்தமான

इभ्य: पु ராஜன். யானைப் பாகன். விரோதி भ्या பெண்யானை. யானைகொந்திமரம் -तिल्व(त्व)ल वि பணமுள்ள = इभ्यक

इमथा अ இங்கு, இப்பொழுது போலவே

इयक्षु वि ஆசைப்படுகிற. அடைய விரும்புகிற

इयत् वि இவ்வளவு. அவ்வளவு. अव्वळवुபெரியत्ता, त्वं அவ்வளவு. எல்லை.

इयत्तक वि அவ்வளவு சிறிய. மிகச்சிறிய. का நீசப்பிரமாணம்.

इयस् वि போகிற

इयसा स्त्री சோர்வு

इर 6 प போ
इरज्य उ வளர். பொறுமைப்படு. அடைவி. ஆட்கொள். ஒழுங்கு படுத்து.
इरज्यु वि யாகத்திற்கு வேண்டியதை ஸந்நாஹப்படுத்துகிற.
इरणं न பாலேவனம். உப்பு, களர் நிலம்.
इरंमद वि களிக்கிற,குடிக்கிற அக்கினி द: மின்னல். இடிவிழுதலினுண்டாகுந் தீ. கடல் தீ. வடவானலம்.
इरस्यति கோபத்துடன் நடி. ஒருவனிடம் விச்வாஸமற்றிரு
इरस्या स्त्री உணவிலிச்சை. பகை.
इरा स्त्री பூமி. வாக்கு. ஸரஸ்வதி. நீர். உணவு. சாராயம். குடிக்கத்தகுந்தது. சிரமபரிகாரம். அப்ஸரஸ் பேதம். முன் சேனை. நெய் தாரை -ईश: விஷ்ணு. வருணன். கணேசன். அரசன் -क्षीर யாருடைய பால் களைதீர்க்கிறதோ, அனுபவிக்கப்படுகிறதோ -ज: மன்மதன் र: பாற் கடல் -चर कल् மழை -ज: மன்மதன் -वेह्लिका தலைமேல் பருக்கள், வேர்க்குரு
इरावत् वि பாணத்தைக் கொடுக்கிற. திருப்திசெய்விக்கிற. पु (वान् கடல். மேகம். ராஜன். அர்ஜுனனின் பிள்ளை. ती ஓர் பஞ்சாப் நதி. துர்க்கை. ஓர்க்கொடி. யமபுரி त: ஸூர்யனின் குதிரை तं மேகலோகம்.
इरिका स्त्री ஓர் செடி, கொடி, மரம்.
इरिणं न உப்பு, களர் நிலம். பாலேவனம, ஆதாரமின்மை. சிற்றாறு. கிணறு. பள்ளம். वय பாலேநிலஸம்பந்தமான
इरिन् वि துர்ப்போதனை, செய்கிற. பலமான. கர்வி.
इरिमेद: पु நாற்றக் கருங்காலி
इरिविल्ला, ल्लिका स्त्री தலையில்ரணங்களையுண்டுபண்ணும் நோய்
इरु: पु விதை
इर्गल, ला स्त्री தாழ்ப்பாள். உழல்தடி. [சுறுப்பான

इर्य वि தூண்டுகிற. சத்துருக்களைத் துலைக்கிற. பிரபு. சுறு
इर्वारु, लु वि ஹிம்ஸிக்கிற. रुः पु स्त्री வெள்ளெரி = लुः-शुक्तिका
इर्वारुकः पु குகைகளில் வஸிக்கும் ஓர் ஜந்து [மூலாபேதம்
इल् 6प 10 उ போ. எறி. அசையாமலிரு. சாந்தமடை. ஏவு.
इलय वि அசையாத [தூங்கு
इलव वि இரைகிற. கூச்சலுள்ள
इलविला स्त्री விச்ரவஸின் பத்தினியான குபேரனின் தயார்
इल त्रि தூங்குகிற ஸாபுதனின் மனைவி = इडा -गोलं, लः பூமி-तलं ராசிசக்கிரத்தில்நாலாமிடம்.-वृतं லோக 9ல் 1கண்டம்-सः நீர்வஞ்சி
इलिः स्त्री சிறு வாள். எலி = -कः -का பூமி
इलिङ्गं न கருநெய்தல்
इली स्त्री சிறுதடி, பட்டாக்கத்தி. அவ்வுருவமுள்ள தடி.
इलीविषः पु இந்திரனால் ஜயிக்கப்பட்ட ஓர் அஸுரன்
इल्लीपः, शः पु ஒரு வகை மீன் = इल्लि(ल्ली)शः
इल्ललः पु பக்ஷி பேதம [ரங்கள்
इल्वकाःलाः स्त्री ब மிருகசீர்ஷத்தின் தலையிலுள்ள 5 நக்ஷத்தி
इल्वलः पु வாதாபியின் சகோதரனும் அத்திரியினால் ஜீர்ணமானவனுமான ஓர் அஸுரன்
इव् प வியாபி. பிரீதி செய்
इव अ போல. இருக்காப்போல். ஒருவேளை. கொஞ்சம். நிஜமாக. அதே
इष् 6 प இச்சி. கோறு. வரி. அடையமுயல். கருது. செய்யப்போ. எதிர்பார். ஒப்புக்கொள். யாசி. அனுகூலமாயிரு, இருக்கப்பண். ஸம்மதி. क இச்சிக்க, யாசிக்க, விதிக்க, ஒப்புக்கொள்ளப்பட்டிரு4 प நகர். நகரச்செய். போகவிடு. எறி. உயர்த்து (குரல்). தெளி 9 प பறக்கவிடு. எறி. தப்பியோடு. அடி. அறை. முன்னுக்குத்

தள்ளு. தூண்டு 1 ஏ போ. நகர்.

इष्र् त्रि வேகமான. விரைவில் போகிற. ஆசைப்படுகிற. स्त्री இளைப்பாற்றுதல், பலகாரம். தேவதைக்காகநீரை ஊற்றல். பலம். ஸாரம். ஸுகம். அபிவிருத்தி. ஐச்வர்யம். உயிர்ப்பிக்கும் ஆகாச நீர். ஆசை.

इषः पु ஐப்பசி. பலத்தை, ஸாரமுள்ளவன்

इषणयते நா. आ அசை. தூண்டு. எழுப்பு. மூட்டு

इषणिः स्त्री அனுப்பல். இச்சை. ஆசை. தூண்டுகை. தாக்கு=

इषण्यति நா. प. தூண்டு. தூக்கு அவசரப்படுத்து [प्या

इषयति நா. प ரஸத்தோடிரு. வீங்கு. விருத்தியடை. சுறுசுறுப்பாயிரு. உயிர்ப்பி. பலப்படுத்து.

षव्य त्रि குறிப்பின் (வஸ்து). வில்வித்யையில் கைதேர்ந்த

इषि त्रि ஆசைப்படுகிற

इषि(षी)का स्त्री ஈர்க்கு. யானையின் கண் வழி. மயிர்குச்சு. நாணல். அம்பு. ஒருவிதக் கரும்பு. மூசையில் பொன் உருகிவிட்டதா, இல்லையா என்பதைப் பார்க்ககுச்சி -तूलं நாணலின் நுனி, மேற்பாகம்.

इषित त्रि வேகமான. தூண்ட, உயிர்ப்பிக்க, அனுப்பப்பட்ட

इषिर त्रि ரஸமுள்ள. களை தீர்க்கிற. புதிய பலமுள்ள. சுறுசுறுப்பான. அசைகிற रः அக்கினி. रं अ விரைவில்

इषीका = इषिका

इषुः पु அம்பு. எண் 5. ஓர் ஸோமச்சடங்கு -अनीकं அம்பு நுனி -असनं, अस्त्रं வில் -आस பாணங்களை விடுகிற. सः வில். வில்லாளி. வீரன். ஒடுங் தள்ளுங் துடிப்பு. யாககார்யம் -पथः, विक्षेपः அம்பு செல்லுந் தூரம் -प्रयोगः பாணம் விடல்-मात्रं அம்புநீளம் (1கஜம்)குண்டம்

इषुत्रिकांडा स्त्री (முக்கோணபாணம்) ஓர் நக்ஷத்திரம்

इषुक त्रि பாணம் போன்ற का அம்பு

इषुधिः पु स्त्री அம்பறாத்தூணி
इषुध्यति ना. प. அம்புகளை அடக்கிக்கொண்டிரு. யாசி. ஹோ
इषुध्या स्त्री பிரார்த்தித்தல். மன்றாடல் [மத்தையபேக்ஷி
इषुध्यु वि போகிற. வேண்டுகிற.
इषूयति ना. प. உணவை யபேக்ஷி. யாசி- பிரார்த்தி.
इष्कृ 8 उ ஒழுங்குபடுத்து. தயாராக்கு कर्तृ वि தயாரிக்கிற
इष्कृताहव वि யாருடைய ஸோமபாத்திரம் தயாராயிருக்கிற
इष्कृतिः स्त्री தாய் [தோ
इष्ट त्रि (इष) பிரியமான. மரியாதை செய்யப்பட்ட. நியாயமான, பலமுள்ள. யாகங்களால் பூஜிக்கப்பட்ட. கொடுக்க, கல்பிக்கப்பட்ட. ष्टः காமுகன். கணவன். பிரியன் தோழன். விஷ்ணு. ஆமணக்கு. யாகம் ष्टा வன்னி. ष्टं இச்சை. ஸம்ஸ்காரம். अ தனக்குத்தானே. சுவேச்சா பூர்வமாய் -कर्मन् கணிதத்தில்விடையை ஓர்ஸங்கேதத்தால் கல்பித்துக்கொண்டு கணக்கிடத் தொடங்கல். -कापथः வெட்டிவேர் -कामदुह् त्रि இஷ்டங்களைக்கொடுக்கிற (காமதேனு) -गंध வாஸனையுள்ள धः வாஸனைப் பொருள் धं மணல் -यामन् त्रि இஷ்டப்படி போகிற -व्रत இஷ்டமான விருதங்களை அனுஷ்டிக்கிற. ஒருவன் இஷ்டத்திற்கிணங்குகிற. விருத பூர்த்திக்குவேண்டிய (உணவு). எதால்நற்காரியங்கள்நிறை.வேறுகிறதோ
इष्टका स्त्री யாக குண்டத்திற்கு பயோகமாகும்) செங்கல் -चयनं செங்கலால் அக்கினியைச்சேகரித்தல் -चित செங்கற்களாலான -न्यासः வீட்டிற்கு அஸ்திவாரம்போடல்
इष्टापूर्त न யாகம், தானம், குளம் வெட்டல் போன்ற தர்ம கார்யங்கள்
इष्टिः स्त्री இஷ்டம். அடையமுயலல். இச்சிக்கப்படும்பொருள். பரபரப்பு. அழைக்கப்படல். யாகம். அன்ன, ஆஜ்யா

ஹா-திக்கள். சுத்தி. -अयनं நெடுநாள்நீடிக்கும் யாகம் -पचः லோபி. அஸுரன் = मुष

इष्टिका स्त्री செங்கல்.

इष्टिन् वि யாகம் செய்தவன்

इष्टुः स्त्री இச்சை

इष्म त्रि இச்சிக்கிற -मः மன்மதன். வஸந்தம். போக்கு.

इष्मिन् वि உக்கிரமான. தீவிரமான. வேகமான (காற்றுக்கள்)

इष्यः, ष्यं न வஸந்தருது

इष्वः पु ஆசார்யன்

इस् अ கோபம், துன்பம், துக்கம் ஸூசகம்

इह अ இங்கே. இவ்வுலகில். இந்த விஷயத்தில், புஸ்தகத்தில், நியாயத்தில், இடத்தில், காலத்தில். இப்பொழுது -अमुत्र இவ்வுலகிலும், லோகாந்தரத்திலும். இங்குமங்கும். -इह இப்பொழுதும் பிறகும். ஸதா (मातृ) யாருடைய தாயார் இங்குமங்கு மிருக்கிறாளோ, எங்குமிருக்கிறாளோ, யாருடைய தாய்மார்கள் ஒருத்தி இங்கும் மற்றொருத்தி அங்குமோ -कालः இவ்வாழ்வு -क्रतु, चित्त யாருடைய எண்ணங்கள் இவ்வுலகில் நாட்டப்பட்டிருக்கின்றனவோ -भव, तस इவ்வுலகு ஸம்பந்தமான -लोके இவ்வுலகில், வாழ்க்கையில் -समये अ இப்பேற்பட்ட காலத்தில். இங்கே. இப்பொழுது -स्थान யாருடைய இருப்பு இவ்வுலகிலிருக்கிறதோ

इहत्य वि இங்கிருக்கிற, இவ்விடத்திய, லோகத்திய

इहलः पु ஓர் தேசம்

ई

ई अ கோபம், தயை, துக்கம், பிரத்யக்ஷம், கூப்பிடல் ஸூசகம்

ईः पु மன்மதன். வானவில். பாணம். குகை. स्त्री லக்ஷ்மி.

தாமரை இதழ், தாது. பார்வதி. ஸரஸ்வதி. அரை நாண். ஒட்டியாணம்

ई 4 आ போ =2 प பிரகாசி.வியாபி.இச்சி. எறி.உண். யாசி (आ) கர்ப்பந்தரி.

ईक्ष । आ பார். நோக்கு. உற்று, தூரத்திலிருந்து பார். மதி. யோசி. கவனி. நினை. தேவையோடிரு. ஆராய் (சுபா சுபங்களை) अभि + ஸங்தேகி. अन्वव + பார்.யோசி.கவனி

ईक्षकः पु பார்ப்பவன்.

ईक्षणं न பார்த்தல். பார்வை. கண். கவனிப்பு -श्रवस् பாம்பு

ईक्षणिकः पु குறி சொல்லுகிறவன் का स्त्री

ईक्षतिः स्त्री பார்த்தல். பார்வை

ईक्षमाण वि பார்க்கிற

ईक्षा स्त्री பார்வை. பார்த்தல். ஆலோசித்தல்

ईक्षित वि பார்க்கப்பட்ட तं ,, கண் तृ பார்த்தல். பார்ப்பவன்

ईक्षेण्य वि பார்க்கத் தகுந்த. விநோதமான. அபூர்வமான

ई(इ)ख् । प போ. நிந்தி. அசை.சலி. ஆடு. =णिच् குலுக்கு.

ई(इ)ज् । आ போ. நிந்தி.

ईजाज त्रि யாகங்கள் செய்கிற

ईड् 2 आ துதி. யாசி. மன்றாடு. பிரார்த்தி = णिच् துதி. ईडनं

ईड् स्त्री விச்ராந்தி. உணவு. நைவேத்தியம். ईडित वि

ईडा स्त्री ஸ்துதி. மெச்சுதல்

ईडे(ले)न्य, ईड्य त्रि புகழ, துதிக்கத்தகுந்த

ईढ त्रि தேடப்பட்ட

ईश्मत् वि பிரபு, யஜமானனையுடைய

ई(इ)त् । प கட்டு

ईत वि சென்ற

ईति त्रि உண்டு பண்ணப்பட்ட तिः கொள்ளைநோய். துன்பம். காலக்கொடுமை அவை 6 அதிக மழை,பஞ்சம்,வெட்

டுக்கிளிகள், எலிகள், கிளிகள், வெளி அரசனின் படைகள், (உள்நாட்டுக் கலஹங்கள் சேர்ந்தால் 7). குட்டி. தொத்து வியாதி. வெளிநாட்டில் பிரயாணம். [கலஹம்.
ईतिका स्त्री நெச்சுட்டிப் பூண்டு
ईतिशमनः पु தினிசி மரம்
ईत्वरी स्त्री வியபிசாரி
ईदृक्ता स्त्री தன்மை
ईदृक्ष, श वि (क्षी, शी स्त्री) இப்படிப்பட்ட, दृ न (त्र) இப்படிப் பட்ட தருணம்
ईंध्र न உஷ்ண கஞ்சி நீர்
ईप्सनं, प्सा स्त्री அடைய) இச்சை =प्सितं
ईप्सु वि அடைய முயலுகிற, இசசிக்கிற-यज्ञः ஓர் ஸோம யாகம் [இங்கே
ईम् अ ஆமோதனம், தடை ஸூசகம். இப்பொழுது. இந்த.
ईय वि வியாபிக்கிற चक्षुस् சுற்றி நோக்கும் பார்வையான
ईयिवत् वि சென்ற.
ईयिवस् वि ,, அடைந்த.
ईर् 2 आ । प போ. அசை. குலுக்கு. எழும்பு. பின்னடை. ஓய்வடை. குரலே உயர்த்து. 10 उ णिच् குழப்பு. எறி. தூண்டு. உண்டு பண். உச்சரி. சொல். ஒப்பி. போகச் செய். இழுத்துக்கொள். வசீகரி. உபயோகி. உயிர்ப்பி. உயர்த்து. எழும்பு.
ईरण वि கலக்குகிற. தூண்டுகிற.णः காற்று. णं போதல். =इरणं
ईरिण वि களரான. णं பாலேவனம். கரம்புநிலம்.
ईरित वि அனுப்பப்பட்ட. சொல்லப்பட்ட
ईरिन् वि அசைகிற. கலக்கிற. போகிற
ईर्क्ष्य् = ईर्ष्य्
ईर्म वि கலக்கப்பட்ட. ஸதாபோகிற. தூண்டுகிற. अ இங்கே.

இவ்விடத்தில். இவ்விடத்திற்கு

ईर्मः पु முன்கை. மிருகத்தின் முன்கால்கள். र्मं காயம். புண்

ईर्मति वि நுண்ணிய இடுப்புள்ள.

ईर्य वि தூண்டப்படவேண்டிய र्या ஆண்டியாய்த் திரிதல்-पथ
ஞானஸம்பாதனார்த்தம் யதியின் அனுஷ்டானங்
கள். தேக 4 நிலைகளான போதல், நேராக நிற்றல்,
உட்காரல், கீழேபடுத்தல்

ईर्वारुः पु வெள்ளரிக்காய்

ईर्षा = ईर्ष्या

ईर्ष्य्. ईक्ष्य् । प பொறாமைப்படு.

ईर्ष्यं, र्ष्युं, र्ष्यक, र्ष्यन् वि பொறாமைப்படுகிற

ईर्ष्या, र्षा स्त्री பொறாமை. பகை

ईर्ष्या (र्षा)लु, ईर्ष्यु (र्षु) वि பொறாமைப்படுகிற. ஸஹிக்காத

ईलिः, ली स्त्री வளைவான சிறு கைத்தடி. பட்டாக்கத்திபோன்

ईलिका स्त्री விசிறி [றதடி.

ईलित वि துதிக்கப்பட்ட

ईवत् वि போகிற. அவ்வளவு பெரிய, கம்பீரமான

ईविला स्त्री சிறிய கைத்தடி.

ईश् 2 आ ஆள். பிரபுத்துவமடை. கட்டளையிடு. முடியுமா
யிரு. அதிகாரம் செலுத்து. உடைத்தாயிரு. சொந்த

ईश् पु யஜமானன். பிரபு. பிரம்மம். ईशन् [மாகு

ईशः वि உடைத்தாயிருக்கிற. ஒன்றிற்கு முழுஉரிமைவஹிக்
கிறவன். சக்தி வாய்ந்த शः பிரபு. கணவன். ஓர் ருத்
திரன். எண் 11. (ஈசான்யதிக்கிற்கதிகாரியான)சிவன்
शा செங்கோல். சக்தி. ராஜ்யம். மஹிமை. துர்க்கை.
பார்வதி. செல்வாக்குள்ளவள். பணக்காரி. ஏர்க்கால்
-कोणः வடக்கிழக்கு -पुरी காசி -बलं பாசுபதாஸ்திரம்.
-सखः குபேரன் -वाचकः காட்டுவாகை

**ईशान** वि உடைத்தாயிருக்கிற. பிரபு. ஆள்கிற. பணக்காரனை
न: பிரபு. சிவன். பிரம்மா. திருவாதிரை. ஓர் ருத்தி
ரன். எண் 11. சிவரூபமான ஸூரியன். தேவதை.
விஷ்ணு. காட்டிலவை नं காந்தி. नी பார்வதி. காட்டில
வை = न: -आदिपंचमूर्तिः சிவனின் ஓர் ரூபம். कृत பிரபு, சக்க
ரைக்கல். திறமைசாலியாய் நடித்தல் -दिश् வடகிழக்கு
**ईशिता** स्त्री அணிமாதி அஷ்டைச்வர்யங்களில் பிரபுத்துவமா
**ईशितृ** वि சொந்தக்காரன் पु ஜகத்திற்குப் பிரபு [னது
**ईशितव्यं** न சக்தி. மேன்மை -ईशिता, त्वं, ईशिनी
**ईशिन्** वि ஆள்கிற. உத்தரவிடுகிறபு தேவதை கணவன். பிரபு.
**ईश्वर** वि சக்திவாய்ந்த. பணமுள்ள. र: பிரபு. யஜமானன்.
ராஜன். ஆள்பவன். பெரிய மனிதன். கணவன் பிரம்
மம். சிவன். மன்மதன். ஜீவன். 60ல் 1 வருஷம் रा, री
பார்வதீ. லக்ஷ்மீ. ஈச்வரச்செடி. சில செடி பேதங்கள்
-ईश्वरी துர்க்கை -निषेधः நாஸ்திகம்-निष्ठ ஆஸ்திகமான -प्र
सादः தெய்வத்தினனுக்கிரஹம். -वल्लिका கொக்குமந்தா
ரை -विभूतिः கீதை விபூதி யோகப்படி தெய்வத்தின்
பல ரூபங்கள் -सद्मन् கோவில் -सभं ராஜஸபை
**ईष्** ! उ தப்பியோடு. நகர்ந்துச்செல். தான்யங்களைப் பொ
றுக்கு. பார். கொடு. மேல்விழு. ஹிம்ஸி. கொல்
**ईषः** पु ஐப்பிசி. சிவகிங்கரன். षा ஏர்ககால்
**ईषण, ईषणिन्** அவசரப்படுகிற णा அவஸரம்
**ईषत्** अ கொஞ்சம் -कर கொஞ்சம் செய்கிற. முடித்துவிட
எளிதாயிருக்கிற -पान எதில் கொஞ்சம் பருகப்பட்ட
தோ -पुरुषः அல்பன். நீசன் -लभ, प्रलभ சிறிதிர்க்குப்
பெற வேண்டிய
**ईषा** स्त्री ஏர்க்கால் தடி (வண்டி, கலப்பையினது). வண்டி
யினுருப்பு. -दंष्ट्रः மோழி -दंत பற்கள்முன்வந்துள்ள. तः

நீண்ட தந்தங்களுள்ள யானை. அதன் தந்தம். மோழி.

ईषिका स्त्री யானையின் கண்விழி. சித்திரமெழுதுங்கோல் (பிரவ்ந்). எரியும் ஆயுதம். பாணம். சஸ்திரம்.

ईषिरः पु அக்கினி

ईषीका स्त्री சித்திர மெழுதுங்கோல், உலோகப்பாத்திரங்கள் முதலிய வார்க்கும் அச்சு. = इषीका

ईष्मः पु மன்மதன். வஸந்தகாலம். போக்கு

ईष्वः पु ஆசாரியன் [தூண்டு

ईहृ । आ இச்சி. அடைய முயல். தேடு. கருது. பாதுகா णिच्

ईहः पु முயற்சி. हा இச்சை. தொழில். ஊக்கம் -अर्थिन् ஒன்றை, பணத்தை நாடுகிற -मृगः ஓநாய். செயற்கை மான். 4 அங்கங்களுடைய நாடகப்பிரபந்தம் -वृकः ஓநாய்

ईहमान वि முயலுகிற

ईहितं न இச்சை. முயற்சி. தொழில். கிரணம். ஒளி.

## उ

उ । அசப்தி.(எருது) முக்காரம்போடு5पनிர்ப்பந்தித்துக்கேள்

उः पु சிவன். பிரம்மா. விஷ்ணு. சந்திரமண்டலம். க்ஷத்திரியன் சிவனின் தலை. கண். மரநுனி ஹிருதயம் स्त्री பார்வதி. ரதி. லக்ஷ்மி. சந்திரகாந்தி. अ (அர்த்தமில்லாத) அசை. ஸம்போதனம், கோபம், தயை, கட்டளை, அங்கீகாரம், கேள்வி, தடை, அழுத்திச்சொல்லல் ஸூசகம்

उकः पु பக்ஷி कं कः, பிரீதி. தோல். களம். का திப்பி

उकानहः पु ஊதாநிறமுள்ள குதிரை

उकारः पु உ எழுத்து. சிவன்

उकुणः पु மூட்டுப்பூச்சி

उक्त वि (वच्) சொல்லப்பட்ட. क्तं வார்த்தை. வாக்கியம். क्तं, क्ता

4 பாதங்களுள்ள சுலோகவிசேஷம் -उपसंहारः சுருக்கமான வர்ணனே, முடிவுரை. சொல்லப்பட்டதின் ஸாரம், சுருக்கம் -निर्वाहः சொன்னதை ரக்ஷித்தல், ஸ்தாபித்தல், பிரதிவாதம் செய்தல் -वाक्यं விதி. ஆக்ஞை
उक्तिः स्त्री பேச்சு. விஷயம். வாக்கியம். சொல்லின் வேகம்
उक्थं न சொல். ஸ்துதி. மந்திரம். ஸாம விசேஷம். உக்தயாகம். -कथा ஓர் விருத்தம். -पत्र. (ரிக்குகளே வாகனமாக, இலைகளாகவுடைய) யாகம். யஜமானன் = -पात्र உக்தங்களேச் சொல்லும் பொழுது கொடுக்க, செய்யப்படும் நைவேத்தியம் -भृत् உக்தங்களேத் தரும், பகுக்கும் ரிஷி. -वर्द्धन துதித்துப் பெருமைப் படுத்தப்படவேண்டிய (இந்திரன்) -वाहस् वि ரிக்குகளேக் கொடுக்கிற, யாருக்கும் மந்திரங்கள் ஸமர்ப்பிக்கப் படுகின்றனவோ = -शंसिन् पु ஓர்ப் புரோஹிதன் உக்தங்களேச் சொல்லுகிற -शस्, शास्, शस, शुष्म वि யாருக்குத் துதி பலமோ. விசேஷ மந்திர கோஷ ப்ரத்வனியையுடைய (-क्थः)-वी ரிக்குகளில் பிரியமுள்ள, சொல்லிக் கொள்ளுகிற
उक्थिन् वि மந்திரங்களேச் சொல்லுகிற. மந்திர பூர்வகமான पु இந்திராதிகள்.
उक्थ्य वि மந்திர பூர்வகமான. ஸ்தோத்திரார்ஹமான. क्थ्यः காலே, நடுப்பகல்களின் நிவேதனங்கள். ஜ்யோதிஷ்டோம யக்யாங்கம். ஸோமயாகம்
उक्ष 6 उ ப்ரோக்ஷி. கக்கு. இறை. சுத்திசெய். விருத்தியடை
उक्ष वि தெளித்த. தெளிக்கிற. பாந்த. கழுவ, நனேக்கப்பட்ட
उक्षणं न ப்ரோக்ஷித்துப்பிரதிஷ்டைசெய்தல், பரிசுத்தமாக்கல்
उक्षण्यु वि ஐச்வர்யம் வர்ஷிப்பவனே இச்சிக்கிற
उक्षन् वि விசாலமான. தெளிக்கிற. புஷ்டு. ஸோமன். மருத்

துக்கள். அக்கினி. ஆதித்தியன். 8ல் ஒன்றான ரிஷ பௌஷதி மூலிகை -अन्न वि யாருக்கு எருதுகள் உணவோ.-तर: சிறுகாளை -वश காளையை நம்பியிருக்கிற. சேங்கன்று. [ங்கு.

उक्षाल वि வேகமான. பயங்கரமான. உயர்ந்த. சிறந்த ல:குர

उक्षित वि நனைக்கப்பட்ட. வாஸனை யூட்டப்பட்ட. வயது வந்த. முதிர்ந்த

उख्, उंख् । प நகர். போ. உலர்த்து. அலங்கரி

उखः पु சருவம். பானை =खा யாகசாலையில் அக்கினிஸ்தானம். தேகபாகம். ஸூர்ய கிரணம்

उख्य वि பானையில் சமைக்கப்பட்ட. சருவத்திலிருக்கிற

उख(वं)लः पु ஒருவிதப் புல் [யுடைய

उगण वि உயர்த்தப்பட்ட ஆயுதங்களையுடைய சேனையை

उग्र वि பயங்கரமான. முரடான. துஷ்டையான. கோபமான. உக்கிரமான. பலமுள்ள. தீவிரமான. அதிக. மஹாகாரமான. ஆத்திரமுள்ள. கடுமையான எதைச் செய்யவும் தயாராயிருக்கிற. ग्रः சிவன். வளையிலிருக்கும் மிருகங்களைப் பிடித்துக் கொல்லும் க்ஷத்திரியனுக்கு சூத்திரஸ்திரீயினிடத்திற் பிறந்த வில்லி போன்ற ஓர் ஜாதி. முருங்கை. (மலையாளம்) கேரலதேசம். ரௌத்திரரஸம். காற்று. நக்ஷத்திர கண விசேஷம் ग्रा பார்வதி. வசம்பு. கொத்தமல்லி. ஓமம். குரூரமானவள் ग्री அஸுரகணத்தைச் சேர்ந்த ஓர் ஜந்து ग्रं வத்ஸநாப விஷம். கோபம். -अक्षः, ईशः சிவன் -कांडः பாகல் -गंधः செண்பகம். தேக்கு மு-ன. வெள்ளைப் பூண்டு घा ஓமம். வசம்பு. மூலிகை घं பெருங்காயம் - गंध, गंधिन् விசேஷ வாஸனையுடைய -चयः அதிக ஆவல் -चारिणी, चण्डा துர்க்கை -जाति இழிபிறவி

யான -तारा ஓர் ஸ்திரீ தேவதை -दण्ड இரக்கமில்லாத. கொடுங்கோலாக்ஷியான -दर्शन, रूप பார்க்கப் பயமாயிருக்கிற. உக்கிரமான பார்வையுள்ள -दुहितृ स्त्री பலசாலியின் பெண் -धन्वन् பலமான வில்லையுடைய पु இந்திரன். சிவன் -नासिक நீண்ட மூக்குள்ள -पुत्र பராக்கிரம வம்சத்திற் பிறந்த त्र: க்ஷத்திரியன் -पूति கொடுந்துர்க்கந்தமுள்ள -रेतस् पु ருத்திரனின் ஓர் ரூபம் -वीर பலசாலிகளையுடைய -शासन கண்டிப்பான கட்டளைகளையுடைய –शेखरा கங்கை -शोक மிகப்பீடிக்கிற, பெரும் பாதையுடைய -श्रवणदर्शन கேழ்க்கவும் பார்க்கவும் பயங்கரமான -सेन: திருதிராஷ்ட்ரனின் ஓர் பிள்ளை. கம்ஸனின் தகப்பனை மதுராபுரி அரசன். இவன் பிள்ளையால் ஸிம்ஹாஸனத்தை யிழந்து மறுபடியும் கிருஷ்ணனால் பிள்ளைக் கொல்லப்பட்ட பொழுதுஸிம்ஹாஸனத்தைப்பெற்றான் (ज:)கம்ஸன் ना அக்ரூரரின்பத்னீ.

उग्रक वि தைரியமான. சக்தியுள்ள

उग्रपश्य वि உக்கிரமாய்ப்பார்க்கிற.பார்க்கப்பிடிக்காத.துஷ்ட

उड्‌कुण: पु மூட்டுப் பூச்சி

उच् 4 प திரட்டு. பிரியப்படு. பழகியிரு. தகுதியாயிரு.

उचक: पु ஆமணக்கு

उचित वि துதிக்கத்) தகுந்த. மனோஹரமான. இன்பமான. அறியப்பட்ட. பொருப்பில் வைக்கப்பட்ட. திட்டமான. பெறத்தகுந்த. ஏற்பாடான. தைக்கப்பட்ட.

उचथं न ஸ்தோத்திரம். சுலோகம். ரிக் ऋ துதிக்கத் தகுந்த

उच्च वि உயர்ந்த. உயர்த்தப்பட்ட. சிறந்த. உரத்த. கடுமையான. வல்லமையான. மேன் பாடான च्च: கிருஹ மண்டல உச்சி -तरु: தென்னை. உயர்ந்த மரம் -ताल:

கள்ளுக்கடையில் உரத்த ஆட்டம், பாட்டம் -देवः விஷ்ணு -देवता காலம் -नीच உயர்வு தாழ்வான चं கிருஹமேல், கீழ் ஸ்தானங்கள். பதத்தின் ஊன்றிச் சொல்லவேண்டிய எழுத்தின் மாறுபாடு -भाषिन् त्रि இரைகிற -ललाटा, ळिका உயர்ந்த,முன் வந்த நெற்றியையுடையவள். யௌவன ஸ்திரீ -संश्रय (கிருஹம்) உச்சஸ்தானத்தை யடைந்த.

उच्चैः अ உயர. மேலே अल ஸர்வோத்தமமாய் உரத்து

उच्चक्षुस् त्रि மேல் நோக்கிப் பார்க்கிற. கண்களெடுக்கப்பட்ட. குருடான.

उच्चघनं न மனதிற்குள் வெளிக்காட்டாமல் சிரித்துக்கொள்ளல்

उच्चट् । प ஒதுங்கு. மறைந்துபோ णिच् ஒதுக்கு. நீர்மூலமாக்கு

उच्चटा स्त्री கர்வம். வழக்கம், நடத்தை. வெள்ளைப்பூண்டு பேதம். குன்றுமணி. நிலநெல்லி. ஒருவிதக்கோரை மு-ன

उच्चण्ड त्रि பயங்கரமான. சீக்கிரமான. விரைந்து செய்கிற. உரத்த. முன் கோபியான. கீழே தொங்குகிற.

उच्चंद्रः पु இரவின் கடைக்காவல். பின்னிரவு

उच्चमान त्रि சொல்லப்போகிற. புடைத்தெடுத்த நீவாரதான்யம். முக்கோணத்தின் எதிர்ப்பக்கம்.

उच्चय :पु(चि) ஸ்திரீகளின் ஆடையின் முடி. கூட்டம். அந்தஸ்து

उच्चर् । प எழு. மேலுக்குப்போ. தோன்று. (குரலை)உயர்த்து. மலங்கழித்துக்காலி செய். உச்சரி. விடு. விட்டொழி. மீறு. பிசகு. பாவஞ்செய். தேசமற்றிரு. எழு: णिच् கக்கு

उच्चरणं न உச்சரிப்பு रित சொல்லப்பட்ட तं மலம்

उच्चल् । प புறப்படு. ஒதுக்கு. பறந்தோடு. விடுதலையடை.

उच्चल वि அசைகிற. लं மனது. அறிவு [சென்ற

उच्चलित वि புறப்படும் ஸமயமான. புடைக்கப்பட்ட. வெளிச்

उच्चा अ மேலே. உயர. மேல் நோக்கி. உயரத்தில்

**उच्चाटनं** न பிரிவு. சூன்யம் வைத்தல் முதலிய மாந்தரீகம்.மந்திரத்தால் சத்துருவைத்துலேத்தல், வேலையைவிடச்

**उच्चाटनीय** वि துரத்தத்தக்க [செய்தல்.

**उच्चारः** पु உச்சரிப்பு. மலம். விடுதலே. கிரஹம் ராசிவிட்டு ராசி மாறல்

**उच्चारणं** न உச்சரிப்பு. விளம்பரம் -**अर्थं** உச்சரிப்பிற்குபயோகமான, அவசியமான -**ज्ञः** பலபாஷைகள் தெரிந்தவன் -**स्थानं** சில எழுத்துக்கள் கிளம்பும் தொண்டையில்

**उच्चारक** वि உச்சரிக்கிற. [ஓரிடம்

**उच्चारित** वि சொல்ல, உச்சரிக்கப்பட்ட. மலமுள்ள

**उच्चार्य** वि பேசத்தக்க -**माण** பேசப்படுகிற

**अच्चावच** वि மேலுங்கீழுமான. ஸமனற்ற. பலவகையான.

**उच्चिकीर्षा** स्त्री திரட்டுவதிலிச்சை

**उच्चिंगटः** पु காமுகன். கோபிஷ்டி. ஒருவித நண்டு, மீன்,

**उच्चट(टिं)गः** पु நண்டு [வண்டு

**उच्चित्र** वि படங்கள் தெளிவாய்த் தோன்றுகிற

**उच्चूडः, लः** पु கொடி. அதன் கொச்சு, கொடி நுனியில் கட்டப்பட்டிருக்கும் நகை

**उच्चैः** अ உயர. மேலே, இரைந்து. பலமாய். மிகவும். சிறந்த वि பிரஸித்தமான-**कर** ஊன்றி உசசரிக்கச்செய்கிற-**घुष्ट** சந்தடி. கூக்குரல். உரத்துப் பிரகடனம் செய்தல்-**घोषः** உரதத குரல். ஓர் ருதகிரனின் ரூபம்-**द्विष्** वि பலமான விரோதிகளேயுடைய -**भुजतरु** விரிக்கப்பட்டகைகளேப் போல் மரங்களேயுடைய -**वादः** உயர்ந்த துதி -**शिरस्** वि பெருந்தன்மையான. மஹத்தான-**श्रवस्**, स त्रिकாதுகள் நீண்ட, செவிடான पु பாற்கடலிலிருந்து வந்த இந்திரனின் குதிரை

**उच्चैस्तम** वि மிக வுயர்ந்த, உன்னதமான, உரத்த

उच्चैस्तमां अ மிகவும் உயர, உரத்து
उच्चैस्तर वि கொஞ்சம் உயர, உன்னதமான, உரத்த
उच्चैस्तरं, रां अ மிகவும் உரத்து, உயரமாய், உயர
उच्छन्न वि அழிக்க, வெட்டப்பட்ட. இப்பொழுதில்லாத. ஒழிந்த [அசை
उच्छल् । उ மேலுக்கு, ஒதுங்கிப்பற. மேன்மேற்செல். ஆடு.
उच्छलत् वि மேலுக்குப் பறக்கிற, வருகிற, அசைகிற. பிரகாசிக்கிற [ய்த்தல்
उच्छादनं न மூடல். உடம்பில் வாஸனைத்திரவியங்களைத் தே
उच्छालित वि அசைக்கப்பட்ட
उच्छासन वि கட்டிற் கடங்காத. ஆளப்படாத
उच्छास्त्रवर्तिन् वि சாஸ்திரவிருத்தமான. சாஸ்திரத்தைமீறுகிற
उच्छिख वि உயர்த்தப்பட்டசிகையையுடைய. மேலுக் கெறிகிற. பிரகாசமான
उच्छिंघनं न மூக்கால் மூச்சு விடல். குறட்டை விடல். விளக்கை கொந்துதல்
उच्छिद् 7 उ வெட்டித்தள். வேராறு. அழி. தாத்தியடி. பட ரென ஒடி. டப் என்று சப்தி. (பேசுவதில்) குறுக்கிடு, தடு. णिच् அழி. குறைவாயிரு.
उच्छिन्न वि நீச. न्नः தோற்றதால் பூமியைக் கொடுத்து நிம் மதியடைதல்
उच्छिरस् वि உயர்த்தப்பட்டகழுத்தையுடைய. உயர்ந்த. மே ன்மையான
उच्छिलींध्र वि காளான்கள் நிறைந்த ध्रं நாய்க்கொடை
उच्छिष्ट वि(शिष्) மிச்சமாய் விடப்பட்ட. தள்ளப்பட்ட. பழமையான. ஸாரமற்ற. உண்டபின் வாய் கைகளைக் கழுவாததால் அசுத்தமாய் பாவிக்கப் படுபவன्ष्टं (யக்கிய, உண்ட) மீதி. தேன் -अन्न உதவாதது. -चांडालिनी

मातங்கி தேவியின் ரூபவிசேஷம் -भोजन, भोजिन्, भोक्तृ वि ஒருவனின் எச்சிலைப்புசிப்பவன். நிவேதனம் செய்யப் பட்டதை யுண்பவன்

उच्छीर्षक वि உயர்த்தப்பட்ட தலையையுடைய कं தலை. தலையணை

उच्छुष् णिच् உலர்த்து. வாடிப்போ. வதங்கு -क உலர்ந்துபோன

उच्छुष्मं न குழப்பம். தாறுமாறு. கிரமத்தப்பு. சந்தடி.

उच्छूडा = उच्चूडा

उच्छून वि விழுங்கப்பட்ட. கொழுத்த. பருத்த. உயர்ந்த

उच्छूनकं न பல்லுடைப்பு பேதம்

उच्छृंखल वि அடக்கப்படாத. சுயேச்சையான. ஒழுங்கீனமான

उच्छेपः, षणं न மீதி. மிச்சம். உணவின் மீதி, விடப்பட்டது

उच्छोचनं न கொளுத்தல்

उच्छोफः पु வீக்கம்

उच्छोषक, षण वि உலர்த்துகிற. णं சுடல். கறுக்கல்

उच्छ्रावणं न ஒருவனை உரக்கக்கேட்பித்து வைத்தல்

उच्छ्र(च्छ्रा)यः पु உயர்சசி. வளர்த்தி. கர்வம். முக்கோணத்தில் நேர்க்கோண பாகம் यी பலகை उपेत உயர்ந்த

उच्छ्रयण, च्छ्रायिन् वि உயர்த்தப்பட்ட. உயர்ந்த. णं உயற்சி.

उच्छ्रि उ எழு. நிமிர்த்தப்பட்டிரு. நிமிர்த்து. உயர்த்து. துதி णिच् விருத்திசெய்

उच्छ्रित वि உயர்ந்த. பிறந்த. வளர்ந்த. செழிக்கிற. கர்வமுள்ள ஸாளமரம்

விடப்பட்ட तः கோயில்த்வஜஸ்தம்பம் தேவதாரு.

उच्छ्रितिः = उच्छ्रयः

उच्छ्र्य वि உயர்ந்த. உன்னதமான

उच्छ्लकः पु தேகத்தில் ஓர் பாகம்

उच्छ्वंकः पु வாய்திறந்து கொண்டிருத்தல். பிளந்துதிறத்தல்

उच्छ्वस् 2 प பெருமூச்சுவிடு. தைரியங்கொள். திற. மலர்.

துடி. தளர்த்தப்பட்டிரு. இளகு. णिच् தேருதல்சொல். ஆற்று. குறை

उच्छ्वसित वि ஆவி வெளியிடுகிற. களைதீர்ந்த. தைரியம், உற்சாகப்படுத்தப்பட்ட. கலைந்திருக்கிற. துடைத்துப் போடப்பட்ட. तं தேகவாயுக்கள். பிராணன். மூச்சு

उच्छ्वासः पु மூச்சுவிடல். பெருமூச்சு. உற்சாகம் பிராணுதாரம். சாதல். ஜன்னல். அத்தியாயம்(हर्षचरित्र்தில் போல்)

उच्छ्वासित वि மூச்சற்ற அதிக. பிரிக்க, தணிக்க, தளர்த்தப்பட்ட

उच्छ्वासिन् वि மூச்சுவிடுகிற. மேலுக்கு எழுகிற. நிதானிக்கிற

उछ् 6 प முடி. கட்டு. வரம்புகட. கைவிடு. நிறுத்து

उज्जस् णिच् அழி. கொல். வேரோடழி उज्जासनं கொலை

उज्जय(यि)नी स्त्री விசாலாநகரி. முக்தி தரும் நகரிலொன்று

उज्जयन्तः पु ரைவதகமலை

उज्जानकः पु வடக்கில் ஓர் பிராஞ்சம்

उजि । प வெல். ஜயித்தடை. णिच् வெல்ல உதவிபுரி

उज्जितिः स्त्री ஜயம். வாஜஸநேய ஸம்ஹிதையில் சிலரிக்குகள்

उजिघ्र वि முகருகிற

उज्जिहान वि விடப்பட்ட. மேலே கிளம்புகிற

उज्जिहीर्षा स्त्री பெற விரும்பல்

उज्जीव् । प திரும்பப்பிழை णिच् உயிரைக்கொடு

उज्जृम्भ् । आ கொட்டாவிவிடு. பிரித்தெடு. திறந்துவா. ஞாபகத்திற்குவா. णिच् காட்டு. உண்டாக்கு

उज्जृम्भ वि விரிந்த. भः வாயைத் திறத்தல்

अज्जृम्भा,भणं न கொட்டாவிவிடல்,, பறப்பல். விருத்தி. அவசரம. குழப்பம்.

उज्जंभित वि விரிந்த. तं வாயைத் திறத்தல். சோம்பல் முறித்தல். முயற்சி

उजप वि ஜயசீலனை. पः ஐச்வர்யமடைதல்

उज्ज्य वि வில்நாண் தளர்த்தப்பட்டிருக்கிற ज्यं கயிறு பூட்டப்பட்ட வில்

उज्ज्वल वि ஜ்வலிக்கிற. தஹிக்கிற. தெளிவான. பிரகாசமான. அழகான. கலக்க, தாளிக்கப்பட்ட. மலர்ந்த. அடக்கப்படாத लं காமம். लः ஒளி. தெளிவு. ஜகதீசந்தஸ்ரூப விசேஷம். लं பொன் -दत्तः உஞ்ஞதி ஸூத்திரங்களின் ஓர் வியாக்கியாதா

उज्ज्वलनं न எறிதல். ஜ்வாலை. நெருப்பு. பொன்

उज्झ् 6 प விடு, நீக்கு. தப்பித்துக்கொள். கொட்டு. வெளித்தள்

उज्झ वि விடுகிற -कः மேகம். பக்தன் उज्झनं விட்டொழிதல்.

उज्झटित वि பிரமித்த. மதிமயங்கின

उंछ् 6 प விடுகதிர் பொருக்கு திரட்டியெடு

उंछ, छः पु பொறுககல்-वृत्ति, शील वि பொறுக்கிப்பிழைப்பவன்

उंछनं न கடைத்தெருவில் தானியங்களைப் பொறுக்கல்

उटं न இலை. புல் -जं, जः குடிசை. பர்ணசாலை. ரிஷ்யாச்ரமம்

उट्ट = ऊट्ट । प போ. அடி. கீழே விழும்படி அடி. இடி

उडुः स्त्री डू न நக்ஷத்திரம். நீர் -चक्र ராசி சக்கிரம் -पं தெப்பம் =-पः சந்திரன் =-पतिः வருணன் -पथः ஆகாசம்-पुष्पं செவ்வரத்தை

उडुंबरः पु அத்தி. வாயிற்படி. ரேழி. அலி. யக்கியாங்கம். செம்புள்ளிக் குஷ்ட பேதம். ரத்தத்திலுண்டாகிக் குஷ்டத்தை விளைவிக்கும் ஒருவிதப் புழு. रं அத்திக்காய். செப்பு. கர்ஷம் (இருதோலா எடை) -दलः, पर्णी நாகத்

उडूप. पु தெப்பம். ஓடம் [தீச் செடி

उड्डामर वि சிறந்த. இன்பமான. பயங்கரமான. உக்கிரமான

उड्डी 4 आ உயர, ஆகாயத்தில்பற. णिच् பயமுறுத்தித் துரத்து

उड्डयनं, उड्डिनं उड्डीयनं न மேலே பறத்தல் -उड्डीनं பக்ஷிகளின் ஒருவிதப் பறத்தல்.

उड्डीशः पु சிவன். மாந்தரீக சாஸ்திரம்.
उड्रः पु தற்கால ஒரிஸ்ஸா தேசம் (औड्र)
उढ वि கலியாணமான
उणक त्रि ஒதுக்குகிற. வெளியே தூரத்துகிற
उणादिः पु व्या उण என்றாரம்பிக்கும்முடிவுகளையுடைய இனம்
उदुकः पु குஷ்ட விசேஷம். நெசவு. பின்னல். தேக பாகம்
उंडेरकः पु மாவுருண்டை. பூச்சண்டு
उत् अ ஸங்கேதகம், கேள்வி, ஆலோசனை, அதிகம் ஸூசகம்
उत अ ,, ஊகை, விகல்பம் (இரண்டிலொன்று) ஸம்பந்தம், கூட, மேலும், கேள்வி, அதிகம், தீவிரம், கோரிக்கை, வாக்கிய பூர்த்தி (அசை) (வாக்கிய முடிவில்) உறுத்திச சொல்ல மேலே, சிரேஷ்டம், கர்வம், தயை, ஒருவன் சொன்னதைத் திருப்பிச் சொல்லல் (அனுவாதம்)ஸூசகம்प्रति + அப்படிக்கின்றி, விரோதமாய் किं + எவ்வளவோ பங்கு குறைவாய், அதிகமாய் उत-उत இதுவா அதுவா उत वा இல்லாவிடில். மேலும் -आहो விசாரம்,கேள்வி,விகல்பம் =उताहोस्वत ஸூசகம்
उत वि தொடுக்க, தைக்கப்பட்ட
उतथ्यः पु அங்கிரஸின் பிள்ளையான (தேவகுரு) பிரஹஸ்பதியின் தமயன் -तनयः கௌதமர்
उत्क विः ஆசைப்படுகிற.விரும்புகிற. ஆவலுடன் கோருகிற. துக்கிக்கிற. கவனியாத. क இச்சை. தருணம்.
उत्का स्त्री ஸங்கேத ஸ்தலத்திற்கு நாயகன் வரவை எதிர்பார்ப்பவள். கணவன் மீது ஆசையுள்ள நாயகி
उत्कच त्रि உயரத் தூக்கிக் கொண்டிருக்கும மயிரையுடைய. மயிரில்லாத
उत्कच्छा பாதத்திற்கு 11 அசைகளுள்ள 6பாதஙர்விருத்தம்
उत्कंचुक वि ரவிக்கை, போருடையிலலாத

उत्कट् । प புறப்படு. வெடித்துவா. திடீரென்றுவெளிஓடிவா
उत्कट वि விசாலமான. விசேஷமான. பலமுள்ள. உக்கிரமான. அதிகமான. ஸ்பஷ்டமாய்க் காணப்படுகிற. ஏராளமான. நிறைந்த. குடித்த. வெறிகொண்ட. சிறந்த. உயர்ந்த. கர்வமுள்ள. ஸமனில்லாத. கஷ்டமான. ः லவங்கப்பட்டை टः யானையின் மதப் பெருக்கு. மதயானை. கர்வம், மதம், வெறி. செடி விசேஷம் टा (सैம்ஹீலதைச்) செடி விசேஷம்
उत्कटुकासनं न குந்தியுட் காரல்.
उत्कंटक वि சிலுத்துக்கொண்ட மயிருள்ள
उत्कंठ वि கழுத்தைத் தூக்கிக்கொண்டிருக்கிற. தயாராயிருக்கிற. ஆவலுள்ள. मान ठः, ठा புணர்ச்சி விசேஷம்
उत्कंठते ना आ விசாரப்படு. ஆவலோடிரு. णिच् கவலையுண்டாக்கு
उत्कंठा स्त्री கவலை. ப்ரியமுள்ள மனிதனுக்கு, வஸ்துவிற்கு ஆசைப் படல். துக்கம். பொருளையோ, மனிதனையோ யிழுதகல். வெள்ளை யருகு
उत्कंठिता त्रि = उत्कंठा காதலன் வாராததால் கவலைப்படுபவள்
उत्कता स्त्री கவலைப்படுகிறவள். (गजपिप्पली) செடி விசேஷம்
उत्कंधर वि நிமிர்ந்த கழுத்தையுடைய रं கழுத்தைப் பின்புறம் வளைத்தல்
उत्कंप् । आ நடுங்கு. குலுக்கு = णिच् कंप நடுங்குகிற पः, पनं, विन्
उत्कयति नः. प அசௌகர்யமுண்டாக்கு
उत्कर वि (कृ) ஒன்று சேர்ப்பது रः குவியல். போர். கூளம்.
उत्करिका स्त्री பால், தித்திப்பு, நெய் ஸம்பந்தப்பட்டதின் பொருள்
उत्करीय वि கூட்டம், அடுக்கு, குப்பை, குவியலைச் சேர்ந்த
उत्कर्करः पु வாத்திய விசேஷம்
उत्कर्तनं न வேரோடு பிடுங்கி எறிதல். துண்டித்தல். கிழித்தல்

उत्कर्ष वि (कृ) சிறந்த. அதிக. கொஞ்சத்தை அதிகமாய்ச் சொல்லப்பட்ட. மயக்குகிற र्षः இன்பம். ஆத்மஸ்துதி. மஹிமை, மேன்மை. அந்தஸ்து. அபிவிருத்தி

उत्कर्ष,कर्षिन् वि மேலுக்கிழுக்கிற. உயர்த்துகிற. விருத்திசெய்கிற

उत्कल वि அதிக. இரக்கமுள்ள. लः தற்கால ஒரிஸ்ஸாதேசம் (ब) அதன் ஜனம். பக்ஷி வேட்டைக்காரன். மூட்டை சுமப்பவன். பிராம்மணங்களின் பிரிவு. लं விவாஹாதி உத்ஸவம்

उत्कलाप वि நிமிர்ந்த, விரிந்த வாலே, தோகையையுடைய

उत्कलापयति ना. प போக உத்தரவு கேள். மயிலைத் தோகை விரிக்கச் செய். கௌரவித்து அகங்காரப்படுத்து.

उत्कलिका स्त्री கவலை. ஒன்றையிழத்தல், வருந்தல். கோரல். லீலை. கிரீடை. முத்தமிடல். புது மொக்கு. பெருஅலை -प्रायं கடினஎழுத்துக்களையும்பெரியபதங்களையுமுடைய வசனம்

उत्कलित वि கட்டப்படாத. தளர்த்தப்பட்ட. மனம் வருந்துகிற. (பூபோல்) விரிந்த.மலர்ந்த.செழிக்கிற, எழுகிறतं கணிதபேதம்

उत्कषणं न கிழித்தல். மேலுக்குப் பிடுங்கல். உழலல்

उत्काका स्त्री வருஷந்தோறும் கன்று போடும் பசு

उत्कायते ना. आ இச்சி. ஆசைப்படு

उत्कारः पु (कृ) தானியத்தைத் தூற்றல்,புடைத்தல், அம்பாரம் போடல், குவித்தல், விதைப்பவன்

उत्कारिका स्त्री புண்ணுக்குக்கட்டுவதற்கு கொதிக்கவைத்தமா. பொட்டளம்.

उत्काशनं न கட்டளையிடல்

उत्कासः, सनं, सिका स्त्री கனைமடித்துதனைத்தல். தொண்டையில் சளிகட்டியிருப்பதை யெடுத்துச் சுத்திசெய்தல்

उत्किर वि காற்று, நீரால் அடித்துக்கொண்டு போகப்படுகிற
उत्किरणः पु கிரணம்
उत्कुंचिका, ता स्त्री செடி விசேஷம்
उत्कुटं न மல்லாந்து படுத்தல், உறங்கல் = टकं
उत्कुटकासनं न முகம் மேல் நோக்கியிருக்கும் ஓர் விதஇருப்பு.
उत्कुणः पु மூட்டைப் பூச்சி. பேன் [ண்டுபண்ணுகிற
उत्कुल वि குலத்திலிருந்து நழுவின. குடிக்குக்கெட்டபெயரு
उत्कुटः पु குடை
उत्कूल वि (நதிகள்) மலைமேல் நோக்கிச்செல்லுகிற. கரைமேல் வழிகிற, எட்டுகிற = कूलित
उत्क्र 8 उ ஒருவனுக்கு பாதகமாய்ச்சொல்
उत्कृतिः स्त्री 104 எழுத்துக்களுள்ள ஒரு இன விருத்தம்
उत्कृत् 6 प நறுக்கு. துண்டி. சின்னபின்னமாக்கு
उत्कृत्यमान वि வெட்டப்பட்ட कृतिः வெட்டல்
उत्कृषू । प மேலுக்கிழு. உயர்த்து. மயக்கு. பிடுங்கித்தள். ஏற்று, அதிகப்படுத்து. (வில்லை) வளை. குறுக்காய்க்கிழித்துத் தள் णिच् உயர்த்து, ஏற்றுக எழு-மேன்மையடைந்திரு
उत्कृष्ट वि மிகச்சிறந்த. அதிகமான. உழப்பட்ட -उपाधिता பிரமித்திருக்குந்நிலை -सूसः நல்லவளமான-वेदनं உயர்ந்த ஜாதிக்காரனை மணத்தல்
उत्कॄ 6 उ அம்பாரம்போடு. தோண்டு. செதுக்கு. பொளி. துளை.
उत्कृत् 10 प புகழ். கொண்டாடு. பிரஸித்தப்படுத்து कीर्तनं
उत्कोचः पु லஞ்சம். காணிக்கை
उत्कोचक वि லஞ்சங்கொடுத்த. कः லஞ்சம். லஞ்சம் வாங்கு [கிறவன்.
उत्कोटि वि முனையுள்ள. கூரான
उत्कोशः पु லஞ்சம். கோபம்
उत्क्रम् । उ 4 प ஏறு. கடந்துசெல், அடிவை. சா. தவிர், தள்ளி விடு. மீறு. கவனியாதிரு णिच्

उत्क्रमः पु பிரிவு. அபிவிருத்தி. முறைதவறல் =क्रमः மாறுபாடு
उत्क्रमणं न மேம்படல். ஜீவனின் மேல்நோக்குப்போக்கு, சாவு
उत्क्रमणीय वि மீறத் தகுந்த. [=क्रांतिः
उत्क्रांत(वि (நிறம்) மங்கின. क्रांतिन् சென்ற. பிரிந்த [படுத்து.
उत्क्रुश । प கூவு. கூப்பிடு, முறையிடு. தெரியும்படி வெளிப்
उत्क्रुष्ट न ஸம்பாஷணை क्रोशः அறிவிப்பு. கூக்குரல். கோஷம்.
பெருங்கோபம். மீன் குத்தி(கடற்பருந்து). காக்கை
उत्क्रोदः पु ஜயத்தினல்) ஆனந்தம்
उत्क्लिश् 9 प நிம்மதியற்றிரு णिच् ஒதுக்கு. வேதனை விளைவி
उत्क्लेशः पु வியாகுலம். தேஹக் கோளாறு. வாந்தி.
उत्क्लेशक, शन, शिन् वि தேக அசௌகர்யம் செய்விக்கிற कः
விஷப்பூச்சி
उत्क्लेदः पु நனைதல். ஈரமாதல். தெகட்டுதல் दिन् ஈரமாக்குகிற
उत्क्षिप् 6,प உயர, விட்டெறி. நிமிர்த்து. விட்டொழி. கக்கு
उत्क्षिप्त वि தரிக்க, தாங்கப்பட்ட. மனதைக்கவர்ந்துகொண்ட.
இடித்துத் தள்ளப்பட்ட. தள்ளிவிடப்பட்ட. प्तः
ஊமத்தை [நகை
उत्क्षिप्तिका स्त्री மேல் காதிலணியப்படும் அர்த்த சந்திராகார
उत्क्षेपः पु மேலுக்கெறியப்பட்டது पौ கன்னப்பொறிமேற்பாகம்
उत्क्षेपक वि மேலுக்கெறிபவன், உயர்த்துவது कः துணி
திருடுபவன். அனுப்புபவன். கட்டளையிடுபவன்
उत्क्षेपणं न 16 பணத்தொகை. விசிறி. தான்யங்களை அடிக்
கக்கட்டுத்தடி. உலக்கை. முறம். உயரஎடுத்துப்போடல்
उत्खचित वि சேர்த்துக் கலக்க, நெய்ய. பதிக்கப்பட்ட
उत्खन् । प தோண்டியெடு. நிர்மூலம் செய். பிடுங்கு
उत्खला स्त्री மருவு என்னும் வாஸனைப் பூண்டு
उत्खात वि அல பதவியிலிருந்து தள்ளப்பட்ட तं மேடு பள்ள
மான பூமி. பள்ளம் -केलिः விளையாட்டிற்காக (தந்தம்,

கொம்புகளால்) மண்ணைக் குத்தித் தள்ளல்.
**उत्खातिन्** वि ஸமனற்ற.பாழாக்குகிற. நாசம் செய்கிற.
**उत्खिद्** 6 प பிடுங்குயெடு, வாங்கு खेदः செதுக்கல்
**उत्त** वि (उन्द्) நனைந்த.அலதயவுள்ள,உருகுகிற. இரக்கமுள்ள
**उत्तंसः** पु செவி, சிரோ பூஷணம். கொண்டை. பூமாலை.
**उत्तंसयति** ना. प கொண்டையாக்கு. அலங்கரி. கட்டு
**उत्तंसित** वि காது நகைகளையுடைய. கொண்டையிலணிந்த
**उत्तट** वि கரை புரண்டு பாய்கிற
**उत्तन्** 8 उ மேலுக்கு நீட்டு, உயர்த்து. எழுமுயல்
**उत्तप्** 1 प சுடு. வாட்டு. வறு. எரி. கருக்கு. சூட்டால் சித்திர வதை செய். அழுத்திக் குத்து. தூண்டு णिच् காய்ச்சு.
**उत्तप्त** वि பழுக்கக் காய்ச்சப்பட்ட. குளித்த. கழுவின. கவலையுள்ள.கோபாவேசங்கொண்ட. எரிக்கிற. நீஉலர்ந்த மாம்ஸம்.
**उत्तम्** 4 प விசாரப்படு. சோர். தைரியமிழ. துயரடை तमनं ஆத்திரம்.
**उत्तम** वि மிகச்சிறந்த, உயர்ந்த, பெரிய. முக்கியமான. முதன்மையான मः விஷ்ணு. தன்மை (நான்) मा உத்தமி. கொப்புளம், முத்து. கிழாநெல்லி -अंग தலை. ஆண், பெண் குறி -अंभस् சாந்தி. ஸமாதானம் -अरणी தண்ணீர் முட்டான் -अर्धः சிறந்த, கடைசி பாகம், பாதி -अहः கடைசி, புண்ணியநாள் -उपपद யாருக்கு, எதற்கு சிறந்த சொற்பொருததமோ அவன், அது.சிறந்த-ऋण (क): கடன் கொடுத்தவன் -ओजस् வீரன். வீர்யம் -कन्या உத்தமாளிக்கொடி -क्रीड ஸங்கித தாள விசேஷம் -गुण சிறந்த -पु (पू) रुषः தன்மை. பிரமமம். சிறந்தவன் -फलिनी சிறுபாலை -वेशः சிவன் -शाखः சிறந்தகிளைகளை யுடைய மரம் -श्लोक கீர்த்தி வாய்ந்த. சிறந்தபிர.

ஷித்தமான -संग्रहः (स्त्री) பரதார பரிசயம் செய்து கொள்ளல் -साहसं, सः பணஸம்பந்தமான, இதர கொடுந் தண்டனை. (அதிக அபராதம், ஸொத்தை எடுத்துக் கொள்ளல், நாட்டை விட்டகற்றல், அங்கச் சேதம் முதலியன)

उत्तमाख्य वि சிறந்ததாய்ச் செய்யப்பட்ட

उत्तमीय वि மிக உயர்ந்த, சிறந்த

उत्तंभ 5 9 प நிறுத்து, தாங்கு. தரி. णिच्च உயர்த்து. கட்டு

उत्तंभः, भनं न பிடித்திருத்தல். முட்டு. தடை செய்தல்.

उत्तर वि தாண்டிச் செல்லுகிற. தாண்டப்படவேண்டிய. வடக்கான. வடக்கேயுண்டான. கீழின்றி மேலான. பிந்திய. தொடர்ந்த. முடிவான. வரப்போகிற. இடதான. சிறந்த. சக்தியுள்ள. கடந்த. (எண்ணோடு) அதிகமான. தொடரப்பட்ட. தாண்டிச் செல்ல வேண்டிய रः எதிர்காலம். விஷ்ணு. சிவன். அக்கினி रा வடக்கு. நக்ஷத்திரம். விராடனின் பெண்ணான அபிமன்யுவின் மனைவி रं பதில். சமாதானம். பிரதிவாதம். பதிலுக்குப் பதில். ஸமாஸபிற்பதம். மேற்புறம். மூடி. தீர்மானம். மிச்சம். பிந்தி தொடர்ந்தது, நடந்தது. மேன்மை. அளவு மேம்பட்டது. மிச்சம். வித்தியாசம். अ மேலே. பிந்தி -अधर மேலுங் கீழுமான अल रौ கீழ் மேலுதடுகள் -अधिकारः, रिता, रत्वं சொத்திற்குரிமை. வார்ஸு வழியாய் அடைந்தது. -अधिकारिन् வார்ஸு -अयनं ஸூர்யனின் வடநோக்குகதி. தை முதல் ஆனிவரையிலான காலம் -अरणिः, णी மேல் அரணி -अर्थ பின் தொடர்வதின் நிமித்தமான -अर्धं மேலுடல். வடபாகம். பின்பாதி. வரப்போகும் முடிவு -अर्ध्य வடக்கேயிருக்கிற -आभासः கோணலான, பொய்,

சாக்கான, தப்பித்துக் கொள்ள ஏதாவது ஸமாதானம் -आशापतिः குபேரன் -आषाढा உத்திராடம் -आसंगः மேலுடை. உத்தரீயம். வடதிக்கு ஸம்பந்தம், ஸ்பர்சம். -इतरा தெற்கு -उत्तर மேன் மேலான. அபிவிருத்தியடைகிற ं பதிலுக்குப் பதில். ஸம்பாஷணை. அளவுக்கு மேலதிகப்படும் அளவு. வரிசைக் கிரமம். இறங்கல் अ. மேன்மேல் -ईमः வேடனால் பின்பாகத்திலடிபட்டமான் -उत्तरिन् ஸதா விருத்தியடைகிற. தொடர்ச்சியான -कायः மேலுடல் -कालः எதிர் காலம். ஒரு பௌர்ணமி முதல் இன்னொன்று வரையில் கணக்கிடப்படுங்காலம் -कुरु पु ब நித்திய மோக்ஷானந்த வட குருக்களின் தேசமான லோக 9ல் 1 பிரிவு -कोसलाः पु ब அயோத்தி -क्रिया உத்தரக்கிரியை. -खंडनं கண்டித்தல் -ग्रंथः நூலின் அனுபந்தம் -छदः படுக்கை) உரை -तंत्रं சுச்ருத வைத்திய நூலின் அனுபந்தம் -दायक எதிருக்கெதிர் வாயாடுகிற. அதனப்பிரஸங்கியான. கீழ்ப்படியாத-दिगीशः குபேரன். புதன் -दिग्बलिन् சந்திரன். சுக்கிரன் -देशः வடபுறநாடு -धेय தொடர்ச்சியாய்ச் செய்யப்படவேண்டிய -पक्षः இடப்பக்கம், ரக்கை. கிருஷ்ண பக்ஷம். ஆக்ஷேபணைக்கு ஸமாதானம். ஸித்தாந்தம் -पटः படுக்கையுறை. மேலுடை -पथः வடக்கு வழி. வடக்கே அடைவிக்கும்வழி -पथिक வடக்கே பிரயாணம் செய்கிற -पद् ஸமாஸ பின்பதம். இன்னொரு பதத்தோடு சேர்க்கத் தகுந்த பதம் -पदक, पदकीय கடைசிப் பதத்தைப் படிக்கிற. அறிந்திருக்கிற, ஸம்பந்தமான-पश्चार्धःவடமேற்குப்பாதி-पश्चिमः வடமேற்குத் தேசம் मा வடமேற்கு -पादः பிரதில் பதில், ஸமாதான ஸம்பந்தமான பின் பாகம் -पुरुषः =

उत्तमपुरुष: -प्रच्छद: மெத்தையுறை (புருகா) - प्रत्युत्तरं வாதம். காரணங்களைக் காட்டி வழக்காடல் -फ (फा) ल्गुनी உத்திரம் (கட்டில் போல் 2 நக்ஷத்திரங்களை யுடையது) -भाद्रपद्, दा உத்திரட்டாதி ,,. -मंद्रा உரத்து நிதானமாய்ப் பாடும் விதம் -मात्रं வெறும்பதில் -मीमांसा வேதாந்தம். பிரம்ம விசாரம்-रामचरितं, त्रं ராமனின் பிந்திய வாழ்க்கையைக் கூறும் பவபூதியின் ஓர் நாடகம் -लोमन् நெட்டிக்கொண்டிருக்கிற மயிரை யுடைய -वस्ति: ஒருவிதச் சிறு பீச்சாங்குழல் -वादिन् பிரதிவாதி. யாருடைய உரிமைகள் இன்னொருவனைக் காட்டிலும் பிந்திய (தேதியை)காலத்தினதோ -वारुणी மூலிகை விசேஷம் -वेदि: யக்கியாக்கினிக்காக வடக்கே குண்டம். குருக்ஷேத்திரத்தினருகே ஓர் தீர்த்தம் -संज्ञित: கேள்விப்பட்ட ஸாக்ஷி -साक्षिन् பிரதிவாதியின் ஸாக்ஷி. அன்னியர்கள் சொன்னதிலிருந்து சொல்லும் ஸாக்ஷி-साधक மிச்சத்தை முடிக்கிற. சடங்கில் ஸஹாயம் செய்கிற. பதிலை நிரூபணம் செய்பவன், செய்வது -हनु: மேல் தாடை யெலும்பு

उत्तरंगं न வாசற்படி மேலிருக்கும் குறுக்குமரம்

उत्तरंग त्रि அலைகளால் கலக்க, மோதித்துடைக்கப்பட்ட. வெள்ளத்தினால் முழுகப்பட்ட. அசைகிற. நடுங்குகிற. பொங்கும் அலைகளையுடைய. திடீரென்றெழும்பி மேலே விழுகிற

उत्तरंगि त्रि மேலுக்கெழுப்பல் பெருமூச்சுவிடல் நெஞ்சிடத்தில்

उत्तरतर त्रि இன்னுங் கொஞ்சம், மேலே, தூரத்திய

उत्तरत:, रात् अ வடக்கேயிருந்து. வடக்குநோக்கி, இடதுபக்கமாக. மேலே. உச்சியில். பின்னால். பிந்தி

उत्तरत्र अ தொடர்ந்தாப்போல். வரிசைக் கிரமத்தில். இரண்

டாம் விஷயத்தில். வடக்கு நோக்கி
**उत्तराहि** अ (ஒன்றிற்கு) வடக்கே, வடக்காய்
**उत्तरिन्** वि சிறந்த, மேலான
**उत्तरीयं, यकं** न உத்தரீயம். மேலுடை
**उत्तरेण** अ வடக்குநோக்கி. வடதிக்கில்.
**उत्तरेद्युः** अ நாளை. மறு, தொடர்ந்தநாளில்
**अत्तलित** वि மேலுக் கெறியப்பட்ட
**उत्तान** वि நீட்ட, பரப்ப, விரிக்க, விவரிக்கப்பட்ட. மல்லாக்கக் கிடக்கிற. நிமிர்ந்த. மேற்பக்கம் திருப்பிக் கொண்டிருக்கிற. திறந்த. கபடமற்ற.உயர்த்தப்பட்ட.வாயை மேற்பக்கமுடைய. உட்குவிந்த. ஆழமில்லாத. தூங்கியெழுந்த नं புணர்ச்சி பேதம் -कर्मक உட்காருவதில் ஓர் விதம் -पत्रकः செவ்வாமணக்கு -पदू स्त्री ஓஷதி வர்க்கம். மேல்நோக்கி வளரும் செடிகள். -पाद நீட்டப்பட்ட கால்களையுடைய (குழந்தைகள்) -पादः துருவனின் பிதாவான ஓரரசன். பிரம்மம் -वञ्चितः அபிநயத்தில் கையின் ஒருவித நிலை -शय वि முகம் மேல் நோக்கி மல்லாந்து தூங்குகிற -शयः, या முலை யுண்ணும் சிசு -शीवन् वि போகாமல் தேங்கிக் கொண்டிருக்கிற -हस्त ஜபத்தில் உயர்த்தப்பட்ட கைகளையுடைய स्तौ द्वि விரல்கள் நீட்டப்பட்டு பின்பக்கங்கள் பூமியை நோக்கின இருகைகள்
**उत्तानकः** पु குண்டு முத்தக்காசாகிற ஒருவிதக் கோரைப்புல்
**उत्तानका** स्त्री காமதேனு निका ஓர்நதி.
**उत्तानित** वि உயர்த்த. விரிக்க, விவரிக்கப்பட்ட
**उत्तापः** पु எரிச்சல், பாதை. உக்கிரம். ஆத்திரம். முயற்சி
**उत्तापित** वि (तपू) காய்ச்ச, துன்புறுத்த, தூண்டப்பட்ட
**उत्तार** वि (तॄ) இதர மானவர்களுக்கு மேம்பட்ட. (கண்களைப்

போல்) திருப்பப்பட்ட விழிகளையுடைய रः சஞ்சலம்
—तरण. रक्षः ரக்ஷகன். சிவன்

उत्तारणः पु விஷ்ணு. தேசாந்தரமனுப்பல். மீட்டல். இழிதல்

उत्तारिन् त्रि சஞ்சலமான. நோயுள்ள. தேசாந்தரமனுப்புகிற

उत्तार्य त्रि வாந்தி செய்ய, தாண்டிச் செல்ல, இழியத்தகுந்த

उत्ताल त्रि பெரிய. பலமான. உரத்த. உக்கிரமான. (காற்று) சப்திக்கிற. பயங்கரமான. பூதாகாரமான. கஷ்டமான. தெளிவாய்க்காணப்படுகிற. வேகமான. சிறந்த. உயர்ந்த. உயர்த்தப்பட்ட

उत्तालं न ஓர்தொகை ल:வாலில்லாதஓர்குரங்குபோன்றஜந்து

उत्तालकः पु செவ்வலத்தி

उत्तिजू णिच् प குத்திக்கிளப்பு. தூண்டு. உணர்ச்சியுண்டாக்கு

उत्तिष्ठमान त्रि எழுந்து நிற்க முயலுகிற

उत्तीरस् अ கரையில்

उत्तीर्ण त्रि படிப்பை முடித்துக் கொண்டவன். அனுபவசாலியான. திறமையுள்ள. இழிந்த. தாண்டிச்சென்ற. ஆபத்தினின்றும் ரக்ஷிக்கப்பட்ட. உபகாரத்தினின்றும் விடுதலை யடைந்த.

उत्तुंग त्रि உயர்ந்த. (நீர்ப் பெருக்கு) விருத்தியடைந்த

उत्तुण्डितं न (தைக்கும்) முள் நுனி.

उत्तुण्डी स्त्री சிறுகுறிஞ்சான்

उत्तुल् 10 प (திராசால்) உயர்த்து. நிமிர்த்து. நிறு. तोलनं

उत्तुषः पु உமி நீக்கப்பட்ட வறுத்த தான்யம்

उत्तॄ 1 प (நீரிலிருந்து) வெளிவா. நிலத்திற்கிழி. நீரைக்கடந்து செல். வெல். விட்டொழி. (ஆபத்தினின்றும்) தப்பு. இறங்கு. விடு. உயர்த்து. பலப்படுத்து. விருத்திசெய் णिच् ஆபத்தினின்றும் காப்பாற்று. அவிழ், களை. சுமந்து செல். தேசாந்தரத்திற்கனுப்பு. வாந்தி செய்

उत्तेजनं, ना स्त्री முன்னுக்குத்தள்ளல். அனுப்பல். கூருக்கல் ஆயுதங்களை ஒளிப்பித்தல். தூண்டுஞ் சொல்.

उत्तेजित वि உற்சாகப் படுத்தப்பட்ட. तं தூண்டு கோல். குதிரையின் 5ல் ஒன்றான நடுத்தரமான நடை

उत्तेरितं न குதிரையின் ஐந்தி லோர் நடை

उत्तोरण वि உயர்ந்த வளைவுகளாலலங்கரிக்கப்பட்ட.

उत्त्यक्त वि கைவிடப்பட்ட. எறியப்பட்ட. காமம், பற்றற்ற

उत्त्रस् 1 4 प பயங்கிரு. णिच् त्रासः பெரும் பயம்

उत्त्रिपदं न நேரான முக்காலி

उत्थ (स-अदिल्)वि ஒன்றிலிருந்துண்டான. வெளிவருகிற.நிமிர்ந்து நிற்கிற स्थः எழல்.

उत्था । प எழு. நில். விடு. ஒய். உதி. (பந்து போல்) பின்னுக்குப்பாய். உண்டாகு. விருத்தியடை.வளர்.செழி.பிராணனுக்கு வா. தைரியமாய்,சுறுசுறுப்பா யிரு.முயல். முன்னுக்கு வா. णिच् உயர்த்து. செய்யத்தூண்டு.உயிர்ப்பி. ஆதரி. உதவு. உணவளி

उत्थातृ वि எழுந்திருப்பவன். நிச்சயித்துக்கொள்ளல்

उत्थान वि எழப்பண்ணுகிறन्मரித்தோர்உயிர்த்தெழல். மனுஷ்யயத்தினம்.ஸொத் துஸம்பாதித்தல்.இன்பம். சண்டை. சேனை. (மலவிஸர் ஜனத்தில்)காலிசெய்தல்.புஸ்தகம். முற்றம். யாகசாலை. எல்லை, முடிவு.வேலை. எழுப்பல். குடும்ப, ராஜ்யவிசாரம். சிந்தனை. நோயின் முக்ய காரணம்.அடுப்பு.உத்தியோகம்.புருஷஅளவு. நாடகாங்கபேதம்-एकादशी விஷ்ணு 4 மாதத்தூக்கத்திலிருந்து எழும்கார்த்திகை சுக்ல ஏகாதசி

उत्थापनं न (வீட்டை) விடச்செய்தல். முடித்தல். வாந்திசெய்தல். பிரஸவித்தல் नी முடிவுரிக்

उत्थापित वि உயர எடுக்கப்பட்ட

उत्थाप्य वि உயர்த்த, உயிர்ப்பிக்க, கலக்கப்படவேண்டிய
उत्थायुक वि கர்வமுள்ள
उत्थित वि தப்புவிக்கப்பட்ட. நேரிடுகிற. உயர்ந்த. சிறந்த. நீட்ட, பரப்பப்பட்ட. 10 பாதங்களுள்ள ப்ரகாதம் -अंगुलिः விரித்த உள்ளங்கை तिः உயற்சி
उत्पचिष्णु वि பழுக்கடிக்க, சமைக்கத்தகுந்த
उत्पट् 10 प வேரோடு பிடுங்கி யெறி. கிழித்துத்தள். ஒதுக்கு
उत्पटः पु மரப்பிளப்புக்களிலிருந்து கசியும் பிசின். पाटनं
उत्पत् । प மேலே பற, குதி. உராய். தோற்றத்திற்குவா (பந்தைப்போல்) பின்னுக்குப்பாய். எழு. உண்டாக்கப் பட்டரு. பிறந்திரு.
उत्पतः पु பக்ஷி, மேலுக்குச் செல்லல். पातः पातक
उत्पतनं न பாய்ச்சல். பிறவி. மேலுக்கெறிதல்
उत्पताक वि உயர்த்தப்பட்ட கொடிகளையுடைய. கொடிகள் எங்கு உயர்த்தப் படுகின்றனவோ
उत्पतितृ वि எழும்புகிற
उत्पतिष्णु वि மேலே துள்ளுகிற, போகிற, பறக்கிற.
उत्पत्तिः स्त्री (पद्) பிறப்பு.மூலம், வழி. தோற்றமாதல். லாபம். அடைந்த பயன். புனருத்தானம். மரித்தவன் உயிர்த்தெழல் -कालीन இஜ்ஜனனகாலத்தில்ஸம்பவிக்கிற-प्रयोगः காரணபயன்களின் சேர்க்கையாலுற்பத்தி. கருத்து. அர்த்தம் -व्यंजकः ஒரு விதப்பிறவி. இரண்டாம்பிறவிக்கு அடையாளமான பூணூல் போடல் போல்
उत्पथः पु தப்புவழி. अल दुர்நடத்தை. மேட்டு வழி.
उत्पथं अ வழிதப்பி, தப்புவழியில்
उत्पद् 4 आ பிறந்திரு. உண்டாக்கப்பட்டிரு. எழு. நேரிடு. णिच् ச.னு. உண்டு பண். செய். தயாராக்கு
उत्पन्न वि உண்டான. அடைந்த. முடித்த. நிச்சயித்துக்கொ

ண்ட -तंतु வரிசையான ஸந்ததிகளையுடைய-भक्षिन् அவ் வப்பொழுது ஸம்பாதித்துண்கிற-विनाशिन् वि பிறந்த தும்சாகிற

उत्पल वि சதையில்லாத. இளைத்த ஹ கருநெய்தல். அல்லி. தாமரைச் செடி, கொடி.கிழா நெல்லி. கோஷ்டம் ஸः பாதாளம் ஸா நன்னாரி வேர். காக்கையின் கத்தல் ஸि புடைத்துப் பொட்டெடுக்காத பருப்பாலான அடை, வடை-आह्वया நெச்சிட்டிப்பூண்டு-गंधिकं பித்தளை நிறமுள் ளவாஸனைச் சந்தன விசேஷம் -पत्रं ஸ்திரீயின் நகத் தாலுண்டானவடு, காயம். நெற்றியில் சந்தனக்குறி. பட்டையலகு(வைத்தியர்) கத்தி. கருநெய்தல் பூவின் இதழ், இலை= पत्रकं -पूरका ஓர் மூலிகை -भेचकः ஒருவிதக் கட்டு -माला ஓர் நிகண்டு -शारिवा நன்னாரி வேர். மா வள்ளிக்கிழங்கு.

उत्पलिन् वि கருநெய்தல் பூக்கள் நிறைந்து கிடக்கிற नी கரு நெய்தற் கூட்டம்.அப்பூக்கள்நிறைந்த கொடி, ஓடை அதி ஜகதி விருத்த விசேஷம் (=चंद्रिका)

उत्पवनं(पू) தூற்றுதல்.சுத்திசெய்தல்.அதற்காகக்கருவி.திரா வகம்வடிகட்டல்.ஒருகையில்இருதர்ப்பஅடிகளையும்இ ன்னொருகையால்நுனிகளையும் நடுதர்ப்பம் தொன்னை நீரில், நெய்யில் படும்படி ஹோமம் செய்தல்

उत्पवितृ वि பரிசுத்தம் செய்தல், செய்பவன்

उत्पश्य वि மேலே பார்க்கிற. ஊஹிக்கிற

उत्पाटः पु நிர்மூலம் செய்தல். வெளிக்காதின் நோய்

उत्पाटकः पु வேரைப் பிடுங்குகிறவன் ,, पाटिन्

उत्पातः पु குறிப்பு. பின்னுக்கடித்தல் अल அரிஷ்ட ஸூசக ஏஷ்யம். தேச ஆபத்து (பூகம்பம் போல்) -पवनः, वाता -लिः புசல் காற்று.

उत्पातक वि துயரம் விளைவிக்கிற कः=उत्पादकः
उत्पाद वि உயர்த்தப்பட்ட கால்களையுடைய दः உற்பத்தி. தோற்றம். -शयः, यनः குழந்தை. சிட்டுக் குருவி
उत्पादक वि (दिका स्त्री) உண்டு பண்ணுகிற कः தகப்பன். கர்த்தா. சரபமிருகம். कं உற்பத்தி =पादनं
उत्पादिका स्त्री தாய். செல்லு. கறையான்
उत्पादित वि பிறந்த. உண்டுபண்ணப்பட்ட, பண்ணுகிற
उत्पारणं न வெளி நாட்டுக்கனுப்பல், சுமந்து செல்லல்
उत्पाली स्त्री ஆரோக்கியம்
उत्पावः पु பரிசுத்தம் செய்யும் நெய்
उत्पिंजर,ल त्रि கூண்டு, கட்டில்லாத. ஒழுங்கீனமான, [கோளாறான
उत्पित्सु वि மேலே கிளம்ப இச்சித்த.
उत्पिपू 7 प உராய். தேய். நசுக்கு. தூளாக்கு. மிதி. அரை
उत्पिष्टं न எலும்புகள் ஒன்றின்மேலொன்றாவதினதாலுபாதி
उत्पीड् 10 प உராய். நசுக்கி, பிழிந்து யெடு. அலட்டு. வெல்
उत्पीडः அமுக்கி வெளிப்படுத்தல். பீரிட்டுப் பாய்தல். வழிதல். நுரை
उत्पुच्छयते ना. आ வாலை உயர்த்து. प வாலைத் தூக்கு, உயர்த்தச் செய் [நோவு
उत्पुट त्रि விரிந்த. மலர்ந்த. வெடித்த -टः காதின் தண்டில்
उत्पुलक वि மயிர்ச்சிலிர்த்த. களித்த, ஸந்தோஷிக்கிற
उत्पू 9 उ சுத்தி செய், சுத்தி செய்யப்பட்டதினின்றும் ஒன்றைக் கிரஹி.
उत्प्रभ वि டாலடிக்கிற. ஒளி வீசுகிற भः எரியுந்தீ
उत्प्रसवः पु கர்ப்பச் சிதைவு.
उत्प्राशनं न ஒன்றை உயர்த்திக்கொண்டு உண்ணல்
उत्प्रासः, सनं न வீசி எறிதல். வேடிக்கை. இடியிடியென்று சிரித்தல். பரிஹாஸம். வசைப்பாட்டு, கேலியோடு

கூடின தூஷணை. அளவிற்கு மேம்பட்ட அதிகம்

**उत्प्रष** स्त्री கொப்புளம்

**उत्प्रेक्ष** । आ எதிர்பார்.ஊஹி.எண்ணிக்கொள் ஞாபகம் வை. இடம் மாற்று. ஊஹிக்கப்பட்ட உவமையால் விவரி

**उत्प्रेक्षणं** न மேலுக்குப் பார்த்தல். ஒப்பிடல்.

**उत्प्रेक्षा** स्त्री அலக்ஷியம். உதாஸீனம். ஒன்றை வேறொன் றின் குணங்களோடு கவியின் ஊஹை. உவமை. பரி ஹாஸமான ஒப்பிடுகை. தவறிப் போதல்

**उत्प्लवः** पु குதிப்பு. டாய்ச்சல். துள்ளல். वा தோணி

**उत्प्लवनं** न மேலே குதித்தல், தர்ப்பத்தால் மேலே படிந்த நுரையை யெடுத்தல்

**उत्प्लु** । आ மேலே குதி. மித. ஏற்றக் குறைச்சலாகு. முன் னும் பின்னுமாக அசை

**उत्फल्** । प குதி. பாய். விரிந்துதிற. மலர். णिच् திற.

**उत्फलं** न சிறந்த பழம்

**उत्फालः** पु குதிப்பு. வேகசலனம். குதித்தலில் அவயவரீதி.

**उत्फुल्ल** वि முழுதும் மலர்ந்த. பெரிதாகிற. உப்பின. வீங்கின. மல்லாந்துதூங்குகிற்ஜபெண்குறிபுணர்ச்சிவிசேஷம்=க்

**उत्सः** पु ஊற்று. நீருள்ளவிடம். மூத்திரம் -वि: கிணறு

**उत्सक्थ** वि தொடைகளைத் திறக்கிற

**उत्संकलित** वि ஸம்மதித்த. இணங்கின

**उत्संगः** पु மடி. தழுவல். சேரல். ஸமீபம். மேற்புறம். புட் டம். மேற்பாகம். உச்சி. மலைச்சிகரம். வீட்டுக்கூரை. விதானம், மேல்கட்டு. புண்ணின் உள்சந்து. உயர்ந்த தொகை. சன்னியாசி. அபிநயத்தில் கைநிலைவிசேஷம்

**उत्संगित** वि சேர்ந்த. சேர்க்கப்பட்ட. மடியில் வைத்துக் கொண்ட

**उत्सर्गिन्** वि கூடுகிற. கூட்டாளி. ஆழமான புண் नी கண்ணி

மைக்குள் கொப்புளங்கள்

**उत्सर्जनं** न மேலுக் கெறிதல். உயர்த்தல்.

**उत्सद्** । प முழுகு அல முழுகிப்போ. நாசமடை. தவிர். எழு. णिच् அழி. கவிழ். தைலம் பூசு

**उत्सन्न** वि அழிந்த. நிர்மூலமான. துர்ப்பாக்கியனான. (புஸ் தகம் போல்) லுப்தமாய் விட்ட, இல்லாமற் போய் விட்ட. விருத்தியான. எளிதில்) முடிக்கப்பட்ட

**उत्सरः** पु 15 அக்ஷரங்களுள்ள அதிசக்வரீவிருத்தவிசேஷம்

**उत्सर्गः** पु (सृज्) செலவிடல். நைவேத்தியம். மலம். பூர்த்தி. பொதுவிதி. சாஸ்திரோக்தமாய் வாக்களித்தபடி தே வதைகள், பிராம்மணர்களுக்குக் கொடுத்தல். ஆஸன வாய். விருத்தியடைதல். ஸாமான்ய சாஸ்திரம். ப்ர சாரமாகி அபவாதமடைந்த நூல்

**उत्सर्गतः** अ பொதுவாய். நிஷேத நிர்ப்பந்தமின்றி. गिन् वि

**उत्सर्जनं** न ஓதுதலைச் சிலகாலம் நிறுத்தி வைத்தல். இதன் [சடங்கு

**उत्सर्पणं, सर्पः** पु(सृप्) உப்பல்.உயரப்பறத்தல்

**उत्सर्पिन्** वि சிறந்த णी ஜைன மதகோடிக்கணக்கானவருஷ காலம். [த பசு

**उत्सर्यै** वि மேலே போகிற र्या காளைக்கு யோக்கியதை யடைந்

**उत्सवः** पु உற்சவம். பண்டிகை. ஒன்றின் ஞாபகார்த்தமாய் (50 வருஷக்கு ஒருதரம்) ஓர் கொண்டாட்ட நாள். ஸந்தோஷம். உயற்சி. கோபம். இச்சை. நூற்பிரிவு. துணிவு, அருந்தொழில். ஆரம்பித்தல். பொங்குதல். பொறுமை.

**उत्सह्** । आ முடியுமாயிரு. முயல். தூண்டப்பட்டிரு.நிம்மதி யாயிரு. சுகமாயிரு. மேன் மேற்செல் णिच् உற்சாகப் படுத்து.

**उत्सादः** पु (सद्) அழிவு. யக்ய பசுவின் ஓர் பாகம் **सादक**

**उत्सादनं** न கொஞ்ச காலம் தடுத்து நிறுத்தி, நீக்கிவைத்தல் நலங்கிடல். நலங்குப்பொடி. ரணத்தை யாற்றல். உயர்த்தல். (நன்கு,) இருசால் உழுதல்

**उत्सादनीय** वि यं ரணத்திற்கு மருந்து போட்டுகெட்டியாக்கல்

**उत्सादित** वि உயர்த்த, தைலத்தால் சுத்தம் செய்யப்பட்ட

**उत्सारकः** पु(सृ) வாயிற்காப்போன். காவலன். கூலியாள்.

**उत्सारणं** न தூரத்தில் ஒதுக்கிவைத்தல்விருந்தாளியைவரவேற்றல். வெளிவரஸாதகமாயிருத்தல்(பல்லக்கைப்போல்)

**उत्साहः** पु முயற்சி. ஊக்கம், விடாமுயற்சி. தீர்மானம்.சக்தி. உறுதி, மனோதைர்யம். வீரம். ஸந்தோஷம். மங்களம். நூல் -वर्धनः வீரரஸம் नं வீர்யம் -वृत्तान्तःஉற்சாகப்படுத்த, தூண்டிவிடச் சூழ்ச்சி -शक्तिः விடாமுயற்சி, பிடிவாதம் -हेतुक தூண்டிவிடுகிற

**उत्साहक,** हिन् वि சுறு சுறுப்பான. हनं விடாமுயற்சி.உற்சாகம்

**उत्सिक्त** वि உயர்த்தப்பட்ட. நிம்மதியில்லாத. தடுமாறுகிற

**उत्सिच्** 6 प தெளி. கொட்டு. (சீபோல்) பீறிட்டுமேலேபாய். பரப்பு. கர்வியாக்கு कகர்வங்கொள். பொங்கு.பெருகு. வழி. வெள்ள மிடு. அதிகமாக்கு सेकः கர்வம் सेकिन्

**उत्सुक** वि ஆவலோடு எதிர்பார்க்கிற.அடையமுயலுகிற.விசாரப்படுகிற. நிம்மதியற்ற. பற்றுள்ள. மனம்வருந்துகிற कः கோரிக்கை

**उत्सुकयति** ना. प நிம்மதியாயிராதிருக்கப்பண்

**उत्सुकायते** ना. आ கவலை கொள்

**उत्सूत्र** वि கட்டப்படாத. தளர்த்த, பிரிக்கப்பட்ட. ஒழுங்கீனமான.பாணினிஸூத்திரத்திலிருந்துபிசகிப்போகிற.

**उत्सूरः** पु ஸாயங்காலம். அந்தி, சந்திச் செம்மான ஒளி

**उत्सृज्** 6 प வெளித்தள். கொட்டு. விட்டொழி. தள்ளிவை. தளர்த்து. திரியவிடு. விலகு. தப்பியோடு. (பாணம்)

எறி. விடு. (விதை) விழச்செய், இறை. கொடு.விரிவாக்கு. நீட்டு. பரப்பு. நீக்கு. விதியைவரையறு.ஒன்றை, ஒருவனை ஓரிடத்திற்கனுப்பு. போகவிடு, அகற்று.தள்ளிவை. முடிவுவரையிற்கேள். செய். உருவாக்கு सृष्टिः

उत्सृष्ट वि(सृज्) விட, உபயோகப் படுத்தப்பட்ட -पशु விசிலகாலங்களில் தன்னிஷ்டப்படி திரியவிடப்படுங்காளை

उत्सृप् । प மேனுக்குச்செல், பற. நெருங்கு. பரப்பு. உதி.

उत्सेधः पु உயரம அல பருமன். வீக்கம். உடல். உன்னதம்.மேன்மை. घं கொலை.

उत्स्मि । ஆபுன்சிரிப்புகொள்.பரிஹஸி = णिच्‌பயித்தியமாக்கு

उत्स्य वि கிணறு, ஊற்றிலிருந்து வருகிற

उत्स्वप्नायते ना. आ தூக்கத்தில் வாய்பிதற்று

उद् अ வேதத்தில் வாக்கிய பூரணார்த்தமாய் வரும்.

उत् प्राबल्यवियोगोर्ध्वकर्मलाभ प्रकाशाश्चर्य

मोक्षणाभावदलप्राधान्यशक्तिषु

என்கிறபடிபெயர்,வினைச்சொற்களோடு இடம், பதம், சக்தியில் மேன்மை, மேலே, மேல்நோக்கிउद्गल.பிரிவு ஒன்றிலிருந்து, பிரிந்துउद्गच्छति.மேல்நோக்கசைவுउत्तिष्ठति. அடைதல் उदार्जति. பிரஸித்தம் उच्चरति. வியப்பு, கவலை उत्सुक. விடுதலை उद्गत. வராமை उत्पथ. விரிவு. மலர்ச்சி उत्फुल्ल பிராதான்யம் उद्दिष्ट சக்தி उत्साहः பெயர்ச்சொற்களோடுகர்மதாரய,பஹுவ்ரீஹி அவ்யயீபாவஸமாஸமாகிறது उदर्चिस् ; उच्छिख, उद्बाहु, उन्निद्रं, उत्पथं, उद्ग्रामं

उद् = उदकः

उदकं न ஜலம் कः முல்லை. கருநெய்தல். யே ானிமூலம்-अंतः கரை -आत्मन् நீரையேவிசேஷமாய் உருக்கொண்ட -आधारः ஜலாசயம். தொட்டி. பீப்பாய். கிணறு -उदंजनः

நீர்க் கூஜா, குடம் -उदरं மகோதரம்.ஜலோதரரோகம் -ओदनः சோறு -कर्मन्, दानं பிதிர் தர்ப்பணம் -कृच्छ्रः ஓர் விருதம் -गाहः முழுகல் -गिरिः அருவிகள்நிறைந்த மலை -ग्रहणं நீர்ப்பருகல் -चन्द्रः ஒருவித ஜால வித்தை -दः, दानिकः பிதிர்தர்ப்பணம் செய்யும் பிள்ளை, பங்காளி -परीक्षा ஒருவித அகோரப் பிரமாணம் -पूर्वक தானத்திற்குமுன் நீரைக்கையினால் தரையில்நிச்சய அடையாளமாக விடல் -प्रतीकाश நீரான. நீர் போன்ற -भारः, वीवधः காவடி -मंडलुः கமண்டலு -मंथः ஒருவிதக் குத்தின தான்யம் -मेहः அதிக நீரிறங்கும் ஓர் ரோகம் -वज्रः மழை போல் இடிவிழல் -शाकं நீரிலுண்டாகும் மூலிகை. ஓர்க் கீரை -शांतिः ரோகங்குறைய நோவாளி மேல் மந்திர ஜலம் தெளித்தல் -शुद्ध முழுகிச் சுத்த மடைந்த -सक्तुः நீர் கலந்த அரிசிமா -स्पर्शः ஆசமனம். வாக்குதத்தம், ஸங்கல்பங்களில் நிச்சயார்த்தமாய் நீரைக் கீழே விடல் -हारः நீர் சுமப்பவன்

उदकसात् அ எல்லாம் ஜலமயமான

उदकारः पु மடு

उदकेचरः पु ஜலஜந்து [ஸூசகம்

उदकेविशीर्ण वि நீரிலுலர்ந்த. கேள்விப் படாத அஸம்பாவித

उदक(कि)ल वि நீரான. நீரையுடைய

उदक्तात् अ வடக்கு நோக்கி. வடக்கே

उदक्य वि நீர் வேண்டியிருக்கிற. நீரிலிருக்கிற क्या தூரஸ்திரீ

उदग्र वि உயர்த்தப்பட்ட உச்சியையுடைய. முன் வந்து நெட்டிக்கொண்டிருக்கிற. மேல் நோக்குஉச்சியுள்ள. உயர்ந்த. உயர்த்தப்பட்ட அலு. பெரிய. அகன்ற. பரந்த. உதாரமான. குளிர்ந்த பார்வையுள்ள. வயது முதிர்ந்த. பிரவலித்தமான. கொண்டாடப்பட்ட.

ஸஹிக்கமுடியாத. தீக்ஷணமான. தாண்டப்பட்ட உக்கிரமான. பலமுள்ள -दत् वि பெரும் பற்களுள்ள உயர்ந்த தந்தமுள்ள யானை

उदग्रयति ना. प பிரவிசித்தனைக் காட்டிக்கொள்.

उदङ्कः, गः पु சிறுத் தோல் (எண்ணைச்)சித்தை. ஓர் முனி. நீரில்லாதவிடம். மேலே செல்லல்.

उदज् । उ வெளியோட்டு. ஓதுக்கு. பிடுங்கி யெடு

उद(दा)जः पु (பசுமாடுகளை)வெளியோட்டுதல்,அடைவித்தல்,

उदञ्च् । उ உயர்த்து. (நீர்) தூக்கு.மேலுக்கெறி.சொல்.சப்தி. எழு. கிளம்பு. மேலுக்குச் செல் उदक्त वि

उद(दं)चू त्रि மேலுக்குப் போகிற. மேல். வடக்கத்திய. வட நோக்கிய. பின் வருகிற =क् अ மேலே.வடக்கே -अद्रिः ஹிமயமலை. -अयनं உத்தராயணம். -पथः வடதேசம் -प्रवण வடக்கே சரிந்திருக்கிற. (யாகம் போல்) நன்கு நடந்து வருகிற -भूमः, मिः வளமுள்ள.

उदंचनं न மூடி. முந்தை. தொட்டி. ஜோடு) தவலை. சால்

उदंचु वि மேல் நோக்கிய. மேலுக்குப் போகிற

उदण्डपालः पु மீன். ஒருவிதப் பாம்பு.

उदधरः पु தகரம்

उदधिः पु கடல். மேகம். ஏரி. மடுவு. நீர்க்குடம். எண் 4, 7. -क्रमः, क्राः पु கப்பலோட்டி, கப்பற் பிரயாணி -मलः கண வாய்மீனின் எலும்பு.கடல்நுரை -मेखला பூமி -सुताலக்ஷ் மீ. துவாரகை.

उदन् 2 प மேல்நோக்கி மூச்சுவிடு

उदन् न (उदङ्क पु उदक् न उदीची स्त्री) நீர் -क्षीणः, यः புங்கன் -ग्रामः மேகம் -धानः நீர்க்குடம் -प நீரைக்கடக்கிற-पानं, नः கிணறு. அதனருகே குட்டை -पेषं கூழ். பசை அநீரில் (சேர்த்து) அரைக்கிற -प्रुत् वि நீரைதெரிக்க, பாயச்

செய்கிற. நீந்துகிற =प्लुत -भार: மேகம் -बंधिनी செடி விசேஷம் -मंथ: பார்லித் தண்ணீர் -मान: 50ல்1 ஆடகம் -मेघ: மழை -लावणिक உப்பு சேர்க்கப்பட்ட. உப்பான -वज्र: நீர்க்குழாய். ஜல ரூபத்தில்இடி -वाप:பிதிர் தர்ப்பணம் செய்பவன் -वासं ஜகதிரோத்தில் வீடு वासिन् நீரில் நிற்கிற -वान(ह): மேகம் -वाहनंநீர்க்குடம் -वीवध: நீர்சுமக்கக் காவடிபத்தை -शुद्: நீர்க்குடம் -श्वित பாதி நீர் கொண்டமோர் -हरण: நீரிழுக்கத் தோண்டி -हार நீர் கொண்டுவருகிற, சுமக்கிறர: மேகம்

**उदन्य** वि தாகமுள்ள. நீர்த்த -ज நீரிலுண்டான, இருக்கிற

**उदन्यति** ना -प தாகத்தோடிரு. நீர்ப்பாய்ச்சு, கட்டு

**उदन्यु** वि தாகமுள்ள. நீரைத்தேடுகிற. நீரில் நடக்கிற

**उदन्वत्** நீர்த்த. நீர்நிறைந்த. அலையுள்ள. கடல்.

**उदंत** वि ஒன்றின் ஓரத்தை யெட்டுகிற त: ஸாது. அயலாருக்குத்விசெய்துதான்ஜீவித்தல்.வியாபாரிவிருத்தாந்தம் [=-क:

**उदंतिका** திருப்தி. தெவிட்டல்.

**उदंत्य** वि எல்லைதாண்டி வஸிக்கிற.

**उदंभस्** वि நீர்நிறைந்த

**उदय** वि (उदि) தொடருகிற. (எழுத்தைப்போல்)य: உதயம். अल எழல். தோற்றம். உற்பத்தி. ஸருஷ்டி. ஸூர்யனுதிக்கும் கிழக்குமலை. ஸௌக்கியம்.அபிவிருத்தி. உயர்தல். பயன். நிறைவேற்றல். ஸாதித்தல். லாபம். வரவுவட்டி.காந்தி.வெளியேபோகும்வழி.போக்கு.क्रम: கொஞ்சங்கொஞ்சமாயெழல் -पुरं மார்வார் தேச முக்கிய பட்டணம் -प्रस्थ: ஸூரியனுதிக்கும்மலையின்பின் பீடபூமி.

**उदयनं** न எழல். பயன். முடிவு. தீர்மானம். न: அகஸ்தியர். வத்ஸ ராஜன்

उदयनीय त्रि முடிவடைகிற யா யாக முடிவு.
उदयिन् त्रि கிளம்புகிற. பெருகுகிற. பாய்கிற. செழிக்கிற.
उदरं न வயிறு. உள்பாகம். குழி. வயிற்றுப்பலம். ஈரல்ஸம்பந்த நோய். கொலை. யுத்தம். -आमयः வயிற்றுப்போக்கு. சீதபேதி. -आवर्तः தொப்புள் -आवेष्टः வயிற்றிலிருக்கும் ஒரு வகைப்புழு, -ग्रंथिः गुल्मः குடல்வியாதி. त्राणं மார்க்கவசம். வயிற்றின் மேல் கட்டிக்கொள்ளப்படும் துணி, பட்டை -पिशाचः வயிர் தாலி -पूरं अ வயிறு நிரம்புகிற வரையில் -शय வயிற்றைக் கீழ்ப் புறம்வைத்துறங்குகிற. यः கரு. கர்ப்பப்பிண்டம் -सर्वस्वः போஜனப் பிரியன்
उदरक त्रि அடி வயிறு ஸம்பந்தமான.
उदरथिः पु ஸமுத்திரம். ஸூரியன்
उदंरभरि त्रि தானே தின்று விடுகிற. சுயநலமுள்ள. வயிர் [தாலியான
उदरवत उदरिक, ल பெரும் வயிறுள்ள
उदरिन् त्रि அடி வயிறுஸம்பந்தமான „ णी கர்ப்பிணி
उदर्कः पु முடிவு. தீர்மானம். வரப்போகும்கர்ம)பயன். தூரத்தியபயன். எதிர்காலம்(கோபுரம்போல்)கட்டிட உயர்வு. மேம்படல். ஓர்மரம்.
उदर्चिस् त्रि மேல் நோக்கி யெரிகிற. ஜ்வலிக்கிற. पु தீ. மன் [மதன். சிவன்
उदर्दः पु அக்கி. கரப்பன்
उदर्धः पु ஜ்வர விசேஷம் र्धिः पु எருது
उदर्य त्रि வயிற்று ஸம்பந்தமான र्यं வயிற்றிலுள்ளவைகள்
उदवग्रहः पु அவக்ரஹ உதாத்தத்தைச் சார்ந்த ஸ்வரிதம்
उदवसानीय त्रि கடைசியான. முடிவான
उदवसितं न வீடு
उदश्रु त्रि குபீரென்று கண்ணீர் விடுகிற, அழுகிற
उदस् 4 प மேலுக் கெறி. உயர்த்து. தள்ளு. ஒதுக்கு. விடு. அழி. ஓட்டு. முன் தள். பிரயாஸப்படுகவழிதப்பு
उदस्त त्रि பங்கம், அவமானம், செய்யப்பட்ட. இறைக்கப்பட்ட

**उदात्त** वि உயர்ந்த. உயர்த்தப்பட்ட. மேலான. கௌரவிக்கப்பட்ட. உதாரமான. தூக்கிச்சொல்லப்படுகிற **त्तः** அந்த ஸ்வரம். தானம். பெரும் பறை. தைர்யவீரன் **त्तं** ஓர லங்காரம் **-श्रुति** உச்சஸ்வரத்தில் சொல்லப்படுகிற

**उदात्ततर** वि இன்னும் சற்றுத் தூக்கப்பட்ட

**उदानः** पु மேலுக்கு) மூச்சுவிடல். தொண்டைக்கு மேல் தலைக்குட் செல்லும் ஐந்திலோர் தேகவாயு. (பௌத்த மதப்படி) ஓர் ஸந்தோஷ ஸூசகச் சொல். தொப்புள். கண்ணிமைமயிர். ஒருவிதப் பாம்பு யானை

**उदाप्यं** अ நீரோட்ட எதிர் வாட்டாக

**उदार** त्रि கொடுக்குந்தன்மையுள்ள. கௌரவிக்கப்பட்ட. மேலான, உயர்ந்த. யோக்கியமான. நல்ல. தகுந்த. வாக்தாடியுள்ள. அன்பான. ஏராளமான. விசாலமான. திவ்வியமான. அழகான. (ப்ரமை) மயக்கமடையாத. முன்தள்ளுகிற. தூண்டுகிற. **रं** अ உரத்து. தர்க்கங்களால். **रः** மேற்கிளம்பும் ஆவி, முடுபனி. நீண்ட தாளுள்ள ஓர் தானியம் அசேதனங்களுக்கு மஹிமையேற்றிக் கூறுமோரலங்காரம்-**आत्मन्**, **चरित**, **सत्व** மஹிமைவாய்ந்த **-धी** மேதாவியான. பெருந்தன்மை வாய்ந்த. **पु** விஷ்ணு. நல்ல சக்தி, ஸாமர்த்தியங்கள் **-दर्शन** குளிர்ந்த பார்வையுள்ள **-रमणीय** மிகச் சிறந்த

**उदारथि** वि மேலே போகிற. இந்திரியங்களுக்கு அறிவு உண்டாக்குகிற. ஆவிபோகிற. **थिः** விஷ்ணு

**उदावत्सरः** पु வருஷம். 5 வருஷகால அளவிலொன்று

**उदावर्तः** पु குடல்களின் நோய் **र्त** நோயுடன் நுரைத்துக் கசியும் ரத்தமுள்ள ஸ்திரீயின் மாதவிடாய். அளவு சாஸ்திர பேதம்

**उदास्** 2 आ கவனியாதிரு. சோம்பியிரு

उदास, सिन् அலக்ஷியமான स:, सिन् இன்ப துன்பமுணராத ஞானி. வைராகி. உதாஸீனம் सितृ वि

उदासीन वि ஒன்றிலும் தலையிட்டுக்கொள்ளாத. न: புது மனிதன். பொதுவான பரிசயம்

उदास्थित वि நியமிக்கப்பட்ட त: மேற்பார்வையிடுபவன். காவலன். சாரன். தன் விரதத்தை விட்ட சந்நியாசி.

उदाहित वि உயர்த்தப்பட்ட

उदाहरण न (ह) உதாரணம். மேற்கோள். புகழ்ச்சியான பாட்டு. ஆரம்பம். வெளிப்படையாய்க் காட்டல்.

उदाहार: पु பேச்சின் தொடக்கம். உதாரணம்.

उदाह । प சொல். அறிவி. மேற்கோளாய்ச் சொல்.

उदाहृति: स्त्री உதாரணம். விளக்கம்

उदि 2 प உதி. எழு. உண்டாக்கப்பட்டிரு. வெளிச் செல். தப்பித்துக் கொள். விரோதமாய்க் கிளம்பு. திடுக்கிடு

उदित वि உயர்ந்த. விருத்தியடைந்த. கட்டப்பட்ட (वद्). சொல்லப்பட்ட. त ஓர் வாஸனை. ஒருவித அழுத்தின உச்சாரண விசேஷம் -उदित சாஸ்திர அனுமதமான -होमित உதயமான பின் ஹோமம் செய்கிற

उदिति: स्त्री எழுதல். மறைதல். வார்த்தை

उदीक्ष । आ மேலுக்குப் பார். கவனி. எதிர்பார். காத்திரு.

उदीची स्त्री வடக்கு-न வடக்கான. வடக்கு நோக்கின

उदीच्य वि வடக்கே யிருக்கிற च्य: ஸரஸ்வதிநதிக்கு வடக்கேயும் மேற்கேயு முள்ள தேசம् व அத்தேச ஜனங்கள் च्यं குருவேர் -वृत्त ஒரு வித வைதாள்யவிருத்த விசேஷம்

उदीप वि வெள்ளமிட்ட प: பெரும் வெள்ளம்.

उदीर् 2 आ எழு. புறப்படு. கிளம்பு. உதி. உண்டாகு. णिच् சொல். எய். பெயரால் அழை. நீட்டு. உருட்டு. ஸாதி.

क சப்தி. வெளிப்படு उदीरित
उदीर्ण वि (उदीर्) வளர்ந்த. கர்வித்த. அதிகமான. உதாரமான. தயாரான. கயிறு பூட்டப்பட்ட. र्णः விஷ்ணு.
उदीर्य वि சொல்லத்தக்க -माण சொல்லுகிற.
उदीषित वि கிளம்பின. உயர்த்தப்பட்ட
उदुंबरः = अडुंबरः யமன் रं வானப் பிரஸ்தாச்ரமபேதம். रं செங் கரும்பு -मशक = कूपमण्डूक
उदुंबरावती स्त्री ஓர் நதி. காலபேதம். நத்தப்பாழ்
उदुबल वि மிகுந்த பலமுள்ள. लः அத்தி
उदुष्ट वि சிவந்த
उदूखल = उलूखल
उदूढ वि (वह्) பெரிய. விவாகம் செய்யப்பட்ட. திருப்பமான. கரடு முரடான. அடைந்த. எழும்பியிருக்கிற. உயர்ந்த. கொழுத்த. ஸ்தூலமான. அதிகமான
उदचू स्त्री சிறந்தரிக். எதிர்காலம். மீதி. முடிவு. அபிவிருத்தி
उदेजय वि நடுங்குகிற. பயப்படுத்துகிற
उदेष्यत वि அதிகமாகிற. எழுந்திருக்கிற
उदोजस् वि மிகபலமுள்ள. உக்கிரமான
उद्गंधि वि உக்கிரமான வாஸனையுள்ள
उद्गत वि (गं) கக்கப்பட்ட. तः ஓர் விருத்தம் -असु இறந்த
उद्गम् । प எழு. கிளம்பு. தோன்று. உண்டாகு. பிரிந்துபோ (உயிரைப்போல்). பிரஸித்தமாயிரு. तिः வாந்தி
उद्गमः पु (மயிரைப்போல்) நேராய் நிற்றல். உத்பத்தி. செய்கை. பார்வை. உயற்சி. பிதுக்கம். குருத்து. கக்கல்
उद्गमनीयवि மேலேபோகத்தகுந்த तं தோய்த்தஜதைத்துணிகள்
उद्गाढ वि ஆழமான. அதிகமான ढं அதிகம் अ அளவிற்கு மேல்
अद्गातृ पु (गै) யாகத்தில் 4ல்1 முக்கியமானஸாமபுரோஹிதன்
उद्गाथा स्त्री ஆர்யா விருத்த விசேஷம் (கீதியைப்போல்)

उद्गारः पु (गॄ) கசிதல். பெருகல். பாய்தல். அளவு, மொத்தை (எறியப்பட்ட). எச்சில். ஏப்பம். ஓக்காளம். குமட்டல். எதிரொலி. ஒலி
उद्गारिन् वि மேலே போகிற. கக்குகிற. கொட்டுகிற
उद्गिरणं न (गॄ) நாசம். நிர்மூலம். எதுக்கல், காரல். விழுங்கல்.
उद्गिरिः स्त्री விழுங்கல்
उद्गीतिः (गै) स्त्री ஸாமகானம். ஓர் ஆர்யாவிருத்தம்.
उद्गीथः पु பிரணவத்தின் பெயர். ஸாம 2ம் பாகம். ஓர் ரீத்விக். ஸாமகானம். சந்திரன். மேகம். சேனையினிடம்
उद्गुर् 6 आ அதட்டுதலிற்போல் குரலையுயர்த்து
उद्गूर्ण वि தாங்க, நிமிர்த்த, தூண்ட, உயர்த்தப்பட்ட
उद्‌गॄ 6 प கக்கு. எதுக்கு. துப்பு. ஏப்பம்விடு. பேசு. மூச்சுவிடு. ஒன்றிலிருந்து எழு. णिच् (குரலை) உயர்த்து गारः
उद्गै । प உரத்துப்பாடு. பாடத்தொடங்கு. (ஸாம)கானம் செய். பஹிரங்கமாய்ச்சொல். பாடிக் கொண்டாடு. ஒருவன்முன் பாடு. பட்டால் கோஷி
उद्ग्रन्थ् । 9 उ கட்டுகளாய்க் கட்டு. (மாலையாய்க்)கோர். அவிழ்
उद्ग्रंथः पु அத்தியாயம்
उद्ग्रंथि वि அவிழ்க்கப்பட்ட अल உலகபாச மொழிந்த
उद्ग्रभणं, ग्राभः पु (ग्रह्) உயர்த்தல். கொடுத்தல். தானம்
उद्ग्रह 9 प உயர்த்து. பிடுங்கு. பொருப்பில் வை. ஜாக்கிரதை செய், பத்திரப்படுத்து. ஓய் (மழை). நிறுத்து (பேச்சை) णिच् புகழ். உதாஹரி.
उद्ग्रहः, ग्रहणं न வைதிகச் சடங்கால் ஸாதிக்கவேண்டிய விஷயம். ஓக்காளம்
उद्ग्राहः पु ஆக்ஷேபணைக்கு ஸமாதானம். ஆக்ஷேபணை. தொடரும் (अच्) உயிரெழுத்திற்கு முன் முன் பதக் கடையிலுள்ள अः, ए, ओक्கள் अ வாக மாறுபடுத்தும் ஸந்தி

विधि -पदवृत्तिः இந்த உத்கிராஹஸந்தி
उद्ग्राहणिका स्त्री பதில் ஸமாதானம்
उद्ग्राहित वि (ग्रह्) சிறந்த. கட்டப்பட்ட. ஞாபகம் வந்த
उद्ग्रीव वि கர்வமுள்ள.கழுத்தைஉயர்த்திக்கொண்ட = ग्रीविन्
उद्घः पु சிறப்பு. முக்கியன் (न अ தில்) ஸந்தோஷம். கையின் பள்ளம். தீ. மாதிரி. விதம். தேக அங்க ஸம்பந்தவாயு.
उद्घनः पु மரத்தைச் செதுக்க அதன் கீழிருக்கும் பலகை
उद्घातिन् वि மேடு பள்ளமான. கரடுமுரடான
उद्घट् । आ திற =णिच पூட்டைத் திற. விள்ளு. வெளிப் படுத்து. தொடங்கு. தடவிக் கொடு. घट्टित वि பிரிக்கப் [பட்ட
उद्घट्टकः पु ஸங்கீதத்தில் ஒரு விதக்கால அளவு
उद्घट्टनं, ना स्त्री தேய்ப்பு. உரைப்பு. (மூடியைப் போல்) மேலுக்குத் திறத்தல்.
उद्घटितं न குறிப்பு. சைகை. ஜாடை. ஸூசனை
उद्घर्षणं न (ரத்தினம்) இழைத்தல்.உறைத்தல்.கடின வஸ்துக் களால் தேகத்தின் மீது தேய்த்தல். குட்டைத்தடி.
उद्घसं न மாம்ஸம்
उद्घाटः पु காவற்காரரிருக்கும் வீடு
उद्घाटकः पु சாவி. ஏற்றம். ராட்டிணம் = कं
उद्घाटनं न (नी स्त्री) உயர்த்தல். சாவி. திறக்கும் ஸாதனம். தொட்டியும் தாம்பக்கயிறும்.
उद्घाटित = उद्घट्टित -अंग நிர்வாணமான. அறிவுள்ள = ज्ञ
उद्घातः पु தொடக்கம். உதகரிக்கப்பட்ட சங்கதி (பூர்வ சரித்திரம் போல்). காயப்படுத்தல். தீங்கு விளைவித் தல். உதை. காயம். (வண்டியின்) ஜாடிப்பு. எடுத் தெடுத்துப் போதல். உயற்சி. கொட்டாப்புளி, மர சம்மட்டி. தடி. ஆயுதம். ஏற்றம். நிர்மூலம் செய்தல். வைதிகக் கிருத்தியமாய் மூக்கால் மூச்சுவிடல். அத்

தியாயம், பிரிவு.

**उद्घुष्** । प கூவு. முறையிடு. 10 प णिच् கூச்சலால் பெருஞ் சப்தமுண்டு பண். உரத்துப் பிரகடனம் செய் द्वे ஓசை

**उद्घृष्** । प தேய். தேய்த்துக்குறை. அழுத்தித்தேய். மொத்து

**उद्घृष्टं** न உச்சாரணத்தில் ஒருவிதப் பிசகு

**उद्घोषः** पु பொதுஜன அறிவிப்பு. பிரஸ்தாபம்

**उद्दंशः** पु மூட்டுப் பூச்சி. பேன். கொசு. உண்ணி

**उद्दण्ड** वि உயரெடுக்கப்பட்ட தண்டத்தை யுடைய. பயங்கரமான. உக்கிரமான. கட்டிற்கடங்காத -पालः சிக்ஷிப்பவனான ராஜன். மாஜிஸ்ட்ரேட். ஒருவித மீன்; பாம்பு (उद्दण्डपालः) की கருங்குறிஞ்சி

**उद्दंतुर** वि பெரிய, முன் வந்த பல்லுள்ள. உயர்ந்த. பயங்கர [மான.

**उद्दमः** पु அடக்கல். வெல்லல்

**उद्दांत** वि ஊக்கமுள்ள. வணக்கமுள்ள

**उद्दानं** न கட்டல். கட்டுப்படுத்தல். பழக்கல். நடு. இடை. அடுப்பு. வடவானலம். ஸூரியன் ஓர் ராசியிற்புகுவது

**उद्दाम** वि கட்டுப்படுத்தாத. சுயேச்சையான. பலம் வாய்ந்த. எரிந்து விழுகிற. வெறி பிடித்த. பயங்கரமான. செழிமையான. கர்வமுள்ள. எல்லையில்லாத. விசேஷமான मः யமன். வருணன் सं अ உக்கிரமாய்

**उद्दालः** पु நறுவிலி. சோளம். வரகு. உத்தாலகரிஷி

**उद्दालकः** पु ,, ,, ஓர் ரிஷி के ஒருவிதத்தேன் -पुष्पभञ्जिका இச் செடியின் பூ கிழிக்க, நசுக்கப்படும் ஓர் கீழ் நாட்டு [ஜன விளையாட்டு.

**उद्दिनं** न நடுப்பகல்.

**उद्दिश्** 6 उ சுட்டிக்காட்டு. சொல். ஒன்றைக் குறித்துச் சொல். கருது விவரி. கற்பி. புத்தி சொல்

**उद्दिश्य** अ ஒன்றைக் குறித்து. ஒன்றிர்க்காக, ஒப்பந்தத்திற்கு

**उद्दिष्ट** वि குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட. இச்சிக்கப்பட்ட.

**उद्दीप्** । आ ஒளிவிசு. மூட்டப்பட்டிரு. णिच् ஒளிப்பி. தூண்டு

**उद्दीपः** पु எரிதல். தீமூட்டல், மூட்டுபவன். குத்திக் கிளப்பு வது. पं மை ஸாக்ஷியெனும் ஓர் மருந்தெடுக்கும் செடி. குங்கிலியம்

**उद्दीपक** वि பற்றவிடுகிற. உக்கிரமாக்குகிற कः மலை எறும்பு

**उद्दीपनं** न எரிதல். தேகம்எரிவது. அலங்காரத்தில் ரஸஹேது.

**उद्दीप्त** वि எரிக்கப்பட்ட. பிரகாசிக்கிற. மிகவும் கேடாக்கின

**उद्दीप्र** वि ஜ்வலிக்கிற. प्रं.प्रः = उद्दीपं

**उद्दृश्** । प உயரப்பார். வரப்போவதைக் கவனி. எதிர்பார். சந்தேகி. ஜாக்கிரதையாயிரு. णिच् தோற்றமாக்கு

**उद्देशः** पु (दिश्) கருத்து. தீர்மானம். ஆராய்ச்சி. விஷய சுருக்கம். ஒப்படைத்தல். சாட்டுதல். கொடுத்துவிடல். ஏற்பாடு. மேற்பிரதேசம், நிலை. தேடுதல். பிரதிக்கினை இதென்று தெரியப்படுத்தும் பிந்தி ஆராய்ச்சி செய்ய வேண்டிய விஷயம்.

**उद्देशक** वि விளக்குகிற. कः உதாரணம். வழிகாட்டி (கணக்கில்) பிரச்னை, ருஜு செய்யவேண்டிய விஷயம்.

**उद्देश्य** वि கருத்திலிருக்கிற. குறிக்கப்படுகிற. श्यं சொன்னதின் விஷயம்

**उद्देष्टृ** वि ஒரு கருத்தோடு ஒரு தொழிலைச் செய்பவன்

**उद्देहिका** स्त्री செல். கறையான்

**उद्योतः** पु ஒளி. अल வெளிப்படையாய்ச்சொல்லல். அந்நியாயம்

**उद्धत** वि (उद्धन्) 2 प உயர்த்தப்பட்ட अल மிக அதிகமான. கர்வமுள்ள. கொடுமையான. மூட்ட, தூண்ட, தீவிரமாக்கப்பட்ட. கம்பீரமான. तः மல்லன். ஜெட்டி -मनस्(क கர்வியான

**उद्धतिः** स्त्री கர்வம். உயற்சி. முரட்டுத்தனம். அடி. குலுக்கல்

**उद्धम** वि (ध्मा) சப்திக்கிற. ஊதுகிற. नः மூச்சுவிடத்தவித்தல்

**उद्धरणं** न (ह्व) மீட்டிவிடல். பங்கு கொள்ளல். கார்ஹ பத்தியாக்கினியிலிருந்து மற்றவைகளுக்காக எடுத்தல், வாந்தி செய்தல், செய்யப்பட்டது. முக்தி. கடன் தீர்த்தல். **णी** ஓர்ப் பாத்திரம். ஏற்றம். ராட்டிணம்

**उद्धर्तृ** त्रि பங்காளி. சொத்தைத் திரும்பியடைபவன்

**उद्धर्ष** त्रि சந்தோஷித்த **र्ष:** அதிக தெம்பு. ஒன்றைச் செய்ய உற்சாகம் பிறத்தல். உற்சவம் (சடங்கு)

**उद्धर्षण** त्रि உயிர்ப்பிக்கிற. உற்சாகப்படுத்துகிற. **णं** மயிர்க்கூச்சு

**उद्धर्षित** त्रि **न्** மயிர்க்கூச்சுள்ளவன். ,,

**उद्धवः** पु யக்யாக்கினி. உற்சவம். கிருஷ்ணனின் அம்மானும், ஸ்நேஹிதருமான ஓர் யாதவர் (அனு)

**उद्धस्त** त्रि கைகளை நீட்டுகிற, உயர்த்துகிற

**उद्धा** 3 प நீக்கு, வெளிப்படுத்து (சிசுவை). கட்டடம் கட்டு. **आ** எழும்பு. கிளம்பு. பிரிந்துபோ. எழுப்பு. (புருவங்களை) நெரி **द्धित** वि

**उद्धान** त्रि எதுக்கின. வாந்தி செய்த. ஸ்தாவித்த. **नं** அடுப்பு

**उद्धान्त** त्रि ,, ,, **तः** மதம் நீங்கின யானை

**उद्धारः** पु (ह्व) கழுவிடை. கழிச்சல். ஒதுக்கம். ஜ்யேஷ்டாம்சம். யுத்தக் கொள்ளை யுடைமைகளில் அரசனுக்குச் சேரவேண்டிய ஆறிலோரம்சம். (வட்டியில்லாக்) கடன். சொத்தைமீண்டடைதல். புறப்பாடு. மேற்கோள் காட்டல். மோக்ஷம். மேன்மை. **रा** சிந்தார்க்கொடி **रं** அடுப்பு **रक उद्धर्तृ धारणं** பங்கிடல்

**उद्धिः** पु வண்டியின் பார். உகை வைக்கப்படும் மண்ணுதாரம்

**उद्धुर** त्रि கழுத்து பாரம், நுகத்தடி நீங்கின. சுயேச்சையான. அதிக தைர்யமுள்ள. ஜய சீலனுன. உரத்த. உயர்ந்த. பளுவான. நிறைந்த. தடித்த. திறமைசாலியான. உற்சாகமுள்ள. **रः** அரிசி.

**उद्धू** 5 9 उ (சாமாம்) வீசு. உயர்த்து. குலுக்கு. உதறு. ஒதுக்கு அழி. **अल** கிளப்பு.
**उद्धूलनं** न பொடி தெளித்தல். செம்பாரம்
**उद्धूलयति** ना प பொடி பண்ணு, தெளி
**उद्धूषणं** न மயிர்க் கூச்சு, சிலிர்ப்பு.
**उद्धृ** 1 प வெளியெடு. உயர்த்து. (கஷ்டத்தினின்றும்) காப்பாற்று. பிடுங்கு. விடுவி. நிர்மூலமாக்கு. (பூ) கொய். (கைகளை) நீட்டு. தூக்கு (நீர்). தாங்கு. பிரி. ஒதுக்கு. கழி. தேர்ந்தெடு. கொடு. நிஜப் படுத்து. பங்கிடு. பகிரங்கம் செய். **णिच्**
**उद्धृत** वि சிதறடித்த. உடைத்தாயிருக்கிற. மூடப்படாத-**उद्धार** பித்ரார்ஜிதத்தில் தன் பங்கைப் பெற்றவன். எதிலிருந்து கிரமமான பாகம் கழிக்கப்பட்டதோ -**स्नेह** (பாலைப்போல்) நுரை, எடெடுக்கப்பட்ட
**उद्धृतिः** **स्त्री** கிரட்டி யெடுக்கப்பட்ட நூற்தொகுதி. ஆபத்திலிருந்து, பாவத்திலிருந்து ரக்ஷித்தல். மோக்ஷம்.
**उद्ध्मा** । प மூச்சுவிடு. ஊது. உப்பச்செய். பறை சாற்றித் தெரியப்படுத்திக் கொள் **ध्मानं** அடுப்பு.
**उद्ध्यः** पु ஓர் நதி. மேற்கு திக்கைநோக்கிச் செல்லும் ஆறு.
**उद्ध्रः** पु நீர்ப் பூனை -**चूचुकः** சண்டாள ஜாதி பேதம்
**उद्ध्वंसः** पु தொண்டைக் குரலடைப்பு, கனைப்பு, கம்மல்
**उद्धव** वि அவிழ்க்கப்பட்ட **धः**, **धनं** கட்டல். மாட்டல். கயிற்றால் சுருக்குப் போட்டுக்கொள்ளல். தூக்கில்போடுதல்
**उद्बंधकः** पु (துணி வெளுக்குந் தொழிலை யுடைய) ஓர் மிச்ர [ஜாதி
**उद्बंधुकः** पु உயரத்தொங்க விடுபவன். தூக்கிடுபவன்.
**उद्बर्हित** वि பிடுங்கப்பட்ட
**उद्बल** वि பலம் மிகுந்த
**उद्बाष्प** वि கண்களில் நீர் ததும்புகிற

**उद्बाहु** वि உயர்த்த, நீட்டப்பட்டகைகளை, துதிக்கையுடைய
**उद्बिल** वि வளைக்கு வெளியே
**उद्बुद्ध** वि எழுப்ப, தூண்ட, ஞாபகப்படுத்தப்பட்ட. ஞாபகத்திற்கு வந்த. விரிந்த. மலர்ந்த. -**संस्कारः** எண்ணங்களின் திரட்சி. ஞாபகப்படுத்திக் கொள்ளல்
**उद्बोधक** वि ஞாபகப்படுத்துகிற. அவ் வஸ்து. வெளிப்படையாய்த் தோன்றுகிற **कः** ஸூரியன்
**उद्भङ्ग** न புணர்ச்சி விசேஷம்
**उद्भट** त्रि சிறந்த. கௌரவிக்கப்படுகிற. **टः** முறம். ரவி. ஆமை.
**उद्भवः** पु (भू) விஷ்ணு -**क्षेत्रं** ஜன்ம பூமி **भावः** பெருந்தன்மை
**उद्भावनं** न யோசனை. சொல்லல். கவனியாமை. அலக்ஷியம், [மறதி.
**उद्भावयितृ** वि உயர்த்துகிற. தூக்கிவிடுகிற. **अल**
**उद्भास्** । आ பிரகாசி. **णिच** வெளிச்சமுண்டாக்கு. அலங்கரி. உயர்த்து. முக்கியமாக்கு. பிரஸித்தப்படுத்து.
**उद्भासित, सिन् सुर** वि பிரகாசிக்கிற. திவ்வியமான
**उद्भिद्** 7 उ உடைத்துத்தள். வெடித்துவா. தோன்று. உண்டாகு **णिच** விருத்தி செய். வரி
**उद्भिद्** वि துளிர்க்கிற. உள்நுழைகிற. அழிக்கிற. வெளிவரச் செய்கிற **पु** முளை. செடி. ஊற்று. -**ज** (**जः**) செடி -**विद्या** ஒஷதி, ஸ்தாவர நூல்
**उद्भिद** वि முளைக்கிற. தழைக்கிற **दं** சமையலுக்குரிய ஓர்உப்பு
**उद्भिन्न** वि அரும்புவிட்ட. மலர்ந்த. உண்டுபண்ணப்பட்ட
**उद्भू** । प எழு. உண்டாகு. நேரிடு. ஏறு. உதவு, போதுமானதாயிரு. கலஹம்செய். அடங்காதிரு. **णिच्** பொதுஜனத்திற் கறவி. உபயோகி. ஏற்று.
**उद्भूत** वि உயர்ந்த. கால் தடுக்குகிற.தொடங்குகிற**अल**தோற்றமான **तिः** மேன்மை -**रूपं** பிரத்தியக்ஷ ரூபம்
**उद्भेदः, दनं** न ஊற்று. மயிர்ச்சிலிர்ப்பு. ராஜத்துரோகம்

उद्भ्रमः पु சுழலல். (கத்தி) சுழற்றல். திரிதல். மனவருத்தம். எழுதல். ஓர் சிவகணம். ஆச்சர்ய ரஸம்
उद्भ्रान्त वि பிரமித்த. பயந்த. तं கத்தி சுழற்றல்.तकं (காற்றில்) [எழும்பல்
उद्मन् न வெள்ளமிடுகிற
उद्यत वि (यं) (வில்லைப்போல்) சிக்ஷிக்க, வளைக்கப்பட்ட
उद्यतः पु (ஸங்கீதத்தில்) காலம், அத்தியாயம். நூற்பிரிவு
उद्यत् वि எழுகிற पु நக்ஷத்திரம் तिः உயற்சி. முயற்சி
उद्यम् । उ உயர்த்து. கொடு. தயாராகு. அடைய மிகவும் முயல். ஆள். சுடு, நிறுத்து. எழு. णिच् தூண்டு यंतृ वि
उद्यमः पु விடாமுயற்சி. தயார் -भंगः அதைரியம். உற்சாக பங்கம். -भृत् वि பாடுபடுகிற यमनं மேன்மை. यमिन् वि சுறுசுறுப்பான
उद्यम्य वि உயர எடுக்கத்தக்க
उद्या 2 प மேலேபோ. எறு. உண்டாகு. எழு. வெளிவா
उद्यानं, नः पु வெளிச் செல்லல். தோட்டம் நந்தவனம். அபிப்பிராயம். பிரயோஜனம் இந்தியாவிற்கு வடக்கே ஒரு தேசம் नकं சோலை.
उद्यापनं न முடிவிற்குக் கொண்டுவரல். முடித்தல். ஸமாப்தி
उद्यावः पु கலத்தல். இணைத்தல்.சேர்த்தல் [पित वि
उद्यासः पु பாடு. உழைப்பு. பரிச்ரமம். முயற்சி
उद्युज 7 उ தூண்டு. சுறுசுறுப்பாக்கு. விடாமுயற்சி செய். தயாரி [गिन् वि
उद्योगः पु உழைப்பு. வேலை. உத்தியோகம். விடாமுயற்சி
उद्रः पु நீர்ப்பூனை द्रिन् वि நீர்நிறைந்த, சுரக்கிற
उद्रंकः, गः पु ஹரிச்சந்திரனின் நகரம்
उद्रथः पु இருசு,கடையாணி· கோழி
उद्रिक्त वि (रिच्) தெளிவான.தோற்றமான.நிறைந்துகிடக்கிற
उद्रिच् क முந்து. மேம்படு. அதிகரி. பிரபலமாயிரு

उद्रुज वि அழிக்கிற.உடைக்கிற.இடித்து,பேர்த்துத்தள்ளுகிற
उद्रेकः पु (रिचू) ஸம்ருத்தி. ஆரம்பம் का (மஹாநிம்ப) செடி விசேஷம் -भंगः ஆரம்பத்திலேயே உற்சாக பங்கம் செய்தல் किन् वि
उद्बोधनं न எழுதல். வளரல்
उद्भूत वि சிறந்த. உலர்த்தப்பட்ட स्त्री உயற்சி. மேடு. மலை
उद्भू । पகொட்டு.வெளியனுப்பு.உயர்த்துवपनं தானம்தக்ஷிணை
उद्भ्रम् । प எதுக்கு. வாந்திசெய் अल वांत (யானை) மதம் நீங்கின. விழுந்துவிட்ட
उद्वयस् वि (காற்றைப்போல்) உணவைக் கீழே தள்ளுகிற
उद्वृत्त वि (वृत्) ஏராளமான. மீற்றப்பட்ட. அதிக் கிரமிக்கப் பட்ட तः மிச்சம். பிரபலம்.
उद्वर्तकः पु கணக்கிட முதலில் ஓர் தொகையை ஏற்படுத்திக் கொள்ளல்.
उद्वर्तनं न வளர்தல். செழிமை. கழுத்தைத் திருப்பித் திருப்பி பூட்டண்டை சப்திக்கச் செய்தல். உலோஹத்தைக் கம்பியாயிழுத்தல். உடம்பு வலியை யாற்றத்தைலம்; அதைத் தடவல்.துர்நடத்தை.உறைத்தல்.இழைத்தல்
उद्वर्धनं न அடக்கப்பட்ட, மனதிற்குள், தந்திரமான சிரிப்பு
उद्वस वि எதிலிருந்துதேன்கிரஹிக்கப்படுகிறதோ(தேனடை)
उद्वह् 1 प மண. உயர்த்து. தாங்கு. அனுபவி. உடைத்தாயிரு. ஒதுக்கு. எடுத்துச்செல். முடி णिच् மேலேபரப்பு
उद्वह वि (குடும்பம் போல்) நிலைக்க, நீடித்திருக்கச் செய்கிற. முக்கியமான. हः பிள்ளை.காற்றின் 7ல் 4வது போக்கு. உணவை மேலுக்குக் கொண்டு போகும் ஓர் தேகவாயு.அக்கினியின் 7ல் 1 நாக்கு.கலியாணம்=हनंசவாரி
ऊद्वादनं न உறுத்துச் சப்தித்தல்
उद्वान वि வாந்தி செய்த. नं அடுப்பு.

**उद्वापः पु (वपू)** க்ஷௌரம். நீர் மூலஞ் செய்தல்.
**उद्वासः, सनं न** நாட்டைவிட்டு அகற்றல். கொலை. வெளியெடுத்தல்
**उद्वास्य वि** யாகத்தில் பசுவதை ஸம்பந்தமான. உயர்த்தப் படவேண்டிய, வெளியெடுக்க, பிடுங்கப்படவேண்டிய
**उद्वाहन वि** கிளப்புவதான. தூக்குவதான **नं** இருசால் உழுதல். கவலை. துயரம். **नी** கயிறு. சோழி. பலகாறை
**उद्वाहिक वि** (மந்திரம்போல்) கலியாண ஸம்பந்தமான
**उद्वाहित वि** வேரோடு பிடுங்கப்பட்ட. மணந்த. **हिनू** மணத்தல். **नी** கயிறு.
**उद्विज् 6 उ** பாதிக்கப்பட்டிரு. கலக்க மடைந்திரு. பயந்திரு. அலுத்துப்போயிரு. அலட்டு = **णिच् उद्विग्न वि.**
**उद्वीक्ष् 1 आ** மேலே பார், ஆராய். ஆலோசி. **क्षणं** கண். பார்வை
**उद्वीज् 10 प** விசுறு. மேலே, நோக்கி வீசு ஊது. **जनं**
**उद्वृत 1 आ** எறு.குபீரென்று பறந்து செல். தள்ளாடு.பிரிந்து போ. வீங்கு. அதிகரி, கர்வப்படு **णिच्** அழி. சுழல். (கண்ணை) உருட்டு. தைலம் பூசு.
**उद्वृत्त वि** வழிகிற. செழிக்கிற. கர்வமுள்ள. வாந்தி செய்யப் பட்ட. மீற்றின. துராசாரமான. கலக்கமுள்ள.
**उद्वृह् 6 प** உயர்த்து. பிடுங்கு. நீர்மூலமாக்கு. **वहित वि**
**उद्वेग वि (उद्विज्)** விரைந்து செல்லுகிற. ஒரே நிதானமான, சாந்தமான. ஏறுகிற **गः** ஆச்சர்யம் **गं** பாக்குமரம்.
**उद्वे (गि) जिनू, जक वि** வருந்துகிற.பயமுறுத்துகிற. = **जयितृ वि**
**उद्वेजन वि** (பயமுறுத்தி) நடுங்கச் செய்கிற. மேலேபோகிற.
**उद्वेजनं न** துன்பப்படுத்தல். பிரிவாலேற்பட்ட துக்கம்.கவலை.
**उद्वेदि** உள்ளே மேடை, ஸிம்மாஸனத்தையுடைய
**उद्वेल वि** கரைபுரண்டு வழிகிற. வரம்பு கடக்கிற. அதிகமான
**उद्वेल्ल 1 प** அசை. குலுக்கு. சுருட்டு. **ल्लित** மேலுக்கெறிந்த

उद्वेष्टनं न சுற்றுதல். சூழல். ஆக்கிரமித்தல். வேலி. முதுகில்வலி
उद्वेष्टयति ना. प. திற. அவிழ் उद्वेष्टित वि
उधस् सं न பசுவின் மடி
उध्रस् 9 10. प சிறுகச் சிறுக பொருக்கு. தூக்கியெறி
उन्द् 7 प நனை. (நீர்) சுர, பாய். णिच् उन्न वि நனைந்த. இரக்கமுள்ள
उन्दरुः, दुरुः, रुः, दूरुः पु எலி. சுண்டெலி. பெருச்சாளி.
उध्मा = उद्ध्मा उध्य = उद्ध्य [कर्णी, णिका எலிச்செவிசெடி
उन्नम् 1 प எழு. अल தோன்று. மேலேதொங்கு. நிமிர்த்து
= णिच् உயர்த்து. பிரபலப்படுத்து त्र உயர்ந்த.
उन्नत वि (तं) உயர்ந்த. கௌரவம் வாய்ந்த. பருத்த. முன்வந்த. கொழுத்த तः மலைப்பாம்பு तं மேலெழுச்சி, ஏற்றம் -आनत மேடு பள்ளமான -चरण பின்னங்கால் மேல் நிற்கிற -शिरस् தலைநிமிர்ந்திருக்கிற. கர்வமுள்ள
उन्नतिः स्त्री உயற்சி. மேன்மை கருடனின் மனைவி-ईशः கருடன்
उन्नद्ध वि கட்டப்பட்ட, படாத. உப்புகிற. ஸந்தோஷம் பொங்கின
उन्नमित वि நீட்ட, வளர்த்தப்பட்ட, சிறப்பாய் விளங்குகிற
उन्न(न्ना)यः पु போலி. ஒப்பு. ஊகை. உயர்த்தல் = उन्नामः
उन्नयनं न திரவ பதார்த்தமுள்ள பாண்டம். ஆராய்ச்சி
उन्नह् 4 प மேலே கட்டு, சுற்று. பிடுங்கு. வெளிவா, தோன்று
उन्नादः पु இரைதல். கர்ஜனை. உங்காரம். கீச்சிடல் (பக்ஷி)
उन्नाभ वि தொப்புள் முன்வந்துள்ள भः ஓர் ஸூர்ய வம்சத்தரசன்
उन्नायक वि உயர்த்துகிற. ஊஹைற, தீர்மான ஹேதுவான
उन्नाहः पु பிதுக்கம். முன், உயர வந்திருப்பது. ஈ்புளித்தகஞ்சி
उन्निद्र वि தூக்கமில்லாத. இமை கொட்டாத. மலர்ந்த. விரிந்த
उन्नी 1 प மேலுக்கடைவி. உயர்த்து (आ) மீட்டிவை, ரக்ஷி (நீர்) தூக்கு. பிழிந்து, காங்கெடு. நிமிர்த்து, சரிப்

படுத்து. ஒதுக்கு. ஊகி. நிரப்பு. (பாட்டில்) ஒதுக்கு

**उन्नेतृ** वि (नी) ஊகிக்கச் செய்கிற.पुயாக 16ல் 1ரித்விக்ர்அவன்

**उन्मज्ज्** (मस्ज्) 6 प மேலே மித. நீரிலிருந்துவெளிப்படு[வேலே

**उन्मज्जकः** पु கழுத்து வரையில் நீரிலிருந்து தவம் செய்பவன்

**उन्मज्जनं** न நீரிலிருந்து வெளிவரல் **नः** ஓர் சிவகிங்கரன்(அனு)

**उन्मत्त** वि (मद्) குடித்த, வெறி, பைத்தியம் பிடித்த கர்வமுள்ள. மூர்க்கமான. பேய் பிடித்துக்கொண்ட **त्तः** ஊமத்தை (मुचकुन्द) விருக்ஷ விசேஷம் **-कीर्तिः, वेशः** சிவன் **-गंग**கங்கை கர்ஜித்து ப்ரவஹிக்கும்ஓர் ப்ரதேசம் **दर्शन, रूप** பார்வைக்குப் பைத்தியம்போலுருவமுள்ள **-प्रलपित** குடிவெறியில் பிதற்றப்பட்ட **तं** பைத்தியத்தின் வாக்கு **लिंगिन्** பைத்தியம் போற்பாசாங்கு செய்கிற

**उन्म(मं)थ्** 1 9 प குலுக்கு, அலட்டு.அடி.கொல் கிழி. உரி.கல

**उन्मंथः** पु கடைதல். வெளிக்காதின்நோய். கொலை குழப்பம்

**उन्मंथक** वि தாடிக்கிற. **कः** காதின் எரிச்சலோடு வீக்கம்

**उन्मंथनं** न தடியாலடித்தல் உடம்பில் தைத்த பாணத்தை சலாகையினாற் கிளரி எடுத்தல். இதற்கு வேண்டிய சலாகை

**उन्मद्** 4 प பைத்தியம் பிடித்திரு. **णिच्** வெறி பிடிக்கச்செய்

**उन्मदः** पु பைத்தியம். வெறி.பரவசம். பரமானந்தம்.உக்கிரம்

**उन्मदन** वि காமவெறி கொண்ட

**उन्मदिष्णु** वि(யானைபோல்)மதம்பிடித்த.குடித்த.வெறிபிடித்த

**उन्मनस्**(क वि மனக்கலக்கமுள்ள. பிரிந்த பொருள், நண்பனுக்காக வருந்துகிற. கவலை,பதைப்புள்ள. கர்வமுள்ள

**उन्मनायते** ना. आ மனக் கலக்கம், வருத்தத்தோடிரு

**उन्मनीकृ** கலக்கமுண்டாக்கு. கலவரப்படுத்து

**उन्मयूख** वि பிரகாசிக்கிற. ஜ்வலிக்கிற

**उन्मर्दनं** न நசுக்கல். பிசைதல். தேய்த்தல். தேய்க்க உபயோ

கப்படும் ஓர் வாஸனை ரஸம். காற்றைச் சுத்தி செய்தல்
उन्मा स्त्री அளவு
उन्माथः पु வேதனை. வலை. பொறி. கண்ணி (போன்) थिन् वि
उन्मद वि பைத்தியமான. மட்டுக்கு மிஞ்சின. வீணக்குகிற
उन्मादः पु சித்தப்பிரமை. காமவெறி. மலர்தல். दकःஉமத்தை
उन्मादन वि வெறியுண்டுபண்ணுகிற नः ஓர் மன்மத பாணம்
उन्मादयितृक वि ,, பரவசம், ஆனந்திக்கச் செய்கிற दिन्
उन्मादुक वि குடியில் ப்ரியமுள்ள
उन्मानं न மேலுக்காய் நிறுத்தல் அளத்தல். விலை எடை
நிறைக்கணக்—— குண்டு முதலியன
उन्मा.... மகட்ட வழியிற் போகிற र्गः வழிதப்பல் अल தூர்
நடத்தை. र्ग வழிதப்பி -गामिन् , वर्तिन् वि பிசகுகிற
उन्मार्गिन् वि (நீரைப்போல்) போக வழியைத் தேடுகிற. வழி
उन्मित वि அளக்கப்பட்ட मितिः விலை. அளவு [தப்புகிற
उन्मिश्र वि கலக்கப்பட்ட. நானநிறமாக்கப்பட்ட
उन्मिष् 6 प கண்களைத்திற. விழி. மலர். உதி. தோன்று. எழு.
உண்டாகு. பிரகாசி मिषितं பார்வை. திறத்தல்.
उन्मष वि திறந்த. மலர்ந்த. पः கண்களைத் திறத்தல்
उन्मील् 1 प (கண்களை) திற. எழுப்பப்பட்டிரு. மலர். விரி.
கூட்டமாய்க் கூடு. சிதறியிரு. தோன்று. வெளிப்படை
யாகு. வெடித்துவா. णिच् திற. காட்டு [பூசல்.
उन्मीलः, लनं न மடிப்பைப் பிரித்தல். அவிழ்த்தல். தொடல்.
उन्मीलितं न அலங்காரத்தால் ஒன்றை வெளிப்படையாக
ஸூசித்தல்
उन्मुख वि (खी स्त्री) முகத்தை உயர்த்துகிற. மேலே பார்க்கிற.
தயாராயிருக்கிற. ஆவலான. எதிர்பார்த்துக் கொண்
டிருக்கிற. சப்திக்கிற. பேசுகிற
उन्मुखर वि உரத்துச் சப்திக்கிற. சந்தடியான

**उन्मुच्** 6 उ தளர்த்து. பிடுங்கு. விடுதலைசெய். உயர்த்து (குரலை). (பாணம்) எய். **णिच्** ஆபத்தினின்றும் ரக்ஷி.
**उन्मुद्र** वि மலர்ந்த. முத்திரையை யுடைத்த
**उन्मूलनं** न வேரோடு பிடுங்கல். நிர்மூலம் செய்தல். அழித்தல்
**उन्मृज्** 2 प துடைத்துத்தள். கிறு. அழி. போக்கடி. பெறு **मृष्ट**
**उन्मृजावमृजा** स्त्री மேலுக்குங் கீழுக்கும் ஸதா தேய்த்துக் கொண்டிருத்தல்
**उन्मेदा** स्त्री சதையின் பருமன். கொழுப்பு
**उन्मेय** वि நிறுக்கத் தகுந்த. நிறுக்கப்பட்ட **यं** எடை
**उन्मेषं, षः** पु இமைகொட்டல். ஒளி. **षिन्** பறக்கிற. ஜ்வலிக்கிற

उप सामीप्यसामर्थ्यव्याप्त्याचार्यकृतिमृतिदोषदानक्रियावीप्सारंभाध्ययनपूजनेषु ।

**उप** अ மேல் சுலோகப்படி பெயர், வினைச் சொற்களுக்கு முன் வந்து ஸமீபம் (**उपवासं**), சக்தி, ஸாமர்த்தியம் (**उपकारः**), பரவல் (**उपकीर्णं**), போதனை (**उपदेशः**), சாவு (**उपरत**), குறைவு (**उपघातः**), தானம் (**उपनयति, हरति**), தொழில், முயற்சி (**उप त्वानेष्ये**), தொடக்கம் (**उपक्रमः**), படிப்பு (**उपाध्यायः**) பூஜை (**उपस्थानं, चारः**), நோக்கி, குறித்து, அருகே, கூட, கீழே, தோற்றம், ஸம்பந்தம் இட கால தொகை அளவின் ஸமீபம், அமுக்கியம் (**उपपुराणं**) இளமை (**उपेन्द्रः**) சற்றேறக்குறைய, வெகுவாய் (**उपत्रिंशाः**) அதிகப்படி, மேலே, இடத்தில், உள்ளே, ஒன்றின்படி, ஒரே காலத்தில், மேலும், வரையில் ஸூசகம். இவ்வர்த்தங்களைச் சொல்லகீழே சுலோகம். நோய். நகை. கட்டளை. கண்டிப்பு. கொலை. இச்சை. தோற்றம்.

उपासन्नेऽधिके हीने सादृश्य प्रतियत्नयोः ।

तद्योगव्याप्तिपूजासु शक्तावारम्भदानयोः ॥
दक्षिणाचार्यकरण दोषाख्यानात्ययेषु च ।

उपकक्ष वि தோள் வரையில் எட்டுகிற.
उपकंठ वि ஸமீபமான ठं கிராமத்தினெல்லே. குதிரையின் நடை விசேஷம் अ கழுத்தின் மேல். தொண்டை
उपकथा स्त्री கிளைக் கதை [யண்டை
उपकनिष्ठिका स्त्री கடைசி விரலுக்கு முந்தினதான மோதிர விரல் [யினருகே
उपकन्या स्त्री ஒருவனின் பெண்ணின் தோழி पुं ஸ்திரீ யறை
उपकरणं न உதவி. கருவி. ஸாதனம் உபாயம். தந்திரம். யந்திரம். ஜீவனேபாயம். பிராணுதாரம். கவனம் செய்தல். கற்பனே. ராஜ சின்னம், விருது, பரிவாரம்
उपकर्णं न காதினருகே, உள்ளே णं கேட்டல் कर्णिका வதந்தி
उपकर्तृ वि உபகாரி பிரயோஜனம், நட்புள்ள.
उपकल्पित वि கௌணமான. பதிலாய் வந்த
उपकारः पु உதவி. ஸஹாயம். री ஆங்காங்கு பந்தல்களினண்டை தோரணம், பூக்களாலலங்காரம்.
उपकारी स्त्री ராஜ கிருஹம்.மடம். வர்த்தகர் தங்கும் ஸத்திரம்
उपकारिक त्रि உதவுகிற का ரக்ஷிப்பவள். மாளிகை. கூடாரம். ஓரடை.
उपकार्य वि உதவிக்குப் பாத்திரமான र्या மாளிகை விடுதிவீடு
उपकिरणं न (कृ) புதைத்தல். வியாப்தி. கிரணங்களினருகே
उपकीचकः पु கீசகனின் பந்து, ஆள். கீசகனின் கீழ் விராட
उपकुंचिः, चिका स्त्री சிற்றேலக்கொடி. கருஞ்சீரகம் [சேனே.
उपकुंभ वि அருகே. தனியாயிருக்கிற भ अ குடத்தினருகே
उपकुर्वाण त्रि உபகரிக்கிற. णः கிருஹஸ்தனைப் போகும் பிரம்
उपकुल्या स्त्री திப்பிலி. கால்வாய். அகழ் [மசாரி.

**उपकुशः पु** பல்லீர்க்கட்டு. பல்லாணை

**उपकूजितं न** கூவி கோஷத்தால் நிரப்பல்

**उपकूपं, पे अ** கிணற்றினருகே -**जलाशयः** கிணற்றினருகே மாடுகள் நீர் குடிக்கக் கட்டப்பட்டிருக்குந் தொட்டி

**उपकूल अ** கரையின் மேல்

**उपकृ 8 उ** அருகேவை, கொண்டுவா. உதவு. ஆதரி. உபசரி. தொடங்கு. அடக்கு. வெல். விட்டதைச் சேர் வேண்டியதைக் கொடு. அலங்கரி. மெருகிடு. தயாரி. கவனித்துக் கொள், ரக்ஷி. பிரயாசைப்படு. உருக்குலே. கெடுத்து விடு. கற்பழி. ஒன்று கூட்டு. கூட்டம்போடு **कृतं** ஸஹாயம் **कृतिः, क्रिया**

**उपकॄ 6 प** இறை. கீழே,மேலேதெளி.பேர்த்தெடு.அடி உதை

**उपक्लृप् 1 आ** தகுந்திரு.தயாரிக்கப்பட்டிரு.பயனுய்வா.அடை, வி. ஓர் உருவமாகு. **णिच्** ஏற்படுத்து. சபதம் செய். வெளிக்காட்டு. அறிவி. போய்க் கொண்டுவா. பொய்யுருவங்கொள்

**उपक्रम् 1 आ 4 प** அணுகு.செய். தொடங்கு.மேல்விழு.அதிகமாய் மோகி. தாண்டிச் செல். (வைத்தியம்) கவனி. சிகித்ஸைசெய்

**उपक्रंतृ पु** தொடங்குபவன். ஏற்றுக்கொள்ளுபவன்.

**उपक्रमः पु** ஆரம்பம். துணிவு. அருந்தொழில். உபாயம், பரிஹாரம் ஒருவனதுபக்தி,விச்வாஸத்தைப்பரீக்ஷித்துப் பார்த்துக்கொள்ளல். அத்யயன யோக்யதை ஸம்பாதிக்குமுன் செய்து கொள்ளும் சடங்குரூப ஸம்ஸ்காரம். பராக்கிரமம். ஓடுதல்.

**उपक्रमणिका स्त्री** முகவுரை. **णीयं** ஓர்வைத்திய நூல்

**उपक्रमणीय, क्रमितव्य, क्रम्य वि** தொடங்க, குணப்படுத்தப்பட வேண்டிய **क्रमितृ वि** ஆரம்பிக்கிற. ஆரம்பகன்

उपक्रीडा स्त्री விளையாடயிடம் [கழுதை

उपक्रोशः, शनं न நிந்தை அவமானம் क्रोष्टृ वि पु (கனைக்குங்)

उपक(का)णं न விஞ்ஞாதம்

उपक्लसः पु ஒரு விதப்புழு

उपक्षय वि குறைந்த यः நஷ்டம். சிலவு यं अ வீட்டண்டை

उपक्षि 1 प क க்ஷீணிக்கச்செய். களைத்திரு. மறைந்துபோ 2 6. प கிட்டேவசி

उपक्षित् वि அருகே வஸிக்கிற. பற்றி, ஒட்டிக்கொண்டிருக்கிற

ऊपक्षिप् 6 प நோக்கி எறி. பழிபோடு. ஸூசி. விட்டெறி.

उपक्षीण वि க்ஷயித்த. குறைத்த. சக்தியில்லாத [ஆரம்பி

उपक्षेतृ वि அணுகுகிறவன். அருகே வஸிக்கிறவன். பற்றுள்ள

उपक्षेपः पु (क्षिप्) செய்யுள், அலங்காரநடை. [பெறுகிற

उपग त्रि (स. अ தில்) நெருங்குகிற தொடருகிற. சேர்க்கிற.

उपगणः पु சிறு இனம், கூட்டம், சேனை

उपगत वि அருகாமையான. கொடுத்துதவப்பட்ட. ஆன. இறந்த. உணருகிற, அனுபவிக்கிற तं அடைந்ததனம். வரவு.

उपगतिः स्त्री அறிமுகம், பரிசயம். வரும்படி. ஸம்பாத்தியம்

उपगम् 1 प அணுகு. அடை. எட்டு अल உட்செல். ஆள்படு, அடை, அனுபவி. ஓர் நிலையையடை. (புணர) ஒருத்தியை நெருங்கு. மேல்விழு. நேரிடு. தானாய்வா. ஆரம்பி. பங்குகொள். இணங்கு, ஒப்பு. णिच्

उपगंतृ वि அறிகிற. பெறுகிற. அணுகுகிற=उपगामिन्

उपगमः,मनं ஸங்கம். புணர்ச்சி. வாக்களிப்பு. ஓர்உயர்ந்ததொகை

उपगाः पु யாகத்தில்வேத மோதும்புரோஹிதன்स्त्रीபாட்டின் அனுஸரணை गाय பாடத்தக்க [ஆபவன்

उपगातृ त्रि அருகே பாடுகிற पु உத்காதாவோடுசேர்ந்துசொல்

उपगिरि, रं अ மலையருகே रिः வடக்கேமலையருகேஓர்ப்ரதேசம்

उपगीत वि கவிகளால் பாடப்பட்ட. பாடத்தொடங்குகிற

**उपगीतिः स्त्री** ஓர் ஆர்யாவிருத்த விசேஷம்
**उपगु अ** பசுவினருகே
**उपगुरु अ** குருவினருகே **रुः** உதவி உபாத்தியாயர்
**उपगुह् 1 उ** ஆலிங்கனம் செய். மறை. மூடு. சூழ். சுற்றிக்கட்டு
**उपगूढ वि** தாங்கின. அமுக்கப்பட்ட **ढं** ஆலிங்கனம்.
**उपगूहनं न** ஆச்சரியம் **गोह्य** கைப்பற்றத்தகுந்த **ह्य**'' அசுத்தத்தால் மறைக்கப்படவேண்டியதான ஒரு அக்கினி.
**उपगै 1 प** ஒருவனைக்குறித்துப்பாடு, புகழ் சேர்ந்துப்பாடு. ஒருவனுக்காகப்பாடு.
**उपग्रंथः पु** பிரதான கிரந்தத்தைப் படிக்க உதவியாகும் நூல்
**उपग्रह् 9 उ** கீழே பிடித்துக்கொள். பின்னிருந்து கைப்பற்று. நேர்படு, அடை. கெலி. வெல். வேண்டியதைக்கொடு. சமாதானப்படுத்து. யோசனையிலிரு தீர்மானி அங்கீகரி
**उपग्रहः पु** ஆக்கிரமித்தல். தோல்வி. பங்கம். சிறை. சிறையிலிருப்பவன். அதிகப்படியான சேர்க்கை தயவு. உபயோகம். ஸர்வத்தையுங் கொடுத்து ஸமாதானமடைதல். தர்ப்பக்கட்டு, குவியல். தாதுவின் (கர்மணி, கர்த்தரி) வாச்யம். கிரஹசலனத்தின் ஹேதுபூதம். ராஹு, கேது, வால் நக்ஷத்திரம் போன்ற சிறுகிரஹம்
**उपग्रहणं न** கைது செய்தல். விருத்திக்குக் கொண்டுவரல். (அதிகாரம் பெற்றபின்) வேதமோதல்
**उपग्राहः पु** பஹுமானம். ஸம்மானஞ் செய்தல்.
**उपग्राह्य वि** வேலையினின்றும் நீக்காது நிறுத்திவைத்திருக்கப்படவேண்டிய **ह्यः** நைவேத்தியம். காணிக்கை
**उपघातः पु(हन् )** அடி உதை. ஆபத்து. அழிவு. (ஹிம்ஸிக்க) ஸ்பர்சம். அக்கிரமமாய்ப் பலவந்தித்தல், தாக்கல். நோய். பாவம். **तक तिन् वि**
**उपघुष् 1 10 प.** சப்தத்தால் நிரப்பு. எதிரொலிக்கச் செய்

**उपघोषणं** न பஹிரங்கமான அறிவிப்பு. பிரசுரம் செய்தல்

**उपघ्नः** पु அத்யந்த ஆதரவு. சரணம், ரக்ஷணம். தாங்கப்படுவது. கொடிக்காதாரமான கொம்பு

**उपचक्रः** पु சக்கிரவாகப்பக்ஷி பேதம்

**उपचक्षुस्** न மூக்குக்கண்ணாடி

**उपचयः** पु (चि) அதிகப்படியான சேர்க்கை. குவியல். அபி) விருத்தி. லக்ன 3, 6, 10, 11 வது வீடுகள். **-भवनं** தண்டகா விருத்த விசேஷம்

**उपचर्** 1प உபசரி. கௌரவி. பூஜி. நடந்துகொள் (நோயாளியை) கவனி. நெருங்கு. क அலங்காரமாய்ச்சொல்லப்பட்டிரு

**उपचरः** पु குணப்படுத்தல் **-उपचरणं** அணுகல்

**उपचर्म**, र्मं अ தோல்மேல். தோலண்டை

**उपचर्या** स्त्री உபசரணை. குணப்படுத்தல்

**उपचायिन्** वि அபிவிருத்தியடைகிற

**उपचाय्यः** पु அக்கினிகுண்டம். ஒருவித அக்கினி

**उपचारः** पु உபசரணை. விநயம். வழக்கம் போன்றநமஸ்காரம். அபிவாதனம். வெளியாசாரம். சிகித்ஸை. ஆசாரம். அனுஷ்டானம். சீலம். மரியாதைக்கிரமம், உபாயம். பூஜாத்திரவியம், (பூ, சாம்பிராணி) நடத்தை, நடவடிக்கை. சடங்கு. பிரயோஜனம். வியங்கியார்த்தம். லஞ்சம். வியாஜம். பாசாங்கு. பிரார்த்தனை விஸர்க்க ஸ்தானத்தில் வரும் **सू, ष**. தோற்றத்திலிருந்துண்டாகும் ஒன்றின் ஜாடை, சாயல். கருடன். வஸந்த காலம்

**उपचार्य**. पु மருந்துண்டுவரல் **र्यं** குணப்படுத்தல்

**उपचि** 5 उ ஒன்றுசேர். அதிகரி. பலப்படுத்து. ஒன்றால் மேலேபூடு, பூசு. செழி. மேன்மைப்படு **चितिः**

**उपचित** वि ஏராளமான. விசேஷமாய்க் கொடுக்க, கொளுத்த, பூசப்பட்ட. **चेय** वि குவிக்கத்தக்க

**उपचित्रा स्त्री** எலியாலுச்செடி ஸ்வாதி
**उपचूलनं न** சுடவைத்தல்
**उपच्छदः पु** மூடி. உறை. [கொடு.
**उपच्छंद् 10 प** ஏய் சாந்தப்படுத்து. வேண்டு. அழை. தூண்டு.
**उपच्यवः पु** அறைக்குட் செல்லல். உராய்தல் (புணர்ச்சியில்)
**उपजगती स्त्री** 3 பாதங்கள் 12 அக்ஷரங்களுள்ள ஓர் திருஷ்டுப் சந்தஸ்
**उपज वि** அதிகப்படுத்தப் பட்ட. அதிகப்படியாய் உண்டு பண்ணப்பட்ட
**उपजन् 4 आ** பிறந்திரு. உண்டாகு. தோற்றமாகு நேரிடு. ஆகு. மறுபடியும் பிறந்திரு. **णिच्** உண்டாக்கு.
**उपजनः पु** அதிகப்படி. அனுபந்தம் உற்பத்தி. பதங்களுண்டாவதில் அதிகப்படியான எழுத்தைச் சேர்த்தல். சேர்க்கப்பட்ட வெழுத்து. **नं** உடல்.
**उपजप् 1 प** காதிற்குள் ரஹஸ்யமாய்ச் சொல். அப்படிச் சொல்லி வசீகரி. ராஜத்துரோஹக் கலஹம் செய். குரும்பு செய்.
**उपजप्य वि** காதிலோதிக் கலஹம் செய்யப்படவேண்டிய
**उपजरस् अ** கிழ வயதில். கிழத்தன சார்பாக
**उपजल्प् 1 प** ஸம்பாஷி. தெளிவின்றிக் கூவு. புத்தி சொல்
**उपजल्पनं, जल्पितं न** பேச்சு. **जल्पिन्** புத்தி சொல்லுகிற
**उपजा स्त्री** தூரத்திய ஸந்ததி.
**उपजातिः स्त्री** ஓர் கலப்பு விருத்த விசேஷம்
**उपजान्वर्त्निन वि** முழங்கால் வரையுந் தொங்குங்கையுள்ள
**उपजापः पु** சத்துருவின் தோழர்களோடு கூடிக்கலஹம் செய்தல். ராஜத்துரோஹம். பிரிவு **जापक वि**
**उपजिह्वा, ह्विका स्त्री** உண்ணாக்கு. அடி நாக்கு. வீக்கம். செல். கொள்ளிக் கோட்டானெறும்பு

उपजीक वि ஒன்றால் பிழைத்திருக்கிற कः ஜல தேவதை
उपजीव् 1 प ஒன்றால் பிழை. நம்பியிரு. ஊழியம் செய். உபயோகப்படுத்து. எழுத விஷயம் சேகரி. அப்பியஸி.
ऊपजीवकः, विन् पु ஆள். कं தொழில். பிழைப்பு
उपजीवनं, जाविका स्त्री ஜீவனம். பிழைப்பு. பிழைக்க ஸாதனம்
उपजीव्य वि பிழைப்பைத் தருகிற. ஆதரிக்கிற. எழுத விஷயங்களைக் கொடுக்கிற, व्यः போஷகன். சரக்குக்களைச் சேகரிக்க வழி, மூலம். व्यं பிழைக்கும் உபாயம். காரணம்.
उपजुष्ट वि மரியாதையாய் வரவேற்கப்பட்ட. அண்டின.
उपजोषः, षणं न பற்று. அனுபவித்தல். அண்டல் अं இஷ்டப்படி. மௌனமாய்
उपज्ञा 9 आ நிச்சயி. அறிந்துகொள். புதிதாய்க் கண்டுபிடி.
उपज्ञा स्त्री சொல்லி, படிக்காமல் இயல்பான தனக்காக உண்டான அறிவு. நூதனமாய் ஒன்றைச்செய்யத்தொடங்கல்
उपज्मत्न् वि மேலே அடி வைக்கிற. [கல்
उपढौक् णिच् மரியாதையாய் நிவேதனம் கொடு. பூர்த்தி செய்
उपढौकनं न காணிக்கை. வெகுமதி
उपतटः पु ஓரம். விளம்பு. टं अ எல்லையண்டை
उपतप् 1 प கொதிப்பி. ஜ்வரங்கொள். பாதி நோவடை. क தவம்புரி. णिच् தகி துன்புறுத்து. அமுக்கு. தவத்தால் வாட்டு
उपतपत् पु உள் சூடு. நோய் उपतपन, तप्तृ, तप्त, तापक, तापिन् वि
उपतप्तृ पु ஜ்வரக் கொதிப்பு. நோய். உஷ்ணஹேது
उपतापः உஷ்ணம். துயரம். கஷ்டம். நோய். அவசரம்
उपतारक वि (நீர்போல்) வழிகிற
उपतिका स्त्री கொள்ளிக் கோட்டானென்னும் எறும்பு
उपतिष्यं न ஆயில்யம். புனர்வஸு

उपतृण्यः पु (புல்லில் மறைந்திருக்கும்) பாம்பு
उपत्य वि கீழே, அடியில் பொருத்தப்பட்டிருக்கிற
उपत्यका स्त्री மலையடிவாரம். தாழ்வறை
उपदंश् 1 प (தொடுசுவை, ருசிக்காக) ஒன்றைக்கடி, உண்
उपदंशः पु தாகம், உணவிலிச்சையையுண்டு பண்ணும் காரவஸ்து. கடித்தல். தீண்டல். கொட்டல். சுகரோகம். மேகவியாதி. கிரந்திப்புண். முருங்கை. பெருங்கரணை
उपदर्शकः पु வழிகாட்டுபவன், காட்டி. வாயிற்காப்போன். சாக்ஷி
उपदर्शन न வியாக்கியானம்.
उपदश वि சுமார் பத்தான.
उपदस् 4 प குறைவுபடு. உலர்த்து णिच् அணை. அவி.
उपदा 3 उ மேற்கொண்டு அதிகப்படியாய்க்கொடு. கூட்டு. 1आ அங்கீகரி. எற்றுக்கொள். நிமிர்த்து. உயர்த்து.
उपदा त्रि வெகுமதியளிக்கிற दा காணிக்கை. லஞ்சம்.
उपदानं, नकं न ஒருவனின் தயவை ஸம்பாதிக்கலஞ்சம் போற் கொடுக்கப்படும் வெகுமானம். நைவேத்தியம். தானம். வெகுமதி
उपदानवी स्त्री விருஷபர்வாஸுரனின் பெண்ணாகிய துஷ்யந்தனின் தாயார்
उपदासुक वि தேவையைக் கொடுக்கிற
उपदिग्ध त्रि பூசப்பட்ட உரையிடப்பட்ட. மேலேபுள்ளிகளுள்ள
उपदिश् 6 उ உபதேசி. புத்திசொல். போதி. கற்பி. விவரி. குறித்துப்பேசு. பிரஸ்தாபி. அறிவி. விதியாய் ஏற்படுத்து பெயரிடு. ஆள். விதி. கூப்பிடு. ஒன்றிர்க்குப் பொருத்தமான இடத்தை ஏற்படுத்து.
उपदिश्,दिशा स्त्री மூலைதிக்கு दिश्य அதிலிருக்கிற.
उपदिष्ट त्रि சாக்காய், காரணமாய்ச் சொல்லப்பட்ட. தீக்ஷை
उपदी स्त्री ஒருவகைப் பூண்டு [பெற்ற

**उपद्रीका** **स्त्री** ஒருவித எறும்பு
**उपदीक्षिन्** **वि** சடங்கில், தீக்ஷாகாரியத்தில் தலையிட்டுக்கொள்ளு கிற. நெருங்கிய பந்து.
**उपदृश** 1 **प** பார்.க தோற்றமாகு **णिच्** காட்டு. அறிமுகமாக்கு பொய்க்கோலங் கொள். எய். விவரி
**उपदृश** **वि** (ஸூர்யசந்திரர்களைப்போல்) ஸாக்ஷிபூதமாயிருக் கிற. **स्त्री** காக்ஷி. தோற்றம். தரிசனம். **दृष्टिः** [தேவதை
**उपदेवः**, **देवता** **स्त्री** யக்ஷ, கந்தர்வாப்ஸரஸைப்போல் அமுக்கிய
**उपदेशः** **पु**(**दिश्**) மந்திரோபதேசம். தீக்ஷை (அனு) மருந்தின் முறை **अर्थवाक्यं**, **वचनं** நீதிக்கதைஉவமை **-सहस्त्री** சங்கர ரின் ஓர் வேதாந்த நூல்
**उपदेशक** **वि** போதிக்கிற **कः** குரு. வழிகாட்டி.
**उपदेशता** **स्त्री** விதியாயிருக்குநிலை போதனை. ஸூத்திரம்.
**उपदेशना** **स्त्री** செய்தி. ஸித்தாந்தம். கோட்பாடு. "
**उपदेशिन्** **वि** உபதேசிக்கிற (**ष्टा**) **पु** ஆசாரியன். குரு
**उपदेष्टव्य** **वि** உபதேசிக்கத்தகுந்த, யோக்கியமான
**उपदेह**. **पु** தேய்க்குந்தைலம். மூடி (அஸ்வஸ்தமானதேகபாகங் களில் வளரும் போன்ற) அமுக்கிய உடல்.
**उपदेहिका** **स्त्री** ஒருவகைப் புழு
**उपद्रवः** **पु** (**द्रु**) ஆபத்து. கெடுதி பலாத்காரம். துர்மார்க்கம். ராஜாவினால், பஞ்சம் போல் தேசாபத்து. ராஜ்யக்கிளர்ச்சி. வியாதியின் அறிகுறி. அதிகப்படியானவியாதி
**उपद्रविन्** **वि** கலஹமுள்ள **पु** ராஜனை எதிர்க்கிறவன், கொடுங் கோலன்
**उपद्रष्ट** **वि** பார்க்கிற. **पु** மேற் பார்வையிடுகிறவன் ஸாக்ஷி
**उपद्रु** 1 **प** நோக்கியோடு மேல் விழு தகை (**द्रवः**, **द्रविन्**)
**उपद्रुत** **वि** ஆபத்துக்களையடைந்த கிரஹணம் பிடித்த அமங் கல ஸூசகமான **उदग्राहवत्** என்கிற ஸந்தியின் பரி

**उपधर्मः** पु கௌண பக்ஷவிதி. பாஷண்டி. [பாஷை
**उपधा 3 उ** மேலே, கீழே, உள்ளே, அருகே வை இடு. (வண்டியிற்) பூட்டு. விளைவி. சுமத்து (வரி),ஒப்படை. விதியாக்கு மேலே படு(தலையணைபோல்) பொருத்து. உபயோகி. அதிகப்படியாய்ச் சேர். அறிவி. கொடு. நிலை நிறுத்து, ஸ்தாபி
**उपधा स्त्री** பொய்க்கையெழுத்து போடல். சூது. மோசம். சோதனை. உபாயம். கடைசிக்கு முன்னெழுத்து -**भृतः** அயோக்கியனிதக்காகக் குற்றஞ் சாட்டப்பட்டவேலைக் காரன் -**शुचि** யோக்கியனென்று நிரூபணமான
**उपधातुः पु** தாம்ச்சியான மயில் துத்தம் போன்ற 7ல் 1 லோஹம் (அனு). எச்சில் போல் தேஹத்தினின்றும் வடிவது (6. அனு)
**उपधान वि** யாகக் கற்களை வைக்க (மந்திரமாய்) உபயோகப் படுகிற **नं** தலையணை. திண்டு. விசேஷம். அன்பு. விரு தம். சிறப்பு. விஷம்.
**उपधानीय वि** அருகே வைக்கப்படவேண்டிய **यं** தலையணை
**उपधायिन् वि** தலையணையாய் உபயோகிக்கிற
**उपधारणं न** (ध्र) ஆலோசனை பிடுங்கல் (ஊக்கால்)
**उपधाव् 1 उ** நோக்கி, விரைந்தோடு. அண்டு ஓடு. சருக்கு
**उपधावनः पु** தொடருபவன் **नं** தொடரல். சிந்தித்தல்
**उपधिः पु** அயோக்கியத்தனம். உண்மையை ஒளித்தல். அநியாயத்தில் தூண்டல், பயமுறுத்தல். சக்கிரம். வண்டிக்குடம். வியாஜம். கபடம்.
**उपधिकः पु** வஞ்சகன். பயமுறுத்தி ஸாதித்துக்கொள்ளுபவன்
**उपधूपित वि** தூபம் போட்ட. சாகப் போகிற. பாதையனுப விக்கிற **तं** சாவு **ता** ஸூர்யாஸ்தமனங் கிட்டின மேற் றிசை

**उपधृ** 1. 10 प தாங்கு. சும. மதி. அறி. அனுபவி. ஆலோசி
**उपधृतिः स्त्री** கிரணம். தரித்தல்.
**उपध्मा स्त्री** ஊதல். உபத்மானீய சப்த ஹேதுவான குரல்
**उपध्मानः** पु உதடு नं மேலே ஊதல், மூச்சுவிடல்
**उपध्मानिन्** वि மேலே ஊதுகிற, விசுறுகிற
**उपध्मानीयः** पु प, फ களுக்கு முன் வரும் விஸர்க்கம்
**उपध्वस्त** वि அழிக்க, கலக்கப்பட்ட.
**उपनक्षत्रं** न அமுக்கிய நக்ஷத்திரம் (அவை 729)
**उपनखं** न நகங்களின் நோய். உகிற் சுற்று
**उपनगरं** न நகரத்தினருகே யுள்ள பேட்டை
**उपनत** वि (न) அடைந்த. உண்டு பண்ணப்பட்ட. வணங்கச் செய்த, அடக்கின. சார்ந்திருக்கிற. சற்றேரக்குறைய
**उपनतिः स्त्री** அணுகல். வணங்கல்.
**उपनम्** 1 प வந்து சேர். அணுகு. நோக்கிச் சாய்ந்திரு. நேரிடு. நேர்படு. பங்குகொள். நோக்கி அடைவி. அறிமுகமாக்கு. கொடு.
**उपन(ना)यः, (ना)यनं** न **(नी)** பெறல். பூணூல் போட்டு வைத்தல். அத்யயனத்திற்கு ஸம்ஸ்காரமுண்டு பண்ணல்.
**उपनह्** 4 प சேர்த்துக்கட்டு. கட்டாக்கு. பதி. அழுத்து.
**उपनहनम्** न ஒன்று கட்டப்பட்டிருக்கும் துணி
**उपनागरिका स्त्री** ஓர் விருத்தி யனுப்பிராஸ விசேஷம்
**उपनामन्** न குடிப்பெயர். செல்வப்பெயர். கேலிப்பெயர்
**उपनामुक** वि நோக்கி வளைக்கிற
**उपनायः, नायनम्** = **उपनयः**
**उपनायक** वि அடைவிக்கிற **कः** நாடகத்தில், விஷயத்தில் கதாநாயகனுக்கு அடுத்தபிரஸித்தபாத்திரம் சோரபுருஷன்
**उपनायिका स्त्री** கதையில் கதாநாயகிக்கு அடுத்த பாத்திரம்
**उपनासिकं** न மூக்கினருகே யிருக்கும் பாகம்

**उपनाहः** पु கட்டு. புண்ணுக்குப் போடும் தைலம்,பிளாஸ்திரி. வீணையில் கம்பி கட்டப்பட்டிருக்கும் பிரடை. தாமரைக்கொடி. கண்கட்டி.

**उपनिक्षिप्** 6 उ அருகே, கீழே, பொருப்பில்வை.

**उपनिक्षेपः** पु வஸ்துவின் ஸ்வரூபத்தைச் சொல்லி ஒருவன் பொருப்பில் வைத்தல். முத்திரையிடப்பட்ட, மூடின பொருப்பில் வைக்கப்படும் பொருள்

**उपनिधा** 3 उ அருகே வை, அடைவி. உண்டுபண். இறுமாய்க் கொடு. பொருப்பில் வை **निहित** वि

**उपनिधानम्**, **निधिः** பொருப்பில் வைக்கப்பட்டது (ஸீலுடன்

**उपनिपत्** 1 प கீழ் நோக்கிப்பற. அதிகப்படியாய் ஸம்பவி. இடையில் பிரஸ்தாபித்து வை.

**उपनिपातः** पु அணுகல். எதிர்பாராத ஸம்பவம், தாக்கு

**उपनिपातिन्** वि எதிர்பாராது வருகிற

**उपनिबंध्** 9 प கவனம்செய், எழுது

**उपनिबंधनं** न கட்டல். செய்துமுடிக்க உபாயம்

**उपनिवेशित** वि வைக்க, பொருத்தப்பட்ட. குடியேறின

**उपनिवेशिन्** वि பற்றின. இயல்பான

**उपनिषद्** **स्त्री** குருவின் பாதத்தினருகே யுட்கார்ந்து பிரம்ம ஞானத்தை யுண்டு பண்ணி அக்ஞானத்தைத் துலைக்கும்படியான அடையப்பட்ட.ஞானம். வேதத்தில் வேதாந்த பாகம். தத்துவம். பிரம்மக்ஞானம். ரஹஸ்யம். தர்மம். உபதேசம். விருதம். அயல்வீடு. தனியிடம் वि (குருவின்) பாதத்தண்டை யுட்காருகிற. ஆள்பட்ட

**उपनिष्क(ष्कु)रः** पु ராஜ மார்க்கம். பொதுவழி. ரஸ்தா

**उपनिष्क्रमणं** न வெளிவால். கசிதல். ராஜபாட்டை. குழந்தை பிறந்த 4 ம் மாதத்தில் வெளியில் கொண்டுவரும் ஓர் ஸம்ஸ்காரம்

**उपनी** । **प** அருகே கொண்டுவா. போய்க்கொண்டுவா. கொடு ஒப்புவி. அதீனமாக்கு. உண்டுபண். அறிவி. ஓர் நிலைக்குக் கொண்டுவா. ஒதுக்கு. ஒருவனிடம்கொண்டுபோ. பூணூல் தரிப்பி. வாடகைக்கு விடு. வேலையிலமர்த்து **णिच्** ஒருவனுக்குப் பூணூல் தரிப்பித்து சிஷ்யனையங்கீகரிக்கச் செய்

**उपनीत वि** அடைந்த. அறியப்பட்ட. உதாரணமாய்ச் சொல்லப்பட்ட **तः** பூணூலாகி குருவினிடம் ஒப்புவிக்கப்பட்டச் சிறுவன்

**उपनुन्न वि** அனுப்பப்பட்ட

**उपनृत् 4 प** ஒருவன்முன் ஆடு. பரிஹஸிக்கும்படி அபிநயி.

**उपनृत्यं न** கூத்தாட இடம்

**उपनेतव्य वि** அருகே கொண்டுவர, உபயோகிக்க, அனுஷ்டிக்கப்பட வேண்டிய

**उपनेतृ वि** அருகே அடைவிப்பவன். **(ता) पु** உபநயனம்செய்து வைப்பவன். குரு

**उपन्यस् 4प** மேலே, கீழே, அருகே, எதிரேவை. பொருப்பாக்கு. ஒப்படை. விவரி. உத்தேசி. நிரூபி. சொல். கருது

**उपन्यस्त वि** தெரியப்படுத்தப்பட்ட. பொருப்பில் வைக்கப்பட்ட. உதாரணமாய்க் கூறப்பட்ட.

**उपन्यासः पु** ஒன்றையொன்று தொடர்ந்து, சேர்ந்திருத்தல். ஈடு. முகவுரை. ஒன்றை ஸூசித்துப் பேசல். விதி. ஒருவித ஸமாதானம். கோபந்தணித்தல்

**उपपक्षः पु** தோள் **पक्ष्य वि** தோளினருகே

**उपपतिः पु** சோர புருஷன்

**उपपत्तिः स्त्री** காரணம். தர்க்கித்தல். முடிவு. ஸம்பந்தம். அங்கீகரித்தல். நிரூபணம் செய்யப்பட்ட ஸித்தாந்தம். அத்தாக்ஷி. உபகாரணம். உதவி. ஸமாதி.

**उपपथं** **अ** சாலையினருகே

**उपपद्** **4** **आ** அடை. எட்டு. அணுகு. அடைந்திரு. விதி வசமாய் வா. நேரிடு. உண்டாகு. முடியுமாயிரு. பொருத்தமாயிரு. விரோதமாய்க் கிளம்பு. தகை. விஷயமாய்ச் சொல். **णिच्** ஓர் நிலைக்குக் கொண்டுவா. கொடு. உதாரணமாய்ச் சொல். நியாயமென்று நிரூபி. நிலை நிறுத்து. வேண்டியதைக் கொடு. பரீக்ஷி கண்டு பிடி. நிச்சயி

**उपपदं** **न** முன்னே சொல்லப்பட்ட, சேர்க்கப்பட்ட பதம். பட்டம். உபஸர்க்கம் **तत्पुरुषः** கடைப் பதம் வினைச் சொல் போன்ற ஓர் தத்புருஷஸமாஸம் (**वेदविद् ग्रामणी**)

**उपपन्न** **वि** தொடரப்பட்ட. உடைத்தாயிருக்கிற. குணமான.

**उपपर्चन, पृच्** **वि** நெருங்கித் தொட்டுக் கொண்டிருக்கிற.

**उपपर्चनं** **न** கர்ப்பமுண்டாக்குதல். கலத்தல்

**उपपर्शुका** **स्त्री** விலாப் பக்கமுள்ள சிறு எலும்புகள்

**उपपातः** **पु** ஸம்பவம். ஆபத்து. அழிவு [(அணு)

**उपपातकं, पापं** **न** மஹா பாவங்களுக்குத் துல்யமான பாவம்

**उपपादक** **वि** செய்கிற நன்கு ஆராய்ச்சி செய்யப்பட்ட.

**उपपादनं** **न** விஷய பரீசீலனம், தர்க்கித்து நிரூபணம்

**उपपादुक** **वि** தானே யுண்டான. செருப்பு, லாடமுடைய **कः** தேவதை

**उपपार्श्वं, श्र्वः** **पु** பக்கவாட்டம். தோள். எதிர்ப் பக்கம்

**उपपीड्** **10** **प** மிதி. ஹிம்ஸி. கிரஹணம்பிடி. மறை **पीडनं** வாதை

**उपपुरं.** **न** நகரத்தினருகே பேட்டை. **पौरिक** பேட்டைஸம்பந்த

**उपपुराणं** **न** வியாஸப்ரோக்தமானபுராணதுல்யமான (18 அணு)

**उपपुष्पिका** **स्त्री** கொட்டாவி விடல்

**उपप्रदानं** **न** ஒப்புவித்தல். லஞ்சம். காணிக்கை. கப்பம்.

**उपप्रलोभनं** **न** மயக்கி விடல். தூண்டில். தூண்டுகோல். லஞ்சம்

**उपप्राणः** **पु** பிராணாதாரமான தேக அமுக்கிய ப்ராணவாயு

**उपप्रेक्षणं न** அவமதித்தல். கவனியாமை

**उपप्रैषः पु** அழைத்தல். வரவழைக்கக் கட்டளை

**उपप्लवः पु** (प्लु) ஆபத்து. துயரம். கெட்ட ஸம்பவம். தடை. ஹிம்ஸை. பயம். கலவரம். அபசகுனம், உத்பாதகம் (தூமகேது) கிரஹணம். ராஹு. அராஜகம். சிவன் சங்கேதகம் (ஈச்வரனிருப்பில்)

**उपप्लविन् त्रि** துக்கத்திற்காளானவன். பாதை யடைந்த

**उपप्लु 1 आ** மித. நீந்து. அமிழ்த்து. தகை. அலட்டு. மேலே குதி. பிரிந்து போ **णिच्** நீர்ப்பாய்ச்சு

**उपप्लुत त्रि** ராஹுவினால் பி(பீ)டிக்கப்பட்ட. நினைக்கப்பட்ட **ता** கர்ப்பப்பையில் வியாதியினுணர்ச்சி

**उपबन्धः पु** ஸம்பந்தம். விகுதி. உருபு. புணர்ச்சி விசேஷம்

**उपबर्हः र्हणं न** தலையணை. அமுக்கல். அழுத்தல். மிதித்தல்.

**उपबृंहिन् त्रि** அதிகப்படியான. சேர்க்கப்பட்ட.

**उपबहु त्रि** கொஞ்சம் நடுத்தரமான அளவு

**उपबाहुः पु** கீழ்க்கை

**उपब्दः, ब्दिः पु** ஸோமம் தெளிப்பதிலுண்டாகும் சப்தம்

**उपभङ्गः पु** பின்னுக்கோடல். (சுலோகப்) பிரிவு

**उपभुज् 7** (ஸர்வேந்திரியங்களுக்கும்) அனுபவி, ருசி பார். குடி. உடைத்தாயிரு. உபயோகி.

**उपभृत् स्त्री** ஆல மரயாக பாத்திரம். கிரீடம். யோனி மூலம் முலையின் நுனி

**उपभोगः पु** புணர்ச்சி. இன்பம். திருப்தி. அனுபவாதிகாரம்.

**उपभोग्यं न** அனுபவிக்கப்படும் பொருள். உணவு.

**उपम त्रि** மேலான. முதன்மையான. சிறந்த. ஸமீபமான.

**उपमंत्र 10 आ** வேண்டு. அழை. தூண்டு. தணி இச்சகம்பேசு

**उपमंथनी स्त्री** (தீயை) கிளரக்கழி **थितृ त्रि** கிளறுகிற.

**उपमन्यु त्रि** அறிகிற. புத்திசாலியான. பிரயாசப்படுகிற.

**उपमर्दः** पु நசுக்கல். கொல்லல். நிந்தை. குற்றத்தை ஆக்ஷேபித்தல். குலுக்கல்.

**उपमा** 2 प 3. 4. आ ஒப்பிடு. கொடு.

**उपमा** स्त्री தோற்றம். சாயல். ஒப்பு. இரு வஸ்துக்களை ஒப்பிடும் உபமாலங்காரம். உபமானம். படம். சித்திரம். (போட்டோ) -द्रव्यं ஒப்பிட உபயோகப்படும்பொருள் -रूपकं உருவக உபமாலங்காரங்களின் கலந்தலர் அலங்காரம்.

**उपमातृ** पु பிரதிமை செய்கிறவன். (போட்டோ) படம் வர்ணம்கொடுப்பவன் स्त्री முலைத்தாய்நெருங்கியஸ்திரீபந்து

**उपमातिः** स्त्री ஒப்பு. கொலை. துதியோடணுகல். पु பணத்தை அளித்தல். நட்போடணுகல்-वनि சத்துருவைத்துலைப்பவன்

**उपमाद** वि இன்பந்தருகிற दः ஸுகானுபவம். இன்பம்

**उपमानं** न ஒப்பு. ஒப்பிடப்படவேண்டிய பொருள் (உபமேயமல்லாதது). போலி.

**उपमारणं** न (நீரில்) அமிழ்த்தல்

**उपमास्य** त्रि பிரதிமாஸ ஸம்பவமான स्यं மாஸிக சிராத்தம்

**उपमित्** वि தோண்டுகிற. அருகேவைக்கிற. स्त्री தூண்

**उपमित** वि ஒப்பிடப்பட்ட. போல. ஒத்த.

**उपमितिः** स्त्री சாயல். ஒப்பு. ஊஹை. ஸித்தாந்தம். உபமாலங்காரம். பிரதிமை. படம்

**उपमीमांसा** स्त्री ஆராய்ச்சி. ஆலோசனை.

**उपमेत** ஒப்பிடப்பட்ட तः ஆச்சாமரம்.

**उपमेयं** न ஒப்பிடப்படும் பொருள்—उपमा ஓர் அலங்காரம்

**उपयज्** पु யாகத்தில் 11அதிகப்படியான ஸூத்திரவிசேஷம்

**उपयंतृ** पु கணவன் यमः விவாஹம். அடக்கல்

**उपयंत्रस्** न வைத்தியனின் சிறு ஆயுதம்

**उपयम्** 1 उ மண. கைப்பற்று. அங்கீகரி. ஸஹி. தாங்கு. (ஸ்திரீயை) அடை. அடக்கு

**उपयमनं** न ஸ்திரீயை மணத்தல். அக்கினியைக் கீழே வைத்தல். ஆதாரம் नी யாகக்கரண்டி. விறகு வைக்கப்பாறை

**उपयष्टृ** पु உபயஜ்ஜைச் சொல்லும் புரோஹிதன்

**उपया** 2 प அணுகு. எட்டு. ஓர் குறிப்பான நிலையையடை

**उपयाचितं(तकं)** न இஷ்டம் நிறைவேற ஓர் தேவதைக்குப் பிரார்த்தனை செய்துகொள்ளல். அப்படி தேவதைக்களிக்கப்படும் பலி.

**उपयाजः** पु யாகத்தில் அதிகப்படியான ஸூத்திரங்கள்

**उपयात** वि வந்த. திரும்பின **यायिन्** वि நோக்கி வருகிற

**उपयामः** पु ஓர் யக்கிய பாத்திரம். கரண்டியில் ஸோமமெடுக்கும்பொழுது சொல்லப்படும் மந்திரம். கலியாணம்

**उपयुज्** 7 आ உபயோகி. பொருத்து. அனுபவி. ருசிபார். பற்றியிரு. (வண்டியில்) பூட்டு, ஜோடி. உபயோகித்துக்கொள்.உண்.பொசுக்கு. क தகுதியாயிரு. பயன்படு

**उपयुञ्जान** वि உபயோகப்படுத்துகிற. அனுபவித்து வருகிற

**उपयोगः** पु பிரயோஜனம். ஸஹாயம். மருந்துண்ணல், தயாரித்தல். ஸ்பர்சம். ஸமீபம். இச்சை நிறைவேற அனுகூலகார்யம். சிஷ்டாசார அனுஷ்டானம்.நன்நடத்தை

**उपयोगिता, त्वं** न தருணம். தேவை. தகுதி. தயவு. பயன்.

**उपयोगिन्** वि பயன்படுகிற. அனுகூலமான. தொடுகிற.

**उपयोजनं** न குதிரைவண்டியிற் பூட்டும் ஸாமான், ஜோடி.

**उपयोषं** अ மிக ஆனந்தமாய்

**उपर** वि கீழேயிருக்கிற. பிந்திய. ஸமீபமான **रः** அம்மி. யூபஸ்தம்ப அடி. மேகம். திக்கு. ப்ரதேசம்.

**उपरक्त** वि (**रंज्**) பாதிக்கப்பட்ட. கிரஹணம் பிடித்த. வர்ணமிடப்பட்ட. **क्तः** கிரஹணம் பிடிக்கப்பட்ட ஸூர்யன்,

**उपरक्षः** पु அங்காரகன் [சந்திரன், ராஹு

**उपरक्षणं** न முக்கிய சேனைக்குச் சற்று தூரத்தில் சில காவலர் வைத்திருக்கப்படுமிடம். காவல்

**उपरत्नं** न சற்று இழிவானமணி, ரத்தினம்

**उपरत** वि அற்ற. இறந்த. ஓய்ந்துபோய் விலகின. வைராகி—अरि எதிரியை யுடையாத. -कर्मन् லௌகிகங்களற்ற

**उपरतिः** स्त्री புணராமை. சாவு. உதாஸீனம். வைதிக கர்மாக்கள் நிஷ்ப்ரயோஜனமென்று அனுஷ்டியாமை. விவேகம்

**उपरम्** 1 प (आ) முடி. நிறுத்து. ஓய். காத்திரு. சாந்தமாயிரு

**उपर(रा) मः** पु விட்டுவிடல். சாவு. ஓய்வு. [= णिच्

**उपरमणं** न புணராமை. அனுஷ்டானமின்மை. விராமம்.

**उपरवः** पु ஸோமரஸம் கிரஹிப்பதிலுபயோகப்படும் சந்து.

**उपरसः** पु அப்பிரதான உலோஹம், உணற்சி, ருசி.

**उपरा** स्त्री கிரஹணம். அஹங்காரம். துக்கம். வீணைத்தந்தி

**उपराजः** पु ராஜப்பிரதிநிதி (வைஸ்ராய்)

**उपरि** अ மேலே. நோக்கி முடிவில். தலைமையாய். மேற்கொண்டு. அதிகப்படியாய். ஸம்பந்தமாய். பின்னால்—उपरि மேன்மேலும்.மிக உயரே.தொடர்ச்சியாய். ஸமீபமாய்—ज மேலே உண்டுபண்ணப்பட்ட. உயர்த்தப்பட்ட. உயர்ந்த =—तन,स्थ·भूत மேலிருந்த வருகிற—बुध्न பூமியிலிருந்தெழுப்பப்பட்ட-मर्त्यं அமனிதர்களுக்கு மேல்—शयनं இளைப்பாறுமிடம்—सद् மேலே உட்கார்ந்து, படுத்திருக்கிற दः पु ஓர் தேவகணம்—सद्यं மேலே யுட்கார்ந்திருக்கிற

**उपरिष्टात्** अ மேலே. உயர. மேலிருந்து. பிந்தி. பின்னே—ज्योतिष्मती 43, 44 அக்ஷரங்களுள்ள ஓர் வேத சந்தஸ்—ज्योतिः கடைசிபாதம் எட்டெழுத்துக்களுள்ள ஓர் திருஷ்டுப் சந்தஸ் ச்லோகம்—बृहती முதல்பாதம் 12-ம்

மற்ற 3-மனட்டெழுத்துக்களுமுள்ள ஓர் வைதிகசந்தஸ்
**उपरीतक:** **पु** (விபரீதக மென்னும்) புணர்ச்சி நிலே விசேஷம்
**उपरुध्** **7** **उ** தடு. குறுக்கிடு. நிறுத்து. குழப்பமுண்டுபண். நிர்ப்பந்தமாய்ப் பிரார்த்தி. அடக்கு, வெல். சூழ். முற்றுகைபோடு. கூட்டிலடை. சிறைப்படுத்து. மறை. மூடு. தள்ளிவிடு. **रुद्ध** ரக்ஷித்த. தயவுபாராட்டின.
**उपरूपकं** **न** கீழ்த்தரமான நாடகம் (அவை 18. அனு)
**उपरोध:** **पु** மறுப்பு. தடை. கைப்பற்றல். கட்டல். ரக்ஷணம்.
**उपरोधकं** **न** நடு, சிறு, ஏகாந்த அறை, வீடு.
**उपल:** **पु** கல். பாறை. ரத்தினம். மணல். மேகம். **ला** சர்க்கரை. திருஷதின் மேலிருக்கும் கொழவிக்கல்
**उपलक:** **पु** கல்
**उपलक्ष** **10** **प** உற்றுநோக்கு. கவனி. ஆலோசி. குறி. வர்ணி. பெயரிடு. பட்டமளி. அதிகப்படியாய்ஸூசி, கருது
**उपलक्षणं** **न** நிச்சயித்தல். விசேஷத்தன்மை. பெயர். பட்டம். ஒரு விசேஷமிருக்க இன்னொரு விசேஷத்தை அதிகப்படியாய்ச்சொல்லல். முழுமைக்கு அம்சத்தைச் சொல்லல்
**उपलक्षित** **वि** ஸூசனையாய்ச் சொல்லப்பட்ட. அறிந்த. [லல்
**उपलक्ष्य** **वि** ஊஹிக்கத்தகுந்த **क्ष्य:** பிடிப்பு. ஆதாரம். ஆச்ரயம். ஊகை. கொழு கொம்பு.
**उपलधिप्रिय:** **पु** சவரிமான்
**उपलभ्** **1** **आ** அறி. பார். நிச்சயி. அடை. அனுபவி(இன்பம்). கர்ப்பமாகு. **णिच्** உண்டுபண். விளைவி.
**उपलब्ध** **वि—अर्थ** அர்த்தம் மறைந்திருக்கிற. **र्थ** கதை.
**उपलब्धि:** **स्त्री** ஞானம். லாபம். மனது. புத்தி. ஊஹை. தோற்றம்
**उपलब्धृ** **वि** பெறுகிற. அறிகிற. **पु** ஜீவன். தான் [ற்றம்
**उपलम्भ:** **पु** நேரில் பார்த்தறிதல். அனுபவம். நிச்சயம்.
**उपलम्भक** **वि** பார்க்கச் செய்கிற. ஞாபகப்படுத்துகிற

**उपलभ्य** वि அடையத்தகுந்த. துதிக்க, பூஜிக்க, கௌரவிக்கத்

**उपलालिका** स्त्री தாகம். விடாய், களைப்பு [தக்க

**उपलिङ्गं** न அபசகுனம். உபத்திரவம்

**उपलिप्** 6 प பூசு. கெடு. தீட்டாக்கு. ஒட்டிக்கொள்

**उपलिप्सा** स्त्री அடைய இச்சை

**उपलेपः** पु பூசல். பசுஞ் சாணியால் சுத்தி செய்தல். வெள்ளையடித்தல். தடை. மறைபட்டு, மங்கி, மறத்துப்போயிருத்தல் लेपनं மை. தைலம்.

**उपलेपिन्** वि தைலமாயுதவுகிற. பூசுகிற. தடுக்கிற.

**उपवक्तृ** पु யக்ய புரோஹிதன். உற்சாகப்படுத்துகிறவன்

**उपवटः** पु (प्रियासाल) விருக்ஷ விசேஷம்

**उपवद्** 1 आ ஸமாதானம் சொல். இச்சகம் பேசு.

**उपवनं** न சோலை. வைத்துப் பயிராக்கின தோப்பு

**उपवर्गः** पु ஆசை. தடை. உபத்திரவம்

**उपवर्ण.** पु அனுலோம ஜாதி. பூர்ண விவரணம். = वर्णनं

**उपवर्तः** पु ஓர் விசேஷ உயர்ந்த தொகை

**उपवर्तनं** न தேகப் பயிற்சி செய்யுமிடும். வஸிக்கத்தகுந்த இடம். ஜில்லா. ராஜ்யம். சதுப்பு நிலம்

**उपवर्ष.** पु மீமாம்ஸா சாஸ்திர ப்ரவசன சங்கர ஸ்வாமிகளின் [குமாரர்

**उपवर्हः** पु தலையணை

**उपवलित** वि கண்ணீரால் மங்கின, வீங்கின

**उपवल्लिका** स्त्री (अमृतस्रवा) செடி விசேஷம்

**उपवल्हः** पु போட்டி. பொறுமை

**उपवस्** 1 प ஒன்றில், ஓரிடத்தில் வஸி. பட்டினி கிட. (குருவை) அடை. தொடங்கு. णिच् பட்டினிபோடு

**उपवसथः** पु கிராமம். ஸோமயாக முன்னாள்.

**उपवसथीय, उपवसथ्य** वि ஒரு நாளைப்போல் உபவஸதத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட

उपवस्तं न உபவாஸம். பட்டினி स्तृ वि உபவாஸகன்

उपवस्तिः स्त्री (உணவு, உறக்கம்போல்) பிராணாதாரம்

उपवह् । प அருகே அழைத்துச் செல். தொடங்கு

उपवहं न ஜதை மாட்டின் உயரத்திற்குச் சரிப்படுத்த நுகத் தடியின்கீழ்காளையின் கழுத்தின்மேல் வைக்கப்படுவது

उपवहनं न (ஸங்கீதத்தில்) பாடும்முன் ஆலாபித்துக்கொள்ளல்

उपवा स्त्री அடித்தல். வீசல்

उपवाकः पु ஸம்பாஷணை. ஸ்துதி. வெட்பாலையரிசி

उपवाजनं न விசிறி

उपवाटिका स्त्री மந்திரிகள், வேசிகளின் தோட்டம்

उपवादः पु நிந்தை. वादिन् वि நிந்திக்கிற

उपवासः पु பட்டினி (ஸர்வேந்திரியங்களுக்கும்). வைதிகாக் கினியை ஜ்வலிப்பித்தல், ஹோமகுண்டம்.

उपवासक, सिन् वि உபவாஸ மிருக்கிற க் பட்டினி

उपवसनं न உடை

उपवाहनं न கொண்டுபோதல். वाहिन् वि நோக்கிப் பாய்கிற

उपवाह्यः, ह्या स्त्री பட்டத்து யானை. ராஜ வாஹனம்

उपविद् वि அடைகிற. அறிகிற. ஸம்பாத்தியம். ஆராய்ச்சி.

उपविद्या स्त्री நீச வித்தை.

उपविश् 6 प கீழேயுட்கார். காத்திரு (பணிவிடை செய்ய). முகாம்போடு. கீழே போ, மறை (ஸூரியன்). தொடங்கு. பட்டினி கிடக்கைப்பற்றிக்கொள். णिच् கீழேவை

उपविंश वि 19, 21 ஆன

उपविषं, षः पु நாமேதயாரிக்கும் விஷம். நித்திரை, மயக்க முண்டாக்கும் மூலிகை, மருந்து (அனு) पा அதிவிடயம்

उपवीणयति ना. प (தெய்வத்தின் முன்) வீணைகானம்செய்

उपवीतं न இடத்தோளின் மேலிருக்கும் பூணூல், அதை தரிப்பித்தல்.

**उपवीतिन्** वि பூணூல் தரித்திருக்கிற. த்விஜன்
**उपवीरं** न ஒருவித அஸுரன்
**उपवृत्** । आ அணுகு. திரும்பு. **वृत्तिः** நோக்கின போக்கு
**उपवेदः** पु தாழ்ந்த அறிவு. 4 வேதங்களுக்கும் 4 உபவேதங்கள் ருக்குக்கு ஆயுர்வேதமும், யஜுஸ்ஸுக்கு தனுஸ்ஸும், ஸாமத்திற்கு காந்தர்வமும், அதர்வத்திற்கு ஸ்தாபத்யமும் (யந்த்ரம்)
**उपवेश.**, **शनं** न மனதை நாட்டல். மலங் கழித்தல். ஆஸனம்
**उपवेषः** पु யக்யாக்கினியைக் கிளர (பசுங்) கொம்பு
**उपवैणवं** न முச்சந்தி. மூன்று ஸந்தியாகாலங்கள்
**उपव्याघ्रः** पु சிறுத்தை
**उपशम्** 4 प சாந்தமாகு. ஆற்றப்பட்டிரு. ஓய். நிறுத்து. **णिच्** அவி. அழி. ஆற்று. சமன மடை. குறை.
**उपशमः**, **शमनं** न பொறுமை. தன்னடக்கம். ஓய்வு. ஒழிவு.
**उपशय** वि (**शी**) சாந்தி, சந்தோஷகரமான **यः** பதுங்குமிடம். குகை. மிருகத்தைப் பிடிக்கப் பள்ளம்). மருந்து, உணவுப்பொருள்களின் பயனைநோயையூகித்தல். பத்தியத்தால் நோயை யாற்றல். **या** தயாரிக்கப் பட்ட களிமண்
**उपशल्यं** न ஊரினருகே மைதானம்.
**उपशांत** त्रि சமனமான **तिः** (இச்சைகளின்) திருப்தி
**उपशांतिन्** वि தணிக்கப்பட்ட पु பழக்கப்பட்ட யானை.
**उपशायः** पु (காவலில்) இரவில் மாறி மாறித் தூங்கல்
**अशायिन्** वि தணிக்கிற. **यिता**, **त्वं** கௌணபக்ஷ சிகித்ஸை
**उपशालं** न வாசலிற் கெதிரே முற்றம். **अ** வீட்டண்டை.
**उपशिक्षा**, **क्षणं** न படித்தல். தயாரித்தல். சிக்ஷை.
**उपशिंघ(ह)नं** न முகரல். முகரக் கொடுக்கப்படுவது
**उपशिष्यः** पु சிஷ்யனின் சிஷ்யன்
**उपशी** 2 आ பக்கலில் படு. புணர். நன்மை செய். இணங்கு.

उपशुभ् णिच् प அலங்கரி. சிருங்காரி. நகையணி, யிடு
उपश्रा स्त्री மூடல். மேலே எறியப்படுவது.
उपश्रु 5 प கேள். கவனி. வாக்களி. ஒப்புக்கொள். श्रोतृ
उपश्रुत् पु யாகம்.
उपश्रुतिः स्त्री கர்ண பரம்பரை. எதிர்காலத்தைச் சொல்லும் இரவு ஸம்பந்த தேவதையாய் பாவிக்கப்படும் இரவில் ஓர் அமானுஷக் குரல். அதிர்ஷ்டத்தைச் சொல்லும் நக்ஷத்திர நிலை. வாக்களிப்பு.
उपश्लिष् 4 प தழுவு. நெருங்கு. णिच् அருகேவை
उपश्लेषः, षणं न ஒன்றை யொன்று தொடர்ந்திருத்தல். ஆலிங் [கனம்
उपश्लोकयति ना. प சுலோகங் கட்டித்துதி
उपश्वस वि சப்திக்கிற. கர்ஜிக்கிற.
उपष्ठु वि இடப் பக்கத்திலிருக்கிற
उपष्टुत् अ கூட்பிட்ட குரலுக்கேனென்கிற. தயாரான.
उपसंयमः पु ஜகப்பிரளயம். அடக்கல். கட்டல். = मन्
उपसंरोहः पु சேர்ந்து. மேலே வளரல். காயம் ஆறஆரம்பித் [தல்
उपसंवादः पु ஒப்பந்தம்.
उपसंव्यानं न அடித்துணி. அரைவேஷ்டி
उपसंस्कृ 8 उ தயாரி. அலங்கரி. பிரதிஷ்டை, சுத்தி செய்
उपसंहतिः स्त्री நாடக ஐந்தாம் ஸந்தி
उपसंहरणं न (हृ) தவிர்த்தல். தகைத்தல். மேல்விழல்
उपसंहारः पु தொகுதி. (உபன்யாஸம்) தயாரித்தல். ஸங்கிரஹம். முடிவு. சாவு. படை யெடுப்பு. கண்டனம்
उपसंहारिन् वि அறிகிற. पु ஹேது. हृतिः கைப்பற்றல்
उपसंहृ 1 प திரட்டு. முடிவுகட்டு. சுருக்கிக்கொள். கொடாம லிரு, உள்வாங்கிக்கொள். அடக்கு. நிறுத்து. அழி.
उपसंक्रांत वि பாரம் பர்யமாய் வந்த
उपसंख्यानं न அனுபந்தச்) சேர்க்கை. இலக்கண ரூபத்தி

லோ, அர்த்தத்திலோ ஒன்றிற்குப் பதிலாய் வருவது

उपसंग्रह् 9 प தானே ஏற்றுக்கொள், அனுபவி. அங்கீகரி. கைப்பற்று. அதீனத்தில் வைத்துக்கொள். அனுகூலப் படுத்திக்கொள். தழுவு

उपसंग्रहः, हणं न ஆதரித்தல். பாதங்களைத் தொட்டு மரியாதையாய் வணங்கல். வணக்கமாய்ப் பேசல். சேர்த்தல். (மனைவியைப்போல்) ஏற்றுக்கொள்ளல். உபகரணம்

उपसंग्राह्य वि வணங்கப்படவேண்டிய. பூஜ்யமான

उपसत्तिः स्त्री சேர்க்கை, ஸம்பந்தம். தானம், தர்மம். பூஜை

उपसद् 1-6 प அணுகு. ஒருவனின் பாதத்தண்டை உட்கார். உபசரி. எதிர்த்துச்செல். அடைய முயல். அமிழ்ந்து போ. णिच् அடை

उपसद् वि பணிவிடை செய்கிற स्त्री முற்றுகை. தகைப்பு. திரட்டல், அடுக்கல். பூஜை. பல நாட்கள் நீடிக்கும் ஜ்யோதிஷ்டோம யக்யாங்கம் - व्रतिन् உபஸத்தின் விதிகளை யனுஷ்டிக்கிற. (தரையிற் படுத்தல், மௌனம் ஸாதித்தல், அன்னம் புசியாமை)

उपसद वि அணுகுகிற. பூஜிக்கிற दः தானம். உபஸத் யாகம்

उपसदनं न சிஷ்யனாதல். அருகாமை. பூஜை. பங்குகொள்ளல்

उपसदी स्त्री பரிஜன ஸமூஹம். தொடர்ச்சி

उपसन्न वि ஸமீபமான. ஏறக்குறைய. அடையத்தகுந்த. பெற்ற

उपसंतानः पु சேர்ந்த தொடர்ச்சி. ஸந்ததி

उपसंधा 3 उ அதிகப்படுத்து. இணை. கருது, நோக்கு

उपसंन्यासः पु துறந்துவிடல். விட்டுவிடல். [படுத்து

उपसमाधा 3 उ (கட்டை, முட்டை) அடுக்கு. குவி. ஒழுங்கு

उपसमाहार्य वि ஒன்றுசேர்க்க, ஒழுங்காக்கவேண்டிய

उपसंपत्तिः स्त्री அணுகல். வரல். எந்நிலையையும் அடைதல்

**उपसंपद्** 4 **आ** அணுகு. வந்துசேர். அடை. **णिच्** தீக்ஷை செய்வி

**उपसंपन्न** **वि** உடைத்தாயிருக்கிற. பரிசயமுள்ள. போதுமான. (யாகத்தில்) கொல்லப்பட்ட. இறந்த. (உணவு) தயாரித்த. **न्नं** சம்பாரம். தொடு சுவை

**उपसंभाषः, षा** **स्त्री** ஸ்நேஹபாவத்தில் தூண்டல்

**उपसरः** **पु** (**सृ**) பசுவின் முதற் சினைப்படல். அணுகல்

**उपसरणं** **न** (நோயில்) ஹிருதயம் நோக்கி ரத்தம் வேகமாய்ப் பாய்தல். சரணமாய் அடையப்பட்டது

**उपसर्गः** **पु** (**सृज्**) நோய். நோயில் நோய். நோயாலுண்டான மாறுபாடு. ஆபத்து. அபசகுனம். கிரஹணம். மரணத்திற் குறிகுறி. சேர்க்கை. பேய் பிடித்திருத்தல். தடை. துளிர். வினை (தாதுக்)களுக்கு முன் சேர்க்கப்படும் உபஸர்க்கம். (உருபிடைச்சொல்). அவை 22:—
**प्र, परा, अप, सम्, अनु, अव, निस्, (निर्) दुस् (दुर्) वि, आ (ङ्), नि, अधि, अपि, अति, सु, उत्, अभि, प्रति, परि, उप** தாதுக்களோடு சேர்ந்து மாறுபாடான அர்த்தங்களைத் தரும்

**उपसर्जनं** **न** (வால் நக்ஷத்திரம் போன்ற) அபசகுனம். கிரஹணம். விடல். பிரதி. ஒருவனுக்குச் சற்றுத்தாழ்ந்தவன். ஒரு பதத்தோடு சேர்ந்து தன் பிரதானார்த்தத்தை யிழக்கும் சொல் (**राजपुरुषः** என்பதில் **राजन्** இழப்பது போல்)

**उपसर्पः** **पु** (**सृप्**) நெருங்கல். ஒருவனைத்தொடரல் **सर्पिन्** **वि**

**उपसर्या** **स्त्री** பொலியுங்காலமுள்ள பசு

**उपसंहित** **वि** (**धा**) வேண்டியதைக் கொடுக்கப்பட்ட. தொடர, சூழப்பட்ட. குறிக்கிற

**उपसार्य** **वि** அனுஸரிக்கத்தக்க

**उपसि** **अ** மடியில், இடுப்பின் மேல், அருகே, கையண்டை

**उपसीरः** पु கலப்பை

**उपसुन्दः** पु நிகும்பனின் பிள்ளையும் ஸுந்தனின் தம்பியுமான ஓர் அஸுரன்

**उपसूर्यकं** न ஸூர்யனைச் சுற்றிய வட்டமான பரிவேடம்

**उपसृ** 1 प நெருங்கு. பகையுடன் அணுகு. தகை, (புருஷனோடு) ஸம்பந்தம் வைத்துக்கொள் (ஸ்திரீ)

**उपसृज्** 6 प வெளிக்கொட்டு, வர்ஷி, கொடு. சேர்ந்து கொள். உபத்திரவி. கிரஹணம்பிடி. வந்துஸம்பந்தப்படு. விளைவி, ஸிருஷ்டி. அழி

**उपसृष्ट** वि இணைக்க, தொடரப்பட்ட. பேய், அஸுரனால் பீடிக்கப்பட்ட. உபஸர்க்கம் சேர்க்கப்பட்ட (வினை) ष्टं புணர்ச்சி [தகை

**उपसृप्** 1 प அணுகு. எதிர்பாராது ஸந்தி. செல். தொடங்கு.

**उपसेकः, सेचनं** न மேலே தெளித்தல், கொட்டல். நீரூற்றல். ரஸம், கசிவு. கஷாயம். नी கொட்டக்கரண்டி, கிண்ணி

**उपसेदिवस्, सेदिवस्** वि ஸமீபத்தையடைந்த पु சிஷ்யன்

**उपसेव्** 1 आ உபசரி, பூஜி. உபயோகி. ஒன்றில் ரமித்திரு. அடிக்கடிபோ. (சந்தனாதிகளால்) தேய், அபிஷேகம்

**उपसेवक** वि அனுஷ்டிக்கிற. சிற்றின்பமனுபவிக்கிற [செய்

**उपस्करः** पु சம்பாரம். உபகரணம். வீட்டுச்சாமான் (துடைப்பம்). நகை. நிந்தை. வாஸனைச்சாமான்

**उपस्करणं** न கொல்லல். ஹிம்ஸித்தல். திரட்டல். மாறுபாடு. சீர்திருத்தம். நிந்தை. சப்தலோபம். எச்சம்

**उपस्कारः** पु அனுபந்தம், அதிகப்படியான சேர்க்கை. விட்டதைச் சேர்த்தல். அலங்கரிப்பு. நகை. அடி. திரட்சி

**उपस्कृ** 8 उ தயாரி. பூர்த்திசெய். அலங்கரி. तिः அனுபந்தம்

**उपस्कृत** वि நிந்திக்க. கொல்ல, திரட்ட, சீர்திருத்தப்பட்ட

**उपस्तंभः, भनं** न பிடிப்பு. ஆதாரம். பிராணுதாரம் (உணவு,

உறக்கம்). உற்சாகப்படுத்தல், தூண்டுதல். ஆதாரம். உதவி [(மூடிபோல்)

**उपस्तरणं न** பரப்பல். இறைத்தல். மூடி. உடை. படுக்கை.

**उपस्तिः पु** மரம். கூடயிருப்பவன். தொடருபவன். ஊழியன் பரப்பப்பட்டிருப்பது

**उपस्तिर् स्त्री** பரப்பல். மூடி. பரப்பப்பட்டிருப்பது [த்தல்

**उपस्तु 2 उ** பிரார்த்தி. வேண்டு. அழை. துதி = **स्तुत स्त्री** அழை

**उपस्तृ, स्तॄ 4. 9. उ** ஒன்றிர்க்காக) விரி. கீழேபரப்பு. ஒழுங்கு படுத்து. மேலே தூவு, தெளி

**उपस्त्री स्त्री** வைப்பாட்டி

**उपस्थ वि** அருகே. சற்றேறக்குறைய. **स्थः** ஸாயங்காலம். மடி. நடுபாகம். ஆண், பெண் குறி = **स्थं** மலத்துவாரம். இடுந்து, சந்து, இடை-**निग्रहः** இந்திரிய நிக்ரஹம்-**पत्रः, दलः** (யோனிரூப இலையுள்ளதான) அரசு

**उपस्था 1 उ** அருகே நில், பங்காசாரமாய் அடை. அணுகு. அடுத்திரு. துதித்தணுகு, பூஜி. கிட்டேகிட. பெற அணுகு. புணர நெருங்கு. (நதிபோல்)கூடு. நட்பு கொள். பகையோடுகிட்டு. அடைவி. லபி. நேரிடு. உண்டாகு. வந்திரு. ஆதாரத்திற்காக (முட்டு) கீழே நில். ஆச்ரி. கோபந்தணி **णिच्** வேண்டியதைக்கொடு. தயாரி. மேலேவை. உண்டாக்கு

**उपस्थातृ वि** சார்ந்திருக்கிற. காலத்தில் வந்துவிட்ட. **पु** கூட யிருப்பவன். ஆள். யக்ய புரோஹிதன்

**उपस्थानं न** அருகாமை. தோற்றம். கைங்கர்யம். வணங்கல். பாதுகார்த்தல். வீடு. ஆலயம். கர்ப்பக்கிருஹம். பலி பீட, பூஜ்யஸ்தானம். ஸபை. ஞாபகம். பெறல். தானம். தேவபூஜை

**उपस्थानीय वि** கார்க்க, உபசரிக்க, அருகே வைத்திருக்கப்பட

வேண்டிய स्थायिन् वि

उपस्थापक वि போதிக்கிற. ஞாபகப்படுத்துகிற

उपस्थापनं न ஞாபகம் வரல். சுச்ருஷை

उपस्थायकः पु பரிசாரகன். பௌத்தன்

उपस्थित वि வந்த. ஸமீபித்துள்ள. நேரப்போகிற. அறியப்பட்ட. சுத்தி செய்யப்பட்ட. பதபாடத்தில் வரும் इति तं இப்படிச் சொல்லப்படும் (பகுதி விகுதி) ப்ரத்யயம். அவ்யயம். इतिக்கு முன் பின்னிருக்கும் பதநிலை. பூஜை. சுச்ருஷை [னம்

उपस्थितिः स्त्री செய்து முடித்தல். உபசாரம். ஞாபகம். தர்ச

उपस्नेहः पु ஈரமாக்கல். स्नेहयति நா. ப. உருகு (நேசி)

उपस्पर्शः पु ஆசமனம். ஸ்நானம். स्पर्शिन् தொடுகிற. உரிகிற

उपस्पृश 6 प (நீரை) தொடு. குளி. கழுவு(பல்லை). கொப்புளி.

उपस्मृतिः स्त्री அமுக்கிய தர்மசாஸ்த்ரம் (அவை 18) [தெளி

उपस्रवणं न கசிவு. ஸ்திரீயின் மாதவிடாய்ப் பெருக்கு. தூமை

उपस्वत्वं न வரி. வருமானம். லாபம்

उपहत वि (हन्) பாதிக்க, ஆட்கொள்ள (வெல்ல, வசீகரிக்க)ப் பட்ட. இடி, மின்னலால் பாதிக்கப்பட்ட. திரஸ்கரிக்க, நிந்திக்க, சீர்குலைக்கப்பட்ட. -आत्मन् மனக்கலக்கமடைந்த-दृश कண்கூசப்பண்ணுகிற-धी பிரமிக்கிற

उपहतक वि துர்க்கதியடைந்த. துருதிருஷ்டமான

उपहत्नु वि மேல்விழுகிற हत्या கண்கூசல்

उपहन् 2 प அடி. உதை. ஹிம்ஸி. கொல். கெடு. உள்ளேதள். பிசகு. பாடத்தில், ஒப்பிப்பதில் தவறு हतिः स्त्री

उपहंतृ वि விரோதப் பிரதிபலனையுடைய. குழப்பமடைகிற.

उपहरणं न (हृ) கிரஹித்தல். காணிக்கை கொடுத்தல்.பலியிடல்

उपहवः पु (ह्वे) ஆவாஹனம் செய்தல். மந்திரபூர்வகமாய் வேண்டல். हव्यः ஓர் யாகம்

**उपहस्** 1 प பரிஹஸி. **अल** மேம்படு. ஜோடியாகு. கூடு
**उपहस्तिका स्त्री** வெற்றிலை, பாக்கு, சுண்ணும்புப்பெட்டி
**उपहारः** पु காணிக்கை. யாகம். பலி. நைவேத்தியம். தானம். ஹோமம். தக்ஷிணை. புஷ்பந்தரல். பூஜாத்திரவியங்களளித்தல். மரியாதை. ஸமாதானம் செய்துகொள்ள, ஆன நஷ்டத்தைக் கட்டித்தரல். அதிதி ஆராதனை. ஜயத்திற்காக (சிறிப்பு, குதிப்பு, பாட்டுகளால், ஆனந்தம்
**उपहालकः** पु குந்தளதேசம்
**उपहासः** पु கேலி. வசைப்பாட்டு. கேலி, தூஷணைக்கவி क वि
**उपहित** वि (धा) சேர்க்க, கலக்கப்பட்ட. உடைத்தாயிருக்கிற. சாரனுய் ஏற்படுத்தப்பட்ட. கொடுக்கப்பட்ட
**उपहृ** 1 प தருவி. கொடு. உணவைப் பகுத்துக்கொடு. யாகம் செய். ஹோமம் செய். பலியிடு. தள்ளிவிடு. திரட்டு. ஒதுக்கு, அழி. உபயோகி. வேலையிடு. **णिच्**
**उपहोमः** पु பிரதான ஹோமாங்கம் (பிராயச்சித்தாஹுதி)
**उपह्वरः** पु தனியிடம். அருகாமை. **रः** வளைவு. கோணல். சரிவு. வண்டி. ரதம். ஸோமபாத்திர வளைந்த ரூபம்
**उपह्वे** 1 उ ஜபித்தழை. **हूतः** பிரார்த்தனை = **ह्वानं**
**उपांशु** अ தாழ்ந்த குரலில். ரஹஸ்யமாய் **शुः** மௌன ஜபம். மௌனம். ஓர் ஸோம நைவேத்தியம் - **क्रीडित** (ராஜனின்) ரஹஸ்யமான வேடிக்கைகளில் தோழனுக்கப்பட்ட - **याजः** ஒருவித யாகம்
**उपाक** वि ஒன்று சேர்க்கப்பட்ட. அருகாமையான **के** (द्वि) இரவும் பகலிற்கும் சொல்லுவது **अ** மிக அருகே. எதிரே. பின்னே
**उपाकरणं** न தொடங்கப் பிரார்த்தனை. ஒரு புரோஹிதன் மற்றொருவனை ஒருசடங்கைச் செய்யச்சொல்லும் ப்ரைஷமந்திரத்திற்குப் பரிபாஷை. சடங்குப்படியாக பசு

வதம். உபாகர்மம்

**उपाकर्मन्** न உத்ஸர்ஜனம் செய்யப்பட்டிருக்கும் வேதத்தை ஆரம்பிப்பதற்குமுன் சிரவணங்கூடின பௌர்ணமியில் செய்யப்படும் சடங்கு. (ஆவணி யாவட்ட அத்யயன ஹோமம்)

**उपाकृ** 8 उ தருவி. அடைவி. வரச்சொல்லி யனுப்பு. அழை. ஒப்புவி. கொடு. (கீர்த்தி) யடை. சடங்கிற்குத்தயாரி. ஒன்றைச் செய்ய ஏற்றுக்கொள். தொடங்கு.

**उपाकृत** 1वि ப்ரைஷ மந்திரங்களால் பிரார்த்திக்கப்பட்ட. (யாகத்திற்)கொல்லப்பட்ட. அமங்களமான கேடான तः உத்பாதம் तं யக்ய பசுவிற்குச் செய்யப்படும் மாந்தரீக ஸம்ஸ்காரம்

**उपाख्या** 2 प வர்ணி. விவரி. சொல்

**उपाख्या स्त्री** தானே பார்த்தல். விவரமாய்ச் சொல்லல்

**उपाख्यानं, नकं** न உப, இடை, கிளைக்கதை. முன்பு நடந்த, கேட்ட கதையைத் திருப்பிச் சொல்லல்

**उपागत** वि வாக்களிக்கப்பட்ட. गमः ஸம்மதம். அங்கீகாரம்

**उपागम्** 1 प நெருங்கு. ஒரு தன்மையை யடை. அடை. நேரிடு

**उपाग्र** न நுனி, முடிவிற் கடுத்த பாகம். அமுக்யாங்கம்

**उपाग्रहणं** न கிரமமாய் வேதாரம்பமாகி அத்யயனம் செய்தல்

**उपाग्नि** अ அக்கினியினருகே

**उपाङ्गः** पु திலகம். சந்தனக் குறி. ङ्गं பாகத்தில் பாகம். கீழ்த்தலைவன். அப்பிரதான அங்கம். அனுபந்தத்தின் அனுபந்தம். கர்மாங்கம். புராணம், நியாயம், மீமாம்ஸை, தர்ம சாஸ்திரங்களான வேதாங்கங்களின் அங்கங்கள்

**उपचर्** 1 प அணுகு. அடுத்திரு. வணக்கத்தோடிரு. சிகித்ஸி

**उपाचरित** वि தொண்டு செய்கிற. तः க், ப்பிற்கு முன் விஸர்க்க

சப்தம் ஸ்ஸாகும் ஸந்திவிதி

**उपाचारः** पु (வாக்கியத்தில் பதத்தின்) நிலை. ரீதி. பத்ததி [illegible] (உ [illegible]வோடு மாத்திரம் சேர்க்கப்படும்). ஆதரித்தல்

**उपांजन** சாணியால் மெழுகுதல். வெள்ளையடித்தல். காரைபூசல்

**उपात्त** वि (दा) தொடங்கின. ஆக்ஷேபணையில் ஒத்துக்கொண்ட **त्तः** மதம் நீங்கின யானை. **-रंहस्** त्रि விரைவான. **-वर्ण** பாடிக்கொண்டாடப்பட்ட-**शस्त्र** ஆயுத மெடுத்த, தரித்த

**उपात्ययः** पु ஆசாரங்களை மீறல். ஒழுங்கின நடத்தை

**उपादा** 3 आ பெறு. அடை. அளி. தனக்கே உபயோகித்துக் கொள். எடுத்துச்செல், திருடு. மேல்விழு. கைப்பற்று. மேலே கைபோடு. (நீரைத்) தூக்கு. ஒருவிதக்கோலங் கொள். உணர், அனுபவி. மதி. ஆலோசி. அதிகப்படி யாய் அடை, சேர்த்துக்கொள். உள்ளே அடக்கிக் கொண்டிரு. உபயோகி. தொடங்கு. வரிசைக்கிரமமா ய்ச் சொல். **= णिच्** உபயோகிக்கச்செய். வேலையிடு. பொருத்து.

**उपादानं** न கிரஹித்தல். பரிசயங்கொள்ளல். மனோநிக்ரஹம். கருத்து, காரணம். மூலகாரணம், வஸ்து. எப்பதம் சப்த லோபத்தால் (எச்சம்) உபயோகிக்கப்பட்டுத் தன் சொந்த கருத்தைக் காட்டினும் வேறொரு அர்த் தத்தையுந் தருகிறதோ அதற்குச் சொல்லுவது.(பௌ த்த ரீதியாக) கருத்து. சப்தவேகம் **-कारणं** மூலகார ணம் (ஸமவாயிகாரணம்)

**उपादिकः** पु ஒருவிதப்புழு **का** ஒருவிதப் பூண்டு

**उपादेय** वि ஏற்றுக்கொள்ளத்தக்க. ஸஹிக்கு முடியுமான. ஒப்புக்கொள்ள, தேர்ந்தெடுக்கத்தக்க. சிறந்த

**उपाधा** 3 उ அருகே, மேலேவை. கொடு. உடு. உண்டுபண். பயன்படச்செய். நிறைவேற்று. வகி. தரி.

**उपाधिः** पु சூது. மாறுவேஷம். பகுத்தறிவு. பட்டம். கேலிப் பெயர். (காலதேச) எல்லை, நிபந்தனை. சுவடு, அடையாளம். ஸங்தர்ப்பம், கருத்து. பொதுப்பயனுக்கு விசேஷகாரணம். சமத்காரமாய்க் குடும்பத்தைப் போஷிப்பவன். தர்ம விஷய சிந்தை

**उपाधिका** वि மிதமிஞ்சின அளவிற்கதிகமான

**उपाध्यायः** पु குரு வேதவாத்தியார். या பெண் வாத்தியார் =यी குருபத்னி=उपाध्यायानी

**उपानस्** वि வண்டியைப் போன்ற, வண்டியிலிருக்கிற. தகப்பனைப் போன்ற (சிற்றப்பன், பெரியப்பன்) न வண்டியிலிடம். வண்டியில் வைக்கப்பட்டிருக்கும் சாமான்

**उपानह्** स्त्री பாதுகை. செருப்பு. ஓர் மூலிகை.

**उपांत** वि கடைசிக்கு முந்தின. तः ஓரம்.விளம்பு. கடைக்கண். அருகாமை. சரிவு. கடைசிக்கு முந்தின எழுத்து

**उपांतिक**=वि ஸமீபமான तिम

**उपांत्य** वि கடைசிக்கு முந்தின त्यः கடைக்கண் त्यं ஸமீபம்

**उपाप्ति** स्त्रीவந்து தொடல்: எட்டல். அடைதல். பெறல்

**उपाभृत्** स्त्री அருகே கொண்டுவரல். அப்புறப்படுத்தல்

**उपायः** पु (उपे) உபாயம். ஸாதனம். தந்திரம். மார்க்கம். ஸந்தர்ப்பம். ஆரம்பம்.பாடுபடல். யுத்தத்தில்வெல்லசெய்யும் யோசனை(ஸாம பேததான தண்டமென4 मायावஞ்சனை, उपेक्षा தந்திரம் इन्द्रजाल மயக்கல் என் 7ம் கூறுவர்) (பாட்டில்போல்) சேர்ந்துக் கொள்ளல். அணுகல் -तुरीयः தண்டோபாயம் -योग. உபாயத்தைப்பிரயோ

**उपायनं** न சடங்கைச் செய்தல்.தொடங்கல்.தானம். [கித்தல்

**उपायात** वि வந்தடைந்த. तं வருகை. செய்தி. ஸம்பவம்

**उपायिक** वि ஹேதுவாகிற. ஸஹாயமாயிருக்கிற. சார்பாகிற

**उपायिन्** वि உபாயங்களைச் செய்வதில் திறமைவாய்ந்த. ஸாத

னங்களையுடைய. புணருகிற. நெருங்குகிற = उपायु

उपारः पु அருகாமை. பிசகு. குற்றம். பாவம்

उपारत त्रि திரும்பின. காரியமாயிருக்கிற. போயடைகிற

उपारम् 1 प வேடிக்கையாயிரு. ரமி. நிறுத்து. ஓய்.

उपारूढ वि வளர்ந்த. விருத்தியடைந்த यौवन யுக்த வயதுவந்த

उपार्ज् 1 प அருகே கொண்டுவா. ஸம்பாதி. அடை.

उपार्थ त्रि அற்பமதிப்புள்ள

उपालभ 1 आ பழி. திட்டு. அடை लंभ, मन्त्र காலதாமதம்

उपावर्तनं न திரும்பல். சுற்றல். சுழலல். ஓயல். அணுகல்.

उपावसायिन् वि இணக்கமான. வணக்கமான. விதேயனான

उपावसु वि ஐச்வர்யத்தை யளிக்கிற, கொண்டுவருகிற

उपावहरणं न கீழே கொண்டுவரல், அடைவித்தல்

उपावृत् 1 आ அணுகு. திரும்பு. கொடு. णिच् தூண்டு. வசீகரி. உண்டு பண். மேன்மேல் நீட்டு, வளர்த்து.

उपावृत स्त्री திரும்பல் वृत्त விட்ட, செய்யாமலிருக்கிற. தகுந்த. தரையிற் புரளுகிற.

उपावृत्तः पु விடாயைப் போக்கிக் கொள்ளப் புரளுங்குதிரை

उपाव्याधः पु காயப் படத்தக்க, ரக்ஷிக்க முடியாத ஸ்தானம்

उपाशंसनीय वि எதிர் பார்க்கப்படுகிற

उपाश्रयः पु ஆச்ரயம். அடைக்கல ஸ்தானம். ஆதாரம். கொள்வது. சார்ந்து, அண்டியிருத்தல்

उपाश्रि 1 उ அண்டு. அடை श्रित वि தாங்குகிற अल ரக்ஷிக்கிற.

उपास् 2 आ அருகே யுட்கார். உபசரி. பூஜி. பொருந்து. (காலம்) கழி. நெருங்கு. (எதிரி நகரத்தை) சூழ், முற்றுகை போடு. (சடங்கில்) வேலையாயிரு. அனுபவி, கஷ்டப்படு. ஓர் நிலை, தொழிலில் தங்கு, நீடித்திரு. எதிர் பார். ஒன்றில் பொருந்து, பற்று, அப்பியஸி. உபயோகி. பிரயோகி. வேலையிடு. மரியாதை செய்,

ஒப்புக்கொள். வில்வித்தை பயிலு

**उपासकः** पु உபாஸனை செய்பவன். பூஜகன். ஆள். சூத்திரன். நீசன். பிக்ஷுவிற்கு மாருன புத்தோபாஸகன்

**उपासनं,** ना स्त्री பூஜை, மரியாதை, வில் வித்தை பயிலல். தியானம். வைதிகாக்னி. உபத்திரவித்தல். ஆஸனம்

**उपासा** स्त्री தியானம். சுச்ரூஷை. பூஜை. வணங்கல்.

**उपासितृ** त्रि பூஜிப்பவன் स्ति: பூஜை. பரிசாரகம்

**उपासङ्गः** पु அருகாமை. அம்பறாத்தூணி

**उपास्तमनं** न ஸூர்யாஸ்தமனம் स्तमयं अ அஸ்தமனத்தில்

**उपाहारः** पु கனை தீர்த்துக்கொள்ளல் (பால், பலஹாரம்)

**उपाहृ** 1 उ கொடு. உண்டு பண். தயாராக்கு. கைப்பற்று

**उपाहित** वि பொறுப்பில் வைக்கப்பட்ட. சேர்க்கப்பட்ட. ஆரோபணம் செய்யப்பட்ட. ஒப்பந்தப்படி செய்யப்பட்ட. तः தூமகேது. தீயினல் ஆபத்து

**उपे** 2 प அணுகு. வந்துசேர். எட்டு. சிஷ்யனுகு. (ஸ்திரீயோடு) சேர். புணர். அனுஷ்டி. செய். ஓர் நிலையை யடை. அடை. வந்திரு. பாத்திரனுகு. விதி வசமாய் வா. நேரிடு. ஒத்துக்கொள்.

**उपेत** वि உடைத்தாயிருக்கிற. சூழ்ந்துகொண்ட. சேர்ந்த.

**उपेतिः** स्त्री வருகை. तृ சூழ்ச்சி செய்கிற (வன்

**उपेक्ष** 1 आ தவிர். அலக்ஷியம் செய். தப்பியோட விடு. நீக்கு. அவமதி, மதி, கவனி. பார்

**उपेक्षक** वि கவனியாத. பொறுக்கிற, சிரத்தையில்லாத

**उपेक्षा** स्त्री உதாஸீனம். பொறுமை. உபாயம். யோகத்தில் ஒருவித பாவனை. மதிப்பு.

**उपेनित** वि உள்ளே இறுக்க, அமுக்கப்பட்ட

**उपेन्द्रः** पु வாமனவதாரத்தில் இந்திரனுக்குத் தம்பியாயிருந்த விஷ்ணு, கிருஷ்ணன்-**वज्रा** ஓர் விருத்தம்

**उपेय** वि அணுக, தாக்க, உபாயங்களால் ஸாதிக்கத்தக்க
**उपेयिवत्** वि பின் தொடர்ந்து செல்லுகிற **युस्** वि அடைந்த
**उपोढ** वि (उपोह् उपवह्) சேகரித்து வைக்கப்பட்ட.ஸமீபமான.
படை வகுக்கப்பட்ட. அணிவகுப்பு
**उपोती, दका, दकी दिका, दीका** स्त्री (पूतिका) செடிவிசேஷம்
**उपोत्तम** वि கடைசிக்கு முந்தின मं கடைசிக்கு முன்னெழுத்து
**उपोदक** वि நீரினருகே — कं अ कः நீரினருகாமை
**उपोद्ग्रहः** पु அறிவு
**उपोद्घातः** पु ஆரம்பம். முகவுரை. உதாரணம். உபாயம்.
பாகுபாடு.பிரித்து மூலவஸ்துக்களை யறிதல்.ஒன்றின்
**उपोद्बलयति** ना. प. உறுதிப்படுத்து बलक वि लनं [ஸ—ைசனை
**उपोषणं, षितं** न உபவாஸம்
**उपोह्** 1 प முன்தள்ளு. உள்நுழை. அடைவி, உண்டுபண்.
திரட்டு. क தொடங்கு. செய்யப்பட்டிரு **उपोढ** वि
**उपोहः** पु கூட்டல். திரட்டல். ह्य अ கொண்டுபோய்
**उप्त** वि (वप्) प्तं விதைக்கப்பட்ட பூமி. குங்குமம் — कृष्ट வி
தைத்தபின் உழப்பட்ட प्तिः स्त्री प्तिन விதைக்கிற
**उब्ज्** 6 प அடக்கு. ஆள்படுத்து. அமுக்கு. நீட்டு. நிமிர்த்து
**उभ्, उंभ्** 6. 9. 7. प ஒரிடத்திலடை.அழுத்து. நிறப்பு.மறை
**उभ** वि இரண்டுமான
**उभय** वि இரண்டும்-अर्थं अ இருகாரணத்திற்காக (இஹ பர
ஸாதகங்களுக்காக-आत्मक இரண்டின் ஸம்பந்தமான-
चर நீரிலும் நிலத்திலும் வாழுந்தன்மையுள்ள रः நிலத்
திலும் காற்றிலும் வசிக்கும் ஒரு விதப் பக்ஷியினம்-
द्युः अ இரு நாட்களிலும். போனதும், வரப்போகும்
நாட்களும்.-भागहर இரு விஷயங்களுக்குப் பொருத்த
மான. இரு பங்குகளைப் பெறுகிற. र இருவழிகளிலும்
(வாந்தி, பேதி) கேழ்க்கும் மருந்து-विद्या இருவித

சாஸ்திரங்கள் வைதிகம், லௌகிகம்-वेतन இருகக்ஷிகளி லும் பணம் வாங்குகிற. இரு யஜமானர்களிடமிருந்து பெறுகிற. துரோகியான-व्यंजन ஆண் பெண் இரு குறி களையுமுடைய-संभवः சிக்கு. இன்னது செய்வதென்று தோன்றாத ஸ்திதி

**उभयतः** அ இருபக்கங்களிலும், பக்கங்களிலிருந்தும், பக்கங் களுக்கும். இருவழிகளிலும், விஷயங்களிலும்-क्षुत् இரு ஓரங்களையுடைய-दत्, दंत இருவரிசைப் பற்களுடைய-**मुख** இரு பக்கங்களிலும் பார்க்கிற **स्त्री** பசு

**उभयत्र** அ இரு விடங்களிலும், பக்கங்களிலும், விஷயங்களி

**उभयथा** அ இருவிதமாய், விஷயங்களிலும் [லும்

**उभया** அ இரு வழிகளில்-दत् இருபக்கங்களிலும் பற்களையு டைய-विन् இருபக்கங்களிலுமிருக்கிற, பங்கு கொள்ளு கிற -हस्ति அ இரு கைகளாலும் எவ்வளவு கிரஹிக்க முடியுமோ அவ்வளவு-हस्त्य இரு கைகளையும் நிரப்புகிற

**उभयीय** वि இரண்டின் ஸம்பந்தமுமான

**उभये(य)द्युस्** அ இருநாளிலும். இரு தொடர்ந்த நாட்களில்

**उम्** அ கோபம், கேள்வி, ஸம்மதம், ஸ்நேஹம், சாந்தி ஸூ

**उमः** पु பட்டணம். கப்பலுக்குத் துறை, ரேவு [சகம்

**उमा** स्त्री பார்வதி. ஒளி. கீர்த்தி. சாந்தி. இரவு. மஞ்சள். சணல் -कटं, टः சணப்பனார் - गुरुः ஹிமயமலை. वनं வாந புரம். தேவகோட்டைப் பட்டணம் (शोणितपुरं)-प्रियः சிவன். கடப்பன்

**उम्यं** न சணல், மஞ்சள் விளையத் தகுந்த புலம்

**उम्ब(म्बु)रः** पु கதவில் கொல்தடி. ரேழி [த்தல்

**उम्बी** स्त्री தாள். கோதுமைத் தாளை ஈரப்புல் தீயில் கொளு

**उर्** 1 प போ (ச்ரௌத தாது) उर वि போகிற रः செம்மறி

**उरगः** पु பாம்பு. மனித முகத்தோடு பாம்பினுடலுள்ள ஓர்

பாதி தெய்வப் பிறவியான நாகம். மத்ஸ்யபேதம். அட்டை. ஈயம். गा ஓர் நகரம் गी பெண்ணாகம் - अरिः, अशनः கருடன் - आस्यं (ஸர்ப்பாகார) கட்டப்பாறை. -इंद्रः, राजः வாஸுகி. ஆதிசேஷன் - प्रतिसर விவாஹ மோதிரத்திற்குப் பாம்பையுடைய - भूषणः சிவன் - सारचंदनं, नः ஒருவித சந்தனம் - स्थानं பாதாளம்

उरंगः, गमः पु பாம்பு

उरजः पु பசுக்களை யோட்டுதல்

उरणः पु செம்மறியாடு. இந்திரனால் கொல்லப்பட்ட ஓர் அஸுரன் णी பெண்ணாடு - अक्ष(क)ः, आख्यः தகரைச்

उरणकः पु செம்மறியாடு. மேகம் [செடி

उरभ्रः पु ,, ஒருவித விஷப்பூச்சி. தகரைச் செடி

उररी अ ஸம்மதம்-उरी, उररी, ऊरी, ऊररी வியாப்தி ஸூசகம்- कृ இணங்கு - कारः வாக்களிப்பு - कृत பரப்பப்பட்ட

उरल वि அசைகிற

उरशः पु ஓர் க்ஷத்திரிய வம்ச தேசம்

उरस् वि மிகச் சிறந்த. न மார்பு - कटः பூணூல். உத்தரீயம் - गामिन् वि ஊருகிற - ग्रहः, घातः நுரை ஈரலின் நிணநீர் ஜவ்வு வீக்கம் -छदः, त्राणं மார்க்கவசம் - जः, भूः, उरसिजः, रुहः ஸ்திரீயின் முலை - सूत्रिका மார்மேலணியும் முத்து மாலை - स्फुटनं புணற்சி விசேஷம்

उरसिलोमन् वि மாரில் மயிரையுடைய

उरस्तस् अ மாரிலிருந்து, நோக்கி [யுள்ள

उरस्वत्, उरसिल वि பலமான, பரந்த மார்புள்ள. பருத்த முலை

उरस्य वि மார்பிலிருக்கிற, ஸம்பந்தமான. மார்பின் பலத்தை எதிர்பார்க்கிற.நியாயமாய்ப் பிறந்த. சிறந்த स्यः பிள்ளை

उरस्यति ना. प பலத்தோடிரு

उरा स्त्री பெண்ணாடு

**उराहः** पु விவர்ணமான கருங்கால்களையுடைய குதிரை
**उरी** स्त्री ஸம்மத ஸூசகம் - कृ ஸம்மதி. தொடர். பற்று
**उरु** वि விசாலமான. சிறந்த. விலையுள்ள. न விசாலமான இடம் अ தூராக. தூரத்தில் - अंगः கடல். மலை - काल (क):(महाकाल)கொடி-कृत् वि இடமுண்டுபண்ணுகிற,அளிக்கிற -क्रम தூரதூர வைக்கும் அடிவைப்புக்களையுடைய. உயர்ந்த பதவியையுடைய मः வாமனவதார விஷ்ணு -गाय பெரியோர்களால் துதிக்க, கொண்டாடப்பட்ட. சலனத்திற்கு விசாலமான இடத்தைத் தருகிற यः விஷ்ணு. அச்வினி தேவதைகள். ஸோமன். இந்திரன். விசாலமான இடம், அவகாசம் यं துதி -चक्रि விசேஷ உதவியைப் புரிகிற. தடையில்லாத சலனத்தைத் தருகிற -चक्षुस् वि வெகு தூரம்பார்க்கிற -जन्मन् உயர் பிறவியான -उमन् விசாலமான வழி, திரிய இடமுள்ள -ज्रयस् , ज्रि மிகுந்த வேகம், உக்கிரமுள்ள -पर्वी பெருங்காய இலை -प्रयस् மிகவும் பரவுகிற -मालः மாவலிங்கை -लोक வெகு தூரம் ஒளி வீசுகிற, பரவுகிற कः சிறந்த லோகம் कं பூமிக்கும் ஆகாசத்திற்கும் நடுவிடம் -व्यचस् விசாலமான पु குட்டிச்சாத்தான். பேய் -व्यंच मிகவும் போய் எட்டுகிற. அதிகமாய்ப் பிடிக்கிற, கொள்ளுகிற. (சப்தம்போல்) தூரத்திலிருந்தே அறியப்படுகிற-शंस அநேகரால் கொண்டாடப்படவேண்டிய. விசால ப்ரதேசத்தை ஆள்கிற. உரத்துத்துதிக்கிற -शर्मन् மிகவும் பரவுகிற षा மிகவும்அளிக்கிற. திரிய விசாலமான இடமளிக்கிற -सत्त्व பலசாலியான. பெருந்தன்மை வாய்ந்த
**उरूकः** = उलूकः
**उरुरी** = उररी
**उरुबुः**, **बुः**, **बुकः**, **बुकः**, **बूकः** **बूकः** पु ஆமணக்கு

**उरुष्यति ना. प** ரக்ஷி. இஷ்டப்படி திரிய இச்சி. தப்பியோடு

**उरुष्या स्त्री** ரக்ஷிக்க இச்சை **ष्यु** ரக்ஷிக்க இச்சிக்கிற

**उरूल वि** இடத்தை விரும்புகிற. விரித்துரைக்க இச்சிக்கிற. சுயேச்சையான

**उरोगामिन् त्रि** நகருகிற **पु** நகரும் ஜந்து

**उरोग्रहः पु** ரோக பேதம்

**उर्ज 1. 10. प** விடு **र्जित** விட்ட. வயதான. பலமுள்ள

**उर्णनाभः पु** சிலந்தி எட்டுக்கால் பூச்சி

**उर्णा स्त्री** கம்பளம். புருவங்களின் மத்தியில் மயிர்ச்சுருள்

**उर्द् । आ** ருசிபார். கொடு. விளையாடு. சுகமாயிரு. அள.

**उर्द्रः पु** நீர்க்கீரி, எலி

**उर्व् 1 प** கொல். ஹிம்ஸி

**उर्वटः पु** கன்று. வருஷம்

**उर्वरा स्त्री** வளமான) பூமி. நார், மயிர் முதலியதின் கூளம். சுருட்டைமயிருக்குச்சொல்லுவது

**उर्वरित यि** மிகவும். மிச்சமாய் விடப்பட்ட

**उर्वर्य वि** தான்யம் விரைக்கப்பட்ட நில ஸம்பந்தமான

**उर्वरी स्त्री** சிறந்தவள்

**उर्वशी स्त्री** ஓர் தேவதாஸி-**वल्लभः, सहायः** புரூரவஸ்

**उर्वारुः पु** வெள்ளெரி பேதம் **रुक्** ஓர் வெள்ளெரிக்காய்

**उर्विया अ** தூரத்தில். விசாலமாய். சுற்றிலும்

**उर्वी स्त्री** பூமி. நிலம். வளம். (4 திக்குகளையும் மேலுங் கீழு முள்ள) ஆகாசம்.நதி **द्वि** ஆகாசமும் பூமியும் -**रुहः** மலை

**उर्व्या स्त्री** பெருமை. பாதுகாப்பு, பத்திரம்

**उर्व्यूति वि** விசேஷமாய்க் காப்பாற்றுகிற, உதவுகிற

**उल्** கொளுத்து. (ச்ரௌத தாது)

**उलः पु** ஒருவிதக் காட்டு மிருகம்

**उलपः पु** படருங்கொடி. செவட்டைக்கோரை. கொடியால்

மூடப்பட்ட புதர்.

**उलप्य** वि செவட்டைக் கோரை ஸம்பந்தமானप्यः ருத்திரன்

**उलपः** पु செவட்டைக் கோரை. ஒரு வகைக் கொடி.

**उलिन्दः** पु ஓர் தேசம். சிவன்

**उलुप** = उलप

**उलु** (ल, लू) पिन् पु கடல் பன்றி

**उलुलिः** पु கத்தல். ஊளை. அலறுதல்

**उलूकः** पु ஆந்தை. கோட்டான். இந்திரன் ब கௌரவர்களுக் குதவி செய்த ஓர் ராஜனும், அஜ்ஜனங்களும் कं செவட்டைக் கோரை -अरिः காக்கை किनी கோட்டான் கூட்டம்

**उलूखलः** पु அத்தி மரத்தினால் தடி लं உரல். குங்கிலியமரம் -सुतः (மர)உரலில்சார் பிழியப்படும்ஸோம ரஸம்

**उलूखलकं** न உரல். மைஸாக்ஷியெனும்ஓர் மருந்தெடுக்கும்செடி

**उलूखलिक** वि உரலிற் குத்தப்பட்ட (स अ) தில் உரலாய் உப யோகிக்கிற -दंत பற்களை உரலா யுபயோகிக்கிற

**उलूतः** पु மலைப் பாம்பு

**उलूप-पिन्** = उलप, पिन् पी स्त्री ஓர் நாக கன்னிகை (அனு)

**उलूलु** अ ஸந்தோஷத்தால் உண்டான சப்தம்

**उल्का** स्त्री கொள்ளிக் கட்டை. தணல். கரி. தீ. பொறி. பந் தம். தீவட்டி. வால் நக்ஷத்திரம். உத்பாதம்—मालिन् ஓர் சிவகிங்கரன் -मुखः கொள்வாய் பிசாசு ख பெண்ணிரி

**उल्कुषी** स्त्री வால் நக்ஷத்திரம் உத்பாதம். கொள்ளிக்கட்டை

**उल्ब, ल्वं** न கர்ப்பப்பை. யோனி கர்ப்பம். குழி.

**उल्ब** (ल्व)ण वि தடித்த. ஜடையான. ஏராளமான. பலமுள்ள பெரிய. தெளிவான. டம்பமான णं अ மிகவும் [டம்

**उल्मुकः** पु கொள்ளிக்கட்டை.பந்தம்.தீவட்டி किनी அதன் கூட்

**उल्वयं** न வாத, பித்த, சிலேஷ்மங்களில் கோளாறு. ஆபத்து

उ(ल्ल)ल्लुकसनं न மயிர்க் கூச்சு
उल्लंघ 1 आ 10 प தாண்டு.குதித்தோடு. மீறு. கெடு அவமதி.
उल्लंघित वि நிமிர்த்தப்பட்ட. உயர்த்தப்பட்ட
उल्लल वि அசைக்கிற. மயிர்கள் நிறைந்த. நோய்களுள்ள
उल्ललत् वि ,, நடுங்கச் செய்யும் இழுப்பு, வலிப்புள்ள
उल्ललित वि குலுக்க, உயர்த்த, நிமிர்த்தப்பட்ட
उल्ललयति ना. प குதி துள். (உடலை) மேலுக்குக் குலுக்கு
उल्लस् 1 प பகை. துடி. சிறகடி. ஆடு.விளையாடு.குதி.மின்னு. தோன்று. பிரதி பலிக்கப்பட்டிரு.மலர்.விரி.உப்பு णिच्
उल्लस वि ஒளியுள்ள. களிக்கிற. வெளிவருகிற ता ஒளி
उल्लसनं न மயிர்க் கூச்சு. ஸந்தோஷம்.
उल्लसित वि (கத்திபோல்) சுழற்றப்பட்ட. மின்னுகிற
उल्लाघ वि நோயினின்றும் தேறின. ஸாமர்த்தியமுள்ள. சுத்த மான. ஸந்தோஷிக்கிற. துஷ்டனான. கருத்த
उल्लाप् 1 प ஒதுக்கு தணி. குறை. ஆற்று
उल्लापः पु சொல். பேச்சு. திட்டு. உரத்துக் கூப்பிடல்.நோய், சோகபயம் உணர்ச்சிகளாற் குரலின் மாறுபாடு. ஸூசனை. ஜாடை पिक காட்டிக்கொடுக்கிற
उल्लाप्यं न நாடகபேதம். पिन् கூப்பிடுகிற. ஸூசிக்கிற
उल्लाभः पु மேல்பரப்பு. கட்டிலின் மேல்கட்டு
उल्लासः पु உல்லாஸம். தெம்பு. ஒளி. அத்தியாயம். ஆரம்பம். ஒன்றின் குணகுணங்களைக் காட்டி மற்றொன்றோடு ஒப்பிடலும், பேதத்தைக் காட்டலுமான ஓர் அலங் காரம். விருத்தி
उल्लासन वि குதிக்கச் செய்கிற. नं காந்தி सित களிக்கிற=सिन्
उल्लिख् 6 प சொறி. கீறிரத்தமெடு. கிழி. பிள. உராய். மோது. தேய். மெருகிடு. செதுக்கு. வர்ணங்கொடு. ரூபம்வரை. எழுது. தூக்கு

**उल्लिखित** वि மேலுக் கெறியப்பட்ட. மேலே எழுதப்பட்ட. தோல் சீவப்பட்ட
**उल्लिङ्गित** वि பிரஸித்தமான. பெயர்பெற்ற. அறியப்பட்ட
**उल्लीढ** वि தேய்க்க, மெருகிடப்பட்ட
**उल्लुः** पु காணைச் செடி
**उल्लुञ्चनं** न மயிர் பிடுங்குதல். குத்தி வெளியெடுத்தல்
**उल्लुण्ठनं, ठा** स्त्री பரிஹாஸம். வக்ரோக்தி. விகடாலங்காரம்
**उल्लुण्ठित** वि உராய்ந்துத் தேய்த்துக் கொள்ளப்பட்ட
**उल्ल** वि வெட்டுகிற.
**उल्लेखः** पु ஸூசனையாய் உதாஹரணவிஷயம், விருத்தாந்தம். வர்ணனை. துளைத்தல். வெட்டியெடுத்தல். தேய்த்தல். சொறிதல். கிழித்தல். தோற்றத்தினுல் பலவிதமாய் உண்டாகும் பாவங்களைச் சொல்லுமோரலங்காரம்(யானையினுருவத்தைத் குருடர்கள் சொன்னபடி)
**उल्लेखनं** न உயர்த்தல். வாந்தி செய்தல். கோடுகள் கீறல்
**उल्लोचः** पु மேல் பரப்பு விதானம்
**उल्लोल** वि வேகமாய் அசைகிற. **लः** பெரு அலை
**उवीढं** न யுத்தத்தில் வில்லாளிகள் நிற்கும் நிலை
**उशती** स्त्री அசுபவார்த்தை. பிடிக்காத சொல்
**उशनस्** पु பிருகுவின் புத்திரரும் அஸுர குருவும் ஸ்மிருதி கர்த்தாவுமான சுக்கிராசாரி. சுருதியில் காவ்ய என்கிற பட்டமுமிவருக்குண்டு
**उशना** अ ஸந்தோஷமாய். இஷ்டப்பட்டு **शी** இச்சை
**उशाना** स्त्री இச்சை. ஸோமம் கிரஹிக்கப்படுஞ் செடி
**उशिज्** वि இச்சிக்கிற, பாடுபடுகிற. பற்றின. पु தீ. நெய்
**उशीनराः** पु ब தற்கால காந்தார தேசமும் அதன் ஜனமும்
**उशी(षी)रं,** **रः** **रकं** வெட்டிவேர் **रं** ஒரு விதப்புல்
**उशीरिक** वि வெட்டிவேர் வியாபாரம் செய்கிற

**उशेन्य** वि இச்சிக்கத்தகுந்த

**उष् 1 प** கொளுத்து. தண்டி. ஹிம்ஸி. கொல்

**उष** वि கொளுத்துகிற. **षः** விடிகாலே. காமுகன். உப்புநிலம். மைஸாக்ஷியெனும் ஓர் மருந்தெடுக்கும் செடி

**उषण** न மிளகு. இஞ்சி. திப்பிலி வேர். **णा** சுக்கு. திப்பிலி. செவியம்

**उषपः** पु அக்கினி. ஸூர்யன்

**उषस्** स्त्री விடிகாலே. அவ்வொளி (ஸ்வர்க்க புத்திரியும் ஆதித்தியர்களின் ஸஹோதரியுமாகச் சொல்லப்படுவது). ஸந்தியா தேவதை. காதின் வெளித் துவாரம். மலேய மலே **सी** ஸாயங்காலம். அவ்வொளி. -**बुध्** वि விடிகாலேயிலெழுந்துவிட்ட. **धः** அக்கினி. குழந்தை. சிகப்பு சித்திர மூலம்

**उषस्य** वि விடிகாலேக்கு விசேஷமான, புண்ணியமான

**उषा** स्त्री விடிகாலே. காலே மாலே ஒளி. உப்பு நிலம். பசு. இரவு. ஸ்தாலீ. ருத்திராம்சமான பவனின் பத்னீ. பாணாஸுரனின் பெண்ணுன அனிருத்தனின் மனைவி (அனு) **अ** விடிகாலேயில். இரவில் - **कालः** கோழி

**उषासानक्त** விடிகாலேயு மிரவும்

**उषिः** स्त्री வட்டி

**उषित** वि (**उष्**) கொளுத்தப்பட்ட (**वस्**) வஸிக்க, நாட்டப்பட்ட. சீக்கிரமானத்வீடு-**गवं** பசுக்கள் மேய்ந்த புலம்

**उषंगुः** पु சிவன்

**उषती** = **उशती**

**उषरि** = **उशीर**

**उष्ट्रः** पु ஒட்டகம். எருமை. முசிப்புள்ள காளே. வண்டி. வாகனம். **ष्ट्री** பெண்ணெட்டை. ஒட்டகாகாரத்தில் மண்பாண்டம் - **कर्णिकाः** தெற்கே ஓர் தேசம், ஜனம் - **कर्णी**

ஓர் மூலிகை - कांडी சிவப்பு நிறமுள்ள ஓர் பூ - क्रोशिन् ஒட்டகம்போற் சப்திக்கிற - ग्रीयुगं இரு ஒட்டைகள் - ग्रीवः, शिरोधरःமூலவியாதி-धूमः தேள் கொடுக்குச்செடி - धूसरपुच्छिका விருக்ஷ பேதம் - पादिका அரபி தேச மல்லிகை - यानं ஒட்டக வண்டி [திரம்

उष्ट्रिका स्त्री பெண்ணொட்டை. ஒட்டகை யுருவ ஸூராபாத்

उष्ण त्रि சூடான. சுறுசுறுப்பான, காரமான, கடினமான. உரைப்பான. அறிவாளியான. காமமுள்ள. கோபமுள்ள. பித்தங்கொண்ட. ष्णः, ष्णं கோடை. ஸூர்ய ஒளி. ஜ்வர, பெருமூச்சு. ष्णः வெள்ளைப்பூண்டு. விஷ்ணு. வெய்யில். சூடு=ष्णा பித்தம். க்ஷயம் - असहः குளிர்காலம் - नदी நரக நதியான வைதரணீ - बाष्पः கண்ணீர். உஷ்ண ஆவி - रश्मिः ஸூர்யன். எருக்கு - वारणं, णः குடை - वीर्यः கடல் பன்றி

उष्णक त्रि புத்திசாலியான. துன்பப்படுகிற. ஜ்வரமுள்ள. தபிக்கிற. வீளைந்த. பிரதாபமுள்ள कः கோடை. ஜ்வரம்.

उष्णालु त्रि உஷ்ணத்தை ஸஹியாத. காய்ச்சப்பட்ட [சுமலல்

उष्णाहः पु பனி காலம்

उष्णिका स्त्री கஞ்சி

उष्णिमन् पु சூடு

उष्णिह् स्त्री முதலிரண்டும் 8-ம் மூன்றுவது 12 அக்ஷரங்களுமுள்ள ஓர் வேத சந்தஸ். பாதத்திற்கே முக்ஷரங்கள் வீதம் 4 பாத விருத்தம். உஷ்ணிஹிற்கேற்ற செங்கல்

उष्णी स्त्री வீணையின் தந்திபேதத்தாலுண்டான ஸ்வரபேதம்

उष्णीगंगा स्त्री உஷ்ண கங்கை. பதரி

उष्णीषं, षः पु தலையைச் சுற்றிக் கட்டப்படுவது. தலைப்பாகை. கிரீடம். அடையாளம். பக்தியைக் காட்டும் பௌத்தனின் தலைமயி ரடையாளம்

उष्णीषिन् वि மகுடந் தரித்த पु சிவன்
उष्म(क): पु சூடு. கோடை. கோபம். ஆவல். ஆத்திரம் -प: பிருகுவின் குமாரர். பிதிர்க்கள். இறந்த முன்னோர் -भास् ஸூரியன் -स्वेद: புழுக்கத்தில் நனைதல்
उष्मन् पु சூடு. ஆவி. கோடை. ஆவல். உக்கிரஹம் श, ष, स, ह எழுத்துக்கள்
उष्मायण: पु கோடைகாலம்
उस्र वि காலையில் பார்க்கப்படுகிற. காலை ஸம்பந்தமான. பிரகாசமான स्र: கிரணம். எருது. ஸூரியன். நாள். அச்வினீ தேவதைகள் स्रा காலை. ஒளி. பசு. பூமி. ஓர் மூலிகை -धन्वन् पु பிரகாசமான வில்லையுடைய पु இந்திரன் -यामन् वि விடிகாலையிற் போகிற
उस्रि वि போகிற -क: சிறு, கிழ எருது का பசு
उस्रिय वि கோஸம்பந்தமான य: காளை या பசு. ஒளி. கன்று. [பால்
उह् । प ஹிம்ஸி. கொல். அழி. அடி
उह(हि अ ஸம்போதன ஸூசகம்
उहान: पु ஓர் தேசம்
उहू: स्त्री சோகம், விசார ஸூசகபதம்
उहू: पु எருது

## ऊ

ऊ: சிவன். சந்திரன். ரக்ஷகன். புருஷன். ராஜபுத்திரன். தேவதை. வர்த்தகன். கழுத்து. மங்களகும்பம் स्त्री ஒப்பு अ ஸம்போதனம். தயை. ரக்ஷணம், வாக்கியாரம்ப ஸூசகம்
ऊढ वि (वह्) கலியாணமான. சுமக்க, அடைவிக்க, எடுக்கப்பட்ட. ढ: கலியாணமானவன் ढा கலியாணமானசிறுமி -कंकट கவசம் பூண்ட -भार्य वि ஒருத்தியைமணந்தவன்

-वयस: வாலிபன் ढि: கலியாணம். சுமத்தல்

ऊत वि நெய்க்கப்பட்ட

ऊतिः स्त्री (वे) நெய்தல். செய்தல். காப்பாற்றல். அனுபவித்தல். விளையாட்டு. தயவு. உதவி, நெய்யற்கூலி. இச்சை. காய்ச்சி தெளியச் செய்விக்கப்பட்டது. வேகம். சப்தபேதம். ஓர் தேவதை -मः சகோரப் பக்ஷி

ऊधन्य, ऊधस्य न மடியிலிருந்துண்டானதான பால்

ऊधस् न பசுவின் மடி. தாயின் முலை. ஸ்நேஹிதர்கள் மட்டும் செல்லக் கூடிய ரஹஸ்யஸ்தானம். மார்பு. இருதயம்.

ऊन वि தேவையான. அளவிற்கு குறைவான. சற்றுச் சிறிதான, பலவீனமான. (எண்ணில்) குறைக்கப்படவேண்டிய.

ऊनक वि குறைவான. தாழ்வான

ऊनयति ना प குறைவாய், முடிக்காமல் விடு. கழி. குறை. அளமான சொல்பவர்த்தகம் செய்

ऊनित वि கழித்துக் குறைக்கப்பட்ட. குறைவான. கொஞ்ச

ऊप अ உதயகாலம்

ऊम् अ கேள்வி. கோபம். திட்டு, கர்வம், பொறுமைஸூசகம்

ऊम वि ரக்ஷிக்கிற नः நல்ல, பிரியமுள்ள தோழன் मं ஓர் தேசம்

ऊय् । आ நெய். நெய்.

ऊररी, ऊरी अ ஸம்மதி ஸூசகம். விஸ்தாரம்

ऊरव्यः पु புருஷனுடைய தொடையிலுண்டானவனை வைசியன்

ऊरीकृत वि ஒப்புக் கொள்ளப் பட்ட. பறப்பட்ட

ऊरुः पु தொடை -ग्रहः = स्तंमः -घट्टनं புணற்சிபேதம் = पाडत, वेष्टितं -जः, जन्मन्, संभवः வைசியன் -दघ्न, द्वयस, मात्र தொடையளவு ஆழமுள்ள, தொடையைத் தொடுகிற. தொடை வரையிலான -पर्वन् पु स्त्री முழங்கால் -फलकं தொடை, இடுப்பெலும்பு -भिन्न தொடையில் பிளவுள்ள -स्तंभः தொடையில் வாயு ரோகம் भा வாழை

ऊरुरी अ அங்கீகாரம்
ऊर्ज् स्त्री பலம். ஸாரம். தண்ணீர். உணவு.
ऊर्जः पु கார்த்திகை மீ. மஹோத்ஸவம். பலம்.சக்தி. பிள்ளைகளைப் பெறுகிற சக்தி. உயிர். பிராணன். மூன்றும் மன்வந்தரத்தின் ஸப்த ரிஷிகளான ஹிரண்ய கர்ப்பனின் பிள்ளைகள் र्जा உணவு. பலம்.ஸாரம்.ரஸம்.வளர்ச்சி.வஸிஷ்டரின் பத்னியான தக்ஷினின் பெண் र्जं நீர்
ऊर्जकः पु கொக்குமந்தாரை
ऊर्जयति ना प உணவளி. போஷி. आ பலவானாகு. உயிர்த்திரு
ऊर्जव्य वि உணவு, பலம் நிறைந்துள்ள
ऊर्जस् न பலம் உத்ஸாகம். உணவு. -वत् वि ரஸமுள்ள
ऊर्जस्वल वि பெரிய. சக்திவாய்ந்த. சிறந்த. மேன்மையான.
ऊर्जस्विन् वि ,, பலமுள்ள ,, नी நிந்தையோடு சொல்லு [மலங்காரம்.
ऊर्जित वि ,, ,, ,, அழகான. பிரஸித்தியடைந்த. பெருந்தன்மைவாய்ந்த. வளர்ந்திருக்கிற. கம்பீரமான. ஆழ்ந்த கருத்துள்ள तं பலம். ஊக்கம்
ऊर्जिन् वि உணவு நிறைந்து கிடக்கிற
ऊर्ण न மிருக மயிர், கம்பளம் र्णः பொன் 4 ஜாதிகள். யாகம். சந்திரன் -नाभः, पटः, वाभिः சிலந்தி-म्रद, दस् वि ரோமத்தைப் போல் மிருதுவான -वहिः 8 கால் பூச்சி
ऊर्णनाभकः அபிநயத்தில் கையின் பேதம்
ऊर्णी स्त्री மிருக மயிர். இரு புருவங்களின் நடுவில் சுருண்ட மயிர். சைத்ரரதனின் மனைவி -वल, वत् கம்பளமான
ऊर्णायु वि ரோமத்தால் செய்த युः ஆட்டுக்கடா. சிலந்தி. கம்பளி எட்டுக்கால்பூச்சி. மினிமினிப்பூச்சி
ऊर्णु 2 उ மறை. மூடு. சூழ். மூடிக்கொள் र्णुत மூடப்பட்ட -वाण மூடுகிற

**ऊर्द् 1 आ** ருசிபார். கொடு. விளையாடு. அள.சந்தோஷமாயிரு

**ऊर्दर न** அளக்கும் பாத்திரம். **र:** வீரன். ராக்ஷஸன். பேய்

**ऊर्ध्व त्रि** நேரான. நெட்டையான. உயர்த்தப்பட்ட. மேலான. உயர்ந்த. மேன்மையான. (மயிரைப்போல்) அறுபட்ட. மேலுக் கெறியப்பட்ட **र्ध्वं** உயர்வு. உயற்சி. ஆகாசம் **अ** உயமே. உரத்து. பிந்தி **-आवर्त:** குதிரையின் பின்னங்கால்களால் நிற்றல் **-आसित:** பாகல் **-ईह:** மேல் பக்கம் சார்பு, கதி **-कच:** கேது **-कंठी** ஒரு செடி **-कर्ण** நேராய் நிறுத்தப் பட்ட காதுகளையுடைய **-कर्मन्** மேல் நோக்குப் போக்கு. உயர்ந்த பதவிக்காக முயற்சி **पु** விஷ்ணு. **काय, य:** மேலுடல் **-कृष्ण** சந்தோஷத்தால்) பொங்குகிற. கொதிக்கிற **-ग** எழும்புகிற. ஸாதுவான. உயிரோடிருக்கிற **ग:** விஷ்ணு. ஒருவித நோய். புணற்சி பேதம் (**पुरं**) அரிச்சந்திரனின் பட்டணம் **-गम:** ஏறுதல், ஏற்றம். ஆகாசம் செல்லல் **-चरण** கால்களை மேலேயுடைய **ण:** சரபமிருகம் **-चित्** சேகரிக்கிற. அடுக்குகிற. **-जानु, ज्ञ, ज्ञु** உயர்ந்த முழங்காலுள்ள, தொடையாலுட்கார்ந்த **-दंष्ट्र(ष्ट्रा)केश:** சிவன் **-दृष्टि, नेत्र** மேலே பார்க்கிற **अल** மேலான ஸ்திதியைக் கோறுகிற **ष्टि:** புருவ மத்தியில் மனதை நாட்டல் **-देव:** விஷ்ணு **-देह:** உத்தரக் கிரியை **-नभस्** மேமேல வானத்திற்குள்ளிருக்கிற **-पथ:** ஆகாசம், **पातनं** உயர்த்தல் **-पात्रं** யக்கிய பாத்திரம் **पुंड्र(क):** நெற்றியில் உயரவாட்டுக் குறி **-पूरं अ** விளிம்பு வரையில் வழியும்படி நிறைந்து **-पृश्नि** மேலே புள்ளிகளுள்ள **श्नि:** யாக பசு **-बर्हिस्** யாக தர்ப்பத்தின் மேலிருக்கிற **पु** ஸோமபா என்கிற பிதிர்க்கள் **-बाहु:** கைகள் அசையாமல் நிற்கும் வரையில் கைகளை உயர ஸதாதூக்கிக்கொண்டிருக்கும் பக்

தன்-बुध्न தலைகீழான-भाग: ஒரு பாகத்தின் பின் வரும் மற்றொரு பாகபதம்-भाज् மேலேயிருக்கிற. மேல் பாகத்தை யனுபவிக்கிற पु வடவானலம்-मंथिन् சுத்தப் பிரம்மசர்யமுள்ள. பிரம்மசாரி मान उயரங்களை அளக்கக் கருவி-मायु இரைந்து சப்திக்கிற-मारुत தேக வாயுவின் மேல் நோக்கி யமுக்கல்-मुख வாய், சந்தை மேல் நோக்கி யுடைத்தாயிருக்கிற. மேலுக்குத் திருப்பப்பட்ட ख வாயின் மேற்பாகம்-मूल: ஒருவகைப்புல்-मौहूर्तिक கொஞ்சகாலங் கழித்து ஸம்பவிக்கிற. -रतस् வி எப்பொழுதும்புணரா விருதமுள்ள पुபீஷ்மர்.சிவன் = -लिङ्ग-लोक: பரலோகம் -वर्त्मन வாயு -वात: மேல் தேக வாயு -वृत மேலே தரிப்பிக்கப்பட்ட(பூணூலைப் போல்). தோள், தலை மேல் வைக்கப்பட்ட -शायिन् ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு உறங்குகிற. சிவன் -शील: அக்கினி -शोचन வாந்தி செய்தல் -शोष अ (ஒன்றை) மேலே உலர்த்துவது போல் -श्वास: மூச்சுவிடல் -सानु त्रि மேன்மேலெழும்புகிற पु न மலைச் சிகரம் -स्थ மேலே யிருக்கிற. மேன்மையான -स्थिति: குதிரையின் பின் கால்களால் நிற்றல். குதிரையின் முதுகு. ஏற்றம், உயற்சி -स्रोतस्पுணராதவனை சந்நியாசி.செடி.பிராண ஓட்டம், உணவுப் போக்கு மேல் நோக்காயுள்ள சில ஜந்து விசேஷங்கள்

**ऊर्ध्वक:** पु ஒருவித மத்தளம்

**ऊर्मि:** पु स्त्री அலை. நீர் வேகம். ஒளி. வேகம். வரிசை. துயரம். கவலை. நோய். குதிரையின் நடைப்போக்கு. துணி மடிப்பு. வயிற்றின் மடிப்பு. ஆவல். மானுடப் பிரகுருதி ஸம்பவதுர்க்குணங்கள் (அவை :- சோகம். மோஹம். கிழத்தனம். சாவு. பசி. தாகம் என 6)

तवறிப் போய்விடல். எண்ணிக்கை, அளவு मालिन् पु கடல்

ऊर्मिका स्त्री அலை. மோதிரம்.நஷ்டத்திற்காக வருத்தம்.தேனீயின் ரீங்காரம், வண்டின் பாட்டு. துணியின் மடிப்பு. ஆசை. சுண்டு விரல்.

ऊर्मिमत् त्रि தளும்புகிற. வளைந்த. சுருட்ட, மடிக்கப்பட்ட

ऊर्मिमत्ता स्त्री தளும்புதல்

ऊर्मिला स्त्री கணவனைத் துறந்தவள். லக்ஷ்மணனின் பத்னீ

ऊर्म्य त्रि அலையுள்ள. தளும்புகிற. र्म्या ராத்திரி

ऊर्व त्रि பெரிய. விசாலமான र्वः வடவானலம். ஜலாசயம். மேகம். தொழுவம். ஓர் பிதிர்வர்க்கம் -रा விளையக் கூடிய பூமி

ऊर्व्य त्रि ஏரிகளில், நீர்த் தேக்கங்களிலிருக்கிற र्व्यः ருத்திரன்

ऊर्वशी स्त्री ஓர் தேவதாஸி

ऊर्व्यंग न காளான். நாய்க் கொடை

ऊर्षा स्त्री ஒருவிதப்புல்

ऊलिका स्त्री ஊஞ்சல்

ऊलुकः पु சிறுகிளை

ऊलु(लू) पिन् पु கடற்பன்றி

ऊलूकः पु கோட்டான். இந்திரன்

ऊष् 1 प ஒழுங்கீனமாய், நோயோடு இரு

ऊषः पु உழமண்பூமி. புளிப்பு. காடி. வெடிப்பு. பிளப்பு. காதின் சந்து. மலயமலை. விடிகாலை. ரேதஸ். षी உழமண்

ऊषकं न உதயகாலம். உப்பு. மிளகு

ऊषज्ञरः पु சவுட்டுப்பு

ऊषणः पु கஞ்சாங்கோரை णं, णा சுக்கு.மிளகு.இஞ்சி.திப்பிலி

ऊषर त्रि சம்பாரம் சேர்க்கப்பட்ட रं,रःகளர்மண்-ஜ்சவுட்டுப்பு

ऊषरायते ना आ களர்மண்ணைய் நடி(ஆசைக்கிடங்கொடாதிரு)

ऊषा = उषा

ऊष्म त्रि சூடான. ஆவிவிடல். ஆவியாய்ப்போதல்

ऊष्मन् पु சூடு. கோடை. ஆவி. வெய்யில். கண்ணீர். ஆத்திரம். श्, ष, स्, ह्, ᳵक्, ᳶप्, अं,अः எழுத்துக்கள்-पசூட்டுணவின் ஆவியை உட்கொள்ளுகிற -पः அக்கினி -पाः ஓர் பிதிர்வர்க்கம்

ऊष्मायते ना.आ. சூட்டை, ஆவியைக்கக்கு. வியர்

ऊह् 1 उ குறி. கவனி. ஊஹி. அறி. எதிர்ப்பார். விசாரி. ஆராய். தர்க்கி. கணக்கிடு. காத்திரு. மதிப்புடைத் தாயிரு. மாற்று. திருத்து. தள்ளு

ऊह त्रि உணர, கவனிக்கப்பட்ட हः விட்டதைச் சேர்த்தல். ஆரோபித்தல். திரட்டல்-अपोहः குணகுணங்களைநன்கா [ராய்தல்

ऊहनी स्त्री துடைப்பம்

ऊहा स्त्री விட்டதைச் சேர்த்தல்

ऊहिन् त्रि விசாரிக்கிறனீ கூட்டம். (சேனையை) ஒழுங்கு படு [த்தல்

ऊह्य त्रि ஊகிக்க, ஆராயத்தகுந்த. சப்தலோபமான

## ऋ

ऋ अ கூப்பிடல், நிந்தை, பரிஹாஸம், வாக்கியாரம்பஸூசகம்

ऋ 1 प. போ. எழு. சார்ந்திரு. 3 प குலுக்கு. அடை. உயர்த்து (குரலை). தூண்டு. காட்டு. 5 प ஹிம்ஸி. தகை. णिच् எறி. சொருகு. (ஒன்றின்மேல்) நாட்டு. உள்ளே நுழை. கொடு. ஒப்புவி. விட்டுவிடு, இழ. திருப்பிக் கொடு. உட்செல். துளை

ॠ स्त्री தேவர்களின்தாய் (அதிதி). ஆறு. ஆகாசம். பால் पु தேவதை. மலை. யானை. விரோதி. எண்ணம். ஒட்டகம்

ऋक्ण त्रि காயப்படுத்தப்பட்ட. துன்பப்படுத்தப்பட்ட

ऋक्थ न பணம். சொத்து. பொன் -आदानः, ग्राहः வாரிஸ்தார்

-भागः பங்கிடல். பங்கு. சொத்து -भागिन्, हर, हारिन्
पु பங்காளி

ऋक्, कन् वि துதிக்கிற. ஸந்தோஷிக்கிற

ऋक्षः पु கரடி.ஓர்மலை.ஓர்செடி क्षं,क्षःஜன்ம)நக்ஷத்திரம்.ராசி.क्षाः ஸப்த ரிஷிக்கள் क्षा வடக்குக்ஷி பெண்கரடி-गंधा பொத்திக் கீரை -गंधिका கருத்த இருளிச்செடி -चक्रं நக்ஷத்திர ம ண்டலம்-नेमिः விஷ்ணு -राज्, जः ஜாம்பவான். சந்திரன் -हरीश्वरः கரடிகளுக்கும், குரங்குகளுக்கும் யஜமானன்

ऋक्षरः पु புரோஹிதன்.முள் रा, रं மழைதாரை.நீர்ப்பெருக்கு

ऋक्षला स्त्री விலங்கு

ऋक्षवत् पु நர்மதை யாற்றினருகே ஓர் மலை

ऋक्षीक वि கரடியைப் போல் மாம்ஸந்தின்கிற का ஸ்திரீ

ऋगी स्त्री கண்ணின் கீழ் புறம் [தேவதை

ऋग्म वि ரிக்கின் தன்மையை யுடைய

ऋग्मत्, ऋग्मिन् वि பூஜிக்கிற. ஜய கீர்த்தனைபாடுகிற.துதிக்கிற

ऋग्मिय वि துதிக்கத் தகுந்த

ऋघायति ना उ நடுங்கு. உக்கிரமாயிரு.

ऋघावत् त्रि உக்கிரமாயிருக்கிற

ऋच 6 प துதி. புகழ். கொண்டாடு. மூடு, மறை. பிரகாசி

ऋच् स्त्री வேத வாக்கியம். சுலோகம். ரிக்வேதம். ஒளி.துதி. பூஜை -अयनं ஓர் நூல் (ऋक्पारायण) (आदि) பாணினி யின் சில பத ஸமூஹம் -आवानं அத்யயனகாலம் -गाथा ஓர் கானம் -तंत्रं, व्याकरणं ஸாமவேத பாரிஷிதங்கள் -भाज् वि ரிக்கில் பங்கைப் பெறுகிற (துதிக்கப்பட்ட தேவதையைப் போல்) -विधानं ரிக்வேதப்படி செய்யப் படும் சடங்குகள் -वेदः (அ னு) -संहिता ரிக்வேதப்பாகு பாடான திரட்சி -सामे ரிக், ஸாமவேத வாக்கியங்கள்

ऋचस् वि துதிக்கிற [(भृङ्गः) விஷ்ணு

ऋचीकः पु ஜமதக்கினியன் பிதா. ஓர் தேசம்
ऋचीषः पु நரகம். षं பணியாரவாணுய்
ऋच्छ 6 प கடினமாகு.தேய்ந்துபோ. மனத்தளர்ச்சி யடை. [போ
ऋच्छका स्त्री இச்சை
ऋच्छरा स्त्री விலங்கு. வேசி.
ऋज् 1 आ போ. அடை. பெறு. நில், உறுதியாயிரு.ஆரோக்கியமாயிரு. பலவானயிரு 1 प சம்பாதி. பெறு.
ऋजा, जिः स्त्री ரிக்வேதம்
ऋजिष्य वि வேகமாய்ப் போகிற. மேற்செல்ல முயலுகிற
ऋजीक वि வர்ணங் கொடுக்கப்பட்ட. நாஞ நிறமான. கலக்கப்பட்ட. கெடுக்க, தீட்டாக்கப்பட்ட कः புகை. இந்திரன். ஓர் மலை.
ऋजीतिः स्त्री கொளுத்துகிற. தீப் பொறி பறக்கிற. மின்னுகிற
ऋजीष वि கைப்பற்றுகிற. துரத்துகிற. மேல் விழுகிற. (இந்திரன்)
ऋजीषं न வாணுய். நரகம். நீர். பிருந்த ஸோமம்.
ऋजीषिन् वि நோக்கி விரைந்தோடுகிற. ஸோமத்திப்பியையுடைய, பெறுகிற.
ऋजु(क वि (ज्वी स्त्री) நேரான अरु யோக்கியமான. கபடமற்ற. அனுகூலமான. நல்ல -कायः கச்யபமுனி -क्रतु யோக்கியமாய் நடக்கிற-गः நாணயஸ்தன்.அம்பு. -गाथ சரியாய்ப் பாடுகிற -मिताक्षरा யாக்யவல்க்யஸ் மிருதியின் வியாக்கியானம் -रोहित நேரான இந்திரதனுஸ் -वनि மங்கலகரமான வரன்களை யளிக்கிற
ऋजुया अ நேராக. சரியாக
ऋजूकृ 8 उ நேராக்கு. திருத்து. சரிப்படுத்து
ऋजूया अ நேர்க்கோட்டில் यु वि நேரான. யோக்கியமான
ऋज्रः पु தலைவன்
ऋज्रिकायनं न கந்தர்வ கானபேதம்

ऋज्वच् वि நேராய்ப் போகிற
ऋज्वी स्त्री கபடமற்றவள். கிரஹங்களின் கதி விசேஷம்
ऋंज् 6 उ பாய். துள். அடையமுயல். இச்சி. அலங்கரி 1 आ [வறு
ऋंजमान: पु மேகம்
ऋजसान त्रि நோக்கியோடுகிற. அடையமுயலுகிற नः மேகம்
ऋण वि போகிற. குற்றமுள்ள णं கடன். உதவி. கழித்தல் குறி. கோட்டை. நீர். நிலம் -अंतकः செவ்வாய் -अपनयनं, अपनोदनं, अपाकरणं, दानं, मुक्तिः,मोक्षः शोधन கடன் தீர்த்தல் -आदानं கடனைக் கொடுத்ததைத் திரும்பிப் பெறல் -उद्ग्रहणं வியவஹார மூலமாகவோ, ஸ்நேஹத்திலோ கடனைத் திருப்பிப் பெறல் -ऋणं (ऋणार्णं) கடனுக்காகக் கடன் -कर्तृ கடன் வாங்குபவன் -कांति त्रि யாருக்குக் கடன்போல் துதி செய்தாகவேண்டியதோ. யார் நன்மை அளிக்கப்படுவதின் நிமித்தம் கடன்போல் துதிக்கப்படுகிறுரோ -ग्रहः கடனாளி -च्युत् தான் பெறவேண்டிய கடனைத் தீர்க்கப்படுவதுபோல் (துதியை) அங்கீகரிக்கிற -दातृ, दायिन् கடனைத் தீர்ப்பவன் -दासः ஒருவனின் கடனைத் தீர்த்து அடிமையாய் வாங்கப்பட்டவன் -मत्कुणः, म।र्ग. ஜாமீன். ஜாமீன்தாரன் -लेख्यं கடன் பத்திரம்
ऋणवत् , वन् , ऋणावत् वि கடன்காரனையிருக்கிற
